யான் பெற்ற பயிற்சிகள்

மாக்ஸிம் கார்க்கி

புதுமைப் பதிப்பகம் பிரைவேட் லிமிடெட்

காரைக்குடி

சிறந்த ருஷ்ய நூல்கள்

(2)

MY
APPRENTICESHIP

*

BY

MAXIM GORKY

*

PUBLISHER :

PUDUMAI PADIPPAHAM (PRIVATE) LTD.
KARAIKUDI

யான் பெற்ற பயிற்சிகள்



எழுதியவர் :

மாக்ஸிம் கார்க்கி



மொழிபெயர்த்தவர் :

ஆர். ராமநாதன்

புதுமைப் பதிப்பகம் (பிரைவேட்) லிமிடெட்,

காரைக்குடி

முதற் பதிப்பு : 15 அக்டோபர், 1957

விலை ரூபாய் ஆறு

காபிரைட் உரிமை பதிவு செய்யப்பெற்றது

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை-14

முன்னுரை

மாக்ஸிம் கார்க்கி என்ற ருஷ்ய ஆசிரியரின் சுய சரிதத்தில் **யான் பெற்ற பயிற்சிகள்** என்ற இந்தப் புத்தகம் இரண்டாவது பகுதியாகும்.

இந்தப் புத்தகத்தில் தமது வாலிபப் பருவத்தில் நடந்த நிகழ்ச்சிகளையும் தான் சந்தித்த ஆடவர் பெண்டிரையும்பற்றி விரிவாக மாக்ஸிம் கார்க்கி எழுதியிருக்கிறார். செருப்புக் கடை ஒன்றில் சிப்பந்தியாகத் தான் வேலைக்கு அமர்ந்தது, மற்ற சிப்பந்திகளுடன் தனக்கு ஏற்பட்ட உறவும் பகைமையும், புத்தகங்கள் படிப்பதில் தனக்கு ஏற்பட்ட ஆர்வம், எந்த எந்தவிதமான புத்தகங்களைத் தான் விரும்பிப் படித்தது, ஆண் பெண் உறவுபற்றித் தனக்கு முதலில் ஏற்பட்ட மனநிலை, இவற்றை எல்லாம்பற்றி விரிவாக வருணித்து இருக்கிறார் காக்கி.

இன்னும் எத்தனையோ விஷயங்கள் இந்த நூலில் இடம்பெற்று இருக்கின்றன. அன்று ருஷ்யாவில் வாழ்ந்த விவசாயிகள், தொழிலாளர்கள், வியாபாரிகள் ஆகியோருக்கு இருந்த மனநிலையையும் வாழ்க்கை நிலையையும் திறம்பட வருணித்து இருக்கிறார். அக்டோபர் புரட்சிக்கு முன்னர் ருஷ்யாவில் வாழ்ந்த பல்வகையான மக்களின் வாழ்க்கை

கிலேகளைத் தெரிந்துகொள்ள யான் பெற்ற பயிற்சிகள் என்னும் இந்த நூல் பெரிதும் துணை புரிகிறது.

இதைத் தொடர்ந்து, மாக்ஸிம் கார்க்கி எழுதியுள்ள மூன்றாவது புத்தகமான யான் பயின்ற பல்கலைக் கழகங்கள் என்ற நூல் வெளிவரும்.

காரைக்குடி
1, அக்டோபர், 1957

அ. லெ. நடராஜன்,
பதிப்பாளன்.

யான் பெற்ற பயிற்சிகள்

யான் பெற்ற பயிற்சிகள்

தொழில் பயிலும் நான் இதோ இருக்கிறேன். நகரின் பிரதான வீதியில் ஆடம்பரமாக இருக்கும் செருப்புக் கடை ஒன்றில் நான் ஒரு சிப்பந்தி.

களங்கமான முகமூடம், பச்சைநிறப் பற்களும், நீர்மல்கும் கண்களும் படைத்த சிறிய பிரகிருதி என் முதலாளி. அவர் குருடாய் இருக்கக் கூடுமோ என்ற சந்தேகம் எனக்கு இருந்தது. எனவே அதை ஊர்ஜிதம் செய்துகொள்ளும் நோக்கத்துடன், என் முகத்தை 'உம்'மென்று வைத்துக் கொண்டு அவருக்கு நான் அழகு காட்டினேன்.

"உன் மொந்தை முகத்தைக் கோணலாக்கிக்கொள்ளாதே" என்று நிதானமாக, ஆனால் உறுதியாக, என் முதலாளி சொன்னார்.

நீர் மல்கும் அந்தக் கண்கள் என்னை நோக்குகின்றன என்ற உணர்வு எனக்கு வெறுப்பை அளித்ததோடு, அவை என்னை நோக்குகின்றன என்பதையும் என்னால் நம்ப முடியவில்லை. ஒருக்கால் நான் அழகு காட்டுகிறேன் என்பதாக என் முதலாளி ஊகித்திருக்கக் கூடும்.

"உன் மொந்தை முகத்தைக் கோணலாக்கிக்கொள்ளாதே என்று நான் ஒரு தரம் சொல்லிவிட்டேன்" என்று தமது கனத்த உதடுகளை அசைக்காமல், நிதானமாக அவர் கூறினார்.

"உன் கைகளைச் சொறிவதை நிறுத்து" என்று தன் வறண்ட குரலில் அவர் மெதுவாகச் சொல்லியது என்னைத் துரத்துவது மாதிரி எனக்குத் தோன்றியது. "நகரின்

பிரதான வீதியிலிருக்கும் முதல் தரமான கடையில் வேலை செய்பவன் என்ற நினைப்போடு வேலை செய்; கதவுக்கு முன்னே வேலைக்காரன் ஒரு சிலையைப் போன்று விறைப்பாக நிற்க வேண்டும்.''

''சிலை'' என்றால் என்ன என்பதை நான் அறியேன். கைகளைச் சொறிந்துகொள்வதையும் என்னால் தடுக்க முடியவில்லை. என் கைகளில் நிறையப் புண்கள் இருந்தன. இரக்கமின்றிச் சொறிக் கிருமிகள் என் தோல்மீது படையெடுத்து இருந்தன.

''வீட்டில் நீ என்ன செய்துகொண்டிருந்தாய்?'' என்று என் கைகளைப் பார்த்துக்கொண்டே என் முதலாளி என்னை வினவினார்.

நான் சொன்ன பதிலைக் கேட்டதும், வெண் மயிர்கள் நிறைந்தும் துப்பாக்கிரவைபோன்றும் இருந்த தமது தலையை அசைத்துவிட்டு, புன்படுத்தும் குரலில் அவர் சொன்னார்:

''குப்பையா கூட்டினாய்? பிச்சை எடுப்பதைவிட, திருடுவதைவிட இது கேவலமாயிற்றே!'' என்றார்.

''திருடவும் செய்தேன்!'' என்று பெருமிதத்துடன் நான் அறிவித்தேன்.

இதைக் கேட்டதும் தமது கைகளை ஊன்றிக்கொண்டு, பூனையைப்போல முன்னே சாய்ந்து, கோரமாக என்னை நோக்கி, அவர் உறுமினார்:

''என்ன்-ன்-ன? திருடினதாகவா சொல்லுகிறாய்?''

எப்படித் திருடினேன், எதைத் திருடினேன் என்பதை அவருக்கு நான் விளக்கமாகச் சொன்னேன்.

''நல்லது, போனது போகட்டும். இங்கே என் செருப்பையோ, பணத்தையோ நீ திருடுவாயானால் வயது வருமுன்னரே உன்னை நான் சிறைக்கு அனுப்பிவிடுவேன்.''

நிதானமாகத்தான் என் எஜமானர் இதைச் சொன்னார்; எனினும், என்னமோ நான் பயந்தே போய்விட்டேன். ஆகவே, அவரை நான் மேலும் வெறுத்தேன்.

என் எஜமானரைத் தவிர்த்து, கடையில் வேறு இரு சிப்பந்திகள் இருந்தனர். ஒருவர் என் உறவினன் ஷாஷா

(யாகோவின் மகன்); இன்னொருவர் திறமையானவர்; லோப குணம் படைத்தவர்; சிவந்த மேனியர். பழுப்புநிறக் கோட்டும், விறைப்புக் காலருள்ள சட்டையும், கழுத்துக் குட்டையும் அணிந்திருந்தான் ஷாஷா. தற்பெருமையால் என்னை அவன் சட்டை செய்யவில்லை.

என் முதலாளி முன்னிலையில் என்னை என் தாத்தா நிறுத்திய தினத்தில், வேலை கற்க எனக்கு உதவுமாறு ஷாஷாவை என் தாத்தா வேண்டினார். கௌரவத்துடன் நெற்றியைச் சுளித்துக்கொண்டு ஷாஷா சொன்னான்:

"முதலில் என் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்க இவன் கற்றுக்கொள்ள வேண்டும்" என்று.

கையை வைத்து, என் தலையை ஒரு குலுக்குக் குலுக்கி விட்டு, தாத்தா சொன்னார்:

"அவன் கட்டளைப்படி நட. வயதிலும் ஸ்தானத்திலும் உன்னைவிட அவன் பெரியவன்" என்று.

தனது கண்களை உருட்டியவாறு ஷாஷா சொன்னான்:

"தாத்தாவின் வார்த்தைகளை நினைவிலிறுத்திக்கொள்!"

முதல் நாள் அன்றே தனது ஸ்தானத்தின் பெருமையை இரக்கமின்றிப் பயன்படுத்தத் தொடங்கினான் ஷாஷா:

"உருட்டி உருட்டி விழிப்பதை நிறுத்து, காஷ்ரின்!" என்று முதலாளி அவனை எச்சரித்தார்.

"நான் கண்ணை உருட்டவில்லை" என்று தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு சொன்னான் ஷாஷா. ஆனால் எஜமானர் அவனை விடவில்லை.

"தாடையை நீட்டாதே. வாடிக்கைக்காரர்கள் உன்னை ஆடென்று நினைத்துவிடப் போகிறார்கள்."

பிரதான சிப்பந்தி வாய்விட்டுச் சிரித்தார். எஜமானர் அருவருப்பான தமது உதடுகளை நீட்டினார். ஆத்திரத்துடன் சொக்கப் பெட்டிக்குக் கீழே பதுங்கிக்கொண்டான் ஷாஷா.

இத்தகைய பேச்சுக்கள் எனக்குப் பிடிக்கவில்லை. நூதனமான பல வார்த்தைகளை உபயோகித்து உபயோகித்து இவர்கள் பேசியதால், ஏதோ ஒரு அன்னிய மொழியை இவர்கள் பேசுவதாகச் சில சமயங்களில் எனக்குத் தோன்றிற்று.

ஒரு சீமாட்டி கடைக்குள் பிரவேசித்தால், சட்டைப் பைகளிலிருக்கும் தம் கைகளே வெளியே எடுத்து, மீசையை மெதுவாக முறுக்கிக்கொண்டு என் எஜமானர் புன்னகை புரிவார். அப்பொழுது அவர் கன்னங்களிலே சுருக்கங்கள் தெரியும். ஆயினும் ஒளியற்ற அவருடைய கண்களில் எத் தகைய மாற்றமும் ஏற்படாது. பிரதான சிப்பந்தி உடனே சுறுசுறுப்படைவார் ; தோள்பட்டைகளே ஒரு பக்கம் சாய்த் துக்கொள்வார் ; கைகளே வீசுவார். தொருத்திக்கொண்டிருக் கும் கண்களே மறைக்கும் முயற்சியில் ஷாஷா பேந்தப் பேந்த விழிப்பான். இந்தக் கோலாகலமான விற்பனையைக் கவனித்தவாறு கைகளேச் சொறிந்துகொண்டு நான் கதவருகே நிற்பேன். குனிந்துகொண்டு சீமாட்டியின் கால்களில் செருப் பைப் பொருத்தும்பொழுது, பிரதான சிப்பந்தி விரல்களே வியக்கத்தக்க முறையில் விரிப்பார். அவர் கைகள் நடுங்கும் ; ஒரு பாட்டிலே தலேகுப்புறக் கவிழ்த்தால் எப்படி இருக்குமோ அப்படித் தோற்றமளிக்கிற தடித்த கால்களாக இருப்பினும் கூட, ஒரு வேளே ஓடிந்துபோனலும் போகுமோ என்ற பீதி யுடன், சீமாட்டியின் காலே அவர் தொடுவார்.

ஒரு முறை ஒரு சீமாட்டி நெளிந்துகொண்டே காலே உதறிவிட்டு,

"அம்மாடி ! நீ எப்படி எப்படியோ கூச்சம் ஏற்படும்படி செய்கிறுயே ?" என்று கேட்டாள்.

" மரியாதையினுல் அவ்வாறு செய்கிறேன், சீமாட் டியே !" என்று உடனே பதில் சொன்னுர் பிரதான சிப்பந்தி.

சீமாட்டிமார்களேச் சுற்றிச் சுற்றிப் பிரதான சிப்பந்தி ஓடி ஆடித் திரிவது வேடிக்கையாக இருக்கும். சிரிப்பை அடக்கிக் கொள்ளும் பொருட்டு, நான் வேறு பக்கம் திரும்பிக்கொள் வேன். ஆயினும் மீண்டும் திரும்பிப் பார்க்க வேண்டும் என்ற ஆசை என் உள்ளத்தில் அப்படியே இருக்கும். ஏனெனில் பிரதான சிப்பந்தி மேற்கொள்ளும் தந்திரங்கள் மிக்க வேடிக்கை பயப்பனவாய் இருக்கும். அவ்வளவு மரியாதை யுடன் விரல்களே அசைக்கவோ அல்லது அவ்வளவு சாமர்த் தியமாகப் பிறர் கால்களில் செருப்புகளேப் பொருத்தவோ

என்னால் ஒரு நாளும் முடியாது என்று எனக்குத் தோன்றியது.

கடைக்குப் பின்புறமுள்ள சிறிய அறைக்கு அடிக்கடி என் எஜமான் சென்று, ஷாஷாவை அழைப்பார். வாடிக்கைக் காரர்களைக் கவனிக்கும் பொறுப்பைப் பிரதான சிப்பந்தியிடம் விட்டுவிட்டு, அவர்கள் இருவரும் போய்விடுவார்கள். ஒரு தரம் ஒரு அழகியின் கால்களைத் தொட்டுவிட்டு, விரல்களின் நுனியைப் பிரதான சிப்பந்தி முத்தமிடுவதை நான் கண்டேன்.

"எவ்வளவு கெட்டவன் நீ!" என்று சொல்லிக் கொண்டே சிரித்தாள் அந்த அழகி.

"ஆ!" என்று கூவிக்கொண்டே தனது உதடுகளை நக்கிக்கொண்டார் பிரதான சிப்பந்தி.

வாய்விட்டு உரக்கச் சிரித்த நான் கீழே விழுந்துவிடாமல் இருப்பதற்காகக் கதவின் கைப்பிடியைப் பிடித்துக் கொண்டேன். கதவு திறந்தது; என் தலை இடித்ததால் கண்ணாடி நொறுங்கி விழுந்தது. பிரதான சிப்பந்தி என்னைப் பார்த்துக் காலை நீட்டினார்; மோதிரம் அணிந்த கையால் என் தலையில் குட்டினார் எஜமானர். என் காதுகளைத் திருக ஷாஷா முயன்றான்; அன்று மாலை வீட்டிற்குத் திரும்பும் வழியில் ஷாஷா என்னைக் கடுமையாக எச்சரித்தான்.

"இப்படி நீ நடந்துகொண்டால், வேலையிலிருந்து உன்னை நீக்கிவிடுவார்கள். அப்படி என்ன வேடிக்கையான சம்பவம் நிகழ்ந்தது?" என்று கேட்டான்.

கடைச் சிப்பந்திகள் எவ்வளவுக்கு எவ்வளவு கவர்ச்சிகரமாகச் சீமாட்டிகளுக்குத் தோற்றமளிக்கிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு வியாபாரம் அதிகமாக நடக்கும் என்பதை அவன் எனக்கு விளக்கினான்:

"ஒரு சீமாட்டிக்குச் செருப்பு தேவையில்லை என்றால் கூட, நல்ல ஆடவனைக் காண்பதற்காகவேனும் அவள் ஒரு ஜதை செருப்பு வாங்க வருவாள். இதை உன்னால் புரிந்து கொள்ள முடியவில்லையா? உனக்குக் கற்றுக்கொடுப்பது முடியாத காரியம்!"

அவன் கூறின இந்த வார்த்தைகள் என்னைப் புண்படுத்தின. கடையில் வேலை செய்த யாரும் எனக்கு எதையும் கற்றுத்தரவில்லை; ஷாஷாவும்கூட எனக்கு எதையும் கற்றுத்தரவில்லை.

நோயாளியான, வக்கிரபுத்தி படைத்த சமையற்காரி நாள்தோறும் அதிகாலையில், என் உறவினன் எழுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன், என்னை எழுப்புவாள். 'ஸாமோவாரை' நான் சூடாக்குவேன்; எல்லா அடுப்புகளுக்கும் விறகு எடுத்து வருவேன்; அணிகளைத் துலைத்துச் சுத்தப்படுத்துவேன்; முதலாளி, பிரதான சிப்பந்தி, ஷாஷா ஆகியவர்களின் பூட்சுகளுக்குப் பாலிஷ் போடுவேன். கடையைப் பெருக்கித் தூசைத் துடைப்பேன்; தேநீர் தயார் செய்வேன்; சாமான்களைப் பட்டுவாடா செய்வேன்; பிறகு சாப்பாடு எடுத்துவர வீட்டுக்குச் செல்வேன். இந்த வேலைகளை நான் செய்யும்பொழுது ஷாஷா என் ஸ்தானத்தில் கதவருகே நிற்பான். அது தனது அந்தஸ்துக்கு இழுக்காகும் எனக் கருதிய ஷாஷா என்னை நோக்கிக் கூவுவான்:

"நற்பாங்கற்றவனே! உனக்காக உன் வேலையை நான் செய்ய வேண்டியிருக்கிறது!" என்று.

சுழன்று பாயும் ஓக்கா நதிக்கரையிலுள்ள வயல்களிலும், காடுகளிலும் சுயேச்சையாகத் திரிந்து பழகிய எனக்கு, குளிவிளெவிலுள்ள மணல் வீதிகளில் நடமாடிப் பழகிய எனக்கு, இந்த வேலை கசப்பையும், வேதனையையும் அளித்தது. பாட்டியையோ, நண்பர்களையோ சந்திக்க முடியவில்லை. பேச்சுத் துணைக்கு யாருமில்லை. நான் இப்பொழுது கண்ட பொய்யான, ஓட்டை உடைசலான இந்த வாழ்க்கை என்னைக் கொதிப்படையச் செய்தது.

எதையும் வாங்காமல் சீமாட்டிகள் அடிக்கடி திரும்பி விடுவார்கள். உடனே முதலாளிக்கும் இரண்டு சிப்பந்திகளுக்கும் கோபம் பொத்துக்கொண்டு வந்துவிடும்.

"காஷ்ரின், செருப்புகளை எடுத்து வை!" என்று முதலாளி உத்தரவிடுவார்.

"பன்றி! அவளை இங்கே உபசரிக்க நேர்ந்ததே! வீட்டிலே அடைந்துகிடந்து சலித்துவிட்டாள் போலும்; ஆகவே, அந்தக் கிழட்டு முட்டாள், கடைக்கு வந்து வம்பளக்க முடிவு செய்தாள்போலும். ஆஹா! அவள் என் மனைவியாக இருந்தால், ஒன்று இரண்டு பொருள்களை அவளுக்கு நான் காட்டியிருக்க மாட்டேனே!"

அவர் மனைவி ஒல்லியானவள்; கருவிழிகளும் பெரிய மூக்கும் உடையவள்; வேலைக்காரனை அதட்டுவதைப்போன்று அவரையும் அதட்டுவாள் அவர் மனைவி.

கவர்ச்சிகரமான வார்த்தை பேசி, தலைவணங்கி, சீமாட்டியைக் கடைக்கு வெளியில் அனுப்பிய பிறகு, முதலாளியும் அவருடைய இரண்டு சிப்பந்திகளும் அந்தச் சீமாட்டியைப் பற்றி ஆபாசமான, அருவருக்கத்தக்க முறையில் பேசுவார்கள். வீதிக்கு ஓடி, அவளைக் கண்டுபிடித்து, அவளைப் பற்றி இவர்கள் சொன்னவற்றை அவளிடம் சொல்ல வேண்டும் என்று இவர்கள் பேச்சைக் கேட்ட எனக்குத் தோன்றும்.

ஒருவர் இல்லாத நேரத்தில் அவரைப்பற்றி ஆபாசமான விஷயங்களைச் சொல்ல ஜனங்கள் விரும்புகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். உலகிலே தாங்கள்தான் சிறந்தவர்கள் என்ற கருத்தோடும், மற்றவர்கள்மீது தீர்ப்புக்கூறத் தங்களுக்குத்தான் உரிமை உண்டு என்ற கருத்தோடும் இந்த மூவரும் மற்றவர்களைப்பற்றிப் பேசுவதைக் கேட்கும்பொழுது எனக்குக் கசப்பாக இருந்தது. பலரைக் கண்டு இவர்கள் பொறாமைப்பட்டனர்; ஆனால் யாரையும் புகழவில்லை. எல்லோரைப் பற்றியும் விரும்பத்தகாத விஷயங்கள் எதையாவது இவர்கள் தெரிந்துவைத்து இருந்தார்கள்.

ஒரு நாள், ஒளிவீசும் கண்களும் சிவந்த கன்னங்களும் படைத்த இளம் பெண் ஒருத்தி, வெல்வெட் அங்கி அணிந்து கடைக்குள் பிரவேசித்தாள். கம்பளி சுற்றியிருக்க, அதன் மீது அவளுடைய முகம் அற்புதமான மலர்போலப் பிரகாசித்தது; அங்கியை ஷாஷாவின் கைகளை நோக்கி வீசின பிறகு அவளுடைய அழகு மேலும் அதிகரித்தது. அவள் காதுகளில் அணிந்திருந்த வைரக் காதணிகள் சுடர்விட்டுப் பிரகாசித்தன.

அவள் அணிந்திருந்த நெருக்கமான கவுன் கவர்ச்சி அளிக்கும் அவளது மேனியை மேலும் பகட்டாக எடுத்துக் காட்டிற்று. அழகி வாஸிலிஸாவை அவள் எனக்கு நினைவூட்டினாள். குறைந்த பட்சம் ஒரு கவர்னரின் மனைவியாகவாவது அவள் இருக்கக் கூடும் என்று நான் கருதினேன். அவர்கள் மிகுந்த மரியாதையுடன் அவளை வரவேற்றனர். அக்னி தேவனை ஆகாரனை செய்பவர்களைப் போன்று, அவளை அவர்கள் ஆராதித்தனர்; தேனினும் இனிய வார்த்தைகளைக் கொட்டி அவளுடன் பேசினர்; பைத்தியக்காரர்களைப் போன்று மூவரும் கடைக்குள் அங்குமிங்கும் ஓடினர். அவர்களின் உருவங்கள் பார்வை–பெட்டிக் கண்ணாடிகளில் பிரதிபலித்தன. அவர்கள் ஓடுவதைக் கண்டால், எல்லாம் பற்றி எரிந்து உருகி, விசையில் புதிய உருவங்களையும் சாயல்களையும் பெறப்போவது போலத் தோன்றும்.

வீலையுயர்ந்த ஒரு ஜதை செருப்பை வாங்கிக்கொண்டு விசைவில் கடையை விட்டு அவள் சென்றதும், " பாசாங்குக் காரி !" என்று உறுமினர் முதலாளி.

" ஒரே வார்த்தையில் சொல்லுவதானால் இவளை நடிகை என்று சொல்லலாம் " என முனகினர் பிரதான சிப்பந்தி.

அந்தச் சீமாட்டியின் காதலர்களைப்பற்றியும், அவளுடைய உல்லாச வாழ்க்கையைப்பற்றியும் அவர்கள் பரஸ்பரம் பரிமாறிக்கொண்டனர்.

சாப்பிட்ட பிறகு கடைக்குப் பின்புறமுள்ள சிறிய அறையில் முதலாளி தூங்குவது வழக்கம். அவருடைய தங்கக் கடிகாரத்தின் உறையைக் கழற்றிவிட்டு, அதனுள்ளே நான் கொஞ்சம் காடியை ஊற்றி வைத்தேன். தூங்கி எழுந்ததும், கையில் கடிகாரத்துடன் கடைக்குள் பிரவேசித்த என் முதலாளி முணுமுணுப்பதைக் கேட்க எனக்கு ஆனந்தமாக இருந்தது. அவர் சொன்னார் :

" இதைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய் ? திடீரென்று என் கடிகாரம் வியர்க்கத் தொடங்கி இருக்கிறது. இதற்கு முன் இத்தகைய சம்பவம் நிகழ்ந்ததே இல்லை. வியர்வை—

ஞாபகமிருக்கட்டும்! ஒருக்கால் இது அபசகுனமாக இருக்குமோ!''

கடை அமளி துமளிப்பட்டும், வீட்டில் நிறைய வேலையி லிருந்தும் களைப்புற்றுச் சோர்ந்து மயங்கிப்போயிருந்த நான் அடிக்கடி நினைத்தேன்: ''என்னை அவர்கள் வெளியில் துரத்த நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று.

பனிப் போர்வை அணிந்த மனிதர்கள் கடைக் கதவைக் கடந்து சென்றனர். ஈமச் சடங்குக்குக் காலம் கடந்து செல்ப வர்களைப் போன்றும், சவப்பெட்டியுடன் செல்வதற்காகக் கல்லறையை நோக்கி வேகமாக நடப்பவர்களைப் போன்றும் அவர்கள் தோற்றமளித்தனர். பனி மழைக்கு மத்தியில் வண்டியை உலுக்கிக்கொண்டு குதிரைகள் நகர்ந்தன. நாள் தவறாமல் கடைக்குப் பின்புறமுள்ள கோயில் மணி மந்தமாக ஒலித்தது. அப்போது 'லென்து' காலம். தலைமீது தலையணையால் ஓங்கி அடிப்பதைப்போன்று அந்த மணி ஓசை இருந்தது; அதனால் வலி ஏற்படவில்லை; ஆயினும் மதியை அது மயக்கு வதாய் இருந்தது.

ஒரு நாள் புதிய பெட்டியை நான் திறந்துகொண்டிருந்த பொழுது, கோயில் காவற்காரன் என்னை அணுகினான். அவன் தொண்டு கிழம். தூணிப் பொம்மையைப் போன்று மிருதுவானவன்; நாய்களால் கடித்துக் கிழிக்கப்பட்டதைப் போன்ற கந்தல்களை அவன் அணிந்திருந்தான்.

''என் அருமைச் சிறுவனே! எனக்காக ஒரு ஜதை கையுறைகளைத் திருடித் தருவாயா?'' என்று என்னை அவன் கேட்டான்.

நான் பதில் சொல்லவில்லை. காலிப்பெட்டிமீது உட் கார்ந்துகொண்டு அவன் கொட்டாவிவிட்டான். பிறகு உதடு களின்மீது சிலுவை அடையாளம் வரைந்துகொண்டான். அதன் பின் தன் வேண்டுகோளை மறுபடியும் அவன் புதுப் பித்தான்.

''இப்பொழுது நீ அந்தக் காரியத்தைச் செய்வாயா?''

''திருடுவது குற்றம்'' என்றேன் நான்.

" திருட்டு என்பது நடைபெறுமலா இருக்கிறது. என் வயதை உத்தேசித்தாவது நீ திருடு, சிறுவனே !"

" என்னைச் சுற்றி வாழ்ந்தவர்களிலிருந்து இவன் முற்றிலும் மாறுபட்டவனாக இருந்தது எனக்குச் சந்தோஷத்தை அளித்தது. நான் நிச்சயமாகத் திருடுவேன் என்று அவன் திடமாக நம்பினான். ஜன்னல் வழியாக அவனுக்கு ஒரு ஜதை கையுறைகள் கொடுக்க நான் இசைந்தேன்.

"நல்லது" என்று நிதானமாக, திருப்தி எதுவும் இல்லாமல், அவன் சொன்னான். " என்ன நீ ஏமாற்ற மாட்டாய் அல்லவா ? நல்லது, நல்லது, நீ யாரையும் ஏமாற்ற மாட்டாய் என்பது எனக்குத் தெரியும்."

ஒன்றிரண்டு நிமிடங்கள் அங்கேயே உட்கார்ந்து தனது பூட்ஸின் நுனியில் படிந்திருந்த பனித் தூள்களை அவன் சுரண்டிக்கொண்டான். பிறகு தனது களிமண் புகைக்குழாயைப் பற்ற வைத்துக்கொண்டான். திடீரென்று அவன் என்னைப் பயமுறுத்தினான் :

" உன்னை நான் ஏமாற்றினால் நீ என் செய்வாய் ? இதே கையுறைகளை உன் எஜமானரிடம் எடுத்துச் சென்று, இதை அரை ரூபிளுக்கு நீ எனக்கு விற்றாய் என்று சொன்னால் என்னவாகும்? இதன் விலை இரண்டு ரூபிள் சொச்சம். ஆனால் அரை ரூபிளுக்கு இதை நீ விற்று இருக்கிறாய்? கைச்செலவுக்காக அல்லவா ?"

சொன்னவற்றை ஏற்கெனவே அவன் செய்துவிட்டதைப்போன்று, வாயடைத்துப் போய் அவனை நான் பார்த்தேன். அவன் நிதானமாக, மூக்கினால் பேசினான் ; கண்கள் பூட்ஸைப் பார்த்தன ; புகை அவன் தலையை மறைத்தது.

' என் பையனைச் சோதனை செய்து பார் ; அவன் திருடனா என்பதைக் கண்டுபிடி ' என்று எஜமானரே அவனை ஏவியிருந்தால் ? பிறகு என்ன நடக்கும் ? என நான் நினைத்தேன்.

" கையுறைகளை நான் உனக்குக் கொடுக்க மாட்டேன் " என்று நான் கோபத்துடன் கூறினேன்.

"வாக்களித்துவிட்டாய்? தந்த வாக்குறுதியை நீ மீறக் கூடாது!"

என் கையைப் பிடித்து அவன் இழுத்தான். குளிர்ந்த விரல்களால் என் தலையைத் தட்டிவிட்டு, அவன் உறுமினான்:

"நீ எப்படி இதற்கு இசைந்தாய்? 'இதோ, கையுறைகளை எடுத்துக்கொள்' என்று சொல்ல நினைத்தாய், அல்லவா?"

"அவைகளைத் தருமாறு கேட்டாய், இல்லையா?"

"நான் பல பொருள்களைக் கேட்பேன். கோயிலைத் திருடுமாறு நான் கேட்டால், நீ கோயிலைத் திருடுவாயா? இப்படி நீ மற்றவர்களை நம்பலாமா, சிறிய முட்டாளே!"

என்னை அப்பால் தள்ளிவிட்டு, அவன் எழுந்திருந்தான்.

"நீ திருடித் தரும் கையுறைகள் எனக்குத் தேவையில்லை. கையுறைகள் அணிய நான் அப்படியொன்றும் பெரிய சீமானல்ல. நான் விளையாடிப் பார்த்தேன். நீ என்னை நம்பிய தால் மணிக் கோபுரத்தின்மீது ஏற உன்னை அனுமதிக்கிறேன். மணியை நீ ஒலித்துப் பார்க்கலாம்; அங்கிருந்தபடி நகரையும் நீ காணலாம்."

"நகரை நான் பார்த்திருக்கிறேன்."

"மணிக் கோபுரத்தின்மீது நின்றுகொண்டு பார்த்தால், நகரம் மிக அழகாக இருக்கும்."

பனிக்கட்டிக்குள் பூட்ஸின் நுனியைச் சொறுகிக்கொண்டு மெதுவாக நடந்து கோயிலின் மூலையில் திரும்பி அவன் மறைந்துவிட்டான். அந்தக் கிழவன் உண்மையில் என்னுடன் விளையாடினானா, அல்லது என்னைச் சோதிப்பதற்காக எஜமானர் அவனை அனுப்பினாரா என்பதைப்பற்றிக் கலவரமடைந்து வேதனையுடன் சிந்தித்த நான் அவன் போவதைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். கடைக்குள் திரும்புவதற்கு எனக்குப் பயமாக இருந்தது.

"இவ்வளவு நேரமாக இங்கே என்ன செய்துகொண்டிருந்தாய்?" என்று கேட்டுக்கொண்டே ஷாஷா அங்கே வந்தான்.

திடீரென்று எற்பட்ட ஆத்திரத்தில் குறட்டை எடுத்துக் காட்டி அவனை நான் பயமுறுத்தினேன்.

அவனும், பிரதான சிப்பந்தியும் முதலாளியின் பொருள்களைத் திருடுவது எனக்குத் தெரியும். கடையை மூடும்நேரம் வரும்வரை, பூட்ஸை அவர்கள் அடுப்பில் ஒளித்து வைப்பதும், கடையை மூடினதும், அதைச் சட்டைக்குள் ஒளித்து வைத்துக்கொண்டு வெளியில் செல்வதும் எனக்குத் தெரியும். முதலாளியின் எச்சரிக்கை என் நினைவிலிருந்த காரணத்தால் இந்தச் செயல் எனக்கு வெறுப்பை மட்டும் அல்ல, பீதியையும் உண்டாக்கியது.

"நீ திருடுவது உண்டா?" என்று நான் ஷாஷாவைக் கேட்டேன்.

"நான் திருடுவதில்லை. பிரதான சிப்பந்தி திருடுகிறான்" என்று அவன் கடுமையாகச் சொன்னான். "நான் அவனுக்கு உதவிபுரிகிறேன். 'நான் சொல்லுகிறபடி செய்' என்று அவன் சொல்லுகிறான். அவன் சொல்லுவதை நான் கேட்காதுபோனால், அருவருக்கத்தக்க எதையாவது அவன் செய்துவிடுவான். முதலாளியைப் பொறுத்தவரை, அவரும் ஒரு காலத்தில் கடைச் சிப்பந்தியாக இருந்தவர்தான்; சகல தந்திரங்களையும் அறிந்தவர் அவர். ஆகவே நீ மட்டும் வாயை மூடிக்கொண்டு சும்மா இரு!"

கண்ணோடியில் பார்த்துக்கொண்டே பேசிய அவன் தனது டையைச் சரிப்படுத்திக்கொண்டான்; பிரதான சிப்பந்தி தன் விரல்களை அசைப்பதைப் போன்று அவனும் தன் விரல்களை அசைத்தான். என்னைவிட, தான் வயதில் பெரியவன் என்பதையும், என்மீது தான் ஆதிக்கம் செலுத்தலாம் என்பதையும் என்னை உணருமாறு செய்ய அவன் ஓயாது முயன்று வந்தான்; வறட்டுக் குரலில் என்னிடம் அவன் கூச்சலிடுவான்; ராஜபாணியில் சைகைகள் செய்து உத்தரவிடுவான்; அவனைவிட அதிக உயரமானவனையும், பலசாலியாயும் இருந்தும்கூட, நான் நோஞ்சலாகவும், விகாரமாகவும் தோற்றமளித்தேன். அவன் மிருதுவாகவும், பிடிகொடுக்காதவனாகவும் இருந்தான். கோட்டு அணிந்துகொண்டிருக்கும் காலத்தில் அவன் கம்பீரமாகக் காட்சி அளிப்பான்; ஆயினும் அதே சமயத்தில் அவன் தோற்றம் நகைப்பிற்கு இடமளிப்ப

தாகவும் இருக்கும். தூதனப் பெண்ணுகிய சமையற்காரியை அவன் வெறுத்தான். அந்தச் சமையற்காரி கெட்டவளா அல்லது நல்லவளா என்பதை யாராலும் நிர்ணயிக்க முடியவில்லை.

" யாவற்றையும்விடப் போர் என்றால் எனக்குப் பிரியம் அதிகம் " என்று எரியும் தனது கருவிழிகளை அகல விழித்து அவள் சொல்லுவாள். " யார் போராடுகிறார்கள் என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. கோழிகளாயினும், நாய்க்களாயினும், குடியானவர்களாயினும் சரி எல்லாம் எனக்கு ஒன்றுதான் !"

கோழிகளோ, பருந்துகளோ சண்டை போட்டுக் கொள்ள ஆரம்பித்தால், எந்த வேலை செய்துகொண்டிருந்தாலும் அதை அப்படியே போட்டுவிட்டு, ஜன்னல் பக்கம் சென்று சண்டை முடியும்வரை அதையே உன்னிப்பாகக் கவனித்துக்கொண் டிருப்பாள். சண்டை முடியும் வரையில் எது சொன்னாலும் அவளுக்குக் கேட்காது. மாலை நேரங்களில் அவள் ஷாஷாவிடமும், என்னிடமும் கேட்பாள் :

" சிறுவர்களே ! இங்கே எதற்காக உட்கார்ந்து இருக்கிறீர்கள் ? வெளியில் சென்று நீங்கள் ஏன் உக்ரமாகச் சண்டை போடக் கூடாது ?" என்று.

ஷாஷா வெதும்புவான்.

" முட்டாளே ! நான் சிறுவனல்லன், நான் ஒரு உதவிச் சிப்பந்தி !" என்பான் அவன்.

" நல்லது, இது எனக்குப் புரியாத பேச்சு. என் சம்பந்தப்பட்டவரை, உனக்குக் கலியாணமாகும்வரை, நீ எனக்குச் சிறுவன்தான்."

" முட்டாள்தனமான மூளை படைத்த கிழட்டு முட்டாளே !"

" சைத்தான் கெட்டிக்காரன் ; ஆனால் கடவுள் அவனை விரும்பவில்லை !"

அவள் பேசும் தோரணை ஷாஷாவின் ஆத்திரத்தைக் கிளப்பியது. அவளை அவன் கேலி செய்தபொழுது, கடைக்

கண்ணால் அவனை விழுங்குபவள்போலப் பார்த்துவிட்டு, அவள் சொல்லுவாள் :

"பூ! ஏ சிறிய கரப்பான் பூச்சி! தவறுதலாகக் கடவுள் உன்னை மனித உருவில் படைத்துவிட்டார்!"

அவள் படுக்கும் தலையணையில் குண்டுசியைச் சொறுகி வைக்குமாறும் தூங்கும்பொழுது அவள் முகத்தில் அரக்கையோ, அல்லது அழுக்கையோ பூசி வைக்குமாறும் அவன் என்னிடம் பன்முறை சொன்னான். அவளிடம் வேறு வகையில் விளையாடுமாறும் எனக்கு அவன் உபதேசம் செய்தான். சமையற்காரிக்கு நான் பயந்தேன். அவள் அயர்ந்து தூங்குவதில்லையாதலால், கையும் களவுமாக என்னை அவள் நிச்சயம் பிடித்துவிடுவாள் என்பதை நான் அறிவேன். அடிக்கடி அவள் விழித்து எழுந்து விளக்கைக் கொளுத்தி, எழுந்து உட்கார்ந்து மூலையை உற்றுப் பார்ப்பாள். சில சமயங்களில் அடுப்புக்குப் பின்புறமிருந்த என் படுக்கைக்கு வந்து, என்னை எழுப்பி, கம்மின குரலில்,

"எனக்குத் தூக்கம் வரவில்லை, அல்யோஷா! எனக்குத் திகிலாக இருக்கிறது ; ஏதாவது சொல்லேன்" என்று வேண்டுவாள்.

அரைத் தூக்கத்தில் அவளுக்கு நான் கதை சொல்லுவேன். முன்னும் பின்னும் சாய்ந்துகொண்டு அவள் மௌனமாக அங்கே உட்கார்ந்திருப்பாள். வெப்பமான அவள் தேகத்திலிருந்து அரக்கு, நறும்புகை வாசனை வீசுவதுமாதிரி எனக்குத் தோன்றியது. அவள் விரைவில் இறந்துவிடுவாள் என்று நான் கருதினேன். ஒருக்கால் இந்த நிமிடமே இறந்தாலும் இறந்துவிடுவாளோ என அஞ்சி, குரலை உயர்த்தி நான் பேச முயலுவேன். ஆனால் அவளோ என்னைத் தடுத்து விடுவாள்.

"உஸ்! நெறிதவறிப் பிறந்த அவர்களை நீ எழுப்பி விடக் கூடும்! உன்னை என் காதலன் என்று அவர்கள் நினைத்து விடுவார்கள்."

எப்பொழுதுமே ஒரே மாதிரியாக உட்காருவாள் : முன்னே சாய்ந்து, முழங்கால்களுக்கு மத்தியில் கைகளைச்

சொறுகிக்கொண்டும் எலும்புக்கூடான கால்களே இறுக்கிக் கொண்டும் அவள் உட்கார்ந்து இருப்பாள். கனமான நாட்டுத் துணி ரவிக்கை அணிந்திருப்பினும்கூட, அவளுடைய விலா வெலும்புகள் சுருங்கிப்போன குழலேப்போன்று தொறுத்திக் கொண்டு வெளியே தெரியும். நீண்ட நேரம் மௌனமாக இருந்துவிட்டு, கனிந்த குரலில் அவள் சொல்லுவாள் :

"அந்த வேதனையிலிருந்து மரணம் என்னே விடுவிக்க மாட்டாதா ?" என்று.

அல்லது யாரிடமோ பேசுவது மாதிரி கேட்பாள் :

"நல்லது, எப்படியோ காலத்தைத் தள்ளிவிட்டேன். அதைப்பற்றி என்ன ?"

நான் கதை சொல்லிக்கொண் டிருக்கும்பொழுதே, "தூங்கு !" என்று கடுமையான குரலில் சொல்ல அவள் சங்கோசப்படுவதே இல்லே. பிறகு எழுந்திருந்து, சமையலறை நிழலில் கலந்து மறைந்துவிடுவாள்.

"கிழட்டுச் சூனியக்காரி" என்று அவள் இல்லாத நேரத்தில் ஷாஷா அவளேப்பற்றிச் சொன்னுன். "அவளுக்கு நேரே இப்படிச் சொல்லிப்பாரேன்" என்று அவனுக்கு நான் யோசனே கூறினேன்.

"நான் அவளுக்குப் பயப்படுவதாக நினேத்து விட்டாயா ?" என்று துடுக்காகக் கேட்டுவிட்டு, முகத்தைச் சுளித்துக்கொண்டு உடனே சொன்னுன் : "அவள் முகத் துக்கு நேரே இதைச் சொல்ல மாட்டேன். உண்மையில் அவள் சூனியக்காரியோ என்னவோ !"

வெறுப்புணர்ச்சிக்கும், மூன்கோபத்திற்கும் வயப்பட் டிருந்த அவள், என்மீது கருணே காட்டவில்லே. காலே ஆறு மணிக்குக் காலால் என்னே உதைத்துவிட்டு, அவள் கத்துவாள் :

"குறட்டைவிட்டது போதும்! விறகு கொண்டுவா ! ஸாமோவாரைச் சூடாக்கு ! உருளைக்கிழங்கின் தோலே உரி!" என்று.

அவள் போடும் கூச்சல் ஷாஷாவையும் எழுப்பிவிடும்.

"எதற்காக இப்படிக் கூச்சலிடுகிறாய் ?" என்று அவன் முனகுவான். "என்னை நீ தூங்கவிடுவதில்லை யென்று முதலாளியிடம் நான் சொல்லிவிடுவேன்."

தூக்கமின்றி வீங்கின அவள் கண்கள் அவன் பக்கம் பாயும். எலும்புக்கூடான தேகத்தை அசைத்து, சமையலறையில் அங்குமிங்கும் நடமாடிக்கொண்டு அவள் சொல்லுவாள்:

"பூ! கடவுள் செய்த பெருந் தவறின் பலனே! நீ என் மாற்றாள் மகனாக இருந்தால், உன்னை நான் சித்திரவதை செய்திருக்க மாட்டேனா ?" என்று.

"நீ நாசமாய்ப் போக!" என்று சபிப்பான் ஷாஷா. கடைக்குச் செல்லும் வழியில் அவன் என்னிடம் சொல்லுவான்: "அவளை அவர்கள் ஒழித்துக்கட்டுமாறு நான் சொல்வேன். அவள் பார்க்காத சமயத்தில், உணவில் உப்பைக் கலப்பேன். பதார்த்தங்களில் உப்பு அதிகமாக இருந்தால், அவர்கள் அவளை வெளியில் அனுப்பிவிடுவார்கள். ஒருக்கால் மண்ணெண்ணையையும் ஊற்றுவேன். நீ ஏன் இதைச் செய்யக் கூடாது ?"

"நீயே ஏன் செய்யக் கூடாது ?"

"கோழை!" என்று அவன் உறுமினான்.

எங்கள் கண் முன்னே சமையற்காரி இறந்துபோனாள். ஸாமோவாரைத் தூக்குவதற்காகக் குனிந்தவள், மார்பைப் பிடித்து யாரோ தள்ளியதைப்போன்று சுருண்டு கீழே சாய்ந்தாள். அவள் கரங்கள் விரைத்துக் கிடந்தன. அவள் வாயின் ஓரத்திலிருந்து ரத்தம் வடிந்தது.

அவள் இறந்துவிட்டாள் என்பதை நாங்கள் இருவரும் உணர்ந்தோம். ஆனால் பயத்தால் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல், நாங்கள் அவளையே பார்த்துக்கொண்டிருந்தோம். இறுதியில் சமையலறையிலிருந்து ஷாஷா வெளியே பாய்ந்தான். என்ன செய்வது என்று தெரியாமல், ஜன்னல் கண்ணாடியில் சாய்ந்துகொண்டு, வீதி விளக்கைப் பார்த்தேன் நான். முதலாளி வந்தார்; கவலையுடன் அவளருகில் உட்கார்ந்து, அவள் முகத்தைத் தொட்டுப் பார்த்துவிட்டு, அவர் சொன்னார்:

"அவள் செத்துப் போனாள். இதைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?" என்று.

மூலையில் வைக்கப்பட்டிருந்த நிக்கோலாவின் சிறிய சிலையைப் பார்த்து, சிலுவை அடையாளம் வரைந்துகொண்டு அவர் கூவினர் :

"காஷ்நின்! ஓடிப்போய் போலீசாரிடம் தகவல் தெரிவி!" என்று.

ஒரு போலீஸ்காரர் வந்தார்; அங்குமிங்கும் நடந்து கொடுத்தார்; ஒரு நாணயத்தை பையில் போட்டுக்கொண்டார்; பிறகு போய்விட்டார். விரைவில் ஒரு வண்டிக்காரருடன் அவர் திரும்பிவந்தார். தலையை ஒருவரும், கால்களை மற்றொருவருமாகப் பிடித்துச் சமையற்காரியைத் தூக்கிக் கொண்டு அவர்கள் வெளியே சென்றார்கள். கதவு இடுக்கு வழியாக முதலாளி மனைவி எட்டிப் பார்த்தாள்.

"தரையைச் சுத்தம் செய்" என்று அவள் எனக்குக் கட்டளையிட்டாள்.

"மாலையில் அவள் செத்தது நல்லதாயிற்று" என்று முதலாளி சொன்னார்.

மாலையில் செத்தது ஏன் நல்லதாயிற்று என்பது எனக்கு விளங்கவில்லை.

"விளக்கை அணைக்காதே!" என்று நாங்கள் படுத்ததும் பணிவுடன் சொன்னான் ஷாஷா.

"பயமாக இருக்கிறதா?"

கம்பளியால் முகத்தை மூடிக்கொண்டு நீண்ட நேரம் அவன் மௌனமாகக் கிடந்தான். எதையோ உற்றுக் கேட்பதைப் போன்று, எதற்காகவோ காத்திருப்பதைப் போன்று இரவும் மௌனமாக இருந்தது. அடுத்த நிமிடம் மணியோசை கேட்குமென்றும், பீதியால் இரைச்சலிட்டுக்கொண்டு நகர மக்கள் ஓட ஆரம்பிப்பார்கள் என்றும் எனக்குத் தோன்றியது.

"கனப்பு-அடுப்பின்மீது இருவரும் சேர்ந்து படுக்கலாம்" என்று கம்பளிக்கு வெளியே மூக்கை நீட்டிக் கொண்டு மெதுவாகச் சொன்னான் ஷாஷா.

"அடுப்பின்மீது வெப்பமாக இருக்கும்" மீண்டும் அவன் மௌனம் சாதித்தான்.

"அவள் திடீரென்று இப்படிப் போய்விட்டாளே?" என்றான் அவன். "அவள் சூனியக்காரி என்று நான் நினைத்தேன். என்னால் தூங்க முடியவில்லை."

"என்னாலும் தூங்க முடியவில்லை."

இறந்தவர்கள் புதை குழியிலிருந்து எப்படி எழுந்திருந்து நடுநிசிவரை தங்கள் வீடுகளையும், உறவினர்களையும் தேடி நகரம் முழுதும் அலைந்து திரிவார்கள் என்பதை அவன் எனக்கு விளக்க ஆரம்பித்தான்.

"இறந்தவர்களுக்கு நகரம் மாத்திரம்தான் நினைவிலிருக்கும்" என்று தணிந்த குரலில் அவன் சொன்னான். "வீதிகளும் வீடுகளும் அவர்களுக்கு நினைவிலிருக்காது."

அமைதி மேலும் அதிகரித்தது; இருள் மேலும் இருண்டது. ஷாஷா தலையை உயர்த்தி "என் பெட்டியில் என்ன இருக்கிறது என்பதை நீ பார்க்க விரும்புகிறாயா?" என்று கேட்டான்.

அந்தப் பெட்டியில் அவன் எதை ஒளித்து வைத்திருக்கிறான் என்பதை அறிய நீண்ட நாட்களாக எனக்கு ஆசை. அவன் சதா அதைப் பூட்டி வைப்பான்; மிக ஜாக்கிரதையாக அதைத் திறப்பான். உள்ளே எட்டிப் பார்க்க நான் முயன்றால், அவன் கடுமையாகச் சொல்லுவான்:

"நிறுத்து! நீ எதைப் பார்க்கிறாய்?" என்று.

அவன் வைத்திருக்கும் பெட்டியைக் காண விரும்புவதாக நான் சொன்னதும், அவன் எழுந்து படுக்கையில் உட்கார்ந்தான். பிறகு வழக்கமான தனது அதிகாரத் தொனியில், பெட்டியைத் தனது காலருகில் எடுத்து வைக்குமாறு கட்டளையிட்டான். தான் கழுத்தில் அணிந்திருக்கும் சிலுவை கோத்த சங்கிலியில், சிலுவையுடன் சாவியையும் அவன் கோத்திருந்தான். முதலில் சமையலறையில் படர்ந்திருந்த இருளைக் கடைக் கண்ணால் பார்த்துவிட்டு, கௌரவத்துடன் முகத்தைச் சுளித்தான். பிறகு பூட்டைத் திறந்தான். பெட்டியின் மூடியை ஊதிவிட்டு, அதை மெதுவாகத் திறந்

தான். அதிலிருந்து பல உள்-காலுறைகளை அவன் வெளியே எடுத்தான்.

தேயிலைப் பொட்டலங்கள்மீது பொதிந்திருக்கும் பல வர்ணக் காகிதங்களும், சிவப்புக்கல் காலிப் பெட்டிகளும், பாலிஷ் டின்களும் பாதிப் பெட்டியை நிரப்பிக்கொண்டிருந்தன.

'' இவை எல்லாம் என்ன ?''

'' போகப் போகத் தெரியும்.''

கால்களால் பெட்டியை அழுத்தி அதன்மீது சாய்ந்து கொண்டு, பக்தியுடன் அவன் சொன்னான் :

'' பர மண்டலத்திலிருக்கும் பிதாவே...'' என்று

பொம்மைகளை காணலாம் என்று நான் எதிர்பார்த்தேன்.* வெளிப் பார்வைக்கு பொம்மைகள்மீது வெறுப்புக் காட்டினேன் என்றாலும், அவைகளை வைத்திருப்பவர்கள் மீது உள்ளூர எனக்குப் பொறுமை இருந்துவந்தது. ஷாஷா கௌரவமானவனுதலால், அவன் பொம்மைகளை வைத்திருக்கிறான் என்னும் எண்ணம் எனக்குக் திருப்தி அளித்திருக்கும். வெட்கத்துடன் அவன் அவைகளை ஒளித்துவைத்தான் ; ஆனால் அவன் கலக்கத்தை நான் மெச்சினேன்.

முதல் பெட்டியைத் திறந்து அதிலிருந்து மூக்குக் கண்ணாடிச் சட்டத்தை வெளியில் எடுத்தான். அதை அணிந்து கொண்டு, என்னை உற்றுப் பார்த்துவிட்டுச் சொன்னான் :

'' கண்ணாடி இல்லாததைப் பற்றிக் கவலையில்லை. அவை அப்படித்தான் இருக்க வேண்டும்'' என்று.

'' அதன் மூலம் நானும் பார்க்கட்டும்.''

'' உன் கண்களுக்கு இது பொருந்தாது. இது கருவிழி களுக்குத்தான் பொருந்தும் ; உன் கண்கள் கரியவை யல்ல'' என்று யதார்த்தத் தொனியில் அவன் விளக்கினான். எதிர் பாராத முறையில் அவன் உரத்துப் பேசியதால், சமையல் அறையைப் பயம் நிறைத்த கண்களால் பார்த்தான்.

---

*என்னிடம் பொம்மைகள் இருந்ததே கிடையாது.

ஒரு டப்பாவில் பொத்தான்கள் இருந்தன.

"இவைகளை வீதியிலிருந்து கண்டெடுத்தேன்" என்று பெருமையுடன் அவன் சொன்னான். "நானே இவ்வளவையும் கண்டெடுத்தேன். முப்பத்தேழு பொத்தான்கள்."

மூன்றாவது டப்பாவில் பெரிய பித்தளைப் பின்கள் சில இருந்தன. இவையும் வீதியில் கண்டெடுக்கப்பட்டவை. தேய்ந்த, உடைந்த, முழுசாக இருந்த சக்கிலியர் உபயோகிக்கும் ஆணிகளும் சில இருந்தன ; ஒரு பித்தளைக் கதவுப்பிடி, ஒரு தந்தப்பிடி, ஒரு பெண்ணின் சீப்பு, ஒரு புத்தகம் போன்ற எண்ணற்ற பொருள்களும் இருந்தன.

எலும்பையும், கந்தலையும் நான் தேடித் திரிந்த காலத்தில் இதைவிடப் பத்து மடங்கு அதிகமான குப்பைகளை என்னால் ஒரே மாதத்தில் சேகரித்திருக்க முடியும். ஷாஷாவின் பொக்கிஷத்தைக் கண்டதும் எனக்கு ஏமாற்றமும், திகைப்பும், அவன்பால் இரக்கமும் உண்டாயின. ஒவ்வொரு பொருளையும் அவன் நுணுக்கமாகப் பரிசீலனை செய்தான். அன்புடன் அவன் அவைகளை வருடினான் ; அவனது கனத்த உதடுகள் அதிகார தோரணையில் சீட்டி அடித்தன ; தொருத்திக்கொண்டிருக்கும் அவனுடைய கண்கள் கனிவுடன் பார்த்தன. ஆனால் மூக்குக் கண்ணாடி அவன் குழந்தை முகத்தை விகாரமாக்கிற்று.

"இந்தப் பொருள்களை வைத்துக்கொண்டு நீ என்ன செய்யப் போகிறாய் ?"

கண்ணாடி மூலம் என்னைப் பார்த்துவிட்டு, தன் வயதுக்கேற்ற குரலில் அவன் சொன்னான் :

"எதையாவது உனக்குத் தர வேண்டுமென்று ஆசைப்படுகிறாயா ?"

"வேண்டாம். உனக்கு நன்றி."

ஒரு நிமிடம் அவன் பதில் சொல்லவில்லை. அவன் அளித்ததை நான் ஏற்க மறுத்ததாலும், அவன் பொக்கிஷத்தில் நான் சிரத்தை காட்டாததாலும், அவன் மனம் புண்பட்டுவிட்டது.

" ஒரு துண்டை எடுத்துவா. யாவற்றையும் நாம் சுத்தம் செய்வோம். இவைகள்மீது தூசு படிந்திருக்கிறது " என்று அவன் யோசனை கூறினான்.

பொக்கிஷத்தைச் சுத்தம் செய்து அதனதன் இடத்தில் வைத்துவிட்டு, சுவர்ப் பக்கம் அவன் திரும்பினான். மழை பெய்ய ஆரம்பித்துவிட்டது. சுழன்று சுழன்று காற்று ஜன்னல்மீது அடித்தது.

" பூமி உலரும்வரையில் தோட்டத்தில் காத்திரு. உன்னைத் திகைக்கவைக்கும் ஒரு பொருளை உனக்கு நான் காட்டுகிறேன் " என்று திரும்பிப் பார்க்காமலே அவன் சொன்னான்.

பதிலே சொல்லாமல் நான் படுக்கையில் படுத்தேன்.

சில நிமிடங்களுக்குப் பிறகு திடீரென்று தாவி உட் கார்ந்தான். பிறகு சுவரைப் பிறாண்டிக்கொண்டே பீதியுட னும் தணிந்த குரலிலும் அவன் சொன்னான் :

" எனக்குப் பயமாக இருக்கிறது... ஆண்டவனே! எனக்கு நிரம்பப் பயமாக இருக்கிறது ! கடவுளே! என்மீது கருணை காட்டும் " என்று.

பயத்தால் என் உடலும் விறைத்தது. முதுகுப் புறத்தை எனக்குக் காட்டிக்கொண்டு ஜன்னலுக்கு அருகில் சமையற் காரி நிற்பதாக எனக்குத் தோன்றியது. கோழிச் சண்டை யைப் பார்க்கும்பொழுது ஜன்னல் கண்ணாடியில் தனது தலையை அழுத்திக்கொண்டு வழக்கமாக நிற்பதைப் போன்று இப்பொழுதும் அவள் நிற்பதாகத் தோன்றியது.

ஷாஷா அழுதான். சுவரைத் தொடர்ந்து பிறாண்டிக் கொண்டிருந்தான். ஜன்னியால் பீடிக்கப்பட்டவனைப்போன்று அவன் கால்கள் இழுத்தன. அனல் கக்கும் வெப்பமான மெத்தையைக் கடப்பதைப் போன்று சமையலறையில் ஊர்ந்து சென்று, அவனை அடைந்தேன்.

களைத்து தூக்கம் வரும்வரையில் நாங்கள் அழுதோம்.

சில தினங்களுக்குப் பின்னர் எங்களுக்கு விடுமுறை கிடைத்தது. அன்று நண்பகல்வரையில் வேலைசெய்துவிட்டு,

சாப்பாட்டுக்கு வீட்டுக்குச் சென்றோம். முதலாளியும், அவர் மனைவியும் படுக்கச் சென்ற பிறகு மர்மமான குரலில் ஷாஷா சொன்னான் :

" என்னுடன் வா !" என்று.

திக்குமுக்காடச் செய்யும் எதையோ எனக்குக் காட்டப் போகிறான் என்று நான் ஊகித்துக்கொண்டேன்

நாங்கள் தோட்டத்திற்குச் சென்றோம். இரண்டு வீடுகளுக்கு மத்தியில் ஒரு குறுகிய மனையில் பத்து, அல்லது பதினைந்து எலுமிச்சை மரங்கள் வளர்ந்தோங்கி நின்றன. அவற்றின் அடிப் பாகங்கள் ஜீவனற்றுத் தோற்றமளித்தன ; பட்டுப்போன அவற்றின் கிளைகள் வானத்தை நோக்கி வளர்ந்திருந்தன. அந்தக் கிளைகளில் காக்கையின் கூடுகள் கூடத் தென்படவில்லை மிகப் பெரிய கல்லறைகளைப் போன்று மரங்கள் உயர்ந்திருந்தன. இந்த எலுமிச்சை மரங்களைத் தவிர வேறொன்றும் இங்கே வளரவில்லை. ஒரு புகையோ, புற்றரையோ மருந்துக்குக்கூட இல்லை. இரும்பு போன்று கறுப்பாகவும், கடினமானதாகவும் இருந்தது, பூமி. கடந்த வருடம் அழகிய இலைகளுக்கு அடியில் தண்டு நிலங்கள் காட்சி அளித்த இடங்களி லெல்லாம், தேங்கி நிற்கும் கண்ணீரில் கனி தோன்றுவதைப் போன்று அவை மேடுகளாகத் தோற்றமளித்தன.

வீட்டின் மூலையைக் கடந்து, வீதி யோரத்திலிருந்த வேலியை நோக்கி ஷாஷா நடந்தான். ஒரு எலுமிச்சை மரத்தடியில் நின்றுகொண்டு, ஒரு நிமிடம் அண்டைவீட்டு ஜன்னலை உற்றுப் பார்த்தான். பிறகு கீழே உட்கார்ந்து இலைகளை அப்புறப்படுத்தினான். இலைகளை அவன் அப்புறப் படுத்தியதும் கணுக்கணுவாக இருந்த வேர் தென்பட்டது. அதற்குக் கீழே இரண்டு செங்கல்கள் மண்ணில் பதிக்கப்பட்டிருந்தன. அவன் செங்கல்களை வெளியே எடுத்தான். அவை களுக்குக் கீழே கூரைவேயும் தகடு ஒன்று இருந்தது. அதற்குக் கீழே சதுரமான பலகை ஒன்று இருந்தது. இறுதியில் வேருக்குக் கீழே ஒரு பெரிய துவாரத்தை நான் கண்டேன்.

தீக்குச்சியை உரைத்து ஒரு துண்டு மெழுகுவர்த்தியைக் கொளுத்தினன், ஷாஷா. அதை அந்தத் துவாரத்தில் திணித்துவிட்டு, அவன் சொன்னன் :

" பார் ! ஆனல் பயந்துவிடாதே !" என்று.

அவன் பயப்படுகிறன் என்பது தெளிவாகத் தெரிந்தது. அவன் பிடித்துக்கொண்டிருந்த மெழுகுவர்த்தி நடுங்கிற்று ; அவன் முகம் வெளிறியிருந்தது ; அவன் உதடுகள் உலர்ந்திருந்தன ; அவன் கண்கள் நீனந்திருந்தன ; திருட்டுத்தனமாகத் தனது கரங்களைப் பின்னே கட்டிக்கொண்டான். அவனுக்கு இருந்த பயம் என்னையும் பீடித்தது. சிறிய குகையின் வளைவாக விளங்கிய வேருக்குக் கீழே மிக ஜாக்கிரதையாக நான் பார்த்தேன். மூன்று மெழுகுவர்த்திகளைக் கொளுத்தியிருந்தான். அவை அந்தக் குகையில் நீல ஒளி வீசின. ஒரு சாதாரண வாளி அளவு ஆழமிருந்தது அந்தக் குகை; ஆனல் வாளியைவிட அகலமாக இருந்தது. அதன் சுவர்களை வர்ணக் கண்ணுடிகளால் அவன் அலங்கரித்திருந்தான். அதன் மத்தியில் தகரத் தகடுகளாலும்,சரிகையைப் போன்று தோற்றமளித்த பொருளாலும் அலங்கரிக்கப்பட்ட ஒரு சிறிய சவப்பெட்டி இருந்தது. அதற்குள்ளிருந்து ஒரு குருவியின் பழுப்புநிற நகங்களும்,மூக்கும் நீட்டிக்கொண்டுகின்றன. அதன் தலைக்கு மேலே சின்னஞ் சிறிய ஒரு மேஜையில் பித்தளைச் சிலுவை இருந்தது. மூன்று பக்கங்களிலும் தங்கக் காகிதங்களாலும், வெள்ளிக் காகிதங்களாலும் அலங்கரிக்கப்பட்ட குழாய்களில் மெழுகுவர்த்திகள் எரிந்தன.

குகை வாசலில் விளக்கொளி வீசிற்று. அதன் உட்புறத்திலே மங்கிய ஒளி வீசிற்று. மண்ணின் மணமும் சூடான வர்த்தியின் வெப்பமும், பட்டுப்போன இலைகளின் நாற்றமும் அலை அலையாக எழுந்து தாக்கின. வான வில்லின் வர்ணஜாலங்கள் அப்பொழுது என் கண்முன் தோன்றின. இவைகளெல்லாம் சேர்ந்து, உள்ளத்திலே ஆச்சரியத்தைத் தூண்டிவிட்டு, எனக்கு இருந்த பயத்தைத் தணித்தன.

" அழகாக இருக்கிறதா ?" என்று கேட்டான் ஷாஷா.

" எதற்காக இது ?"

"இது ஒரு கோவில்" என்று அவன் விளக்கினான். "இது ஒரு கோவிலைப் போன்று காட்சியளிக்கவில்லையா?"

"எனக்குத் தெரியாது."

"குருவியின் பிணம்? அது பலியிடப்பட்டதால், ஒருக் கால், அதன் சடலம் ஏதோ அற்புதத்தால், புனிதச் சின்ன மாக மாறலாம்."

"அது செத்த பிறகு உனக்குக் கிடைத்ததா?"

"இல்லை. அது கொட்டகைக்குப் பறந்து வந்தது. என் தொப்பியில் பிடித்து நான் அதைக் கொன்றேன்."

"எதற்காக?"

"எதற்காக என்றால்?"

என் கண்களைப் பார்த்துக்கொண்டு அவன் மீண்டும் கேட்டான்:

"இது அழகாக இல்லையா?"

"இல்லை!"

அவன் குகையின்மீது சாய்ந்துகொண்டு, அவசரம் அவசரமாக அதைப் பலகையால் மூடிவிட்டு, தகட்டை அதன் மீது வைத்தான். பிறகு செங்கல்களை அடுக்கிவிட்டு, தனது முழங்கால்களில் ஒட்டிக்கொண்டிருந்த மண்ணைத் தட்டி விட்டு, கடுமையான குரலில் சொன்னான்:

"இதை நீ ஏன் விரும்பவில்லை?"

"ஏனெனில் குருவிக்காக நான் இரக்கப்படுகிறேன்."

திடீரென்று குருடனுக்கிவிட்டவனைப்போன்று அவன் என்னைச் சூன்யமாகப் பார்த்தான். பிறகு என் நெஞ்சில் குத்திவிட்டுக் கூவினான்:

"மூட்டாள்! நீ பொறுமைப்படுகிறாய்; அதனால்தான் நீ இதை விரும்பவில்லை என்று சொல்லுகிறாய். காளட்னுயா தெருவிலுள்ள தோட்டத்தில் இதைவிட அழகாக கோவில் கட்டியிருப்பதாக நீ நினைக்கலாம்."

"நிச்சயமாகக் கட்டியிருக்கிறேன்" என்று தயக்க மின்றி நான் பதில் சொன்னேன், நானே சிருஷ்டி செய்த முடுக்கை நினைவிலிறுத்திக்கொண்டு.

தனது கோட்டை வீசி எறிந்து, சட்டையின் கைகளை அவன் சுருட்டிவிட்டுக்கொண்டான். பிறகு தனது உள்ளங் கைகளில் துப்பிக்கொண்டு அவன் சொன்னான் :

" நல்லது, நாம் சண்டை போடலாம் வா " என்று.

சண்டைபோட எனக்கு ஆசையில்லை. இந்தக் காட்சி யால் நான் களைப்படைந்து போனேன். மேலும் உறவினன் ஒருவனின் கோபக்கனல் வீசும் முகத்தைக் காண எனக்குச் சகிக்கவில்லை.

என்மீது பாய்ந்து, நெஞ்சில் இடித்து என்னைக் கீழே தள்ளிவிட்டு, என்மீது அவன் உட்கார்ந்தான்.

" வாழ்வு அல்லது சாவு ?" என்று அவன் கர்ஜித்தான்.

அவனைவிட நான் பலசாலி. என் உணர்ச்சி பொங்கிற்று. மறு நிமிடம் தலைமீது கைகளை வைத்துக்கொண்டு தலைகுப்புற விழுந்து ஊளையிட்டான் அவன். மிகுந்த பீதி அடைந்து, நான் அவனை எழுப்ப முயன்றேன். ஆனால், என் முயற்சியை ஏதோ எதிர்த்தது. என் பீதியை அதிகப்படுத்திற்று. என்ன செய்வது என்று தெரியாமல நான் அப்பால் சென்றேன்.

" உன்னை நான் மாட்டிவிட்டேன். முதலாளி என்னைக் கண்டுபிடிக்கும்வரை இந்த இடத்தைவிட்டு நான் நகர மாட் டேன். அவர் என்னைக் கண்டுபிடித்ததும் உன்மீது நான் கோள் சொல்லுவேன். அவர் உன்னை வேலையிலிருந்து நீக்கி விடுவார்."

அவன் சபித்தான் ; பயமுறுத்தினான். இது என்னைப் பைத்தியக்காரனாக்கிவிட்டது. நான் குகைக்குப் பாய்ந்து சென்று, செங்கல்களை வீசி எறிந்து, சவப்பெட்டியையும் குருவியையும் எடுத்து வேலிக்கு அப்பால் வீசி எறிந்தேன். குகைக்குள்ளிருந்த யாவற்றையும் வெளியே எறிந்துவிட்டு, குகையை மிதித்துத் தேய்த்தேன்.

" அதோ ! அதோ ! அதைப் பார்த்தாயா ?"

என் கோபத்தை ஷாஷா ஏற்றமுறை நூதனமாக இருந் தது. வாயைப் பிளந்து, புருவங்களை நெறித்துக்கொண்டு, ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் அவன் என் நடவடிக்கைகளைக் கவனித்தான். வேலை முடிந்ததும், அவன் சாவதானமாக

எழுந்திருந்து, தன்மீது படிந்திருந்த தூசியைத் துடைத்து விட்டு, தனது கோட்டைத் தோள்மீது போட்டுக்கொண்டு, அச்சுறுத்தும் தொனியில் சொன்னான் :

"என்ன நடக்கும் என்பதை நீ பொறுத்திருந்து பார். உனக்காகத்தான் நான் இதை சிருஷ்டி செய்தேன். இது சூனியம். அதோ பார் !"

அவன் சொற்களால் தாக்கப்பட்டு, நான் தளர்ந்தேன். என் தேகம் விறைத்தது. திரும்பிக்கூடப் பார்க்காமல் அவன் நடந்தான். அவன் சாந்தம் என்னை நசுக்கிற்று. நகரிலிருந்து, முதலாளியிடமிருந்து, ஷாஷாவிடமிருந்து, அவனுடைய பில்லி சூனியத்தினிடமிருந்து, அர்த்தமற்ற, மந்தமான வாழ்க்கையிலிருந்து தப்பி ஓடிவிட மறு நாள் நான் முடிவு செய்தேன்.

புதிய சமையற்காரி மறு நாள் காலை என்னை எழுப்பிய பொழுது, அவள் கூவினாள் :

"கடவுளே ! உன் முகம் ஏன் இப்படி இருக்கிறது ?"

"சூன்யத்தின் வேலை" என்று மந்த உணர்ச்சியுடன் நான் நினைத்தேன்.

ஆனால் சமையற்காரி வாய்விட்டுச் சிரித்ததால், கண்ணாடியில் என் முகத்தைப் பார்த்துவிட்டு நானும் அவளுடன் சேர்ந்து புன்னகை புரிந்தேன்.

என் முகத்தில் கரி பூசப்பட்டிருந்தது.

"ஷாஷாதான் இதைச் செய்தானு ?" என்று நான் கேட்டேன்.

"ஒருக்கால் நான் செய்திருக்கலாம்" என்று சொல்லி நகைத்தாள் சமையற்காரி.

நான் பூட்ஸைப் பாலிஷ் செய்ய ஆரம்பித்தேன். ஒரு பூட்ஸுக்குள்ளே கையை விட்டபொழுது, ஒரு ஊசி என் கையில் தைத்தது.

"இதோ சூன்யத்தின் வேலை !" என்று எண்ணினேன் நான்.

எல்லா பூட்ஸுகளிலும் பின்களும், ஊசிகளும், மிக சாமர்த்தியமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த காரணத்தால்,

நிச்சயமாக அவை என சதையை ருசி பார்த்து இருக்கும். ஒரு ஜாடி நிறையக் குளிர்ந்த ஜலத்தை மொண்டு, அப்போது தும் தூங்கிக்கொண்டிருந்த அல்லது தூங்குவதற்காகப் பாவனை செய்துகொண்டிருந்த மாந்திரிகன் தலையில் மிகுந்த திருப்தியுடன் கொட்டினேன் நான்.

எனினும் எனக்குச் சந்தோஷம் ஏற்படவில்லை. பழுப்பு நிறமுள்ள சுருங்கிய நகங்களும், பரிதாபகரமான, அசக்குப் போன்ற சிறிய மூக்கும் படைத்த குருவியினுடைய சவப் பெட்டி இருந்த காட்சி என் மனதைவிட்டு அகலவில்லை ; என்னால் அகற்ற முடியவில்லை. ஆயினும் அத்துடன் வானில் போலக் காட்சியளிக்க முயன்றுகொண்டிருந்த பல்வேறு வர்ண ஒளிகள் என்னைச் சுற்றி நர்த்தனமாடின. சவப்பெட்டி விரிந்தது ; பறவையின் நகங்கள் வளர்ந்தன ; அவை உயிர் பெற்றுவிட்டதைப்போன்று மேலும் மேலும் நீண்டன.

அன்று மாலை அங்கிருந்து ஓடிவிட நான் திட்டமிட்டிருந்தேன். ஆனால் இரவு உணவுக்கு முன், கனவு உலகில் சந்தரித்தபடியே சூப்பை எண்ணெய் அடுப்பில் சூடாக்கிக் கொண்டிருந்தபோது, சூப்பு பொங்கி வழிந்தது. நெருப்பை அணைக்கும் அவசரத்தில், பாத்திரம் கவிழ்ந்து, சூப்பு என் கைகளில் கொட்டிவிட்டதால், ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டிய அவசியம் எனக்கு நேர்ந்தது.

அந்த ஆஸ்பத்திரியின் கோரக் காட்சி இன்றும் என் கண்முன் நிற்கிறது. பழுப்பு, வெண்போர்வையைப் போர்த்திக்கொண்டிருந்த உருவங்கள், சூன்யத்திலே ஊர்ந்தன, முனகின, முணுமுணுத்தன. கவைத் தண்டத்தின் உதவியுடன் நடமாடிய மீசை போன்ற புருவங்களுள்ள நெட்டை மனிதன் ஒருவன் தன் தாடியை தடவிவிட்டுக்கொண்டு, கர்ஜித்தான் :

"பரிசுத்த பிதாப்பிடம் உன்னைப்பற்றி ரிப்போர்ட் செய்வேன்" என்று.

கட்டில்கள் சவப்பெட்டிகளை எனக்கு நினைவூட்டின. உத்தரத்தைநோக்கி மூக்கைக் காட்டியவாறு படுத்துக்கிடந்த நோயாளிகள், இறந்துபோன குருவியை எனக்கு நினைவூட்டி

னர். மஞ்சள் சுவர்கள் அதிர்ந்தன; உத்தரம் கப்பலைப் போன்று அலைமோதிற்று; தரை எவ்வி எழும்பி, கட்டில்களை முன்னும் பின்னும் அசைத்தது. எல்லாம் மோசமாக இருந்தன. ஜன்னலுக்கு வெளியே இருந்த மரங்களின் பட்டுப் போன கிளைகள், கட்புலனாகாத கையால் அசைக்கப்பெறும் சவுக்கைப்போன்று சப்தமிட்டுக்கொண்டு அசைந்தன.

மெலிந்த, செந்தலை படைத்த பிரேதம் சிறிய கைகளால் போர்வையை இழுத்துப் போர்த்துக்கொண்டு, கதவுக்கு முன்னே நடமாடியவாறு ஊளையிட்டது:

"உன் பைத்தியக்காரத்தனம் என்னிடம் செல்லாது!" என்று.

"பரிசுத்த பிசாப்!" என்று கூவினான், கவைத் தண்டத்தில் நின்ற மனிதன்.

பாட்டியும், தாத்தாவும், மற்றவர்களும் ஆஸ்பத்திரியில் நோயாளிகளை பட்டினி போட்டுக் கொல்லுவார்கள் என்று சொல்லியிருந்தார்கள். காலம் எனக்கு நெருங்கிவிட்டதாக நான் முடிவு செய்தேன். என் தலைக்கு மேலே தொங்கிய சிலேட்டில் சாக்பீஸால் மூக்குக் கண்ணாடியும், போர்வையும் அணிந்த ஒரு பெண் என்னமோ எழுதினாள். சாக்பீஸ் நொறுங்கி, அதன் தூள்கள் என் தலைமீது விழுந்தன.

"உன் பெயரென்ன?" என்று அவள் என்னைக் கேட்டாள்.

"எனக்குப் பெயரில்லை."

"உனக்குப் பெயரில்லையா?"

"இல்லை."

"விளையாடாதே! விளையாடினால் உனக்குத் தண்டனை கிடைக்கும்."

அவர்கள் என்னைத் தண்டிப்பார்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியுமாதலால்தான் நான் என் பெயரைச் சொல்ல மறுத்தேன். பூனையைப் போன்று இருந்த அவள் வார்த்தைகளை உமிழ்ந்துவிட்டு, பூனையைப் போன்றே திருட்டுத்தனமாக மறைந்துபோய்விட்டாள்.

இரண்டு விளக்குகள் கொளுத்தப்பட்டன. உத்தரத்தில் தொங்கிய அவைகளின் தண்டங்கள் பார்வை பிழுந்த கண்களைப் போன்று காட்சியளித்தன.

"நாம் சீட்டு விளையாடலாமே" என்று மூலையிலிருந்த ஒருவர் சொன்னர்.

"ஒரு கையால் நான் எப்படி சீட்டு விளையாடுவேன் ?"

"ஓஹோ ! உன் கையை அவர்கள் துண்டித்துவிட்டார்களா என்ன ?"

சீட்டு விளையாடியதால் அவன் கையை அவர்கள் வெட்டிவிட்டார்கள் போலும் என்று நான் எண்ணினேன். என்னைக் கொல்லுவதற்கு முன் என்னை என்னென்ன செய்வார்களோ என்று வியந்தேன்.

யாரோ என் நரம்புகளைப் பிடுங்குவதைப் போன்று என் கைகள் வலித்தன. பயத்தாலும், வேதனையாலும் அழுத நான் கண்ணீர் உகுப்பதை மற்றவர்கள் பார்த்துவிடக் கூடாது என் பதற்காக, கண்களை மூடிக்கொண்டேன். ஆனால், கண்ணீர் கன்னங்களில் வழிந்து ஓடிக் காதுகளில் விழுந்தது.

இரவு வந்தது. எல்லோரும் கட்டில்களில் படுத்துக் கொண்டு பழுப்புநிறப் போர்வைகளால் தங்களைப் போர்த்துக்கொண்டனர். நேரம் ஆக ஆக அமைதி அதிகரித்தது. மூலையிலிருந்தவர்களின் குரல் மாத்திரம் அவ்வப்பொழுது அமைதியைக் குலைத்தது.

"ஒன்றும் நடக்கப் போவதில்லை. அவன் ஒரு மிருகம் ; அவளும் ஒரு மிருகம்..." என்றது ஒரு குரல்.

காலம் கடந்துவிடு முன் என்னை மீட்குமாறு பாட்டிக்கு எழுத நான் விரும்பினேன். என் கைகள் புண்பட்டிருந்தாலும், என்னிடம் காகிதம் இல்லாததாலும், என்னால் கடிதம் எழுத முடியவில்லை. நான் ஓடிவிட முடிவு செய்தேன்.

இரவு சாச்வதமானதாகவே நீடித்து இருந்துவிடும்போல் எனக்குத் தோன்றியது. மெதுவாகக் கட்டிலிலிருந்து கீழே இறங்கிக் கதவை நோக்கி நடந்தேன். கதவு திறந்திருந்தது. முகப்பிலே, புகையிலே மூழ்கிய வெண் தலை தெரிந்தது. குழி

விழுந்த அதன் கருவிழிகள் என்னை உற்று நோக்கின. ஒளிந்துகொள்ள எனக்கு நேரமில்லை.

"அங்கே நடமாடுவது யார்? இங்கே வா!"

அந்தக் குரலில் மென்மை இருந்தது; அச்சுறுத்தும் குரலாகவே இல்லை. எனவே நான் அருகே சென்றேன். தாடியிலே மறைந்து கிடந்த முகத்தை நான் அங்கே கண்டேன். அந்த மனிதரின் நரைத்த மயிர்கள் வெண்பரிதியைப் போன்று நாற்புறமும் சிதறிக்கிடந்தன; இடைவாரில் சாவிக் கொத்து தொங்கிற்று. அவருடைய மயிரும், தாடியும் இன்னும் சிறிது நீளமாக இருந்திருந்தால், அடியார் பீட்டரைப் போன்று அவர் தோற்றமளித் திருப்பார்.

"கை வெந்து போனவன் நீதானே? இரவில் நீ எதற்காக இப்படி அலைகிறாய்? இரவில் நடமாடுவது விதிகளுக்கு முரணானது."

புகைப்படலத்தை என் முகத்தில் அவர் ஊதினர். பிறகு என்னை அன்புடன் அணைத்துக்கொண்டு,

"பயமாக இருக்கிறதா?" என்று கேட்டார்.

"ஆம்."

"இங்கே வரும் எல்லோரும் முதலில் பயப்படுகிறார்கள். ஆனால் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. குறிப்பாக என்னைக் கண்டு பயப்பட வேண்டியதே இல்லை. உனக்குத் தீங்கிழைக்க நான் யாரையும் அனுமதிக்க மாட்டேன். புகை நீ குடிக்க விரும்புகிறாயா? அதைப்பற்றி பரவாயில்லை—நீ புகை குடிக்க வேண்டாம். நீ சிறுவன்; எனவே இன்னும் சில வருடங்கள் பொறு. உன் அப்பாவும், அம்மாவும் எங்கே இருக்கிறார்கள்? உனக்கு அப்பாவும், அம்மாவும் இல்லையா? அதைப்பற்றி பரவாயில்லை—உனக்கு அப்பாவும் அம்மாவும் இருக்க வேண்டாம். அவர்களின்றியே நீ வாழ்வாய். அதாவது, நீ உனது அகந்தையைக் காட்டாது இருந்தால்?"

சாதாரண, நேசப்பான்மையுள்ள, புரியக்கூடிய வார்த்தைகள் பேசுகிறவரை நான் கண்டு வெகு காலமாகிறது. எனவே அவர் பேச்சைக் கேட்பது பேரானந்தமாக இருந்தது.

என் கட்டிலுக்கு என்னை அழைத்துச் சென்றார், அவர்.

''என்னுடன் சிறிது நேரம் உட்காருங்கள்'' என்று நான் கெஞ்சினேன்.

''நான் உட்காருகிறேன்'' என்றார் அவர்.

''நீங்கள் யார்?''

''நான் சிப்பாய்; காக்கஸஸில் போர்புரிந்த உண்மையான சிப்பாய். உண்மையான போராட்டங்கள் அவை. இது இயற்கைதானே. போராடுவதற்காக உயிர் வாழுகிறான், சிப்பாய். ஹங்கேரியருடனும், சர்காஸியருடனும், போலிஷ் காரருடனும் நான் போராடி இருக்கிறேன். சகோதரா! யுத்தம் என்பது மிகப் பெரிய சேஷ்டை.''

ஒரு நிமிடம் கண்களை மூடிவிட்டு, நான் திறந்ததும் சிப்பாயின் ஸ்தானத்தில் என் பாட்டி உட்கார்ந்துகொண்டிருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு அவர் கேட்டார்:

''அப்படியானால் அவர்களெல்லோரும் இறந்துவிட்டார்களா? இது உண்மைதானா?'' என்று.

தள்ளும் குழந்தையைப்போன்று சூரியன் வந்தது — போயிற்று. வார்டிலுள்ள யாவற்றுக்கும் முலாம் பூசிவிட்டு மறைந்துபோயிற்று; பிறகு மீண்டும் ஒளியைப் பரப்பிக் கொண்டு வந்தது.

என்மீது குனிந்துகொண்டு பாட்டி கேட்டாள்:

''இது என்ன, புருவே? அவர்கள் உனக்குத் தீங்கிழைத்தார்களா? அந்த மூளையற்ற கழுதைப் புலியிடம் நான் சொன்னேன்.....''

''விதிப்படி யாவற்றையும் ஒரு நிமிடத்தில் ஒழுங்குபடுத்துகிறேன்'' என்று சொல்லிக்கொண்டே சிப்பாய் அப்பால் சென்றார்.

''இந்தச் சிப்பாய் பாலக்னுவைச் சேர்ந்தவனென்று தோன்றுகிறது'' என்று கண்ணீரைத் துடைத்துக்கொண்டே பாட்டி சொன்னாள்.

அப்பொழுதும் கனவு காண்பதாகக் கருதியதால் நான் ஒன்றும் சொல்லவில்லை.

டாக்டர் ஒருவர் வந்து, என் கைகளில் கட்டுக்கட்டினார். பிறகு நானும், பாட்டியும் ஒரு வண்டியில் நகரைக் கடந்தோம்.

" தாத்தாவுக்கு மூளை கெட்டுவிட்டது " என்றாள் பாட்டி. " அவர் கொம்ப பிடிவாதக்காரராகிவிட்டார். சில தினங்களுக்கு முன்னர், அவருடைய புதிய நண்பர் குதிரை யோட்டி கிறிஸ்ட், அவருடைய பிரார்த்தனைப் புத்தகத்தி லிருந்து நூறு ரூபிள் நோட்டைத் திருடிவிட்டான். அப் பொழுது எவ்வளவோ பெரிய ரகளை நடந்தது.

சூரியன் பிரகாசித்துக்கொண்டிருந்தது. வெண் பறவை களைப் போன்று மேகங்கள் வானத்தில் மிதந்தன. உறைந்து கிடந்த வால்கா நதியைக் கடக்க அமைத்திருந்த பலகைப் பாலத்தை நாங்கள் கடந்தோம். நதியிலே பனி உறைந்து கிடந்தது. பாலத்துக்கடியிலே ஜலம் சீறிப் பாய்ந்தது. கடைத்தெரு மாதா கோவிலின் உச்சியிலே தங்கச் சிலுவை கள் பிரகாசித்தன. பட்டுப் போன்றிருந்த நாணல் சுமையைச் சுமந்துகொண்டு சென்ற பறந்த முகமுடைய ஒரு பெண்ணை நாங்கள் சந்தித்தோம். வசந்தம் வருகிறது !

வானம்பாடியைப் போன்று என் இதயம் பாடிற்று.

" உன்னை நான் எவ்வளவு நேசிக்கிறேன் பாட்டி !"

இதைக் கேட்டு அவன் ஆச்சரியப்படவில்லை.

" அது இயற்கைதானே. நீ எனக்கு இரத்தக் கலப் புடையவன் " என்று அவள் சொன்னாள். " தற்பெருமை யின்றி நான் சொல்லுகிறேன் - முன்பின் தெரியாதவர்கள் கூட என்னை நேசிக்கிறார்கள். இதற்காக அன்றி மரியாளை நான் வாழ்த்துகிறேன்."

புன்னகையுடன் அவள் மேலும் சொன்னாள் :

" தன் புதல்வன் உயிர் பெற்றெழுவதைக் கண்டு அவள் விசையில் மகிழ்வாள். ஆனால் என் புதல்வி வார்யுஷா....."

இதன் பின்னர் அவள் மௌனமாக இருந்தாள்.

2

மண்டியிட்டு அமர்ந்து ஒரு கம்பைக் கோடாலியால் கூராக்கிக்கொண் டிருந்த என் தாத்தா, முற்றத்தில் என்னைச் சந்தித்தார். என் தலையில் அடிப்பதற்குக் கோடாலியை ஓங்குவதைப்போன்று கோடாலியை ஓங்கியவாறே, தொப்பியை அகற்றிக்கொண்டு, கிண்டலாகச் சொன்னார் :

"மாட்சிமை தங்கிய மகனே! தங்கள் வரவு நல்வரவாகுக! உன் உத்தியோகம் முடிந்துவிட்டதா? நல்லது. உனக்குத் தெரிந்த வழியில் எப்படி வாழ்வது நல்லது எனத் தோன்று கிறதோ அதன்படியே நீ வாழலாம். பூ!"

"எங்களுக்கு இவை எல்லாம் தெரியும்" என்று கையை வீசிக்கொண்டு இடைமறித்துச் சொன்னாள் பாட்டி. நாங்கள் அறையில் பிரவேசித்த பிறகு, ஸாமோவாரைச் சூடாக்கிக்கொண்டு பாட்டி சொன்னாள் :

"உன் தாத்தாவைச் சரியாக இந்த முறை ஏமாற்றி விட்டார்கள். ரசீது எதுவும் பெற்றுக்கொள்ளாமல் தன்னிடம் இருந்த பணம் முழுவதையும் தன் புதல்வன் நிக்கோலாயிடம் கொடுத்து, தன் கணக்கில் வைத்திருக்கு மாறு சொல்லிக் கொடுத்தார். அது எப்படி நேர்ந்தது என்பது எனக்குத் தெரியாது; ஆனால் அவர் சரியாக ஏமாந்து போனார் என்பது மட்டும் தெரியும். பணம் பூராவும் போய்விட்டது. ஏழைகளுக்கு உதவாததாலும், அதிர்ஷ்டஹீனர்களிடம் இரக்கம் காட்டாததாலும்தான் அந்தக் கதி நமக்கு நேர்ந்தது. இந்தக் காஷ்ரின்களிடம் நாம் ஏன் இவ்வளவு கருணை காட்ட வேண்டும் என்று கடவுள் நினைத்துவிட்டார் போலும்; ஆகவே யாவற்றையும் அவர் எடுத்துக்கொண்டுவிட்டார்."

மேலும் தொடர்ந்து பேசுமுன் அவள் சுற்று முற்றும் பார்த்தாள்.

"கடவுள் கிழவன்மீது கடுமையாக இருக்காமல் இருக்கும் பொருட்டு, கடவுள் மனதைச் சிறிது சாந்தப்

படுத்த நான் முயன்று வருகிறேன். என் சம்பாத்தியத்திலிருந்து ஒரு பகுதியை இந்தக் கைங்கரியத்திற்காக நான் செலவு செய்து வருகிறேன். நீ விரும்பினால் இன்றிரவு நாம் போகலாம். என்னிடம் கொஞ்சம் பணம் இருக்கிறது.''

உறுமிக்கொண்டே தாத்தா வந்தார்.

'' நீ எதைப்பற்றி உளறிக்கொண்டிருக்கிறாய் என்பதை நான் அறிவேன் '' என்று சொன்னார் தாத்தா.

'' உங்களைப்பற்றி நாங்கள் எதுவும் வம்பளக்க வில்லை '' என்றாள் பாட்டி. '' இஷ்டப்பட்டால், நீங்களும் எங்களுடன் உட்காரலாம். பேசுவதற்கு எவ்வளவோ இருக்கிறது.''

மேஜைக்கு முன் அவர் உட்கார்ந்தார்.

'' ஒரு கோப்பை தேநீர் ஊற்று '' என்று அவர் பணிவுடன் சொன்னார்.

அம்மா உட்காருமிடம் காலியாக இருந்ததைத் தவிர, அறையில் வேறு ஏதும் மாறியிருக்க வில்லை. தாத்தாவின் படுக்கைக்கு மேலே கீழ்கண்ட உபதேசம் அச்சிட்ட காகிதம் தொங்கிக்கொண்டிருந்தது :

'' இயேசு நாதரே ! என்னை ரட்சியுங்கள். மரணம் நேரும் வரை, என் வாழ்நாள் முழுதும் தங்களின் கருணை என்னைக் காக்கட்டும்.''

'' இதை யார் எழுதினர் ?''

தாத்தா பதில் சொல்லவில்லை. கொஞ்ச நேரம் கழித்து, புன்னகையுடன் பாட்டி சொன்னாள் :

'' அந்தக் காகிதத்தின் விலை நூறு ரூபிள்.''

'' அதைப்பற்றி உனக்கென்ன ?'' என்று தாத்தா கேட்டார். '' என்னிடமிருக்கும் அனைத்தையும் அறிமுகமில்லாதவர்களுக்கே நான் கொடுப்பேன்.''

'' கொடுப்பதற்கு இனி ஒன்றுமில்லை. இருந்த காலத்தில் கொடுப்பதற்கு நீங்கள் கஞ்சத்தனம் காட்டினீர்கள் '' என்று சாந்தமாகக் கூறினாள் பாட்டி.

'' சும்மா இரு!'' என்று கூவினார் தாத்தா.

எல்லாம் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருந்தது—முன்பு இருந்ததைப்போன்றே இருந்தது.

கோல்யா விழித்தெழுந்தான். கனத்த இமைகள் அவன் கண்களை மறைத்ததால், அவன் கண்களின் நீல ஒளியைக் காண முடியவில்லை. அவன் மேலும் வெளிறிவிட்டான். அவன் பற்றில்லாதவனாகவும், அற்பாயுளுள்ளவனாகவும் தோற்றமளித்தான். என்னை அடையாளம் கண்டுகொள்ளாமல், மௌனமாக மறு பக்கம் திரும்பி, கண்களை மூடிக்கொண்டான்.

வீதியிலே ஒரு துக்கச் செய்தி என்னை எதிர்கொண்டழைத்தது : வியாக்கீர் இறந்துவிட்டான். "அம்மை" அவனைக் கொண்டுபோய்விட்டது. காபி என்பவன் நகரத்திற்குச் சென்றுவிட்டான் ; கால்களை இழந்துவிட்டதால், வீட்டிலேயே யாஸ் அடைந்து கிடந்தான்.

இவைகளை யெல்லாம் என்னிடம் சொன்ன கருவிழிகள் படைத்த கோஸ்ட்ரோமா கோபத்துடன் சொன்னாள் :

"பையன்கள் விசைவில் இறக்கிறார்கள் !"

"வியாக்கீர் ஒருவன் மாத்திரம்தானே இறந்தான்."

"அதனாலென்ன? ஒருவன் வீதியைக் கடந்துவிட்டால், அவன் இறந்த மாதிரிதானே. நீ ஒருவனுடன் சினேகம் ஏற்படுத்திக்கொள்கிறாய். உடனே அவனை வேலைக்கு அனுப்பிவிடுகிறார்கள்; அல்லது அவன் இறந்துவிடுகிறான். உன் வீட்டு கொல்லைப் பக்கம் புதிதாகச் சிலர் குடி வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு பையன். அவன் பெயர் நஷ்கா; பையன் பரவாயில்லை. இரண்டு பெண்களும் அவர்களுக்கு இருக்கிறாள். ஒருத்தி சிறுமி ; மற்றவள் கொண்டி ; கவைத் தண்டத்தின் உதவியுடன் அந்த அழகி நடக்கிறாள்."

ஒரு நிமிடம் சும்மா இருந்துவிட்டு அவன் சொன்னான்:

"நானும், சுர்க்காவும் அவளைக் காதலிக்கிறோம். நாங்கள் அடிக்கடி சண்டை போடுகிறோம்."

"அவளுடனா ?"

"இல்லை, எங்களுக்குள். அவளுடன் நாங்கள் சண்டை போடுவதே இல்லை."

பெரிய பையன்களும், வயது வந்த மனிதர்களும் காதலிக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும் ; காதல் கடுமுரடானது என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் இப்பொழுது எனக்குக் கவலை ஏற்பட்டது. கோஸ்ட்ரோமாவுக்

காக நான் வருந்தினேன். அவனுடைய விகார ரூபமும், ஒளி மங்கின கண்களும் எப்படியோ என்னைக் கலக்கிவிட்டது.

அன்று மாலையே அந்த நொண்டிப் பெண்ணை நான் கண்டேன். படிக்கட்டுகளில் இறங்கும்பொழுது அவள் உபயோகித்த கவைத் தண்டம் நழுவி விழுந்துவிட்டது. மெல்லிய விரல்களால் கம்பியைப் பிடித்துக்கொண்டு அவள் நிராதரவாக நின்றாள். கவைத் தண்டத்தை எடுத்துக்கொடுக்க நான் முயன்றேன். ஆனால் என் கைகளிலிருந்த கட்டு, இந்த முயற்சியில் குறுக்கிட்டது. சலிப்புடன் நீண்ட நேரம் அந்த வேலையில் ஈடுபட்டேன். மிருதுவாகச் சிரித்துக்கொண்டு அவள் எனக்கு மேலே நின்றாள்.

" உன் கைகளுக்கு என்ன நேர்ந்தது ?" என்று அவள் வினவினாள்.

" என் கைகளில் நெருப்புச் சூடு பட்டுவிட்டது."

" நான் நொண்டி.. எங்கள் கொல்லையில் நீ குடியிருக்கிறாயா ? பல நாட்கள் நீ ஆஸ்பத்திரியில் இருந்தாயா ? நான் இருந்தேன்—நீண்ட காலம் இருந்தேன்" என்று பெருமூச்சு விட்டாள் அவள்.

பழைய, ஆனால் இஸ்திரி செய்யப்பட்ட வெண் உடையும், குதிரை சவாரி செய்யும் நீல பூட்சும் அவள் அணிந்திருந்தாள். கூந்தலை அழகாகச் சீவி இருந்தாள். அவள் மார்பின்மீது கூந்தல் பரவிக் கிடந்தது. கண்கள் பெரிதாகவும், கம்பீரமாகவும் இருந்தன ; வெளிறி ஒடுங்கிய அவள் வதனத்தில் இருந்த அவளுடைய கண்கள் நீல ஒளியைப் பிரகாசித்தன ; அவள் செய்த புன்னகை மகிழ்ச்சியளிக்கக்கூடியதாக இருந்தது. எனினும் அவளை எனக்குப் பிடிக்கவில்லை. " தயவுசெய்து என்னைத் தொடாதே !" என்று கூறுவதைப் போன்று அவளுடைய நோய்வாய்ப்பட்ட தேகம் இருந்தது.

அவளை என் தோழர்கள் எப்படித்தான் காதலித்திருக்கிறார்களோ ?

" நீண்ட காலம் நான் நோய்வாய்ப்பட்டிருந்தேன் " என்று அவள் சொன்னாள். அவள் குரலிலே ஓளவு பெருமை தொனித்தது. " எங்கள் அண்டை வீட்டுக்காரி எனக்குச் சூனியம் செய்துவிட்டாள். என் அம்மாவுடன் அவள்

சண்டை போட்டாள். எனவே என் அம்மாமீது வஞ்சம் தீர்த்துக்கொள்வதற்காக எனக்குச் சூனியம் செய்தாள். ஆஸ்பத்திரியில் மொம்பக் கஷ்டமாக இருந்ததா ?''

''ஆம்.''

அவள் முன்னிலையில் நிற்க எனக்குக் கூச்சமாக இருந்தது. எனவே நான் உள்ளே போய்விட்டேன்.

நடுநிசியில் பாட்டி என்னை மெதுவாக எழுப்பினாள்.

'' நாம் போகலாமா ? பிறருக்கு நீ நல்லது செய்தால், உன் கைகள் விரைவில் குணமடைந்துவிடும்.''

குருடனை அழைத்துச் செல்வதைப் போன்று என் கையைப் பிடித்துக்கொண்டு இருட்டில் என் பாட்டி என்னை அழைத்துச் சென்றாள். இரவு இருண்டும், குளிர்ந்தும் இருந்தது. வேகமாகப் பாயும் நதியைப் போன்று, காற்று, சுழன்று அடித்தது. குளிர்ந்த மணல் எங்கள் கால்களை குளிரச்செய்தது. நகரவாசிகளின் வீட்டு ஜன்னல்களை ஜாக்கிரதையாக அணுகி, மும்முறை சிலுவை அடையாளம் வரைந்து கொண்டு, மூன்று பிஸ்கோத்துகளையும், ஐந்து காப்பெக்கையும் ஒவ்வொரு ஜன்னலிலும் வைத்தாள் பாட்டி ; மீண்டும் சிலுவை அடையாளம் வரைந்துகொண்டு, நட்சத்திரமற்ற வானத்தைப் பார்த்துத் தணிந்த குரலில் சொன்னாள் :

'' சொர்க்கத்துப் பரிசுத்த ராணியே ! எல்லோருக்கும் உதவிபுரியுங்கள். பரிசுத்த மாதாவே ! தங்கள் பார்வையில் நாங்கள் எல்லோரும் பாவிகள் '' என்று.

எங்கள் வீட்டிலிருந்து விலகிச் செல்லச் செல்ல இருள் மேன்மேலும் பயங்கரமாக இருந்தது ; எல்லாம் பாலைவனத்தைப் போன்று காட்சியளித்தன. எல்லையற்ற ஆகாயம் சந்திரனையும், நட்சத்திரங்களையும் நிரந்தரமாக விழுங்கிவிட்டதைப்போன்று தோன்றியது. ஒரு நாய் வெளியே ஓடிவந்து, எங்களைப் பார்த்து உறுமிக்கொண்டு நின்றது. அதன் கண்கள் இருளிலே பிரகாசித்தன. பீதியுடன் பாட்டியை நான் அணைத்துக்கொண்டேன்.

'' பயப்படாதே !'' என்றாள் பாட்டி. ''அது நாய்தான். பேய் வரும் காலம் கடந்துவிட்டது. கோழிகள் கூவ ஆரம்பித்துவிட்டன.''

நாயை அழைத்து, அதன் தலையில் தட்டிவிட்டு, பாட்டி சொன்னாள் :

" நாயே, என் பேரனே பயமுறுத்தாதே !" என்று.

நாய் என் கால்களில் தனது தேகத்தைத் தேய்த்தது. பிறகு நாங்கள் மூவரும் நடந்தோம். " கருணையின் அறிகுறியை " ஜன்னலில் வைப்பதற்காக பன்னிரண்டு முறை பாட்டி ஜன்னல்களை அணுகினாள். ஆகாயம் வெளுத்தது. இருளிலே வீடுகள் தெரிய ஆரம்பித்தன ; நாபோல்னயா சர்ச்சின் கோபுரம் சீனியைப் போன்று வெள்ளை வெளேரென்று தெரிந்தது. கல்லறையின் செங்கற் சுவரும் கண்ணுக்குத் தெரிந்தது.

"உன் வயோதிகப் பாட்டி களைத்துவிட்டாள்" என்றாள் என் பாட்டி. " வீடு திரும்ப நேரமாய்விட்டது. காலையில் பெண்கள் கண் விழித்ததும், குழந்தைகளுக்குப் பரிசுத்த கன்னி மாதா விட்டுச் சென்றிருக்கும் அன்பளிப்பைக் காண்பார்கள். போதிய அளவு இல்லை யென்றாலும், இருப்பது வரவேற்கத்தக்கது. ஏழைகள் ஏழ்மையிலே வாழ்க்கை நடத்துகிறார்கள் ; ஆனால் அவர்கள்மீது கவனம் செலுத்த யாருமில்லை !

புனித வாசகத்தைப்பற்றியோ இறுதித் தீர்ப்பு நாளைப் பற்றியோ இறைவனைப்பற்றியோ பணக்காரனுக்கு எண்ணம் இருப்பது இல்லை.

ஏழைகளுக்கு அவன் இதயம் இரங்குவது இல்லை. பணத்தைச் சம்பாதிப்பதிலேயே அவனுடைய முழு நாட்டமும் இருக்கிறது.

தங்கம் என்னும் நெருப்புத் தணல்மீது, நரகத்தில் கிடந்து அவன் எரியப் போகிறான்.

" இது வருந்தத்தக்கது. நாம் ஒருவரை ஒருவர் கவனித்துக்கொள்ள வேண்டும்; கடவுள் எல்லோரையும் கவனித்துக் கொள்வார். ஆனால் மீண்டும் நீ என்னிடம் வந்துவிட்டதற்காக நான் சந்தோஷப்படுகிறேன்."

எனக்கும் சந்தோஷம்தான். நான் என்றும் மறக்கக் கூடாதவை சிலவற்றுடன் தொடர்பு ஏற்பட்டுவிட்டதாக

எனக்குத் தோன்றிற்று. எனக்கு அருகில் நரியைப் போன்ற முகமும், கருணை சுரக்கும் கண்களும் படைத்த நாய் நடந்தது.

" இது நம்முடன் வசிக்குமா ?"

" ஏன் கூடாது ? அது விரும்பினால் நம்முடன் வசிக்க லாம். என்னிடமிருக்கும் இரண்டு பிஸ்கோத்துகளில் ஒன்றை அதற்குக் கொடுக்கிறேன். எனக்குக் களைப்பாக இருக்கிறது. சிறிது நேரம் இந்தப் பெஞ்சில் உட்காரலாம்."

ஒரு வாசற்படிக்கு அருகிலிருந்த பெஞ்சில் நாங்கள் உட்கார்ந்தோம். உலர்ந்த பிஸ்கோத்தைப் பிரண்டிக்கொண்டு எங்கள் காலருகில் படுத்தது நாய்.

"இங்கே ஒரு யூதப் பெண்மணி வசிக்கிறாள். அவளுக்கு ஒன்பது குழந்தைகள். ஒன்றைவிட மற்றது சிறிசு. 'நீ எப்படி வாழ்க்கை நடத்துகிறாய், மோஸ்யேவ்ஸ் ?' என்று நான் அவளைக் கேட்டேன். 'என் கடவுளுடன் நான் வாழுகிறேன்; வேறு எப்படி நான் வாழ முடியும் ?' என்று அவள் பதில் சொன்னாள்."

பாட்டியை அணைத்துக்கொண்டு நான் உறங்கிவிட்டேன்.

மீண்டும் வாழ்க்கைப் பிரவாகம் ஆரம்பமாயிற்று. நாட் கள் என்னும் அகலமான அருவி ஆச்சரியத்தில் ஆழ்த்தி, பயமுறுத்தி, என்னைச் சிந்திக்கச் செய்தது.

சாத்தியமானபொழு தெல்லாம் நொண்டிப் பெண்ணைக் காணவும், அவளுடன் பேசவும், அல்லது வாசலுக்கு அருகி லிருந்த பெஞ்சில் அவளுடன் மௌனமாக உட்கார்ந்திருக்க வும் எனக்கு ஆசையாய் இருந்தது. பறவையைப் போன்று அவள் சுத்தமாக இருந்தாள். டான் பகுதியில் தனது தொழி லாளி மாமாவுடன் நீண்ட காலம் வாழ்ந்த அவள் கொஸாக் கியர்களின் வாழ்க்கையை அற்புதமாக வர்ணித்தாள். பிறகு பிட்டர் வேலை செய்துவந்த அவள் தந்தை நிழினி-நோவோ கிராடுக்குச் சென்றுவிட்டார்.

" என்னுடைய இன்னொரு மாமா ஜாரிடம் வேலை செய் கிறார்."

விடுமுறை நாட்களில் எல்லோரும் வீதிக்கு வருவார் கள். சிறுவர்களும், சிறுமிகளும் கல்லறைக்குச் செல்லுவார்

கள் ; வயது வந்தவர்கள் சாராயக் கடைக்குச் செல்லுவார் கள். பெண்களும், குழந்தைகளும் மட்டும்தான் வீதியிலே கூடி நிற்பார்கள். பெஞ்சுகளிலோ, அல்லது வாசற்படிக்கு அருகில் மணலிலோ உட்கார்ந்துகொண்டு உரத்த குரலில் பெண்கள் பேசுவார்கள். குழந்தைகள் பந்து விளையாடும். குழந்தைகளின் விளையாட்டைக் கண்டு குழந்தைகளின் தாய் மார்கள் அவைகளின் திறமைக்காகப் புகழ்வார்கள் அல்லது திறமைக் குறைவுக்காகப் பழிப்பார்கள். சத்தம் காது செவிடு படும்படியாக இருக்கும் ; அதே சமயத்தில் மறக்க முடியாத படி கோலாஹலமாகவும் இருக்கும். வயது வந்தவர்கள் எங்கள் விளையாட்டில் செலுத்தும் சிரத்தை குழந்தைகளாகிய எங்களுக்கு எழுச்சியை அளித்தது. எனவே, நாங்கள் மிகுந்த உற்சாகத்துடனும், போட்டி உணர்ச்சியுடனும் விளையாடி னோம். நானும், கோஸ்ட்ரோமாவும், சுர்க்காவும் எவ்வளவு தான் விளையாட்டில் ஈடுபட்டிருந்தாலும், நொண்டிப் பெண் ணைச் சந்தித்து, தத்தம் திறமைகளை அவளிடம் சொல்ல நாங் கள் தவறுவதே இல்லை.

"ஒரு அடியில் எல்லாக் குண்டுசிகளையும் நான் சாய்த் ததை நீ பார்த்தாயா, லுட்மிலா ?"

இன்பப் புன்னகை புரிந்துவிட்டு, அவள் தலையை தனது அசைத்தாள்.

முன்னர் நாங்கள் ஒரே பக்கத்தில் நின்று விளையாடு வோம். ஆனால் இப்பொழுது சுர்க்காவும், கோஸ்ட்ரோமாவும் எதிர்க் கட்சிகளில் நிற்பதையும், சகல வழிகளிலும் தத்தம் திறமையையும், பலத்தையும் காட்ட முயலுவதையும், போராடக்கூடத் தயங்காததையும் நான் கண்டேன். ஒரு நாள் அவர்கள் மிக உக்ரமாகப் போராடியதால், அவர்களை விலக்கிவிடுவதற்காகச் சண்டையிடும் நாய்கள்மீது ஜலத்தைக் கொட்டுவதைப்போன்று வயது வந்தவர்கள் அவர்கள்மீது ஜலத்தைக் கொட்டினர்.

பெஞ்சில் உட்கார்ந்திருந்த லுட்மிலா, பழுதடையாத காலால் தரைமீது ஓங்கி மிதித்தாள். போர்வீரர்கள் அவளை அணுகியபொழுது தனது கவைத் தண்டத்தால் அவர்களை அப்பால் தள்ளிவிட்டு, பீதிகலந்த குரலில் அவள் கூவுவாள் :

"சண்டையை நிறுத்துங்கள் !" என்று.

அவள் முகம் கன்றிற்று ; அவள் கண்கள் கண்ணுடியைப் போன்றிருந்தன. வலிப்பு வந்தவளைப் போன்று அவள் காட்சி அளித்தாள்.

மற்றொரு முறை தாய விளையாட்டில் சுர்க்காவால் தோற்கடிக்கப்பட்ட கோஸ்ட்ரோமா கறிகாய் விற்பவனின் கடைக்குப் பின்புறம் சென்று அழ ஆரம்பித்தான். அந்தக் காட்சி பயங்கரமாக இருந்தது. அவன் முகம் கல்லாகும்வரை அவன் பற்களை நறநற வென்று கடித்தான். கண்ணீர் மாலை மாலையாக வழிந்தோடிற்று. அவனுக்கு ஆறுதல் கூற நான் முயன்ற பொழுது, கண்ணீரை அடக்கிக்கொண்டு அவன் சொன்னன்:

"கொஞ்சம் பொறு— அவன் தலையில் நான் செங்கல்லை எறிவேன். பார்த்துக்கொண்டே இரு !"

சுர்க்காவின் அகம்பாவம் அதிகரித்தது. கலியாணமாகப் போகும் வாலிபர்கள் நடப்பதைப் போன்று, தொப்பியை ஒரு பக்கம் சாய்த்து வைத்துக்கொண்டும், கைகளை கால் சட்டைப் பைகளில் செருகிக்கொண்டும் அவன் நடுவீதியில் நடந்தான்.

"விரைவில் நான் புகை குடிக்கப் போகிறேன்" என்றான் சுர்க்கா. "ஏற்கெனவே நான் இரு முறை முயன்றுவிட்டேன். ஆனால் எனக்கு இன்னும் அது ஒத்துவரவில்லை."

இவை என்னை அதிருப்தி அடையச் செய்தன. என் தோழர்களை நான் இழந்துவருவதை உணர்ந்தேன். அதற்குக் காரணம் லுட்மிலாதான் என்று நினைத்தேன்.

ஒரு நாள் மாலை எலும்பு, கந்தை முதலிய குப்பைகளை நான் பிரித்துக்கொண்டிருந்தபொழுது லுட்மிலா அங்கே வந்து தனது கவைத் தண்டத்தில் ஆடிக்கொண்டு, வலது கையை ஆட்டியவாறு சொன்னாள் :

"ஹல்லோ !"

"கோஸ்ட்ரோமா உன்னுடன் வந்தானு ?"

"ஆம்."

"சுர்க்கா ?"

"இப்பொழுது சுர்க்கா எங்களுடன் விளையாடுவதில்லை. இதற்குக் காரணம் நீதான். அவர்கள் உன்னைக் காதலிக்கிறார்

கள். அதனால்தான் அவர்கள் சண்டை போட்டுக்கொள்ளு கிறார்கள்.''

அவள் முகம் சிவந்தது. எனினும் அவள் கேலி தொனிக்கப் பதில் சொன்னாள் :

'' அப்படியா சொல்லுகிறாய் ! இது எப்படி என் தவறு கும் ?''

'' உன்னைக் காதலிக்கும்படி அவர்களை நீ ஏன் தூண்டி னாய் ?''

'' என்னைக் காதலிக்கும்படி அவர்களிடம் நான் சொல்ல வில்லையே '' என்று கோபத்துடன் பதில் சொல்லிவிட்டு, அவள் போய்விட்டாள். போகும்போது சொன்னாள்: ''இது மூட்டாள்தனம் ! அவர்களைவிட எனக்கு வயது அதிகம். எனக்குப் பதினாறு வயது. தன்னைவிட வயது முதிர்ந்த பெண்ணை யாரும் காதலிப்பதில்லை.''

'' அப்படி நினைத்துவிடாதே !'' என்று அவளை புண் படுத்தும் நோக்கத்துடன் நான் சொன்னேன். '' கடைக்காரர் கிறிஸ்டின் சகோதரியைப் பார்—அவள் உண்மையில் வய தானவள். எனினும் பையன்கள் அவளைச் சுற்றி வட்டமிடு கிறார்கள் !''

என்னை எதிர்கொள்வதற்காக அவள் திரும்பியபொழுது அவளுடைய கவைத் தண்டம் மணலில் பதிந்தது.

'' உனக்கு ஒன்றும் தெரியாது '' என்று துன்பம் நிறைந்த குரலில் அவள் சொன்னாள். அப்பொழுது அவள் அழகிய கண்கள் ஒளி வீசின. '' கடைக்காரர் சகோதரி நெறி தவறியவள். நான் அப்படிப்பட்டவள் என்று நீ நினைக் கிறாயா ? நான் சிறியவள். என்னை யாரும் தொடவோ கிள்ளவோ கூடாது, 'காமசூடால்கா' பிற்பகுதியை நீ படித் திருந்தால், இப்படி நீ பேச மாட்டாய்.''

முனகிக்கொண்டே அவள் போய்விட்டாள். அவளுக் காக நான் வருந்தினேன். எனக்கு அன்று விளங்காத உண்மை அவள் பேச்சில் கலந்திருந்தது. என் தோழர்கள் எதற்காக அவளைக் கிள்ள வேண்டும் ? அவளைக் காதலிப்ப தாக அவர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள் !

அவளைப் புண்படுத்தியதற்குப் பிராயச்சித்தம் செய்யும் நோக்கத்துடன், மறு நாள் ஏழு காப்பெக்குகள் பெறுமதியுள்ள, லுட்மிலாவுக்கு மிகவும் பிரியமான, "பார்லிமிட்டாய்கள்" வாங்கினேன்.

"உனக்கு வேண்டுமா?"

"நீ போய்விடு! உன்னுடன் நான் நட்புகொள்ள மாட்டேன்!" என்று நிர்ப்பந்தமாகக் கோபத்தை வரவழைத்துக் கொண்டு அவள் சொன்னாள். "அவைகளை நீ ஒரு காகிதத்திலாவது பொதிந்திருக்க வேண்டும். உன் கைகள் எவ்வளவு அசுத்தமாக இருக்கின்றன?"

"கைகளை நான் கழுவினேன். ஆனால் அழுக்குப் போகவில்லை."

"என் கையைத் தனது வெப்பமான கரங்களால் பற்றிக் கொண்டு, அதை அவள் பரிசீலனை செய்தாள்.

"உன் கைகளை நீ பாழ்படுத்திக்கொண்டுவிட்டாய்."

"உன் விரல்களிலும் தொலைகள் இருக்கின்றன."

"ஊசி குத்தியதால் ஏற்பட்டவை தொலைகள். நான் நிறையத் தைப்பேன்."

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, அவள் சொன்னாள்:

"எங்கேயாவது ஒளிந்துகொண்டு 'காமசடால்கா' வாசிக்கலாம்; உனக்கு இஷ்டம்தானே?"

சிறிது நேரம் தேடிய பிறகு நாங்கள் ஒரு தகுதியான இடத்தைக் கண்டுபிடித்தோம். குளிக்கும் அறையின் வாசற்படிதான் நாங்கள் கண்டுபிடித்த இடம். அங்கே இருட்டாக இருந்தது. எனினும் ஜன்னலில் உட்கார்ந்துகொண்டு வாசிக்கலாம். ஜன்னலிலிருந்து பார்த்தால் கொட்டகைக்கும் கசாப்புக் கடைக்கும் மத்தியிலுள்ள இடம் பூராவும் தெரியும். அந்த இடத்திற்கு ஜனங்கள் அபூர்வமாகத்தான் வருவார்கள்.

நொண்டிக் காலி பெஞ்சின்மீதும், நல்ல காலி தரையிலும் ஊன்றிக்கொண்டு, நாயின் காதைப் போன்றிருந்த புத்தகத்தை முகத்திற்கு முன்னே விரித்துப் பிடித்துக்கொண்டு, மந்தமான, புரியாத வார்த்தைகளை நீர்வீழ்ச்சியைப் போன்று அவள் உதிர்த்தாள். எனினும் என் மனம் இளகிவிட்டது. தரையில் உட்கார்ந்துகொண்டிருந்த எனக்கு, புத்தகங்களின்

பக்கங்களினூடே அவளுடைய கண்கள் விரைந்து செல்வதும், அவற்றிலிருந்து நீல ஒளி வீசுவதும் தெளிவாகத் தெரிந்தது. சில சமயங்களில் அவள் கண்களில் கண்ணீர் நிறையும்; புரிந்துகொள்ள முடியாத பாணியில் பழக்கமற்ற சொற்களை அவள் உச்சரிக்கும்பொழுது அவள் குரல் நடுங்கும். அந்த வார்த்தைகளை நான் கவிதையாக்க முயன்றேன். இந்த முயற்சியில் ஈடுபட்டிருந்த காரணத்தால், புத்தகம் எதைப் பற்றி எழுதப்பட்டது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

நாய் என் காலடியில் படுத்து உறங்கிவிட்டது; அதற்குக் "காற்று" என்ற பெயரை நான் சூட்டி இருந்தேன். ஏனெனில் அதன் கால்கள் நீளமாக இருந்தன; இலையுதிர் காலக் காற்று, புகைபோக்கி வழியாக நுழைந்து ஊளையிடுவதைப் போன்று அது ஊளையிட்டது.

"நான் படிப்பதை நீ கேட்கிறாயா?" என்று என்னை அவள் கேட்டாள்.

நான் தலையை அசைத்தேன். வார்த்தைகளின் சிக்கலால் நான் உணர்ச்சிவயப்பட்டுப் போனேன்; அவற்றை ஒரு பாடலின் வார்த்தைகளாகத் திருத்தி அமைக்க—ஒவ்வொன்றையும் பிரகாசமான, ஒளிவீசும் நட்சத்திரமாகச் செய்ய நான் பெரிதும் விரும்பினேன்.

இருட்டினதும் லுட்மிலா படிப்பதை நிறுத்தினாள்.

"புத்தகம் நன்றாக இல்லையா?" என்று அவள் கேட்டாள். "புத்தகம் நன்றாக இருக்கும் என்று நான் சொன்னேனே!" என்றாள்.

இதன் பிறகு நாங்கள் அடிக்கடி குளிக்கும் அறையின் வாசற்படியில் உட்கார்ந்து வந்தோம். 'காமசடால்கா' என்ற நூலை வாசிப்பதை விரைவில் லுட்மிலா நிறுத்தியது எனக்குத் திருப்தி அளித்தது. முடிவற்ற அந்தக் கதையைப் பற்றி ஒரு வார்த்தைகூட என்னால் சொல்ல முடியவில்லை. இரண்டாம் பாகத்தைத்தான் நாங்கள் அப்பொழுது படித்துக்கொண்டிருந்தோம். இது முடிந்ததும் மூன்றாம் பாகத்தைப் படிக்க வேண்டும். நான்காம் பாகம்கூட இருப்பதாக

லுட்மிலா சொன்னாள். இதனால்தான் இந்தக் கதை முடிவற்றது என்றேன்.

மழை நாட்களில் அங்கே நாங்கள் சந்தோஷமாகக் காலம் கழித்தோம். சனிக்கிழமைகளில் குளிக்கும் அறை சூடேற்றப்படுமாதலால் சனிக்கிழமையைத் தவிர மற்ற நாட்களில் மழைபெய்தால் எங்களுக்குச் சந்தோஷம்.

மழை கொட்டும். எனவே அனைவரும் வீட்டிலேயே தங்கிவிடுவார்களாதலால் எங்கள் இருண்ட ஜன்னல் பக்கம் யாரும் வர ஏதுவில்லை. எங்களை யாராவது பார்த்துவிடுவார்கள் என்று நினைத்து லுட்மிலா நடுங்கினாள்.

"அவர்கள் என்ன நினைப்பார்கள் என்று உனக்குத் தெரியுமா?" என்று அவள் மெதுவாகக் கேட்டாள்.

எனக்கு அது தெரியும். எனவே நானும் பயந்தேன். மணிக்கணக்காக நாங்கள் அங்கே உட்கார்ந்துகொண்டு பேசினோம். சில சமயங்களில் பாட்டி சொன்ன கதைகளை நான் சொன்னேன்; மெட்வெடிஸா நதிக்கரையில் வாழ்ந்த கொஸாக்கியர்களின் வாழ்க்கையை லுட்மிலா வர்ணித்தாள்.

"அது அற்புதமான இடம்" என்று பெருமூச்சுவிட்டாள். "இந்த இடம் மாதிரி யல்ல அது. பிச்சைக்காரர்கள் வாழத்தான் இந்த இடம் லாயக்கு!" என்றாள் லுட்மிலா.

பெரியவனைதும், மெட்வெடிஸா நதியைக் காண நான் முடிவு செய்தேன்.

குளிக்கும் அறையின் வாசற்படியில் உட்கார வேண்டிய அவசியம் இல்லாத நிலை விரைவில் ஏற்பட்டது. லுட்மிலாவின் அம்மாவுக்குக் கம்பளிக்காரனிடம் வேலை கிடைத்தது; அவள் சகோதரி பள்ளிக்கூடத்திற்குப் போனாள்; சகோதரன் ஓட்டுக் கம்பெனியில் வேலை செய்தான். காலநிலை மோசமாக இருந்த நாட்களில் சமைக்கவும் அறையையும் அடுக்களையையும் சுத்தம் செய்யவும் நான் அவளுக்கு உதவி புரிந்தேன்.

"கணவன் மனைவியைப் போல் நீயும் நானும் வாழுகிறோம்" என்று சிரித்துக்கொண்டே அவள் சொன்னாள். "நாம் ஒன்றாகத் தூங்குவதில்லை என்பதுதான் வித்தியாசம்.

கணவன் மனைவிபைவிட நாம் நன்றாக வாழுகிறோம்—கணவன்மார்கள் மனைவிமார்களுக்கு உதவிபுரிய மாட்டார்கள்.''

என்னிடம் பணமிருந்தால், நான் மிட்டாய் வாங்கு வேன். நாங்கள் தேநீரும் தயார்செய்து குடிப்போம். அடுப்பைப் பற்றவைப்பது லுட்மிலாவின் அம்மாவுக்குத் தெரியாது இருக்க வேண்டும் என்பதற்காக அடுப்பில் ஜலத்தை ஊற்றுவோம். சில சமயங்களில் பாட்டியும் எங்களுடன் உட்கார்ந்துகொண்டு பின்னல் வேலை செய்வாள். பின்னிக் கொண்டே அற்புதமான கதைகளைச் சொல்லுவாள், பாட்டி. தாத்தா நகரத்திற்குச் சென்ற நாட்களில் லுட்மிலா எங்கள் வீட்டிற்கு வருவாள். அந்த நாட்களில் உலக விகாரம் சிறிதுமின்றி நாங்கள் சந்தோஷமாக இருந்தோம்.

பாட்டி சொல்லுவாள் :

'' நாமும் நன்றாக வாழுகிறோம், இல்லையா ? என்னிடம் பணமிருந்தால், நான் நன்றாகச் சாப்பிடுவதை யார் தடுக்க முடியும் ?''

எங்கள் நட்பைப் பாட்டி ஆதரித்தாள்.

'' சிறுவனும், சிறுமியும் நாண்பர்களாவது மொம்ப நல்லது. ஆனால் அவர்கள் முட்டாள்தனமான காரியம் செய்யக் கூடாது.''

'' முட்டாள்தனமான காரியம் செய்வது '' என்றால் என்ன என்பதை மிகச் சாதாரண முறையில் எங்களுக்கு அவள் விளக்கினாள். அவள் கூறின வார்த்தைகளில் அழகிருந்தது ; உற்சாகமும் இருந்தது. விரிந்து மலரு முன் மலர்களைத் தொடக் கூடாது என்பதையும், அப்படித் தொட்டால் அவை மணக்காது, கனி தராது என்பதையும் நான் தெளிவாக உணர்ந்தேன்.

'' முட்டாள்தனமான எந்தக் காரியத்தையும் '' செய்ய நான் விரும்பவில்லை. ஆனால் வழக்கமாகப் பேசாமல் மௌனமான ஒதுக்கிவிடும் விஷயங்களைப் பேசிக்கொள்வதிலிருந்து இது என்னையும், லுட்மிலாவையும் தடுக்கவில்லை. அவசியம் நேர்ந்த சமயங்களில் மட்டும் நாங்கள் இதைப்பற்றிப் பேசினோம். ஆண்–பெண் உறவுபற்றிய விஷயங்களை நாங்கள்

கட்டாயமாக அடிக்கடி கேட்க நேர்ந்தது, எங்கள் இருவரையும் அதிக வேதனைப்படுத்தியது.

லுட்மிலாவின் தந்தை எவ்ஸியென்கோவுக்கு நாற்பது வயதிருக்கும். அவர் அழகானவர். சுருட்டை மயிரும், மீசையும், செழித்து வளர்ந்த புருவமும் அவரை அழகன் ஆக்கின. வெற்றிவீரனைப் போன்று அவர் புருவங்களை நெளிப்பார். அவர் பேசவே மாட்டார்—அவர் பேசிக் கேட்டதாக எனக்கு நினைவில்லை. குழந்தைகளைச் சீராட்டும்பொழுது ஊமையைப் போன்று ஓசை எழுப்புவார். ஒரு வார்த்தைகூடச் சொல்லாது சில சமயங்களில் அவர் மனைவியை அடிப்பார்.

நீலச்சட்டையும், வெல்வெட் கால்சட்டையும், பளபளப்பான பூட்சும் அணிந்து தோளில் பெரிய வாத்தியக் கருவியை தொங்கவிட்டுக்கொண்டு விடுமுறை நாட்களில் மாலையில் அவர் வெளியே செல்வார். கேட்டுக்கு அருகில் சிப்பாயைப் போன்று நிற்பார். விரைவில் அவர் எங்கள் வாயிலைக் கடந்து செல்வார். வாத்தக்களைப் போன்று சிறுமிகளும், பெண்களும் அவரைக் கடந்து செல்வார்கள். சிலர் கடைக்கண்ணால் அவரைப் பார்ப்பார்கள் ; மற்றும் சிலர் விரகதாகத்துடன் பார்ப்பார்கள். அவர்களைப் பொறுக்கி எடுப்பதைப் போன்று தன் கருவிழிகளால் அவர்களைப் பார்த்துக்கொண்டு நிற்பார் எவ்ஸியென்கோ. வார்த்தைகளால் பேசாமல் ஆணைப் பெண்ணும் பெண்ணை ஆணும் மிருக இச்சையோடு பார்ப்பது வெறுப்பை அளித்தது. அவர் விரலை அசைத்தால், அங்கிருப்பவர்கள் புழுதி படிந்த வீதியில் சாஷ்டங்கமாக விழுவார்கள் என்று தோன்றிற்று.

" அவர்களைக் கடைக்கண்ணால் பார்க்கிறான். ஆடு ! வெட்கமில்லாத பன்றி !" என்று முணுமுணுத்தாள், லுட்மிலாவின் அம்மா. தேய்ந்துபோன துடைப்பத்தைப்போல், அவள் நெட்டையாகவும், ஒல்லியாகவும் இருந்தாள்.

அவளுக்கு அருகில் உட்கார்ந்திருந்தாள், லுட்மிலா. பல கேள்விகளிலிருந்து தனது கவனத்தை வேறு பக்கம் திருப்பும் வீண் முயற்சியில் ஈடுபட்டிருந்தாள் லுட்மிலா.

" என்னைத் தொந்தரவு செய்யாதே, துரதிர்ஷ்டம் படைத்த நொண்டியே !" என்று பேந்தப் பேந்த விழித்துக்

கொண்டு முணுமுணுத்தாள் அவள் தாய். அவளது குறுகிய மங்கோலியக் கண்கள் வெளிறியிருந்தன. ஏதோ தன்னை ஈர்ப்பதைப் போன்று அவள் இமை கொட்டாது உற்றுப்பார்த்தாள்.

"கோபப்படாதே, அம்மா! கோபப்படுவதில் பிரயோஜனமில்லை" என்றாள் லுட்மிலா. "காலஞ்சென்ற பாய் பின்னுகிறவனின் விதவை எப்படித் தன்னைச் சிங்காரித்துக் கொண்டிருக்கிறாள், பார்."

"நீங்கள் மூவரும் இல்லை யென்றால், அவளைவிட நன்றாக நான் உடைகள் அணிவேன். நீங்கள் என்னைத் தின்று விட்டீர்கள்—விழுங்கிவிட்டீர்கள்" என்று கட்டுமஸ்தான விதவையைப் பார்த்துக்கொண்டு, இரக்கமின்றி, அவள் தாய் பதில் சொன்னாள்.

சிறிய வீட்டைப் போன்றிருந்தாள் விதவை. அவள் மார்பு வீட்டு முகப்பைப் போன்று நீட்டிக்கொண்டு நின்றது. பச்சைக் கைக்குட்டையை தலையில் கட்டிக்கொண்டிருந்தாள் அவள். அவளுடைய சிவந்த முகம், அஸ்தமன சூரிய ஒளியால் பிரகாசிக்கும் பள்ளியறை ஜன்னலை எனக்கு நினைவூட்டிற்று.

வாத்தியக் கருவியை நெஞ்சின்மீது சாய்த்துக்கொண்டு, வாத்தியத்தை மீட்டினர் எவ்ஸியென்கோ. வாத்தியக் கருவி எழுப்பிய ஆனந்த நாதம் திக்குகளெல்லாம் ஒலித்தது. பாடகனின் பாதாரவிந்தங்களில் விழக் குழந்தைகள் நாலா பக்கங்களிலிருந்தும் ஓடோடியும் வந்தனர். அங்கே இன்பலாகிரியில் அவை லயித்துக் கிடந்தன.

"பொறு, யாராவது உன் முதுகுத் தோலை உரிப்பார்கள்" என்று எச்சரித்தாள் எவ்ஸியென்கோவின் மனைவி.

அவளுக்குப் பதில் சொல்லாமல், அவளை கடைக்கண்ணால் பார்த்தார் எவ்ஸியென்கோ.

கிறிஸ்டின் கடைக்கு முன்னே கிடந்த பெஞ்சில் உட்கார்ந்தாள், பாய் பின்னுகிறவனின் விதவை. தலையை ஒரு பக்கம் சாய்த்துக்கொண்டு அவள் சங்கீதத்தைக் கேட்டாள். அவள் மார்பு விம்மி விம்மி இறங்கியது.

கல்லறைக்கு அப்பாலிருந்த வயலை அஸ்தமன சூரியன் தன் செங்கிரணங்களால் குளிப்பாட்டினான். வீதியிலே அழகிய ஆடைகள் அணிந்த குழந்தைகள் ஓடி ஆடி விளையாடின.

காற்று தலையைக் கிறுகிறுக்க வைத்தது. சூரிய ஒளியால் வெப்பமான மணலிலிருந்து துர்நாற்றம் எழுந்தது ; கசாப்புக்கடையின் ரத்த நாற்றமும், சக்கிலியர் கடையிலிருந்து எழுந்த தோலின் நாற்றமும் கலந்து வீசிற்று. பெண்களின் சளசளத்த பேச்சும், குடிவெறியிலிருந்த ஆண்களின் கர்ஜனையும், குழந்தைகளின் அழுகையும், வாத்தியத்தின் நாதமும் கலந்து செழிப்பான பூமியின் பெருமூச்சைப் போன்று ஒலித்தன. எல்லாம் கடுமுரடாகவும், நிர்வாணமாகவும் தோன்றின ; தனது பெருமைக்குரிய மிருக பலத்தைக் காட்ட வெறியுடன் வழிதேடுகிற இருண்ட வாழ்க்கை தனது உறுதியான நம்பிக்கையை வெளிப்படுத்திற்று.

அந்தக் கோலாகலத்திற்கு மத்தியில் சில வார்த்தைகள் நெஞ்சில் தைத்து, நினைவில் இடம் பெறும்.

"நீங்கள் எல்லோரும் ஏக காலத்தில் அவன்மீது விழ முடியாது. ஒருவர் பின் ஒருவராக அவனை அடைய வேண்டும்."

"நம்மீது நாமே இரக்கங்கொள்ள வில்லை யென்றால், பிறர் நம்மீது எப்படி இரக்கங்கொள்வார்கள் ?"

"வேடிக்கைக்காகவே பெண்களைக் கடவுள் சிருஷ்டி செய்தார்போல் இருக்கிறது."

இரவு நெருங்கி வந்தது ; காற்றில் புது மணம் கமழ்ந்தது. கூச்சல் ஓய்ந்தது. கிழலிலே மர வீடுகள் வீங்கி விரிந்தன. சில குழந்தைகள் படுப்பதற்காக வீட்டிற்கு இழுத்துச் செல்லப்பட்டனர் ; மற்றவை தத்தம் தாய்மார்களின் மடியிலோ, காலடியிலோ அங்கேயே தூங்கின. இரவில் பெரிய குழந்தைகள் சாந்தமடைந்தன. எவரும் பார்க்காத சமயம் பார்த்து, உருகி மறைவதைப் போன்று எவ்லியென்கோ மறைந்தார் ; பாய் பின்னுகிறவனின் விதவையும் மறைந்தாள். கல்லறைக்கு வெகு தூரத்திற்கு அப்பாலிருந்து கேட்டது வாத்தியம். யூனையின் முதுகைப் போன்று தனது முதுகை வளைத்துக்கொண்டு லுட்மிலாவின் அம்மா அங்கே பெஞ்சில் உட்கார்ந்திருந்தாள். மருத்துவச்சியுடனும் கலியாணத் தரகன் மனைவியுடனும்—வாத்தின் அலகைப் போன்ற மூக்கும், ஆண்களின் நெஞ்சைப் போன்று பரந்த மார்பும்

காற்று தலையைக் கிறுகிறுக்க வைத்தது. சூரிய ஒளியால் வெப்பமான மணலிலிருந்து துர்நாற்றம் எழுந்தது ; கசாப் புக்கடையின் ரத்த நாற்றமும், சக்கிலியர் கடையிலிருந்து எழுந்த தோலின் நாற்றமும் கலந்து வீசிற்று. பெண்களின் சளசளத்த பேச்சும், குடிவெறியிலிருந்த ஆண்களின் கர்ஜனை யும், குழந்தைகளின் அழுகையும், வாத்தியத்தின் நாதமும் கலந்து செழிப்பான பூமியின் பெருமூச்சைப் போன்று ஒலித்தன. எல்லாம் கரடுமுரடாகவும், நிர்வாணமாகவும் தோன்றின ; தனது பெருமைக்குரிய மிருக பலத்தைக் காட்ட வெறியுடன் வழிதேடுகிற இருண்ட வாழ்க்கை தனது உறுதியான நம்பிக்கையை வெளிப்படுத்திற்று.

அந்தக் கோலாகலத்திற்கு மத்தியில் சில வார்த்தைகள் நெஞ்சில் தைத்து, நினைவில் இடம் பெறும்.

"நீங்கள் எல்லோரும் ஏக காலத்தில் அவன்மீது விழ முடியாது. ஒருவர் பின் ஒருவராக அவனை அடைய வேண்டும்."

"நம்மீது நாமே இரக்கங்கொள்ள வில்லை யென்றால், பிறர் நம்மீது எப்படி இரக்கங்கொள்வார்கள் ?"

"வேடிக்கைக்காகவே பெண்களைக் கடவுள் சிருஷ்டி செய் தார்போல் இருக்கிறது."

இரவு நெருங்கி வந்தது ; காற்றில் புது மணம் கமழ்ந் தது. கூச்சல் ஓய்ந்தது. நிழலிலே மர வீடுகள் வீங்கி விரிந் தன. சில குழந்தைகள் படுப்பதற்காக வீட்டிற்கு இழுத்துச் செல்லப்பட்டனர் ; மற்றவை தத்தம் தாய்மார்களின் மடி யிலோ, காலடியிலோ அங்கேயே தூங்கின. இரவில் பெரிய குழந்தைகள் சாந்தமடைந்தன. எவரும் பார்க்காத சமயம் பார்த்து, உருகி மறைவதைப் போன்று எவ்ஸியென்கோ மறைந்தார் ; பாய் பின்னுகிறவனின் விதவையும் மறைந் தாள். கல்லறைக்கு வெகு தூரத்திற்கு அப்பாலிருந்து கேட்ட தது வாத்தியம். பூனையின் முதுகைப் போன்று தனது முதுகை வளைத்துக்கொண்டு லுட்மிலாவின் அம்மா அங்கே பெஞ்சில் உட்கார்ந்திருந்தாள். மருத்துவச்சியுடனும் கலியா ணத் தரகன் மனைவியுடனும்—வாத்தின் அலகைப் போன்ற மூக்கும், ஆண்களின் நெஞ்சைப் போன்று பரந்த மார்பும்

அந்த மார்பில் "அழிகிறவர்களைக் காத்தற்காக" அளிக்கப் பட்ட தங்கப் பதக்கத்தையும் அணிந்துகொண்ட பலசாலி கலியாணத் தாசனின் மனைவி—தேநீர் அருந்தப் போய்விட் டாள் பாட்டி.

பாட்டியும் அவளும் நண்பர்கள். வீதியில் அவர்கள் சந்தித்தால் இருவரும் வெகு தூரத்தி லிருக்கும்பொழுதே அன்புப் புன்னகை புரிவார்கள்.

எங்கள் கேட்டுக்கு அருகிலிருந்த பெஞ்சில் உட்கார்ந் திருந்த லுட்மிலாவுக்கு அருகில் நானும் கோஸ்ட்ரோமாவும் உட்கார்ந்தோம். தன்னுடன் சண்டைக்கு வருமாறு லுட் மிலாவின் அண்ணனை அறைகூவி அழைத்தான் சுர்க்கா. எனவே இருவரும் அப்பொழுது கட்டிப் புரண்டுகொண்டிருந் தார்கள்.

"சண்டையை நிறுத்துங்கள்" என்று பயத்துடன் கூவினாள் லுட்மிலா.

கடைக்கண்ணால் லுட்மிலாவைப் பார்த்துக்கொண்டு, வேட்டைக்காரன் காலினின் கதையைச் சொல்லிக்கொண் டிருந்தான், கோஸ்ட்ரோமா. குறும்புக் கண்கள் படைத்த அந்தக் கிழவனின் கெட்ட நடவடிக்கைகள் அந்த ஊர் மக்க ளுக்கு நன்கு தெரியும். சமீபத்தில் அவன் இறந்துபோனான். அவனுடைய சவப்பெட்டியை, கல்லறை மணலில் புதைப்பதற் குப் பதிலாக, மற்ற புதை குழிகளுக்கு அப்பால் தனியிடத் தில் வைக்கப்பட்டதாகக் கோஸ்ட்ரோமா சொன்னான். சவப் பெட்டியின்மீது சிலுவை, கேடயம், இரண்டு எலும்புகள் ஆகியவை வைக்கப்பட்டனவாம்.

ஒவ்வொரு இரவும் அந்தக் கிழவன் சவப்பெட்டியி லிருந்து எழுந்து முதல் கோழி கூவும்வரை கல்லறையில் எதையோ தேடி அலைவதாகக் கூறப்பட்டது.

"இத்தகைய பயங்கரமான விஷயங்களைச் சொல்லாதே!" என்று கெஞ்சினாள் லுட்மிலா.

அவளுடைய சகோதரனின் பிடியிலிருந்து தன்னை விடு வித்துக்கொண்டு, "என்னைப் போகவிடு!" என்று கூவினான் சுர்க்கா. கோஸ்ட்ரோமாவைப் பார்த்து அவன் கேலியாகச் சொன்னான்: "நீ எதற்காகப் பொய் சொல்லுகிறாய்? சவப்

பெட்டியைப் புதைத்ததையும், நினைவுச் சின்னம் நடுவதற் காகப் புதை குழிக்கு மேலே இடம் செய்திருந்ததையும் நான் நேரில் பார்த்தேனே! இரவில் கல்லறையில் அவன் நடமாடும் கதை, குடிகாரக் கொல்லன் கட்டிவிட்ட கதையாக்கும்!''

''இது உனக்கு நிச்சயமாகத் தெரியுமானால், கல்லறை யில் இரவைக் கழிப்பதுதானே!'' என்று அவனை ஏறெடுத் துக்கூடப் பார்க்காமல் சொன்னான் கோஸ்ட்ரோமா.

அவர்கள் விவாதிக்க ஆரம்பித்தனர். துக்கத்துடன் தலையை அசைத்துக்கொண்டு தன் அம்மாவைக் கேட்டாள் லுட்மிலா :

''பேய்கள் இரவில் நடமாடுமா, அம்மா?'' என்று.

''ஆம், அவை நடமாடும்'' என்று லுட்மிலாவின் அம்மா ஊர்ஜிதம் செய்தாள்.

தடித்துச் சிவந்த கன்னங்கள் படைத்த கடைக்காரரின் இருபத்தோர் வயதான மகன் வால்யோக் அருகில் வந்து நாங்கள் விவாதிப்பதைச் செவிமடுத்தான்.

''காலைவரையில் சவப்பெட்டிமீது படுக்கிறவருக்கு இருபது கோபெக்கும், பத்து சிகரெட்டுகளும் நான் கொடுக் கிறேன். ஆனால், இதைச் செய்யப் பயந்தால், என் மனம் திருப்தி அடையும் வரையில் நான் அவன் காதைத் திருகு வேன் சரிதானே?''

அங்கே அமைதி குடிகொண்டது. லுட்மிலாவின் அம்மா அமைதியைக் குலைத்தாள்.

''எவ்வளவு முட்டாள்தனமான பேச்சு இது! இத் தகைய காரியம் செய்யுமாறு நீ எப்படி குழந்தைகளைக் கேட்க லாம்?'' என்றாள் அவள்.

''எனக்கு ஒரு ரூபிள் கொடுத்தால் நான் சவப்பெட்டி மீது படுக்கிறேன்'' என்றான் சுர்க்கா.

''இருபது காபெக்குக்கு இதைச் செய்யப் பயமா?'' என்று குத்தலாகக் கேட்டான் கோஸ்ட்ரோமா. ''ஒரு ரூபிள் கொடுக்க இசை, வால்யோக். வீண் ஜம்பம் அடிக்கிற அவன் அங்கே போக மாட்டான்.''

''நல்லது, நான் ஒரு ரூபிள் தருகிறேன்!''

சுர்க்கா எழுந்திருந்து வேலியைப் பிடித்துக்கொண்டு மெதுவாக நடந்தான். வாயில் விரலை வைத்துக்கொண்டு கோஸ்ட்ரோமா சிட்டி அடித்தான். கவலையுடன் லுட்மிலா சொன்னாள் :

"அவன் ஏன் ஜம்பமாகப் பேசினான் ?"

"பேடிகளின் கூட்டம் !" என்று கேலி செய்தான் வால்யோக். "தெருவில் சண்டை போடும் சிறந்த வீரர்கள் ! நீங்கள் நாய்க்குட்டிகள் !"

அவன் செய்த அவமதிப்பு வேதனை அளித்தது. அந்தத் தடியனை எங்களுக்குப் பிடிக்கவில்லை. குறும்பு செய்யுமாறு குழந்தைகளைச் சதா அவன் தூண்டிக்கொண்டே இருப்பான். சிறுமிகளையும், பெண்களையும்பற்றித் தகாத வார்த்தைகள் சொல்லுவான் ; அவர்களைக் கேலி செய்யுமாறு குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுப்பான். அவன் சொல்லைக் கேட்டு நடந்த குழந்தைகளுக்கு அதற்குரிய பரிசும் கிடைத்தன. சில காரணங்களுக்காக அவன் என் நாயை வெறுத்தான். கல்லால் அதை அடித்தான். ஒரு நாள் ஊசியை உள்ளே வைத்து ஒரு சொட்டித்துண்டை என் நாய்க்கு அவன் கொடுத்துவிட்டான்.

அவமானத்துடன் சுர்க்கா அப்பால் சென்றதைக் காணச் சகிக்கவில்லை.

"ஒரு ரூபிள் தந்தால் போகிறேன்" என்று நான் வால்யோக்கிடம் சொன்னேன்.

என்னை ஆத்திரமூட்ட எண்ணிய அவன் லுட்மிலாவின் அம்மாவிடம் ஒரு ரூபிள் கொடுத்தான்.

"என்னிடம் தராதே ; அதை நான் வாங்கிக்கொள்ள மாட்டேன்" என்று கோபத்துடன் சொல்லிவிட்டு, அவள் அப்பால் சென்றுவிட்டாள். பணத்தை வாங்கிக்கொள்ள லுட்மிலாவும் மறுத்துவிட்டாள். இதைக் கண்டு வால்யோக் எங்களை அதிகமாகக் கேலி செய்தான். பணத்தைக் கேட்காமலேயே புறப்பட நான் முயன்ற சமயத்தில் பாட்டி அங்கே வந்து சேர்ந்தாள். விவரங்களைக் கேட்டுவிட்டு, ரூபிளைத் தன் கையில் வாங்கிக்கொண்ட அவள், சாந்தமாக என்னிடம் சொன்னாள் :

"கோட்டை அணிந்துகொள் ; போர்வையையும் எடுத்துக்கொள். காலையில் குளிரும்" என்று.

அசம்பாவிதம் நிகழாது என்ற நம்பிக்கை அவள் கூறின வார்த்தைகளால் எனக்கு உண்டாயிற்று.

காலை வரையில் நான் சவப்பெட்டிமீது உட்காரவோ, படுக்கவோ வேண்டுமென்று வால்யோக் நிபந்தனை விதித்தான். எது நேர்ந்தாலும்—கிழவன் காலினின் சவப்பெட்டியிலிருந்து வெளியே ஊர்ந்து வரும்பொழுது சவப்பெட்டி அசைந்தாலும்—நான் சவப்பெட்டியிலிருந்து கீழே இறங்கக் கூடாது என்றான் அவன். நான் கீழே குதித்தால், பந்தயத்தை நான் இழந்துவிடுவேன்.

"ஜாக்கிரதை! இரவு முழுதும் நான் உன்னை கண் காணிப்பேன்!" என்றான் வால்யோக்.

கல்லறைக்கு நான் புறப்பட்டதும் என்மீது சிலுவை அடையாளம் வரைந்துவிட்டு, பாட்டி உபதேசித்தாள் :

"ஏதாவது தெரிவதாகத் தோன்றினால், இருந்த இடத்திலிருந்து அசையாதே. கன்னி மரியாளைத் தோத்திரம் செய்!" என்று.

இந்த விவகாரத்தைச் சீக்கிரம் முடித்துவிட வேண்டும் என்னும் ஆர்வத்துடன் நான் வேகமாகச் சென்றேன். வால்யோக்கும், கோஸ்ட்ரோமாவும், மற்றும் சில சிறுவர்களும் என்னைப் பின்தொடர்ந்தனர். சுவர்மீது ஏறும்பொழுது என் கால் கம்பளியில் சிக்கிக்கொண்டதால், நான் கீழே விழுந்தேன். பந்து எழும்புவதைப் போன்று நான் உடனே குதித்தெழுந்தேன். சுவரின் மறு புறத்தில் சிரிக்கும் சத்தம் என் காதில் விழுந்தது. என் மனதிலே ஏதோ சுருக்கென்றது. என் தேகம் சில்லிட்டது.

கறுப்புச் சவப்பெட்டிமீது நான் தடுமாறி விழுந்தேன். அதன் ஒரு புறம் மணலால் அடைக்கப்பட்டிருந்தது. மறு புறத்தில் சவப்பெட்டியின் பலகைவான கால்சள் வெளியே தெரிந்தன ; அதைத் தூக்க யாரோ முயன்றதைப் போன்றும், அந்த முயற்சி தோல்வியில் முடிந்ததைப் போன்றும் தோற்றமளித்தன. சவப்பெட்டியின் ஓரத்தில் உட்கார்ந்து நான் சுற்றுமுற்றும் கவனித்தேன். கல்லறை யெங்கும் சிலுவைகள்

காட்சி யளித்தன. அவைகளின் நிழல்கள் சவக்குழியில் மேடு களைத் தழுவும் மெலிந்த கரங்களைப் போன்று தோற்றமளித் தன. இங்குமங்கும் சிலுவைகளுக்கு மத்தியில் அடர்ந்து வளராத மரங்கள் காட்சியளித்தன. அவைகளின் கிளைகள், விட்டுவிட்டு நின்ற சவக்குழிகளை இணைத்தன. மரங்களின் நிழலும் மங்கிய இந்தத் தோற்றமும் பயங்கரமாக இருந்தன. கல்லறையின் கோயில் பனிப்படலத்தைப் போன்று எழுந் தது. சிறிய, மங்கிய சந்திரன், சலனமற்ற மேகங்களுக் கிடையே எட்டிப் பார்த்தது.

யாஸின் தந்தை, "மோசமான விவசாயி" காவல் மணியைச் சோம்பலுடன் அடித்தான். அவன் மணியை அடிக்கும் ஒவ்வொரு தடவையும் சாதாரண தாழ்வாரத்தில் கயிறு பட்டு, மணியோசையுடன், சுத்தமான இன்னொரு சிறிய நாதமும் கேட்டது.

காவற்காரனின் பிரார்த்தனை என் நினைவிற்கு வந்தது.

"பிதாவே, தூக்கமற்ற இரவுகளிலிருந்து எங்களைக் காப்பாற்றும்!" என்று.

பயங்கரமான அந்தச் சூழ்நிலை, மூச்சைத் திணறச் செய்வதாக இருந்தது. அப்பொழுது மாலையில் குளிராக இருந்தும், எனக்கு வியர்த்தது. கிழவன் காலினின் சவப்பெட்டியிலிருந்து வெளியேற ஆரம்பித்தால், காவற் காரன் குடிசையை அடைய எனக்கு நேரமிருக்குமா?

அந்தக் கல்லறையை எனக்கு நன்றாகத் தெரியும். பல முறை சவக்குழிகளுக்கிடையே யாஸுடனும், மற்ற நண்பர் களுடனும் நான் அங்கே விளையாடி யிருக்கிறேன். சர்ச்சுக்கு அருகில் என் அம்மா அடக்கம் செய்யப்பட்ட இடம் இருந்தது.

எல்லோரும் அப்பொழுது துயிலவில்லை. குடியிருப்புப் பகுதிகளிலிருந்து சிரிப்பும், தக்கடா பாட்டுக்களும் கேட் டன. குன்றிலிருந்தோ, அல்லது ரயிலடி மணல் குழிகளி லிருந்தோ, அல்லது பக்கத்துக் கிராமமாகிய காடிஸோவ்காவி லிருந்தோ வாத்தியக்கருவின் ஓலமும், அழுகையும் கேட்டன. நிரந்தரமான குடிபோதையிலிருக்கும் கருமான் மியாகோவ் தள்ளாடிக்கொண்டு கல்லறைச் சுவருக்கு மறுபுறம் நடந்

தான். அவன் பாடின பாட்டிலிருந்து நான் அவனை அடையாளம் தெரிந்துகொண்டேன்.

எங்கள் அன்னை மிகுந்த போக்கிரி,
கர்வத்துடன் நடந்து கொள்வாள்.
தன் தந்தைக்குச் சலுகை செய்ய
ஒவ்வொரு சிறுமியையும் விரட்டிவிட்டாள்.

ஜீவனின் இந்தக் கடைசி மூச்சைக் கேட்பதற்கு உற்சாகமாக இருந்தது. ஆனால் ஒவ்வொரு முறையும் மணி அடிக்க அடிக்க அரவமும் அடங்கிக்கொண்டே வந்தது. வயல் வெளிகளிலுள்ள யாவற்றையும் அமிழ்த்தி மறைத்துவிடுகிற நதி வெள்ளத்தைப் போன்று அந்த அமைதியும் இருந்தது. என் ஆத்மா எல்லையற்ற, ஆழம் காண முடியாத சூன்யத்வத்தில் மூழ்கிப் போயிற்று. சூன்யமான சமுத்திரத்தில்—அணுக முடியாத நட்சத்திரங்களைத் தவிர மற்றவைகளெல்லாம் அழிக்கப்பட்ட சமுத்திரத்தில்—என் ஆத்மா அமிழ்ந்து கிடந்தது.

கம்பிளியை இழுத்துப் போர்த்துக்கொண்டேன். கால்களை மடித்துக்கொண்டு மாதாகோயிலை நோக்கி உட்கார்ந்தேன். நான் அசைந்தபொழுதெல்லாம் சவப்பெட்டி கிரீச்சிட்டது.

ஒன்றிரண்டு தரம் எனக்கு அருகில் ஏதோ விழுந்தது. பிறகு சவப்பெட்டிக்கருகில் ஒரு செங்கல் விழுந்தது. இது பயங்கரமாக இருந்தது. எனினும் என்னைப் பயமுறுத்துவதற்காக வால்யோக்கும், அவன் நண்பர்களும் சுவருக்கு அப்பாலிருந்து கல்லை எறிகிறார்கள் என்று நான் ஊகித்தேன். அருகில் ஜனங்கள் இருக்கிறார்கள் என்னும் உண்மை எனக்குத் தெம்பை அளித்தது.

நான் என் அம்மாவை நினைக்க ஆரம்பித்தேன். ஒரு முறை நான் சிகரெட் பிடிக்க முயன்றபொழுது அவள் என்னை சவுக்கால் அடிக்க ஆரம்பித்தாள். அப்பொழுது நான் சொன்னேன் :

" என்னைத் தொடாதே ! எனக்கு ஒரு மாதிரியாக இருக்கிறது ; எனக்கு நோய்."

சவுக்கடி விழுந்த பின்னர் அடுப்புக்குப் பின்னே நான் ஊர்ந்து சென்றேன். அப்பொழுது அவள் பாட்டியிடம் சொன்னாள் :

"எவ்வளவு கல்நெஞ்சம் படைத்த சிறுவன் ! அவனுக்கு யாரிடமும் பிரியம் இல்லை !"

அவள் இப்படி சொன்னதைக் கேட்டு என் மனம் வேதனை அடைந்தது. என் அம்மா என்னைத் தண்டித்த பொழுதெல்லாம் அவளுக்காக வருந்தி நாணமுற்றேன் ; அவள் அளித்த தண்டனை அபூர்வமாகத்தான் நியாயமான தாக இருந்தது.

வாழ்க்கையில் வேதனை அளிக்கும் விஷயங்கள் பல இருந்தன. சுவருக்கு அப்பாலிருக்கும் பயல்களை எடுத்துக் கொள்ளுவோம். கல்லறையில் தனியே இருப்பது பயங்கரமானது என்பது அவர்களுக்குத் தெரியும். ஆயினும் அவர்கள் என்னை மேலும் பயமுறுத்த முயலுகின்றனர். ஏன் ?

" நாசமாய்ப் போங்கள் !" என்று கூவ நான் விரும்பினேன்.

ஆனால் அது ஆபத்தானது. இதைப் பிசாசு எப்படி வரவேற்குமோ யார் அறிவர் ? நிச்சயமாக அருகில் எங்காவது அது இருக்கக் கூடும்.

மணலிலே கலந்து படிந்து கிடந்த மைக்கா துண்டுகள் நிலவொளியில் மந்தமாக மின்னின. இது அடியில் வருவதை எனக்கு நினைவுபடுத்திற்று ; ஒரு நாள் படகில் படுத்துக் கொண்டு ஓக்கா நதியில் ஜலத்தை உற்றுப் பார்த்தவாறு பிரயாணம் செய்தபொழுது சிறிய ஜலப் பிசாசு ஒன்று திடீரென்று என் முன்னர் தோன்றி, அது பக்கவாட்டில் சாய்ந்தது. அப்போது அதனுடைய தோற்றம் மனிதனுடைய கன்னத்தைப்போல் இருந்தது ; பறவைக்குரிய சிறிய கண்களால் அது என்னை உருட்டி உருட்டிப் பார்த்துவிட்டு, தண்ணீருக்குள் மூழ்கி மறைந்தது. அது நீருக்குள் மூழ்கிய தோற்றம்,மாப்பிள் இலை ஒன்று உதிர்ந்து விழுவதை எனக்கு நினைவூட்டியது.

என் நினைவு சுறுசுறுப்படைந்தது. என் வாழ்க்கையிலே ஏற்பட்ட நிகழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக எழுந்து பற்பல

விதத்தில் பயங்கரங்களை உண்டாக்கி, என் கற்பனைக்குக் குறுக்கே ஒரு அடைப்பைப் போன்று நின்றன.

உதாரணமாக, மணல் வெளியின் குறுக்கே முள்ளம் பன்றி ஒன்று தனது உறுதியான சிறிய பாதங்களை ஊன்று வது போன்ற தோற்றம் ஏற்பட்டது. உடனே எனக்கு அடுக்களைப் பூதத்தின் நினைப்பு வந்துவிட்டது; இதைப் போன்று சிறிதாகவும் கீறல் உள்ளதாகவும் தோன்றியது.

அடுக்களை முன்னே அமர்ந்து பாட்டி "நல்ல சிறிய பூதமே! கரப்பான் பூச்சிகளை எல்லாம் விழுங்கிவிடு" என்று வேண்டுவாள். இதுவும் என் நினைவுக்கு வந்தது.....

வெகுதொலைவில் கண்ணுக்குத் தெரியாமல் இருந்த நக ருக்கு அப்பால் வானம் பிரகாசமடைய ஆரம்பித்தது. பிரபா தத்தின் குளிர் வந்து என் கன்னத்தைத் தழுவிற்று. என் கண் இமைகள் கனத்தன. பந்தைப் போன்று சுருண்டு படுத்து, போர்வையைத் தலைக்கு மேலே இழுத்துப் போர்த் துக்கொண்டேன். என்ன வந்தாலும் வரட்டும்!

பாட்டி என்னை எழுப்பினாள். அருகில் வந்து நின்று போர்வையை இழுத்தாள்.

"எழுந்திரு! குளிருகிறதா? அது பயங்கரமாக இருந் ததா?" என்று கேட்டாள்.

"ஆம், பயங்கரமாக இருந்தது. ஆனால் இதை யாரிட மும் சொல்லிவிடாதே! அந்தப் பயல்களுக்கு இது தெரியக் கூடாது."

"ஏன்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் பாட்டி. "பயப்படுவதற்கு எதுவும் இருக்கவில்லை யென்றால், பெரு மைப்பட்டுக்கொள்வதற்கும் எதுவும் இருக்க முடியாது."

நாங்கள் வீட்டிற்குச் சென்றோம். வழியில் அவள் அன் புடன் சொன்னாள்:

"யாவற்றையும் நீ முயன்று செய்ய வேண்டும், என் புருவே—கிருவே! யாவற்றையும் நீயாகவே கற்றுக்கொள்ள வேண்டும். நீயாகவே விஷயங்களைத் தெரிந்துகொள்ளவில்லை யென்றால், உனக்கு யாரும் எதையும் கற்றுத்தர மாட்டார்கள்."

மாலைக்குள் நாங்கள் வசித்த தெருவின் "வீரனாகி" விட்டேன் நான். எல்லோரும் என்னைக் கேட்டார்கள்:

" அது பயங்கரமாக இருக்கவில்லையா ?"

" ஆம் " என்று நான் சொன்னதும், அவர்கள் தலையை அசைத்துவிட்டு, ஆச்சரித்துடன் சொன்னர்கள் : " பார்த் தாயா ?"

உறுதியுடன் கடைக்காரன் சொன்னன் :

" தனது சவக்குழியிலிருந்து காலினின் வெளியே வரு கிறான் என்று அவர்கள் பொய் சொன்னர்கள் என்பது இதன் அர்த்தம். அவன் வெளியே வந்திருப்பானுனல், இந்தச் சிறுவனைக் கண்டு அவன் பயந்திருப்பானு ? கல்லறைக்கு வெளியே அவன் சிறுவனைத் தூக்கிச் சென்றிருப்பான். எங்கே தூக்கிச் சென்றிருப்பான் என்பது ஆண்டவனுக்குத் தான் தெரியும்."

அன்பு கலந்த ஆச்சரியத்துடன் லுட்மிலா என்னைப் பார்த்தாள். தாத்தா என்னைப் பார்த்துச் சிரித்ததால், தாத்தா வுக்குக்கூட என் சொல் திருப்தி அளித்திருக்கிறது என்பது தெரியவந்தது ; ஆனல் சுர்க்கா மாத்திரம்தான் முணுமுணுத் தான் :

" இது இவனுக்கு எளிது ; ஏனெனில் இவனுடைய பாட்டி ஒரு சூனியக்காரி !"

3

பொழுது புலரும்பொழுது ஒரு நட்சத்திரம் மங்கி மறைவதைப் போன்று என் சகோதரன் கோல்யா மங்கி மறைந்தான். பாட்டியும், நானும், அவனும் கூடத்தில் கந்தை விரிக்கப்பட்ட பலகையில் படுத்துறங்கினேம். சுவரின் மறு புறத்தில் பண்ணையாள் தனது கோழிகளை வைத்து வளர்த் தார். நாள்தோறும் காலையில் கோழிகள் கொக்கரிப்பதும், சிறகடிப்பதும் எங்களுக்குக் கேட்கும். காலையில் பொன்னிற மான சேவல் கூவுவதைக் கேட்டு நாங்கள் துயில் எழுவோம்.

" உன் கழுத்தைத் திருக வேண்டும் !" என்று முனகிக் கொண்டே ஒரு நாள் காலையில் துயிலெழுந்தாள் பாட்டி.

நான் முந்தியே துயிலெழுந்துவிட்டேன். சுவரிலுள்ள இடுக்குகளினூடே சூரியன் உள்ளே எட்டிப் பார்ப்பதையும், கட்டுக் கதையிலே வரும் வார்த்தைகளைப்போன்று வெண் கதிர்கள் நடனமாடுவதையும் பார்த்துக்கொண்டு படுத்திருந்தேன். சுண்டெலிகள் பலகையில் ஓடி விளையாடின. சிவப்பு நிறமுள்ள சிறிய வண்டுகள், கருப்புப் புள்ளியிட்ட இறக்கைகளுடன் முன்னும் பின்னும் பாய்ந்து சென்றன.

கோழிகளின் எச்சத்தின் மூச்சடைக்கும் துர்நாற்றத்திலிருந்து தப்புவதற்காக, சில சமயங்களில் கூடத்திலிருந்து வெளிவந்து கூரைமீதேறி அண்டை வீட்டுக்காரர்கள் துயிலெழுவதை நான் பார்ப்பது உண்டு. கண் இல்லாதவர்கள் போலும் தூக்கத்தால் தடித்தவர்கள் போலும் அவர்கள் தென்படுவார்கள்.

சடைகள் படைத்த படகுக்காரன் பெர்மானேவ் ஒரு ஜன்னல் வழியாகத் தலையை வெளியே நீட்டினான். அவன் பெருத்த குடிகாரன். சூரியனை அண்ணாந்து பார்த்துவிட்டு, பன்றியைப்போன்று அவன் உறுமினான். சிவந்த நிறத்திலும் சிறிதளவும் இருந்த தன் கேசத்தை இரு கரங்களாலும் கோதிவிட்டுக்கொண்டே கொல்லைக்கு ஓடினார், தாத்தா. குளிர்ந்த ஜலத்தை தேகத்தில் ஊற்றிக்கொள்ளக் குளியல் அறைக்கு அவர் விரைந்துகொண்டிருந்தார். நீண்ட மூக்கும், வடுக்களும் படைத்த பண்ணையாரின் வாயாடிச் சமையற்காரி குயிலைப்போன்று தோற்றமளித்தாள். பண்ணையாரோ பருத்த வயோதிக மாடப் புறாவைப்போன்று தோற்றமளித்தார். சகலரும் ஏதாவது ஒரு விலங்கையோ, அல்லது பறவையையோ எனக்கு நினைவூட்டினர்.

மனோகரமான காலை நேரம் அது. ஆனால் என் மனமோ இந்த இடத்தைவிட்டு அப்பால் சென்று தன்னந் தனியே வயலிடையே இருக்க விரும்பிற்று. பிரகாசமான இந்தத் தினத்தை மக்கள் கெடுத்துவிடுவார்கள் என்பது எனக்குத் தெரியும்.

ஒரு நாள் நான் கூரைமீது படுத்திருந்த சமயம், பாட்டி என்னை அழைத்து, படுக்கையைச் சுட்டிக்காட்டி மெதுவான குரலில் சொன்னாள் :

" கோல்யா இறந்துவிட்டான் ! " என்று

சிவப்புக் காலிகோ தலையணையிலிருந்து நழுவி, தோல் விரிப்பில் கிடந்தது குழந்தை. அவன் நிர்வாணமாகவும், நீலமாகவும் இருந்தான். அவன் சட்டை கழுத்து வரையில் சுருண்டு கிடந்தது. எனவே வீங்கின அவனுடைய வயிறும், புண் தழும்புகள் உள்ள கால்களும் தெரிந்தன. எழுந்திருக்க அவன் முயலுகிறான் என்பதை அறிவிப்பதுபோல, அவன் கைகள் முதுகுக்குப் பின்னே பிணைந்து கிடந்தன. அவன் தலை, ஒரு பக்கம் சாய்ந்து கிடந்தது.

" அவன் இறந்தது நல்லதாயிற்று " என்று தனது தலையை கோதிக்கொண்டே கூறினாள் பாட்டி. " நோஞ் சானுக இருக்கும் இவன் எப்படி நீடித்து உயிருடன் இருக்க முடியும் ?"

தாத்தா உள்ளே வந்து தேகத்தைத் தடவிவிட்டு, மிக ஜாக்கிரதையாகக் குழந்தையின் மூடின கண்களைத் தொட்டார்.

"கையைக் கழுவாமல் அவனைத் தொடாதீர்கள் !" என்று கடுமையாகக் கோபித்துக்கொண்டாள் பாட்டி.

" உலகிலே தோன்றினான்—மூச்சுவிட்டான்—உண வருந்தினான்—எல்லாம் வீணுக்கு என்று ஆகிவிட்டன " என்று முணு முணுத்தார் தாத்தா.

" நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்பதை நினைத்துப் பாருங்கள் !" என்று குறுக்கிட்டுச் சொன்னாள் பாட்டி.

பராக்காக அவளைப் பார்த்துவிட்டு, முற்றத்துக்குள் சென்றுவிட்டார் தாத்தா.

" நீ என்ன வேண்டுமாயினும் செய்துகொள். அவனைப் புதைப்பதற்கு என்னிடம் பணமில்லை " என்று சொன்னார்.

" கேவலமான ஜந்துவே !"

வெளியே சென்ற நான் மாலையில்தான் திரும்பினேன்.

மறு நாள் காலையில் கோல்யா புதைக்கப்பட்டான். நான் மாதாகோயிலுக்குச் செல்லவில்லை. சவச் சடங்கு முடியும் வரை என் அம்மாவின் சவக் குழியிருகே உட்கார்ந்திருந் தேன். என் சிறிய சகோதரனை ஏற்றுக்கொள்ள என் அம்மாவின் சவக்குழி தோண்டப்பட்டிருந்தது. என் நாயும், யாஸின் தந்தையும் என்னுடன்கூட இருந்தனர். சவக்குழி

தோண்டுவதற்காக யாஸின் தந்தை சிறிய தொகைதான் பெற்றுக்கொண்டார். இதைப்பற்றி அவர் என்னிடம் சவடாலடித்தார்.

"நீ என் நண்பனுதலால்தான் சிறிய தொகையைப் பெற்றுக்கொள்ளச் சம்மதித்தேன்; இல்லையெனில் ஒரு ரூபிள் வாங்கி இருப்பேன்" என்று.

துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்த மஞ்சள் துவாரத்தை உற்றுப் பார்த்தபொழுது, கரிய உருவத்தைப்போன்று செதுக்கப்பட்ட பலகைகளே நான் கண்டேன். நான் சிறிது அசைந்ததும் துவாரத்தில் தொடர்ந்து மணல் கொட்டத் தொடங்கியது. அந்தப் பலகைகளே மூட வேண்டு மென்பதற்காகவே இவ்வாறு வேண்டு மென்றே அசைந்து கொடுத்து மணலை நான் தள்ளினேன்.

"உன் தந்திரங்கள் எல்லாம் என்னிடம் பலிக்காது, பையா!" என்று புகை பிடித்துக்கொண்டே யாஸின் தந்தை சொன்னான்.

சிறிய வெண் சவப்பெட்டியை, பாட்டி சுமந்து வந்தாள். உடனே "அழுகிப்போன குடியானவன்" குழிக்குள் இறங்கி, சவப்பெட்டியைப் பாட்டியிடமிருந்து வாங்கினான். அதைப் பலகைமீது வைத்துவிட்டு, குழியிலிருந்து வெளியே குதித்தான். பிறகு காலாலும் மண்வெட்டியாலும் குழியில் மணலைத் தள்ளினான். அவனுடைய "புகைக் குழாய்" தூபகலசத்தைப்போன்று புகைந்தது. தாத்தாவும், பாட்டியும் அவனுக்கு மௌனமாக உதவிபுரிந்தனர். புரோகிதர்கள் இல்லை; பிச்சைக்காரர்களும் இல்லை. அந்தச் சிலுவைக் காட்டுக்குப் மத்தியில் நாங்கள் மூவர் மாத்திரம்தான் இருந்தோம்.

பணத்தைக் காவற்காரனுக்குக் கொடுத்தபொழுது அவனைக் கண்டிக்கும் தோரணையில் பாட்டி சொன்னாள்:

"என் வார்யா தங்கும் கூட்டை நீ கலைத்துவிட்டாய் அல்லவா?" என்று

"நான் வேறு என்ன செய்வேன்? அப்படிச் செய்தும் கூட அண்டையில் கிடப்பவனின் மண்ணை நான் எடுத்தேன்.

பாதகமில்லை ; அதனால் எத்தகைய தீங்கும் நேர்ந்து விடவில்லை.''

சவக்குழிக்கு முன் பாட்டி தலைவணங்கினாள் ; அழுதாள் ; பிறகு நடந்தாள். அவளுக்குப் பின்னே இக்துப் போன கோட்டை இழுத்துவிட்டுக்கொண்டும், தொப்பியால் கண்களை மறைத்துக்கொண்டும் தாத்தா நடந்தார்.

'' உழப்படாத நிலத்தில் நாம் விதை விதைத்தோம் '' என்று திடீரென்று கூறிவிட்டு வயலுக்குமேலே காக்காய் பறந்து செல்வதைப்போன்று எங்களைக் கடந்து சென்றார் தாத்தா.

'' அவர் என்ன சொன்னார் ?'' என்று நான் பாட்டியைக் கேட்டேன்.

'' கடவுளுக்குத்தான் தெரியும். அவர் சிந்திக்கும் முறையே அலாதி '' என்றாள் பாட்டி.

அப்பொழுது வெப்பமாக இருந்தது. பாட்டி மெதுவாக நடந்தாள். அவள் கால்கள் சூடேறின மணலில் புதைந்தன. கைக்குட்டையால் முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைப்பதற்காக அவள் அடிக்கடி நின்றாள்.

மிகுந்த சிரமத்துடன் நான் கேட்டேன் :

'' சவக்குழி இருண்டிருந்ததே—அதுதான் அம்மாவின் சவப்பெட்டியா ?''

'' ஆம் '' என்று கடுமையாகச் சொன்னாள் பாட்டி. '' சவக்குழி தோண்டும் அந்தக் கிழவன் முட்டாள் ! ஒரு வருடம்கூடப் பூர்த்தியாக வில்லை. என்றாலும், வார்யா அழுக ஆரம்பித்துவிட்டாள் ! இதற்குக் காரணம் மணல் தான். அது ஜலத்தை உள்ளே விட்டுவிடுகிறது. களி மண்ணாக இருந்தால் இன்னும் நல்லது.''

''ஒவ்வொருவரும் அழுகாமல் தீராதோ ?''

'' ஆம். எல்லோரும் அழுகுவது நிச்சயம். அடியார்கள் மட்டும்தான் இதிலிருந்து தப்புவார்கள்.''

'' நீ அழுகவே மாட்டாய் !''

அவள் நின்றுவிட்டாள். தொப்பியை என் தலையில் சரியாக வைத்துவிட்டு, பக்தி பரவசத்துடன் கூறினாள் :

இதைப்பற்றி எல்லாம் இப்பொழுது, நீ சிந்திக்கக் கூடாது, தெரிகிறதா ?''

'' மரணம் எவ்வளவு அருவருக்கத்தக்கது ! எவ்வளவு வெறுக்கத்தக்கது !'' என்று எனக்கு நானே கூறிக்கொண் டேன்.

எனக்கு என்னமோ செய்தது.

நாங்கள் வீட்டை அடைந்த சமயம் '' சமோவார் '' அடுப்பைப் பற்றவைத்துவிட்டு, தாத்தா மேஜையை ஒழுங்கு படுத்திக்கொண் டிருந்தார்.

'' நாம் கொஞ்சம் தேநீர் அருந்தலாம். உஷ்ணம் அதிக மாக இருக்கிறது. நான் தேநீர் தயார் செய்கிறேன். எல் லோருக்குமே தயார் செய்கிறேன் '' என்றார்.

அருகே சென்று பாட்டியின் தோளில் தட்டினர், தாத்தா.

'' நல்லது, நீ என்ன சொல்லுகிறாய், தாயே ?'' என்று கேட்டார்.

பாட்டி கையை ஆட்டினாள்.

'' சொல்லுவதற்கு என்ன இருக்கிறது ?''

'' அதுதான் விஷயம். தமது கோபத்தை யெல்லாம் கடவுள் நம்மீது காட்டுகிறார் ; சிறிது சிறிதாக நம்மிடமிருந்து பறித்துக்கொள்கிறார். உன் கையிலுள்ள விரல்களைப் போன்று, குடும்பங்கள் ஒன்றி வாழ்ந்திருந்தால்.''

இவ்வளவு மெதுவாகவும், சாந்தமாகவும் அவர் பேசி வெகு காலமாகிறது. என் வேதனையைக் குறைக்கவும், கறுப் புப் புள்ளிகளைக் காட்டும் அந்த மஞ்சள் குழியை மறக்கவும் எனக்கு உதவிபுரிவார் என்ற நம்பிக்கையுடன் அவர் பேச்சை நான் கேட்டுக்கொண்டிருந்தேன்.

ஆனால் பாட்டியோ கடுமையான குரலில் அவருடைய பேச்சில் குறுக்கிட்டாள்.

'' தந்தையே ! பேச்சை நிறுத்துங்கள் ; வாழ்நாள் முழு தும் இந்த வார்த்தைகளை நீங்கள் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறீர்கள். ஆயினும் அவற்றில் யாருக்காவது உதவி ஏற்பட்டதுண்டா ? உங்கள் வாழ்நாள் முழுதும் மக்களை

நீங்கள் அரித்துத் தின்னுகிறீர்கள், தரு இரும்பைத் தின்னு வதைப் போன்று.''

தாத்தா அவளைப் பார்த்து உறுமிவிட்டு, மௌனம் ஆகி விட்டார்.

அன்று கண்டதை மாலையில் வாயில் அருகே நான் லுட் மிலாவுக்கு சொன்னேன். ஆனால் நான் கூறினதைப் பொருட் படுத்தி தன் மனத்தில் அவள் வாங்கிக்கொள்ளவில்லை.

'' அழகையாக இருப்பது நல்லது. என் அம்மாவும், அப்பாவும் இறந்துவிட்டால், என் சகோதரரின் பராமரிப்பில் தங்கையை விட்டுவிட்டு, நான் பெண் துறவி ஆகிவிடுவேன். நான் வேறு என்ன செய்ய முடியும் ? நான் கொண்டியாதலா லும், என்னால் வேலைசெய்ய முடியாதாதலாலும் என்னை யாரும் கலியாணம் செய்துகொள்ள மாட்டார்கள். செய்து கொண்டாலும் நொண்டிக் குழந்தைகளைத்தான் நான் பெற நேரும்.''

எங்கள் தெருவிலுள்ள மற்ற பெண்களைப் போன்று அவ ளும் புத்திசாலித்தனமாகத்தான் பேசினாள். அன்று மாலைக் குப் பிறகு அவளைப்பற்றி நான் கவலைப்படவில்லை என்று தோன்றுகிறது. அதன் பிறகு அவளை அபூர்வமாகத்தான் காணும் நிலையில் என் வாழ்க்கை சென்றுகொண்டிருந்தது.

என் தம்பி இறந்த சில தினங்களுக்குப் பின்னர், ஒரு நாள் தாத்தா என்னிடம் சொன்னார் :

'' இன்று சீக்கிரம் படு. சூரியோதயத்தில் நான் உன்னை எழுப்புகிறேன். நாம் விறகு சேகரிக்கக் காட்டுக்குச் செல்ல வேண்டும்.''

'' நானும் கூடவந்து மூலிகைகளை சேகரிக்கிறேன் '' என்றாள் பாட்டி.

எங்கள் ஊருக்கு மூன்று மைல் தூரத்திலிருந்த சதுப்பு நிலத்தில் பிர் மரங்களும் பிர்ச் மரங்களும் உண்டாகும் காடு ஒன்று இருந்தது ; புதர்களும், ஒடிந்து விழுந்த கிளைகளும் ஏராளமாக அதில் இருந்தன. ஒரு புறம் அது ஓக்கா நதிவரை யில் நீண்டு கிடந்தது ; மறு புறம் மாஸ்மோ ரோடு வரையில் அது சென்றது. ஓங்கி நிற்கும் கறுப்புக் கூடாரத்தைப் போன்று தேவதாரு மரத்தின் கிளைகள் வானத்தை நோக்கி

வளர்ந்திருந்தன. "சாவ்லாவ்வின் மேன்" என்ற பெயர் இந்தக் காட்டுக்கு இருந்தது.

அந்தச் செல்வம் முழுதும் ஸ்ரிவாலோவ் என்ற பிரபுவுக்குச் சொந்தம். அதைக் கண்காணிப்பதிலே அவர் அவ்வளவு கண்டிப்பாக இருக்கவில்லை. குளுவினோவ் நகர மக்கள் அந்தக் காட்டைத் தங்கள் சொந்த சொத்தாகப் பாவித்து, மனம் போல் பட்டமரங்களையும் தழைகிற மரங்களையும் வெட்டினர். சரத் காலத்தில் ஏராளமானவர்கள் கையில் கோடாலியுடனும், அரையில் கயிறுடனும் காட்டிற்குச் சென்று, குளிர் காலத்திற்குத் தேவையான விறகுகளை வெட்டிக்கொண்டு சென்றனர்.

அதி காலையில் நாங்கள் மூவரும் பனிமூடிய வெண்-பச்சை வயல்களைக் கடந்து சென்றோம். மங்கிய ருஷ்ய சூரியன் மெதுவாக ஓக்கா நதிமீதும், டயாட்லோவி குன்றுகள் மீதும், பச்சைப் பசேலென்ற பழத்தோட்டங்களும் தங்கக் கோபுரங்களும் நிறைந்த நிழினி-நேவோகிராடுமீதும் எழுந்தது. சாந்தமாக, மண்டியாக ஓடும் ஓக்கா நதியிலிருந்து மந்த மாருதம் வீசிற்று. தங்கமேனி படைத்த வண்ணத்துப் பூச்சிகள் பனி மூடிய தலையை அசைத்தன; மலர்களின் இதழ்கள் மௌனமாகப் பூமியில் விழுந்தன; பலவர்ண மலர்கள் பூத்துக் குலுங்கின. "இரவு அழகிகள்" எனப்படும் பன்னீர்ப் பூ சிவப்பு நட்சத்திரங்களாக மலர்ந்தன.

கானகம் இருண்டிருந்தது. பிர் மரங்கள் பெரும் பறவைகளைப் போன்று காட்சி அளித்தன; பெர்ச் மரங்கள் பருவ மங்கைகளைப் போன்று தோற்றமளித்தன. வயல்களிலிருந்து சதுப்பு நிலத்தின் கசப்பான வாசனை வீசிற்று. எனக்கு அருகில் நடந்துகொண்டிருந்த என் நாய் தனது சிவப்பு நீல நாக்கை வெளியே தொங்கவிட்டுக்கொண்டு நின்று, எதையோ முகர்ந்து பார்த்துவிட்டுச் சந்தேகத்துடன் குள்ளநரியைப் போன்ற தனது தலையைக் குலுக்கிற்று.

பாட்டியின் கம்பளி ஜாக்கட்டையும், ஒரு பழைய தொப்பியையும் தாத்தா அணிந்திருந்தார். யார்மீதோ பாய முயலுகிறவரைப் போன்று அவர் புன்முறுவல் புரிந்து கொண்டே பதுங்கிப் பதுங்கி நடந்தார். பாட்டி நீல நிற

ரவிக்கையும், கறுப்புப் பாவாடையும் அணிந்திருந்தாள். தலையில் வெள்ளைக் கைக்குட்டையைக் கட்டிக்கொண்டிருந்தாள். அவள் வேகமாக நடந்ததால் அவளைப் பின்தொடருவது சிரமமாக இருந்தது.

கானகத்தை நெருங்க நெருங்கத் தாத்தாவின் உற்சாகம் அதிகரித்தது. அவர் உறுமினர் ; நெடு மூச்சுவிட்டார். பிறகு அவர் பேச ஆரம்பித்தார். போதை தலைக்கேறியிருப்பவரைப் போன்று முதலில் தெளிவற்றும், பிறகு குதூகலம் அடைந்தும் அவர் பேசினர் :

" கானகங்கள் கடவுளின் தோட்டங்கள். இங்கே செடிகளை யாரும் நடவில்லை. காற்று—கடவுளின் வாயிலிருந்து வெளிப்படுகிற அந்தப் புனித மூச்சு—செடிகளை நட்டது. எனது வாலிபப் பருவத்தில் ஸிக்கூலியில் நான் படகோட்டியாக இருந்தபொழுது—ஆகா—அங்கே நான் கண்டவற்றைக் காணும் வாய்ப்பு உனக்குக் கிடைக்காது, அலெக்ஸி! ஓக்கா நதிக்கரை நெடுகிலும் காஸிமோவிலிருந்து முரோம்வரையிலும் காடுகள்! வால்காவுக்கு அப்பால்—ஊல்ஸ்வரையில் காடுகள்! முடிவற்ற அதிசயம் அது!"

கடைக்கண்ணால் என்னைப் பார்த்துவிட்டு, கண்ணைச் சிமிட்டினாள் பாட்டி. ஆனால் வேர்களில் தடுக்கிக்கொண்டு அவர் சில வார்த்தைகளை அள்ளி வீசினார். அந்த வார்த்தைகள் என் நினைவில் வேரூன்றின.

"மாக்கார் தினத்தன்று சந்தைக்கு எடுத்துச்செல்வதற்காக ஸாராடோவிலிருந்து சூரியகாந்தி விதை எண்ணெய்ப் பீப்பாயை நாங்கள் படகில் ஏற்றிக்கொண்டு நதியில் சென்றுகொண்டிருந்தோம். புரோக்கைச் சேர்ந்த கிரில்லோ என்னும் போர்மெனும், காஸிமோவிலிருந்து வந்த ஒரு தார்த்தாரியரும்—என் நினைவு சரியாக இருக்குமாயின், அவர் பெயர் ஆஸாப்—எங்களுடன் இருந்தனர். நாங்கள் ஸிக்கூலியை அடைந்ததும் காற்று பலமாக வீசியதால், நாங்கள் தளர்ந்துவிட்டோம். எனவே நாங்கள் நிற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. கூழ் தயார் செய்வதற்காக நாங்கள் கரைக்குச் சென்றோம். அது மே மாதம். வால்கா நதி கடலைப் போன்றிருந்தது. அன்னக் கூட்டங்களைப்போன்று பனித் திவலைகள்

வால்காவில் மிதந்து சென்றன. பச்சைப் பசேலென்ற ஸிக் கூலிக் குன்றுகள் வானம்முட்ட வளர்ந்திருந்தது. அதன் உச்சியில் வெண் மேகங்கள் மேய்ந்தன. சூரியன் பூமிமீது பொன்னைச் சொரிந்துகொண் டிருந்தது. அந்த இன்பத்திலே லயித்திருந்த எங்கள் மனம் உருகிற்று. நதியிலே குளிராக இருந்தது. ஆனல் கரையிலோ உஷ்ணமாக இருந்தது. மாலே யில் எங்களுடன் இருந்த கிரில்லோ—அவர் வயோதிகர்—எழுந்து நின்று, தொப்பியை எடுத்துவிட்டு, எங்களிடம் சொன்னர் : 'நல்லது, பையன்களா ! இனிமேல் நான் உங் கள் எஜமானனுமல்ல, வேலைக்காரனுமல்ல. நீங்கள் தனியே போக வேண்டும் ; நான் காட்டிற்குப் போகிறேன்.' நாங்கள் வாயைப் பிளந்துகொண்டு அசந்து உட்கார்ந்துவிட்டோம். இத்தகைய செய்தியை யார் கேட்டிருக்க முடியும் ? எஜமானன் இல்லே யென்றல் நாங்கள் எப்படிச் செயல்பட முடியும் ? தலேயில்லாது யாராலும் நடக்க முடியாது. அது வால்கா நதிதான் என்றாலும், நாங்கள் வழிதவறிச் செல்லக் கூடும். எல்லா விலங்குகளேயும்விட மனிதன்தான் கட்டுக்கடங்காத விலங்கு. ஒன்றும் அவனைத் திருப்தி செய்யாது. எனவே நாங்கள் பயந்துவிட்டோம். ஆனல் தமது முடிவை அவர் மாற்றவில்லே. 'ஆயனைப் போன்று காலமெல்லாம் உங்களே மேய்த்துக்கொண்டு வாழ நான் விரும்பவில்லே. நான் காட்டிற் குப் போகிறேன்.' அவரை நையப் புடைத்துவிட்டு, கட்டிப் போட எங்களில் சிலர் விரும்பினேம் ; ஆனல் வேறு சிலர் அவர் நினைப்பதைப் போன்று நினைத்தனர். 'நிறுத்துங் கள் !' என்று அவர்கள் கூவினர். 'அவருடன் நானும் போகிறேன்' என்றர் தார்த்தாரியர். இது நிலேமையை மேலும் மோசமாக்கிவிட்டது. இரண்டு நடை பணம் தார்த்தாரியருக்கு முதலாளி கொடுக்கவேண்டி யிருந்தது. இப்பொழுது மூன்று வது நடையில் பாதி பூர்த்தியாகிவிட்டது. இதற்கு அவருக்கு ஏராளமான பணம் கிடைக்கும். இரவுவரையில் நாங்கள் கூச்சலிட்டோம். இரவில் எங்களே—நாங்கள் பதினைந்து பேர் களோ, பதினறு பேர்களோ இருந்தோம்—தனியே விட்டு விட்டு ஏழு பேர்கள் போய்விட்டார்கள். கானகம் மனிதனே எப்படி ஆகர்ஷிக்கிறது, பார்த்தாயா !''

" கொள்ளைக்காரர்களாவதற்காக அவர்கள் கானகத்திற்குச் சென்றார்களா ?"

" கொள்ளைக்காரர்க ளாவதற்காகவோ ரிஷிகளாவதற்காகவோ யிருக்கலாம். அந்த நாட்களில் மக்கள் இரண்டிற்கும் அதிக வித்தியாசம் கற்பிக்கவில்லை."

பாட்டி சிலுவை அடையாளம் வரைந்துகொண்டாள்.

" பரிசுத்த மாதாவே ! ஜனங்களைப்பற்றி நீ நினைக்க ஆரம்பித்தால், உன் நெஞ்சில் உதிரம் கொட்டும்."

"சைத்தான் நம்மை எப்படி ஆகர்ஷிக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளும் அறிவு நமக்கிருக்கிறது."

பட்டுப்போன பெர்ச் மரங்களுக்கும் சதுப்பு நிலத்திற்கும் மத்தியிலிருந்த சேறு நிறைந்த பாதை வழியாக நாங்கள் காட்டிற்குள் நுழைந்தோம். கிரில்லோவைப் போன்று கானகத்தில் பிரவேசிப்பது மிகவும் நல்லது என்று நானும் நினைத்தேன். கானகத்தில் சண்டையிடுவோரும், குடிகாரர்களும், ஊளையிடுவோரும் இருக்க மாட்டார்கள். தாத்தாவின் பேராசையையும், மணலிலுள்ள அம்மாவின் சவக்குழியையும் வேதனையளித்து, மனதைத் துன்புறுத்திய எல்லாவற்றையும் மறந்துவிட்டு அங்கே நிம்மதியாக இருக்க முடியும்.

காய்ந்திருந்த ஒரு இடத்தை நாங்கள் அடைந்ததும் பாட்டி சொன்னாள் :

" சாப்பிட நேரமாய்விட்டது, உட்காருங்கள்" என்று.

கூடையிலிருந்து சொட்டியையும், பச்சை வெங்காயத்தையும், ஊறுகாயையும், உப்பையும், வெண்ணெயையும் பாட்டி வெளியில் எடுத்தாள். தாத்தா அவைகளை இமை கொட்டாது பார்த்தார்.

" நான் ஒன்றும் கொண்டுவரவில்லையே !"

" போதியவை நான் கொண்டுவந்திருக்கிறேன்."

வளர்ந்தோங்கி நின்ற தேவதாரு மரத்தின்மீது சாய்ந்து கொண்டு நாங்கள் உட்கார்ந்தோம். காற்றிலே குங்கிலிய மணம் கலந்திருந்தது; வயலிலிருந்து வீசிய மெல்லிய காற்று, புல்லை அசைத்தது. தமது சுறுசுறுப்பான கரங்களால் மூலிகைகளைப் பாட்டி சேகரித்தாள். அந்த மூலிகைகளின் மகத்துவத்தை எனக்கு விளக்கினாள்.

தாத்தா செடிகளை வெட்டினார். அவைகளை ஒரு இடத்தில் குவித்து வைப்பது என் வேலை; ஆனால் மரங்களுக்கிடையே சென்று, அவ்வப்பொழுது கீழே குனிந்து பூமியைத் தோண்டியவண்ணம் சென்ற பாட்டியைப் பின்தொடர்ந்தேன். நடந்துகொண்டே அவள் தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்:

"இந்த வருடம் காளான்கள் சீக்கிரம் முளைத்துவிட்டன. இந்த வருடம் அதிகக் காளான்கள் இருக்காது என்பது இதன் பொருள். ஏழைகள்மீது நீர் அதிக கவனம் செலுத்தவில்லை, கடவுளே! ஒன்றும் இல்லாதவர்களுக்குக் காளான் கூட உணவாயிற்றே!"

என்னைக் காணக் கூடாது என்பதற்காகச் சந்தடி செய்யாமல் அவளை நான் பின்தொடர்ந்தேன். கடவுளுடனும், தவளைகளுடனும், புல்லுடனும் அவள் பேசுவதைத் தடுக்க நான் விரும்பவில்லை.

ஆனால் அவள் என்னைக் கண்டுவிட்டாள்.

"தாத்தாவிடமிருந்து ஓடிவந்துவிட்டாயா?"

செடிகள் என்னும் பட்டாடையை அணிந்துள்ள கரிய பூமிமீது குனிந்து நின்ற அவள், கடவுளுக்குக் கோபம் பொங்கியதால் உலகத்தை ஜலப்பிரளயமாக்கி, சகல ஜீவராசிகளையும் ஒரு முறை அவர் ஜலத்தில் எப்படி அமிழ்த்தினர் என்பதை அவள் எனக்குச் சொன்னாள்.

"ஆனால் பரிசுத்த மாதா உரிய காலத்தில் எல்லா விதைகளையும் சேகரித்து அவைகளைத் தமது கூடையில் ஒளித்து வைத்துக்கொண்டாள். ஜலப்பிரளயத்திற்குப் பிறகு அவள் சூரியனை அணுகி, சூரியனிடம் சொன்னாள்: 'பெரிய மனது பண்ணி, பூமியை உலரச் செய். அப்படி நீ செய்தால் நல்ல மனிதர்கள் நிரந்தரமாக உன்னைத் துதிப்பார்கள்.' சூரியன் பூமியை உலரச் செய்தான். அதன் பிறகு தாம் ஒளித்துவைத்திருந்த விதைகளைப் பரிசுத்த மாதா விதைத்தாள். கடவுள் பூமியைப் பார்த்தார்: பூமியிலே மீண்டும் புல் முளைத்திருப்பதையும், கால்நடைகளும், மனிதர்களும் நடமாடுவதையும் அவர் கண்டார்! என் எண்ணத்திற்கு மாறாக இப்படிக் காரியம் செய்யத் துணிந்தவர் யார் என்று அவர் கேட்டார். அவள்

தான் செய்ததை ஒத்துக்கொண்டாள். ஆனல் பூமி ஜீவனற்றுக் கிடந்தது அவருக்கு வருத்தத்தை அளித்ததால், அவர் அவளிடம் சொன்னர் : "நீ செய்த காரியம் மிக நல்ல காரியம், தாயே !" என்று.

இந்தக் கதை எனக்குப் பிடித்தது. ஆனல் இது எனக்கு ஆச்சரியத்தை யளித்ததால், நான் சொன்னேன் :

"இது உண்மையில் நடந்ததா ? பிரளயத்திற்கு வெகு காலத்திற்குப் பிறகுதானே கன்னிமாதா பிறந்தாள் ?"

இப்பொழுது பாட்டி ஆச்சரியப்பட்டாள்.

"இந்த விஷயத்தை உனக்கு யார் சொன்னது ?"

"பள்ளிக்கூடத்தில்—புத்தகங்களில் இவ்வாறு எழுதப் பட்டிருக்கிறது."

இதைக் கேட்டு அவள் சாந்தி அடைந்தாள். பிறகு சொன்னள் :

"அதற்குச் செவிமடுக்காதே. புத்தகத்தில் எழுதப்பட்டிருப்பதை மறந்துவிடு. புத்தகத்தில் எழுதப்பட்டிருப்பது பொய்."

அவள் உல்லாசமாகச் சிரித்தாள்.

"இப்படிக் கற்பனை செய்கிறார்களே, முட்டாள்கள் ! மாதா இல்லாமல் கடவுள் இயங்க முடியுமா ? அப்படியானல் கடவுளைப் பெற்றது யார் ?"

"எனக்குத் தெரியாது."

"அதுதான் விஷயம். 'எனக்குத் தெரியாது' என்று சொல்லும் நிலைக்கு உன் படிப்பு வந்திருக்கிறது."

"ஜோக்கிமுக்கும் அன்னவுக்கும் கன்னி பிறந்ததாகப் பாதிரி சொன்னர்."

இதைக் கேட்டு பாட்டி அதிர்ச்சி அடைந்தாள். என்னைக் கடுமையாகப் பார்த்துவிட்டுச் சொன்னள் :

"வேறு விதமாகச் சொல்லுவதானல் கன்னி மரியா ஜோக்கிமோவ்னு ஆவாளா என்ன? இத்தகைய விஷயங்களை நீ மனதால் நினைத்தால்கூட உன் தோலை நான் உரித்து விடுவேன் !"

ஒரு நிமிடத்திற்குப் பிறகு பாட்டி எனக்கு விளக்கினுள் :

" பரிசுத்த கன்னி என்றும் இயங்கினுள்—மற்றவர் களுக்கு முன் அவள் இயங்கினுள். கடவுள் அவளுக்குப் பிறந்தார். பிறகு ....."

" அப்படியானால் இயேசுவின் விஷய மென்ன ?"

கலக்கத்துடன் பாட்டி கண்களை மூடினுள்.

" இயேசு ? ஆம்—இயேசு..."

நான் வென்றுவிட்டதை உணர்ந்தேன். சிருஷ்டியின் ரகசியத்தில் அவளை நான் சிக்க வைத்துவிட்டேன். இது என்னை நிலைகுலைத்தது.

நாங்கள் காட்டிற்குள் மேலும் சென்றோம் ; தங்கமய மான சூரிய ஒளியால் துளைக்கப்பட்ட பனித்திரை மூடிய பகுதியை அடைந்தோம். உஷ்ணமான, அடக்கமான கானகத் திற்கு மட்டுமே உரித்தான ஓசை—மோகன ஓசை—நம்மையும் மயக்கிவிடும். குயில்கள் சிரித்தன ; மாம்பழக் குருவி சீட்டி யடித்தது ; பொறுமைபடைத்த தங்கப்பறவை இடைவிடாது பாடிற்று ; நூதனமான தேவதாரு பறவை சிந்தனையுடன் சுருதி பாடிற்று. பச்சைநிறத் தேரைகள் எங்கள் கால்களுக்கு அடியிலிருந்து தாவித்தாவிக் குதித்தன ; வேர்களுக்கிடையே பதுங்கிக் கிடந்த பாம்பு தன் தங்கமயமான தலையை உயர்த் திற்று. கீச்சிட்டுக்கொண்டிருந்த அணிலின் அழகிய வால் கிளைகளுக்கிடையே தெரிந்தது. காண வேண்டிய அதிசயப் பொருள்கள் ஏராளமாக இருந்தும், இன்னும் அதிகமான பொருள்களைக் காண வேண்டும் என்னும் ஆசை உள்ளத் திலே எழுந்தது.

பெரிய, பேயைப்போன்ற உருவங்கள் தேவதாரு மரங் களின் அடி மரங்களுக்கிடையே தோன்றி நீல வெளியிலே மறைந்தன. அதன் பிறகு நீல, வெண்வானம் தெரிந்தது. நீலக் காய்கள் பின்னப்பட்ட பாசி என்னும் ஜமக்காளம் பூமியை மூடியிருந்தது. ரத்தத்தைப்போன்று புல்லிலே மிளிர்ந் தது முள்ளிக்காய். காளான்களின் வாசனை மூக்கை ஈர்த்தது.

" பரிசுத்தமாதாவே, உலகின் ஒளியே !" என்று நெடு மூச்சுடன் பிரார்த்தனை செய்தாள் பாட்டி.

காடு அவளுக்குச் சொந்தமானதைப் போன்றும், அவள் காட்டுக்குச் சொந்தமானவளைப்போன்றும் தோன்றிற்று.

பெரிய பெண் கரடியைப்போன்று அவள் நடந்தாள்; அனைத்தையும் கண்டாள்; அனைத்தையும் வியந்தாள்; நன்றி செலுத்தும் வார்த்தைகளை முணுமுணுத்தாள். அவள் உள்ளத்திலிருந்து அன்பு சுரந்தது. அவள் கால்பட்டு அமிழ்ந்த பாசி மீண்டும் எழுவதைக் காண எனக்குச் சந்தோஷமாக இருந்தது.

ஒரு குருடனைக் மாறி, பணக்காரர்களிடமிருந்து திருடி ஏழைகளுக்குக் கொடுப்பது சிறந்த பணி என்று எண்ணிக் கொண்டே நான் நடந்தேன். பொறுமையின்றி, நாய்களைப் போன்று, ஒருவரைப் பார்த்து மற்றவர் குரைக்காமல், எல்லோரும் போதிய உணவருந்தி, உல்லாசமாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! எவ்வளவு கேவலமாக ஜனங்கள் வாழுகிறார்கள், எவ்வளவு குரூரமாக ஒருவரை ஒருவர் பயங்கரமான மணலில் புதைக்கிறார்கள் என்னும் உண்மைகளைப் பாட்டியின் கடவுளிடமும், அவளுடைய பரிசுத்த மாதாவிடமும் சொல்லுவது எவ்வளவு நல்ல காரியம்! பூமியிலே தேவையில்லாத துன்பங்கள் இன்னும் எத்தனை இருக்கின்றன! நான் சொல்லுவது உண்மையென்று கன்னி மாதாவுக்குப் பட்டால், நிலைமையை மாற்றும் ஞானத்தை அவள் எனக்கு அளிக்கட்டும்; நான் சொல்லுவதை ஜனங்கள் கேட்கட்டும்; அவர்கள் என்னை நம்பட்டும். நல்வாழ்வு வாழும் வழியை என்னால் நிச்சயமாகக் கண்டுபிடிக்க முடியும்! நான் குழந்தையாக இருந்தால்தான் என்ன? இயேசு சொல்லுவதை அறிவாளிகள் ஆலயத்தில் செவிமடுத்தபொழுது அவருக்கு என்னைவிட ஒரு வயதுதான் அதிகம்.

ஒரு முறை ஆழ்ந்த சிந்தனையிலே லயித்திருந்த நான் ஒரு ஆழமான குழியிலே விழுந்துவிட்டேன். பட்டுப்போன மரக்கிளையிலே என் முதுகும், தலையின் பின் புறமும் உராய்ந்தன. குழியின் அடியிலிருந்த குளிர்ந்த, ஒட்டுகிற சேற்றில், உட்கார்ந்த நான் அதிலிருந்து வெளியேற முடியாது என்பதை அறிந்து வெட்கினேன். கூச்சலிட்டுப் பாட்டியைப் பீதியடையச் செய்ய நான் விரும்பவில்லை யென்றாலும், நான் இப்போது அதைத் தவிர வேறு எதையும் செய்ய முடியாத நிலையில் இருந்தேன்.

நொடிப் பொழுதில் அவள் என்னை வெளியே இழுத்து விட்டாள். பிறகு சிலுவை அடையாளம் வரைந்துகொண்டே அவள் சொன்னதாவது :

" கடவுள் காப்பாற்றினர் ! அது காலிக் குழியாக இருந்ததால் தப்பினாய். அதில் கரடி இருந்திருந்தால் ?"

கண்ணீர் வரும்வரையில் பாட்டி சிரித்தாள். பிறகு அருகிலிருந்த அருவியில் என்னைக் கழுவினாள். காயத்தில் சில இலைகளை வைத்தாள், வலி குறைவதற்காக ; பிறகு தனது ஆடையால் காயங்களைக் கட்டிவிட்டு, அருகிலிருந்த ரயில்வே கார்டின் வீட்டிற்கு என்னை அழைத்துச் சென்றாள். ஏனெனில் நான் பலவீனமாக இருந்ததால், அப்பொழுது வீட்டிற்குச் செல்ல எனக்குச் சக்தி இருக்கவில்லை.

ஏறக்குறைய நாள்தோறும் நான் பாட்டியிடம் சொல்லுவேன் :

" கானகத்திற்குப் போகலாம் " என்று.

அவள் சந்தோஷத்துடன் சம்மதிப்பாள். சரத் கால முடிவுவரையில் நாங்கள் கானகத்திற்குச் சென்று மூலிகைகளும், காய்களும், காளான்களும், கொட்டைகளும் சேகரித்தோம். நாங்கள் சேகரித்தவைகளைப் பாட்டி விற்பாள். அந்தப் பணத்தைக்கொண்டு நாங்கள் வாழ்க்கை நடத்தினோம்.

அவர் உணவை நாங்கள் தொடக்கூட இல்லை. என்றாலும், " இரந்துண்ணுவோம் !" என்று கூச்சலிட்டார் தாத்தா.

கானகம் சாந்தியையும், நல்லெண்ணத்தையும் என் மனதில் தூண்டிவிட்டது. இந்த எண்ணம் என் வேதனையைக் குறைத்தது ; வேதனை தரும் விஷயங்களை மறக்க உதவி புரிந்தது. அதே சமயத்தில் ஊடுருவிப் பார்க்கும் தன்மையை நான் வளர்த்துக்கொண்டேன். பார்வையும், காதும் கூர்மையாயின. ஞாபகசக்தி அதிகரித்தது. அறிவு விரிவடைந்தது.

என் பாட்டிமீது எனக்கிருந்த மதிப்பு மேலும் உயர்ந்தது. மற்றவர்களைவிட என் பாட்டி உயர்ந்தவளென்றும், உலகிலேயே மிகச் சிறந்த அறிவாளி யென்றும், அன்பு நிறைந்தவளென்றும் நான் கருதினேன். எனது இந்த எண்ணத்தைப் பாட்டி அடிக்கடி ஊர்ஜிதம் செய்தாள்.

ஒரு நாள் மாலை காளான்கள் சேகரித்துக்கொண்டு நாங்கள் வீடு திரும்பிய சமயம், கானகத்தின் எல்லையை நெருங்கிக்கொண் டிருந்தோம். பாட்டி இளைப்பாற அங்கே உட்கார்ந்தாள். இன்னும் சில காளான்கள் கிடைக்கலாம் என்னும் ஆசையுடன் நான் அப்பால் சென்றேன்.

திடீரென்று அவள் குரல் எனக்குக் கேட்டது. எனவே நான் அவள் உட்கார்ந்திருந்த பக்கம் பார்வையைச் செலுத் தினேன். பாதையில் அமைதியாக உட்கார்ந்தவாறு காளான்களின் வேர்களைப் பாட்டி அப்புறப்படுத்திக்கொண் டிருந்தாள். அவளுக்கு அருகில் மெலிந்த பழுப்புநிற நாய் நாக்கை வெளியே தொங்கவிட்டுக்கொண்டு நின்றுகொண் டிருந்தது.

" போய்விடு, போய்விடு, இது நல்ல மிருகம் " என்று அவள் சொல்லிக்கொண் டிருந்தாள். " போய்விடு, கடவுள் உனக்குத் துணைபுரியட்டும்."

சில தினங்களுக்கு முன் வால்யோக் என் நாய்க்கு விஷம் கொடுத்துவிட்டான். எனவே, இந்த நாயை ஆகர் ஷித்து, என்னுடன் வருமாறு செய்ய நான் விரும்பினேன். நான் பாதையை நோக்கி ஓடினேன். தலையைத் திருப்பாமல் நாய் நூதனமாக வளைந்தது. நிதானமான, வெறித்த நீலக் கண்களால் என்னை ஏறிட்டுப் பார்த்தது. கால்களுக்கிடையே வாலை மடக்கிக்கொண்டு காட்டிற்குள் தாவி மறைந்தது. அது நாயின் பாய்ச்சலல்ல. நான் சீட்டி அடித்ததும் அது வேக மாகப் புதரில் பாய்ந்தது.

" அதைப் பார்த்தாயா ?" என்று புன்முறுவலுடன் கேட்டாள் பாட்டி. "முதலில் இது நாயென்று நான் நினைத் தேன். ஓநாயைப் போன்று அதற்கு நகமும், கழுத்தும் இருந்தன. நான் பயந்துவிட்டேன். அதை உற்றுப் பார்த்து நான் சொன்னேன்: நீ ஓநாயாக இருந்தால் உடனே போய்விடு! என்று. அதிர்ஷ்டவசமாக வேனிற் காலத்தில் ஓநாய்கள் சாந்தமாக இருக்கும்."

கானகத்தில் அவளுக்கு வழி தவறியதே இல்லை. எப் படியும் அவள் வீட்டிற்குச் செல்லும் வழியைக் கண்டுபிடித்து விடுவாள். மூலிகைகளின் வாசனையிலிருந்து அந்த இடத்தில்

முளைக்கும் காளான் எப்படிப்பட்டது, வேறொரு இடத்தில் முளைக்கும் காளான் எப்படிப்பட்டது என்பதையும் அவள் கண்டுபிடித்துவிடுவாள். அடிக்கடி அவள் என் அறிவைச் சோதிப்பாள் :

" எந்த மரத்தடியில் சிவப்புக் காளான் முளைக்கும் ? ஸிரோயெஷ்கா என்கிற காளான் நல்லதா, விஷம் உள்ளதா என்பதை எப்படி நீ சொல்லுவாய் ? எத்தகைய காளான் கேசபத்திரிக்கு அடியில் ஒளிந்திருக்கும் ?"

அடிமரத்தில் ஒரு சிறிய கீறல் இருந்தால்கூட அவள் அணிலின் பொந்தைக் கண்டுபிடித்துவிடுவாள். மரத்தின் மீது நான் ஏறி, குளிர் காலத்திற்காக அணில்கள் சேகரித்து வைத்திருக்கும் கொட்டைகளைக் காலி செய்துவிடுவேன். சில சமயங்களில் பத்துப் பவுண்டு கொட்டைகள் அங்கே சேமித்து வைக்கப்பட்டிருக்கும்.

ஒரு நாள் நான் இந்த வேலையில் ஈடுபட்டிருந்த பொழுது ஒரு வேடன் இருபத்து ஏழு ரவைகளை என் தேகத்தின் வலது பக்கத்தில் செலுத்தினான். அவைகளில் பதினொரு ரவைகளை ஒரு ஊசியால் பாட்டி வெளியே எடுத்தாள் ; எஞ்சிய பதினாறு என் தேகத்திலேயே இருந்து, காலப்போக்கில் தானாகவே வெளியே வந்தன.

வேதனையை நான் விருப்பு வெறுப்பின்றிச் சகித்ததைக் கண்டு, பாட்டி திருப்தி அடைந்தாள்.

" நல்ல பையன் " என்றாள் பாட்டி. " வேதனையைத் தாங்குவது, போரிலே வெற்றிபெற்ற மாதிரி !"

காளான்களையும், கொட்டைகளையும் விற்று என்னைக் காவது ' அதிக பணம் கிடைத்தால் ' அன்று ஜன்னல் படியில் " கருணைத் தொகையை " அவள் செலுத்துவாள். அதே சமயத்தில் விடுமுறை நாட்களில்கூடக் கந்தலை அணிந்து கொண்டு அவள் நடமாடுவாள்.

" பிச்சைக்காரியைவிடக் கேவலமாகத் தோற்றமளிக் கிறாய். இது எனக்கு அவமானமாக இருக்கிறது " என்று முணுமுணுத்தார் தாத்தா.

" அதைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். நான் உங்கள் மகளோ, கணவனை எதிர்நோக்கும் கன்னியோ அல்ல."

அவர்கள் அடிக்கடி சண்டைபோட்டுக்கொள்ள ஆரம்பித்தனர்.

" மற்றவர்களைவிட அதிகமாக நான் பாவம் செய்துவிடவில்லை " என்று புண்பட்ட குரலில் சொன்னார் தாத்தா. " எனினும், எனக்கு மிகக் கொடிய தண்டனை கொடுக்கப்படுகிறது."

பாட்டி தாத்தாவைக் கேலி செய்வாள் :

" ஆண்களுடைய தகுதி என்ன என்பது சைத்தானுக்குத்தான் தெரியும் " என்று தனிமையில் எனக்கு விளக்குவாள் பாட்டி. " கிழவனுக்குச் சைத்தான் என்றால் சொம்பப் பயம். பயத்தால் அவர் எப்படிக் கிழவனாய்விட்டார், பார் ! நானே ஒரு ஏழைப் பிரகிருதி !"

அந்த வேனிற் காலத்தை நான் கானகத்தில் கழித்ததால் என் தேக பலம் அதிகரித்தது. அதே சமயத்தில் மனிதனுடன் பழக முடியாதவனாகவும் என்னை மாற்றிவிட்டது. கானகம், என் விளையாட்டுத் தோழர்களிடம் எனக்கு இருந்த சிரத்தையை மறைத்தது ; ஓட்மிலாமீது எனக்கிருந்த கவர்ச்சியும் குறைந்தது. அவள் சாமர்த்தியம் இப்பொழுது எனக்குச் சலிப்பைத் தந்தது.

ஒரு நாள் சொட்டச் சொட்ட மழையில் நனைந்து கொண்டு தாத்தா நகரத்திலிருந்து திருப்பினர். அது சரத் காலம். மழை பெய்துகொண்டிருந்தது. குருவி சிலிர்ப்பதைப்போன்று சிலிர்த்துவிட்டு, வாசற்படியில் நின்றவாறே வெற்றிக் குரலில் அவர் சொன்னார் :

" சோம்பேறிப் பையா, நாளை நீ வேலைக்குச் செல்ல வேண்டும் !"

" எங்கே ?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள் பாட்டி.

" உன் சகோதரி மாட்ரியோனா வீட்டிற்கு ; அங்கே அவள் மகனிடத்தில் இவன் வேலை செய்ய வேண்டும்."

" உங்கள் முடிவு சிறந்த முடிவல்ல, தந்தையே !"

" பேசாதிரு, மூட்டாள் ! ஒருக்கால் அவர்கள் இவனை டிராப்ட்ஸ்மேனாக்கலாம்."

ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் பாட்டி தலையைக் குனிந்துகொண்டாள்.

நான் நகரத்தில் வசிக்கப் போவதாக அன்று மாலை லட்மிலாவிடம் சொன்னேன்.

"விரைவில் என்னையும் நகரத்திற்கு அழைத்துச் செல்லப் போகிறார்கள்" என்று சிந்தனையில் ஆழ்ந்தவாறே அவள் பதில் சொன்னாள். "என் காலை வெட்டிவிட வேண்டும் என்று அப்பா சொல்லுகிறார். என் காலை வெட்டினால், நான் குணமடைந்துவிடுவேனும்."

வேனிற் காலத்தில் அவள் மெலிந்துவிட்டாள். அவள் முகம் வெளிறியிருந்தது. அவள் கண்கள் அகன்றிருந்தன.

"உனக்குப் பயமாக இருக்கிறதா?" கேட்டேன்.

"ஆம்" என்று சொல்லி, அவள் அழ ஆரம்பித்தாள்.

அவளைச் சமாதானப்படுத்த நான் என்ன சொல்ல குடியும்? நகர வாழ்க்கை எனக்கும் பயமளித்தது. நீண்ட நேரம் நாங்கள் இருவரும் மௌனமாக மிக நெருங்கி உட்கார்ந்திருந்தோம்.

அது வேனிற் காலமாக இருந்திருந்தால் சிறுமியாக இருந்தபொழுது பிச்சை யெடுத்ததைப்போன்று அப்பொழுதும் பிச்சையெடுக்குமாறு நான் பாட்டியைத் தூண்டியிருப்பேன். லுட்மிலாவையும் நாங்கள் அழைத்துச் சென்றிருப்போம். ஒரு சிறிய வண்டியில் அவளை உட்காரவைத்து நான் வண்டியை இழுத்திருப்பேன்.

ஆனால் அது சரத் காலம். குளிர்காற்று எங்கும் வீசிற்று. வானத்தை மேகங்கள் மறைத்தன. பூமி நனைந்து, இருண்டது

4

மீண்டும் எனக்கு நகர வாழ்க்கை தொடங்கியது. பலரை அடக்கம் செய்வதற்காகச் செய்யப்பட்ட சவப்பெட்டியைப் போன்று தோற்றமளித்தது, நான் வசித்த இரண்டடுக்கு வெள்ளைக் கட்டிடம். கட்டிடம் புதிது; எனினும் அதை நோய் பீடித்திருந்த மாதிரி இருந்தது. பிச்சைக்காரனுக்குத் திடீரென்று பொக்கிஷம் கிடைத்தால் அவன் எப்படி உப்பு வானை அதே மாதிரி அந்தக் கட்டிடம் உப்பியிருந்தது. வீதியின் பக்கவாட்டில் இருந்தது அந்தக் கட்டிடம். வீதிப்

பக்கம் ஒவ்வொரு மாடிக்கும் எட்டு ஜன்னல்களும், முகப்புப்பக்கம் ஒவ்வொரு மாடிக்கும் நான்கு ஜன்னல்களும் இருந்தன. கீழ்ப் பக்கத்து ஜன்னல்கள் கொல்லைப் பக்கத்தில் இருந்தன. மேல் பக்கத்து ஜன்னல்கள் அசுத்தமான இடுக்கு வழிப் பக்கம் இருந்தன.

வீதி என்று சொல்லுவதற்கு அங்கே வீதி இருக்கவில்லை. வீட்டிற்கு முன் இந்த அசுத்தமான இடுக்கு வழி இருந்தது. அதற்குக் குறுக்கே இரண்டு இடங்களில் குறுகலான அகழி இருந்தது. இடது புறம் கைதிகளின் காலனி இருந்தது. அதற்கு அருகில் வீட்டுக்காரர்கள் குப்பைக் கூளங்களைக் குவித்தனர். இடுக்கு வழியின் வலது புறம் அழுக்குப் படிந்த ஸ்வெஸ்டின் குட்டையில் முடிந்தது. இடுக்கு வழியின் மத்திய பாகம் எங்கள் வீட்டிற்கு எதிரில் இருந்தது. அதில் பாதி குப்பைகளால் நிறைந்திருந்தது. மறு பாதியை, பாதிரி டோரிமெடோன்ட் பாக்ரோவ்ஸ்கி ஒரு நந்தவனமாக மாற்றியிருந்தார். நந்தவனத்திலே பச்சைச் சட்டத்தால் நிர்மாணிக்கப்பட்ட ஒரு வேனிற்கால மண்டபம் இருந்தது. அதன்மீது கல்லை எறிந்ததும் அது ஒடிந்தது.

அந்த இடம் மந்தமாகவும், அசுத்தமாகவும் இருந்தது. சரத்காலம், சேறை சிவப்புத் தாராக மாற்றியிருந்தது. இரக்கமின்றி அது கால்களில் ஒட்டிக்கொண்டது. அத்தனை சிறிய இடத்தில் அவ்வளவு அதிக குப்பையை இதற்கு முன் நான் கண்டதே இல்லை. பரிசுத்தமான வயல்களிலும், கானகத்திலும் நடமாடிப் பழகிய எனக்கு நகரின் இந்த அசுத்தமான மூடுக்கு விவரிக்க முடியாத வேதனையை அளித்தது.

இடுக்கு வழிக்கு அப்பால் தொறுங்கிய வேலி நீண்டு நின்றது. பூட்ஸ் கடையில் நான் வேலை செய்தபொழுது வசித்து வந்த வீடு அங்கே தெரிந்தது. அந்த வீட்டிற்கு அருகிலேயே மீண்டும் வசிக்கிறேன் என்னும் உணர்ச்சி எனக்கு மேலும் அதிக வேதனையை அளித்தது. அந்த வீதியிலேயே நான் மீண்டும் ஏன் வசிக்க வேண்டும் ?

என் புதிய எஜமானரை முன்னரே எனக்குத் தெரியும். அவரும், அவர் சகோதரரும் என் அம்மாவைப் பார்க்க

முன்னர் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தனர். அவர் சகோதரர் தான் வேடிக்கையாக அழைத்தார் :

" ஆன்ட்ரி அப்பா, ஆன்ட்ரி அப்பா !" என்று.

அவர்கள் இருவரும் சிறிதுகூட மாறியிருக்கவில்லை. சப்பையான மூக்கும், நீண்ட மயிரும் படைத்த மூத்தவர் உல்லாசமானவராகவும், இளகிய மனம் படைத்தவராகவும் இருந்தார். இளையவர் விக்டர், அதே குதிரை முகம் படைத்தவராகவும், அதே வடுக்கள் படைத்தவராகவும் இருந்தார். அவர்களின் தாயார் என் பாட்டியின் சகோதரி. ஆனால் அவள் சொம்பக் கூச்சலிட்டாள் ; முன்கோபக்காரியாகவும் இருந்தாள். மூத்தவரின் மனைவி கருவிழிகள் படைத்தவளாகவும், சொட்டையைப்போன்று பருமனுகவும் இருந்தாள்.

ஆரம்ப நாட்களில் இரு முறை அவள் என்னிடம் சொன்னுள் :

" உன் அம்மாவுக்கு நான் பட்டாடை கொடுத்தேன்."

அவள் என் அம்மாவுக்குப் பரிசு கொடுத்ததையும், என் அம்மா அதை வாங்கிக்கொண்டதையும் நான் நம்ப விரும்பவில்லை. மற்றொரு தரம் அவள் இதை என்னிடம் பிரஸ்தாபித்தபொழுது நான் சொன்னேன் :

" நீங்கள் பரிசு கொடுத்தால், அதைப்பற்றி எதற்காகப் பெருமையடித்துக்கொள்ளுகிறீர்கள் ?"

ஆச்சரியத்துடன் அவள் பின்வாங்கினுள்.

" என்ன ? நீ என்ன பேசுகிறுய் என்பது உனக்குத் தெரிகிறதா ?"

அவள் முகம் சிவந்தது. கண்களே உருட்டிவிட்டு, தன் கணவனே அவள் அழைத்தாள்.

கையில் ஒரு ஜதை காம்பசுடனும், காதில் பென்சிலே சொருகிக்கொண்டும் அவர் குசினிக்கு வந்தார். தனது மனைவி சொன்னதைக் கேட்டுவிட்டு அவர் என்னிடம் சொன்னர் :

" நீ அதிகப் பிரசங்கியாக இருக்கவே கூடாது."

பிறகு பொறுமையிழந்து, தனது மனைவியைப் பார்த்துச் சொன்னர் :

"இத்தகைய முட்டாள்தனமான விஷயங்களைச் சொல்லி என்னைத் தொந்தரவு செய்யாதே!"

"முட்டாள்தனம் என்று நீங்கள் எப்படிச் சொல்லலாம்? உங்கள் சொந்தக்காரி..."

"என் சொந்தக்காரி நாசமாய்ப் போகட்டும்!" என்று கூவிவிட்டு, அவர் வெளியே பாய்ந்தார்.

இந்த மணிதர்கள் பாட்டியின் உறவினர்கள் என்னும் உண்மை எனக்கு அருவருப்பை அளித்தது. எனக்குத் தெரிந்தவரையில், அறிமுகமில்லாதவர்களைவிட உறவினர்கள் ஒருவரை ஒருவர் கேவலமாக நடத்தினர்; பரஸ்பர பலவீனங்களையும், கேவலமான தன்மைகளையும் தெரிந்துகொண்டிருக்கும் உறவினர்கள், மோசமான வதந்திகளைப் பரப்பினர்; அடிக்கடி சண்டை போட்டுக்கொண்டனர்.

என் எஜமானரை எனக்குப் பிடித்தது. அலட்சியமாகத் தமது கூந்தலைப் பின்னுக்குத் தள்ளுவதும், பிறகு அதைக் காதுக்குப் பின்னே தள்ளுவதும் அழகாக இருந்தது. எக் காரணத்தாலோ, "இது மிக நேர்த்தி" என்பவரை அவர் நினைவூட்டினர். அடிக்கடி அவர் வாய்விட்டுச் சிரித்தார். அத்தகைய சந்தர்ப்பங்களில் அவரது பழுப்புநிறக் கண்கள் ஒளிவீசும்; அவர் பருந்து மூக்கைப்போன்ற மூக்கின் இரு புறமும் சுருக்கங்கள் விழும்.

"சண்டையிட்டது போதும், சண்டைக் கோழிகளா" என்று புன்முறுவல் புரிந்துகொண்டே தன் தாயாரிடமும், மனைவியிடமும் அவர் சொல்லுவார்.

தினசரி அந்த இரண்டு பெண்களும் சண்டையிட்டுக் கொண்டனர். அவ்வளவு சீக்கிரம் அவர்களுக்குக் கோபம் வருவதைக் காண எனக்கு ஆச்சரியமாக இருந்தது. வீடு தீப்பற்றி எரிவதைப்போன்று அந்த இரண்டு பெண்களும் காலையிலிருந்து அறைக்கு அறை பாய்ந்து செல்வர். நாள் முழுதும் அவர்கள் படபடப்புடன் நடமாடினர். சாப்பாட்டு நேரத்தில் மாத்திரம்தான் அவர்கள் உட்காருவார்கள். வயிறு முட்ட அவர்கள் உண்டனர்; குடித்தனர். சாப்பாட்டு நேரத்தில் அவர்கள் உணவைப்பற்றி விவாதிப்பர். பெரிய சண்டைக்கு முன்னோடியாக அப்பொழுது நிதானமாக

வார்த்தைகளே அள்ளி வீசுவர். மாமியார் எதைச் சமைத்தாலும் மாட்டுப் பெண் சொல்லுவாள் :

" அம்மா இப்படிச் சமைக்கவே மாட்டாள்."

" அப்படியானால் அது ருசியற்றதாக இருக்கும்."

" இல்லை—அது அதிக ருசியாக இருக்கும் !"

" அப்படியானால் நீ உன் அம்மாவுடன் இருந்துவிடுவது தானே ?"

" இங்கே நான்தான் எஜமானி !"

" நான் யாரென்று நீ நினைத்தாய் ?"

" போதும், சண்டைக் கோழிகளா !" என்பார் கணவன். " என்ன சங்கதி—உங்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா ?"

வீட்டில் எல்லாம் நூதனமாகவும், நகைக்கத் தக்கதாகவும் இருந்தன. குசினியிலிருந்து சாப்பாட்டு அறைக்குச் செல்லவேண்டுமானால், அந்த வீட்டிலிருக்கும் ஒரே சின்னஞ் சிறிய கக்கூசைக் கடந்து செல்லவேண்டும். இந்த அறை வழியாகத்தான் உணவு எடுத்துச் செல்லப்பட்டது. கேலிக்கும், வேடிக்கையான நிகழ்ச்சிகளுக்கும் இது இடமளித்தது. கக்கூசிலிருந்த டாங்கில் ஜலம் நிரப்புவது என் வேலைகளில் ஒன்று. கக்கூசுக்கு எதிரிலிருந்த குசினியில் நான் தூங்கினேன். குசினி அடுப்பிலிருந்து எழுந்த சூடு என் தலையை மேலும் சூடாக்கிற்று. வெளிக் கதவிலிருந்து வீசிய குளிர் காற்றால் என் கால்கள் விறைத்தன. படுக்கும்பொழுது தரையில் விரித்திருந்த பாய்களே யெல்லாம் திரட்டி, என் கால்களின்மீது குவித்துக்கொண்டேன்.

கூடம் கவர்ச்சியற்றிருந்தது. இரண்டு நிலைக்கண்ணாடிகளும், இரண்டு அட்டை மேஜைகளும், பன்னிரண்டு நாற்காலிகளும், ' நீவா ' மாசிகைக்குச் சந்தா செலுத்தியதால் கிடைத்த கில்ட் சட்டம் போட்ட படங்களும் அங்கே இருந்தன. சிறிய மண்டபத்தில் மாட்டுப் பெண் சீராகக் கொண்டு வந்த வெள்ளிப் பாத்திரங்களும், டீ செட்டுகளும் நிறைந்த ட்ரேவும், வர்ணம் தீட்டப்பட்ட நாற்காலிகளும் நிறைந்திருந்தன. ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டுக்கொண்டு எரிந்த மூன்று விளக்குகள் இவைகளுக்குச் சிகரம் வைத்தாற்

போன்றிருந்தன. ஜன்னலற்ற படுக்கை அறையில் பெரிய மெத்தையும், டிரங்குகளும், உடைகளும் இருந்தன. புகை யிலை வாசனை அங்கிருந்து வீசிற்று. இந்த மூன்று அறை களும் சதா காலியாகவே இருந்தன. அதே சமயத்தில் குடும் பத்தார் சிறிய சாப்பாட்டு அறையில் சதா நெருங்கி உட்கார்ந் தனர். இதனால் ஒருவருக்கொருவர் இடஞ்சல் ஏற்பட்டது. காலைச் சிற்றுண்டி எட்டு மணிக்கு முடிந்ததும், கணவனும், அவர் சகோதரரும் மேஜைமீது காகிதங்களை விரித்துவிட்டு, வரையும் கருவிகளையும், பென்சில்களையும், இங்கி நிறைந்த ஸாஸர்களையும் கொண்டுவருவர். பிறகு மேஜையின் ஓரத்தில் ஒருவரும், அவருக்கு எதிரில் மற்றவரும் உட்கார்ந்து வேலை செய்ய முற்படுவர். மேஜை அசைந்தாடிற்று. அறை பூராவை யும் மேஜை அடைத்துக்கொண்டு கிடந்தபடியால் என் சின்ன எஜமானியும், குழந்தையின் தாதியும் ஆஸ்பத்திரியிலிருந்து வந்ததும், அவர்கள் அதில் நிச்சயமாகத் தடுக்கி விழுவார்கள்.

" தொந்தரவு செய்யாமல் இருக்கக் கூடாதா ?" என்று அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் விக்டர் கூவினர்.

வேதனை அடைந்த முகத்துடன் தனது கணவனைப் பார்த்துவிட்டு அவள் சொன்னாள் :

" வாஸ்யா, என்னிடம் கூச்சலிடாம லிருக்குமாறு சொல்லுங்கள்."

" அப்படியானால் மேஜையை அசைக்காதே " என்று சாந்தமாகக் கணவன் உபதேசம் செய்தான்.

" நான் கர்ப்பிணி. இங்கே ஏதாவது கூட்டம்."

" நல்லது. நாங்கள் கூடத்தில் உட்கார்ந்துகொண்டு வேலை செய்கிறோம்."

" கடவுளே ! கூடத்தில் உட்கார்ந்துகொண்டு வேலை செய்வதைப்பற்றி இதுவரையில் யாராவது கேள்விப்பட்ட துண்டா ?"

கக்கூஸ் கதவருகில் என் பெரிய எஜமானி மாட்ரியோனு இவானேவ்னாவின் முகம் தெரிந்தது. அடுப்படியில் வேலை செய்ததால் அவள் முகம் பீட்ரூட் போல் சிவந்திருந்தது.

"அவள் சொல்லுவதைக் கேளுங்கள், வாஸ்யா" என்று அவர் கூவினாள். " விரல்கள் வலிக்குமாறு நீங்கள் இங்கே

வேலை செய்கிறீர்கள். தனது நாய்க்குட்டிகள் நடமாட நான்கு அறைகள் போதா தென்று இவள் சலித்துக்கொள்ளுகிறாள் ! மூளையே இல்லாத ஒரு இளவரசியை நீ மணந்திருக்கிறாய் !''

கேலியாகச் சிரித்தார் விக்டர்.

''போதும் இத்தகைய பேச்சு'' என்று அவள் கணவர் கூவினர்.

ஆனால் தனது மாமியாரை ஒரு மூச்சு திட்டிவிட்டு மேஜையில் இடறி விழுந்தாள் அவள். முனகிக்கொண்டே அவள் சொன்னாள் :

''நான் போய்விடுகிறேன் ! நான் இறந்துவிடுகிறேன் !''

''என் வேலையில் குறுக்கிடுகிறாயே, நீ நாசமாய் போக !'' என்று வேலையால் கலைத்த கணவன் கூச்சலிட்டார். ''இது பைத்தியக்கார ஆஸ்பத்திரி. உனக்கும் ஊளையிடும் உன் குஞ்சுகளுக்கும் உணவளிப்பதற்காகத்தானே நான் முதுகு முறியுமாறு வேலை செய்கிறேன் !''

முதலில் இந்தச் சண்டைகள் என்னைப் பீதி அடையச் செய்தன. ஒரு நாள் மனைவி சொட்டி அறுக்கும் கத்தியை எடுத்துக்கொண்டு, கக்கூசுக்குச் சென்று கதவை உள்ளே தாளிட்டுவிட்டு, பயங்கரமாகக் கூச்சலிட ஆரம்பித்ததும் நான் சொம்பப் பயந்துவிட்டேன். ஒரு நிமிடம் எங்கும் அமைதி நிலவிற்று. பிறகு கதவை நோக்கி ஓடினர் கணவர். குனிந்து அவர் கதவைத் தள்ளினர்.

''மேலே ஏறு ! ஜன்னலை உடைத்து, தாழ்ப்பாளைத் திற !'' என்று என்னிடம் சொன்னர்.

நொடிப்பொழுதில் நான் அவர் முதுகிலேறி, கதவுக்கு மேலே இருந்த கண்ணாடியை உடைத்துவிட்டேன். ஆனால் தாழ்ப்பாளைத் திறக்க நான் முயன்றபொழுது, கத்திப்பிடியால் மனைவி என் தலையில் அடித்தாள். எனினும் நான் தாழ்ப் பாளைத் திறந்துவிட்டேன். உடனே கணவர் உள்ளே பாய்ந்து சென்று தன் மனைவியைச் சாப்பாட்டு அறைக்கு இழுத்துச் சென்று அவள் கையிலிருந்த கத்தியைப் பிடுங்கினர். அடி பட்ட தலையைத் தடவிக்கொண்டு நான் குசினியில் உட் கார்ந்துகொண் டிருந்தபொழுது, என் நியாகம் வீண் என் பதை நான் உணர்ந்தேன். ஏனெனில் அந்தக் கத்தி கழுத்தை

அறுக்காது என்பது மாத்திர மல்ல, வெண்ணெயைக்கூட அறுக்காது. என் எஜமானரின் முதுகில் ஏறியிருக்க வேண்டிய அவசியமும் இல்லை. ஒரு நாற்காலிமீது நின்றுகொண்டு எளிதில் ஜன்னல் கண்ணாடியை உடைத்திருக்கலாம். வயதானவரின் கை நீளமாதலால், எளிதில் நின்றவாறே அவர் தாழ்ப்பாளைத் திறந்திருக்கலாம். அதன் பிறகு அந்த வீட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கண்டு நான் பயப்படவில்லை.

அந்தச் சகோதரர்கள் சர்ச்சு சங்கீதக் குழு அங்கத்தினர்கள். சில சமயங்களில் வேலை செய்துகொண்டே அவர்கள் மெதுவாகப் பாடுவார்கள்.

சிசு விடுதியிலிருந்து என் சின்ன எஜமானியின் தணிந்த குரல் கேட்கும்.

"உங்களுக்குப் பைத்தியமா? குழந்தை உறங்குவது உங்களுக்குத் தெரியாதா?"

அல்லது :

"நீங்கள் மணமானவர், வாஸ்யா. எனவே நீங்கள் பருவமங்கைகளைப் பற்றிப் பாடுவது உங்கள் தரத்திற்கு உகந்ததல்ல. மேலும், விரைவில் கோயில் மணி அடிக்கும்."

"அப்படியானால் கோயில் பாட்டுப் பாடுகிறேன்."

கோயில் பாட்டை கண்ட இடத்திலெல்லாம் பாடக் கூடாது என்றும், குறிப்பாக இந்த இடத்தில் (கக்கூஸ் கதவை சுட்டிக் காட்டிக்கொண்டு)பாடக் கூடாது என்று என் எஜமானி வற்புறுத்தினாள்.

"இது மிக மோசமானது" என்று என் எஜமானர் உறுமுவார். "விரைவில் நான் வேறு வீட்டிற்குச் சென்று விட வேண்டும்."

இதே போன்றுதான் புதிய மேஜை விரைவில் வாங்க வேண்டுமென்று அவர் சொல்லுவார். ஆனால் மூன்று வருடங்களாக அவர் இதைச் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார்.

தங்கள் அண்டை வீட்டுக்காரர்களைப்பற்றி இவர்கள் வம்பளப்பதைக் கேட்கும்பொழுது எனக்குப் பூட்ஸ்கடையில் நடந்த வம்புப் பேச்சு நினைவிற்கு வந்தது. நகரிலேயே தாங்கள்தான் சிறந்தவர்கள் என்று என் எஜமானர்களும் கருதிக் கொள்ளுகிறார்கள் என்பது எனக்குத் தெளிவாகத் தெரிந்தது.

சரியாக எப்படி நடக்க வேண்டும் என்ற விதிகளெல்லாம் இவர்களுக்குத் தெரியும்; இந்த விதிகளின்படி அவர்கள் மற்றவர்களை இரக்கமின்றி விமர்சனம் செய்தனர். இந்த விதிகள் எனக்குப் புரியவே இல்லை. மற்றவர்களை விமர்சனம் செய்யும் இந்தக் குணம் எனக்குப் பிடிக்கவில்லை. எனவே இவர்கள்மீது எனக்கு வெறுப்பு ஏற்பட்டது; விதிகள்மீதும் எனக்கு வெறுப்பு ஏற்பட்டது. இந்த விதிகளை மீறுவதிலே எனக்குப் பரம திருப்தி.

நான் கடுமையாக வேலை செய்ய வேண்டியிருந்தது. வேலைக்காரி செய்ய வேண்டிய காரியங்களை எல்லாம் நான் செய்ய வேண்டியதாக இருந்தது. குசினித் தரையைச் சுத்தம் செய்ய வேண்டும்; புதன்கிழமைதோறும் சாமோவார் அடுப்பையும் பித்தளைப் பாத்திரங்களைத் துலக்க வேண்டும்; சனிக்கிழமை வீடு பூராவையும் இரண்டு மாடிப் படிகட்டுகளையும் கழுவிச் சுத்தம் செய்ய வேண்டும். நான் விறகு வெட்டினேன்; தட்டுகளைக் கழுவினேன்; காய் கறிகளைச் சுத்தம் செய்தேன்; கூடைகளைச் சுமந்து வருவதற்காக எஜமானியுடன் மார்க்கெட்டுக்குச் சென்றேன். மளிகைக் கடைக்கும், மருந்துக் கடைக்கும் சென்றேன்.

என் பெரிய எஜமானி—கூச்சலிடும் சுபாவமும் முன் கோபமுள்ள என் பாட்டியின் சகோதரி—காலை ஆறு மணிக்கு எழுந்துவிடுவாள். முகத்தைக் கழுவிவிட்டு, நீண்ட நேரம் சிலுவைக்கு முன்னே அமர்ந்து கடவுளிடம் தனது குறைகளை—தனது வாழ்க்கையைப்பற்றி, தன் புதல்வர்களைப் பற்றி, தன் மருமகளைப்பற்றி—முறையிடுவாள்:

"கடவுளே! நான் உன்னை எதையும் கேட்கவில்லை; உன்னிடம் சாந்தியை மாத்திரம்தான் கேட்கிறேன். உன் மனம் குளிர்ந்தால் எனக்குச் சாந்தியைக் கொடு" என்று தனது விரல்களால் உச்சந் தலையை தொட்டுக்கொண்டு அவள் இரைஞ்சுவாள்.

அவள் போட்ட கூச்சல் என்னைத் தூயிலெழுப்பிற்று. உணர்ச்சி பூர்வமான அவள் பிரார்த்தனையைப் பீதியுடன் கேட்டுக்கொண்டு, படுக்கையில் படுத்துக்கொண்டிருந்தேன். மழை கழுவிவிட்ட குசினி ஜன்னல் மூலம் மங்கலான சாத

காலசூரியன் உள்ளே எட்டிப் பார்த்தது; குளிர்ந்த பிரபாதத்தில் குளிந்துகொண்டு வேகமாகச் சிலுவை அடையாளம் வரைந்துகொண்ட அவளின் உருவம் மங்கலாகத் தெரிந்தது. கைக்குட்டை அவள் தலையிலிருந்து நழுவிற்று. தோள்மீது அவள் கூந்தல் அசைந்தாடிற்று. கைக்குட்டையை இடது கையால் சரிப்படுத்திக்கொண்டு அவள் முணுமுணுத்தாள் :

" நாசமாய்ப்போகிற இந்தத் துணி !" என்று.

தனது உச்சந் தலையையும், தோள்களையும், வயிற்றையும் சிலுவை அடையாளம் வரைந்தவாறு வேகமாக அசைத்துக் கொண்டு, தனது மனுவைக் கடவுளிடம் சமர்ப்பித்தாள் : "கடவுளே ! நீ என்னை நேசித்தால், என் மருமகளைத் தண்டியும். என்னை அவமதிக்கும் அவளுக்குத் தகுந்த பாடம் கற்பியும் ! என் மகனின் கண்களைத் திறந்துவிடும். அவள் உண்மை உருவத்தை அவன் காணட்டும். விக்டரின் மனைவியையும் அவன் காணட்டும். கடவுளே ! விக்டருக்கும் உதவி புரியும். அவன்மீது உமது கருணையைக் காட்டும்."

உயரமான பலகைமீது விக்டர் குஷினியில் படுத்துக் கொண்டிருந்தார். அவர் அன்னையின் முறையீடு அவரைத் தூக்கத்திலிருந்து எழுப்பிற்று. தூக்கக் கலக்கத்துடன் அவர் சொன்னார் :

" இந்த நேரத்தில் மீண்டும் ஊளையிட ஆரம்பித்துவிட்டாள் ! சொம்பப் பொல்லாதவள், அம்மா நீ !"

" பேசாமல் தூங்கு " என்று, மன்னிப்புக் கேட்கும் முறையில் அவர் அன்னை தணிந்த குரலில் சொன்னாள். ஒன்றிரண்டு நிமிடங்கள் அவள் முன்னும் பின்னும் மௌனமாக அசைவாள். மீண்டும் வஞ்சம் தீர்க்கும் குரலில் கூவுவாள் :

" அவர்கள் எலும்புகள் விறைக்கட்டும் ; அவர்கள் ரத்தம் சுண்டிப் போகட்டும் !"

இவ்வளவு குரோத மனப்பான்மையுடன் தாத்தாகூடப் பிரார்த்தனை செய்ததில்லை.

பிரார்த்தனை முடிந்ததும் அவள் என்னை எழுப்புவாள்.

" எழுந்திரு. படுக்கையில் புரண்டது போதும். இதற்காகவா உன்னை நாங்கள் வேலைக்கு அமர்த்தினோம் ! அடுப்

பைப் பற்றவை. விறகை எடுத்துக்கொண்டு வா. மாலையி லேயே விறகை எடுத்துவைக்க மீண்டும் மறந்துவிட்டாயே !''

கிழவியின் முணுமுணுப்பைக் கேட்காம லிருப்பதற்காக நான் சுறுசுறுப்பாக வேலை செய்தேன். ஆனால் அவளைத் திருப்தி செய்யவே முடியாது. சீறிக்கொண்டே சூரைவளி யைப்போன்று குசினி முழுதும் அவள் பாய்வாள்.

'' சைத்தானே ! நீ விக்டரை எழுப்பினால், உனக்குப் பாடம் கற்பிப்பேன். கடைக்கு ஓடு !''

காலைச் சிற்றுண்டிக்கு இரண்டு பவுண்டு சொட்டியும், சின்ன எஜமானிக்கு இரண்டு காபெக் பெறுமானமுள்ள பன்னும் வாங்குவோம். நான் சொட்டி வாங்கி வந்ததும், பெண்கள் அதைச் சந்தேகத்துடன் கையில் எடுத்து, நிறுத்துப் பார்ப்பார்கள்.

''எடை சரியாக இருக்க வேண்டுமானால், இன்னும் ஒரு துண்டு இருக்க வேண்டாமா ? இல்லையா ? சீக்கிரம் வாயைத் திற !'' பிறகு அவர்கள் வெற்றி முழக்கம் செய்வர் : ''அந்தத் துண்டை இவன் தின்றுவிட்டான் ! அதை இவன் தின்று விட்டான் ! இவன் பற்களில் சொட்டித் துண்டுகள் ஒட்டிக் கொண்டிருக்கின்றன !'' என்று.

நான் மனமுவந்து வேலை செய்தேன். வீட்டிலிருந்த குப்பையைக் கூட்டுவதும், தரையைக் கழுவுவதும், பித்தளைப் பாத்திரங்களைத் தேய்ப்பதும், கதவுப் பிடிகளை மெருகு படுத்து வதும் எனக்கு மகிழ்ச்சி அளித்தது. அமைதி குடிகொண் டிருந்த சமயத்தில் பெண்கள் சொல்லிக்கொண்டார்கள் :

'' அவன் கடுமையாக வேலை செய்கிறான்.''

'' அவன் சுத்தமாக இருக்கிறான்.''

'' ஆனால் அடங்காதவன்.''

'' அவனை யார் வளர்த்தார்கள் என்பதை நினைவி லிறுத்து.''

தங்களுக்கு நான் மரியாதை செலுத்த வேண்டுமென்று அவர்கள் பெரிதும் விரும்பினர். ஆனால் அவர்கள் அரைப் பைத்தியங்க ளென்றும், என்னால் அவர்களுக்கு உபயோக மில்லை யென்றும் நான் கருதினேன். அவர்களுக்கு நான் அடங்கவில்லை ; அவர்களுக்கு நான் பதில் சொன்னேன்.

தனது பேச்சை நான் எவ்வாறு ஸ்வீகரிக்கிறேன் என்பதைச் சின்ன எஜமானி தெரிந்துகொண்டிருக்க வேண்டும். அதனால் அவள் அடிக்கடி என்னிடம் சொன்னாள் :

" பிச்சைக்காரர்கள் குடும்பத்திலிருந்து உன்னை அழைத்து வந்திருக்கிறோம் என்பதை நீ மறந்துவிடாதே. உன் அம்மாவுக்கு நான் ஒரு பட்டாடை பரிசளித்திருக் கிறேன் !"

ஒரு நாள் நான் அவளுக்குச் சொன்னேன் :

" அந்தப் பட்டாடையைப் பரிசளித்ததற்காக என் தோலைப் பரிவர்த்தனை செய்துகொள்ள விரும்புகிறீர்களா ?"

" கடவுளே ! வீட்டுக்குத் தீ வைக்கும் கிறமை இவனுக்கு உண்டு !" என்று அவள் பீதியுடன் கூவினாள்.

நான் திடுக்கிட்டேன். வீட்டிற்கு நான் எதற்காகத் தீ வைக்க வேண்டும் ?

இருவரும் என்னைப்பற்றி எஜமானரிடம் குறைகூறிக் கொண்டே இருந்தனர். அவர் கடுமையாகச் சொல்லுவார் :

" வாலிபனே! ஜாக்கிரதையாக நடந்துகொள்!" என்று.

ஒரு நாள் சலிப்புடன் தமது மனைவியிடமும், தாயாரிட மும் அவர் சொன்னார் :

"நீங்கள் நல்லவர்கள்; ரொம்ப நல்லவர்கள். குதிரையைச் சவாரி செய்வதைப்போன்று அந்தச் சிறுவனைச் சவாரி செய் கிறீர்கள். வேறு யாராக இருந்தாலும் அவன் முன்னரே ஓடிப்போ யிருப்பான் ; அல்லது அதிக உழைப்பால் இறந் திருப்பான் !"

இதைக் கேட்டுக் கோபமடைந்த பெண்கள் கண்ணீர் வடித்தனர்.

" அந்தப் பையனுக்கு முன் இதைச் சொல்ல நீ எப் படித் துணிந்தாய், நீண்ட மயிர்படைத்த மூட்டாளே !" என்று கோபத்தால் தலையை ஓங்கி மிதித்துக்கொண்டு அவர் மனைவி ஓலமிட்டாள். " இந்தப் பேச்சைக் கேட்ட பிறகு அவன் எனக்கு எப்படி அடங்கி நடக்கப் போகிறான் ? நான் கர்ப்பிணி என்பதை மறந்துவிடாதே !"

அவர் அன்னை ஓலமிட்டாள் :

"கடவுள் என்னை மன்னிக்கட்டும்! வாஸிலி! என் பேச்சை நினைவிலிறுத்து : நீ அந்தப் பையனைக் கெடுத்துவிடுவாய் !"

அவர்கள் விறைப்பாக அப்பால் சென்றனர்.

"எப்படிப்பட்ட காட்சியை நீ உண்டுபண்ணிவிட்டாய் ! சின்னப் பிசாசே ! உன் தாத்தாவிடம் உன்னை நான் அனுப்பி விடுவேன் ; நான் இதைச் செய்தால், நீ மீண்டும் குப்பை பொறுக்கலாம் " என்று அவர் கடுமையாகச் சொன்னார்.

" உங்களிடம் வாழ்வதைவிட, குப்பை பொறுக்குவது சிறந்தது " என்று அவமதிப்பைச் சகிக்க முடியாத நான் பதில் சொன்னேன். " வேலை பயிலுவதற்காக நீங்கள் என்னை இங்கே அழைத்து வந்தீர்கள். ஆனால் நீங்கள் எனக்கு எதைக் கற்றுக் கொடுக்கிறீர்கள் ? குப்பையை எப்படிக் கூட்டுவது என்பதையா ?"

என் கூந்தலை மெதுவாகப் பற்றிக்கொண்டு என்னைக் கூர்ந்து கவனித்தவாறு அவர் சொன்னார் :

" நீ சிறிய அடங்காப்பிடாரிதான் ! இது நல்லதல்ல, சகோதரா ! இது நல்லதே அல்ல !"

அவர் என்னை வீட்டிற்கு அனுப்பிவிடுவார் என்று நான் நிச்சயமாக நினைத்தேன். ஆனால் இரண்டு தினங்களுக்குப் பிறகு கையில் ஒரு பென்சில், ரூலர், டி - சதுரம், காகிதச் சுருள் ஆகியவைகளுடன் அவர் குகினிக்கு வந்தார்.

"தத்தியைப் பாலிஷ் செய்த பிறகு, இதை நகல் செய் " என்றார் அவர்.

ஏராளமான ஜன்னல்களும், அலங்கார முகப்பும் படைத்த இரண்டடுக்கு வீட்டின் சித்திரம் அது.

" இதோ ஒரு ஜதை காம்பஸ் இருக்கிறது. எல்லாக் கோடுகளையும் அளந்துவிட்டு, அவைகளைக் காகிதத்தில் புள்ளி வைத்துக் குறி. பிறகு அவைகளை ரூலரால் ஒன்று சேர். முதலில் நீளத்திலும் பிறகு மேலும் கீழும் கோடுகள் கிழி."

சுத்தமான வேலையை எனக்கு அளித்ததை எண்ணி நான் மகிழ்ச்சி அடைந்தேன். வேலை கற்பதை எண்ணியும் மகிழ்ந்தேன். ஆனால் ஆச்சரியத்துடன் காகிதத்தையும், கருவிகளையும் நான் உற்றுப்பார்த்தேன். எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

எனினும், நான் உடனே கைகளைக் கழுவிவிட்டு, வேலை செய்ய ஆரம்பித்தேன். எல்லாக் கோடுகளையும் குறியிட்டுவிட்டு, அவைகளை இணைத்தேன். சொம்ப நல்லது ! ஆனால் மூன்று கோடுகள் மீதம் இருந்தன. பிறகு நேர் கோடுகளை வரைந்தேன். உடனே வீடு ஒரு மாறியிருப்பதைக் கண்டு வியந்தேன். ஜன்னல்கள் சுவர்மீது ஏறி நின்றன. ஒரு ஜன்னல் வீட்டிற்கு வெளியே அந்தரத்தில் நின்றது. வீட்டின் தலை வாசற்படி முதல் மாடிக்குச் சென்றுவிட்டது. கூரையைவிடக் கம்பி உயர்ந்துவிட்டது. பள்ளியறை ஜன்னல் புகைபோக்கியின் உச்சியில் இருந்தது.

கண்களில் கண்ணீர் மல்க, இது எவ்வாறு நிகழ்ந்தது என்பதைப் புரிந்துகொள்ளும் முயற்சியில் நெடு நேரம் அப்படியே நின்றுவிட்டேன். பிறகு என் கற்பனையின் உதவியுடன் தவறைத் திருத்த முடிவு செய்தேன். கம்பிகளிலும், கூரையின் உச்சியிலும் குருவி, காக்கை, புறு ஆகியவற்றின் சித்திரங்களை வரைந்தேன். ஜன்னல்களுக்கு முன்னே தரையில் குடைபிடித்துக்கொண் டிருந்த யானைக்கால் மனிதர்களின் படங்களை வரைந்தேன். பிறகு சித்திரம் முழுவதையும் வளைந்த கோடுகளால் மூடிவிட்டு, அதை எஜமானரிடம் எடுத்துச் சென்றேன்.

புருவத்தை நெரித்து, மயிரைத் திருகிவிட்டு, அவர் மந்தமாகச் சொன்னார் :

" இதற்குப் பெயரென்ன ?

" மழை பெய்கிறது " என்று விளக்கினேன் நான். "மழை பெய்யும்பொழுது வீடு வளைந்திருப்பதைப் போன்று தோற்றமளிக்கும். ஏனெனில் மழையும் அப்படித்தானே பெய்கிறது. அந்தப் பறவைகள்—அவைக ளெல்லாம் பறவைகள்—கம்பிகளில் ஒளிந்துகொண் டிருக்கின்றன. மழை பெய்யும்பொழுது அவை அப்படித்தான் ஒளிந்துகொள்ளும். இந்த மனிதர்கள் வீட்டுக்கு ஓடுகிறார்கள். இதோ இருக்கும் பெண் விழுந்துவிட்டாள் ; இவர்தான் எலுமிச்சம் பழம் விற்பவர்."

" நான் உனக்கு நன்றியுடையவனாக இருப்பேன் " என்று தலை மயிர் காகிதத்தைத் தொடுமளவு மேஜைமீது

சாய்ந்துகொண்டு, குலுங்கக் குலுங்க நகைத்துக்கொண்டே எஜமானர் சொன்னார்:

"உன்னைப் பூமியிலிருந்தே நான் ஒழித்துவிட வேண்டும் கர்ஜிக்கும் சிட்டுக் குருவியே!"

சின்ன எஜமானி உள்ளே வந்தாள். அவள் வயிறு பீப்பாயைப் போன்றிருந்தது. அவள் என் சித்திரத்தைப் பார்த்தாள்.

"அவளை அடியுங்கள்" என்று தன் கணவனிடம் அவள் சொன்னாள்.

"கூடாது. ஆரம்பத்தில் இதைவிட நன்றாக நான் ஒன்றும் செய்துவிடவில்லை" என்று அவர் கலக்கமின்றிச் சொன்னார்.

என் சித்திரத்திலுள்ள தவறுகளைச் சிவப்புப் பென்சிலால் குறித்துவிட்டு, எனக்கு இன்னொரு காகிதம் தந்தார்.

"மீண்டும் முயற்சி செய். சித்திரம் சரியாகும்வரையில் வரைந்துகொண்டே இரு."

என் இரண்டாவது முயற்சி பரவாயில்லை. அதில் ஒரு ஜன்னல் மாத்திரம் மூடப்புக் கதவில் இருந்தது. ஆனால் அந்த வீடு காலியாக இருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. எனவே அதில் ரகம் ரகமான ஜனங்களை நான் குடியேற்றினேன். ஜன்னல்களில் இளம் பெண்கள் விசிறிக்கொண்டும், வாலிபர்கள் சிகரெட் குடித்துக்கொண்டும், சிகரெட் பிடிக்காத ஒருவர் மற்றவர்களைப் பார்த்து மூக்கைத் தடவிக் கொண்டும் உட்கார்ந்திருந்தனர். மூடப்பில் ஒரு வண்டிக் காரன் நின்றுகொண்டிருந்தான். அவன் காலடியிலே ஒரு நாய் படுத்துக்கொண்டிருந்தது.

"மீண்டும் ஏன் இப்படி அதைக் குழப்பினாய்?" என்று கோபத்துடன் எஜமானர் கேட்டார்.

ஜனங்கள் இல்லாத வீடு அழகாக இருக்காது என்று நான் விளக்கினேன். ஆனால் அவர் என்னைத் திட்ட ஆரம்பித்தார்.

"நாசமாய் போக! நீ கற்க விரும்பினால் ஒழுங்காகக் கற்க வேண்டும். இது முட்டாள்தனம்."

மூலத்தைப் போன்று நான் ஏறக்குறைய ஒரு சித்திரம் வரைந்ததும் அவர் சொம்பத் திருப்தி அடைந்தார்.

" முயன்றால் உன்னால் என்ன செய்ய முடியும் என்பதைத் தெரிந்துகொண்டாயா? இதே மாதிரி தொடர்ந்து செய்தால், விரைவில் நீ முன்னேறுவாய்."

பிறகு அவர் எனக்கு ஒரு புதிய வேலை கொடுத்தார்.

" நமது வீட்டின் சித்திரத்தை எழுது. அறைகள் எப்படி இருக்கின்றன, கதவுகளும், ஜன்னல்களும் எங்கே இருக்கின்றன, எங்கே எது வைக்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறி. எப்படி நீ வரைய வேண்டுமென்று நான் சொல்ல மாட்டேன். நீயாகவே இதைச் செய்ய வேண்டும்."

குசினிக்குச் சென்று எப்படி வேலையை ஆரம்பிக்க வேண்டும் என்று யோசித்தேன்.

அந்தக் கட்டத்தில் என் பாடம் முடிவுக்கு வந்தது.

கிழவி என் அருகில் வந்து, விஷமத்தனமாகச் சொன்னாள் :

" நீ டிராப்ட்ஸ்மேனாக வேண்டும், அல்லவா ?"

என் மயிரைப் பிடித்து இழுத்து, என் தலையைப் பலமாக மேஜையில் இடித்தாள். என் மூக்கிலும், உதட்டிலும் காயம் பட்டது. அவள் மேலும் கீழும் குதித்தாள் ; என் சித்திரத்தைக் கிழித்தாள் ; என் கருவிகளைத் தரையில் எறிந்தாள். பிறகு இடுப்பில் கைகளை ஊன்றிக்கொண்டு,வெற்றிக் குரலில் அவள் கோஷித்தாள் :

" நீ இனிமேல் இதைச் செய் ! அப்பொழுது என்ன நடக்கிறது, பார் ! இன்னொருவனை அவன் வேலைக்கு அமர்த்திவிட்டு, தன் சதையும் ரத்தமுமான தன் சகோதரனை ஒழித்துவிடப் பார்க்கிறான், அல்லவா ?"

என் எஜமானர் ஓடி வந்தார். அவரைத் தொடர்ந்து அவர் மனைவி ஓடி வந்தாள். பிறகு ஒரு கோர நாடகம் நடந்தது. மூவரும் ஒருவர்மீது ஒருவர் விழுந்து, ஒருவரை ஒருவர் பிறாண்டினர், ஊளையிட்டனர். முடிவில் பெண்கள் அழச் சென்றனர். என் எஜமானர் என்னிடம் சொன்னார்:

" தற்காலிகமாக இந்த வேலையை நிறுத்திவிடு. படிப்பதை நிறுத்து. இதன் விளைவென்ன என்பதை நீயே காண்பாய்."

அவருக்காக நான் வருந்தினேன். அந்தப் பெண்களின் கூச்சல் அவரைச் சதா துன்புறுத்திற்று. அவர் நொந்திருந்தார்.

நான் படிப்பதைக் கிழவி விரும்பவில்லை என்பதையும், என் படிப்பில் குறுக்கிடத் தனது சக்தி முழுதையும் அவள் உபயோகித்தாள் என்பதையும் நான் முன்னரே தெரிந்து கொண்டிருந்தேன். சித்திரம் எழுத உட்காரு முன் நான் அவளைக் கேட்பேன் :

" எனக்கு இன்னும் ஏதாவது வேலை இருக்கிறதா ?"

" இருக்கும்பொழுது சொல்லுகிறேன். மேஜை முன் உட்கார்ந்துகொண்டு உன் நேரத்தை வீணுக்குவதற்குத் தான் நீ லாயக்கு."

சில நிமிடங்களில் என்னை ஏதாவது ஒரு வேலைக்கு அவள் அனுப்புவது நிச்சயம்; அல்லது அவள் சொல்லுவாள்:

" மாடிப் படியை நீ சுத்தம் செய்த லக்ஷணத்தைப் பார் ! மூலையிலே குப்பை கூளம் குவிந்து கிடக்கிறது ! உடனே அதைச் சுத்தம் செய் !"

உடனே அங்கே சென்று நான் பார்ப்பேன். ஆனால் அங்கே குப்பையே இருக்காது.

" நீ என்னுடன் விவாதிக்க விரும்புகிறாய், அல்லவா ?" என்று அவள் கூவுவாள்.

ஒரு நாள் என் சித்திரத்தில் அவள் 'குவாஸ்' மதுவை ஊற்றினாள்; இன்னொரு நாள் எண்ணெயை ஊற்றினாள். குழந்தையைப் போன்று, குழந்தைக்குரிய தந்திரத்துடனும், குழந்தைக்குரிய அதை மறைக்கும் திறமையின்மையுடனும் அவள் விஷமம் செய்வாள். அவ்வளவு எளிதில் ஆத்திரமடைகிறவளையும், எல்லாவற்றைப்பற்றியும், எல்லோரைப்பற்றியும் அவளைப்போன்று குறைகூறுகிறவளையும் இதற்கு முன் நான் கண்டதே இல்லை. பொதுவாகக் குறைகூறுவதிலே மக்கள் இன்பத்தைக் காணுகின்றனர். ஆனால் ஒரு பாடகர் தமது பாட்டிலே இன்பத்தைக் காணுவதைப்போன்று குறைகூறுவதிலே அவள் இன்பத்தைக் கண்டாள்.

தன் புதல்வன்மீது அவளுக்கு இருந்த அன்பு, ஒரு விதமான பைத்தியத்தைப் போன்றது. அது எனக்கு வேடிக்கையாக இருந்தது ; அதன் வேகம் எனக்குப் பீதியை

யும் அளித்தது. வெறிபடைத்த வேகம் என்று இதை நான் வர்ணித்தேன். சில தினங்களில் தனது காலைப் பிரார்த்தனை முடிந்ததும், அடுப்பின்மீது ஏறி, அவன் படுத்திருக்கும் பலகையின் ஓரத்தில் முழங்கைகளை ஊன்றிக்கொண்டு இதய பூர்வமாக, தணிந்த குரலில் அவள் சொல்லுவாள் :

" என் வரப்பிரசாதம் பெற்ற செல்வமே ! என் ரத்தத்தின் ரத்தமே ! வைரத்தைப் போன்று பரிசுத்தமானவனே ! தேவதையின் இறகைப் போன்று மெல்லியவனே ! அவன் தூங்குகிறான், தூங்கு, என் அன்பே, தூங்கு. இன்பக் கனவுகளால் உன் இதயத்தை மூடு. உன் மணவியைக் கனவு காண். கட்டழகியை, பணக்கார இளவரசியை, அல்லது வியாபாரியின் மகளைக் கனவு காண். உன் விரோதிகள் பிறக்கு முன்னமே இறக்கட்டும் ; உன் நண்பர்கள் நூறு வருடங்கள் வாழட்டும். பெண் வாத்துகள் ஆண் வாத்துகளைப் பின்தொடருவதைப்போன்று, கன்னியர், கூட்டம் கூட்டமாக உன்னைப் பின்தொடரட்டும்."

இது எனக்கு சொம்ப வேடிக்கையாக இருந்தது. நீண்ட மூக்கும், அலங்காரமான ஆடைகளும், பிடிவாதமும், மூட்டாள்தனமும் படைத்த, சோம்பலுக்கு ஆட்பட்ட, விக்டர், மரங்கொத்தியை எனக்கு நினைவூட்டினார்.

சில தினங்களில் அவர் அம்மாவின் பேச்சு அவரை எழுப்பும். தூக்கக் கலக்கத்தில் அவர் முணங்குவார் :

" நீ நரகத்திற்குச் செல்ல வேண்டும், அம்மா. எதற்காக இங்கே நின்றுகொண்டு என்மீது எச்சில் அபிஷேகம் செய்கிறாய் ? உன்னுடன் வாழுவது மிகச் சிரமம் !"

சாதாரணமாக அவள் பணிவுடன் கீழே இறங்கி, சிரித்துக்கொண்டே சொல்லுவாள் :

" தூங்கு, கரடியே, தூங்கு."

சில சமயங்களில் அவள் கால்கள் இடறும். வாயைப் பிளந்துகொண்டு, அவள் நாக்கு வெந்துவிட்டதைப் போன்று இரைத்துக்கொண்டு அடுப்பின் ஓரத்தில் விழுவாள். பிறகு தைக்கும் வார்த்தைகளைக் கொட்டுவாள் :

" என்ன ? உன் அம்மாவையாக்கும் நீ நரகத்திற்கு அனுப்புகிறாய், வேசி மகனே ! என் இதயத்தை நீ கறைப்

படுத்துகிறாய். சைத்தான் தான் உன்னை என் நெஞ்சில் பதிய வைத்தான் ! பிறக்கு முன்னரே நீ அழுகியிருந்தால் !''

குடிகாரர்கள் உபயோகிக்கும் ஆபாசமான வார்த்தை களை அவள் உபயோகித்தாள். அவைகளைக் கேட்கப் பயங் கரமாக இருந்தது.

அவள் சிறிது நேரம்தான் தூங்குவாள். இரவில் பல முறை அவள் படுக்கையிலிருந்து எழுந்திருந்து,என் படுக்கை யருகில் வந்து, என்னை எழுப்புவாள்.

'' என்ன சங்கதி ?''

'' உஸ் '' என்று அவள் தணிந்த குரலில் சொல்லி விட்டு, இருளிலே எதையோ உற்றுப் பார்த்துக்கொண்டு சிலுவை அடையாளம் வரைந்துகொள்வாள். '' கடவுளே... தீர்க்கதரிசி எலிஜா!..... அருள்பெற்ற தியாகி வார்வரா!..... அகால மரணத்திலிருந்து எங்களைக் காப்பாற்று.''

நடுங்கும் கைகளால் அவள் மெழுகுவர்த்தியைக் கொளுத் துவாள். அரை வெளிச்சத்தில் கோலாகலத் தெரிந்த உரு வங்களை அவள் கூர்ந்து பார்க்கும்பொழுது அவள் கண்கள் பேந்தப் பேந்த விழிக்கும். குசினி பெரிசுதான் ; ஆனால் அங்கே டிரங்குகளும், பீரோக்களும் ஏராளமாக இருந்த தால் அது சிறிதாகத் தெரிந்தது. இங்கே சந்திர வெளிச்சம் அசையாது நின்றது. விக்கிரங்களுக்கு முன்னே அணையாத விளக்கு, சுடர்விட்டு எரிந்தது. சுவரிலே தொங்கிய கத்திகள் ஒளிவீசின ; பீரோவிலிருந்து தொங்கிய கரிய பாத்திரங்கள் பயங்கரமான குருட்டு முகங்களைப் போன்று காட்சியளித்தன.

நதிக்கரையிலிருந்து நதியிலே இறங்குவதைப் போன்று, ஜாக்கிரதையாக அடுப்பிலிருந்து கீழே இறங்குவாள் கிழவி. பிறகு வெறுங் காலுடன் நடந்து குசினியின் மூலைக்குச் செல்லுவாள். அங்கே பக்கெட்டுக்கு மேலே தலை தண்டிக் கப்பட்ட முண்டத்தைப் போன்று தண்ணீர் பாத்திரம் தொங்கிக்கொண்டிருந்தது. அங்கே ஒரு தொட்டியில் சுத்த ஜலமும் இருந்தது.

மடக் மடக்கென்று ஜலம் குடித்துவிட்டு, ஜன்னல் கண்ணாடியில் பதிந்திருக்கும் பனித்திரையினூடே அவள் வெளியே பார்ப்பாள்.

"என்மீது கருணை காட்டு, கடவுளே, என் ஆத்மா மீது கருணை காட்டு !" என்று அவள் வேண்டுவாள்.

சில சமயங்களில் மெழுகுவர்த்தியை அணைத்துவிட்டு, முழங்கால்களை ஊன்றிக்கொண்டு வெறுப்புடன் முணு முணுப்பாள் :

"என்னை யாரும் நேசிக்கவில்லை, கடவுளே ! என்னை யாரும் விரும்பவில்லை !" என்று.

அடுப்புக்கருகில் திரும்பி வந்து, புகைப் போக்கியை நோக்கிச் சிலுவை அடையாளம் வரைந்துகொள்வாள். பிறகு அடுப்பு சரியாக இருக்கிறதா என்று பார்க்கக் கையை உள்ளே விடுவாள். அவள் கையிலே அழுக்குப்படும். உடனே சபிக்க ஆரம்பித்து விடுவாள். அதன் பிறகு மாயையால் பீடிக்கப் பட்டவளைப் போன்று உடனே தூங்கிவிடுவாள். அவள் என்னை அவமதித்தபொழு தெல்லாம் நான் நினைத்தேன் : 'இவளைத் தாத்தா மணந்திருக்க வேண்டும். அவரைப் பொம்மைபோல் ஆட்டி வைத்திருப்பாள் இந்தப் பெண். அவளுக்கும் தனக்குகந்த ஜோடி கிடைத்திருக்கும்.' அவள் தொல்லையால்தான் நொந்துகொண்டிருந்தேன். ஆனால் அவள் குரூரமான முகமும், வருத்தத்தால் துவண்ட நாட்களும் இருக்கத்தான் செய்தன. கண்களில் நீர் மல்க அவள் சொல்லுவாள் :

"நான் தொல்லையின்றி வாழுகிறேன் என்று நீ நினைக் கிறாயா ? நான் என் குழந்தைகளை ஈன்றேன் ; அவர்களைக் காத்தேன் ; வாழும் வழியைக் காட்டினேன். இதற்குப் பிரதி பலனை எனக்கு என்ன கிடைக்கிறது ? அவர்கள் குசினியில் சமையற்காரியைப் போன்று வேலை செய்கிறேன். இது எளி தில் சகிக்கக் கூடிய விஷயமா? என் ஸ்தானத்திற்கு—தனது சொந்த சதையின், ரத்தத்தின் ஸ்தானத்திற்கு—அந்தப் பெண்ணை அழைத்து வந்திருக்கிறான் என் மகன் ! இது சரியா ?"

"இல்லை, இது சரியல்ல" என்று நான் மனப்பூர்வமாகச் சொன்னேன்.

"உனக்குத் தெரியுமா ?"

பிறகு அவள் தன் மருமகளைப்பற்றி வெட்கப்படத்தக்க பல விஷயங்களைச் சொன்னாள்.

" அவளுடன் நான் ஸ்நான அறைக்குச் சென்று, காண வேண்டியவைகளை யெல்லாம் கண்டிருக்கிறேன். அவனுக்கு அவளிடம் எது கவர்ச்சி அளித்ததோ? அவளைப்போன்ற நோஞ் சானைக் கண்டு யாராவது கவர்ச்சி அடைந்திருக்க முடியுமா?"

ஆண் பெண் உறவைப்பற்றி அவள் கீழ்த்தரமான பாஷையில் பேசினாள். முதலில் அவள் பேச்சு எனக்கு வெறுப்பை அளித்தது. பிறகு அவள் பேச்சைக் கவனமாகவும், சுவாரஸ்யமாகவும் நான் கேட்க ஆரம்பித்தேன். அவள் வார்த்தைகளிலே உண்மை பொதிந்துகிடக்கும் என்று நான் கருதினேன்.

" பெண்ணின் சக்தி மகத்தானது. கடவுளையே அவள் ஏமாற்றிவிட்டாள் " என்று மேஜையை தட்டிக்கொண்டு அவள் அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள். "மக்களை நரகத் திற்கு அனுப்புகிறவள் பெண் என்பதை நீ மறந்துவிடாதே."

பெண்ணின் சக்தியைப்பற்றி முடிவின்றி அவளால் பேச முடியும். இத்தகைய பேச்சால் அவள் யாரையோ பயமுறுத்த முயலுவதாக எனக்குத் தோன்றிற்று. கடவுளையே பெண் ஏமாற்றிவிட்டாள் என்று அவள் சொன்னதை நான் மறக்கவே இல்லை.

எங்கள் கொல்லையிலே எங்கள் வீட்டைப்போன்று இன்னொரு பெரிய வீடும் இருந்தது. இந்த வீட்டிலுள்ள எட்டுப் பகுதிகளில், நான்கு பகுதிகளில் அதிகாரிகள் வசித்தனர். ராணுவப் பாதிரி இன்னொரு பகுதியில் வசித்தார். கொல்லையிலே சதா விட புருஷர்களும், அவர்களின் பெண் நண்பர்களும்—சமையற்காரிகள், வண்ணாத்திகள், தாதிகள்—நிறைந் திருந்தனர். குசினிகள் காதல் புரியும் அறைகளாகத் திகழ்ந் தன. அங்கே கண்ணீரும், சண்டையும், பிணக்கும் ஓய்வின்றி நடந்தன. சிப்பாய்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண் டனர்; அல்லது சாக்கடை தோண்டுவோருடன் சண்டை யிட்டனர்; அல்லது வீட்டு வேலைக்காரர்களுடன் சண்டை யிட்டனர். பெண்களுக்கு ஓயாது அடிகள் கிடைத்தன. பலசாலிகளான வாலிபர்களின் தணிக்கப்படாத, மிருகத்

தனமான பசி எங்கள் கொல்லையில் தனியரசு புரிந்தது. சாப்பிடும்பொழுதும் தேநீர் அருந்தும்பொழுதும் என் எஜமானரும் எஜமானியும், காமவெறியும் அர்த்தமற்ற மிருக வெறியும் படைத்த இந்த வாழ்க்கையைப்பற்றி விரிவாக விவாதித்தனர். கொல்லையிலே நடப்பவைக ளெல்லாம் கிழவிக்குத் தெரியும். இதை அவள் பெருமையுடன் வர் ணிப்பாள் :

புன்முறுவலுடன் இந்தக் கதைகளைக் கேட்பாள் இளம் மனைவி. விக்டர் குலுங்கக் குலுங்கச் சிரிப்பார். ஆனால் முகத்தைச் சுளித்துக்கொண்டு எஜமானர் சொல்லுவார் :

" போதும், அம்மா நிறுத்து !" என்று.

" கடவுளே, வாயைத் திறக்கக்கூட என்னை அனுமதிக்க மாட்டாயா !" என்று சலித்துக்கொண்டாள், கதை சொல்லு கிறவள்.

" பாதகமில்லை, அம்மா ! இங்கே உன்னை யாரும் தடுக்க முடியாது. இது குடும்பம் " என்று உற்சாகமூட்டினான் விக்டர்.

மூத்தவருக்குத் தாயார்மீது இரக்கம் ஏற்பட்டது. அவ ளுடன் தனியே இருப்பதைக் கூடுமானவரையில் தடுத்தார். தப்பித் தவறி அவர் தனியே இருந்துவிட்டால், அவர் மனைவியைப்பற்றி ஒரு மூச்சு குறைகூறிவிட்டு, பிறகு பணம் கேட்பாள் கிழவி. இரண்டு மூன்று ரூபிள்களும் கொஞ்சம் சில்லறையும் அவள் கையில் கொடுத்துவிட்டு, " இப்படிப் பணம் வாங்குவது முட்டாள்தனம், அம்மா. உனக்குப் பணம் கொடுக்க மனமில்லாது இப்படிச் சொல்ல வில்லை. ஆனால் நீ பணம் வாங்கக் கூடாது."

" பிச்சைக்காரர்களுக்குக் கொடுக்கத்தான்—விக்கிரகத் திற்கு முன்னே கொளுத்திவைக்க மெழுகுவர்த்தி வாங்கு வதற்கு."

" பிச்சைக்காரர்கள் ! நீ விக்டரைக் கெடுத்துவிடுவாய்."

" உன் சகோதரனை நீ நேசிக்கவில்லை, நீ நாசமாய்ப் போக !"

பொறுமையிழந்து கையை வீசிவிட்டு அவர் அப்பால் சென்றுவிடுவார்.

தன் தாயாரிடம் முரட்டுத்தனமாயும் வெறுப்புணர்ச்சி யுடனும் நடந்துகொண்டார் விக்டர். அவர் கபந்தன். ஞாயிற் றுக்கிழமைகளில் கிழவி அப்பம் செய்வாள். அதில் ஒரு பகுதியை அவருக்காக விசேஷமாக ஒதுக்கி, நான் படுக்கும் பெஞ்சுக்குக் கீழே ஒரு ஜாடியில் அதை ஒளித்துவைப்பாள். பிரார்த்தனை முடிந்து திரும்பி வந்ததும் அந்த ஜாடிப் பக்கம் தாவி, முணுமுணுப்பான் :

"இன்னும் கொஞ்சம் வைத்திருக்கக் கூடாதா, கிழட்டுப் பிணமே !" என்று.

" மற்றவர்கள் காணுமுன் அதை விழுங்கிவிடு."

" என்னை யாராவது பார்த்தால், அப்பத்தை எனக்கு நீ திருடித் தந்தாய் என்று நான் சொல்லுவேன், கிழட்டுப் பிணமே !"

ஒரு நாள் அந்த ஜாடியிலிருந்து சில அப்பங்களை எடுத்து நான் தின்றுவிட்டேன். இதற்காக விக்டர் என்னை அடித் தார். நான் அவரை வெறுத்ததைப் போன்று அவரும் என்னை வெறுத்தார். அவர் என்னைக் கேலி செய்தார் ; ஒரு நாளைக்கு மூன்று தரம் தனது பூட்ஸைப் பாலிஷ் செய்யச் சொன்னார். தனது படுக்கையில் படுத்துக்கொண்டு, என் தலையை நோக்கித் துப்பினார்.

மற்றவர்களைச் "சண்டைக் கோழி" என்று தன் சகோதரர் அழைப்பதைப்போன்று தானும் சில பதங்களை உபயோகிக்க வேண்டும் என்னும் எண்ணத்துடன் சில வார்த் தைகளைக் கண்டு பிடித்து, அவைகளை அடிக்கடி விக்டர் சொன்னார். ஆனால் அவை மிக முட்டாள்தனமானவை.

" அம்மா, உஷார் ! என் காலுறை எங்கே ?"

அர்த்தமற்ற கேள்விகள் கேட்டு என்னை அவர் சித்திர வதை செய்தார். உதாரணமாக :

" புளு என்று எழுதிவிட்டு, ஏன் க்ளு என்று உச்சரிக் கிறார்கள் என்பதை உன்னால் விளக்க முடியுமல்லவா, அலெக்ஸி ?"

அவர்கள் பேசின முறையே எனக்கு வெறுப்பை அளித் தது. என் தாத்தாவும், பாட்டியும் பேசிய அழகிய வார்த்தை களைக் கேட்டுப் பழகிய எனக்கு, "பயங்கரமான வேடிக்கை",

" உண்ணச் சாகிறேன் ", " உக்ரமான இன்பம் " என்பன போன்ற இணைக்கக் கூடாத இணைப்புச் சொற்கள் முதலில் எனக்கு விளங்கவில்லை. வேடிக்கை பயங்கரமாக இருக்க முடியா தென்றும், இன்பம் உக்ரமாக இருக்க முடியா தென்றும் எனக்குத் தோன்றிற்று. இந்த ஜனங்களுக்கு பசி ஏற்பட்டால், அது மரணத்தைக் குறிக்கிறது என்று கருத எந்தக் காரணமும் எனக்குத் தோன்றவில்லை.

" இப்படிப் பேசுவது சரிதானு ?" என்று நான் அவர் களைக் கேட்டேன்.

" எங்களுக்கு வாத்தியாராக முயலும் ஆளைப் பார் !" என்று அவர்கள் கோபத்துடன் கூறினர். " அவன் காதைப் பிடுங்க வேண்டும் !"

" காதைப் பிடுங்குவது " என்னும் பதப் பிரயோகமும் தவறு என்று எனக்குப் பட்டது. செடிகளையோ, புஷ்பங் களையோ, பழங்களையோ பிடுங்கலாம் ; ஆனல் காதைப் பிடுங்க முடியாது.

காதைப் பிடுங்க முடியும் என்பதை நிரூபிக்கும் நோக்கத் துடன், அவர்கள் என் காதைப் பிடித்திழுத்தனர். ஆனல் இது என்னை நம்பவைக்கவில்லை. எனவே, வெற்றிக் குரலில் கூவினேன் :

"எனினும் என் காதை நீங்கள் பிடுங்கிவிடவில்லையே !"

என்னைச் சுற்றி இதயமற்ற விஷமச் செயல்களையும், வெட்கமற்ற ஆபாசத்தையும்—விபசார விடுதிகளும், இரவு மங்கைகளும் நிறைந்த குரூவினை வீதிகளில் நடக்கும் ஆபா சங்களைவிட அதிகமான ஆபாசத்தை—நான் கண்டேன். குரூவினைவிலே இத்தகைய கேவலமான, ஆபாசமான நிகழ்ச்சிகள் ஏன் நிகழுகின்றன என்பதைப் புரிந்துகொள்ள முடியும். மோசமான, சுமையான, அரைப் பட்டினியான வாழ்க்கையின் விளைவு அது. ஆனல் இங்கே ஜனங்கள் சுகமாகவும், கவலையற்றும் வாழ்ந்தனர். வேலைக்குப் பதிலாக இங்கே அர்த்தமற்ற எழுச்சி குடிகொண்டிருந்தது.

என் மனம் வேதனைப்பட்டது. ஆனல் என்னைக் காணப் பாட்டி வந்ததும் என் வேதனை மேலும் அதிகரித்தது. பின் புறக் கதவு வழியாகக் குசினிக்கு வந்து, சிலுவைக்கு முன்னே

கின்று சிலுவை அடையாளம் வரைந்துகொண்டு தன் இளைய சகோதரியை, இடுப்புவரை குனிந்து வணங்கினாள் அவள். இந்த வணக்கம் பெரிய பாரம் அழுத்துவதைப் போன்று என்னை அழுத்திற்று.

''நீயா, அகுலினு ?'' என்று சாதாரணமாக, பற்றின்றிச் சொன்னாள், என் எஜமானி.

பாட்டியை என்னால் அடையாளம் கண்டுபிடிக்க முடிய வில்லை. தனது முகபாவத்தையே மாற்றுமாறு அவள் பணிவுடன் தனது உதடுகளைக் கடித்துக்கொண்டாள். கதவுக்கு அருகில் கிடந்த பெஞ்சில் சந்தடியின்றி உட்கார்ந்துவிட்டு, ஏதோ குற்றம் புரிந்துவிட்டவளைப் போன்று அவள் மௌன மாக இருந்தாள். தனது சகோதரியின் கேள்விகளுக்கு அவள் மிருதுவாகவும் பணிவுடனும் பதில் சொன்னாள்.

இது எனக்கு வருத்தத்தை அளித்தது. நான் கோபத் துடன் சொன்னேன் :

'' ஏன் அங்கே உட்கார்ந்துகொண் டிருக்கிறாய் ?''

'' வாயை மூடு. இங்கே நீ எஜமான னல்ல '' என்று சொல்லிவிட்டு, அன்பு சுரக்க என்னைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினாள் அவள்.

'' வேண்டாத விஷயங்களில் அவன் தலையிடுகிறான். அவனை எவ்வளவுதான் திட்டினாலும், அடித்தாலும் அவன் இப்படிச் செய்துகொண்டுதான் இருக்கிறான் '' என்று தமது குறைகளைச் சொல்ல ஆரம்பித்தாள் என் எஜமானி.

சில சமயங்களில் தன் சகோதரியை அவள் இடித்துக் கூறுவாள் :

'' நீ பிச்சைக்காரியாகிவிட்டாய், இல்லையா அகுலினு ?''

'' அது அவ்வளவு கேவலமானதா ?''

'' கேவலமானதல்ல, ஆனால் வெட்ககரமானது.''

''இயேசுவே பிச்சையெடுத்ததாகச் சொல்லுகிறார்கள்.''

'' சம்சயவாதிகளும், நாஸ்திகர்களும்தான் இப்படிச் சொல்லுவார்கள். நீ கிழட்டு முட்டாளாதலால், நீ இதைக் கேட்டுக்கொண் டிருக்கிறாய்! இயேசு பிச்சைக்காரரல்ல. அவர் கடவுளின் புதல்வர். உயிருடன் இருப்பவர்களையும், இறந்த வர்களையும் – இறந்தவர்களையும் என்பதை நினைவிலிறுத்து !–

மதிப்பிட அவர் வருவதாக எழுதப்பட்டிருக்கிறது. அவரிட மிருந்து நீ ஒளிய முடியாது. நீ உன்னை எரித்துச் சாம்பலாக்கிக்கொண்டால்கூட அவரிடமிருந்து நீ ஒளிந்துகொள்ள முடியாது. கர்வத்துடன் இருப்பதற்காக உன்னையும், வாஸிலி யையும் அவர் தண்டிப்பார். அருமையான என் பணக்கார உறவினர்களாகிய உங்களிடம் நான் உதவி கோரியபொழுது, என் கோரிக்கையை நிராகரித்ததற்கு அவர் தண்டிப்பார்.''

''என்னால் முடிந்ததை நான் என்றும் உங்களுக்குச் செய்திருக்கிறேன்'' என்று பாட்டி நிதானமாகச் சொன்னாள். ஆனால் கடவுள் எங்களைத் தண்டித்தார்—நீங்கள் எல் லோரும்—''

''இவ்வளவும் உனக்குப் போதாது !''

பாட்டியைச் சொல்லம்பால் அவள் சகோதரி இடை விடாது தாக்கினாள். அவள் தாக்குதலைப் பாட்டி எப்படிச் சகிக்கிறாள் என்று நான் வியந்தேன். அத்தகைய சமயங்களில் நான் அவளை நேசிக்கவில்லை.

சிறிய எஜமானி உள்ளே வந்து கருணைகாட்டும் முறையில் தலையை அசைத்தாள்.

''சாப்பாட்டு அறைக்கு வா. பரவாயில்லை—நேரே வா!''

''காலைத் துடை, கழிசடையே !'' என்று பாட்டி வெளியே சென்றதும் கிழவி கூவினாள்.

அவளை மகிழ்ச்சியுடன் வரவேற்றார் எஜமானர் :

''வா, ரிஷி அகுலினா ! நீ எப்படி இருக்கிறாய் ? கிழவர் காஷிரின் இன்னும் உயிருடன் இருக்கிறாரா ?''

பாட்டி அன்புகனிந்த புன்னகை பூத்தாள்.

''இன்னும் வியர்வை சிந்துகிறாயா ? கடுமையாக வேலை செய்கிறாயா ?''

''கடுமையாக வேலை செய்கிறேன். கைதியைப் போன்று வேலை செய்கிறேன்.''

அன்பாகவும், பட்சமாகவும் முதியோருக்கு உரித்தான குரலில் பாட்டி அவரிடம் பேசினாள். சில சமயங்களில் அவர் என் அம்மாவைப்பற்றிப் பிரஸ்தாபித்தார்.

''உம்—வார்வாரா வாஸிலெவ்னா ! எப்படிப்பட்ட பெண் ! சரியான இடும்பி !''

"அவளுக்கு நான் பட்டு ஆடை அளித்ததை மறந்து விடாதீர்கள் ; மணிகள் கோத்த கறுப்பு ஆடை" என்று பாட்டியைப் பார்த்துக்கொண்டே சொன்னாள், அவர் மனைவி.

"ஆம், கொடுத்தாய்."

"அது புதியதைப் போன்றிருந்தது."

"உம் – ஆடை, உள்ளங்கை – வாழ்க்கையே ஒரு வேடிக்கை" என்று முணுமுணுத்தார் என் எஜமானர்.

"என்ன சொன்னீர்கள் ?" என்று சந்தேகத்துடன் கேட்டாள் அவர் மனைவி.

"ஒன்றுமில்லை—ஒன்றுமே இல்லை. இன்பகரமான நாட்கள் கழிகின்றன; அதே போன்று நல்ல மனிதர்களும்....."

"இத்தகைய விஷயங்களை ஏன் சொல்லுகிறீர்கள் ?" என்று கவலையுடன் கேட்டாள் அவர் மனைவி.

பிறகு, புதிய குழந்தையைக் காண அவர்கள் பாட்டியை அழைத்துச் சென்றனர். தேநீர்க் கோப்பைகளை அப்புறப் படுத்துவதற்காக நான் அங்கேயே தங்கிவிட்டேன். "மிகச் சிறந்த கிழவி, உன் பாட்டி" என்று என் எஜமானர் மிருதுவாகச் சொன்னார்.

இந்த வார்த்தைகளைச் சொன்னதற்காக அவருக்கு நான் ரொம்ப நன்றியுடையவனானேன். பாட்டியுடன் தனியே இருந்தபொழுது நொந்த இதயத்துடன் நான் பாட்டியிடம் சொன்னேன் :

"நீ எதற்காக இங்கே வந்தாய் ? அவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பது உனக்கு விளங்கவில்லையா ?"

"அந்தோ, அலியோஷா, நான் எல்லாவற்றையும் பார்க்கிறேன்" என்று தமது அற்புதமான வதனத்தில் புன்னகை பூக்க அவள் என்னை உற்றுப் பார்த்துக்கொண்டே சொன்னாள். உடனே நான் வெட்கினேன். அவள் எல்லாவற்றையும் கண்டாள் ; அவளுக்கு எல்லாம் தெரிந்திருந்தது—அந்த நிமிடத்தில் என் உள்ளத்திலே என்ன நிகழ்ந்துகொண்டிருந்தது என்பதும் அவளுக்குத் தெரிந்திருந்தது.

அருகில் யாராவது இருக்கிறார்களா என்பதைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு ஜாக்கிரதையாகச் சுற்றுமுற்

றும் பார்த்துவிட்டு, அவள் என்னைத் தழுவிக்கொண்டு, உணர்ச்சியுடன் சொன்னாள் :

" நீ இங்கே இருக்கவில்லை யென்றால், நான் இங்கே வரவே மாட்டேன்—அவர்களிடம் எனக்கு என்ன இருக்கிறது ? தாத்தாவுக்கு நோய். அவரை நான் பராமரித்துக் கொண்டிருந்ததால், என்னால் வேலை செய்ய முடியவில்லை. எனவே என்னிடம் பணமில்லை. மகன் மிகைலோவ் தன் புதல்வன் ஷாஷாவைத் தூக்கிவிட்டான். அவனுக்கு உணவும், குடியும் கொடுக்க வேண்டும். வருடத்திற்கு ஆறு ரூபிள் சம்பளம் கொடுக்க அவர்கள் வாக்களித்தார்கள். இப்பொழுது ஒரு ரூபிளாவது கொடுப்பார்கள் என்று நான் எண்ணினேன். நீ ஏறக்குறைய அரை வருடமாக வேலை செய்கிறாய், இல்லையா?" அவள் என் காதில் மெதுவாகச் சொன்னாள் : நான் உன்னைத் திட்ட வேண்டு மென்று அவர்கள் சொன்னார்கள்—நீ பணிவாக நடப்பதில்லை யென்றும் சொன்னார்கள். என் அருமைப் புறாவே! இன்னும் சில காலம் நீ இங்கே இருந்தால், உன் கால்கள் உறுதி அடையும்வரை நீ இங்கே இருந்தால்... ஒரு வருடமோ, அல்லது இரண்டு வருடங்களோ நீ இங்கே இருக்க முயலு. நீ முயலுவாயா ?"

இவ்வாறு செய்ய நான் வாக்களித்தேன். இது மிகச் சிரமமானது. வயிற்றுக்காகக் காலையிலிருந்து இரவுவரையில் ஓடி ஆடி வேலை செய்யும் சாரமற்ற, கேவலமான இந்த வாழ்க்கை எனக்கு வேதனை அளித்தது. துன்பக் கனவிலே நான் வாழ்ந்தேன்.

சில சமயங்களில் அங்கிருந்து ஓடிவிட வேண்டு மென்று எனக்குத் தோன்றிற்று. இரவில் பனிப்புயல் வீசிற்று ; காற்று ஜன்னல் வழியாக ஓலமிட்டது. குளிரிலே உத்திரங்கள் கிரீச்சிட்டன. என்னால் எப்படி ஓட முடியும் ?

வீணாயாட என்னை அனுமதிக்கவில்லை; அதற்கு எனக்கு நேரமும் இருக்கவில்லை. குறுகிய குளிர்காலம், பற்பலவிதமான வேலைகளுக்கிடையே மின்னலைப்போன்று பறந்து சென்றது.

ஆனால் காலைப் பிரார்த்தனைக்கு சனிக்கிழமைகளிலும், பொதுப் பிரார்த்தனைக்கு ஞாயிற்றுக்கிழமைகளிலும் நான் சர்ச்சுக்குச் செல்ல வேண்டும்.

சர்ச்சுக்குச் செல்வது எனக்கு மகிழ்ச்சி அளித்தது. காலியான இருண்ட மூலையிலே நின்றுகொண்டு விக்கிரகங்களைப் பார்த்து நான் வியந்துகொண்டிருப்பேன். மெழுகுவர்த்தியிலே அவை உருகி, கற்தரையிலே தங்க அருவியைப் போன்று பாய்வதாகத் தூரத்திலிருந்து தோன்றிற்று. கரிய விக்கரகங்கள் மெதுவாக அசைந்தன. மன்னர் கேட்டிலிருந்த தங்கச் சரிகை யிழைப்பிலிருந்து உல்லாசமான பொறிகள் பறந்தன. தங்கத் தேனீக்களைப்போன்று மெழுகுவர்த்திகள் நீலாகாயத்திலே தொங்கின; பெண்கள், சிறுமிகள் ஆகியோர் தலைகள் மலரைப் போன்று அசைந்தன.

எல்லாம் கீதத்திலே கலந்தன ; எல்லாம் கனவுலகிலே இயங்குவதைப் போன்று இயங்கின ; மை இருட்டிலே தொட்டில் ஆடுவதைப் போன்று சர்ச்சு மெதுவாக ஆடிற்று.

மற்ற வாழ்க்கையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட தனி வாழ்க்கை வாழ்வதற்காக உலகிலிருந்து ஒளித்துவைக்கப்பட்டதைப் போன்று, ஏரியில் அமிழ்ந்து கிடப்பதைப் போன்று, சர்ச்சு தோன்றிற்று. ஆடம்பரமான கிட்டெஷ் நகரைப் பற்றிப் பாட்டி சொன்ன கதையிலிருந்து ஒருக்கால் இந்த எண்ணம் எழுந்திருக்கலாம். மயக்கத்துடன் என் சுற்றுச் சார்பிலே நான் அசைந்தாடியபொழுது—கோயில் கீதமும், தணிந்த குரலில் செய்யப்பட்ட பிரார்த்தனையும், பக்தர்களின் நெடுமூச்சும் என்னைத் தாலாட்டியபொழுது—துக்ககரமான, கனிவான அந்தக் கதையை நான் நினைவுபடுத்திக்கொள்வேன்:

சபிக்கப்பட்ட தார்த்தாரியக் கூட்டத்தார்,

ஆயுதபாணிகளாய், தங்கள் குதிரைகளில் வருகிறார்கள் ;

பெருமைவாய்ந்த கிட்டெஷ் நகரைச் சூழ்ந்து அவர்கள் முற்றுகை யிட்டுவிட்டார்கள்.

புனிதமான காலைத் தொழுகை நேரத்தில் அவர்கள் உள்ளே நுழைந்துவிட்டார்கள்.

அகில அண்டத்துக்கும் எஜமானரே !

புனிதம்வாய்ந்த கன்னி மாதாவே !

ஆண்டவனின் அடியார்களுக்கு உதவிபுரிய வாருங்கள்.

காலைப் பிரார்த்தனையை அவர்கள் முடிப்பதற்கு அவர்களுக்கு ஊக்கம் அளியுங்கள்.

தாங்கள் சொல்லும் வார்த்தையை அடக்கத்துடன் கேட்கு மாறு செய்யுங்கள்.

தங்களுடைய கோயிலைத் தகர்க்க இடம் கொடாதீர்கள் ;

பச்சிளம் குழந்தைகளைக் கொன்று எறிய விடாதீர்கள்.

முதியோரும் உடல் நலிவுற்றோரும் முடம் ஆகாதவாறு பார்த்துக்கொள்ளுங்கள்.

இந்தக் கொடிய புலம்பலைக் கேட்டு, பெரிய ஆண்டவன் ஜஹோவாவும் புனித கன்னி மாதாவும் ;

இந்தப் புலம்பலைக் கேட்டுக் கிளர்ந்து எழுந்தார்கள்.

புனிதம் வாய்ந்த தேவதூதன் மைக்கேலைப் பார்த்து,

பெரிய கடவுள் ஜஹோவா இவ்வாறு சொன்னார் :

மைக்கேல் ! மானுடர் வாழும் பூமிக்கு நீ இறங்கிச் செல் ;

கிட்டெவ்ஷ் நகருக்குக் கீழேயுள்ள பூமியைப் பிடித்துக் குலுக்கு.

கிட்டெவ்ஷ் நகரே நீரில் மூழ்கிப் போகட்டும்.

இதன் பிறகுதான் ஆண்டவன் அடியார்களால் மனத்திருப்தியுடன் பிரார்த்தனை செய்ய முடியும்.

இடைவிடாமலும் களைப்பு மேலிடாமலும்,

காலையிலிருந்து மாலைவரை, எல்லா நேரங்களிலும் அவர்களால் பிரார்த்தனை செய்ய முடியும்.

உலகம் முடிவுறும்வரை ஆண்டுதோறும் அவர்களால் பிரார்த்திக்க முடியும் !

தேனுடன் கூடு பிணைந்து கிடப்பதைப் போன்று பாட்டியின் இதம் என்னில் அன்று பிணைந்து கிடந்தது. என் எண்ணம்கூட அவள் பாட்டின் பாணியில் இருந்ததாகத் தோன்றிற்று.

கோயிலிலே நான் பிரார்த்தனை செய்யவே இல்லை. தாத்தாவின் வஞ்சம் தீர்க்கும் பிரார்த்தனையை நான் விரும்பவில்லை ; பாட்டியின் கடவுளுக்கு நான் துதிபாடவும் விரும்ப

வில்லை. நான் இதை வெறுத்ததைப் போன்று பாட்டியின் கடவுளும் இதை வெறுக்க வேண்டும் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். மேலும், இவை புத்தகத்தில் அச்சிடப்பட்டிருந்தன. எனவே, படித்தவர்களுக்கு இது மனப்பாடமாக இருப்பதைப்போன்று, கடவுளுக்கும் இது மனப்பாடமாக இருக்க வேண்டும்.

எனவே, துன்பத்தால் என் இதயம் விறைத்தாலோ, அல்லது அன்றுடத் தொல்லையால் நான் தாக்கப்பட்டாலோ, நானே பிரார்த்தனை கீதம் யாக்க முயலுவேன். எந்தவிதமான முயற்சியுமின்றி வார்த்தைகள் உருவாக, என் துன்பம் நிறைந்த வாழ்க்கையைப்பற்றி நான் நினைத்தால் போதும் :

ஆண்டவனே ! ஆண்டவனே ! நான் எவ்வளவு மகிழ்ச்சியற்று வாழ்கிறேன் !

ஆண்டவனே ! நான் வளர்ந்து பெரியவனாக விரும்புகிறேன்.

எவருமே அனுபவித்து அறியாத அளவு வேதனையை நான் அனுபவித்துவிட்டேன் ; ஆகையால், ஆண்டவனே ! நான் தற்கொலை செய்துகொண்டால் என்னை மன்னித்துவிடும்.

இங்கே அவர்கள் எதையும் எனக்கு ஒருபோதும் கற்றுத்தர மாட்டேன் என்கிறார்கள்.

அவலட்சமான தீயவள், என் பாட்டியின் சகோதரி,

என்னைத் திட்டுவதும் என் காதைத் திருகுவதுமாக இருக்கிறாள்.

பயங்கரமான அதளபாதாளம்போல் எனக்கு வாழ்க்கை தோன்றுகிறது.

என் " பிரார்த்தனைகளில் " சில இன்றுகூட என் நினைவிலிருக்கின்றன. குழந்தையின் மனம் ஆத்மாவிலே மாறுத சில அடையாளத்தைப் பதிவு செய்கின்றது ; சாகும்வரையில் அவை மனத்திலே நிலைத்து நிற்கின்றன.

கோயிலில் இருப்பது மனதிற்கு மகிழ்ச்சி அளித்தது. வயல்களிலும், கானகத்திலும் அன்று நான் சாந்தியைக் கண்டதைப் போன்று இன்று கோயிலில் நான் சாந்தியைக் காண்

கிறேன். ஏற்கெனவே பல முறை புண்பட்ட, வாழ்க்கையின் மூரட்டுத்தனத்தால் ஏற்கெனவே மெருகிடப்பட்ட என் குழந்தை உள்ளத்தில், தெளிவற்ற கனவுகள் தோற்றின.

தாங்க முடியாத குளிராக இருந்தபொழுதும், நகரிலே பனிப் புயல் வீசியபொழுதும், பனிப்புயல் பனி மேகங்களால் வானத்தைத் திரையிட்டு மூடியபொழுதும், பனித்துளிகளுக்குக் கீழே பூமி விறைத்து, மீளமுடியாத, மீண்டும் உயிர்பெற முடியாத நிலையில் இருந்தபொழுதும்தான் நான் கோயிலுக்குச் சென்றேன்.

அமைதியான இரவுகளில் நகரிலே நடக்க நான் விரும்பினேன். வீதி வீதியாக நான் மேலும் கீழும் நடந்தேன். சந்தடியற்ற மூலைகளுக்கெல்லாம் சென்றேன். சிறகடித்துப் பறப்பதைப்போன்று நான் வேகமாக நடப்பேன்; வானத்திலே சந்திரன் தனியே சஞ்சரிப்பதைப் போன்று நானும் தனியே நடந்தேன். என் நிழல் எனக்கு முன்னே சென்றது. பனியிலே வீசிய ஒளியை என் நிழல் அணைத்தது. கம்பங்களிலும், வேலிகளிலும் என் நிழல் விழுந்தபொழுது சொம்ப வேடிக்கையாக இருந்தது. வீதியின் நடுவிலே கையில் குண்டாந்தடியுடன் ஆட்டுத்தோல் அங்கி அணிந்துகொண்டு இரவு காவற்காரன் வருவான். அவன் அருகில் நாய் நடந்து வரும். அவருடைய பருத்த உடல் ஒரு நாய்க்கொட்டிலைப் போன்றும், அது முற்றத்தை விட்டு வெளியே நகர்ந்து வந்து, ஏதோ ஒரு புரியாத இடத்துக்குப் புறப்பட்டுச் செல்வதைப் போன்றும், அதன்பின்னே குழம்பின நாய் ஒன்று ஓடி வருவதைப் போன்றும் எனக்குத் தோன்றியது.

அபூர்வமாக நகைக்கும் சிறுமிகளையும், அவர்களுடைய வாலிபர்களையும் நான் சந்தித்தேன். அவர்களும் பிரார்த்தனை மண்டபத்திலிருந்து ஓடிவந்துவிட்டார்கள் என்று நான் முடிவு செய்தேன்.

சில சமயங்களில் ஜன்னல்களிலிருந்து நூதனமான மணம்—பழக்கமற்ற, கவர்ச்சிகரமான மணம்—காற்றில் கலந்து வரும். வேறுவிதமான வாழ்க்கையை இந்த மணம் சுட்டிக் காட்டிற்று. ஜன்னல்களுக்குக் கீழே மோப்பம் பிடித்துக்கொண்டு நான் நிற்பேன். அங்கே எப்படிப்பட்ட மனி

தர்கள் வசிக்கிறார்கள் என்பதையும், அவர்கள் வாழ்க்கை எப்படி இருக்கிறது என்பதையும் கண்டுபிடிக்க அங்கே நின்றுகொண்டு பெரு முயற்சி செய்வேன். கண்ணியமான வர்கள் கோயிலில் இருக்க வேண்டிய நேரத்தில், இங்கே சிலர் சிரித்துக்கொண்டும், பேசிக்கொண்டும், வீணையில் மோகன இசையை இசைத்துக்கொண்டும் பொழுதைக் கழிக்கின்றனர்.

அமைதி நிலவிய டிக்கோனெவ்ஸ்காயா வீதியும், மார்டினெவ்ஸ்காயா வீதியும் சந்திக்குமிடத்தில் இருந்த ஒரு சிறிய, தணிந்த வீடு என் சிந்தனையைக் குழப்பிற்று. பனிக்கட்டை கரையும் காலத்தின் ஆரம்பத்தில் சந்திரன் பட்டொளி வீசிய ஓர் இரவில் நான் அந்த வீட்டைத் தற்செயலாகக் கண்டேன். திறந்திருந்த ஜன்னல் வழியே வெளிவந்த ஆவியுடன், இன்னொரு ஆச்சரியப்படத்தக்க ஓசையும் வெளிப்பட்டது. அதரங்களை மூடிக்கொண்டு ஒரு பலசாலி பாடுவதைப் போன்றிருந்தது, அந்த ஓசை. வார்த்தைகள் புரியவில்லை ; ஆனால் அந்தக் கீதத்தை நான் தெளிவாகக் கேட்க முடியாதவாறு ஒரு வாத்தியம் ஆத்திரமூட்டும் முறையில் ஒலித்துக்கொண்டிருந்ததென்றும், கீதத்தின் பிரவாகத்தில் அது குறுக்கிட்டது என்றும், கீதம் பழக்கமானதாகவும், புரியக் கூடியதாகவும் இருந்தது. நான் ஒரு மரத் தூண்டின்மீது உட்கார்ந்தேன். அற்புதமான, சகிக்க முடியாத சக்திபடைத்த பிடிலின் நாதமாகத்தான் இருக்க வேண்டும் அந்த நீதம் என்று நான் முடிவு செய்தேன். அதைக் கேட்க வேதனையாக இருந்தது. சில சமயங்களில் அது மிக சக்தியுடன் பாடியதால், வீடே நடுங்குவதைப் போன்றும் ஜன்னல் கண்ணாடிகள் குலுங்குவதைப் போன்றும் தோன்றிற்று. உருகும் பனி, கூரையிலிருந்து கொட்டிற்று. எனது கன்னங்களிலே கண்ணீர் வடிந்தது.

மரத்தூண்டிலிருந்து என்னைக் கீழே தள்ளும்வரையில் இரவு காவற்கான் வந்தது எனக்குத் தெரியவில்லை.

" இங்கே நீ ஏன் சுற்றுகிறாய் ?" என்று அவன் கேட்டான்.

" சங்கீதம்..." என்று நான் விளக்கினேன்.

" அதற்கென்ன ? நீ போய்விடு !"

நான் அந்தப் பகுதியைச் சுற்றி வேகமாக ஓடிவிட்டு, மீண்டும் அந்த வீட்டிற்கு வந்தேன். ஆனால் அப்பொழுது யாரும் பிடில் வாசித்துக்கொண்டிருக்கவில்லை நான் கனவு கண்ட சோக கீதத்திற்குப் பதிலாக அப்பொழுது உல்லாசமான குரல் அந்த வீட்டிலிருந்து கேட்டது.

சனிக்கிழமைதோறும் நான் அந்த வீட்டிற்குச் சென்றேன். ஆனால் வசந்த காலத்தில் ஒரு முறை மாத்திரம்தான் அந்தச் சங்கீதம் அங்கே ஒலித்தது. நடு நிசிவரையில் இடைவிடாது வாத்தியம் இசையைப் பொழிந்தது. வீடு திரும்பியதும் என்னை அவர்கள் அடித்தார்கள்.

நகரின் காலி வீதிகளில், நட்சத்திரங்களுக்குக் கீழே அலைந்து திரிந்ததால் என் அறிவு விரிந்தது. நகரின் எல்லையிலிருந்த வீதிகளில் நான் அதிகமாக நடந்தேன். முக்கிய வீதிகளில் அதிக விளக்குகள் இருந்ததால், என் எஜமானரின் நண்பர்கள் என்னைக் கண்டுவிடக் கூடும். அவர்கள் என்னை அங்கே கண்டுவிட்டால், நான் கோயிலுக்குச் செல்லவில்லை என்பது தெரிந்துவிடும். மேலும் முக்கிய வீதிகளில் நான் நடந்தால், குடிகாரர்களும், போலீஸ்காரர்களும், விபசாரிகளும் அங்கே குறுக்கிடுவார்கள். ஒதுக்குப் புறத் தெருக்களில், ஜன்னல்களுக்குத் திரையிட்டிருக்கவில்லை யென்றால், ஜன்னல்கள் மூலம் உள்ளே நடப்பதைக் காண முடியும்.

ஜன்னல்கள் மூலம் நான் பல காட்சிகளைக் கண்டிருக்கிறேன். ஜனங்கள் பிரார்த்தனை செய்வதையும், முத்தமிடுவதையும், போராடுவதையும், சீட்டு விளையாடுவதையும், தணிந்த குரலில் தீவிரமாக விவாதிப்பதையும் நான் கண்டிருக்கிறேன். என் கண் முன்னே பல சித்திரங்கள் வரிசை வரிசையாகத் தோன்றின.

ஒரு மேஜை முன் இரண்டு பெண்கள் – ஒருத்தி சிறுமி, மற்றவள் வயதானவள் – உட்கார்ந்திருப்பதை ஒரு ஜன்னல் வழியாக நான் கண்டேன். அவர்களுக்கு எதிரில் கைகளை ஆட்டிக்கொண்டு ஒரு மாணவன் புத்தகத்தைப் படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். நாற்காலியிலே சாய்ந்து கொண்டு அந்தச் சிறுமி அவன் படிப்பதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். வயதானவள் திடீரென்று கை

களால் முகத்தை மூடிக்கொண்டு அழ ஆரம்பித்தாள். மாணவன் புத்தகத்தைக் கீழே எறிந்தான். சிறுமி குதித்தெழுந்து அறைக்கு வெளியே ஓடியதும் மாணவன் வயதானவளுக்கு முன்னே மண்டியிட்டு அவள் கைகளை முத்தமிட ஆரம்பித்தான்.

தாடி வைத்துக்கொண்டிருந்த பெரிய மனிதன் ஒருவன் சிவப்பு சவிக்கை அணிந்திருந்த ஒரு பெண்ணை முழங்கால்களில் இருத்திக்கொண்டு, சிறு குழந்தையைத் தாலாட்டுவதைப் போன்று தாலாட்டிக்கொண்டிருந்ததை இன்னொரு ஜன்னல் மூலம் கண்டேன். அவன் பாடிக்கொண்டிருக்க வேண்டும். ஏனெனில் அவன் வாயை அகலத் திறந்தான் ; கண்களை உருட்டினான். அவள் குலுங்கக் குலுங்க நகைத்துக், கால்களை அந்தரத்தில் உதைத்துக்கொண்டு, அவன் காதுகளில் சாய்ந்தாள். அவளை மீண்டும் முழங்கால்களில் இருத்திக்கொண்டு அவன் தொடர்ந்து பாடினான். அவள் தொடர்ந்து சிரித்தாள். நீண்ட நேரம் நான் அவர்களையே பார்த்துக்கொண் டிருந்தேன். அவர்கள் கேளிக்கை இரவு முழுதும் நீடித்து நிற்கும் என்னும் எண்ணத்துடன் நான் பிறகு அப்பால் சென்றுவிட்டேன்.

இத்தகைய பல காட்சிகள் என் உள்ளத்திலே நிரந்தரமாகப் பதிந்தன. இவைபோன்ற காட்சிகளை நான் தேடி அலைந்ததால், பல சந்தர்ப்பங்களில் நான் காலம் கடந்து வீட்டிற்குச் சென்றேன். இதனால் என் எஜமானர்கள் என் மீது சந்தேகம் கொண்டனர்.

" எந்தக் கோயிலுக்கு நீ போனாய் ?" என்று அவர்கள் கேட்பார்கள். " எந்த உபதேசியார் உபதேசம் செய்தார் ?"

நகரிலுள்ள பாதிரிகளை யெல்லாம் அவர்களுக்குத் தெரியும் ; பைபிளிலிருந்து எந்த அத்தியாயம் என்று படிக்கப் படும் என்பதும் அவர்களுக்குத் தெரியும். எனவே பொய் சொன்னால் எளிதில் அதை அவர்கள் கண்டுபிடித்து விடுவார்கள்.

என் தாத்தாவின் கோபாவேசம் கொண்ட கடவுளை அந்த இரண்டு பெண்களும் வணங்கினர். தன்னைப் பக்தியுடனும் அச்சத்துடனும் வணங்க வேண்டும் என்று, அந்தக்

கடவுள் வேண்டினர். சண்டையிடும்பொழுதுகூட அந்தக் கடவுளின் பெயர் அவர்கள் நாவின் நுனியிலிருந்தது.

"பொறு! கடவுள் உன்னைத் தண்டிப்பார்! உன் சதையை அவர் வறுப்பார், வேசியே!" என்று ஒருவரை ஒருவர் ஏசிக்கொள்வர்.

ஞாயிற்றுக்கிழமை கிழவி அப்பங்கள் செய்வாள். அவை கொப்பரையில் ஒட்டிக்கொள்ளும்.

"நாசமாய்ப் போக!" என்று அவள் கோபத்துடன் கூவுவாள். அடுப்பொளியிலே அவள் முகமும் செக்கச் சிவந்திருக்கும்.

கொப்பரையை முகர்ந்து பார்த்ததும், அவள் முகம் கறுத்தது. அதைத் தரையில் எறிந்துவிட்டு, அவள் கூவினாள்:

"கடவுளே! கொப்பரையிலே கொழுப்பிருந்தது! பரிசுத்த திங்களன்று அதைச் சுத்தம் செய்ய நான் மறந்துவிட்டேன்! கடவுளே!"

உடனே மண்டியிட்டு, அவள் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தாள்.

"அருமைக் கடவுளே, கருணை கூர்ந்து பாவியாகிய என்னை மன்னித்துவிடு! கிழட்டு முட்டாளாகிய என்னைத் தொடர்ந்து தண்டிக்காதீர்கள், ஆண்டவனே—"

கெட்டுப்போன அப்பங்களை நாய்க்குக் கொடுத்தார்கள்; கொப்பரையை எரித்தார்கள். அதன் பிறகு சின்ன எஜமானி இந்தச் சம்பவத்தைக் கிழவிக்கு நினைவூட்டிக்கொண்டே இருந்தாள்.

"புனித நாளிலே சுத்தம் செய்யப்படாத கொப்பரையில் அப்பம் சுடுகிறவள் தானே நீ!" என்று சண்டை போடும் பொழுதெல்லாம் சின்ன எஜமானி இடித்துக் கூறுவாள்.

கேவலமான தங்கள் வாழ்க்கையின் இருண்ட நிலைகளுக்கும், தங்கள் குடும்ப விவகாரங்களுக்கும் அவர்கள் கடவுளை இழுத்தார்கள். உயர்ந்த ஒன்றுக்குச் சேவை செய்யவே ஒவ்வொரு நிமிடத்தையும் செலவிடுவதைப் போன்று, எல்லா விவகாரங்களிலும் அவர்கள் கடவுளை இழுத்தது, கேவலமான தங்கள் வாழ்க்கைக்கு ஒரு முக்கியத்வம் அளித்ததைப் போன்றிருந்தது. ஒவ்வொரு விவகாரத்திற்கும்

கடவுளே இழுக்கும் அவர்கள் வியாதி என்னையும் பீடித்தது. கண்ணுக்குத் தெரியாத கண் என்னைப் பார்ப்பதைப் போன்று நான் தனிச்சையாக மூலைகளைப் பார்ப்பேன். இரவு நேரத்தில் பயம் என்னைப் பீடிக்கும். குசினியிலே விக்கிரகத்திற்கு முன் எரிந்துகொண்டிருந்த அணையாவிளக்கிலிருந்து இந்தப் பயம் எழுந்தது.

கிலுவையிருந்த பீரோவுக்கு அருகில் இரண்டு கதவுகளுள்ள பெரிய ஜன்னல் இருந்தது. ஜன்னலுக்கு அப்பால் சூன்யமான வெட்டவெளி பரந்து கிடந்தது. வீடு, குசினி, நான் உட்பட, எல்லாம் அந்தச் சூன்யத்வத்தின் ஓரத்திலே தொங்குவதைப் போன்றிருந்தது. கொஞ்சம் அசைந்தால் கூட, ஜலத்தில் எறியப்பட்ட கல்லைப்போன்று, நாங்கள் நட்சத்திரங்களுக்கு அப்பாலுள்ள விறைத்த அதல பாதாளத்திற்கு எங்களை இழுத்துச்சென்றுவிடுவதைப் போன்றிருந்தது அது. நான் நீண்ட நேரம் படுக்கையில் அசையாது படுத்துக் கொண்டிருப்பேன் ; அசைய எனக்குப் பயம். உலகத்தின் பயங்கரமான முடிவை எதிர்பார்த்துக்கொண்டு அசையாது படுத்துக்கொண் டிருந்தேன்.

இந்தப் பயத்திலிருந்து நான் எப்படி விடுபட்டேன் என்பது எனக்கு நினைவில்லை ; ஆனால் இந்தப் பயத்திலிருந்து நான் விடைவில் விடுபட்டேன் என்பது மாத்திரம் என் நினைவிலிருக்கிறது. என் பாட்டியின் கருணைக் கடவுள் என் உதவிக்கு வந்தார். எனினும் ஒரு உண்மை எனக்குத் தெம்பளித்தது ; நான் எந்தத் தவறும் செய்ததில்லை ; நான் நிரபராதியாக இருந்ததால் என்னைத் தண்டிக்க எந்தச் சட்டமும் இடமளிக்கவில்லை ; மற்றவர்கள் செய்த பாவங்களுக்கு என்னை ஜவாப்தாரியாக்க முடியாது.

வசந்த காலத்தில் நான் பிரார்த்தனை மண்டபத்திற்குச் செல்லவில்லை. இயற்கை எழிலின் வெல்ல முடியாத சக்தி கோயிலிலிருந்த என்னை அப்பால் இழுத்துச் சென்றது. இதைத் தவிர, விக்கிரகத்திற்கு முன் கொளுத்திவைக்கும் மெழுகுவர்த்தி வாங்க எனக்குப் பணமும் கிடைத்துவிட்டால், என்பாடு கொண்டாட்டம்தான். அந்தப் பணத்தைக்கொண்டு கோலிகள் வாங்கி, பிரார்த்தனை நேரத்தில் நான் விளையாடு

வேன். எனவே காலங் கடந்து வீட்டிற்குத் திரும்புவேன். ஒரு நாள் பிரார்த்தனைக்காக சொட்டி வாங்கிவர என்னிடம் தந்த பத்துக் காபெக்குகளை நான் விரயம் செய்துவிட்டு, கர்ப்பக்கிருகத்திலிருந்து பாதிரி கொண்டுவந்த தட்டிலிருந்த இன்னொருவரின் சொட்டியை நான் எடுத்துவிட்டேன்.

விளையாட்டு என்றால் எனக்கு வெறிகலந்த பிரியம். நான் பலசாலியாக இருந்தேன். எனவே எங்கள் ஜில்லாவிலே சிறந்த பந்து விளையாடுகிறவன் என்ற கீர்த்தி எனக்குக் கிடைத்தது.

ஈஸ்டர் விரதத்திற்கு வேண்டிய ஏற்பாடு செய்யும் வேலை எனக்கு அளிக்கப்பட்டது. பாவ மன்னிப்புப் பெற எங்கள் அண்டை வீட்டுக்காரர் பாதிரி டோரிமிடோன்ட் போக்ரோவ்ஸ்கியிடம் நான் சென்றேன். அவர் ஒரு கடுமையான மனிதரென்று நான் நினைத்தேன். அவருக்கு நான் இழைத்த தீங்குகளெல்லாம் என் நினைவிற்கு வந்தன: கல்லை எறிந்து அவர் வேனிற்கால மண்டபத்தை நான் பாழ்படுத்தியிருக்கிறேன்; அவர் குழந்தைகளுடன் சண்டையிட்டிருக்கிறேன்; அவர் வெறுப்பைப் பெறக் கூடிய இன்னும் பல விஷயங்கள் செய்திருக்கிறேன். பாவ மன்னிப்புப் பெற அந்தச் சிறிய கோயிலில் நான் காத்து நின்றபொழுது இவைகளெல்லாம் என் மனதிலே பதிந்திருந்தன. என் இதயம் வேகமாக அடித்தது.

ஆனால் பாதிரி டோரிமிடோன்ட் என்னை அன்புடன் வரவேற்றார்!

"என் அண்டை வீட்டுக்காரர்!" என்று ஆச்சரியத்துடன் அவர் கூறினார். "நல்லது, மண்டியிடு. உன் பாவங்களை என்னிடம் சொல்!"

என் முகத்தை, கனத்த வெல்வெட் துணியால் அவர் மூடினார். அங்கே எழுந்த நறும்புகை என்னை மூச்சுத் திணறவைத்தது. நான் சொல்ல விரும்பாத வார்த்தைகளைச் சொல்லுவதை இது மேலும் சிரமமாக்கிற்று.

"முதியவர்களுக்கு நீ கீழ்ப்படிந்து நடக்கிறாயா?"

"இல்லை."

"என் ஆத்மாவில் பாவத்தின் கறை என்று சொல்."

நானே ஆச்சரியப்படும் வகையில் நான் சொன்னேன் :

" கர்ப்பக்கிருஹத்திலிருந்து கொண்டுவந்த சொட்டியை நான் திருடினேன்."

சிறிது நேரம் யோசித்துவிட்டு, " நீ என்ன சொல்லுகிறாய் ? எங்கே ?" என்று மெதுவாகக் கேட்டார் பாதிரி.

" மும்மூர்த்திகள் கோயிலில், பொக்ரோவ் கோயிலில், நிக்கோலா—"

" எல்லாக் கோயில்களிலும் செய்ததாகவா சொல்லுகிறாய் ? அது கெட்ட காரியம், மகனே ! இது பாவம். உனக்குப் புரிகிறதா ?"

" ஆம்."

" என் ஆத்மாவில் பாவத்தின் கறை என்று சொல். அசட்டுப் பையா—தின்னுவதற்காக நீ திருடினாயா ?"

" சில சமயங்களில் நான் சொட்டியைத் தின்றேன். மற்றும் சில சமயங்களில் நான் தாயம் விளையாடிப் பணத்தைத் தோற்றதால், வீட்டிற்குப் பிரசாதம் எடுத்துச் செல்வதற்காகத் திருடினேன்.

தணிந்த குரலில் பாதிரி டோரிமிடோன்ட் தனக்குத் தானே ஏதோ முணுமுணுத்துக்கொண்டார். பிறகு என்னிடம் மேலும் சில கேள்விகள் கேட்டார். அதன் பிறகு கடுமையான குரலில் கேட்டார் :

" ரகசிய அச்சகம் அச்சிட்ட புத்தகங்களை நீ படித்திருக்கிறாயா ?"

இந்தக் கேள்வி எனக்கு விளங்கவில்லை.

" என்ன ?" என்று நான் கேட்டேன்.

" தடுக்கப்பட்ட புத்தகங்கள்—அவைகளை நீ படித்திருக்கிறாயா ?"

" இல்லை, நான் படித்ததில்லை."

" நல்லது. உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டது. எழுந்திரு !"

ஆச்சரியத்துடன் நான் அவர் முகத்தைப் பார்த்தேன். அவர் முகக்குறி கருணை நிறைந்ததாகவும், தீக்ஷண்யமாகவும் இருந்தது. எனவே நான் வெட்கப்பட்டேன். பாவ மன்னிப்புப் பெற என்னை அனுப்பிய என் எஜமானி மயிர்க்கூச்சிடும்

பல விஷயங்களை என்னிடம் சொன்னாள். என்னைப் பய முறுத்தி, எல்லாக் குற்றங்களையும் நான் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதற்காக அவள் இவைகளைச் சொன்னாள்.

"உங்கள் வேளிற்கால மண்டபத்தில் நான் கற்களை எறிந்தேன்" என்றேன் நான்.

பாதிரி தலையை உயர்த்தினார்.

"அதுவும் தவறு. நீ ஓடிப் போய்விடு."

"உங்கள் நாய்தீதும்."

"அடுத்தவர்?" என்று, எனக்கு அப்பால் பார்த்த வாறே பாதிரி டோரிமிடோன்ட் சொன்னார்.

வேதனையுடனும், ஏமாற்றத்துடனும் நான் வீடு திரும்பினேன். பாவ மன்னிப்பை எதிர்பார்த்துக்கொண்டு என் நரம்புகள் முறுக்கேறி யிருந்தன. ஆனால் இது சர்வ சாதாரணமான நிகழ்ச்சியாக இருந்தது. இதிலே எனது கவனத்தைக் கவர்ந்த ஒரே விஷயம், அந்த ரகசிய புத்தகங்களைப்பற்றிய கேள்விதான். பெண்களுக்கு அந்த மாணவர் படித்துக்காட்டிய புத்தகம் என் நினைவிற்கு வந்தது. "அது சிறந்தது!" என்பதும் என் நினைவிற்கு வந்தது. விளங்காத சித்திரங்களுள்ள பெரிய கருப்புப் புத்தகங்கள் பல அவரிடமும் இருந்தன.

மறுநாள் பதினைந்து காபெக்குகளுடன் என்னைக் கோயிலுக்கு அனுப்பினார்கள். அந்த வருடம் ஈஸ்டர் தாமதித்து வந்தது. பனி உருகிவிட்டது. வரண்ட தெருக்களிலே தூசி சுழன்றது. சூரியன் ஒளியுடன் பிரகாசித்தது. உல்லாசமான நேரம் அது.

கோயில் சுவருக்கு அருகில் சில தொழிலாளிகள் ஆவேசத்துடன் தாயம் ஆடிக்கொண் டிருந்தனர். சிறிது நேரம் கடந்து கோயிலுக்குச் செல்ல நான் முடிவு செய்தேன்.

"நானும் விளையாடலாமா?" என்று நான் கேட்டேன்.

"ஒரு ஆட்டத்திற்கு ஒரு காபெக்" என்று பெருமையுடன் சொன்னான், அம்மைவடுவும் செம்பட்டைத் தலையும் கொண்ட ஒருவன்.

அதே பெருமையுடன் நானும் சொன்னேன்:

" இடது புறம் மூன்றுவதாக இருக்கும் தாயத்தின்மீது மூன்று காபெக் நான் பந்தயம் கட்டுகிறேன்."

" பணத்தைக் கட்டு, பார்க்கலாம்."

விளையாட்டு ஆரம்பமாயிற்று!

பதினேந்து காபெக் நாணயத்தை மாற்றி, மூன்று காபெக் என் தாயத்திற்கு அருகில் வைத்தேன். அதை யார் அடிக்கிறார்களோ அவர்களுக்கு அந்தப் பணம் சேரும். அதை யார் அடிக்கத் தவறுகிறார்களோ, அவர்கள் எனக்கு மூன்று காபெக் தர வேண்டும். அதிர்ஷ்டம் என் பக்கமிருந்தது. இருவர் அதை அடிக்க முயன்று தோல்வி அடைந்தார்கள். வயதானவர்களிடமிருந்து நான் ஆறு காபெக் ஜெயித்தேன் என்பது இதன் பொருள். இது என் உணர்ச்சியைத் தூண்டிவிட்டது.

"அவனைக் கண்காணியுங்கள்! இல்லை யென்றால்,ஜெயித்த பணத்துடன் அவன் ஓடிவிடுவான்" என்று விளையாடுகிறவர்களில் ஒருவன் சொன்னான்.

இது என்னைப் புண்படுத்திற்று.

" இடது புறம் கடைசியில் இருக்கும் தாயத்தின்மீது ஒன்பது காபெக்குகள்!" என்று நான் துடுக்காகச் சொன்னேன்.

என் துணிச்சல் விளையாடுகிறவர்களுக்கு நம்பிக்கையூட்டவில்லை. ஆனால் என் வயதுள்ள ஒரு வாலிபன் அவர்களை எச்சரித்தான்.

" அவன்மீது கண் வையுங்கள்! அவன் அதிர்ஷ்டசாலி! அவனை எனக்குத் தெரியும்!"

" அதிர்ஷ்டசாலி என்று சொன்னாய்? சரி, பார்க்கலாம்!" என்று சக்கிலியனைப் போன்றிருந்த மெலிந்த ஒரு தொழிலாளி சொன்னான்.

குறி பார்த்து என் தாயத்தை அவன் அடித்தான்.

" இது எப்படி இருக்கிறது?" என்று என்மீது குனிந்துகொண்டு அவன் கேட்டான்.

" வலது புறம் கடைசியிலிருக்கும் தாயத்தின்மீது மூன்று காபெக்" என்று பதில் கூறினேன்.

" அவைகளையும் நான் ஜெயிப்பேன் !" என்று பெருமையடித்தான், சக்கிலியன். ஆனால் அவன் தவறிவிட்டான்.

தொடர்ச்சியாக மூன்று முறைக்கு அதிகமாகத் தாயத்தின்மீது பந்தயம் கட்டுவதை விளையாட்டு விதிகள் தடுத்தன. எனவே மற்றவர்களுக்காக நான் விளையாடி மேலும் நான்கு காபெக்குகள் ஜெயித்தேன். ஆனால், மீண்டும் என் முறை வந்ததும், நான் எல்லாவற்றையும் இழந்துவிட்டேன். பிரார்த்தனை முடியும் நேரத்தில் இது நடந்தது. கோயில் மணி ஒலித்தது; ஜனங்கள் கோயிலிலிருந்து வெளியே வந்தனர்.

" பாடம் படித்தாயா ?" என்று கேட்டுக்கொண்டே என் குடுமியைப் பிடிக்க முயன்றான் சக்கிலியன். ஆனால் அவனிடமிருந்து தப்பி நான் ஓடிவிட்டேன். நன்றாக உடைகள் அணிந்திருந்த ஒரு வாலிபரை அணுகி, மரியாதையாக நான் கேட்டேன் :

" பிரார்த்தனை முடிந்து வருகிறீர்களா ?" என்று.

" அதனால் உனக்கென்ன ?" என்று சந்தேகத்துடன் பார்த்துக்கொண்டு என்னைக் கேட்டார் வாலிபர்.

பிரார்த்தனை எப்படி நடந்தது, பாதிரி என்ன சொன்னார், பிரசாதம் வாங்குகிறவர் என்ன செய்ய வேண்டும் என்ற விபரங்களைச் சொல்லுமாறு நான் அவரைக் கேட்டேன்.

தலையைத் தாழ்த்திக்கொண்டு, அந்த வாலிபர் உறுமினார்:

" பிரார்த்தனை செய்யாமல் ஓடிவிட்டாயா, முண்டமே ! நான் ஒன்றுமே சொல்ல மாட்டேன் ! உன் அப்பா உன்னை நையப் புடைக்கட்டும் !"

அவர்கள் என்னிடம் பல கேள்விகள் கேட்பார்கள் ; நான் பிரார்த்தனைக்குச் செல்லவில்லை என்பதைத் தெரிந்து கொள்ளுவார்கள் என்னும் முடிவுடன் வீட்டிற்கு ஓடினேன்.

ஆனால், என்னைப் பாராட்டிவிட்டு என்னிடம் ஒரு கேள்விதான் கேட்டாள் கிழவி :

" கோயில்காப்போனுக்கு எவ்வளவு கொடுத்தாய் ?"

" ஐந்து காபெக்குகள் " என்றேன் நான்.

" மூன்று கொடுத்தால் போதுமே. ஏழு காபெக்குகள் உன் செலவுக்கு மிஞ்சியிருக்குமே, முட்டாள் !"

அது வசந்த காலம். ஒவ்வொரு நாளும் முந்தின நாளை விடப் புதிய பொலிவுடன் விளங்கிற்று. புதிதாகத் துளிர்த்த புல்லிலிருந்தும், புதிதாகக் கிளைத்த கிளைகளிலிருந்தும் ஆளை மயக்கும் நறுமணம் கமழ்ந்தது. வயலுக்குச் சென்று அங்கே வெப்பமான தரையில் படுத்து வானம்பாடிகளின் கீதத்தைக் கேட்க எனக்கு மொம்ப ஆசையாக இருந்தது. அதற்குப் பதிலாக, குளிர்கால உடைகளைச் சுத்தம் செய்து அவைகளைப் பெட்டியில் அடுக்கிவைக்க உதவி புரிந்துகொண்டும், புகையிலையைப் பதம் செய்துகொண்டும், நாற்காலிகளில் படிந்திருந்த தூசியைத் தட்டிக்கொண்டும்—காலையிலிருந்து இரவு வரையில் எனக்கு வெறுப்பளித்த, தேவையற்ற வேலைகளைச் செய்துகொண்டும்—நான் இங்கே இருக்கிறேன்.

ஓய்வு நேரத்தில் நான் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. எங்கள் வீதி சோபையற்று இருந்தது. அந்த வீதியைக் கடந்து அப்பால் செல்ல எனக்கு அனுமதியும் கிடைக்கவில்லை. எங்கள் வீதியிலே களைத்துப்போன, ஆத்திர மூட்டும் சாக்கடை தோண்டுவோரும், சமையற்காரிகளும், வண்ணத்திகளும் நிறைந்திருந்தனர். ஒவ்வொரு மாலையிலும் பொருத்தமற்ற ஜோடிகள் இணைந்தன ; இந்தக் காட்சி எனக்கு வேதனையும், வெறுப்பும் அளித்ததால், நான் குருடனாக இருந்தால்கூடப் பரவாயில்லை என்று எனக்குத் தோன்றிற்று.

கத்தரிக்கோலையும், வர்ணக் காகிதங்களையும் எடுத்துக் கொண்டு நான் மாடத்தின்மீது ஏறினேன். அங்கே உட்கார்ந்துகொண்டு காகிதங்களைப் பல தினுசுகளாகக் கத்தரித்து, அவைகளால் உத்திரங்களை அலங்கரித்தேன். என் சலிப்பைத் தீர்க்க அது சிறிது உதவிபுரிந்தது. ஜனங்கள் அதிகம் தூங்காத, அதிகம் சண்டையிடாத, பிடிவாதமாகக் கடவுளிடம் முறையிடாத, தங்கள் கடுமையான அபிப்பிராயங்களால் மற்றவர்கள் மனதைப் புண்படுத்தாத இடத்துக்கு எங்காவது சென்றுவிட வேண்டும் என்னும் ஆசை என்னில் அதிகரித்தது.

ஈஸ்டருக்கு முந்தின சனிக்கிழமை அற்புதங்கள் செய்யும் விளாடிமிர்ஸ்காயா கன்னிமாதாவின் விக்கிரகத்தை ஓர் ஞஸ்கி கோயிலிலிருந்து எங்கள் நகரத்திற்குக் கொண்டு

வந்தனர். ஜூன் மாத மத்திவரையில் விக்கிரகம் நகரத்தின் விருந்தாளியாக இருக்கும். அந்தக் காலத்தில் கன்னி மாதா ஒவ்வொரு வீட்டிற்கும் விஜயம் செய்வாள்.

ஒரு வாராந்திர நாள் காலையில் என் எஜமானர்களின் வீட்டிற்கு விக்கிரகம் எடுத்துவரப்பட்டது. சுகினியில் பித்த ளைப் பாத்திரங்களை மெருகுபடுத்திக்கொண்டிருந்தபொழுது, அடுத்த அறையிலிருந்து சின்ன எஜமானி பீதி கலந்த குரலில் கூவுவது எனக்குக் கேட்டது :

"போய், முன் கதவைத் திற ! அவர்கள் ஓரான்ஸ்காயா கன்னி மாதாவைக் கொண்டுவருகிறார்கள் !"

நான் அசுத்தமாக இருந்தேன். என் கைகளிலே கிரீசும், செங்கற்றூளும் ஒட்டிக்கொண்டிருந்தன. எனினும் நான் கீழே இறங்கிக் கதவைத் திறந்தேன். வாசற்படியிலே ஒரு கையில் விளக்குடனும், மற்றொரு கையில் தூப கலசத்துட னும் ஒரு இளம் பாதிரி நின்றுகொண்டிருந்தார்.

" இவ்வளவு நேரமாச்சா ?" என்று அவர் முணுமுணுத் தார். " வெளியே வந்து உதவி செய்."

குறுகிய படிக்கட்டுகளில் கனத்த விக்கிரகத்தைச் சுமந்துகொண்டு இரண்டு நகரவாசிகள் ஏறினர். ஒரு மூலையில் தோள் கொடுத்தும், என் அசுத்தமான கைகளால் அதைப் பிடித்தும் அவர்களுக்கு நான் உதவிபுரிந்தேன். எங்களுக்குப் பின்னே பருமனான பாதிரிகள் விருப்பின்றி மந்திரத்தை உச்சரித்தனர்.

" பரிசுத்த கன்னி மாதாவே ! உங்கள் பரிவை நாங்கள் வேண்டுகிறோம்— "

" அசுத்தமான கரங்களால் அவளைச் சுமந்து வந்ததற் காக என் கரங்களை வாடிவிடும்படி அவள் அருளலாம் " என்று நான் ஏக்கமுற்று நினைத்தேன்.

சுத்தமான துணியால் மூடப்பட்டிருந்த இரண்டு நாற் காலிகளில் அவர்கள் விக்கிரகத்தை வைத்தனர். அதன் இரு பக்கங்களையும் ஒளிவீசும் கண்களும் அடர்ந்த கேசமும் மகிழ்ச்சி பொங்கும் வதனமுமுள்ள தேவலோகவாசியைப் போன்றிருந்த இரண்டு அழகிய இளம் பாதிரிகள் பிடித்துக் கொண்டிருந்தனர்.

பிரார்த்தனை ஆரம்பமாயிற்று.

"கடவுளின் அருள்பெற்ற மாதாவே....." என்று, அடர்த்தியான ரோமங்களால் மூடப்பட்ட காதில் விரலிவிட்டுக்கொண்டு ஒரு பெரிய பாதிரி கணீரென்ற குரலில் உச்சரித்தார்.

"பரிசுத்த கன்னி மாதாவே! எங்கள்மீது கருணை புரிவாய்" என்று பாதிரிகள் தளர்ச்சியுடன் பாடினர்.

கன்னி மாதாவை நான் நேசித்தேன். பாட்டியின் கதைப்படி அவள்தான் பூமியில் மலர்களையும், இன்பத்தையும் சிருஷ்டி செய்தவள்; ஏழைகளின் சாந்திக்காக அவள்தான் உலகிலுள்ள சகல நல்லவைகளையும், அழகியவைகளையும் சிருஷ்டி செய்தவள். அவளை முத்தமிடும் என் முறை வந்தது, பெரியவர்கள் எப்படி முத்தமிட்டார்கள் என்பதைக் கவனிக்காமல், நடுங்கிக்கொண்டே அவள் வாயில் நான் முத்தமிட்டேன்.

ஒருவரின் பலத்த கரங்கள் என்னை அப்பால் இழுத்து, கதவின் மூலையில் தள்ளின. பாதிரிகள் விக்கிரகத்தைத் தூக்கிச் சென்றது எனக்கு ஞாபகமில்லை. ஆனால் தனியில் உட்கார்ந்திருந்த என்னைச் சுற்றி நின்றவாறு எனக்கு என்ன நேரும் என்பதைப்பற்றி என் எஜமானரும், எஜமானிகளும் விவாதித்துக்கொண்டிருந்தது எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது.

"நாம் பாதிரியிடம் இதைப்பற்றிப் பேச வேண்டும். நம்மைவிட இந்த விஷயங்கள் அவருக்கு அதிகமாகத் தெரியும். நீ சுத்த வெகுளி!" என்று என்னைக் கண்டிக்கும் முறையில் என் எஜமானர் சொன்னார். "கன்னி மாதாவின் அதரங்களில் முத்தமிடக் கூடாது என்பது உனக்குத் தெரியாதா? நீ படித்த பள்ளிக்கூடம் நன்றாகத்தான் இருக்கிறது!"

தண்டிக்கப்பட்டவனைப்போன்று நான் பல நாட்கள் காத்திருந்தேன். நான் கன்னி மாதாவை அசுத்தமான கரங்களால் தொட்டேன்; பிறகு தவறான முறையில் அவளை முத்தமிட்டேன். இதற்கு நான் ஜவாப் சொல்ல நேரும்! நிச்சயமாக நான் இதற்குப் பரிகாரம் காண நேரும்!

ஆனால் தெரியாமல் நான் செய்துவிட்ட குற்றங்களை, அன்பால் தூண்டப்பட்டுச் செய்த குற்றங்களை, கன்னி மாதா

மன்னித்துவிட்டாள் என்று தோன்றுகிறது. அல்லது, இந்த நல்ல மனிதர்கள் எனக்கு அடிக்கடி அளிக்கும் தண்டனையில் அவள் அளித்த லகுவான தண்டனை தெரியாமலே நிறைவேற்றப்பட்டிருக்கலாம்.

கிழவியை ஆத்திரமூட்டுவதற்காக நான் சொல்லுவேன்:

"கன்னி மாதா என்னைத் தண்டிக்க மறந்துவிட்டதாகத் தோன்றுகிறது!" என்று.

"நீ பொறு" என்பாள் அவள். "இன்னும் காலம் கடந்துவிடவில்லை!"

ஊதாநிறத் தேயிலைப் பொட்டலக் காகிதங்களால் உத்திரங்களை அலங்கரித்துக்கொண்டிருக்கும்பொழுது, எனக்குத் தோன்றின விஷயங்களைப்பற்றி நான் கவிதைகள் புனைந்து, அவைகளைக் கோயில் ராகத்தில் பாடுவேன்; கால்மிக்குகள் குதிரைமீது பிரயாணம் செய்யும்பொழுது பாடுவதைப்போல.

மீண்டும் இங்கே,
அலங்காரமான தரையில் நான் அமர்ந்து இருக்கிறேன்.
காகிதத் துண்டுகளைக் கத்தரித்துக்கொண்டும்,
மெழுகு திரித் துண்டுகளை எரித்துக்கொண்டும் இருக்கிறேன்;
நாயாக இருந்திருந்தால் இங்கிருந்து நான் ஓடிப்போய் இருக்கக் கூடும்.
'அட மடையா! உனது முகத்தை மூடிக்கொள்; கீழ்ப்படிந்து நடக்கக் கற்றுக்கொள்' என்று.
அவர்கள் இங்கே என்னை அடிக்கடி நச்சரிக்கிறார்கள்.

என் அலங்காரத்தைப் பார்த்துவிட்டு, தலையைக் குலுக்கிக்கொண்டே கிழவி முனகுவாள்:

"குசினியை ஏன் இப்படி அலங்கரிக்கிறாய்?"

ஒரு நாள் எஜமானர் குசினிக்கு வந்து, என் கை வேலைகளைக் கவனித்துவிட்டு, நெடுமூச்சுடன் சொன்னார்:

"நீ வேடிக்கையானவன், பெஷ்கோவ். நீ எந்த மாதிரி உருவாகப் போகிறாய்? மந்திரவாதியாகவா? சொல்ல முடியாது—"

முதலாவது நிக்கோலாஸ் காலத்திய ஒரு ஐந்து காபெக் நாணயத்தை அவர் எனக்குக் கொடுத்தார்.

அருமையான கம்பியால் அந்த நாணயத்திற்கு ஒரு தொங்கல் செய்து, முக்கியமான ஒரு இடத்தில் மெடலைப் போன்று அதை நான் தொங்கவிட்டேன்.

ஆனால், மறு நாள் நாணயம் மறைந்துவிட்டது. அந்தக் கிழவிதான் அந்த நாணயத்தைத் திருடினாள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

5

வசந்த காலத்தில் நான் அங்கிருந்து ஓடிவிட்டேன். காலைச் சிற்றுண்டிக்கு ஒரு நாள் காலை நான் சொட்டி வாங்கிக் கொண்டிருந்தபொழுது, சொட்டிக்காரன் தனது மனைவியுடன் சண்டையிட்டு அவள் உச்சந்தலையில் ஓங்கி அடித்துவிட்டான். வீதிக்கு ஓடின அவள் அங்கே சாய்ந்துவிட்டாள். வீதியில் கூட்டம் கூடிவிட்டது. வண்டியில் கிடத்தி அந்தப் பெண்ணை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றனர். நான் வண்டியைப் பின்தொடர்ந்து ஓடினேன். என்னை அறியாமலேயே கையில் இருபது காபெக்குகளுடன் நான் வால்கா நதிக்கரையை அடைந்தேன்.

வசந்த காலம் மிருதுவாகப் புன்னகை புரிந்தது. வால்கா விலே வெள்ளம் இரு கரையும் புரண்டு ஓடிற்று. பூமி விரிந்து பரந்து ஜீவன் நிறைந்திருந்தது. ஆனால் அன்றுவரையில் சுண்டெலி வளையில் அடைந்து கிடப்பதைப் போன்று நான் அடைந்து கிடந்தேன். என் எஜமானரிடமோ, குடாவிலேவிலுள்ள என் பாட்டியிடமோ திரும்பிச் செல்லக் கூடாது என்று நான் முடிவு செய்தேன். பாட்டிக்குக் கொடுத்த வாக்குறுதியை நான் நிறைவேற்றுததால், அவள் முகத்தில் விழிக்க எனக்கு வெட்கமாக இருந்தது. மேலும் நான் திருப்பிச் சென்றால், தாத்தா என்னைக் கேலி செய்வார்.

இரண்டு, அல்லது மூன்று நாட்கள் நான் நதிக்கரையில் அலைந்தேன். நல்லெண்ணம் படைத்த 'ஸடூவிடோர்கள்'

எனக்கு உணவளித்தனர்; இரவில் அவர்களுடன் படுத்துறங்கினேன். கடைசியில் அவர்களில் ஒருவன் சொன்னான்:

"இப்படி அலைவதால் உனக்கு ஒரு நன்மையும் ஏற்படாது, பையா! 'டோப்ரி' கப்பலில் நீ ஏன் வேலைக்குச் சேரக் கூடாது? பாத்திரங்களைக் கழுவ அங்கே ஒரு ஆள் தேவையாம்."

நான் அங்கே போனேன். தாடி வைத்துக்கொண்டிருந்த நெட்டையான, கப்பல்காரர் கண்ணுடி அணிந்த கண்களால் என்னைப் பார்த்தார்.

"மாதம் இரண்டு ரூபிள்" என்று அவர் நிதானமாகச் சொன்னார். "பாஸ்போர்ட் இருக்கிறதா?"

என்னிடம் பாஸ்போர்ட் இல்லை. ஒரு நிமிடம் யோசித்துவிட்டு, கப்பல்காரர் சொன்னார்:

"உன் அம்மாவை அழைத்து வா" என்று.

பாட்டியை அழைத்து வர நான் ஓடினேன். நான் மேற்கொண்ட வழியை அவள் ஆமோதித்தாள். தாத்தாவிடம் விஷயங்களை விளக்கி, எனக்குப் பாஸ்போர்ட் பெற வர்த்தகப் போர்டிடம் செல்லுமாறு தூண்டினாள். அவளே கப்பலுக்கு என்னுடன் வந்தாள்.

"ரொம்ப நல்லது!" என்று எங்களைக் கடைக்கண்ணால் பார்த்துவிட்டு, கப்பல்காரர் சொன்னார்: "வாருங்கள்" என்று.

அவர் கப்பலின் பின்புறத்திற்கு என்னை அழைத்துச் சென்றார். அங்கே வெள்ளைக் கோட்டும், வெள்ளைத் தொப்பியும் அணிந்திருந்த பருமனான ஒரு சமையற்காரன் தேநீர் குடித்துக்கொண்டும், சிகரெட் குடித்துக்கொண்டும் உட்கார்ந்திருந்தான். அவனை நோக்கி என்னைத் தள்ளினார், கப்பல்காரர்.

"பாத்திரம் கழுவுகிறவன்" என்று.

உடனே அவர் போய்விட்டார். சமையற்காரன் உறுமினான். அவன் கரிய மீசை குத்திட்டு நின்றது. அவன் கூச்சலிட்டான்:

"மலிவாக இருந்தால், நீ பிசாசைக்கூட வேலைக்கு அமர்த்துவாய்!"

ஒட்ட வெட்டப்பட்டிருந்த கரிய கூந்தலால் மறைக்கப்பட்ட தனது பெரிய தலையைக் கோபத்துடன் பின்னே சாய்த்

துக்கொண்டும் தனது கருவிழிகளால் என்னை உற்றுப் பார்த்துக்கொண்டும் கேட்டான் :

" நீ யார் ?" என்று.

இந்த மனிதனை நான் விரும்பவில்லை. அவன் வெண் உடைகள் அணிந்திருந்தாலும், அவன் அசுத்தமாக இருந்தான். அவன் விரல்களில் ரோமங்கள் நீண்டு வளர்ந்திருந்தன; அவனது பெரிய காதுகளிலிருந்து ரோமங்கள் வெளியே நீட்டிக்கொண்டு நின்றன.

" எனக்குப் பசிக்கிறது " என்றேன் நான்.

அவன் விழித்தான். திடீரென்று அவன் பயங்கரமான முகம் மாறிற்று. அவன் புன்னகை புரிந்தான். புன்னகையிலே அவன் கன்னங்கள் அலையைப்போன்று மடிந்தன. அவன் மீசை கீழே சாய்ந்தது. அப்பொழுது, அவன் தடித்த, நல்லெண்ணம் படைத்த வீட்டுக்காரியைப்போன்று தோற்றமளித்தான்.

தனது தட்டில் மிச்சமிருந்தவைகளை அப்பால் எறிந்துவிட்டு, ஒரு கிளாஸ் நிறையத் தேநீர் ஊற்றி, அதையும் ஒரு முழு ரொட்டியையும், குழம்பையும் என் பக்கம் நகர்த்தினான்.

" அதைச் சாப்பிடு. உனக்கு அம்மாவும், அப்பாவும் இருக்கிறார்களா ? உனக்குத் திருடத் தெரியுமா ? கவலைப் படாதே! இங்கே இருப்பவர்களெல்லாம் திருடர்கள். திருட உனக்கு விரைவில் கற்றுக்கொடுப்பார்கள்."

நாய் குரைப்பதைப்போன்று அவன் பேசினான். கூஷவரம் செய்திருந்த காரணத்தால் அவன் பெரிய கன்னங்கள் நீல நிறத்தில் இருந்தன. அவன் மூக்குக்கு அருகிலிருந்த சதை நாம்புகளால் மூடப்பட்டிருந்தன. சிவந்த, புடைத்திருந்த அவன் மூக்கு அவன் மீசையை ஆக்ரமித்தது. கனத்த அவன் கீழ் அதரம் வெறுப்புடன் கீழேதொங்கிற்று. அவன் வாயின் ஓரத்திலே சிகரெட் புகைந்துகொண்டிருந்தது. அவன் அப்பொழுதுதான் ஸ்நான அறையிலிருந்து வந்திருக்கவேண்டும். ஏனெனில், பூவாசு மரத்தின் வாசனையும், பிராந்தி வாசனையும் அவனிடமிருந்து வீசின. அவன் நெற்றியிலும், கழுத்திலும் வியர்வை முத்து முத்தாக அரும்பியிருந்தது.

நான் சாப்பிட்டு முடித்ததும், அவன் ஒரு ரூபிளை என்னிடம் கொடுத்தான்.

"போய் இரண்டு அங்கிகள் வாங்கிக்கொள். பொறு! நானே அதை வாங்கி வருகிறேன்."

தொப்பியைச் சரிப்படுத்திக்கொண்டு, அவன் நடந்தான். இரு பக்கமும் அசைந்துகொண்டும், கரடியைப்போல் காலைச் சீய்த்துக்கொண்டும் அவன் நடந்தான்.

.....இரவு. ஒளி வீசும் சந்திரன் கப்பலைக் கடந்து,கப்பலுக்கு இடது புறமிருந்த புல்வெளியை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது. எங்கள் பழைய கப்பல் வெண்மயமான ஜலத்தில் மெதுவாக நகர்ந்துகொண்டிருந்தது. மெதுவாக இருண்ட நதிக்கரை, கப்பலை வரவேற்பதைப்போன்று எழுந்தது. குடிசைகளில் எரிந்த விளக்கின் நிழல் நதியில் அசைந்தாடிற்று. கிராமத்திலிருந்து பாட்டுக் குரல் கேட்டது. சிறுமிகள் பாடுகிறார்கள். "ஐலேலா" என்ற ஒலி அங்கிருந்து எழுந்தது.

நீண்ட கம்பியில் பிணைத்திருந்த படகை எங்கள் கப்பல் அணுகிற்று. படகுக்குப் பழுப்புச் சாயம் பூசப்பட்டிருந்தது. கப்பலிலே பெரிய இரும்புக் கூண்டிருந்தது. கூண்டிலே கடுங்காவல் தண்டனையும், பிரஷ்ட தண்டனையும் விதிக்கப்பட்ட கைதிகள் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்களைக் காவல்காத்த சிப்பாயின் துப்பாக்கிச் சனியன் மெழுகுவர்த்தியைப்போன்று பிரகாசித்தது; நீலவானில் நட்சத்திரங்களும் சிறிய மெழுகுவர்த்தியைப் போன்று பிரகாசித்தன. நிலவொளி பிரகாசித்த படகில், அமைதி குடிகொண்டிருந்தது. கூண்டின் இரும்புக் கம்பிகளுக்குப் பின்னே நிழல்கள் தெரிந்தன. அங்கே உட்கார்ந்துகொண்டு வால்காவை உற்றுப்பார்க்கும் கைதிகள் அவர்கள். ஜலம் சிலுசிலுத்துக்கொண்டு பாய்ந்து செல்கிறது. அது அழுதுகொண்டிருக்கலாம், அல்லது கூச்சத்துடன் சிரித்துக்கொண்டிருக்கலாம். சுற்றியிருப்பவை கோயிலை நினைவூட்டின; எண்ணெயின் மணமும், தூப கலசத்தின் மணமும் அங்கே வீசின.

படகை நான் உற்றுப் பார்த்தபொழுது எனதுகுழந்தைப் பருவம் என் நினைவிற்கு வந்தது; ஆஸ்ட்ராகானிலிருந்து

கிழமைக்கு நான் பிரயாணம் செய்ததும், முகமூடியைப் போன்ற என் அன்னையின் முகமும், என் பாட்டியின் வதனமும், சிரமமான, ஆனால் சுவர்ச்சிகரமான இந்த வாழ்க்கையில் என்னை ஈடுபடுத்தியவரின் முகமும் என் நினைவிற்கு வந்தன. என் பாட்டியை நினைத்தபொழுதெல்லாம், வாழ்க்கையின் வெறுக்கத்தக்க, முரட்டுத்தனமான அம்சங்களை நான் மறந்தேன். எல்லாம் மாறுகின்றன; எல்லாம் இன்பகரமானதாகவும், ருசியுடையதாகவும் பரிணமிக்கின்றன; ஜனங்கள் நல்லவர்களாகவும், நேசிக்கக் கூடியவர்களாகவும் மாறுகிறார்கள்.

இரவின் அழகு என்னைக் கவர்ந்து, என் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகுமாறு செய்தது. சவப்பெட்டியைப் போன்றிருந்த படகு என்னை ஆகர்ஷித்தது; பாய்ந்து சென்ற நதியின் பரந்த இதயத்தில் பிதந்த அந்தப் படகு அந்த இடத்திற்குப் பொருத்தமற்றதாக இருந்தது. அசமமான நதிக்கரைகள் உயர்ந்தன, தாழ்ந்தன. இது என் இதயத்தை வேகமாக அடிக்கவைத்தது; நல்லவனாகவும், மனித சமூகத்திற்குப் பயனுடையவனாகவும் நான் விளங்க வேண்டும் என்னும் எண்ணத்தை என் மனதில் தூண்டிவிட்டது.

எங்கள் பிரயாணிகள் விசேஷமானவர்கள். அவர்கள் அனைவரும்—கிழவர்கள், குமரர்கள், ஆண்கள், பெண்கள்—ஒரு மாதிரி இருந்தனர். எங்கள் கப்பல் மெதுவாக நகர்கிறது. அவசர வேலை இருப்பவர்கள் வேகமாகச் செல்லும் கப்பலில் பிரயாணம் செய்கிறார்கள். வேறு வேலையில்லாதவர்கள் எங்கள் கப்பலில் பிரயாணம் செய்கிறார்கள். காலையிலிருந்து இரவுவரையில் அவர்கள் சாப்பிடுகிறார்கள், குடிக்கிறார்கள். தட்டுகளையும், கரண்டிகளையும், கத்திகளையும் அசுத்தமாக்குகிறார்கள். இவைகளைச் சுத்தம் செய்வது என் வேலை. காலை ஆறு மணியிலிருந்து நடுநிசி வரையில் நான் இந்த வேலையைச் செய்ய நேர்ந்தது. பிற்பகல் இரண்டு மணியிலிருந்து ஆறு மணிவரையிலும், இரவு பத்து மணியிலிருந்து பன்னிரண்டு மணிவரையிலும் எனக்கு வேலை குறைவாக இருந்தது. இந்த நேரத்தில் பிரயாணிகள் தேநீரோ, பீரோ, வோட்காவோ தான், தங்கள் சாப்பாட்டுப்பின் அருந்தினர்.

இந்த நேரத்தில் பரிமாறுகிறவர்களுக்கு வேலையில்லை. 'பனலுக்கு' அருகில் கிடந்த மேஜையைச் சுற்றி உட்கார்ந்து கொண்டு இந்த நேரத்தில் அவர்கள் தேநீர் குடிப்பர். சமையற்காரன் ஸ்மூரி, அவன் கையாள் யாக்கோவ் இவானோவிச், குசினிப் பாத்திரம் கழுவுகிறவர் மாக்ஸிம், பரிமாறுகிறவர் ஸெர்ஜி ஆகியோர் அந்தக் குழுவைச் சேர்ந்தவர்களில் சிலர். வாய்விட்டுச் சிரிக்கும் யாக்கோவ் இவானோவிச் ஆபாசமான கதைகள் சொல்லுவான். தவளை வாயைப்போன்ற தனது வாயைப் பிளப்பான் ஸெர்ஜி. மந்தமான மாக்ஸிம் கதையை மௌனமாகக் கேட்பான்.

" மனிதனைத் தின்னுகிறவர்கள்! மோர்டோவியர்கள் !" என்று அடிக்கடி இடையே குறுக்கிட்டு, உரத்த குரலில் கர்ஜிப்பான் சமையற்காரன்.

இவர்களை யெல்லாம் நான் வெறுத்தேன். வழுக்கை விழுந்த யாக்கோவ் இவானோவிச் பெண்களைப்பற்றி மாத்திரம்தான் பேசுவான் ; அதுவும் ஆபாசமான முறையில். அவன் முகம் உணர்ச்சியற்றது. அவன் கன்னத்திலே சிவப்பு ரோமங்கள் முளைத்திருந்தன. அவைகளை அவன் சதா முறுக்கிக்கொண்டே இருப்பான். பிறருடன் சாதாரணமாகப் பழகும் பெண் மேல்தளத்திற்கு வந்தால், பிச்சைக்காரனைப் போன்று அவன் பணிவுடன் அவளைப் பின்பற்றுவான். அவளிடம் இனிப்பாகப் பேசுவான். அவன் அதரங்களிலே ஜலமூறும். அதை அவன் நக்குவான். தூக்கிவிடுகிறவர்கள் அவனைப்போன்றுதான் இருப்பார்கள் என்று எனக்குத் தோன்றிற்று.

" ஒரு பெண்ணை எப்படிக் குஷிப்படுத்துவது என்பது தெரிந்திருக்க வேண்டும்" என்று ஒரு முறை அவன் ஸெர்ஜியிடமும், மாக்ஸிமிடமும் சொன்னான். அவன் சொன்னதை அவர்கள் மிகக் கவனமாகக் கேட்டனர்.

" மனிதனைத் தின்னுகிறவர்கள் !" என்று வெறுப்புடன் கர்ஜித்தான் ஸ்மூரி. அவன் மெதுவாக எழுந்திருந்து என்னிடம் சொன்னான் : " பெஷ்கோவ் ! வா, போகலாம் !"

நாங்கள் அவன் அறையை அடைந்ததும், தோலால் பைன்ட் செய்யப்பட்ட ஒரு சிறிய புத்தகத்தை அவன் என்

னிடம் தந்தான். பிறகு பொருள்களைக் குளிராக்கும் அறைப் பக்கம் போடப்பட்டிருந்த தனது கட்டிலில் படுத்தான்.

" புத்தகத்தைப் படி !"

நான் அங்கே, ஒரு மரப்பெட்டிமீது உட்கார்ந்து, பணிவுடன் படிக்க ஆரம்பித்தேன்.

"நட்சத்திரங்கள் சிதறிக் கிடக்கும் 'உம்பராகுலும்' என்றுல் சுவர்க்கத்துடன் சுலபமாகத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளும் இடம் என்று பொருள். இது பேதைகளிடமிருந்தும் தீர்க்கதரிசிகளிடமிருந்தும் விடுக்கப்பட்ட இடம்—"

புகைப்படலத்தை வெளியே ஊதிவிட்டு, ஸ்மூரி சிறிஞன் :

" ஒட்டகங்கள் ! இத்தகைய விஷயத்தை வேறு யார் எழுதுவார்கள் ?"

" மூடப்படாத இடது மார்பு என்றுல் சூதற்ற இதயம் என்று பொருள்."

" யாருடைய மூடப்படாத இடது மார்பு ?"

" அதை இங்கே சொல்லவில்லை."

" அப்படியானுல் அது பெண்ணின் மார்பாகத்தான் இருக்க வேண்டும். வேசிகள் !"

கையைத் தலையணையாக வைத்துக்கொண்டும் கண்களை மூடிக்கொண்டும் அவன் படுத்தான். வாயின் ஓரத்தில் புகைந்து கொண்டிருந்த சிகரெட்டை வெளியில் எடுத்து, அவன் சிகரெட்டைப் பலமாக இழுத்தான். அப்பொழுது அவன் நெஞ்சில் ஏதோ சீழ்க்கை அடித்தது ; அவன் முகம் புகையால் மூடப்பட்டது. அவன் தூங்கிவிட்டான் என்று நினைத்து நான் சில சமயங்களில் படிப்பதை நிறுத்துவேன். பிறகு சபிக்கப்பட்ட அந்தப் புத்தகத்தை உற்றுப்பார்த்துக்கொண்டு உட்காருவேன்.

" படி !" என்று அவன் குரைப்பான்.

" மதிப்பிற்குரியவர் பதில் சொன்னர் : பார், என் நற்குணம் படைத்த ப்ரியர் ஸீவெரியன்—"

" ஸெவெரியன்."

" ஸீவெரியன் என்றுதான் எழுதப்பட்டிருக்கிறது."

"அது நாசமாய் போகட்டும்! கீழே பாட்டு இருக்கிறது. அங்கிருந்து படி."

நான் அங்கிருந்து படித்தேன்.

ஏ அறிவற்ற ஜந்துகளே! எங்களுடைய காரியங்களில் தலையிடுவதாகக் கருதிக்கொள்ளாதீர்கள்!

அப்பாவியான உங்கள் மனத்தால் அதை ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாது!

சந்நியாசிகள் ஓதும் மந்திரங்களும் உங்களுக்குப் புலப்படாமல் அப்பால் இருக்கட்டும்.

"நிறுத்து!" என்று கூவினான் ஸ்மூரி. அது கவிதையா? புத்தகத்தை என்னிடம் கொடு."

கோபத்துடன் பக்கங்களைப் புரட்டிவிட்டு, அவன் புத்தகத்தைக் கட்டிலுக்குக் கீழே எறிந்தான்.

"இன்னொன்றைப் படி."

அவன் கரிய டிரங்கில் பல புத்தகங்கள் இருந்தது எனக்கு ஆறுதல் அளித்தது. உமிரின் கட்டளைகள் சிப்பாயினுடைய நினைவுகள், பிரபு சேடங்காலியின் கடிதங்கள், கேடுசெய்கிற மூட்டைப்பூச்சி—இதை எப்படித் தோலைப்பது அது செய்யும் கேடுகளை எப்படித் தவிர்ப்பது போன்ற ஆரம்பமும் முடிவும் இல்லாத புத்தகங்கள் பல அதில் இருந்தன. அவைகளைப் படிக்குமாறு என்னைத் தூண்டினான் சமையற்காரன். புத்தகங்களின் தலைப்பைப் படிக்குமாறும் சொன்னான். நான் படித்ததும், அவன் கோபத்துடன் முணுமுணுத்தான்:

"என்ன எழுதுகிறார்கள், கழிச்சடைகள்! அகாரணமாக முகத்தில் அடிப்பதைப்போல்! கேர்வாஸி! கேர்வாஸிக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? உம்பராகுலும்!"

அந்த நூதனமான வார்த்தைகளும், பழக்கமற்ற சொற்களும் என் நினைவிலே பதிந்தன. அவைகளைச் சொல்ல என் நா துடித்தது; அவைகளைத் திரும்பச் சொல்லச் சொல்ல அவைகளின் பொருளும் விளங்கிவிடுவதைப்போல் தோன்றியது.

ஜன்னலுக்கப்பால் நதி இடைவிடாது பாடிற்று, ஜலத்தைத் தெளித்தது.மேல் தட்டுக்குச் செல்ல எனக்கு ஆசையாக இருந்தது. அங்கே கப்பல் வேலைக்காரர்கள் பெட்டிகளை அடைத்துக் கொண்டோ, பாடிக்கொண்டோ, வம்பளந்துகொண்டோ, அல்லது சீட்டு விளையாடிப் பிரயாணிகளின் பணத்தை வென்று கொண்டோ இருந்தனர். அவர்களுடன் உட்கார்ந்துகொண்டு அவர்கள் பேசும் சாதாரணமான, புரியக் கூடிய பேச்சைக் கேட்பது எவ்வளவு நன்றாக இருக்கும் ; அங்கே உட்கார்ந்து கொண்டு காமா நதியின் கரைகளையும், பித்தளைக் கம்பிகளைப் போன்று உயர்ந்தோங்கி நிற்கும் தேவதாரு மரங்களையும்,பின்னிடும் ஜலம் விட்டுச் சென்ற சின்னஞ் சிறிய ஏரிகள் நிறைந்த புல்வெளிகளையும்,உடைந்த கண்ணாடித் துண்டுகளைப் போன்று அதில் தோன்றும் நீலாகாயத்தையும் பார்ப்பது எவ்வளவு நன்றாக இருக்கும். எங்கள் கப்பல் கரையிலிருந்து விலகிச் சென்றது. ஆனால் அமைதியைக் குலைத்துக்கொண்டு கரையிலிருந்து கோயில் மணியின் ஓசை கேட்கும். மணியோசை நகரங்களையும், மக்களையும் நினைவூட்டும். ஒரு சொட்டித் துண்டைப் போன்று செம்படவனின் படகு ஜலத்தில் அசைந்தது; ஒரு கிராமம் கண்ணுக்குத் தெரிந்தது ; சில சிறுவர்கள் நதியில் விளையாடினர் ; மஞ்சள் நிப்பனைப் போன்ற மணலிலிருந்து சிவப்பு அங்கி அணிந்த ஒரு " மூஷிக் " நடந்து வந்தான். தூரத்திலிருந்து பார்த்தபொழுது எல்லாம் கவர்ச்சி அளித்தன. பொருள்கள் பொம்மையைப் போன்றும், வர்ணங்களை அள்ளிச் சொரிவதைப் போன்றும் தோன்றின. நதிக் கரையை நோக்கியும், படகை நோக்கியும் அன்புகனிந்த வார்த்தைகளைச் சொல்ல வேண்டு மென்று எனக்குத் தோன்றிற்று.

அந்தப் பழுப்பு நிறப் படகு என்னை ஆகர்ஷித்தது. அசுத்தமான ஜலத்தைப் பிளந்துகொண்டு படகு செல்வதை மந்திரத்தால் கட்டுண்டவனைப் போன்று உட்கார்ந்து மணிக் கணக்காகப் பார்க்க முடியும். கயிற்றில் கட்டிப் பன்றியை இழுத்துச் செல்வதைப்போன்று கப்பல் படகை இழுத்துச் சென்றது. கயிறு தளர்ந்தால், கம்பி ஜலத்தில் அடிக்கும். பிறகு மீண்டும் அதை இறுக்கும். அந்த இரும்புக் கூண்டிலே

விலங்குகளைப்போன்று உட்கார்ந்துகொண் டிருக்கும் மனி தர்களின் முகங்களைக் காண எனக்கு ஆசையாக இருந்தது. பெர்மில் அவர்கள் கரைக்கு அழைத்துச் செல்லப்பட்ட பொழுது நான் மேல் தட்டிற்குச் சென்றேன். டஜன் கணக் கானவர்கள் என்னைக் கடந்து சென்றனர். தங்கள் சங்கிலி களைக் குலுக்கிக்கொண்டும், முதுகிலிருந்த மூட்டையின் பளுவால் குனிந்துகொண்டும் சென்றனர். ஆண்களும் பெண் களும், கிழவர்களும் வாலிபர்களும், குருபிகளும் அழகர் களும் அந்தக் கூட்டத்திலிருந்தனர். வேறு மாதிரியான உடைகளை அவர்கள் அணிந்திருந்தனர் என்பதும், தலை மொட்டையடிக்கப்பட்டதால் அவர்கள் உருமாறி யிருந்தனர் என்பதும்தான் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இருந்த வித்தியாசம். நிச்சயமாக அவர்கள் பிரஷ்டம் செய்யப்பட்ட வர்கள். ஆனல் பிரஷ்டம் செய்யப்பட்டவர்களைப்பற்றிப் பல நல்ல விஷயங்களைப் பாட்டி எனக்குச் சொல்லியிருக்கிறள் !

அந்தப் பிரஷ்டம் செய்யப்பட்டவர்களைவிட அதிக மூர்க்கத்தனமாக இருந்தான் ஸ்மூரி.

" இந்த நிலையிலிருந்து கடவுள் என்னைக் காப்பாற்றட் டும் !" என்று படகைப் பார்த்துக்கொண்டே அவன் முணு முணுத்தான்.

ஒரு நாள் நான் அவனிடம் சொன்னேன்:

" மற்றவர்கள் திருடர்களாகவும், கொலைகாரர்களாகவும் இருக்கும்பொழுது நீ மாத்திரம் ஏன் சமையற்காரனாக இருக் கிறாய் ?"

" நான் சமையற்காரனல்ல. நான் தலைமை யதிகாரி. பெண்கள்தான் சமையற்காரிகள்" என்று உறுமினன் அவன். பிறகு ஒரு நிமிடம் யோசித்துவிட்டு அவன் சொன்னன்:

" மனிதனுக்கிடையே இருக்கும் வித்தியாசம் அவர்கள் மூளையைப் பொறுத்திருக்கிறது. சிலர் சாமர்த்தியசாலிகள் ; சிலர் மந்தமானவர்கள்; மற்றும் சிலர் முட்டாள்கள். சரியான புத்தகங்களை — மாயாஜாலம் போன்றவை — வாசிப்பதால் ஒரு வன் கெட்டிக்காரனாகலாம். நீ எல்லாப் புத்தகங்களையும் படிக்க வேண்டும்;சரியானதைக் கண்டுபிடிக்க இது ஒன்றுதான் வழி."

அவன் அடிக்கடி சொல்லுவான் :

" படி. ஒரு புத்தகம் உனக்குப் புரியவில்லை யென்றால், அதை ஏழு தரம் படி. ஏழு தரம் படித்தும் புரியவில்லை யென்றால், பன்னிரண்டு தரம் படி."

மௌனியான காரியஸ்தன் உட்பட கப்பலில் இருந்த எல்லோரிடமும் கடுமையாக நடந்துகொண்டான், ஸ்மூரி. யாரிடம் பேசும்பொழுதும் இகழ்ச்சியுடன் தன் கீழ் உதட்டைப் பிதுக்குவான் ; மீசையை முறுக்குவான்; கூழாங் கல்லை எரிவதைப்போன்று சொற்களை எறிவான். ஆனால் என்னிடம் அவன் மிருதுவாகவும், அன்பாகவும் நடந்துகொண்டான். அவன் அன்பிலே என்னைப் பயமுறுத்தக் கூடிய ஏதோ ஒன்று இருந்தது. பாட்டியின் சகோதரியைப்போன்று அந்தச் சமையற்காரனும் சாதாரணமானவ னல்ல என்று சில சமயங்களில் எனக்குத் தோன்றிற்று.

" படிப்பதை நிறுத்து !" என்று சொல்லிவிட்டு, கண்களை மூடிக்கொண்டு நீண்ட நேரம் படுத்திருப்பான். அப்பொழுது அவன் உரக்க மூச்சுவிடுவான். அவனது பெரிய வயிறு எழுந்து தணியும். பிணத்தின் கைகளைப் போன்று அவன் கைகள் நெஞ்சில் இணைந்து கிடக்கும். கண்ணுக்குத் தெரியாத ஊசியால், கண்ணுக்குத் தெரியாத காலுறை பின்னுவதைப்போன்று, ரோமம் நிறைந்த அவன் விரல்கள் அசையும். பிறகு திடீரென்று அவன் முணுமுணுப்பான் :

" உதாரணமாக, மூளையை எடுத்துக்கொள் ! இதோ, இவைகளை எடுத்துக்கொண்டு, இவற்றால் என்ன செய்ய முடியு மென்று பார் ! மூளை சொம்பத் தர்பமாகவும், அசமத்வமாகவும்தான் அளிக்கப்படுகிறது. எல்லோருக்கும் ஒரேவிதமான மூளை இருந்தால்—அதுதான் இல்லையே ! இவனுக்கு விஷயம் புரிகிறது ; மற்றவனுக்குப் புரியவில்லை ; மற்றவர்களுக்குப் புரிந்துகொள்ள ஆசையில்லை."

தான் சிப்பாயாக இருந்தபொழுது நிகழ்ந்த நிகழ்ச்சிகளைத் தட்டுத்தடுமாறிக்கொண்டே அவன் சொல்லுவான். அவன் கதையின் கருத்துத்தான் என்ன என்பதை என்னால் கண்டுபிடிக்கவே முடியவில்லை. அவை சுவாரஸ்யமாகவும் இருக்கவில்லை. அதோடு ஆரம்பத்திலிருந்து கதையைத்

தொடங்காது தன் மனம்போன போக்கில் அவன் கதை சொன்னான்.

" அந்தச் சிப்பாயை அழைத்து ரெஜிமென்ட் கமான்டர் கேட்டான் : லெப்டினென்ட் உன்னிடம் என்ன சொன்னான். சிப்பாய் உண்மையைச் சொல்ல வேண்டுமாதலால், அவன் உண்மையை உள்ளது உள்ளபடி சொன்னான். கற்சுவரைப் பார்ப்பதைப்போன்று அவனைப் பார்த்துவிட்டுக் கீழே பார்த்துக்கொண்டே லெப்டினென்ட் அப்பால் சென்றான்."

நெடுமூச்செறிந்துவிட்டு, அவன் மேலும் முணுமுணுத்தான் :

" ஒருவர் எதைச் சொல்லலாம், எதைச் சொல்லக் கூடாது என்பது எனக்குத் தெரிந்தால்தானே ! அவர்கள் லெப்டினென்டைச் சிறையில் அடைத்தனர். அவன் தாயார்... கடவுளே! எனக்கு யாரும்எதையும் கற்றுக்கொடுக்கவில்லை!"

அப்பொழுது உஷ்ணமாக இருந்தது. எல்லாம் அசைந்தன ; மிருதுவாகப் பாடின. காபின் சுவருக்கு அப்பால் கப்பல் சக்கரம் சுழன்றது ; ஜலம் தெறித்தது. பரந்த நதி கம்பீரமாகப் பாய்ந்தது. தூரத்திலே புல்வெளி தெரிந்தது. மரங்களும் கண்ணுக்குத் தெரிந்தன. சகல ஓசைகளும் என் காதுகளுக்குப் பழகிவிட்டதால், மௌனம் மாத்திரம்தான் எனக்குப் பிடித்தது. கப்பலின் முன் பகுதியிலிருந்த மாலுமி திரும்பத் திரும்பச் சொன்னான் :

" ஏழு ! ஏழு !" என்று.

எல்லாவற்றிலிருந்தும் ஒதுங்கியிருக்க—எதையும் கேட்காது, எந்த வேலையும் செய்யாது ஒதுங்கி இருக்க —நான் விரும்பினேன் ; கொழுப்பு வாசனையடிக்கும் குசினிக்கப்பால் நிழலில் உட்கார்ந்திருக்க நான் விரும்பினேன் ; ஜலத்திலே மிதந்து செல்லும் அமைதியான, சாரமற்ற அந்த வாழ்க்கையை உற்றுப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்க விரும்பினேன்.

" படி !" என்று சமையற்காரன் கட்டளையிட்டான்.

முதல் வகுப்பிலிருந்த ஏவலாளர்கள்கூடச் சமையற்காரனுக்குப் பயந்தனர். பணிவுள்ள, மௌனியான காரியஸ்தன்கூட ஸ்மூரிக்குப் பயப்படுவதாகத் தோன்றிற்று.

"ஏய், பன்றி!" என்று குடிவகை அறையிலிருப்பவனைப் பார்த்துக் கூவுவான் ஸ்மூரி. "இங்கே வா, திருடா! மனிதனைத் தின்னுகிறவனே! கழிசடையே!"

கப்பல் வேலைக்காரர்கள் அவனை மரியாதையாக நடத்தினர்; அவன் தயவை நாடினர். அவர்களுக்கு அவன் இறைச்சிக் குழம்பு கொடுப்பான். அவர்கள் குடும்பத்தைப்பற்றியும், கிராம வாழ்க்கையைப்பற்றியும் விசாரிப்பான். படகில் இருப்பவர்களில் கீழ்க்கடையானவர்களாக கடுகடுப்பான பைலோ ருஷ்ய கரிதள்ளிகள் மதிக்கப்பட்டனர். அவர்களை யாக் என்று அழைத்தனர் ருஷ்யர்கள். அவர்களை ருஷ்யர்கள் கேலியும் செய்தனர்.

"யாக், யாக், அவனை வெளியே தள்ளு!"

இது ஸ்மூரியை ஆத்திர மூட்டும். அவன் முகம் சிவக்கும். கரிதள்ளிகளைப் பார்த்து அவன் கூச்சலிடுவான்:

"உன்மீது இப்படி மிதிப்பதை நீ எதற்காக அனுமதிக்கிறாய்? அவர்கள் மண்டையைப் பிள! சபிக்கப்பட்ட காட்ஸாப்ஸ்! (ருஷ்யர்களை இழிவுபடுத்தும் பெயர்.)

ஒரு நாள் அழகிய தண்டேல்காரன் சொன்னான்:

"யாக்குகளும், கொக்கோல்களும்! (உக்ரேனியர்களை இழிவுபடுத்தும் பெயர் கொக்கோல்) ஒரு மாதிரிதான்."

பெல்டையும், கழுத்தையும் பிடித்து மேலே தூக்கி அவனைக் குலுக்கினன் சமையற்காரன்.

"உன்னை சொட்டி செய்ய வேண்டுமா?" என்று அவன் கூவினன்.

வாய்ச்சண்டை அடிக்கடி கைகலப்பில் முடியும். ஆனால் ஸ்மூரியை யாரும் அடிக்கவே இல்லை. அவன் அமானுஷ்ய பலம் படைத்தவன் என்பதும், நெட்டையான, அழகிய காப்டன் மனைவியுடன் அவன் நல்லுறவு கொண்டிருந்தான் என்பதும் இதற்குக் காரணங்கள்.

அவன் வோட்கா நிறையக் குடிப்பான். ஆனால் குடிகாரனைப்போன்றிருக்க மாட்டான். காலையில் அவன் குடிக்க ஆரம்பிப்பான். ஒரு பாட்டிலை நான்கு தரம் குடித்துத் தீர்த்து விடுவான். நாள் முழுதும் பீர் குடிப்பான். நேரம் செல்லச்

செல்ல அவன் முகம் சிவக்கும்; ஆச்சரியத்தால் கண்கள் விரிவதைப்போன்று விரியும்.

மாலை நேரத்தில் கப்பலின் மேல்தட்டில் மணிக்கணக்காக உட்கார்ந்துகொண்டு வெட்டவெளியை மந்தமாகப் பார்த்துக்கொண்டிருப்பான். அத்தகைய நேரங்களில் பலர் அவனை மரியாதையுடன் நடத்துவர். ஆனால் எனக்கு அவன் மீது இரக்கம் ஏற்பட்டது.

முகம் சிவக்க, வியர்வை கசிய, தலையைச் சொறிந்து கொண்டும், கையை ஆபாசமாக வீசிக்கொண்டும் குசினியிலிருந்து வெளியே வருவான் யாகோவ் இவானேவிச்; அல்லது தூரத்திலிருந்து சொல்லுவான்:

"ஸ்டெர்லெட் நாற்றமடிக்கிறது."

"அதைப் பச்சடி செய்."

"யாராவது மீன் சூப்போ, அல்லது வேகவைக்கப்பட்ட ஸ்டெர்லெட்டோ ஆர்டர் செய்தால்?"

"பச்சடி செய். எதையும் அவர்கள் தின்னுவார்கள்."

சில சமயங்களில் நான் தைரியத்துடன் அவனை அணுகினேன்.

"உனக்கு என்ன வேண்டும்?" என்று என் பக்கம் திரும்பி அவன் கேட்டான்.

"ஒன்றும் வேண்டாம்."

"நல்லது."

ஒரு நாள் நான் சொன்னேன்:

"எல்லோரையும் இப்படி நீ ஏன் பயமுறுத்துகிறாய்? நீ ரொம்ப நல்லவனுச்சே."

என் கேள்வி அவனை ஆத்திரமூட்டாததைக் காண எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

"உன்னிடம் மாத்திரம்தான் நான் நல்லவனாக நடக்கிறேன்" என்று சொல்லிவிட்டு, அன்புகலந்த குரலில் சிந்தித்துக்கொண்டு மேலும் சொன்னான்: "நல்லது. எல்லோரிடமும் நான் நல்லவனாக நடக்கலாம். இதை நான் வெளியே காட்டிக்கொள்வதில்லை. நீ நல்லவன் என்பதை வெளியே காட்டிக்கொள்ளக் கூடாது. அப்படிச் செய்தால் உன்னை விழுங்கிவிடுவார்கள். சதுப்பு நிலத்திலிருக்கும் காய்ந்த பகுதி

யாகக் கருதி நல்ல மனிதன்மீது ஏறி அவனை மிதித்துத் தேய்ப்பார்கள், ஜனங்கள். போய் கொஞ்சம் பீர் கொண்டுவா.''

கிளாஸ், கிளாஸாகப் பீர் குடித்துவிட்டு, அவன் மீசையை நக்கினான். பிறகு அவன் சொன்னான் :

''இன்னும் கொஞ்சம் பெரிய ஆளாக நீ இருந்தால், உனக்கு நான் பல விஷயங்கள் சொல்லித் தருவேன். முக்கிய மான ஒன்றிரண்டு விஷயங்கள் எனக்குத் தெரியும். நான் முட்டாளல்ல. நீ புத்தகங்கள் படிக்க வேண்டும் ; உனக்குத் தெரிய வேண்டியவைகளை யெல்லாம் புத்தகங்கள் சொல்லித் தரும். புத்தகம் அருமையான பொருள். உனக்குப் பீர் வேண்டுமா ?''

'' எனக்கு அது பிடிக்காது.''

'' நல்லது. நீ குடிக்காதே. குடி ஒரு சாபம். வோட்கா, சைத்தானின் சிருஷ்டி. நான் பணக்காரனாக இருந்தால், உன்னைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிப் படிக்க வைப்பேன். படிக்காதவன் மாடு. அவனை ஏரில் பூட்டு ; அல்லது அவனை மாமிசமாக்கு. என்ன செய்தாலும் அவன் வாலைச் சுழற்று வான் !''

கொகோலின் புத்தகத்தைக் காப்டனின் மனைவி அவனுக் குக் கொடுத்தாள். '' பயங்கரம் நிறைந்த பழிக்குப் பழி'' என் னும் நூலை நான் அவனுக்குப் படித்தேன். அது எனக்கு மொம்பப் பிடித்தது. ஆனால் ஸ்மூரி கோபத்துடன் கூவினான்:

'' முட்டாள்தனமானது. ஒரு கட்டுக்கதை. இதைவிட நல்ல புத்தகங்கள் இருக்கும் என்பது உறுதி.''

அந்தப் புத்தகத்தை என்னிடமிருந்து வாங்கிக்கொண் டான் ; காப்டன் மனைவியிடமிருந்து இன்னொரு புத்தகத்தை வாங்கி வந்தான்.

'' இதோ, டாராஸ் ; படி. அவன் இன்னொரு பெய ரென்ன ?'' என்று சிந்தித்துக்கொண்டே கேட்டான். ''கதை யைக் கண்டுபிடித்துவிட்டேன். இது நல்ல தென்று அவள் சொல்லுகிறாள். அது யாருக்கு நல்லது ? அது அவளுக்கு நல்லதாகவும், எனக்குக் கெட்டதாகவும் இருக்கலாம். அவள்

மயிரை எப்படிக் கத்தரித்துக்கொண்டிருக்கிறாள், பார்! தனது காதுகளையும் அவள் ஏன் கத்தரித்துக்கொள்ளவில்லை ?''

தன்னுடன் சண்டை செய்யுமாறு ஓஸ்டாபை டாராஸ் அறைகூவிய கட்டத்தை நாங்கள் அடைந்ததும் சமையற் காரன் முரட்டுத்தனமாகச் சிரித்தான்.

'' அது எப்படி யிருக்கிறது ?'' என்று அவன் கேட்டான். '' ஒருவனுக்கு மூளையிருக்கிறது; இன்னொருவனுக்கு வலிமையிருக்கிறது ! எப்படிப்பட்ட விஷயங்களை எழுதுகிறார்கள், ஒட்டகங்கள் !''

அவன் கவனமாகக் கேட்டான். எனினும் அடிக்கடி முணுமுணுத்தான்.

'' முட்டாள்தனம்! ஒரே அடியில் தோளிலிருந்து அரை வரையில் ஒருவனை மாமிசப் பிண்டமாக்கிவிட முடியாது. இதைச் செய்யவே முடியாது. ஒரு ஈட்டியால் மனிதனைத் தூக்க முடியாது. அப்படிச் செய்தால் ஈட்டி ஒடிந்துவிடும். நானே ஒரு சிப்பாயல்லவா ?''

ஆன்ட்ரியின் துரோகம் அவனை அதிரச் செய்தது.

'' கேவலமான புழு ! ஒரு பெண்ணுக்காக !''

ஆனால் டாராஸ் தனது மகனைச் சுட்டதும், கட்டிலின் இரு புறமும் கால்களை தொங்கவிட்டுக்கொண்டும் கட்டிலின் ஓரத்தைப் பிடித்துக்கொண்டும் சமையற்காரன் அழுதான். கண்ணீர் அவன் கன்னங்கள் வழியாக வழிந்து, தரையில் விழுந்தது. மூக்கினுல் உறிஞ்சிவிட்டு, அவன் முணுமுணுத்தான் :

'' கடவுளே ! கடவுளே !'' என்று.

திடீரென்று அவன் என்னை நோக்கிக் கூவினான் :

'' தொடர்ந்து படி, சைத்தானின் கருவே !''

'' அப்பா ! நான் சொல்லுவது கேட்கிறதா ?'' என்று தண்டனை விதிக்கப்பட்ட ஓஸ்டாப் தன் தந்தையைக் கேட்டபொழுது அவன் வாய்விட்டு அழுதான்.

''எல்லாம் முடிந்துவிட்டது'' என்று விக்கிக்கொண்டே சொன்னான் ஸ்மூரி. ''எல்லாம். இதுதான் முடிவா? எவ்வளவு சபிக்கப்பட்ட விவகாரம் ! அந்த நாட்களில் உண்மையான

மனிதர்கள் இருந்தார்கள். அந்த டாராஸ்! உண்மையான மனிதன், கடவுளே!''

அந்தப் புத்தகத்தை என் கையிலிருந்து எடுத்து, கண்ணீரால் அட்டையை நனைத்துக்கொண்டு கவனமாகப் படித்தான்.

''நல்ல புத்தகம்; சிறந்த விடுமுறை யாகும்!''

அதன் பிறகு நாங்கள் ''ஐவன்ஹோ'' படித்தோம். ரிச்சார்ட் பிளான்டாஜெனெட்டை ஸ்மூரி விரும்பினான்.

''அவன் அரசன்'' என்று அவன் பெருமிதத்துடன் சொன்னான். ஆனால் அந்தப் புத்தகம் எனக்குச் சலிப்பை அளித்தது.

பொதுவாக எங்கள் ருசி மாறுபட்டிருந்தது. ''தாமஸ் ஜோன்ஸின் கதை'' என்னை ஆகர்ஷித்தது. டாம் ஜோன்ஸின் கதை என்ற நூலின் மொழிபெயர்ப்பு இது.

''முட்டாள்தனம்'' என்று முணுமுணுத்தான் ஸ்மூரி. ''அந்த தாமஸ் என்றால் எனக்கென்ன? அவனால் எனக்கு என்ன ஆக வேண்டும்? வேறு புத்தகங்கள் இருக்க வேண்டும்.''

வேறு புத்தகங்கள்—தடுக்கப்பட்ட புத்தகங்கள், ரகசியமாக வெளியிடப்படும் புத்தகங்கள், இரவில் அறையில் உட்கார்ந்துகொண்டு படிக்க வேண்டிய புத்தகங்கள்—இருப்பதாக ஒரு நாள் நான் அவனிடம் சொன்னேன்.

அவன் கண்கள் விரிந்தன; அவன் மீசை படபடத்தது.

''என்ன அது? நீ பொய் அல்லவா சொல்லுகிறாய்?''

''நான் பொய் சொல்லவில்லை. பாவமன்னிப்புப் பெறும் பொழுது பாதிரி இதைப்பற்றி என்னிடம் கேட்டார். அதற்கு முன் சிலர் அதைப் படிப்பதையும், அழுவதையும் நான் கண்டேன்.''

சமையற்காரன் மந்தமாக என்னைப் பார்த்தான்.

''யார் அழுதார்கள்?'' என்று அவன் கேட்டான்.

''படிப்பதைக் கேட்டுக்கொண்டிருந்த பெண்; பயத்துடன் இன்னொருத்தி வெளியே ஓடினாள்.''

''விழித்தெழு, நீ கனவு காண்கிறாய்!'' என்று கண்களைச் சிமிட்டிக்கொண்டு ஸ்மூரி சொன்னான். ஒரு நிமிடம் பொறுத்துவிட்டு மேலும் அவன் சொன்னான்:

" ரகசியமான ஏதோ ஒன்று எங்கோ இருக்கத்தான் வேண்டும். அதைத் தவிர்க்க முடியாது.....ஆனால் எனக்கு ரொம்ப வயதாகிவிட்டது. மேலும் அதற்கு நான் லாயக்கானவனல்ல.....எனினும் அதைப்பற்றி யோசித்தால்....."

மணிக்கணக்காக அவனால் இப்படிப் பேச முடியும்.

எனக்குத் தெரியாமலேயே படிக்கும் பழக்கத்தை நான் வளர்த்துக்கொண்டேன். நான் மகிழ்ச்சியுடன் படித்தேன். புத்தகங்கள் சித்தரித்த வாழ்க்கைக்கும், யதார்த்த வாழ்க்கைக்கும் இடையே பெருத்த வித்தியாசம் இருந்தது. வாழ்க்கையை மேலும் இது எனக்குப் பாரமாக்கிற்று.

புத்தகங்கள் படிக்கும் ஆசை ஸ்மூரிக்கு அதிகரித்தது. வேலையை விட்டுவிட்டு வருமாறு அடிக்கடி அவன் என்னை அழைத்தான்.

" பெஷ்கோவ் ! இங்கே வந்து படி."

" கழுவ வேண்டிய தட்டுகள் குவிந்து கிடக்கின்றன."

" மாக்ஸிம் அவைகளைக் கழுவுவான்."

என் வேலையைச் செய்யுமாறு சீனியர் தட்டுகள் கழுவு பவனை நிர்ப்பந்தப்படுத்தினான் ஸ்மூரி. கிளாஸ்களை உடைத்து அவன் வஞ்சம் தீர்த்துக்கொண்டான்.

" உன்னை வெளியே அனுப்பிவிடுவேன் " என்று அமைதியாக என்னை எச்சரித்தான் காரியஸ்தன்.

அழுக்கு ஜலம் நிறைந்த தொட்டியில் வேண்டு மென்றே சில கிளாஸ்களை மாக்ஸிம் ஒரு நாள் விட்டு வைத்திருந்தான். தொட்டியை நான் கீழே சாய்த்ததும், கிளாஸ்களும் கடலினுள் போய்விட்டன.

" அது என் தவறு " என்று காரியஸ்தனிடம் ஸ்மூரி சொன்னான். " என் கணக்கில் அதன் கிரயத்தைக் கழித்துக் கொள்ளுங்கள்."

" ஏவலாட்கள் என்னை ஆச்சரியத்துடன் பார்க்க ஆரம்பித்தனர்.

" புத்தகப் பூச்சியே ! உனக்கு எதற்காக அவர்கள் சம்பளம் கொடுக்கிறார்கள் என்று நினைத்தாய் ?" என்று அவர்கள் கேட்பார்கள்.

வேண்டுமென்றே தட்டுகளை அசுத்தமாக்கி என்வேலையை அவர்கள் அதிகமாக்கினர். இது தகராறில்தான் முடியுமென்று நான் எண்ணினேன். என் எண்ணம் தவறுகவில்லை.

ஒரு நாள் மாலை மஞ்சள் கைக்குட்டையும், ஊதா ரவிக்கையும் அணிந்த ஒரு சிறுமி பின்தொடர, சிவப்புவதனம் படைத்த பெண் ஒருத்தி கப்பலுக்கு வந்தாள். இருவரும் தளி குடித்திருந்தார்கள். அவள் எல்லோரையும் வணங்கினாள்; எல்லோரையும் பார்த்துப் புன்னகை புரிந்தாள். பாதிரி மந்திரம் சொல்லுவதைப் போன்று அவள் பேசினாள் :

"என் அன்பர்களே, என்னை மன்னியுங்கள். நான் கொஞ்சம் குடித்திருக்கிறேன். அவர்கள் என்னைக் கோர்ட்டுக்கு அழைத்துச் சென்று, பிறகு விடுதலை செய்தார்கள். இந்த நிகழ்ச்சியைக் கொண்டாடும் முறையில் நான் கொஞ்சம் குடித்தேன்."

சிறுமி சிரித்தாள்; மற்றவர்கள்மீது கடைக்கண் பார்வை செலுத்தினாள்; முதியவளின் விலாவில் இடித்தாள்.

"போ, புனைக்குட்டி ! போ !"

யாக்கோவ் இவானோவிச்சும் ஸெர்ஜியும் படுக்கும் அறைக்கு எதிரிலிருந்த இரண்டாவது வகுப்பு அறையில் அவர்கள் இருவரும் அமர்ந்தனர். பெண் விரைவில் மறைந்து விட்டாள். தவளையைப்போன்ற தனது வாய் புன்னகை பூக்க, சிறுமிக்கு அருகில் இடம் பிடித்தான், ஸெர்ஜி.

அன்றிரவு என் வேலைகளை முடித்துக்கொண்டு, படுக்கும் கட்டில்மீது நான் ஏறியதும், ஸெர்ஜி அங்கே வந்து என் கையைப் பிடித்தான்.

"வா ! உன்னை நாங்கள் இனை சேர்க்கப்போகிறோம் !"

அவன் குடித்திருந்தான். என் கையை விடுவிக்க நான் முயன்றதும் அவன் என்னை அடித்தான்.

"வா !"

குடிவெறியிலிருந்த மாக்ஸிமும் ஓடி வந்தான். தூங்கும் பிரயாணிகளைக் கடந்து தங்கள் அறைக்கு அவர்கள் இருவரும் என்னை இழுத்துச் சென்றனர். கதவுக்கு முன்னே அந்தச் சிறுமிக்கு எதிரில் யாக்கோவ் இவானோவிச் நின்று கொண்டிருந்தான். அவள் அவன் முதுகை வருடிக்கொண்டிருந்தாள்.

"என்னைப் போகவிடு!" என்று குடிவெறியில் அவள் சொன்னாள்.

ஸெர்ஜி, மாக்ஸிம் ஆகியோரின் பிடியிலிருந்து ஸ்மூரி என்னை விடுவித்தான். பிறகு அவர்களின் குடுமியைப் பிடித்து இருவர் தலையையும் மோதினான். அதன் பிறகு அவர்களைக் கீழே உருட்டினான்.

"மனிதனைத் தின்னுகிறவர்கள்!" என்று யாக்கோவிடம் சொல்லிவிட்டு, கதவைப் படாரென்று சாத்தினான். அவன் என்னை முன்னே தள்ளிவிட்டு அவன் குரைத்தான்:

"இங்கிருந்து போ!" என்று.

நான் கப்பலின் முன் பகுதிக்கு ஓடினேன். எங்கும் மேகம் சூழ்ந்திருந்தது; நதி கன்னங்கரேல் என்றிருந்தது. கப்பலுக்கு முன்னே கண்ணுக்குத் தெரியாத தூரைக்குச் செல்லும் இரண்டு பாதைகள் தெரிந்தன. இந்தப் பாதைகளுக்கிடையே படகு சென்றது. இடமும், வலமும் சிவப்பு விளக்குத் தோன்றி, விரைவில் மறைந்தது. விளக்கொளி மறைந்ததும், இரவு மேலும் கருமையாயிற்று.

சிகரெட் பற்றவைத்துக்கொண்டு, நெடுமூச்சுடன் எனக்கு அருகில் உட்கார்ந்தான் சமையற்காரன்.

"அவர்கள் உன்னை அந்த வேசியிடம் இழுத்துச் சென்றார்களா? பன்றிகள்! அவர்கள் உன்னை நோக்கிப் பாய்வது எனக்குத் தெரிந்தது."

"அவர்களிடமிருந்து அவளை நீ காப்பாற்றினாயா?"

"அவளா?" அந்தச் சிறுமியை அவன் சபித்தான். பிறகு வேதனை கலந்த குரலில் சொன்னான்: "இங்கே இருப்பவர்க ளெல்லாம் பன்றிகள்! கிராமத்தைவிட இந்தக் கப்பல் மோசமானது. கிராமத்தில் எப்பொழுதாவது நீ வசித்திருக்கிறாயா?"

"இல்லை."

"கிராமம் மிக மோசமான இடம். குளிர் காலத்தில் கிராமம் மிக மிக மோசமாக இருக்கும்."

சிகரெட் துண்டை வெளியில் எறிந்துவிட்டு, அவன் மேலும் சொன்னான்:

"இந்தப் பன்றிகளுக்கிடையில் நீ கெட்டுவிடுவாய். உனக்காக நான் வருந்துகிறேன், என் சுண்டெலியே! எல்லோருக்காகவும் நான் வருந்துகிறேன். சில சமயங்களில் நான் மண்டியிட்டு அவர்களே வேண்டினாலும் வேண்டுவேன்: 'நீங்கள் என்ன செய்கிறீர்கள், வேசி மக்களா? நீங்கள் குருடர்களா, என்ன?' ஒட்டகங்கள்!"

கப்பல் நீண்ட சீழ்க்கை அடித்தது. கம்பி ஜலத்தில் மோதி விழுந்தது. துறைமுகத்தைக் குறிக்கும் அறிகுறியாக விளக்கு இருளிலே தெரிந்தது. அந்தியிலிருந்து சிறிய விளக்குகள் தெரிந்தன.

"குடிகாரக் காடு" என்று முணுமுணுத்தான் சமையற்காரன். "அங்கே ஒரு நதியும் இருக்கிறது; குடிகார நதி. ஒரு காலத்தில் 'டிரங்கோவ்' என்னும் பெயருடைய ஒரு சேஷன் அதிகாரி இருந்தான். 'லாத்வெஜட்' என்னும் பெயருடைய ஒரு குமாஸ்தா இருந்தான். நான் கரைக்குப் போகிறேன்."

காமா பகுதியைச் சேர்ந்த பலசாலியான பெண்கள் விறகு வெட்டினர். அடிமேல் அடிவைத்து அவர்கள் ஜோடி ஜோடியாகக் கப்பலுக்கு அருகில் வந்து, நாலடி நீளமுள்ள விறகுத் துண்டுகளே உள்ளே எறிந்துவிட்டு, கணீரென்ற குரலில் கூவுவர்:

"ஹி...ஹி....!" என்று.

விறகுத் துண்டுகளே அவர்கள் உள்ளே எறிந்ததும் கப்பல் வேலைக்காரர்கள் அவர்கள் கால்களையும், ஸ்தனங்களையும் பிடிப்பர். பெண்கள் கூச்சலிட்டு, அவர்கள்மீது துப்புவர். திரும்பி வரும்பொழுது அடியிலிருந்தும், கிள்ளுவதிலிருந்தும் தப்பித்துக்கொள்ள, தங்கள் கைவண்டிகளால் அவர்கள் திருப்பித் தாக்குவர். ஒவ்வொரு தரமும் இந்தக் காட்சியை நான் கண்டிருக்கிறேன். காடுகள் இருக்கும் துறைமுகத்தில் நாங்கள் நங்கூரம் போட்டபொழுதெல்லாம் இந்த நிகழ்ச்சி நிகழ்ந்தது.

அந்தக் கப்பலிலே பல வருடங்கள் வாழ்ந்த கிழவனைப் போன்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. நாளையும், அடுத்த வாரமும், அடுத்த சரத் காலமும் என்ன நடக்கும் என்பது எனக்குத் தெரியும்.

வெளிச்சம் பரவ ஆரம்பித்தது. துறைமுகத்திற்கப்பால் பெரிய தேவதாரு மரம் கண்ணுக்குத் தெரிந்தது. கூவிக் கொண்டும், பாடிக்கொண்டும், சிரித்துக்கொண்டும் பெண்கள் குன்றின்மீது ஏறிக்கொண்டிருந்தனர். நீண்ட கைவண்டியை ஆயுதமாகக்கொண்ட அவர்கள் சிப்பாய்களைப் போன்று தோன்றினர்.

நான் அழ விரும்பினேன். என் நெஞ்சிலே கண்ணீர் அரும்பி என் இதயத்தை அழுத்திற்று. இது எனக்கு வேதனை அளித்தது.

ஆனால் அழ எனக்கு வெட்கமாக இருந்தது. எனவே, மேல்தட்டைக் கழுவிக்கொண் டிருந்த போரினுக்கு நான் உதவிபுரிந்தேன்.

போரின் ஆடம்பரமற்றவன். அவன் வெளிறியிருந்தான். சந்தடியற்ற மூலையில் உட்கார்ந்து அவன் பேந்தப் பேந்த விழிப்பான். ஒரு நாள் அவன் என்னிடம் சொன்னான் :

" என் பூர்வபெயர் போரின் அல்ல ; ஆனால் வோரின். என் அன்னை விபசாரம் செய்ததால் இந்தப் பெயர் எனக்குச் சூட்டப்பட்டது. எனக்கு ஒரு சகோதரி இருக்கிறாள். அவளும் விபசாரம் செய்கிறாள். அது அவர்கள் விதி என்று தோன்றுகிறது. விதி, கழுத்தைச் சுற்றியிருக்கும் கல்லைப் போன்றது, சகோதரா ! நீ எழுந்திருக்க விரும்பலாம்."

வேலை முடிந்ததும் சாந்தமான குரலில் அவன் சொன்னான் :

" பெண்கள்மீது அவர்கள் எப்படி விழுகிறார்கள், பார்! இதைப்பற்றி யோசித்துப் பார்! விடாது முயன்றால், ஈரமான விறகைக்கூட எரிய வைத்துவிடலாம். இதை நான் விரும்பவில்லை, சகோதரா! இதை என்னால் சகிக்க முடியவில்லை. நான் பெண்ணாக இருந்தால், குளத்தில் விழுந்து செத்திருப்பேன். கடவுள் என்னைக் காக்கட்டும் ! இப்பொழுதே நீ கஷ்டங்கள் அனுபவிக்கிறாய். இது போதா தென்று அவர்கள் உன் உணர்ச்சியைத் தூண்டிவிடுகின்றனர் ! ஸ்கோப்ஸிகள் முட்டாள்களல்ல என்று நான் சொல்லுகிறேன் ; பேடிகள். அவர்கள் கெட்டிக்காரர்கள். வாழச் சரியான வழியை அவர்கள் கண்டுபிடித்தனர். வாழ்க்கையின் சிறிய விஷயங்களை

உதறித் தள்ளிவிட்டு, பரிசுத்தமாகக் கடவுளுக்குப் பணி புரி கின்றனர்.''

சேற்றுக்கிடையே நடந்துசென்ற காப்டனின் மனைவி பாவாடையைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு நடந்தாள். அவள் சீக்கிரம் எழுந்துவிடுவாள். நெட்டையாகவும் கம்பீரமாகவும் அவள் இருந்தாள். முகம் அவள் கபடமற்றிருந்ததால், அவளை அணுக என் உள்ளம் துடித்தது.

'' ஏதாவது சொல்லுங்கள் !'' என்று அவளைக் கேட்க என் இதயம் துடித்தது.

மெதுவாகத் துறைமுகத்திலிருந்து கப்பல் வெளி யேறிற்று.

'' நாம் புறப்பட்டுவிட்டோம் '' என்று சிலுவை அடையாளம் வரைந்துகொண்டே சொன்னன் போரின்.

6

ஸாராபூலில் மாக்ஸிம் கப்பலைவிட்டு வெளியேறினான். எவரிடமும் விடைபெறாமல், மௌனமாக, சாந்தமாக அவன் வெளியேறினான். அவனுக்குப் பின்னே உல்லாசமான அந்தப் பெண்ணும், ஓடிந்த, கண் போளைகள் வீங்கிய சிறுமியும் வெளியேறினர். நீண்டநேரம் காப்டனின் கதவுக்கு முன்னே மண்டியிட்டு உட்கார்ந்திருந்தான் ஸொர்ஜி. கதவுப்பிடியை அவன் முத்தமிட்டான் ; உச்சந் தலையைக் கதவில் மோதிக் கொண்டான்.

'' என்னை மன்னியுங்கள் ! அது என் தவறல்ல '' என்று அவன் ஓலமிட்டான். '' அது மாக்ஸிமின் தவறு.''

அவன் பொய் சொல்லுகிறான் என்பது கப்பல் வேலைக் காரர்களுக்கும், பிரயாணிகளில் சிலருக்கும் தெரியும். எனி னும் அவர்கள் அவனை உற்சாகப்படுத்தினர்.

'' தைரியத்தை இழக்காதே ! அவர் உன்னை நிச்சயமாக மன்னிப்பார் !''

காப்டன் அவனை மன்னித்தார். ஆயினும் காப்டன் அவனை எட்டி உதைத்ததால், அவன் கீழே உருண்டான். மறு

விநாடி உணவுத் தட்டை ஏந்திக்கொண்டு, அடிபட்ட நாயைப் போன்று அங்குமிங்கும் ஓடினான்.

மாக்ஸிமுக்குப் பதிலாக வியாட்கா என்னும் மாஜி சிப்பாயை அவர்கள் வேலைக்கு அமர்த்தினர். சிறிய தலையும், சிவந்த கண்களும் படைத்த சின்ன மனிதன் அவன். கோழிகளைக் கொல்ல இரண்டாவது சமையற்காரன் அவனை அனுப்பினான். சிப்பாய் இரண்டு கோழிகளைக் கொன்றான். மற்றவை ஓடின. அவைகளைப் பிடிக்கப் பிரயாணிகள் முயன்றனர். ஆனால் மூன்று கோழிகள் வெளியே பறந்து சென்றன. குகினிக்கு அருகில் கிடந்த விறகுக் குவியல்மீது உட்கார்ந்துகொண்டு, நிராசையுடன் அவன் அழ ஆரம்பித்தான்.

"என்ன விஷயம், முட்டாள்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான், ஸ்மூரி. "சிப்பாய் அழுவதாக யாராவது கேட்டதுண்டா?"

"நான் போராடாத சிப்பாய்" என்று மிருதுவாகச் சொன்னான் சிப்பாய்.

அது அவன் அழிவில் முடிந்தது. அரை மணி நேரத்திற்குள் கப்பலில் இருந்தவர்கள் எல்லாம் அவனைக் கேலிசெய்ய ஆரம்பித்தனர். ஒருவர் பின் ஒருவராக அவனை அணுகி, உற்றுப் பார்த்துவிட்டு, "இவன்தானே?" என்று கேட்டு, வாய்விட்டுச் சிரித்தனர்.

முதலில் அவர்களையோ, அவர்கள் சிரித்ததையோ சிப்பாய் கவனிக்கவில்லை. சட்டையின் கையால் கண்ணீரை மறைப்பதைப் போன்று, தனது சட்டையால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அவன் அங்கே உட்கார்ந்திருந்தான். ஆனால் விரைவில் அவன் கண்கள் கோபத்தால் சிவந்தன. அவன் உணர்ச்சி அடைந்தான்.

"ஏன் என்னை இப்படி விழித்துப் பார்க்கிறீர்கள்? சைத்தானிடம் சென்று, அங்கே ஸ்திரமாக இருங்கள்!"

அவன் சொன்னது மேலும் பொது ஜனங்களைக் கிண்டிவிட்டது. அவன் விலாவில் அவர்கள் குத்தினர்; அவன் சட்டையையும், மேலங்கியையும் இழுத்தனர்; சாப்பாட்டு நேரம்வரையில் இரக்கமின்றி அவனைக் கேலி செய்தனர். சாப்பிட்ட பிறகு ஒருவர் ஒரு மரக் கரண்டியில் எலுமிச்சம்

பழத்தைச் சொருகி, அதை அவன் மேலங்கியில் கட்டினர். சிப்பாய் நடந்தபொழுது கரண்டி மேலும் கீழும் அசைந் தாடிற்று. இதைக் கண்டு எல்லோரும் சிரித்தனர். அவர் கள் மகிழ்வதற்குரிய காரணத்தைத் தெரிந்துகொள்ளாத அவன், பொறியில் அகப்பட்ட சுண்டெலியைப்போல் பொருமினான்.

ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் ஸ்மூரி அவனைக் கவ னித்தான். பெண்ணின் வதனத்தைப்போல் அவன் வதனம் மிருதுவாக அப்பொழுது இருந்தது.

சிப்பாய்க்காக நான் வருந்தினேன்.

" கரண்டியைப்பற்றி நான் அவனிடம் சொல்லட்டுமா?" என்று நான் ஸ்மூரியைக் கேட்டேன்.

அவன் தலையை அசைத்தான்.

எல்லோரும் எதற்காகச் சிரிக்கிறார்கள் என்பதை நான் சிப்பாயிடம் சொன்னதும், அவன் கரண்டியைப் பிடித்து இழுத்து, அதைக் கீழே போட்டு மிதித்தான். பிறகு இரு கைகளாலும் என் மயிரை பிடித்துக்கொண்டான். கூடி இருந்தவர்கள் சந்தோஷத்தால் ஆர்ப்பரிக்க, நாங்கள் போராடினோம்.

ஸ்மூரி அவர்களைத் துரத்திவிட்டு, எங்களை வேறுபடுத்தி னான். முதலில் என் காதைத் திருகினான் ; பிறகு சிப்பாயின் காதைப் பிடித்து இழுத்தான். அவன் பிடியிலிருந்து விடுபட இந்தச் சின்ன மனிதன் செய்த முயற்சியைக் கண்டு, கூடி யிருந்த ஜனங்கள் வாய்விட்டுச் சிரித்தனர் ; சிழ்க்கை யடித்த னர் ; காலைத் தரையில் மிதித்தனர்.

" படை வாழ்க ! சமையற்காரன் வயிற்றில் குத்து !"

மனிதக் கூட்டத்தின் வெறிபடைத்த இந்த இன்பம் என் ஆத்திரத்தைத் தூண்டிவிட்டது. ஒரு கம்பை எடுத்து அடித்து, அவர்களின் மண்டையைப் பிளக்க வேண்டுமென்று எனக்கு ஆசையாக இருந்தது.

சிப்பாயைப் போகவிட்டுவிட்டு, கைகளைப் பின்னே கட்டியவாறு பற்களை நறநற வென்று கடித்துக்கொண்டு,மீசை படபடக்க, காட்டுக் காடியைப்போன்று ஜனங்கள் பக்கம் திரும்பினான் ஸ்மூரி.

" எல்லோரும் அவரவர் இடத்திற்கு நடவுங்கள் ! மனி தனைத் தின்னுகிறவர்கள் !"

மீண்டும் சிப்பாய் என்மீது பாய்ந்தான். ஒரு கையால் அவனை உயரத் தூக்கினான், ஸ்மூரி. குழாய்க்கு அவனைத் தூக் கிச் சென்று, ஜலத்திற்கடியில் அவன் தலையை முக்கி, அவனை உட்காரவைத்தான். பொம்மையைத் திருகுவதைப்போன்று, சிப்பாயின் உடம்பை ஸ்மூரி திருகினான்.

கப்பல் வேலைக்காரர்களில் சிலரும், காரியஸ்தனும் ஓடி வந்தனர். மீண்டும் கூட்டம் சேர்ந்துவிட்டது. மற்றவர்களின் தலைக்கு மேலே காரியஸ்தனின் தலை தெரிந்தது. அவன் வழக் கம்போல் பணிவாகவும், மௌனியாகவும் காட்சியளித்தான்.

விறகுக் குவியல்மீது உட்கார்ந்துகொண்டு நடுங்கும் கைகளால் சிப்பாய் பூட்ஸைக் கழற்றினான். கால்களில் சுற்றிக்கொண்டிருந்த கந்தல்களை அவன் இழுத்தான். ஆனால் அவை உலர்ந்திருந்தன. எண்ணெய் படாத அவன் தலையி லிருந்து ஜலம் சொட்டுச் சொட்டாக விழுந்தது. இதைக் கண்டு பொது ஜனங்கள் மீண்டும் சிரித்தனர்.

" நீ பொறு " என்று சிப்பாய் சொன்னான். " அந்தப் பையனை நான் கொல்லுவேன் !"

என் தோளைப் பிடித்து நிறுத்திவிட்டு, அதிகாரியிடம் ஸ்மூரி என்னமோ சொன்னான். கப்பல் வேலைக்காரர்கள் கூட்டத்தைக் கலைத்தனர்.

"உன்னை நாங்கள் என்ன செய்வது ?" என்று, எல்லோ ரும் போன பிறகு ஸ்மூரி சிப்பாயைக் கேட்டான்.

சிப்பாய் ஒன்றும் சொல்லவில்லை. அவன் தேகம் நடுங் கிக்கொண்டிருந்தது. வெறியுடன் அவன் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

" அட்டென்ஷன் ; உளறுவாயனே !"

" வெண்டைக்காய் ! இது ராணுவமல்ல !" என்றான் சிப்பாய்.

இதைக் கேட்டதும் சமையற்காரன் கிலுகிலுத்தான். அவன் கோபம் தணிந்தது. அவன் துப்பிவிட்டு, என்னை அழைத்துக்கொண்டு போய்விட்டான். அதிர்ச்சியடைந்த

கான், சிப்பாயைத் திரும்பிப் பார்த்துக்கொண்டே நடந்தேன். ஆனால், ஸ்மூரி முணுமுணுத்தான் :

" சண்டைக்காரப் பயல், இல்லேயா ? வா போகலாம்."

ஸொர்ஜி எங்களே அணுகி, தணிந்த குரலில் சொன்னன்:

" தன் கழுத்தை அறுக்க அவன் விரும்புகிறான் !"

" என்ன ?" என்று கூவிக்கொண்டே, ஸ்மூரி திரும்பி ஓடினன்.

கோழிகளின் கழுத்தை அறுக்க உபயோகித்த பெரிய கத்தியையும், எரியும் விறகையும் கையில் வைத்துக்கொண்டு சிப்பாய் 'பார்மென்' அறைக்கு முன் நின்றுகொண்டிருந்தான். கத்தி மழுங்கலாக இருந்தது. ஜலம் சொட்டும் தலையுடன் அங்கே நின்றுகொண்டிருந்த விசித்திரமான இந்த மனிதனைக் காணப் பெருங் கூட்டம் கூடிவிட்டது. அவன் முகம் நடுங்கிக் கொண் டிருந்தது. வாயைத் திறந்துகொண்டும் உதட்டைச் சுளித்துக்கொண்டும் அவன் முணு முணுத்தான் :

" அயோக்கியர்கள் ! அயோக்கியர்கள் !" என்று.

அருகிலிருந்த ஒன்றின்மீது ஏறி நின்று, அங்கிருந்தவர் கள் முகத்தை நான் பார்த்தேன். அவர்கள் புன்னகை புரிந் தனர். ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டனர் :

" பார் ! பார் !" என்று.

குழந்தையின் கைகளைப் போன்றிருந்த தன் கைகளால் சட்டையைக் கால்சட்டைக்குள் திணிக்க அவன் முயன்ற பொழுது, எனக்கு அருகில் நின்ற ஒரு அழகன் நெடுமூச் சுடன் கேட்டான் :

" தற்கொலே செய்துகொள்ளப் போவதானால், கால் சட்டையை எதற்காக அவன் இழுத்துவிட்டுக்கொள்ள வேண்டும் ?"

ஜனங்கள் உரக்கச் சிரித்தனர். தற்கொலே புரிந்துகொள் ளும் மனேநிலேயில் அவனுக்கு இருப்பதாக யாரும் நினேக்க வில்லே. நானும் இதை நம்பவில்லே. அவனே உற்றுப்பார்த்து விட்டு, ஜனங்களேத் தன் வயிற்றால் தள்ளினன், ஸ்மூரி.

" இங்கிருந்து போங்கள், முட்டாள் !"

"போங்கள்" என்று பன்மையில் சொல்வதிலே ஸ்மூரிக்குப் பரம திருப்தி. அவன் கும்பலே அணுகி, " போய்விடுங்கள்,

முட்டாள் !'' என்று சொன்னால், அது எல்லோரையும்தான் அது குறிக்கும்.

இது வேடிக்கையாக இருந்தது. எனினும் இன்று அதிகாலையிலிருந்து எல்லோரும்முட்டாளாகத்தான் தோன்றினர்.

கூட்டம் கலைந்து சென்ற பிறகு, அவன் சிப்பாயை அணுகி, கையை நீட்டினான்.

'' கத்தியை என்னிடம் கொடு !''

'' அதனால் பாதகமில்லை '' என்று சொல்லிக்கொண்டே சிப்பாய் கத்தியைக் கொடுத்தான். சமையற்காரன் அதை என்னிடம் கொடுத்துவிட்டு, சிப்பாயை அறைக்குள் தள்ளினான்.

'' படுக்கையில் படுத்து, சிறிது நேரம் தூங்கு. உனக்கு என்ன கோளாறு ?''

ஒரு வார்த்தையும் சொல்லாமல் சிப்பாய் கட்டிலில் உட்கார்ந்தான்.

'' சாப்பிடுவதற்கு ஏதாவது அவன் கொண்டுவருவான்; கொஞ்சம் வோட்காவும் கொண்டுவருவான். நீ வோட்கா குடிப்பாயா ?''

'' கொஞ்சம் குடிப்பேன்.''

'' அவனை நீ தொடக் கூடாது. அவன் உன்னைப் பார்த்துச் சிரிக்கவில்லை. உனக்குக் காது கேட்கிறதா ? அவன் சிரிக்கவில்லை என்று நான் சொல்லுகிறேன்.''

'' அவர்கள் எதற்காக என்னை இப்படிச் சித்திரவதை செய்கிறார்கள் ?'' என்று சிப்பாய் மிருதுவாகக் கேட்டான்.

ஒரு நிமிடம் ஸ்மூரி ஒன்றும் சொல்லவில்லை.

'' எனக்குத் தெரியும் என்று நினைக்கிறாயா ?'' என்று கடைசியில் கேட்டான்.

நானும், அவனும் குகினிக்குத் திரும்பிச் சென்றோம்.

'' விசேஷமான ஒரு பிரகிருதியை அவர்கள் வேலைக்கு அமர்த்தி யிருக்கிறார்கள் '' என்று வழியில் அவன் முணு முணுத்தான். '' நீ அதைப் பார்த்தாயா ? உன்னைப் பைத்தியமாக்கிவிடுவார்கள் ஜனங்கள், சகோதரா! அவர்கள் உன்னைப் பைத்தியமாக்கிவிடுவார்கள். மூட்டைப் பூச்சியைப் போன்று அவர்கள் உன்மீது ஒட்டுவார்கள். தெரிகிறதா ? நான் என்ன

சொன்னேன்? மூட்டைப்பூச்சி யென்ற? மூட்டைப்பூச்சியை விட அவர்கள் ஆயிரம் மடங்கு மோசமானவர்கள் !''

சொட்டியும், இறைச்சியும், வோட்காவும் எடுத்துக் கொண்டு நான் அறைக்குள் பிரவேசித்தபொழுது, முன்னும் பின்னும் அசைந்துகொண்டும் பெண்ணைப் போன்று அழுது கொண்டும் சிப்பாய் கட்டிலில் உட்கார்ந்திருந்தான். தட்டை நான் மேஜைமீது வைத்தேன்.

'' சாப்பிடு '' என்றேன் நான்.

'' கதவைச் சாத்து.''

'' இருட்டாக இருக்குமே !''

'' கதவைச் சாத்து ; இல்லை யெனில் அவர்கள் திரும்ப வருவார்கள்.''

நான் வெளியே சென்றேன். சிப்பாயை நான் விரும்ப வில்லை. என் அனுதாபத்தையோ, இரக்கத்தையோ, அவன் தூண்டிவிடவில்லை. இது எனக்கு வேதனை அளித்தது. பாட்டி என்னிடம் சொல்லி யிருக்கிறாள் :

''ஜனங்கள்மீது இரக்கம் காட்ட வேண்டும். துரதிர்ஷ்ட சாலிகள் கஷ்டப்படுகிறார்கள்—''

நான் திரும்பி வந்ததும் '' அதை அவனுக்குக் கொடுத் தாயா ?'' என்று சமையற்காரன் கேட்டான். '' நல்லது ; அவன் எப்படி இருக்கிறான் ?''

'' அவன் அழுகிறான்.''

''பூ, கந்தல் ! சிப்பாய் என்று அவனைச் சொல்லலாமா?''

'' அவனுக்காக நான் வருந்தவில்லை.''

'' ஏன் ?''

'' ஒருவன் மற்றவன்மீது இரக்கம்கொள்ள வேண்டும்.''

என் கையைப் பிடித்து என்னைத் தன் பக்கம் இழுத் தான், ஸ்மூரி.

'' வருத்தத்தைத் தினித்துக்கொள்ள முடியாது, பொய் சொல்லுவது நல்லதல்ல, தெரிகிறதா !'' என்று அவன் கம் பீரமாகச் சொன்னான். '' மாசுடையவனைப் விடாதே ! உன் மனது உனக்குத் தெரிய வேண்டும்.''

என்னை அப்பால் தள்ளிவிட்டு அவன் மந்தமாகச் சொன் னான் :

"இது உனக்குத் தகுந்த இடமல்ல. இதோ, ஒரு சிக செட் குடி."

பிரயாணிகளின் நடத்தை என் உணர்ச்சியைத் தட்டி எழுப்பிற்று. சிப்பாயை அவர்கள் கேலி செய்ததும், ஸ்மூரி அவன் காதைப் பிடித்து இழுத்தபொழுது அவர்கள் நகைத்ததும் அவமதிப்பான செயல்கள் என்று நான் கருதினேன். அவ்வளவு வெறுக்கத்தக்க, பரிதாபகரமான சம்பவத்தைக் கண்டு அவர்கள் எப்படி மகிழ்ந்தார்கள்? அதிலே அவர்கள் என்ன வேடிக்கையைக் கண்டார்கள்?

சுவைத்துக்கொண்டும் குடித்துக்கொண்டும், சீட்டு விளையாடிக்கொண்டும், மரியாதையாகவும், சாந்தமாகவும் பேசிக்கொண்டும், நதியைப் பார்த்துக்கொண்டும் பிரயாணிகள் மேல்தட்டில் உட்கார்ந்துகொண்டோ, படுத்துக்கொண்டோ இருந்தனர். அவர்களுடைய அப்பொழுதைய நிலையைக் கண்டால் ஒரு மணி நேரத்திற்கு முன் சீழ்க்கை அடித்தவர்கள் இவர்கள்தானா என்ற சந்தேகம் ஏற்படும். முன்போல் மீண்டும் அவர்கள் அமைதியாகக் காணப்பட்டனர். கொசுவோ, அல்லது தூசியோ சூரிய ஒளியிலே நடமாடுவதைப் போன்று அவர்கள் காலையிலிருந்து இரவுவரையில் கப்பலில் மெதுவாக நடமாடினர். படிக்கட்டுப் பலகையின்மீது டஜன் கணக்கானவர்கள் கூட்டமாக நின்றனர். கரையில் இறங்கு முன் அவர்கள் சிலுவை அடையாளம் வரைந்துகொண்டனர். அதே சமயத்தில் அவர்களைப் போன்ற டஜன் கணக்கானவர்கள், அவர்களைப் போன்றே ஆடை அணிந்தவர்கள், பாரங்களைச் சுமந்துகொண்டு கப்பலுக்குள் வந்தனர்.

அடிக்கடி ஜனங்கள் மாறி மாறி வந்தும், கப்பல் வாழ்க்கையிலே எந்தவிதமான மாற்றமும் ஏற்படவில்லை. முன்னவர்கள் பேசின விஷயங்களைத்தான் புதிய பிரயாணிகளும் பேசினர்: நிலம், வேலை, கடவுள், பெண்கள். அவர்கள் உபயோகித்த அதே வார்த்தைகளை இவர்களும் உபயோகித்தனர்.

"நாம் சகிக்க வேண்டும் என்பது கடவுளின் கட்டளை. எனவே நாம் சகித்துக்கொண்டே இருப்போம். இதைப்பற்றி நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. இது நமது விதி."

இத்தகைய வார்த்தைகளை அவர்கள் பேசுவதைக் கேட்கும்பொழுது ஆத்திரமேற்பட்டது. அழுக்கை என்னால் சகிக்க முடியாது ; குரூரமாகவும், அக்கிரமமாகவும் நடத்தப்படுவதையும் என்னால் சகிக்க முடியாது. இப்படி என்னை நடத்துவதற்கு நான் எந்தத் தவறும் செய்யவில்லை என்பது திண்ணம். சிப்பாயையும் இப்படி நடத்தியிருக்கக் கூடாது. விகாரமாகத் தோற்றமளிக்க வேண்டும் என்று நிச்சயமாக அவன் விரும்பியிருக்க மாட்டான்.

இளகிய மனம் படைத்த மாக்ஸிமை அவர்கள் வெளியில் அனுப்பினார்கள். அதே சமயத்தில்,வெறுக்கத்தக்க ஸொர்ஜியை அவர்கள் வேலைக்கு வைத்துக்கொண்டனர். ஒரு மனிதன் பைத்தியக்காரனாகும்வரையில் அவனைச் சித்திரவதை செய்யும் ஆற்றல் படைத்த இந்த மனிதர்கள்,கப்பல் வேலைக்காரர்களின் கட்டளைகளைப் பணிவாக ஏற்று நடப்பதின் நோக்கம் என்ன?

" கம்புகளுக்கு அப்பால் விலகி நில்லுங்கள் !" என்று தண்டேல்காரன் விஷமத்துடன் கூவினான். " கப்பல் கரை கட்டுவதை நீங்கள் காணவில்லையா ? அப்பால் போங்கள், சைத்தான்களா !"

சைத்தான்கள் பணிவுடன் மறு பக்கம் சென்றனர். ஆட்டு மந்தையைத் துரத்துவதைப் போன்று அங்கிருந்து மீண்டும் அவர்கள் துரத்தப்பட்டனர்.

" எலிகளா !"

உஷ்ணமான இரவுகளில் பித்தளை மேல்கூரைக்கு அடியில் இருப்பது சகிக்க முடியாததாக இருந்தது. ஏனெனில் பகலில் அது சூடேறிற்று. கப்பலின் மேல் தட்டிலே பிரயாணிகள் ஊர்ந்தனர் ; நினைத்த இடத்தில் படுத்துறங்கினர். கரைகட்டுகிற இடங்களிலெல்லாம் கப்பல் வேலைக்காரர்கள், அவர்களை மிதித்தும் அடித்தும் எழுப்பினர்.

" ஏய், வழியிலிருந்து விலகுங்கள். உங்கள் இடங்களுக்குச் செல்லுங்கள் !"

அவர்கள் எழுந்திருந்து தூக்கக் கலக்கத்தில் அங்குமிங்கும் நடந்தனர்.

உடையில்தான் பிரயாணிகளுக்கும் கப்பல் வேலைக் காரர்களுக்கும் வித்தியாசம். எனினும் போலீஸ்காரர்கள் கட்டளையிடுவதைப் போன்று அவர்கள் கட்டளையிட்டனர்.

இந்த மனிதர்கள் கோழைகள், கூச்சமுடையவர்கள், விதிவிட்ட வழியிலே வாழ்க்கை நடத்துகிறவர்கள். இந்த மனப்பான்மை உல்லாசமானதாக மாறுகிறபொழுது, நிலைமை மிக நூதனமாகவும், பயங்கரமானதாவும் இருந்தது. தாங்கள் எங்கே நடத்திச் செல்லப்படுகிறார்கள் என்பது ஜனங்களுக் குத் தெரியவில்லை என்று எனக்குத் தோன்றிற்று. கப்பல் எங்கே அவர்களை இறக்குகிறது என்பதைப்பற்றி அவர் களுக்குக் கவலையில்லை. கரையில் அவர்கள் கொஞ்ச நேரம் தான் இருப்பார்கள். கொஞ்ச நேரம் கரையில் இருந்துவிட்டு, மீண்டும் இந்தக் கப்பலிலோ, அல்லது வேறு கப்பலிலோ ஏறுவார்கள். அது அவர்களை எங்காவது அழைத்துச் செல் லும். அவர்கள் நாடோடிகள்; எல்லா இடமும் அவர்களுக்கு அன்னியமானது ; எல்லா ஜனங்களும் கோழைகள்.

ஒரு நாள் நடுநிசிக்குப் பிறகு பீரங்கிக் குண்டைப் போன்று ஒரு யந்திரம் வெடித்தது. இஞ்சின் அறையி லிருந்து எழுந்த வெண் ஆவி கப்பலின் மேல் தட்டை மூடிற்று. வெடிப்புகளின் வழியே அது சுழன்றது. காது செவிடுபடும்படி யாரோ கூவினர்.

" காவ்ரிலோ ! ஒரு தண்டு வெல்வெட்டும், கொஞ்சம் சிவப்பு ரயமும் !"

இஞ்சின் அறைக்கு அருகில், தட்டுகளைக் கழுவுவதற்காக இருந்த மேஜைமீது நான் படுத்துறங்கினேன். வெடிப்பாலும், அதிர்ச்சியாலும் நான் விழித்தெழுந்தபொழுது, மேல் தட் டிலே அமைதி குடிகொண்டிருந்தது. யந்திரம் சீறிக்கொண் டிருந்தது. சம்மட்டி வேகமாக அடித்துக்கொண் டிருந்தது. அடுத்த நிமிடம் டெக் பிரயாணிகள் கோரமாகக் கூவிக் கொண்டும், ஊளையிட்டுக்கொண்டும் இருந்தனர்.

வேகமாகக் கலந்துகொண் டிருந்தது வெண் ஆவிப் படலம். அலங்கோலமாக இருந்த பெண்களும், மீன் கண் களைப்போன்ற கண்கள் படைத்த ஆண்களும் ஒருவரை ஒரு வர் இடித்துத் தள்ளிக்கொண்டு அங்குமிங்கும் ஓடினர்.

மூட்டைகளிலும், சாக்குகளிலும், பெட்டிகளிலும் அவர்கள் இடறினர், கீழே விழுந்தனர், ஒருவர்மீது ஒருவர் மோதினர். கடவுளையும் ஸையின்ட் நிக்கோலாயையும் அவர்கள் பிரார்த்தித்தனர். அந்தக் காட்சி பயங்கரமாக, ஆனால் கவர்ச்சிகரமாக இருந்தது. அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதைக் காண நானும் அவர்களைப் பின்தொடர்ந்து ஓடினேன்.

இரவில் அபாய அறிவிப்பு சம்பந்தமாக எனக்கு ஏற்பட்ட முதல் அனுபவம் இதுதான். தவறுக அபாய அறிவிப்புச் செய்யப்பட்டது என்று நான் கருதினேன். வழக்கமாகச் செல்லும் வேகத்தில் கப்பல் சென்றது. வலது புறக் கரையில், வெகு சமீபத்தில் தீ எரிந்தது. பூரண சந்திரன் இரவை ஒளிமயம் ஆக்கிற்று.

ஆனால், வெறிபிடித்தவர்களைப் போன்று ஜனங்கள் தொடர்ந்து ஓடினர். காபின் பிரயாணிகளும் வெளியே வந்தனர். ஒருவர் வெளியே குதித்தார். மற்றவர்கள் அவரைப் பின்தொடர்ந்தனர். இரண்டு மூஷிக்குகளும், ஒரு பாதிரியும் கட்டைகளை எடுத்துக்கொண்டு டெக்கில் பொருத்தப்பட்டிருந்த பெஞ்சை பெயர்த்தெடுத்தனர். ஒரு பெரிய கோழிக் கூண்டை கப்பலின் முன்னணியை நோக்கி எறிந்தனர். டெக்கின் மத்தியிலே மண்டியிட்டு உட்கார்ந்திருந்த ஒரு மூஷிக் அந்த வழியாகச் சென்றவர்களை வணங்கிவிட்டு, ஓநாயைப் போல் ஊளையிட்டான் :

"உண்மையான விசுவாசிகளே, நான் ஒரு பாவி!" என்று.

" ஒரு படகு, சைத்தான்களா !" என்று கால்சட்டை மாத்திரம் அணிந்திருந்த பருமனான ஒரு கனவான் தனது மார்பில் குத்திக்கொண்டு கூவினர்.

ஜனங்களின் பிடரியைப் பிடித்துக்கொண்டும், ஜனங்களின் தலையைக் குத்திக்கொண்டும் கப்பல் வேலைக்காரர்கள் அங்குமிங்கும் ஓடினர். இரவு உடைக்கு மேலே கோட்டு அணிந்துகொண்டு ஸ்மூரி அங்குமிங்கும் நடந்தான்.

" வெட்கத்தை விற்றுவிட்டீர்களா ?" என்று கனத்த குரலில் ஸ்மூரி ஜனங்களைக் கேட்டான். "உங்களுக்கெல்லாம் பைத்தியம் பிடித்துவிட்டதா ? கப்பலுக்கு ஆபத்தில்லை ;

அது மூழ்கவில்லை. கல்லெறியும் தூரத்தில் நதிக்கரை இருக்கிறது. நதியில் குதிக்கும் முட்டாள்களைக் காசைசேர்க்க விவசாயிகள் இருக்கிறார்கள். அதோ, அவர்கள் இருக்கிறார்கள்— இரண்டு படகு நிறைய !''

மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளின் தலையில் அவன் குத்தினான். எனவே, அவர்கள் சாக்கு மூட்டைகளைப்போல் அங்கங்கே சுருண்டு கிடந்தனர்.

அந்தக் கோலாகலம் ஓயுமுன் தொப்பியணிந்த ஒரு சிமாட்டி, டேபில் ஸ்பூனை ஆட்டிக்கொண்டு ஸ்மூரியை நோக்கிப் பாய்ந்தாள்.

'' நீ எப்படி இதைச் செய்யத் துணிந்தாய் ?''

வியர்த்துக்கொண்டிருந்த ஒரு கனவான் அவளைப் பிடித்துக்கொண்டார்.

'' அந்த முட்டாள் வழிக்குப் போகாதே !'' என்று ஆத்திரத்துடன் சொல்லிவிட்டு, மீசையை நக்கினார் கனவான்.

ஸ்மூரி தோள்களைக் குலுக்கினான். குழப்பத்துடன் விழித்துக்கொண்டு அவன் என் பக்கம் திரும்பினான்.

'' எப்படி இருக்கிறது ?'' என்றான் அவன். '' நான் என்ன செய்ய வேண்டும் என்று அவள் சொல்லுகிறாள் ? இதற்கு முன் நான் அவளைப் பார்த்ததே இல்லை.''

மூக்கிலிருந்து வழிந்துகொண்டிருந்த ரத்தத்தை உறிஞ்சிவிட்டு, ஒரு சிறிய மூஷிக் கத்தினான் :

'' எப்படிப்பட்ட ஜனங்கள் ! எப்படிப்பட்ட கொள்ளைக்காரர்கள் !''

அந்த வேனிற்காலத்தில் இரு முறை கப்பலில் குழப்பம் ஏற்பட்டதை நான் கண்டேன். நிஜமான ஆபத்தால் ஏற்பட்ட குழப்பங்களல்ல அவை ; ஆனால் ஆபத்து ஏற்படுமோ என்ற பீதியால் ஏற்பட்ட குழப்பங்கள் அவை. மூன்றாவது முறை பிரயாணிகள் இரண்டு திருடர்களைப் பிடித்தனர். அவர்களில் ஒருவன் தீர்த்த யாத்திரைக்காரனைப்போல் வேடமணிந்திருந்தான். கப்பல் வேலைக்காரர்களின் கண்படாத இடத்திற்கு அவர்களை இழுத்துச் சென்று, ஒரு மணி நேரம் அவர்களை நையப் புடைத்தனர் ஜனங்கள் கப்பல் வேலைக்காரர்கள்

இறுதியில் அவர்களை மீட்டபொழுது, பிரயாணிகள் கப்பல் வேலைக்காரர்கள்மீது பாய்ந்தனர்.

" திருடர்கள் திருடர்களை மறைக்கிறார்கள் ! உங்களை எங்களுக்குத் தெரியும் !" என்று அவர்கள் கூவினர்.

" நீங்கள் கொள்ளைக்காரர்கள் ! அதனால்தான் நீங்கள் அவர்களுக்குப் பரிகிறீர்கள் !"

உணர்விழக்கும்வரையில் திருடர்கள் அடிக்கப்பட்டிருக்கின்றனர். அடுத்த துறைமுகத்தில் அவர்களைப் போலீசாரிடம் ஒப்படைத்தபொழுது அவர்களால் எழுந்து நிற்கக் கூட முடியவில்லை.

ஜனங்கள் உண்மையில் நல்லவர்களா—கெட்டவர்களா—பணிவானவர்களா—அச்சுறுத்தக்கூடியவர்களா என்று ஆச்சரியப்படத்தக்க வேதனை அளிக்கும் இத்தகைய பல நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. ஜனங்கள் ஏன் இவ்வளவு குரூரமானவர்களாகவும், இவ்வளவு குலாம்களாகவும் இருக்கிறார்கள் ?

இதைப்பற்றி நான் சமையற்காரனைக் கேட்டால், சிகரெட் புகையால் முகத்தை மூடிக்கொண்டு, ஆத்திரத்துடன் பதில் சொல்லுவான் :

" அதைப்பற்றி உனக்கென்ன ? ஜனங்கள் ஜனங்கள்தான். ஒருவன் சாமர்த்தியசாலி ; மற்றவன் முட்டாள். மூளையைக் குழப்பிக்கொள்வதை நிறுத்திவிட்டுப் புத்தகங்களைப் படி. உன் கேள்வி சரியானதாக இருந்தால், அதற்குப் பதில் புத்தகத்தில் இருக்கும்."

மத சம்பந்தமான புத்தகங்கள் அவனுக்குப் பிடிக்கவில்லை.

" அவை பாதிரிகளுக்கோ, அல்லது பாதிரிகளின் புதல்வர்களுக்கோதான் பயன்படும்" என்று அவன் சொல்லுவான்.

அவனுக்கு நல்லது ஏதாவது செய்ய நான் விரும்பியதால், அவனுக்கு ஒரு புத்தகத்தைப் பரிசளிக்க நான் முடிவு செய்தேன். காஸான் துறைமுகத்தில் ஐந்து காபெக் கொடுத்து "மகா பீட்டரை ஒரு சிப்பாய் மீட்ட கதை" என்னும் நூலை வாங்கினேன். ஆனால் அப்பொழுது சமையற்காரன் நிறையக் குடித்திருந்ததால், அவனை நான் அணுக முடியவில்லை. எனவே அவனுக்குக் கொடுக்கு முன் அந்தப் புத்த

கத்தைப் படிக்க நான் முடிவு செய்தேன். அந்தப் புத்தகம் என்னைக் கவர்ந்தது. விஷயம் தெளிவாக, சாதாரணமாக, சுருக்கமாகச் சொல்லப்பட்டிருந்தது. அந்தப் புத்தகம் அவனுக்கு மகிழ்ச்சி அளிக்கும் என்று நான் திடமாக நம்பினேன்.

ஆனால் அந்தப் புத்தகத்தை நான் அவனுக்குக் கொடுத்த பொழுது, ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் அதை ஒரு பந்தாகச் சுருட்டி, வெளியே எறிந்தான்.

"அதோ இருக்கிறது உன் அருமையான புத்தகம், முட்டாள்!" என்று அவன் மந்தமாகச் சொன்னான். "வேட்டை நாயைத் தயார் செய்வதைப் போன்று நான் சதா உன்னைத் தயார் செய்கிறேன்; ஆனால் நீ பறவைகளைத் தின்னுகிறாய்!"

காலைத் தரையில் ஓங்கி மிதித்துவிட்டு, அவன் கூவினான்:

"அது எப்படிப்பட்ட புத்தகம் என்று நீ நினைக்கிறாய்? அந்த முட்டாள் தனமான கதையை நான் படித்திருக்கிறேன்! அதிலே எழுதப்பட்டிருப்பது உண்மையா? சிக்கிரம் சொல்!"

"எனக்குத் தெரியாது."

"ஆனால் எனக்குத் தெரியும்! முதல் மனிதனின் தலையை அவர்கள் சீவியிருந்தால், அவன் எண்ணியிலிருந்து விழுந்திருப்பான். எனவே மற்றவர்கள் வைக்கோல் போர் மீது ஏறியிருக்க முடியாது. சிப்பாய்கள் முட்டாள்களல்ல! அவர்கள் வைக்கோல் போருக்குத் தீ வைத்திருப்பார்கள்! அத்துடன் விஷயம் முடிந்திருக்கும்! தெரிகிறதா?"

"ஆம்."

"அந்த ஜார் பீட்டரைப்பற்றி எனக்குத் தெரியும். இந்த மாதிரி எந்த ஆபத்தும் அவனுக்கு நேரவில்லை. போய் வேலையைப் பார்!"

சமையற்காரன் சொன்னது சரிதான் என்று எனக்குப் பட்டது. எனினும் அந்தப் புத்தகம் எனக்குப் பிடித்திருந்தது. அந்தக் "கட்டுக் கதையை" நான் மீண்டும் படித்தேன். அதைப் படித்து முடித்ததும், அது உபயோகமற்றது என்பதை அறிந்து ஆச்சரியமடைந்தேன். இதை எண்ணி நான் வெட்கினேன். இதன் பிறகு சமையற்காரன்மீது எனக்கு இருந்த

மதிப்பும், நம்பிக்கையும் அதிகரித்தன. ஏதோ தெரியவில்லை, அவர் ஓயாது சொன்னார் :

" நீ படிக்க வேண்டும் ! இது உனக்குகந்த இடமல்ல!"

இது எனக்குகந்த இடமல்ல என்பதை நானும் உணர்ந்தேன். ஸெர்ஜி என்னை அசாதாரணமாக நடத்தினான். காரியஸ்தன் பார்க்காத சமயம் பார்த்து, என் மேஜையிலிருந்து பொருள்களை எடுத்துச் சென்று பிரயாணிகளுக்கு ஸெர்ஜி விற்பதை நான் கண்டிருக்கிறேன். இது களவு என்பது எனக்குத் தெரியும்.

"ஜாக்கிரதை! பரிமாறுகிறவர்கள் உன் மேஜையிலிருந்து கத்திகளையும், முள்கரண்டிகளையும் எடுத்துச் செல்லாமல் பார்த்துக்கொள் !" என்று ஸ்மூரி என்னை எச்சரித்தான்.

அபசகுனமாக இருந்த வேறு பல நிகழ்ச்சிகளும் எனக்கு நிகழ்ந்தன. அடுத்த துறைமுகத்தில் கப்பலிலிருந்து வெளியேறி கானகத்திற்குச் செல்ல வேண்டுமென்ற ஆசை எனக்குப் பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்டதுண்டு. என்னிடம் மேலும் அதிக அன்புடன் பழகிய ஸ்மூரியும், இடைவிடாது நகர்ந்துகொண்டிருந்த கப்பலும் இந்த முயற்சியிலிருந்து என்னைத் தடுத்தன. துறைமுகத்தில் கப்பல் நிற்பதை நான் விரும்பவில்லை. எனவே, காமா நதியைக் கடந்து பெலாயா நதிக்கும், தூரத்திலிருந்த வியாட்காவுக்கும், அல்லது புதிய துறைமுகங்களையும், நகரங்களையும், ஜனங்களையும், காணச் சந்தர்ப்பமளிக்கும் வால்காவுக்கும் கப்பல் செல்லும் சந்தர்ப்பம் ஏதாவது நிகழாதா என்று நான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்.

ஆனால், ஒன்றுமே நிகழவில்லை. என் கப்பல் வாழ்க்கை திடீரென்று, வெட்ககரமான முறையில் முடிந்தது. ஒரு நாள் மாலை நாங்கள் காஸானிலிருந்து நிழனிக்குப் பிரயாணம் செய்துகொண்டிருந்தபொழுது, காரியஸ்தன் எனக்கு ஆள் அனுப்பினான். நான் அவன் முன் ஆஜரானதும், அவன் கதவைச் சாத்தினான். ஒரு மூக்காலியில் மந்தமாக உட்கார்ந்திருந்த ஸ்மூரியைப் பார்த்து அவன் சொன்னான் :

" அவன் வந்துவிட்டான் " என்று.

" கரண்டிகளும், இதர பொருள்களும் நீ ஸொர்ஜிக்குக் கொடுக்கிறாயா ?" என்று அவன் முரட்டுத்தனமாகக் கேட்டான்.

" நான் பார்க்காத நேரத்தில் அவன் அவைகளை எடுத்துச் செல்கிறான்."

" நீ அவனைப் பார்க்கவில்லை ; ஆனால் அவன் பொருள்களை எடுத்துச் செல்வது மட்டும் உனக்குத் தெரியும்!" என்று சாந்தமாக அவன் சொன்னான்.

முழங்காலைச் சொறிந்துகொண்டான் ஸ்மூரி.

"கொஞ்சம் பொறு. அவசரப்படாதே" என்று சொல்லிவிட்டு அவன் சிந்திக்க ஆரம்பித்தான்.

காரியஸ்தன் என்னைப் பார்த்தான் ; நான் அவனைப் பார்த்தேன். ஆனால் அவன் கண்ணாடிக்குப் பின்னே கண்கள் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

அவன் அமைதியாக வாழ்ந்தான்; ஓசையின்றி நடந்தான்; மெதுவாகப் பேசினான். சில சமயங்களிலும் நரைவிழுந்த அவனது தாடியும், வெறுமையான கண்களும் தெரிந்து, உடனே மறையும். படுக்குமுன் அணையா விளக்குக்குக் கீழே இருக்கும் விக்கிரகத்திற்கு முன் நீண்ட நேரம் மண்டியிட்டு உட்கார்ந்திருப்பான். வைர வடிவமுள்ள ஜன்னல் மூலம் எவ்வளவு நேரம் உள்ளே எட்டிப்பார்த்தும், அவன் பிரார்த்தனை செய்வதைக் காண முடியவில்லை. நெடுமூச்சுவிட்டுக்கொண்டும், தாடியை உருவிக்கொண்டும் விளக்கையும், விக்கிரகத்தையும் உற்றுப் பார்த்துக்கொண்டும் அவன் உட்கார்ந்திருப்பான்.

" ஸொர்ஜி உனக்குப் பணம் ஏதாவது கொடுத்தானா ?" என்று தயங்கிக்கொண்டே கேட்டான் ஸ்மூரி.

" இல்லை."

" எப்பொழுதுமே கொடுக்கவில்லையா ?"

" எப்பொழுதுமே கொடுக்கவில்லை."

" அவன் பொய் சொல்ல மாட்டான்" என்று காரியஸ்தனிடம் ஸ்மூரி சொன்னான். ஆனால் காரியஸ்தன் மிருதுவாகச் சொன்னான் :

" அதனால் என்ன வித்தியாசம் ?"

"வா, போகலாம்" என்று என் மேஜையருகில் வந்து, என் தலையின் பின்புறத்தில் தட்டிவிட்டு ஸ்மூரி கூவினான்: "முட்டாள்! நானும் முட்டாள்தான்! உன்னை நான் கண் காணித்திருக்க வேண்டும்."

நிழனியில் காரியஸ்தன் என் கணக்கைத் தீர்த்தான். சுமார் எட்டு ரூபிள் எனக்குக் கிடைத்தது—என் வாழ்க்கை யிலே நான் சம்பாதித்த பெருந் தொகை இது.

எனக்கு விடை தந்து என்னை அனுப்பிய ஸ்மூரி மந்த மாகச் சொன்னான்:

"எதிர்காலத்தில் விழிப்புடன் இரு. தெரிகிறதா? ஈ பிடித்துக்கொண் டிருந்து ஏமாந்து போகாதே" என்று.

அழகிய ஒரு புகையிலைப் பையை என்னிடம் தந்தான் ஸ்மூரி.

"இதோ, இதை வைத்துக்கொள்! அழகிய வேலைப்பாடு அமைந்த இந்தப் பையை என் வளர்ப்புப் புதல்வி எனக்காகச் செய்தாள். போய் வா! புத்தகங்களைப் படி. நீ செய்யக் கூடிய காரியம் அதுதான்!"

முத்தமிடுவதற்காக என்னை அவன் உயரத் தூக்கினான். பிறகு துறைமுகத்தில் இறக்கினான். அவனுக்காகவும், எனக் காகவும் நான் வருந்தினேன். ஸ்டீவிடோர்களைக் கடந்து இந்தப் பெரிய மனிதன் கப்பலுக்குச்சென்றபொழுது, எனக்கு வந்த கண்ணீரை என்னால் அடக்க முடியவில்லை.

இளகிய மனம் படைத்த, தனிமையிலே வாழ்ந்த, வாழ்க்கையிலிருந்து பிரிந்து நின்ற, இவரைப்போன்ற எத்தனை பேரையோ பிற்காலத்தில் நான் சந்தித்தேன்!

7

பாட்டியும், தாத்தாவும் மீண்டும் நகரில் குடியேறினர். கோபத்துடனும் போர் உணர்ச்சியுடனும் நான் அவர்களி டம் திரும்பிச் சென்றேன். எதற்காக அவர்கள் எனக்குத் திருட்டுப் பட்டம் சூட்ட வேண்டும்?

என்னை அன்புடன் வரவேற்றுள் பாட்டி. உடனே அவள் சாமோவாரைச் சூடாக்கச் சென்றுவிட்டாள். வழக்கம் போல் தாத்தா கிண்டலாகப் பேசினார்:

"சொம்பப் பொன் சேர்த்தாயா ?"

"நான் சேர்த்தது எனக்குச் சொந்தம்" என்று பதில் சொல்லிவிட்டு, ஜன்னலில் உட்கார்ந்தேன். என் ஜேபி லிருந்து ஒரு பாக்கெட் சிகரெட்டை எடுத்து, அதில் ஒரு சிகரெட்டைக் கொளுத்தினேன்.

என் ஒவ்வொரு நடவடிக்கையையும் கவனித்துக்கொண் டிருந்த தாத்தா, "ஓஹோ!" என்று சொன்னார்: "இப் படியா சங்கதி! சைத்தான் பாதையில் நீ சென்றுவிட்டாய் அல்லவா ? பிஞ்சியிலேயே இதை ஆரம்பித்துவிட்டாயே!"

"புகையிலை வைக்கும் பையும் என்னிடம் இருக்கிறது" என்று நான் பெருமை யடித்துக்கொண்டேன்.

"புகையிலைப் பையா!" என்று கூவினார் தாத்தா. "நீ என்ன செய்கிறாய் ? என்னைக் கேலி செய்கிறாயா ?"

மெலிந்த, பலமான தன் கால்களை நீட்டிக்கொண்டு, கண் கள் ஒளிவீச, அவர் என்னை நோக்கிப் பாய்ந்தார். நான் மேலே குதித்து, அவர் வயிற்றில் குத்தினேன். அந்த வேக தாகர் கீழே விழுந்துவிட்டார். சில நிமிடங்கள் உட்கார்ந்து இருந்த அவர், வாயைத் திறந்துகொண்டு, ஆச்சரியத்துடன் என்னைப் பார்த்தார்.

"உன் தாத்தாவையா நீ வீழ்த்தினாய்!" என்று இறுதி யில் துக்கத்துடன் கேட்டார். "உன்னைப் பெற்ற தாயின் தந்தையை!"

"நீ என்னை எவ்வளவோ அடித்திருக்கிறாயே!" என்று நான் உளறினேன். வெறுக்கத்தக்க எதையோ செய்துவிட் டதை நான் உணர்ந்தேன்.

தாத்தா எழுந்திருந்து, என் அருகில் உட்கார்ந்தார். என் கையிலிருந்த சிகரெட்டைப் பிடுங்கி, ஜன்னல் வழியாக வெளியில் எறிந்தார்.

"மூட்டாளே! நீ உயிருடன் இருக்கும்வரையில் இதைக் கடவுள் மறக்க மாட்டார் என்பது உனக்குத் தெரியுமா ?" என்று பீதி கலந்த குரலில் அவர் கேட்டார். பிறகு பாட்டி

யைப் பார்த்துச் சொன்னார்: 'நீயே யோசித்துப் பார், தாயே! இவன் என்னை அடித்துவிட்டான். இவன்தான் என்னை அடித்தான். இவன் என்னை அடிக்கவில்லையா என்று இவனையே கேள்!''

என்னைக் கேட்டுத் தெரிந்துகொள்வதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், என் அருகில் வந்து, என் தலை மயிரைப் பிடித்துக் குலுக்க ஆரம்பித்தாள் பாட்டி.

''அதற்காக இவனுக்குக் கிடைக்கும் பரிசு இது! இதை வாங்கிக்கொள்! இதையும் வாங்கிக்கொள்!'' என்றாள் பாட்டி.

உடம்பில் உபத்திரவம் ஏற்படும் எதையும் அவள் செய்யவில்லை. எனினும் தாத்தா குத்தலாகச் சிரித்ததால், என் உணர்ச்சி புண்பட்டது. நாற்காலியில் உட்கார்ந்திருந்த தாத்தா மேலும் மேலும் எகிறினார். முழங் கால்களில் தட்டிக் கொண்டு அவர் சொன்னார் :

''அதுதான் சரி! அதுதான் சரியான வழி!'' என்று.

பாட்டியின் பிடியிலிருந்து என்னை விடுவித்துக்கொண்டு, வாசற்படிக்கு ஓடிச் சென்று, அங்கே ஒரு மூலையில் சாய்ந்தேன். சமோவாரின் ஓசையைச் செவிமடுத்துக்கொண்டு, நிராசையுடனும் வேதனையுடனும் அங்கே நான் படுத்திருந்தேன்.

பாட்டி அங்கே வந்து, என்மீது குனிந்து, மிகத் தணிந்த குரலில் சொன்னாள் :

''என்னை மன்னித்துவிடு! நான் உன்னை வேதனைப் படுத்தவில்லை; படுத்தினேனா? ஒப்புக்காக நான் அப்படிச் செய்தேன். வேறு ஒன்றும் செய்வதற்கில்லை. தாத்தா வயோதிகர்; அவருக்கு நீ மரியாதை செலுத்த வேண்டும். அவர் உள்ளமும் வேதனையால் வேகிறது. நீ அவரை வேதனைப்படுத்தக் கூடாது. இப்பொழுது நீ குழந்தையல்ல. உனக்கு விஷயம் புரியும். நீ விஷயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும், அல்யோஷா. அவர் பெரிய குழந்தை—அவ்வளவுதான்.''

வெதுவெதுப்பான நீர் மேலே விழுவதைப் போன்று, அவள் சொற்கள் என்மீது விழுந்து எனக்கு ஆறுதல் அளித்தன. அவளுடைய அன்பான பேச்சு என் வேதனையைத்

தனித்தோடு, என்னை வெட்கும்படியும் செய்தது. அவளை நான் இறுகத் தழுவிக்கொண்டேன். நாங்கள் முத்தமிட்டுக் கொண்டோம்.

" அவரிடம் போ. போ, எல்லாம் சரியாய்விடும். சற்று முன் செய்ததைப்போல், திடீரென்று அவர் முன் சிகரெட் பிடிக்காதே. இதைக் கண்டு பழக அவருக்கு அவகாசம் கொடு."

அறைக்குள் பிரவேசித்து, தாத்தாவைக் கடைக்கண்ணால் பார்த்தபொழுது, சிரிப்பை என்னால் அடக்க முடியவில்லை. குழந்தையைப்போல் அவர் குதூகலமாக இருந்தார். அவர் முகம் பிரகாசமாக இருந்தது. காலால் தாளம் போட்டுக் கொண்டும் மேஜைமீது தட்டிக்கொண்டும் அவர் உட்கார்ந் திருந்தார்.

" நல்லது, ஆட்டுக்குட்டியே ! இன்னும் வயிற்றில் குத்துவதற்காக வந்திருக்கிறாயா? சிறிய கொள்ளைக்காரனே ! உன் அப்பாவைப்போல் இருக்கிறாய் ! சிறுவை அடையாளம் கூட வைத்துகொள்ளாமல் எப்படி வீட்டிற்குள் வந்தாய். வந்ததும் வராததுமாகச் சிகரெட்டை எடுத்தாய். பூ! இரண்டு காபெக் போஞ்பார்ட்டே !"

நான் பதில் சொல்லவில்லை. அவர் வார்த்தைப் பிரவாகம் நின்றுவிட்டது. அவரும் மௌனம் ஆகிவிட்டார். ஆனால் தேநீர் குடிக்கும்பொழுது அவர் எனக்குப் பிரசங்கம் செய்தார் :

" குதிரைக்குக் கடிவாளம் எவ்வளவு அவசியமோ அவ் வளவு மனிதனுக்குக் கடவுளிடம் பயம் அவசியம். கடவுளைத் தவிர நமக்கு நண்பன் வேறு யாருமில்லை. மனிதன் மனித னுடைய பரம விரோதி."

அவர் சொன்னதில் பொதிந்து கிடந்த உண்மை என் மனதில் பதிந்தது. மனிதன் மனிதனுக்கு விரோதி. அவர் சொன்ன மற்ற விஷயங்கள் என்னைக் கவரவில்லை.

" உன் அத்தை மாட்ரியோனுவிடம் நீ இப்பொழுது வேலைக்குச் செல்ல வேண்டும். வசந்த காலத்தில் நீ கப்பலில் வேலை செய்யச் செல்லலாம். குளிர் காலத்தை அவர்களுடன்

கழி. வசந்த காலத்தில் சென்றுவிடுவதாக அவர்களிடம் சொல்லாதே.''

'' ஜனங்களை ஏன் ஏமாற்ற வேண்டும் ?'' என்று, என்னைக் குழுக்குவதாகச் சற்று முன் பாசாங்கு செய்த பாட்டி கேட்டாள்.

'' ஜனங்களை ஏமாற்றாமல் வாழ முடியாது '' என்று தாத்தா வற்புறுத்தினார். '' எல்லோரும் இப்படித்தான்.''

அன்று மாலை தாத்தா வேதம் படிக்க ஆரம்பித்ததும், நானும் பாட்டியும் வயலுக்குச் சென்றோம். தாத்தா அப்பொழுது வசித்த இரண்டு ஜன்னல்களுள்ள சிறிய குடிசை, நகரின் கடைசியில், தாத்தாவுக்கு முன்னர் சொந்த வீடிருந்த கனட்னயாத் தெருவின் கோடியில் இருந்தது.

'' எங்கே நாம் குடி வந்திருக்கிறோம், பார் !'' என்று கூறி நகைத்தாள் பாட்டி. ''ஆக்மாவுக்குக் திருப்தி அளிக்கும் இடம் தாத்தாவுக்குக் கிடைக்காததால், அவர் இடம் மாறிக் கொண்டே இருக்கிறார். இந்த இடமும் அவருக்குப் பிடிக்க வில்லை ; ஆனால் இது எனக்குப் பிடித்திருக்கிறது.''

எங்களுக்கு மூன்று மைல்களுக்கப்பால் நீர்க்கால்களுடைய புல் தரை பரந்து கிடந்தது. அதன் ஓரத்திலே பூவரசு மரங்கள் வரிசையாக நின்றன. அந்த இடம் காளான் சோடைக் குறிக்கிறது. நீர்க்கால்களுக்கு மேலே புதர்கள் தெரிந்தன. சூரிய அஸ்தமனத்திலே அவை ரத்தக்கறை தோய்ந்த சவுக்கைப்போல் காட்சி அளித்தன. மாலைக் காற்று புல்லை அசைத்தது. நகரிலிருந்து வந்த ஜோடிகளின் நிழல்கள் நீர்க்கால்களுக்கப்பால் தெரிந்தன. வலது கோடியிலே '' புக் சோவ்ஸ்கி ஆச்ரமம் '' என்று அழைக்கப்படும் கல்லறையின் சிவந்த சுவர் தெரிந்தது. இடது புறம் அடர்ந்து வளர்ந்திருந்த மரங்கள் யூதர்களின் கல்லறையைக் குறித்தது. எல்லாம் சூன்யமாக இருந்தன; எல்லாம் மௌனமாகப் பூமியில் பதிந்து கிடந்தன. நகரின் ஓரத்திலிருந்த சிறிய வீடுகளின் ஜன்னல்கள் தூசிபடிந்த சோடைப் பார்த்துக் கோழைத்தனமாக கண் சிமிட்டுவதைப்போல் தோன்றிற்று. அந்த சோடிலே, போஷணையற்ற குறுகிய, பெட்டைக் கோழிகள் அலைந்தன. டெவிஷி கன்னி மடத்தைக் கடந்து ஒரு மாட்டு மந்தை

சென்றது. அருகிலிருந்த கூடாரத்திலிருந்த ராணுவ கீதமும், தப்பட்டை ஒலியும், குழலின் ஓசையும் கேட்டன.

ஒரு வாத்தியக் கருவியை மூர்ட்டுத்தனமாக மீட்டிக் கொண்டு ஒரு குடிகாரன் தள்ளாடி நடந்தான். அவன் முணு முணுத்தான் :

" நான் நிச்சயமாக உன்னை அடைந்தே தீருவேன்."

" நீ யாரை அடைவாய், வெகுளியே ?" என்று, சூரிய ஒளியை ஒருக்கணித்துப் பார்த்துக்கொண்டு, பாட்டி கேட் டாள். " நீ கீழே விழுந்து தூங்கிவிடுவாய். நீ தூங்கும் பொழுது உன் உடைகளை உருவிவிடுவார்கள். உன் மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கும் உன் வாத்தியக் கருவியைக்கூட எடுத்துச் சென்றுவிடுவார்கள் !"

சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே, என் கப்பல் வாழ்க் கையைப்பற்றிப் பாட்டிக்குச் சொன்னேன். நான் கண்டவை எனக்கு வேதனை அளித்தன. பாட்டி சொல்வதை நான் கவனமாகக் கேட்டதைப்போல், நான் சொன்னதைப் பாட்டி கவனமாகக் கேட்டாள். ஸ்மூரியைப்பற்றி நான் சொன்ன பொழுது, இதயபூர்வமாகச் சிலுவை அடையாளம் வரைந்து கொண்டு அவள் சொன்னாள் :

" அவன் ரொம்ப நல்ல மனிதன். அருள்பெற்ற கன்னி மாதா அவனை ஆசீர்வதிக்கட்டும்! நீ அவனை மறந்துவிடாதே! நல்ல விஷயங்களை என்றும் நினைவிலிறுத்து; கெட்ட விஷயங் களைத் தூக்கி எறிந்துவிடு !"

கப்பல் வேலையிலிருந்து என்னை ஏன் நீக்கினார்கள் என் பதை அவளிடம் சொல்வது ரொம்பச் சிரமமாக இருந்தது. எனினும் பல்லைக் கடித்துக்கொண்டு ஒருவிதமாக அந்தக் கதையை அவளுக்கு நான் சொன்னேன். அவளை அது சிறிதுகூட அலட்டவில்லை.

" நீ இன்னும் சிறியவன். எப்படி வாழுவது என்பதை இன்னும் நீ கற்கவில்லை " என்று அலட்சியமாக அவள் பதில் சொன்னாள் :

" எப்படி வாழுவது என்பதை யாரும் கற்றுக்கொள்ள வில்லை என்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்கின்றனர். மூஷிக்குகளும், கப்பல் வேலைக்காரர்களும் இதைத்தான்

சொல்லுகின்றனர். மாட்ரியோனு அத்தையும் இதைத்தான் தன் மகனிடம் ஓயாது சொல்லுகிறாள். கற்க என்ன இருக்கிறது ?''

உதடுகளை இறுக மூடிக்கொண்டு தலையைக் குலுக்கினாள் பாட்டி.

'' அது எனக்குத் தெரியாது !'' என்றாள் அவள்.

'' எனினும் நீயும் இதைச் சொல்லத்தான் சொல்லுகிறாய் !''

'' நான் ஏன் சொல்லக் கூடாது ?'' என்று சாந்தமாகக் கேட்டாள் பாட்டி. ''ஆனால் இதற்காக நீ வேதனைப்படாதே. இன்னும் நீ சொம்பச் சிறியவன். எப்படி வாழுவது என்பதை நீ தெரிந்துகொள்ளும் காலம் இன்னும் வரவில்லை. யாருக்குத் தெரியும் ? குருடர்களுக்கு மாத்திரம்தான் ! உன் தாத்தாவை எடுத்துக்கொள். அவர் சாமர்த்தியசாலி ; சொம்பப் படித்தவர். எனினும் இவை அவருக்கு உதவவில்லை.''

'' நீ நல்ல வாழ்க்கை வாழ்ந்திருக்கிறாயா ?''

நானு ? ஆம், நல்ல வாழ்க்கை வாழ்ந்திருக்கிறேன். மோசமான வாழ்க்கையும் வாழ்ந்திருக்கிறேன். இவை மாறி மாறித்தான் வரும்.''

நீண்ட நிழல்களை இழுத்துக்கொண்டு ஜனங்கள் எங்களைக் கடந்து சென்றனர். அவர்கள் காலடியிலிருந்து புகையைப் போன்று எழுந்த தூசி அந்த நிழல்களை மறைத்தது. வருத்தம் மேலும் அதிகரித்தது. ஜன்னல் வழியாகத் தாத்தாவின் முனகும் குரல் கேட்டது.

''கடவுளே, உம் கோபம் முழுதையும் என்மீது செலுத்தாமல் என்னைக் காப்பாற்றும் ! என் சக்திக்குத் தகுந்த தண்டனை எனக்குக் கொடும்—''

பாட்டி புன்னகை புரிந்தாள்.

'' கடவுளுக்கு இவர்மீது சலிப்புத் தட்டியிருக்கும் '' என்றாள் அவள். '' தினசரி மாலை அவர் இப்படி ஓலமிடுகிறார். எதற்காக ? இந்த வயோதிகத்தில், தேவைகளுக்கு அப்பால் சென்றுவிட்ட பிறகு, எதற்காக அவர் இப்படி உறுமவேண்டும் ! தினசரி மாலை இந்தக் குரலைக் கேட்கும் கடவுள் குலுங்கக் குலுங்கச் சிரிப்பார் : ' மீண்டும் வாஸிலி

காஷினின் தன் ஒப்பாரியை ஆரம்பித்துவிட்டான்!' வா, நாம் சென்று படுக்கலாம்.''

வானம்பாடிகளைப் பிடிக்க நான் முடிவு செய்தேன். வாழ்க்கை நடத்த இது நல்ல தொழிலாக எனக்குப் பட்டது. நான் பறவைகளைப் பிடித்தேன்; பாட்டி அவைகளை விற்றாள். ஒரு வலையும், வளையமும், கண்ணிகளும், கூடுகளும் நான் வாங்கினேன். நீர்க்காலிலிருக்கும் புதரில் மறைந்துகொண்டு வலை, வளையம், கண்ணிகள் சகிதம் அதிகாலையில் நான் இதோ இருக்கிறேன். காளான்களையும், இலந்தைகளையும், கொட்டைகளையும் தேடிக்கொண்டு, ஒரு சாக்கையும், கூடையையும் சுமந்துகொண்டு பாட்டி சுற்றுப்புறத்தில் நடமாடுகிறாள்.

களைத்த செப்டம்பர் மாதச் சூரியன் உதயமாய்விட்டது. அதன் மங்கிய ஒளி சிறிது நேரம் மேகத்தில் மறைந்தது; சிறிது நேரம் அதன் வெண் கிரணங்கள் என்மீது விழுந்தன. நீர்க்காலின் அடித்தளத்தில் நிழல் நர்த்தனமாடிற்று. வெண் படலம் எழுந்தது. செங்குத்தான களிமண் கரை ஒன்று மொட்டையாயும் கறுப்பாயும் தெரிந்தது. இன்னொரு கரை சரிவாக இருந்தது; அதில் மஞ்சள், சிவப்பு, கபில நிறமுள்ள இலைகளைக் கொண்ட புல்களும் புதர்களும் மண்டிக்கிடந்தன. அந்த இலைகள் உதிர்ந்து நீர் முழுதும் பரந்துவந்தன.

வண்டுகள் ரீங்காரம் செய்கின்றன. அவைகளின் தலைகளை அலங்கரித்த கருஞ்சிவப்புத் தொப்பி இலைகளுக்கிடையே எனக்குத் தெரிந்தது. ஆறாயும் தோரணையில் பறவைகள் என்னைச் சுற்றி வட்டமிட்டன. விடுமுறை நாட்களில் குறுவினைச் சிறுமிகள் கூச்சலிடுவதைப்போல் அவை கூச்சலிட்டன. சுறுசுறுப்பான, சாமர்த்தியமுள்ள, கூர்மையான அவைகளுக்கு எல்லாம் தெரிய வேண்டும், எல்லாவற்றையும் தொட வேண்டும். எனவே ஒன்றன் பின் ஒன்றாக அவை என் கண்ணியில் சிக்கின. அவை போராடுவதைக் காண வேதனையாக இருந்தது. எனினும் நான் ஈரமற்றவனாக இருந்தாகவேண்டும். ஏனெனில் நான் தொழில் செய்பவன். அவைகளுக்காக நான் தயாராக வைத்திருந்த கூண்டில்

அவைகளை அடைத்துவிட்டு, அவை கத்தாமலிருப்பதற்காகக் கூண்டைச் சாக்கால் மூடினேன்.

ஸிஸ்கின் பறவைகள் சூரிய ஒளியால் பிரகாசித்த முட் புதரில் கூட்டமாக உட்கார்ந்தன. சூரியனைக் கண்டு பறவைகள் குதூகலமடைந்தன. எனவே ஒரு கூட்டம் பள்ளி மாணவர் களைப்போல், சந்தோஷத்துடன் அவை கீச்சிட்டன. தெற்கே செல்ல நேரமாய்விட்ட ஒரு பருந்து அசைந்தாடும் கிளைமீது உட்கார்ந்து, தனது மூக்கால் சிறகுகளைச் சுத்தப்படுத்திற்று. தன் கருவிழிகளால் அது இரையைத் தேடிற்று. நிடீரென்று வானம்பாடியைப்போல் பாய்ந்து, அது ஒரு ஈயைப் பிடித் தது. அதை ஒரு முள்ளில் சொருகிவிட்டு, அதைக் காவல் காத்தது. திருட்டுத் தலையை அது அங்குமிங்கும் செலுத் திற்று. மௌனமாக ஒரு வண்ணத்திப் பூச்சி பறந்து சென் றது. என் மனதைக் கொள்ளைகொண்ட அது எனக்குக் கிடைத்தால்! பொதுவாகச் சிவப்பாயும் சேவலைப் போன்றும் இருக்கிற புல்பிங் பறவை, கூட்டத்தை விட்டுத் தனித்து வந்து, ஆல்டர் புதரில் அமர்ந்து, தனது கறுப்பு அலகால் கொத்தி அப்படியும் இப்படியும் அசைக்கிறது.

சூரியன் மேலே செல்லச் செல்ல, பறவைகளின் எண் ணிக்கையும் அதிகரித்தது ; அவைகளின் கீதத்தின் இனிமை யும் அதிகரித்தது. நீர்க்கால் கீதத்திலே மிதந்தது; காற்றில் அசைந்த புதர்கள் அந்தக் கீதத்திற்குத் தாளம் போட்டன. மிருதுவான, இன்பமும்–துன்பமும் கலந்த இந்தத் தாளத்தை பறவைகளின் குரல் அமிழ்த்திவிடவில்லை. வேனிற் காலத்தின் பிரிவுக் கீதம் அது. அதை உணர்த்தும் சொற்கள் காவியமாக அமைகிறது. என் நினைவு பழைய காட்சிகளைக் கிண்டிக் கிளருகிறது.

எங்கிருந்தோ பாட்டி கூவினாள் :

" நீ எங்கே இருக்கிறாய்?" என்று.

கைக்குட்டையை முன்னே விரித்துக்கொண்டு நீர்க் காலின் ஓரத்தில் பாட்டி உட்கார்ந்திருந்தாள். கைக்குட்டை யிலே சொட்டி, ஊறுகாய், கிழங்கு, ஆப்பிள் ஆகியவை இருந் தன. இவைகளுக்கு மத்தியில் ஒளிவீசும் ஒரு கண்ணுடிப்

பாத்திரம் நெப்போலியன் தலையைக் கொண்ட மூடியுடன் இருந்தது. அதில் வோட்கா இருந்தது.

" கடவுளே, இது எவ்வளவு சிறந்தது !" என்று நன்றியறிதலுடன் கூறினாள் பாட்டி.

" நான் ஒரு பாட்டுக் கட்டியிருக்கிறேன் !"

" உண்மையாகவா ?"

நான் சில அடிகளைப் பாடினேன்:

குளிர் காலம் வந்துகொண்டிருக்கிறது; மலர்கள் இனிப் பூக்கமாட்டா;

கதகதப்பான சூரியனுடன் தோன்றுகிற கோடை காலம் விடை பெற்றுக்கொண்டுவிட்டது.

பாட்டுப் பூராவையும் பாடி முடிப்பதற்குக் காத்திராமல், அவள் சொன்னாள்:

" இதே மாதிரி ஒரு பாட்டு இருக்கிறது. இதைவிட அது சிறந்தது."

உடனே அவள் ராகம் கூட்டிப் பாட ஆரம்பித்தாள்:

கோடை காலச் சூரியன், ஆகா! அஸ்தமனம் ஆகிறது;
வானம்பாடிகள் போய்விட்டன;
கன்னியான நான் தனித்து இருந்து,
வசந்த கால இன்பத்தைத் திறந்து வாடுகிறேன்.
நான் காலையில் நடந்து செல்லும்பொழுது,
இன்பகரமான மே மாதம் எனக்கு நினைவு வந்துவிடுகிறது.
என்னை நடத்திச் சென்ற சமயம், இன்பமயமாக இருந்த ஆகாயம்,
இப்பொழுது சாம்பல் நிறத்தில் சில்லிட்டுப் போய்க் கிடக்கிறது.
அன்புநிறைந்த கன்னியர்களே ! அருமைச் சகோதரிகளே!
குளிர்காலத்துக் கொடிய வாடை வீசும்பொழுது,
எக்கத்தால் வருந்தும் எனது இதயத்தை எடுத்து,
பனிக்குக் கீழே அதைப் புதைத்துவிடுங்கள்.

புலவன் என்ற ஹோதாவில் என் கௌரவம் சிறிதும் பாதிக்கப்படவில்லை. அவள் பாட்டை நான் ரொம்ப விரும்பினேன். அந்த மங்கைக்காக நான் வருந்தினேன்.

" வேதனையை இப்படித்தான் பாடுவார்கள் " என்றாள் பாட்டி. " அந்த மங்கை அதைப் பாடினாள். தன் தோழனுடன் அவள் வேனிற் காலத்தில் நடந்தாள். குளிர் காலம் வந்ததும் அவன் அவளைத் தனியே விட்டுவிட்டான். வேறு ஒருத்தியிடம் அவன் சென்றிருக்கலாம். வேதனையால் அவள் அழுதாள். அனுபவபூர்வமாக உணர்ந்ததைப்பற்றி, யாரும் பாட முடியாது. இந்தப் பாட்டை எவ்வளவு அழகாகப் பாடி இருக்கிறாள், பார் !"

நாற்பது காபெக்குக்கு முதன் முறை சில பறவைகளை விற்றதும் பாட்டி ரொம்ப ஆச்சரியப்பட்டாள்.

" இதனால் ஒன்றும் கிடைக்கா தென்றும், இது சிறுவனின் கனவென்றும் நான் நினைத்தேன். ஆனால் இது ரொம்ப லாபகரமானது."

" நீ அவைகளை மலிவாக விற்றுவிட்டாய்."

" அப்படியா சங்கதி !"

சந்தை கூடும் தினங்களில் ஒரு ரூபிளோ, அதற்கு அதிகமாகவோ அவள் சம்பாதிப்பாள். சிறிய பொருள்களால் எவ்வளவு பணம் கிடைக்கிறது !

" ஒரு பெண் இருப்பது காபெக்குக்கு நாள் முழுதும் துணி துவைக்கிறாள், அல்லது தரையைச் சுத்தம் செய்கிறாள்! அதில் அர்த்தமே இல்லை. அது தவறுகூட. பறவைகளைக் கூண்டில் அடைத்து வைப்பதும் தவறு. இந்த வேலையை நீ விட்டுவிட வேண்டும், அல்யோஷா !"

பறவை பிடிக்கும் வேலை என்னைக் கவர்ந்தது. பறவைகளுக்கு அசௌகரியம் ஏற்படுத்துவதைத் தவிர வேறு யாருக்கும் எந்த விதமான அசௌகரியமும் ஏற்படுத்தாமல் என் சுதந்திரம் எனக்குக் கிடைத்ததோடு, இந்த வேலை எனக்கு மகிழ்ச்சியும் அளித்தது. நல்ல தளவாடங்களை நான் தேடிக்கொண்டேன். அனுபவம் நிறைந்த பறவை பிடிப்போரிடம் பேசி நான் பல விஷயங்களைத் தெரிந்துகொண்டேன். முப்பது மைல்களுக்கப்பால் இருந்த கோஸ்டோவ்ஸ்கி

கானகத்திற்கோ, அல்லது வால்கா நதிக் கரைக்கோ தனியே சென்று, வளர்ந்தோங்கி நின்ற தேவதாரு மரங்களிலிருந்து அழகிய பறவைகளைப் பிடித்தேன். நீண்ட வாலுள்ள அரிய வெள்ளை நிற டிட்மூஸ் பறவைகளைப் பறவை வளர்ப்பவர்கள் பிரியத்துடன் வாங்குவார்கள்; இத்தகைய பறவைகளையும் நான் பிடித்தேன்.

சில சமயங்களில் மாலையில் புறப்பட்டு இரவெல்லாம் மழையிலும், சேறிலும் காலான் தோடில் நடப்பேன். கண்ணிகளும், கூடுகளும், பறவைகளுக்குத் தினைகளும் கொண்ட பையை முதுகில் சுமந்துகொண்டு, கையில் தடியுடன் நான் நடப்பேன். சமத் கால இருள் பயங்கரமாக இருந்தது. வீதி ஓரத்திலே இடியால் தாக்கப்பட்ட பூவரசு மரங்கள் நின்றன. அவைகளின் நீண்ட கிளைகள் என் தலைக்கு மேலே நின்றன. எனக்கு இடது புறத்திலிருந்த குன்றுகளின் அடிவாரத்தில் வால்கா நதிப் பக்கம், காலம் கடந்து செல்லும் கப்பல்களின் விளக்குகளும், படகுகளின் விளக்குகளும் மிதந்து சென்றன. ஆழம் காண முடியாத அதல பாதாளத்தில் அவை விழுவதைப் போன்றிருந்தது அந்தக் காட்சி. அவைகளின் குழல் சத்தமும், சக்கரங்கள் ஜலத்தில் சுழல்வதால் ஏற்படும் சத்தமும் எனக்குக் கேட்டன.

நான் கடந்து சென்ற கிராமங்களின் குடிசைகள் பூமியிலிருந்து எழுந்தன. பசியால் துடித்த நாய்கள் என் கால்களை நோக்கிப் பாய்ந்தன. பீதியளிக்கும் குரலில் இரவு காவற் காரர்கள் கூவினர்:

"அங்கே போவது யார்? இரவிலே பெயர் சொல்லக் கூடாத சைத்தான் அனுப்பியவனு நீ?"

என் கண்ணிகளைப் பிடுங்கிக்கொண்டுவிடுவார்களோ என்ற பயத்தில் இரவு காவற்காரனுக்கு லஞ்சம் கொடுப்பதற்காக ஐந்து காபெக் நான் எப்பொழுதும் தயாராக வைத்திருந்தேன். போக்கிலே கிராமக் காவற்காரனை நான் சினேகம் செய்துகொண்டேன். என் சாகஸங்கள் அவனை ஆச்சரியத்தில் ஆழ்த்திற்று.

"நீயா?" என்று அவன் கேட்பான். "பயமற்ற, ஓய்வற்ற இரவுப் பறவை நீ!"

அவன் பெயர் நீபான்ட். சிறிய ஆகிருதி படைத்தவன் அவன், ரிஷியைப்போன்று தோற்றமளித்தான். ஒரு ஆப்பிளோ, அல்லது கைநிறையக் கொட்டைகளோ தன் பையிலிருந்து எடுத்து, அதை என் கையில் திணித்துவிட்டு, அவன் சொல்லுவான் :

''இதைப் பெற்றுக்கொள், நண்ப! உனக்குச் சிறு விருந்தளிக்க இதைப் பத்திரப்படுத்தி வைத்திருந்தேன். இது உனக்கு மகிழ்ச்சியளிக்கும் என்று நம்புகிறேன்.''

சிரமக் கோடிவரையில் அவன் என்னைப் பின் தொடருவான்.

'' போய் வா ! கடவுள் உனக்குத் துணைபுரியட்டும்.''

விடியற் காலம் நான் கானகத்தை அடைந்து, கண்ணிகளையும், இரையையும் பொருத்திவிட்டு, கானகத்தின் ஓரத்தில் பொழுது விடிவதற்காகக் காத்துக்கொண்டு படுத்திருப்பேன். மௌனம். என்னைச் சுற்றியிருந்தவை யெல்லாம் சரத்கால நித்திரையில் ஆழ்ந்திருந்தன. மங்கிய குன்றுகளின் அடிவாரத்தில் வால்கா நதியால் நீர் பாய்ச்சப்பட்ட புல்வெளிகளை நான் கண்டேன். அவைகளின் கோடி பனிப்படலத்திலே மறைந்து கிடந்தது. வெகு தூரத்தில், புல்வெளிக்கு அப்பால், சூரியன் மெதுவாக உதித்து, கானகத்திற்குத் தீ மூட்டிற்று. அதன் பிறகு உணர்ச்சியைத் தூண்டிவிடும் நடவடிக்கைகள் ஆரம்பமாயின. பனிப்படலம் உயர்ந்து, சூரிய ஒளியிலே வெள்ளியைப்போல் பிரகாசித்தது. அவைகளுக்குக் கீழே புதர்களும், மரங்களும் மெதுவாகப் பூமியிலிருந்து எழுந்தன. சூரிய ஒளி பட்டு, புல்வெளி உருகுவதைப் போன்றும், தங்க அருவிகள் நாலா பக்கமும் பரந்து பாய்வதைப் போன்றும் இருந்தது, அந்தக் காட்சி. நதிக் கரையிலிருந்த ஜலத்தைச் சூரியன் தொட்டுவிட்டது. அதன் தங்க விரல்கள் பட்ட இடத்தை நோக்கி, பாய்ந்து செல்வதைப்போன்றிருந்தது நதி. தங்கத் தகடு மேலே சென்றதும், அது இன்பமயமான கதிர்களை எங்கும் பரப்பிற்று. குளிர்ந்து நடுங்கிக்கொண்டிருந்த பூமியை அது வெப்பமாக்கிற்று. இதற்கு நன்றி செலுத்தும் முறையில், பூமி, நறுமணம் கமழும் மூச்சுவிட்டது. காற்றினூடே பூமியைப் பார்த்தபொழுது அது முடிவற்றுக் கம்பீர

மாகக் காட்சி அளித்தது. பூமியின் நீலக் கோடியால் ஆகர் ஷிக்கப்பட்டு எல்லாம் தூரத்திற்குச் செல்லத் துடித்தன. டஜன் கணக்கான முறைகள் அந்த இடத்தில் இருந்து கொண்டு நான் சூரியோதயத்தைப் பார்த்திருக்கிறேன். ஒவ் வொரு தரமும், அழகிய, புது உலகம் எனக்கு முன்னே பிறப்பதை நான் கண்டேன்.

சூரியன்மீது எனக்கு விசேஷ பிரேமை. அதன் பெயரை, அந்தப் பெயரின் இனிய ஓசையை, அதன் செழிப் பான எதிரொலியை நான் விரும்பினேன். கண்ணை மூடிக் கொண்டு சூரிய கிரணங்களின் பக்கம் முகத்தைத் திருப்பு வதிலே நான் மகிழ்ச்சியைக் கண்டேன். அதன் கிரணத்தை உள்ளங் கையில் பிடிப்பதையும் விரும்பினேன்; அப் பொழுது வேலியிலுள்ள வெடிப்பில் வாள் பாய்வதைப்போல் அது என் உள்ளங் கையில் பாய்ந்தது. மரத்தின் கிளைகள் மீது அதன் கிரணங்கள் விளையாடுவதைக் கண்டு நான் குதூகலமடைந்தேன். சூரியனை வணங்கமறுத்த "இளவரசர் மைக்கேல் சொன்னிகோவ்ஸ்கிமீதும், போயாரின் பியோடார் மீதும்" தாத்தாவுக்கு அளவுகடந்த அபிமானம். ஆனால், அவர் களைக் கெட்ட மனிதர்களாகவும், மந்தமானவர்களாகவும், நாடோடிகளைப்போல் கறுப்பானவர்களாகவும், மோர்டோ வியா விவசாயிகளைப்போல் கண் வியாதி படைத்தவர்களாக வும் நான் என் மனக்கண் முன் கண்டேன். புல்வெளிக்கு மேலே சூரியன் எழுந்ததும் நான் இன்பத்தால் புன்முறுவல் பூத்தேன்.

எனக்கு மேலே பச்சை பசேலென்றிருந்த மரங்கள், தத்தம் இலைகளிலிருந்து பனித் துளிகளை உதறின. மர நிழலில் கோசபத்திரி பிஞ்சுகள்மீது பனி என்னும் பட்டாடை போர்த்திருந்த புல் பூமியிலே அசைவற்றுக் கிடந்தது. எனினும் சூரியன் ஒளி அவைமீது பட்டதும், அவை அசைவது தெரிந்தது. உயிர்வாழ அவை இறுதி முயற்சி செய்கின்றன போலும்.

பறவைகள் தூயிலெழுந்தன. கிளைக்குக் கிளை பறவை கள் தாவின ; தேவதாரு மரங்களின் உச்சியில் கொத்தின ; ஒரு கொம்பின் நுனியில் என் வலையைச் சந்தேகத்துடன்

பார்த்துக்கொண்டு தொங்கிற்று ஒரு பறவை. ஒரு நிமிடம் முன் தவத்திலே லயத்திருந்த கானகம் நூற்றுக்கணக்கான பறவைகளின் குரல்களால் உயிர் பெற்றுவிட்டதையும், ஜீவராசிகளிலேயே பரிசுத்தமான இவைகளின் சலசலப்பு கானகத்தை நிறைத்துவிட்டதையும் நான் உணர்ந்தேன்.

பறவைகளைப் பிடிப்பது பரிதாபகரமானது ; அவைகளை கூண்டில் சிறை செய்வது வெட்ககரமானது. அவைகளின் நடவடிக்கைகளைக் கவனிப்பதிலே நான் எல்லையற்ற மகிழ்ச்சியைக் கண்டேன். வேடனின் உற்சாகமும், பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற ஆசையும் என் அனுதாபத்தை வென்றன.

பறவைகளின் சாமர்த்தியம் எனக்கு வேடிக்கையாக இருந்தது. ஒரு ஜாதிப் பறவை என் கண்ணியை மிக நுணுக்கமாகப் பரிசீலனை செய்தது. அதிலே பொதிந்து கிடக்கும் ஆபத்தை அது உணர்ந்தது. எனவே ஒரு புறத்திலிருந்து அதை ஜாக்கிரதையாக அணுகி மரக் கம்பிகளுக்கு மத்தியில் தொங்கிக்கொண்டிருந்த விதையைக் திருட்டுத்தனமாகக் கொத்தி எடுத்தது. இந்த ஜாதிப் பறவை மிக சாமர்த்திய முடையது ; ஆனல் விஷயத்தை அறிய வேண்டும் என்ற ஆசை படைத்தது. இந்த ஆசை அதன் அழிவாக இருந்தது. "புல்பிங்" என்னும் இன்னொரு ஜாதிப் பறவை மூட்டாள்தனமானது. நன்கு போஷிக்கப்பட்ட முதலாளிகள் கோயிலுக்குச் செல்லுவதைப்போல், அவை கூட்டம் கூட்டமாக என் வலையில் சிக்கின. நான் வலையை இழுத்து மூடினதும் அவை ஆச்சரியம் அடைந்தன. கண்களைச் சுழற்றிக்கொண்டு அவை என் விரல்களில் கொத்தின. 'கிராஸ்பில்' சாந்தமாகவும், கம்பீரமாகவும் என் வலைக்குள் பிரவேசித்தது. "பிங்" என்னும் தனிரகமான பறவை கண்ணிக்கு முன் நீண்ட நேரம் உட்கார்ந்திருக்கும். தனது நீண்டவாலின்மீது சாய்ந்துகொண்டு தனது நீண்ட மூக்கை இரு பக்கமும் சாய்க்கும். மரங்கொத்தியைப்போல் மரத்தில் மேலும் கீழும் பாயும். இந்தப் பறவை பரிதாபத்திற்குரியதாக இருந்தது. இதை யாரும் நேசிக்கவில்லை ; இது யாரையும் நேசிக்கவும் இல்லை. அலப்பு வாய் பறவையைப் போல்

இதுவும் சிறிய பொருள்களைத் திருடி, அவைகளை ஒளித்து வைத்தது.

மத்தியானம் என் வேலையை முடித்துக்கொண்டு காட்டைக் கடந்து, வயல் வழியாக நான் வீடு திரும்புவேன். கிராம வழியாகப் பிரதான ரோடில் நான் நடந்தால், மற்ற சிறுவர்களோ, அல்லது கிராமப் போக்கிரிகளோ என் கூண்டுகளைப் பிடுங்கிக்கொள்வார்கள்—கண்ணிகளை உடைப்பார்கள். இதை நான் அனுபவத்திலே தெரிந்துகொண்டேன்.

களைப்புடனும், பசியுடனும் மாலையில் வீட்டை அடைவேன். எனினும் நான் சம்பாதித்திருக்கிறேன், பலத்திலும், அறிவிலும் வளர்ந்திருக்கிறேன் என்னும் உணர்ச்சி எனக்கு இருந்தது. தாத்தாவின் கேலிப் பேச்சுகளைப் பொறுமையாகக் கேட்க இந்தப் புதிய பலம் உதவி புரிந்தது. இதைக் கண்டு, அவர் மீண்ட பிரசங்கம் செய்ய ஆரம்பிப்பார் :

" இந்த முட்டாள்தனத்தை நிறுத்து ; இது போதுமென்று நான் சொல்லுகிறேன். பறவைகள் பிடித்து, யாரும் உலகத்தில் முன்னுக்கு வரவில்லை. ஒரு நல்ல இடம் கண்டு பிடித்து, மூளையை விருத்தி செய்துகொள். அற்ப காரியங்கள் செய்வதற்காக மனிதன் சிருஷ்டி செய்யப்படவில்லை. மனிதன் கடவுளின் விதை; நல்ல தானியத்தை உற்பத்திசெய்ய அந்த விதை பயன்பட வேண்டும். மனிதன் ஒரு ரூபிளைப் போன்றவன். அதை நல்ல வழியிலே உபயோகித்து, அதன் மதிப்பை மும்மடங்கு அதிகமாக்க வேண்டும். வாழ்க்கை நடத்துவது சுலபமென்று நீ நினைத்தாயா? வாழ்க்கை, மிகச் சிரமமானது. உலகம் இருண்ட இரவு ; எனவே ஒவ்வொருவனும் தனக்குத் தானே ஒளியாகத் திகழ வேண்டும். பத்து விரல்களுடன் நாம் பிறந்தோம். எனினும் தனது கையை எவ்வளவு தூரம் நீட்டி, எவ்வளவு பிடுங்க முடியுமோ அவ்வளவு பிடுங்க ஒவ்வொருவரும் விரும்புகின்றனர். நீ பலசாலியாக இருக்க வேண்டும் ; இல்லையென்றால், சாமர்த்தியசாலியாக இருக்க வேண்டும். பலஹீனன் தோல்வி அடைவது திண்ணம் ; ஜனங்களிடம் சினேகத்துடன் பழகு. ஆனால் நீ தனியாக இருக்கிறாய் என்பதைச் சதா நினைவிலிருத்து. எல்லோர் சொல்வதையும் கேள்; ஆனால் யாரையும் நம்பாதே.

உன் கண்ணை நீ நம்பினால், அளவு தப்பாக இருக்கும். வாயை இறுக மூடிக்கொள். நாக்கு நகரங்களை நிர்மாணிக்கவில்லை ; ஆனால்ரூபிளும் சம்மட்டியும்தான் நகரங்களை நிர்மாணித்தன. சீலப்பேனையும், செம்மறி ஆட்டையும் மாத்திரம் சொத்தாகக் கொண்ட பாஷ்கிரியனை, கால்மிக்கோ அல்ல, நீ. ''

மாலை முழுதும் இதே பாணியில் தாத்தாவால் பேச முடியும். அவர் பேச்சு எனக்கு மனப்பாடமாய்விட்டது. அந்தப் பேச்சின் ஒலி எனக்குப் பிடித்திருந்தது; ஆனால் அதன் அர்த்தத்திலே மட்டும் எனக்கு நம்பிக்கையில்லை. வாழ்க்கையைச் சுவாரஸ்யமாக்கும் இரண்டு சக்திகள் உள்ளன என்ற முடிவுக்கு அவர் பேச்சிலிருந்து நான் வந்தேன் : கடவுளும் ஜனங்களும்.

ஜன்னலிலே உட்கார்ந்துகொண்டு பாட்டி நூல் நூற்பாள். சுறுசுறுப்பான அவள் விரல்கள் ராட்டையைச் சுழற்றிக்கொண்டே இருக்கும். தாத்தாவின் வார்த்தைகளைச் சிறிது நேரம் மௌனமாகக் கேட்டுக்கொண் டிருந்ததுவிட்டு, அவள் சொல்லுவாள் :

''அன்னை விருப்பம்போல் எல்லாம் நடக்கும்'' என்று.

''என்ன அது ?'' என்று தாத்தா கூச்சலிடுவார். ''கடவுள் ? நான் கடவுளை மறந்துவிடவில்லை ; கடவுளை எனக்கு நன்றாகத் தெரியும் ! முட்டாள்களைப் படைத்து இந்தப் பூமியைக் கடவுள் நிரப்பியிருக்கிறார் என்று நினைத்தாயா, கிழட்டு முட்டாளே !''

.....சிப்பாய்களையும், கொலாக்கியர்களையும்போல் அவ்வளவு நன்றாக யாரும் வாழவில்லை என்று எனக்குத் தோன்றிற்று. அவர்கள் வாழ்க்கை உல்லாசமாகவும் சாதாரணமானதாகவும் இருந்தது. காலையில் எங்கள் வீட்டிற்கு எதிரிலிருந்த நீர்க்காலுக்கு அப்பால் அவர்கள் காட்சி அளிப்பார்கள். வயலிலே சிதறி நின்று ஆவேசமளிக்கும், சிக்கலான விளையாட்டு விளையாடுவார்கள். வெண் சட்டை அணிந்த பலசாலிகளான அந்த ஜனங்கள், கையில் துப்பாக்கியுடன் வயலில் உல்லாசமாகப் பாய்ந்து செல்லுவார்கள் ; நீர்க்காலிலே மறைவார்கள். திடீரென்று கூழல்சத்தம் கேட்டு ''ஹர்ரா !'' என்று கூவிக்கொண்டு வயலுக்கு மீண்டும் ஓடி வருவார்கள். பிறகு, தப்பட்டைகள் ஒலிக்க, துப்பாக்கிச்

சனியன் ஒளிவீச, எங்கள் வீதியை நோக்கி வருவார்கள், எங்கள் வீட்டை, தலைதாழக் கவிழ்க்கவருகிறவர்களைப்போல.

நானும் ''ஹுர்ரா!'' என்று கூவிக்கொண்டு அவர்களைப் பின்தொடர்ந்து ஓடினேன். தப்பட்டைகளின் அச்சுறுத்தும் ஓசை, எதையாவது நாசப்படுத்த வேண்டும்—ஒரு வேலியைப் பிடுங்க வேண்டும், அல்லது யாரையாவது அடிக்க வேண்டும்—என்னும் தடுக்க முடியாத எண்ணத்தை என்னிடம் தூண்டிவிட்டது.

வேலையில்லாத நேரத்தில் '' மக்ரோக்கா '' குடிக்கச் சிப்பாய்கள் என்னை அனுமதித்தார்கள் ; கனமான தங்கள் துப்பாக்கிகளை எனக்குக் காட்டினார்கள். அவர்களில் ஒருவன் துப்பாக்கிச் சனியனை என் வயிற்றுக்கு நேரே நீட்டி, பொய்க் குரூரத்துடன் கூவுவான் :

'' இந்தக் கரப்பான்பூச்சியை நசுக்கு !'' என்று.

சூரிய ஒளியிலே துப்பாக்கிச் சனியன் பிரகாசிக்கும். அடிபடவிருக்கும் ஜீவனுள்ள பாம்பு துடிப்பதைப்போல், அது துடிப்பதாகத் தோன்றும். பயங்கரமாக, ஆனால் மகிழ்ச்சிதரத்தக்கதாக அது இருந்தது.

தப்பட்டையின் கம்பை உபயோகிக்கும் வித்தையை, தப்பட்டை யடிக்கும் மோர்டோவியச் சிறுவன் ஒருவன் எனக்குக் கற்றுக்கொடுத்தான். முதலில் என் கைகளை தன் கைகளில் பிடித்துக்கொண்டு, என் கைகள் வேதனை அடையும்வரையில் அழுத்தினான். பிறகு கம்புகளை என் கைகளில் கொடுத்தான்.

'' அடி—ஒரு முறை—மீண்டும்—ஒரு தரம்—மீண்டும்! டா—டா—டா—டா.....! இடது கையால் தட்டுவது எளிது ; வலது கையால் தட்டுவது சிரமம்—டா—டா—டா.....!'' என்று, பறவையின் கண்களைப்போன்ற கண்களால் என்னை உற்றுப் பார்த்துக்கொண்டு அவன் முரட்டுத்தனமாகக் கூவினான்.

சிப்பாய்களின் '' டிரில் '' முடியும்வரையில் நானும் அவர்களுடன் ஓடினேன். பிறகு நகரின் வழியாக நானும் அவர்களுடன் அவர்களின் முகாமுக்கு நடந்தேன் ; அவர்கள் பாட்டைக் கேட்டுக்கொண்டும், நாணயசாலையிலிருந்து நேராகவந்த ஐந்து காபெக் நாணயத்தைப்போன்று புதிதாக

வும், பிரகாசமாகவும் தோன்றிய அவர்கள் அன்புசொரியும் முகங்களைப் பார்த்துக்கொண்டும் அவர்களுடன் நடந்தேன்.

ஒரே மாதிரியாக இருந்த இந்த மனிதக் கூட்டம் வீதியிலே உல்லாசமாக நடந்தது. அந்தக் காட்சி மனதிற்கு மகிழ்ச்சி அளித்தது; நதியிலே குதிப்பதைப்போன்று, அவர்கள் மத்தியிலே குதிக்க வேண்டுமென்ற ஆசையைத் தூண்டிவிட்டது; கானகத்திலே பிரவேசிப்பதைப்போன்று அந்தக் கூட்டத்திலே பிரவேசிக்க வேண்டுமென்ற எண்ணத்தை உண்டுபண்ணிற்று. இந்த ஜனங்கள் எதற்கும் பயப்படவில்லை; எல்லாவற்றையும் தைரியமாகப் பார்த்தனர்; எதையும் வென்றுவிடுவர்; தங்களுக்கு விருப்பமானதைப் பெற்றுத்தான் தீருவர்; எல்லாவற்றையும்விட மேலாக, இவர்கள் சாதாரணமானவர்கள், இளகிய மனம் படைத்தவர்கள்.

ஆனால் ஒரு நாள் ஒரு அதிகாரி பருமனான ஒரு சிகரெட்டை எனக்குக் கொடுத்தான்.

"இந்தச் சிகரெட்டைக் குடி. இது ரொம்ப விசேஷமான சிகரெட்டு. உன்னைத் தவிர வேறு யாருக்கும் நான் இதைக் கொடுக்க மாட்டேன். நீ ரொம்ப நல்ல பையன்!"

நான் சிகரெட்டைக் கொளுத்தினேன். உடனே அவன் பின்வாங்கினான். திடீரென்று செவ்வொளி பரவி என்னைக் குருடாக்கியதோடு, என் விரல்களையும், மூச்சையும், புருவங்களையும் எரித்தது. பழுப்பு நிறப் புகை எழுந்து, என்னைத் தும்மமாறும், இருமமாறும் செய்தது. கண் தெரியாமலும், பயத்துடனும் நின்ற இடத்திலேயே அசையாது நான் நின்றேன்; சிப்பாய்கள் என்னைச் சூழ்ந்து நின்று சந்தோஷ ஆரவாரம் செய்தனர். நான் வீட்டிற்குச் சென்றேன். எனக்குப் பின்னே அவர்களின் சிரிப்பும், சீழ்க்கையும், இடையனின் சாட்டைச் சத்தம் போன்ற கைதட்டுச் சத்தமும் எனக்குக் கேட்டன. என் விரல்கள் வலித்தன; என் முகம் எரிந்தது; கண்களிலிருந்து கண்ணீர் பெருகி ஓடிற்று; எனினும், இந்த வேதனையைவிட ஆச்சரியம்தான் எனக்கு அதிக வேதனை அளித்தது. அவர்கள் ஏன் எனக்கு இந்தத் தீங்கு செய்தார்கள்? இதைக் கண்டு இந்த நல்ல மனிதர்கள் ஏன் குதூகலமடைந்தார்கள்? வீட்டை அடைந்

ததும், மச்சின்மீது ஏறினேன். அங்கே நீண்ட நேரம் உட்கார்ந்து குறுகிய என் வாழ்க்கையில் நடந்ததை, நினைக்கக்கூட முடியாத குரூரத்தனத்தை நினைவுபடுத்திக்கொண்டேன். ஸாராபூலிலிருந்து வந்த இந்தச் சிறிய சிப்பாய் என் நினைவிலே நன்றுகப் பதிந்திருந்தான். ஜீவனுள்ளவனைப் போல் எப்பொழுதும் என்முன் அவன் நின்றான்.

" நல்லது, இப்பொழுது உனக்குப் புரிகிறதா ?" என்று கேட்டான் அவன்.

பெச்செர்ஸ்காயா ஸ்லோபோதாவுக்கு அருகிலிருந்த கொஸாக்கியர்களின் முகாமுக்கு நான் அடிக்கடி செல்ல ஆரம்பித்தேன். மற்ற சிப்பாய்களிலிருந்து கொஸாக்கியர்கள் மாறுபட்டிருந்தனர். அவர்கள் சிறந்த குதிரைசவாரி செய்பவர்கள் என்பதனாலோ சிறந்த உடை அணிபவர்கள் என்பதனாலோ அல்ல ; ஆனால் அவர்கள் வேறு விதமாகப் பேசினர், வேறுவிதமான பாட்டுகள் பாடினர் ; சிறந்த முறையில் நடனம் ஆடினர். சில சமயம் மாலையில் குதிரைகளைக் குளிப்பாட்டிவிட்டு, லாயத்திற்கருகில் அவர்கள் வட்டமாக நிற்பர் ; வளர்ந்து தொங்கும் தலை மயிரை அப்பொழுது பின்னுக்குத் தள்ளிவிட்டு, செம்மயிர் படைத்த சிறிய கொஸாக் க்ளார்னட் போன்ற குரலில் உச்சஸ்தாயியில் பாட ஆரம்பிப்பான். விறைப்பாக நின்றுகொண்டு சாந்தமாகப் பாயும் டானைப்பற்றியோ, நீல டான்யூபைப் பற்றியோ சோகம் சொரியும் பாட்டை அவன் பாடுவான். பூமியில் இறந்து விழும்வரையில் பாடும் பிரபாதப் பறவையைப்போல் கண்களை மூடிக்கொண்டு அவன் பாடுவான். தனது சட்டையின் கழுத்துப் பொத்தானை அவன் பொருத்த மாட்டான். எனவே அவன் தோள்பட்டை எலும்பு சிறிய பித்தளைத் தண்டைப் போன்று புடைத்துக்கொண்டு நிற்கும். அவன் உருவமே பித்தளையில் செதுக்கப்பட்டதைப் போன்றிருந்தது. பார்வையற்றவனைப்போல் கைகளை வீசிக்கொண்டும், பூமி நெடுமூச்சுவிடுவதைப்போல் தனது மெலிந்த கால்களில் அசைந்துகொண்டும் அவன் அங்கே நின்றான். மனிதன் என்ற தன்மையை இழந்துவிட்டு, குழல் ஊதுகிறவனின் குழலாக, இடையனின் புல்லாங்குழலாக அவன் பரிணமித்து

விட்டதாகத் தோன்றிற்று. அவன் பின்னே சாய்ந்து பிரபாதப் பறவையைப்போல் இறந்துவிடுவான் என்று சில சமயங்களில் எனக்குத் தோன்றிய தண்டு. ஏனெனில் தனது ஆத்மாவையும், தனது பலத்தையும் அவன் பாட்டுக்குப் பலி கொடுத்துவிட்டான்.

கைகளை ஜேபிகளில் சொருகிக்கொண்டோ, அல்லது தங்களது பரந்த முதுகுப் பக்கம் கோத்துக்கொண்டோ அவன் தோழர்கள் அவனைச் சுற்றி நின்றனர்; அவன் பதுமை முகத்தைப் பார்த்துக்கொண்டும், அவன் வீசும் கைகளைப் பார்த்துக்கொண்டும், கோயிலில் சேர்ந்து பாடுவதைப் போன்று சாந்தமாகவும், கம்பீரமாகவும் பாடிக்கொண்டும் நின்றனர். அத்தகைய சமயங்களில் அவர்கள் அனைவரும்— தாடி வைத்துக்கொண்டிருந்தவர்களும், இல்லாதவர்களும்— விக்கிரகங்களைப்போல் தோற்றமளித்தனர். அவன் பாட்டு நெடும் பாதையைப்போல், காலம் மெருகுபடுத்திய அறிவைப் போல் நீண்டு பரந்திருந்தது. அந்தப் பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்தபொழுது அது பகலா இரவா என்பதையும், நான் குழந்தையா கிழவனா என்பதையும் மறந்துவிட்டேன். எல்லாம் மறக்கப்பட்டுவிட்டன. பாடகர்களின் குரல் ஓய்ந்த பிறகு, வயல்களிலே ஊர்ந்துசென்ற சரத்கால இரவின் இடைவிடாத சலசலப்பும், பள்ளத்தாக்குகளின் சுதந்திரத்தைக் கனவு கண்டுகொண்டிருந்த குதிரைகளின் நெடுமூச்சும் எங்களுக்குக் கேட்டன. அசாதாரண இந்த உணர்ச்சி, மக்கள் மீதும், தேசத்தின்மீதும் அளவு கடந்த அன்பை என் உள்ளத்தில் தூண்டிவிட்டது.

சிறிய பதுமைபோன்ற அந்தக் கொலாக்கியன் சாதாரண மனிதனல்ல, சாதாரண மனிதனைவிட மிக உயர்ந்தவன் என்று எனக்குத் தோன்றிற்று. அவனிடம் பேச என்னால் முடியாது. அவன் என்னிடம் ஏதாவது கேட்டால் நான் சந்தோஷத்துடன் புன்னகை புரிவேனே தவிர, கூச்சத்தால் மௌனமாக இருந்துவிடுவேன். அவனை அடிக்கடி காண முடியுமானால், அவன் பாட்டை அடிக்கடி கேட்க முடியுமானால், பணிவுள்ள நாயைப்போல் அவனைப் பின்தொடர நான் தயாராக இருந்தேன்.

தனது விரலிலிருந்த ஒரு வெள்ளி மோதிரத்தைக் குதிரை லாயத்தின் ஒரு மூலையில் நின்றுகொண்டு கவனமாக அவன் பார்ப்பதை ஒரு நாள் நான் கண்டேன். அவன் அழகிய அதரங்கள் அசைந்தன ; அவன் சிறிய சிவப்பு மீசை துடித்தது; அவன் வதனம் வேதனையை வெளியிட்டது.

இன்னொரு நாள் மாலை ஸ்டராயா ஸென்னயா சதுக்கத்திலிருந்த விடுதிக்கு என் கூண்டுகளை நான் கொண்டு சென்றேன். விடுதி சொந்தக்காரருக்கு வானம்பாடிகள்மீது அளவு கடந்த பிரியம். எனவே அவர் அடிக்கடி வானம்பாடிகளை என்னிடமிருந்து விலைக்கு வாங்கினர்.

அடுப்புக்கும் சுவருக்கும் மத்தியிலிருந்த 'பாருக்கு' அருகில் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தான் கொஸாக்கியன். அவனுக்கு அருகில் பருமனான, அவனைவிட இரு மடங்கு பருமனான ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். அவளுடைய வட்டமுகம் மின்னிக்கொண்டிருந்தது. அன்னை ஆசையுடன் பார்ப்பதைப்போல் ஆசையுடன் அவனைப் பார்த்தாள் அந்தப் பெண். அவன் குடித்திருந்தான். தரையில் தனது கால்களை அங்குமிங்கும் மாறி மாறி வைத்துக்கொண்டிருந்தான் அந்தக் கொஸாக்கியன். அவன் அவளை மிதித்திருக்க வேண்டும். ஏனெனில் அவள் திடுக்கிட்டு, நெற்றியைச் சுளித்துக்கொண்டு, மிருதுவாகச் சொன்னாள் :

" இந்த முட்டாள்தனத்தை நிறுத்து !" என்று.

சிரமத்துடன் கொஸாக்கியன் நிமிர்ந்தான் ; ஆனால் உடனே குனிந்துவிட்டான். அவனுக்கு வெட்கமாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் அவன் சட்டையின் பொத்தான்களை அவிழ்த்தான். அவன் தொண்டை வெளியில் தெரிந்தது. தலையிலிருந்த கைக்குட்டையை அந்தப் பெண் பின்னுக்குத் தள்ளவே, அது அவள் தோளில் விழுந்தது. வலிமை படைத்த தனது வெண் கரங்களை மேஜைமேல் வைத்துக்கொண்டு, தனது கைகளை இறுக மூடினாள் அவள். அவர்களைப் பார்க்குந் தோறும் அன்புக்கு உறைவிடமான தாயாரின் அடங்காத மகனுக அந்தக் கொஸாக்கியன் எனக்குத் தோன்றினான். அவள் அன்புடன் அவனைக் கடிந்தாள்; அவனை மெளனமாக

உட்கார்ந்திருந்தான். அவளுக்கு அவன் என்ன பதில் சொல்ல முடியும் ?

தேள் கொட்டியவனைப்போல் திடீரென்று அவன் எழுந்தான். தொப்பியை இழுத்துவிட்டுக்கொண்டு, சட்டைப் பொத்தான்களை பொருத்திக்கொள்ளாமல், கதவை நோக்கி நடந்தான். அந்தப் பெண்ணும் எழுந்திருந்தாள்.

" நாங்கள் ஒரு நிமிடத்தில் திரும்பிவிடுவோம், குஸ்மிக் " என்று விடுதிக்காரரிடம் அவள் சொன்னாள்.

அவர்கள் போனதைக் கண்டு அங்கே இருந்த மற்றவர்கள் சிரித்தனர், கேலி செய்தனர்.

" விமானி திரும்பியதும், அவன் அதை அவளுக்குக் கொடுப்பான் !" என்று அவர்களில் ஒருவன் பக்தியுடன் கூறினான்.

நான் அவர்களைப் பின்தொடர்ந்தேன். இருளிலே எனக்குப் பன்னிரண்டு அடி முன்னே அவர்கள் சென்றனர். சேறு நிறைந்த சதுக்கத்தைக் கடந்து, வால்காவின் உயர்ந்த கரையை நோக்கி நடந்தனர். கொஸாக்கியனை அந்தப் பெண் சிரமத்துடன் தாங்கிச் சென்றதை நான் கண்டேன். அவர்கள் கால் பட்டுச் சேறு தெறிக்கும் சத்தம் எனக்குக் கேட்டது.

" நீ எங்கே போகிறாய்? நீ எங்கே போகிறாய்?" என்று மிருதுவாகக் கேட்டாள் அந்தப் பெண்.

என் பாதை வேறு திசையில் இருந்த தென்றாலும், சேறில் நான் அவர்களைப் பின்தொடர்ந்தேன். நதிக்கரையை அவர்கள் அடைந்ததும் கொஸாக்கியன் நின்றான். பிறகு ஒரு அடி பின் சென்று திடீரென்று அவள் முகத்தில் அடித்தான். பீதியுடனும் ஆச்சரியத்துடனும் அவள் கூவினாள் :

" ஏன் என்னை அடித்தாய் ?"

நானும் பீதி அடைந்துவிட்டேன். நான் அவர்களை நோக்கி ஓடினேன். அந்தப் பெண்ணை இடையில் பிடித்து வேலிக்கு அப்பால் அவளை எறிந்தான்; கொஸாக்கியன். அவளைத்தொடர்ந்து அவனும் குதித்தான். இருவரும் புரண்டு புல் படர்ந்த நதிக்கரையை அடைந்தனர். நான் அதிர்ச்சி அடைந்தேன். எனக்குச் சலசலப்பும், ஆடையைக் களையும் சத்த

மும், கொஸாக்கியனின் முரட்டுத்தனமான மூச்சும் கேட்டன. தணிந்த குரலில் அந்தப் பெண் முணுமுணுத்தாள்:

"நான் கூச்சலிடுவேன். நான் கூச்சலிடுவேன்" என்று.

அவள் உரக்க, வேதனையுடன் முனகினாள். அதன் பிறகு அங்கே அமைதி குடிகொண்டது. ஒரு கல்லை எடுத்து நான் கீழே எறிந்தேன். இலைகளின் சத்தத்தைத் தவிர வேறு எந்தச் சத்தமும் கேட்கவில்லை. விடுதியின் கண்ணாடிக் கதவு சாத்தப் பட்டது. கீழே விழுந்ததைப்போல் யாரோ முனகினார். மீண்டும் பயம் கலந்த மௌனம் குடிகொண்டது.

கரையின் நடுவிலே ஒரு பெரிய வெள்ளை உருவம் தோன்றிற்று. மெதுவாக, தடுமாறிக்கொண்டு அந்த உருவம் மேலே எறிற்று. அழுதுகொண்டும் முனகிக்கொண்டுமிருந்த அந்த உருவம், அந்தப் பெண்ணின் உருவம்தான் என் பதை நான் கண்டுகொண்டேன். ஆட்டைப் போன்று, கைகளையும் கால்களையும் ஊன்றிக்கொண்டு அவள் மேலே ஏறினாள். இடைவரையில் அவள் தேகத்தில் ஆடையில்லை என் பதை நான் உணர்ந்தேன். அவளுடைய பெரிய ஸ்தனங்கள் பால் வெள்ளையாக இருந்ததால், அவளுக்கு மூன்று முகங்கள் இருப்பதைப் போன்றிருந்தது. கடைசியில் அவள் வேலியை அடைந்து என் அருகில் உட்கார்ந்தாள். வேகமாகப் பாயும் குதிரை மூச்சுவிடுவதைப் போன்று அவள் மூச்சுவிட்டாள். சிதறிக் கிடந்த கூந்தலை அவள் ஒழுங்குபடுத்த முயன்றாள். வெண்மையான அவள் தேகத்தில் அழுக்கு ஒட்டிக்கொண் டிருந்தது தெளிவாகத் தெரிந்தது. அவள் அழுதாள். பூனை தனது முகத்தைக் கழுவிக்கொள்வதைப்போல், கண்ணீரால் தன் முகத்தை அவள் கழுவிக்கொண்டாள்.

"கடவுளே, நீ யார்! போய்விடு, வெட்கமற்ற சிறுவா!" என்று என்னைக் கண்டதும், அவள் மிருதுவாகச் சொன்னாள்.

என்னால் போக முடியவில்லை. ஆச்சரியமும் வருத்தமும் என்னை நிலைகுலைத்துவிட்டன.

பாட்டியின் சகோதரியின் சொற்கள் என் நினைவிற்கு வந்தன:

"பெண்ணின் சக்தி அளவிட முடியாதது. தெய்வத் தையே ஏவாள் என்ற பெண் ஏமாற்றிவிடவில்லையா?"

அந்தப் பெண் எழுந்திருந்து, எஞ்சியிருந்த ஆடையால் மார்பை மறைத்துக்கொண்டு, கால்கள் வெளியே தெரிய, வேகமாக அங்கிருந்து நடந்தாள். ஒரு வெள்ளைத் துணியை மேலே வீசிக்கொண்டு அந்தக் கொஸாக்கியனும் மேலே ஏறி வந்தான். சிழ்க்கை அடித்துவிட்டு, அவன் சிறிது நேரம் கவனித்தான். பிறகு உல்லாசமான குரலில் சொன்னான் :

" டார்யா ! நல்லது, தனக்குத் தேவையானதை ஒரு கொஸாக்கியன் பெற்றுத்தான் தீருவான் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா ? நான் குடித்திருக்கிறேன் என்று நினைத்தாய், அல்லவா ? உன்னை ஏமாற்ற அப்படி நடித்தேன்! டார்யா !"

அவன் உறுதியாக நின்றான். அவன் குரலில் நிதானமும், கேலியும் கலந்திருந்தன. கீழே குனிந்து அந்தப் பெண்ணின் துணியால் பூட்ஸிலே படிந்திருந்த சேறைத் துடைத்துவிட்டு, தொடர்ந்து பேசினான் :

" இதோ, உன் ரவிக்கையை எடுத்துக்கொள் ! வா, டார்யா, வெட்கப்படாதே !" பிறகு கெட்ட சொல்லால் அவளை உரக்கக் கூவி அழைத்தான்.

இரவின் அமைதியிலே விகாரமாக ஒலித்த அந்தக் குரலைக் கேட்டுக்கொண்டு கிளைகளின்மீது அங்கே அசையாது நான் உட்கார்ந்திருந்தேன்.

சதுக்கத்தில் எரிந்த விளக்குகள் என் கண்முன்னே நர்த்தனமாடின. இருண்ட மரங்களுக்கிடையே வலது புறத்தில் பிரபுக்களின் புதல்விகளுக்காக ஏற்படுத்தப்பட்ட பள்ளிக்கூடம் தெரிந்தது. கெட்ட வார்த்தைகளை உச்சரித்துக் கொண்டும், வெள்ளை அங்கியை வீசிக்கொண்டும் அந்தக் கொஸாக்கியன் சதுக்கத்தைக் கடந்து கெட்ட கனவைப் போல் மறைந்தான்.

கீழே தண்ணீர் டவர் இருந்த ஒரு குழாயிலிருந்து ஆவி சீறிக்கொண்டு வெளிப்பட்டது. ஒரு வண்டி சடக்சடக்கென்று நதிப்பாதையில் இறங்கிற்று. கண்ணுக்கு யாரும் தென்படவில்லை. புண்பட்ட மனதுடன் கொஸாக்கியன்மீது எறிவதற்காக வைத்துக்கொண்டிருந்த குளிர்ந்த கல்லை கையில் இறுகப் பிடித்துக்கொண்டு நான் நதிக்கரையில்

நடந்தேன். கோயிலுக்கு அருகில் இரவு காவற்காரன் என்னைத் தடுத்து நிறுத்தினான். நான் யாரென்றும், என் முதுகிலிருக்கும் பையில் என்ன இருக்கிறதென்றும் அவன் கோபத்துடன் கேட்டான்.

அந்தக் கொலாக்கியனைப்பற்றி நான் சொன்னதும் அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

"அது எப்படி யிருந்தது!" என்று அவன் கேட்டான். "கொலாக்கியர்கள் சடங்குகளைச் சட்டைசெய்ய மாட்டார்கள், சகோதர! அவர்கள் நம்மைப்போல் அல்ல. அந்தப் பெண் விபசாரிதான்!"

மீண்டும் அவன் வாய்விட்டுச் சிரித்தான். சிரிப்பதற்கு அவன் எதைக் கண்டுவிட்டான் என்று வியந்துகொண்டே நான் என் வழியே சென்றேன்.

பயத்துடன் நான் நினைத்தேன்: 'அந்தப் பெண் என் தாயாராகவோ, பாட்டியாகவோ இருந்திருந்தால்?' என்று.

8

முதல் பனி விழுந்ததும், தாத்தா என்னை மீண்டும் பாட்டியின் சகோதரி வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

"இதனால் உனக்கு எத்தகைய தீங்கும் நேராது!" என்றார் தாத்தா.

வேனிற் காலத்தில் நான் பெற்ற மகத்தான அனுபவம் என்னை வயதானவனாகவும், புத்திசாலியாகவும் மாற்றிவிட்டதென்று நான் கருதினேன்; அதே சமயத்தில் என் எஜமானர் வீட்டில் வாழ்க்கை மேலும் மந்தமாய்விட்டதாகவும் நான் கருதினேன். அதிகமாக உணவருந்தி இந்த ஜனங்கள் தங்களைத் தாங்களே கெடுத்துக்கொண்டனர். பழைய பாணியிலேயே தங்கள் நோயை இவர்கள் வர்ணித்தனர். வஞ்சம் தீர்க்கும் பயங்கரமான பழைய பாணியிலேயே கிழவி கடவுளை வேண்டினாள். இன்னொரு குழந்தையை ஈன்ற சின்ன எஜமானி மெலிந்திருந்தாள். கர்ப்பிணியாக இருந்தபொழுது எவ்வளவு முக்கியத்வத்துடன் நடந்தாளோ அப்படியே இப்

பொழுதும் நடந்தாள். குழந்தைகளுக்குத் துணை தைத்த பொழுது, பழைய பாட்டையே அவள் பாடினாள்.

வானியா, வானியா, அன்புள்ள வானியா,
சகோதரனே வானியா, அன்புள்ள சகோதரா !
நான் சறுக்கு வண்டியில் அமருகிறேன் ;
நீ பின்னே அமர்ந்து வண்டியை ஓட்டு.

அறைக்குள் யாராவது பிரவேசித்தால், பாடுவதை நிறுத்திவிட்டு அவள் கோபத்துடன் கேட்பாள் :

" உனக்கு என்ன வேண்டும் ?" என்று.

இந்த ஒரு பாட்டுத்தான் அவளுக்குத் தெரியும் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

மாலையில் சாப்பாட்டு அறைக்கு என்னை அழைத்து, என்னிடம் சொல்லுவாள் :

" உன் கப்பல் வாழ்க்கையை விபரமாகச் சொல்."

கக்கூஸ் கதவுக்கு அருகில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு நான் எல்லா விவரங்களையும் சாங்கோபாங்கமாகச் சொன்னேன். என் விருப்பத்திற்கு மாறுக ஏற்பட்ட இந்த வாழ்க்கைக்கு மத்தியில், என் கப்பல் வாழ்க்கையை நினைப்பது எனக்குத் திருப்தி அளித்தது. என் கதையிலே நான் லயித்துவிட்டதும், என்னைச் சுற்றியிருப்பவர்களை நான் மறந்துவிடுவேன். ஆனால் இது நீண்ட நேரம் நீடித்திராது. அந்தப் பெண்கள் கப்பலில் பிரயாணமே செய்யாதவர்களாதலால், அவர்கள் கேட்பார்கள் :

" உனக்குப் பயமாக இருக்கவில்லையா ?"

பயப்படுவதற்கு என்ன இருக்கிறது என்பது எனக்கு விளங்கவில்லை.

"ஆழமான இடத்தில் கப்பல் கவிழ்ந்து மூழ்கிவிட்டால் என் செய்வது ?"

என் எஜமானர் சிரித்தார். கப்பல் கவிழ்ந்து ஆழமான இடத்தில் மூழ்காது என்பது எனக்குத் தெரியும்; எனினும், இந்த உண்மையை அந்தப் பெண்கள் நம்புமாறு செய்ய என்னால் முடியவில்லை. ஜலத்தில் கப்பல் மிதக்கவில்லை என்பதும், வண்டியின் சக்கரம் சோடில் உருளுவதைப்போல், கப்பலின்

சக்கரமும் அடித்தளத்தில் உருளுகிறது என்பதும் அந்தக் கிழவிக்கு நிச்சயமாகத் தெரியும்.

" இரும்பால் செய்த கப்பல் எப்படி மிதக்கும் ? கோடாலி மிதக்கவில்லை ; மிதக்கிறதா ?"

" ஆனால் வாளி மிதக்கிறதே ?"

" சிறந்த உவமை ! வாளி சிறிசு—காலியானது."

ஸ்மூரியைப் பற்றியும், அவன் புத்தகங்களைப் பற்றியும் சொன்னபொழுது அவர்கள் என்னைச் சந்தேகத்துடன் பார்த்தனர். முட்டாள்களும், சம்சயவாதிகளும்தான் புத்தகங்கள் எழுதுவார்கள் என்று கிழவி அறுதியிட்டுக் கூறினாள்.

" கீத சங்கிரகமோ ? டேவிட் அரசரோ ?"

" கீதசங்கிரகம் பரிசுத்த நூல். இருந்தும்கூட, கீதசங்கிரகத்திற்காக டேவிட் அரசர் கடவுளின் மன்னிப்பை வேண்டினார்."

" இது எங்கே எழுதப்பட்டிருக்கிறது ?"

" இங்கே, என் கையில் ! எங்கே என்பதை கற்றுக் கொடுக்க உன் பிடரியில் ஓங்கி அடிக்கிறேன் !"

அவளுக்கு எல்லாம் தெரியும். அவள் எல்லாவற்றையும்—அவை அசம்பாவிதமாக இருப்பினும்கூட—அளவு கடந்த நம்பிக்கையுடன் சொன்னாள்.

" பெச்சோர்க்கா தெருவிலிருந்த தார்தாரியன் இறந்தான். அவன் ஆத்மா தாரைப்போல் கறுப்பாகத் தொண்டை வழியாக வெளியே ஒழுகிற்று."

" ஆத்மாதான் ஆவி !!' என்றேன் நான்.

" தார்தாரியனைப்பற்றி நான் பேசுகிறேன், முட்டாளே !" என்றாள் கிழவி.

என் சின்ன எஜமானிக்கும் புத்தகங்கள் என்றால் பயம்.

" புத்தகங்கள் படிப்பது தீமை ; அதுவும் இளமையில் படிப்பது மிக மிகத் தீமை !" என்றாள் அவள். " நமது வீதியிலே—கிரெபெஷோக் தெருவிலே—ஒரு சிறுமி வசித்தாள். நல்ல குடும்பத்தில் பிறந்தவள் அவள். அவள் புத்தகங்கள் படிக்க ஆரம்பித்தாள். படித்தாள், படித்தாள், பாதிரியைக் காதலிக்கும்வரையில் படித்தாள். இதற்காகப் பாதிரியின் மனைவி அவளைக் கண்டிக்கவில்லையா ? முழுமூச்சுடன் கண்

டித்தாள் ! எல்லோருக்கும் முன்னிலையில், நடுத்தெருவில் ! அது பயங்கரமானது !''

ஸ்மூரியின் நூல்களில் கற்ற சில வார்த்தைகளை நான் சில சமயங்களில் உபயோகிப்பேன். ஒரு புத்தகத்தில் நான் படித்தேன் : '' கணிசமாகச் சொல்லுவதானால், வெடி மருந்தை யாரும் கண்டுபிடிக்கவில்லை. நீண்ட ஆராய்ச்சிகளின் மூலம் அது வடிவமெடுத்தது'' என்று.

எக்காரணத்தாலோ, இந்தச் சொல் என் மனதில் பதிந்தது. ''கணிசமாகச் சொல்லுவதானால் '' என்னும் சொல் எனக்கு ரொம்பப் பிடித்திருந்தது ; இது வலிமை படைத்த சொல்லாக எனக்குப் பட்டது. இந்தச் சொல்லை உபயோகித்தால், அவசியமற்ற வேதனையை நான் அடைய நேர்ந்தது.

ஒரு நாள் மாலை அந்தக் குடும்பத்தார் என் கப்பல் அனுபவத்தைச் சொல்லுமாறு கேட்டபொழுது நான் சொன்னேன் :

''கணிசமாகச் சொல்லுவதானால், சொல்லுதற்கு ஒன்றுமில்லை !'' என்று.

அவர்கள் அசந்துவிட்டார்கள்.

'' என்ன அது ? நீ என்ன சொன்னாய் ?''

நால்வரும் சிரித்தனர்.

'' கணிசமாகச் சொல்லுவதானால் ! கடவுளே !'' என்று அவர்கள் திரும்பத் திரும்பச் சொன்னார்கள்.

என் எஜமானர்கூடச் சொன்னார் :

'' இப்படிச் சொல்லுவது அசட்டுத்தனம்.''

இதற்குப் பிறகு நீண்ட காலம் ''கணிசமாகச் சொல்லுவதானால் '' என்று அவர்கள் என்னை அழைத்தனர்.

''ஏய், ' கணிசமாகச் சொல்லுவதானால் !' இங்கே வந்து குழந்தை பேண்டிருக்கும் இடத்தைச் சுத்தம் செய்யலாமா, கணிசமாகச் சொல்லுவதானால் !''

அர்த்தமற்ற இந்தக் கேலி எனக்கு ஆச்சரியமளித்ததே தவிர, என்னைப் புண்படுத்தவில்லை.

மயக்கும் துயரம் என்னும் பனித்திரையிலே வாழ்ந்த நான், கடுமையாக வேலை செய்து துயரத்தைக் குறைக்க முயன்றேன். செய்ய நிறைய வேலை இருந்தது. வீட்டிலே

இரண்டு குழந்தைகள் இருந்தன. என்னைக் குறைகூறும் எஜமானிகள் தாதிகளை வேலையிலிருந்து சதா நீக்கிக்கொண்டிருந்ததால், குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு பெரும்பாலும் என் தலையில் விழுந்தது. நாள்தோறும் நான் 'டயாயர்'களைக் கழுவினேன். வாரத்திற்கொரு முறை துணிகளை அலசிக் கழுவ அருவிக்குச் சென்றேன். வண்ணத்திகள் என்னைப் பார்த்துச் சிரித்தனர்.

"பெண்கள் செய்ய வேண்டிய வேலையை நீ எதற்காகச் செய்கிறாய்?" என்று அவர்கள் கேட்பார்கள்.

அவர்கள் கேலியைப் பொறுக்க மாட்டாமல், சில சமயங்களில் ஈரத் துணியால் அவர்களை நான் அடிப்பேன்; அவர்கள் என்னைத் திருப்பி அடிப்பார்கள். அவர்களுக்கு மத்தியில் இருப்பது சந்தோஷமாக இருந்தது.

ஓகா நதியில் கலக்கும் அருவி அது. ஸ்லாவோனிய தெய்வம் யாரிலோவ் பெயரிடப்பட்ட வயலை நகரிலிருந்து பிரித்தது, அந்த நீர்க்கால். ஸைபிக் நாளில் நகர மக்கள் இந்த வயலுக்கு உலாவ வருவர். தனது இளமையில் ஜனங்கள் யாரிலோவை நம்பியதாகவும், அவருக்கு வணக்கம் செலுத்தியதாகவும் பாட்டி சொன்னாள். ஒரு சக்கரத்தில் தார் பூசி, அதற்குத் தீ வைத்து, குன்றிலிருந்து கூவிக்கொண்டும், பாடிக்கொண்டும் அதைக் கீழே உருட்டுவார்களாம். அது ஓகா நதியை அடைந்தால், யாரிலோவ் அவர்கள் காணிக்கையை ஏற்றுக்கொண்டுவிட்டார் என்றும், வேனிற் காலம் மனைகரமாக இருக்கும் என்றும், எங்கும் இன்பம் தழைத்தோங்கும் என்றும் பொருள்.

வண்ணத்திகளில் பெரும்பான்மையோர் யாரிலோவ் வயலில் குடியிருந்தனர். அவர்கள் எல்லோரும் சுறுசுறுப்பானவர்கள்; கூரிய நா படைத்தவர்கள். நகரவாசிகளைப்பற்றி அவர்களுக்கு எல்லாம் தெரியும். தாங்கள் துணி வெளுக்கும் வியாபாரிகளைப்பற்றியும், குமாஸ்தாக்களைப்பற்றியும், அதிகாரிகளைப்பற்றியும் அவர்கள் சொல்லுவதைக் கேட்கச் சுவாரஸ்யமாக இருக்கும். குளிர் காலத்தில் ஐஸைப் போன்றிருக்கும் ஜலத்தில் துணியை அலசுவது சொம்பக் கொடிய வேலை. பெண்களின் கைகள் விறைத்தன; தோல் வெடித்தது.

இடிந்து தகர்ந்த பழைய, மரக்கூரையால் பனியிலிருந்தும் காற்றிலிருந்தும் பாதுகாக்கப்பட்ட ஒரு கொட்டகையில் ஜலத்தொட்டிக்கு முன்னே அவர்கள் குனிந்து நிற்பர். அவர்கள் முகங்களைப் பனிப்புயல் கடித்தது ; அவர்கள் வலிக்கும் விரல்கள் மடிய மறுத்தன ; அவர்கள் கண்களிலிருந்து கண்ணீர் பெருகி ஓடிற்று. ஆனால் அவர்கள் ஓயாது பேசினர் ; அன்றுட நிகழ்ச்சிகளை ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டனர். அசாதாரண தீரத்துடன் நிலைமையையும், மக்களையும் ஏற்றனர்.

அவர்களில் மிக நன்றாகப் பேசக்கூடியவள் நடால்யா கோஸ்லோவாஸ்காயா. அவளுக்கு முப்பது வயதிற்கு மேலிருக்கும். புதுமையாகவும், பலத்துடனும் அவள் இருந்தாள். கேலி செய்யும் கண்களும், கூரிய நாக்கும் அவளுக்கு இருந்தன. அவள் பேசினால் மற்ற பெண்கள் கவனமாகக் கேட்பர். அவள் யோசனையை அவர்கள் நாடினர். அவள் வேலைத் திறனையும், அவள் உடை அணியும் பாணியையும் அவர்கள் பாராட்டினர். பள்ளிக்கூடத்திற்குத் தன் மகளை அனுப்பியதற்காகவும் அவளை அவர்கள் பாராட்டினர். சறுக்கும் பாதையிலே, இரண்டு கூடைகள் நிறைய ஈரத் துணியைச் சுமந்து கொண்டு அவள் குனிந்து நடந்து செல்லும்பொழுது, அவர்கள் சந்தோஷத்துடன் அவளை வரவேற்பர்.

" உன் மகள் எப்படி இருக்கிறாள் ?" என்று அவர்கள் கேட்பர்.

" அவள் சௌக்கியமாக இருக்கிறாள், கடவுள் கருணையால்."

" அவள் விரைவில் ஒரு சீமாட்டியாய்விடுவாள்."

" அதற்காகத்தான் நான் அவளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினேன். தங்கக் கூந்தல் சீமாட்டிக்கு எப்படிக் கிடைத்தது ? நம்மிடமிருந்து, பூமியிலே கழிசடைகளாகிய நம்மிடமிருந்து கிடைத்தது ! வேறு எங்கிருந்து ? விஷயம் தெரியத் தெரிய, அந்தஸ்தும் உயரும். இளமையையும், முட்டாள் தனத்தையும் தந்து கடவுள் நம்மை இந்த உலகத்திற்கு அனுப்பினர். ஆனால் வயோதிகத்துடனும், ஞானத்துடனும் உலகிலிருந்து நாம் விடைபெற வேண்டும் என்று அவர்

விரும்புகிறார். எனவே, படிப்பதும், விஷயங்களைத் தெரிந்து கொள்வதும் நமது கடமை.''

அவள் பேசியபொழுது எல்லோரும் மௌனம் சாதித்தனர். தன்னம்பிக்கையான, சரளமான அவள் பேச்சை அவர்கள் கவனமாகக் கேட்டனர். நேருக்கு நேராகவும், அவள் இல்லாத நேரத்திலும் அவளை அவர்கள் புகழ்ந்தனர். அவள் பலத்தையும், சகிப்புத்தன்மையையும், சாமர்த்தியத்தையும் கண்டு அவர்கள் வியந்தனர். ஆனால் அவளைக் காப்பியடிக்க யாரும் முயலவில்லை. முழங் கைவரையில் பாதுகாத்துக் கொள்ளவும், சட்டையின் கை நீளமாகவிருக்கவும் அவள் பூட்ஸ் தோலால் கவசங்கள் செய்தாள். அது சாமர்த்தியமான வேலை என்று எல்லோரும் சொன்னார்கள்; ஆனால் அது மாதிரி யாரும் செய்யவில்லை. நான் கவசத்துடன் தோற்றமளித்த பொழுது பெண்கள் என்னைக் கேலி செய்தனர்.

''ஓ! ஓ! பெண்ணிடமிருந்து கற்றுக்கொள்ளுகிறான்!''

அவள் புதல்வியைப்பற்றி அவர்கள் சொல்லுவர் :

''எவ்வளவு முக்கியமான இளம் சீமாட்டி! சீமாட்டிகள் ஜாப்தாவில் இன்னொருத்திகூட! அதனால் என்ன? ஒருக்கால் தனது படிப்பை அவள் பூர்த்தி செய்யாமல் போகலாம்— ஒருக்கால் அவள் இறந்துவிடலாம்.''

''படித்தவர்களின் வாழ்க்கை அவ்வளவு சுலபமான தல்ல. பக்கிலோவின் புதல்வியை எடுத்துக்கொள். அவள் எவ்வளவு காலம் படித்தாள்! இறுதியில் அவளுக்கு என்ன நேர்ந்தது? அவள் உபாத்தியாயினி ஆனாள். உபாத்தியாயினி என்றால், வயதான மங்கை என்று பொருள்.''

''அப்படித்தான். கைப்பற்றுவதற்கு உன்னிடம் ஏதாவது இருக்கும்வரையில், படிப்பு இல்லையென்றாலுங்கூட, மனிதன் உன்னைக் கைப்பற்றுவான்!''

''பெண்ணின் மூளை அவள் தலைக்குள் இல்லை!''

தங்களைப்பற்றி வெட்கமற்ற முறையில் இப்படி அவர்கள் பேசுவதைக் கேட்பது நூதனமாகவும், குழப்பம் தரக்கூடியதாகவும் இருந்தது. சிப்பாய்களும், மாலுமிகளும், சாக்கடை தோண்டுவோரும் பெண்களைப்பற்றி என்ன பேசினர் என்பது எனக்குத் தெரியும். தாங்கள் ஏமாற்றிய பெண்

களின் எண்ணிக்கையை ஆண்கள் பெருமையுடன் சொல்லுவதை நான் கேட்டிருக்கிறேன். "பாவாடைகள்" மீது அவர்களுக்கு விரோதம் இருந்தது என்பதை நான் உணர்ந்தேன். ஆனால் தனது வெற்றியைப்பற்றி ஒரு மனிதன் பேச ஆரம்பித்ததும், அவனது ஜம்பப் பேச்சிலே உண்மையைவிட மிகைப்படுத்திக் கூறும் தகவல்தான் அதிகம் இருக்கும் என்பது எனக்குத் தெரியும்.

தங்கள் தங்கள் காதல் விவகாரங்களைப்பற்றி வண்ணத்திகள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளவில்லை. ஆனால் ஆண்களைப்பற்றி அவர்கள் பேசியபொழுது, அவர்கள் பேச்சிலே தொனித்த கேலியும், பழிவாங்கும் உணர்ச்சியும், பெண்ணின் சக்தி மகத்தானது என்பதை ஊர்ஜிதம் செய்தன.

"பெண்களை ஒதுக்க ஒருவர் எவ்வளவுதான் முயன்றாலும், இறுதியில் அவர் பெண்ணிடம் வந்துதான் தீர வேண்டும்" என்று ஒரு நாள் நடாலியா சொன்னாள்.

"முற்றிலும் உண்மை" என்று கராகரத்த குரலில் ஒரு கிழவி கூவினாள். "நம்மிடம் வருவதற்காகப் பாதிரிகளும், களும் கடவுளைக்கூடக் கைவிட்டுவிடவில்லையா?"

சோப்பு நுரையின் விம்மலுக்கும், ஈரத் துணிகளைத் துவைக்கும் சத்தத்திற்கும் இடையே நடைபெற்ற இந்தப் பேச்சு, பனிக்கட்டிகூட அதிக நேரம் தங்க முடியாத நீர்க்காலுக்கு அடியிலிருந்து தூர்நாற்றம் வீசும் பொந்திலே நடைபெற்ற இந்தப் பேச்சு, எல்லா ஜனங்களுக்கும் எல்லா இனங்களுக்கும் பிறப்பளித்த பரம ரகசியத்தைப்பற்றி நடைபெற்ற வெட்கமற்ற, தர்மார்க்கமான இந்தப் பேச்சு, கூச்சம் கலந்து பிரிந்து நிற்கும் உணர்ச்சியை என்னிலே தூண்டிவிட்டது. என்னைச் சுற்றி நடைபெற்ற "காதல் விவகாரங்களிலிருந்து" என் சிந்தனையைத் திருப்பிவிட்டது இந்த உணர்ச்சி. "காதலுடன்" கிழத்தாமான, ஆபாசமான இந்த விவகாரங்கள் பிணைந்து, என் மனதில் நீண்ட காலம், பதிந்து கிடந்தது.

எனினும் வண்ணத்திகளுடன் நீர்க்காலிலும், அதிகாரிகளின் சமையற்காரர்களுடன் குசினியிலும், தொழிலாளர்

களுடன் நிலவறையிலும் நிலவிய வாழ்க்கை, வீட்டு வாழ்க்கையைவிட அதிகக் கவர்ச்சியளிக்கக் கூடியதாக இருந்தது. விறைத்துப்போன மாதிரியான பேச்சும், கருத்துக்களும், நிகழ்ச்சிகளும், மந்த உணர்ச்சியைத் தவிர வேறு எந்தவிதமான உணர்ச்சியையும் வீட்டிலே என் உள்ளத்தில் தூண்டிவிடவில்லை. உண்ணுதல், உறங்குதல், நோய்வாய்ப்படுதல், உண்ணவும் உறங்கவும் தயாராதல் ஆகிய சாரமற்ற பாணியிலே நடந்தது, என் எஜமானர்களின் வாழ்க்கை. சதா பாவத்தைப்பற்றியும், மரணத்தைப்பற்றியும் இவர்கள் பேசினர்; தூரிகல்லிலே அகப்பட்ட தானியம் நசுக்கப்படுவதை நினைத்துப் பயப்படுவதைப்போல், தாங்கள் நசுக்கப்படுவதைப்பற்றி இவர்கள் பயந்தனர்.

தனியே இருக்க வேண்டும் என்பதற்காக ஷெட்டுக்குச் சென்று ஓய்வு நேரத்தில் நான் விறகு வெட்டுவேன். ஆனால் அபூர்வமாகத்தான் நான் தனியே இருக்க முடியும். நான் அங்கே சென்றதும் அதிகாரிகளின் வேலைக்காரர்கள் அங்கு வந்து எங்கள் வட்டாரத்திலிருக்கும் ஜனங்களைப்பற்றிப் பேச ஆரம்பித்துவிடுவார்கள்.

அடிக்கடி யெர்மோக்கினே, அல்லது ஸிடோரோவோ அங்கே வருவார்கள். முதலவன் கலுகாவைச்சேர்ந்தவன்; உயரமானவன்; குறுகிய தோள் படைத்த மனிதன். அவன் தலை சிறிது. அவன் கண்கள் பளபளப்பாக இருந்தன. கனத்த தசைநார்களால் அவை பின்னப்பட்டிருப்பதாகத் தோன்றிற்று. அவன் சோம்பேறி; படுமுட்டான். அவன் அசைவு மந்தமாகவும், ஆபாசமாகவும் இருந்தன. பெண்ணைக் கண்டதும், முணுமுணுத்துக்கொண்டு அவள் கால்களில் விழுகிறவனைப் போல் அவன் முன்னே சாய்வான். சமையற்காரிகளையும், வீட்டு வேலைக்காரிகளையும் அவன் விரைவில் வென்றதை யாராலும் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் அவனைக் கண்டு பொறுமைப்பட்டனர்; கரடி போன்ற பலத்தைக் கண்டு வியந்தனர். தூலாவைச் சேர்ந்த ஸிடோரோவ் மெலிந்த, எலும்புக்கூடான மனிதன். தன் தோற்றத்தைக் கண்டு அவன் சதா வருந்தினான்; மிருதுவாகப் பேசினான்; கோழைத்தனமாக இருமினான். அவன் கண்கள் அசைந்தாடும் ஒளியால்

எரிந்தன. இருண்ட மூலைகளை அடிக்கடி அவன் பார்த்தான். தணிந்த குரலில் பேசும்பொழுதோ அல்லது மௌனமாக உட்கார்ந்திருக்கும்பொழுதோ, இருண்ட மூலைகளை அவன் பார்த்துக்கொண்டே இருப்பான்.

"நீ எதைப் பார்க்கிறாய்?"

"ஒருக்கால் சுண்டெலி வெளியே ஓடலாம். சுண்டெலிகளை நான் நேசிக்கிறேன்—அழகிய, சுறுசுறுப்பான பிராணி அது."

வேலைக்காரர்களுக்கு நான் கடிதங்கள் எழுதிக் கொடுத்தேன். அவர்கள் காதலிகளுக்கோ, அல்லது கிராமத்திலிருந்த அவர்கள் குடும்பங்களுக்கோ. இந்த வேலை எனக்கு மகிழ்ச்சி அளித்தது; குறிப்பாக ஸிடோரோவுக்குக் கடிதம் எழுதிக் கொடுப்ப தென்றால், எனக்கு சொம்பக் குஷி. சனிக்கிழமை தோறும் தூலாவில் வசித்த தன் சகோதரிக்கு அவன் கடிதம் எழுதுவான்.

குசினிக்கு அவன் என்னை அழைப்பான். கூஷவரம் செய்யப்பட்ட தன் தலையை வேகமாகத் தடவிக்கொண்டு மேஜைக் கருகில் எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்து என் காதுகளில் தணிந்த குரலில் அவன் சொல்லுவான்:

"நல்லது, நாம் ஆரம்பிக்கலாம். முதலில், வழக்கமாக எழுதுவதைப்போல்—'என் மதிப்புக்குரிய சகோதரிக்கு! நிரந்தரமாக நீ தேகாரோக்கியத்துடன் இருப்பாயாக!'—இத்தியாதி—இத்தியாதி. எழுதிவிட்டாயா? நல்லது. இப்பொழுது எழுது: 'நீ அனுப்பிய ரூபிள் கிடைத்தது. ஆனால் இப்படி நீ செய்யக் கூடாது. இதற்காக உனக்கு என் நன்றி. எனக்கு ஒன்றும் தேவையில்லை. நான் இங்கே நன்றாகவா வாழுகிறேன்? நாம் நன்றாக வாழவே இல்லை. நாம் நாய்களைப் போல் வாழுகிறோம். ஆனால் அவளுக்கு இதைச் சொல்ல வேண்டாம். எழுது: 'நாங்கள் நன்றாக வாழுகிறோம்.' இன்னும் அவள் குழந்தை. அவளுக்குப் பதினாறு வயதுதான் ஆகிறது. அவளுக்கு எல்லாம் ஏன் தெரிய வேண்டும்? இனி எப்படி எழுத வேண்டுமென்று உனக்குக் கற்றுக்கொடுத்தார்களோ அப்படி எழுது."

என் தோளில் அவன் சாய்ந்தான். என் முகத்தில் பரிமளம் வீசுமாறு மூச்சுவிட்டான். தணிந்த குரலில் அவன் வற்புறுத்தினான் :

"தன்னைத் தழுவவோ, ஸ்தனங்களைத் தொடவோ, அல்லது வேறு காரியங்கள் செய்யவோ வாலிபர்களை அனுமதிக்கக் கூடாது என்று அவளுக்கு எழுது, எழுது : 'உன்னிடம் யாராவது மிருதுவாகப் பேசினால், அவளை நம்பாதே. உன்னை ஏமாற்றவும், அழிக்கவும் அவன் விரும்புகிறான் !"

இருமாதிருக்க அவன் பெரு முயற்சி செய்தான். அவன் வெளிறின முகம் சிவந்தது ; அவன் கன்னங்கள் வீங்கின ; கண்களிலே கண்ணீர் நிறைந்தது. நாற்காலியிலே கூனிக் குறுகி உட்கார்ந்து அவன் என்மேல் இடித்தான்.

"என் கையைத் தட்டுகிறாயே !"

"பாதகமில்லை, நீ எழுது : "எல்லோரையும்விடக் கனவான்கள் விஷயத்தில் ரொம்ப ஜாக்கிரதையாக இரு. கண்ட மாத்திரத்திலேயே அவர்கள் பெண்ணை ஏமாற்றிவிடுவார்கள். எப்படிப் பேச வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும். எதையும் அவர்கள் சொல்லலாம். அவர்கள் பேச்சை நீ நம்பினால், விபசார விடுதியைத் தவிர உனக்குப் போக்கிடம் வேறு இருக்காது. ஒரு ரூபிள் நீ மிச்சமாக்கினால், அதைப் பாதிரியிடம் கொடு. அவன் நல்லவனாக இருந்தால், அதை உனக்காகப் பத்திரமாக வைத்திருப்பான். ஆனால், அதை பூமியிலே புதைத்து வைப்பது ரொம்ப நல்லது. நீ புதைப்பதை யாரும் பார்க்கக் கூடாது ; எங்கே புதைத்தாய் என்பது நன்றாக ஞாபகமிருக்க வேண்டும்."

அவன் பேச்சைக் கேட்பது வேதனை தரத்தக்கது. அவன் தணிந்த பேச்சை மேலே இருந்த ஜன்னலின் கில்கள் கிரீச்சிடும் சத்தம் அமிழ்த்திற்று. தூசி படிந்த அடுப்பையும், ஈக்கள் நிறைந்த பாத்திரப் பீரோவையும் நான் கடைக் கண்ணால் பார்த்தேன். சுசினி ரொம்ப அசுத்தமாக இருந்தது. மூட்டைப் பூச்சிகளும், புகைக் கறையும், கிரீஸ் நாற்றமும் அங்கே வீசின. கரப்பான் பூச்சிகள் அடுப்பிலே பாய்ந்து விளையாடின. என் ஆத்மா பாழ்பட்டுக் கிடந்தது. அந்த அப்பாவி சிப்பாய்க்காகவும், அவன் சகோதரிக்காகவும் நான்

அழுதிருப்பேன். இத்தகைய வாழ்க்கை எப்படி வாழ முடிகிறது?

ஸிடோரோவின் முணுமுணுப்பைப் பொருட்படுத்தாமல், நான் எழுதினேன். வாழ்க்கை எவ்வளவு மந்தமானது, வேதனை நிறைந்தது என்பதை நான் வர்ணித்தேன். நெடுமூச்சு விட்டுக்கொண்டு, அவன் சொன்னான்:

"நீ ரொம்ப எழுதிவிட்டாய். வந்தனம். எதற்குப் பயப்படவேண்டும் என்பது இப்பொழுது அவளுக்குத் தெரியும்."

"எதற்கும் நீ பயப்படக் கூடாது" என்று கோபத்துடன் நான் சொன்னேன்; நானே பலதைப் பயந்தேன். என்றாலும், சிரித்துவிட்டு, சிப்பாய் கனைத்தான்.

"முட்டாள்தனம்! பயப்படாமல் எப்படி இருக்க முடியும்? கனவான்களின் விஷய மென்ன? கடவுளின் விஷய மென்ன? இன்னும் பல விஷயங்க ளென்ன?"

தன் சகோதரியிடமிருந்து கடிதம் வந்தால், அவன் ஆசையுடன் சொல்லுவான்:

"தயவுசெய்து சீக்கிரம் படித்துக் காட்டு" என்று.

படிக்க முடியாதபடி மிகச் சுருக்கமாகவும், மந்தமாகவும் இருந்த அந்தக் கடிதத்தை மும்முறை படித்துக் காட்டுமாறு என்னைச் செய்துவிடுவான்.

அவன் அன்புள்ளவன்; இளகிய உள்ளம் படைத்தவன். ஆனால் பெண்கள் சம்பந்தப்பட்டவரையில் மற்றவர்களைப் போல் முரட்டுத்தனமாகவும் காட்டுமிராண்டித்தனமாகவும் அவனும் நடந்துகொண்டான். தன்னிச்சையாகவும், தற்செயலாகவும் என் கண்முன்னே நடந்தவைகளை நான் கண்ட பொழுது, சிப்பாய்க்கு உள்ள கடினமான வாழ்க்கையை விவரித்து, பெண்ணின் அனுதாபத்தைத் தூண்டி, பிறகு நடிப்பு நேசத்துடன் தன் தலையை ஸிடோரோவ் திருப்புவது, பெண்ணைக்கவர அவன் கையாளும் தந்திரம் என்பதை நான் தெரிந்து கொண்டேன். ஆனால் யெர்மோக்கினிடம் தான் பெண்ணை ஏமாற்றிய கதையை அவன் சொல்லும்பொழுது, காறித் துப்பிவிட்டு, முகத்தைக் கோணலாக வைத்துக்கொள்வான், கசப்பானஒருமாத்திரையைச்சாப்பிட்டவனைப்போல். இதுஎன்னைப்

பெரிதும் புண்படுத்திற்று. அவர்கள் ஏன் பொய் சொல்லி, ஏமாற்றி, பெண்களை விளையாட்டுக் கருவிகளாக்குகிறார்கள் என்று அந்தச் சிப்பாயை நான் கேட்டேன்; அவர்கள் ஏன் பெண்களைக் கைமாற்றிக்கொள்ளுகிறார்கள் என்றும் கேட்டேன்; அடிக்கடி ஏன் அடிக்கிறார்கள் என்றும் கேட்டேன்.

அவன் சிரித்துவிட்டு, மிருதுவாகச் சொன்னான்:

"அத்தகைய விஷயங்களை நீ கவனிக்காதே! அவை கெட்டவை; பாவமானதும்கூட. நீ சொம்பச் சின்னவன். இதைத் தெரிந்துகொள்ள இன்னும் உனக்கு வயதாகவில்லை."

ஆனால், ஒரு நாள் எனக்குத் திட்டமான பதில் கிடைத்தது. அதை நான் மறக்கவே இல்லை.

"நான் அவளை ஏமாற்றுகிறேன் என்று அவளுக்குத் தெரியாது என்று நினைத்தாயா?" என்று கண்ணைச் சிமிட்டிக் கொண்டும், இருமிக்கொண்டும் கேட்டான் அவன். "இது அவளுக்குத் தெரியும்! நான் அவளை ஏமாற்ற வேண்டும் என்று அவள் விரும்புகிறாள். இத்தகைய விஷயங்களில் எல்லோரும்தான் பொய் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு வெட்கம். ஏனெனில் யாரும் யாரையும் உண்மையில் காதலிப்பது இல்லை; வேடிக்கைக்காக இதைச் செய்கிறார்கள். இது வெட்கமானது. கொஞ்சம் பொறு; நீயே இதைத் தெரிந்து கொள்வாய். இரவில் இதைச் செய்ய வேண்டும்; அல்லது பகலாக இருந்தால் மரக்கிடங்கு போன்ற இருண்ட மூலையில் ஒளிந்துகொள்ள வேண்டும். இதற்காகத்தான் ஆதாமையும் ஏவாளையும் கடவுள் சொர்க்கத்திலிருந்து துரத்தினார்; இதனால்தான் எல்லோரும் சந்தோஷ மற்றிருக்கிறார்கள்."

இதை சொம்ப நன்றாக, சோகத்துடனும், பச்சாதாபத்துடனும் அவன் சொன்னதால், அவன் "விவகாரத்தை" இது ஓரளவு ஈடுசெய்தது. யெர்மோக்கினிடம் பழகியதைவிட இவனிடம் நான் அதிகம் நெருங்கிப் பழகினேன். யெர்மோக்கினை நான் வெறுத்தேன்; சாத்தியமானபொழு தெல்லாம் அவனைக் கேலி செய்தேன். என் முயற்சி பலனளித்தது. பலாத்கார நோக்கத்துடன் அவன் என்னை அடிக்கடி துரத்து

வான். ஆனால் சாதாரணமாக அவன் விகாரரூபம் இதற்குக் குறுக்கே நின்றது.

"இது தடுக்கப்பட்டது" என்றான் ஸிடோரோவ்.

இது தடுக்கப்பட்டது என்பது எனக்குத் தெரியும். ஆனால் மனிதனுடைய துயரத்திற்கு இதுதான் காரண மென்று நான் நினைக்கவில்லை. ஏனெனில் காதலர்களின் கண் களிலே அசாதாரண ஒளியை நான் கண்டிருக்கிறேன். காத லர்களின் அசாதாரண உதார குணத்தையும் நான் கண்டிருக் கிறேன். காதலிலே பிறந்த இதயத்தின் களிப்பைக் காணக் குதூகலமாக இருந்தது.

ஆனால் என் ஞாபகப்படி அன்றுடம் நான் கண்ட வடி வத்திலும், உறவிலும் மறைந்துகிடந்த அந்தக் கால வாழ்க்கை மந்தமாகவும், குரூரமாகவும் இருந்தது. மாறவே மாறுத, என்னை எதிர்கொண்ட, அன்று இயங்கிய வாழ்க்கையைவிட நல்ல வாழ்க்கை சாத்திய மென்று என்னால் நினைக்கக்கூட முடியவில்லை.

ஆனால் என்னை அசைத்த ஒரு விஷயத்தை ஒரு நாள் சிப்பாய்கள் எனக்குச் சொன்னார்கள். நகரிலேயே சிறந்த தையற்கடையில் தையற்காரராக வேலை செய்யும் ஒருவர் ஒரு வீட்டில் வசிக்கிறாராம். அவர் அமைதியான, ஆடம்பரமற்ற மனிதராம். அவர் ரஷியரல்லவாம். அவர் மனைவி, குழந்தைகள் இல்லாத சிறிய பெண். நாள் முழுதும் அவள் புத்தகங்கள் படிக்கிறாள். எங்கள் வட்டாரத்திலே எழுந்த கூச்சலுக்கு மத்தியில், எங்கள் வீட்டிலே வசித்த குடிகாரர்களுக்கு மத்தி யில் அவர்களை யாரும் காணவில்லை; அவர்களைப்பற்றிக் கேள் விப்படவும் இல்லை. அவர்கள் யாருக்கும் விருந்திடவில்லை; விடுமுறை நாட்களில் தியேட்டருக்குச் செல்வதைத் தவிர வேறு எங்கும் செல்லவுமில்லை.

அதிகாலையிலிருந்து இரவு வெகு நேரம்வரையில் வேலை செய்யுமிடத்தில் கணவன் இருப்பான். பாலுவ மங்கையைப் போன்றிருந்த அவன் மனைவி, பிற்பகலில் வாரத்திற்கு இரு முறை வாசகசாலைக்குச் செல்வாள். கொஞ்சம் நொண்டி நொண்டி, மெதுவாக அடி எடுத்து வைத்து அவள் வீதியிலே

செல்வதை நான் அடிக்கடி கண்டிருக்கிறேன். தன் சிறிய கரங்களிலே சுத்தமான கையுறைகள் அணிந்துகொண்டு, பையிலிருந்த புத்தகங்களைப் பள்ளிச்சிறுமிகளைப்போல் வீசிக்கொண்டு அவள் நடப்பாள். எளியவளாக, புதியவளாக, சுத்தமானவளாக அவள் தோற்றமளித்தாள். சுறுசுறுப்பான சிறிய கண்களும், பறவையின் முகத்தைப் போன்ற முகமும் அவளுக்கு இருந்தன. பலகைமீது வைக்கப்பட்ட சீனப் பொம்மையைப் போன்று அவ்வளவு அழகாக இருந்தாள் அவள். அவளுடைய வலதுபுற விலாவலும்பு முறிந்துவிட்டதென்றும், அதனால்தான் அவள் நொண்டுகிறாளென்றும் சிப்பாய்கள் சொன்னார்கள். ஆனால் அவள் நொண்டி நடந்தது எனக்குப் பிடித்திருந்தது. எங்கள் பகுதியிலே வசித்த அதிகாரிகளின் மனைவிகளிலிருந்து அது அவளை வேறுபடுத்திக் காட்டிற்று. அவர்கள் கீச்சுக் குரலில் பேசினார்கள்; நல்ல ஆடைகள் அணிந்திருந்தார்கள்; என்றாலும், வேண்டாத பொருள்களைக் குவித்து வைக்கும் இருண்ட மூலையில் அவர்களும் மற்றவர்களால் நீண்ட காலத்திற்கு முன்னரே மறக்கப்பட்டு, குப்பையிலே அழுந்திக் கிடப்பதைப்போல், கிழவிகளாகவும், தேய்ந்தவர்களாகவும் அந்தப் பெண்கள் காணப்பட்டனர்.

அண்டை வீட்டுக்காரர்கள் தையற்காரனின் மனைவியைச் சாதாரண நிலையிலுள்ள ஒரு பெண்ணாகக் கருதவில்லை. படித்துப் படித்து அவளுக்கு மூளை குழம்பிவிட்டதால், வீட்டு வேலைகளை அவளால் கவனிக்க முடியவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். கணவனை மார்க்கெட்டுக்குச் சென்றான்; சமையற்காரிக்கு உத்தரவுகள் கொடுத்தான். பருமனான, கடுகடுப்பான, அன்னியநாட்டுப் பெண், அந்தச் சமையற்காரி. அவளுடைய ஒரு கண் வீங்கி, அதிலிருந்து சதா நீர் வடிந்துகொண்டிருந்தது. மற்றொரு கண் இருக்க வேண்டிய இடத்திலே சிறிய ஊதாநிறக் கீறல் இருந்தது. மாட்டிறைச்சிக்கும் கன்றிறைச்சிக்கும் உள்ள வித்தியாசம் வீட்டு எஜமானிக்கு தெரியாது என்றும் அவர்கள் சொன்னார்கள். ஒரு நாள் பூண்டு வாங்குவதற்குப் பதிலாக முள்ளங்கி வாங்கி அவள் அவமானம் அடைந்தாள்.

இந்த அவமானத்தை நினைத்துப் பாருங்கள்!

அந்த வீட்டிற்கு அந்த மூவரும் பொருத்தமானவர் களல்ல. பெருங்காற்றிலிருந்து தப்புவதற்காக அசுத்தமான, காற்றோட்ட மில்லாத வீட்டிற்குள் ஜன்னல் வழியாகச் சென்ற பறவைகளைப்போல், அவர்கள் தற்செயலாக அந்த இடத்திற்கு வந்திருக்கின்றனர்.

தையற்காரரின் மனைவியிடம் அதிகாரிகள் கீழ்த்தரமாக நடந்துகொள்கிறார்கள் என்று அதிகாரிகளின் வேலைக்காரர்கள் என்னிடம் சொன்னார்கள். அவள் அழகை வியந்தும், அவள் மீது தனக்குள்ள காதலையும், அவளை நினைத்துத் தனது நெஞ்சு படும் அவதியையும் வர்ணித்து அவர்களில் ஒருவன் தினசரி அவளுக்குக் கடிதம் எழுதினானும். தன்னைத் தொந்தரவு செய் யாமல் இருக்குமாறும், தன்னால் அவர்களுக்கு மனவேதனை ஏற்பட்டதற்காகத் தான் வருந்துவதாகவும், இந்தப் பந்தத்தி லிருந்து அவர்களை விடுக்குமாறு கடவுளைப் பிரார்த்திப்பதாக வும் அவள் பதில் எழுதினாளாம். இந்தப் பதில் கிடைத்ததும், அதை அதிகாரிகள் கூட்டாகப் படித்தார்களாம்; வாய்விட்டுச் சிரித்தார்களாம்; கூட்டாக அவளுக்கு இன்னொரு கடிதம் எழுதி, அதில் அவர்களில் ஒருவன் கையெழுத்திட்டானும்

இதைச் சொல்லிவிட்டு, வேலைக்காரர்களும் சிரித்தனர். அந்தப் பெண்ணை அவர்களும் கண்டித்தனர்.

" மூட்டாள் தனமான, சிறிய நொண்டி " என்று தனது கனத்த குரலில் யெர்மோக்கின் சொன்னான்.

" தங்களை ஏமாற்ற வேண்டும் என்று எல்லாப் பெண் களும் விரும்புகின்றனர் " என்றான் ஸிடோரோவ். " அவர் களுக்கு விஷயம் புரியும்."

தன்னை அவர்கள் கேலி செய்கிறார்கள் என்பது தையற் காரனின் மனைவிக்குத் தெரியு மென்பதை நான் நம்பவில்லை. எனவே அவளுக்கு விஷயத்தைச் சொல்ல நான் முடிவு செய் தேன். ஒரு நாள் அவள் சமையற்காரன் நிலவறைக்குச் செல் வதை நான் கண்டேன். உடனே கொல்லை வழியாக அந்தப் பெண்ணின் வீட்டிற்குச் சென்றேன். முதலில் குசினியில் பிரவேசித்தேன். அது காலியாக இருந்தது. பிறகு சாப்பாட்டு அறைக்குச் சென்றேன். ஒரு கையில் தங்கக் கோப்பையும், இன்னொரு கையில் புத்தகமும் வைத்துக்கொண்டு மேஜைக்கு

முன்னே தையற்காரரின் மனைவி உட்கார்ந்திருந்தாள். பயத்தால் அவள் புத்தகத்தை மார்பில் அணைத்துக்கொண்டாள். பிறகு தணிந்த குரலில் கூவினாள் :

"யார் அது ? அகஸ்டா ! நீ யார் ?"

புத்தகத்தையோ, கோப்பையையோ என்மீது அவள் எறிவதை எதிர்பார்த்துக்கொண்டு, நான் குழப்பத்துடன் வார்த்தைகளை உதிர்த்தேன். பெரிய சாய்வு நாற்காலியில் அவள் உட்கார்ந்திருந்தாள் ; அழகிய வேலைப்பாடுகள் அமைந்த நீல கௌன் அணிந்திருந்தாள். தொண்டையிலும், மணிக்கட்டுகளிலும் லேஸ் கட்டுக்கொண்டிருந்தாள். அவள் கூந்தல் அலை அலையாக அவள் தோள்களில் விழுந்து கிடந்தது. கோயிலிலிருக்கும் தேவ கன்னிகையைப் போன்றிருந்தாள் அவள். நாற்காலியிலே சாய்ந்துகொண்டு அவள் கோபத்துடன் தன் வட்டக் கருவிழிகளால் என்னைப் பார்த்தாள். விரைவில் அவள் தோற்றம் மாறி, அவள் புன்னகை புரிந்தாள்.

அவளிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டு, நான் போக ஆரம்பித்தேன்.

"நில் !" என்றாள் அவள்.

கோப்பையைத் தட்டில் வைத்தாள்; புத்தகத்தை மேஜை மீது எறிந்தாள். பிறகு கைகளைக் கட்டிக்கொண்டு வயது வந்தவரின் குரலில் சொன்னாள் :

"நீ ரொம்ப நூதனமான பையன் ! இங்கே வா !"

தயக்கத்துடன் நான் அவளை அணுகினேன். என் கையைப் பிடித்து, தன் குளிர்ந்த விரல்களால் என் கையை வருடினாள்.

"இதை என்னிடம் சொல்ல உன்னை யாரும் அனுப்பவில்லை, அல்லவா ?" என்று அவள் கேட்டாள். "ரொம்ப நல்லது—நான் உன்னை நம்புகிறேன். நீயே இந்த முடிவுக்கு வந்திருக்கிறாய்."

என் கையை விட்டுவிட்டு, தன் கண்களை மூடிக்கொண்டு வேதனை கலந்த மிருதுவான குரலில் அவள் சொன்னாள் :

"அந்தக் கேவலமான சிப்பாய்கள் என்னைப்பற்றி இப்படியா பேசிக்கொள்ளுகிறார்கள் !"

"நீங்கள் வேறு இடத்திற்குப் போய்விடுங்கள்" என்று நான் பரவசத்துடன் உபதேசம் செய்தேன்.

"ஏன்?"

"அவர்கள் உங்கள் அழிவுக்குக் காரணமாக இருப்பார்கள்."

அவள் உல்லாசமாகச் சிரித்தாள்.

"நீ படித்திருக்கிறாயா?" என்று கேட்டாள். "புத்தகங்கள் படிக்க நீ விரும்புகிறாயா?"

"படிக்க எனக்கு நேரமில்லை."

"விரும்பினால், உனக்குப் படிக்க நேரம் கிடைக்கும். நல்லது, சொம்ப வந்தனம்."

தன் விரல்களுக்கிடையே ஒரு வெள்ளி நாணயத்தை வைத்துக்கொண்டு அவள் கையை நீட்டினாள். இந்தச் சன்மானத்தைப் பெற எனக்கு வெட்கமாக இருந்தது. எனினும் அதை நிராகரிக்க எனக்குத் துணிவில்லை. திரும்பும்பொழுது அந்த நாணயத்தைமாடிப்படிக் கம்பத்தில் வைத்துவிட்டேன்.

புதிய உணர்ச்சி என்னை ஆட்கொண்டது. திடீரென்று பொழுதுவிடிந்ததைப் போன்றிருந்தது எனக்கு. அந்த விஸ்தாரமான அறையையும், நீல உடை அணிந்து தேவகன்னியைப் போன்று தோன்றிய தையற்காரனின் அழகிய மனைவியையும் நினைத்துப் பார்க்கும் இன்பத்திலே பல தினங்களை நான் கழித்தேன். அங்கே இருந்த அனைத்தும் அழகாகவும் விசித்திரமாகவும் இருந்தன. தங்க ஜமக்காளம் அவள் காலுக்குக் கீழே கிடந்தது. அவள் சன்னிதானத்திலே தன்னை வெப்பமாக்கிக்கொள்வதற்காக, சரத் காலம் வெள்ளி மயமான ஜன்னல் மூலம் உள்ளே எட்டிப் பார்த்தது.

அவளை இன்னொரு தரம் பார்க்க எனக்கு ஆசையாக இருந்தது. ஒரு புத்தகம் வேண்டும் என்று அவளைக் கேட்டால் என்ன?

நான் போனேன். அன்று கண்ட இடத்திலேயே கையில் புத்தகத்துடன் அவள் உட்கார்ந்திருந்தாள். ஆனால் இந்த முறை முகத்திலே ஒரு கைக்குட்டையை அவள் கட்டிக் கொண்டிருந்தாள். அவளுடைய ஒரு கண் வீங்கி யிருந்தது. ஒரு புத்தகத்தை என்னிடம் கொடுத்து, எனக்குப் புரியாத

எதையோ சொன்னாள். நறுமணம் வீசிய அந்தப் புத்தகத்தை நான் வருத்தத்துடன் எடுத்துச் சென்றேன். என் எஜமானர்கள் கண்டுபிடித்து,அதை நாசமாக்காம லிருக்கும் பொருட்டு, ஒரு காகிதத்திலும், சுத்தமான ரவிக்கையிலும் அதைச் சுற்றி, மச்சில் நான் ஒளித்துவைத்தேன்.

உடைத் தினுசுகளைத் தெரிந்துகொள்ளவும், அத்துடன் வரும் நினைவு வெகுமதிகளைப் பெறவும், அவர்கள் நீவா பத்திரிகைக்குச் சந்தா செலுத்தினர். அவர்கள் அதைப் படிப்பதே இல்லை. அதிலிருந்த படங்களைப் பார்த்துவிட்டு, படுக்கை அறையிலிருந்த மேஜைமீது வைத்துவிடுவர். வருடக் கடைசியில் அவைகளைப் பைன்ட் செய்து, பிக்சர் ரேவ்யூ பத்திரிகைகளுடன், பைன்ட் செய்யப்பட்ட நீவா மாசிகையையும் மெத்தைக்கடியில் ஒளித்துவைப்பர். படுக்கையறைத் தரையை நான் கழுவியபொழுதெல்லாம், அழுக்கு ஜலத்தில் அவை ஊறின. ரஷியன் கோரியர் என்னும் பத்திரிகைக்கும் என் எஜமானர் சந்தா செலுத்தினர்.

"இந்த மாதிரி விஷயங்களை அவர்கள் ஏன் எழுதுகிறார்கள் என்பது அந்தச் சைத்தானுக்குத்தான் தெரியும்" என்று மாலையில் அதைப் படிக்கும்பொழுது என் எஜமானர் சொல்லுவார். "எவ்வளவு மந்தமாக இருக்கிறது!"

துணிகளைச் சனிக்கிழமை மச்சில் காயவைத்தபொழுது, புத்தகத்தின் ஞாபகம் எனக்கு வந்தது. அதை வெளியே எடுத்து, துணியை அவிழ்த்து, முதல் வரியைப் படித்தேன்:

"வீடுகள் ஜனங்களைப் போன்றவை. ஏனெனில் ஒவ்வொருவர் உடற்கூறும் வெவ்வேறு விதமானது."

இந்த வரியிலே பொதிந்துகிடந்த உண்மை என்னைக் கவர்ந்தது. நான் தொடர்ந்து படித்தேன். குளிர் என்னை அங்கிருந்து துரத்தும்வரையில் படுக்கையறை ஜன்னலில் உட்கார்ந்து நான் புத்தகத்தைப் படித்தேன். அன்று மாலை என் எஜமானர்கள் கோயிலுக்குச் சென்றபொழுது, புத்தகத்தைக் குசினிக்கு எடுத்துச் சென்று, படிப்பிலே நான் மூழ்கினேன். மாறுபட்ட பெயர்களும், உறவுகளும் கொண்ட இன்னொரு உலகத்திற்கு அது என்னை அழைத்துச் சென்றது. அதுவரையில் எனக்குப் பழக்கமில்லாத தலைசிறந்த வீரர்களை

யும், மிகக் கீழ்த்தரமான மனிதர்களையும் அங்கே நான் கண்டேன். நூதனமான மக்களும், சம்பவங்களும் நிறைந்த விறுவிறுப்பான வாழ்க்கையை வர்ணிக்கும் டே மோன்டேபின் எழுதிய நீண்ட நாவல் அது. வரிகளுக்கிடையே மறைந்து கிடக்கும் ஒளி நல்லதையும் கெட்டதையும் சுட்டுவதைப் போன்று, நேசிக்கவும் வெறுக்கவும் வாசகர்களுக்கு உதவி புரிவதைப் போன்று, சிக்குண்ட நிகழ்ச்சிச் சுழலிலே இந்த ஜனங்களெல்லாம் நடத்திச் செல்வதைப்போன்று, அந்த நாவலில் எல்லாம் வியக்கத்தக்க விதத்தில் தெளிவாக இருந்தன. ஒருவனுக்கு உதவிபுரிய வேண்டும் என்னும் எண்ணமும், இன்னொருவனுக்கு இடைஞ்சல் புரிய வேண்டும் என்னும் எண்ணமும் உள்ளத்திலே எழுந்தன. எதிர்பாராத விதத்தில் விரிந்த இந்த வாழ்க்கை காகிதத்தில்தான் இயங்கிற்று என்பதை வாசகர்கள் எளிதில் மறந்துவிடுவார்கள். உண்மையில் மோதல் என்னும் சுழற்சியிலே எல்லாம் மறக்கப்பட்டன ; ஒரு நிமிடம் இன்பத்தால் உள்ளம் நிறைந்தது; மறு நிமிடம் நிராசை உள்ளத்தைப் பீடித்தது.

நான் படிப்பிலே மூழ்கிக் கிடந்ததால், கதவு மணி அடித்ததும், யார் அடிக்கிறார், எதற்காக அடிக்கிறார் என்பதை முதலில் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

மெழுகுவத்தி பூராவும் ஏறக்குறைய எரிந்துவிட்டது. அன்று காலை நான் மெருகுபடுத்திய வத்தி - தாங்கியிலே அரக்கு ஒட்டியிருந்தது. விக்கிரகத்திற்கு முன் எரிந்துகொண்டிருந்த விளக்கை அணையாமல் பார்த்துக்கொள்வது என் வேலை. ஆனால் அது அணைந்துவிட்டது. அடுப்புக்கு அருகில் புத்தகத்தை ஒளித்துவைத்தும், விளக்கை ஏற்றியும் என் குற்றத்தை மறைப்பதற்காக நான் குசினியில் அங்குமிங்கும் பாய்ந்தேன்.

"நீ செவிடனா ? மணியோசை உனக்குக் கேட்கவில்லையா ?" என்று படுக்கை யறையிலிருந்து ஓடிவந்த தாதி கூவினாள்.

வாசற்கதவை நோக்கி நான் விரைந்து சென்றேன்.

"தூங்கினையா ?" என்று என் எஜமானர் கடுமையாகக் கேட்டார். என்னால் ஜலதோஷம் தனக்குப் பிடித்துவிட்டது

என்று அவர் மனைவி சொன்னாள். பிறகு அவர் தாயார் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தாள். குசினிக்கு வந்ததும், எரிந்த மெழுகுவத்தியை அவள் கண்டுவிட்டாள். எனவே நான் என்ன செய்துகொண்டிருந்தேன் என்று என்னை அவள் கேட்டாள்.

புத்தகத்தை அவள் கண்டுபிடித்துவிட்டால் என் செய்வது என்ற அதிர்ச்சியால் ஏற்பட்ட பயம், என்னை உயரத்திலிருந்து விழுந்ததைப் போன்று, ஊமையாக்கிவிட்டது. அவர்கள் ஜாக்கிரதையாகக் கண்காணிக்கவில்லை யென்றால், நான் வீட்டையே எரித்துவிடுவேன் என்று கிழவி கூவினாள். என் எஜமானரும், எஜமானியும் சாப்பிடவந்தபொழுது அவள் சொன்னாள் :

" இதோ பார், ஒரு மெழுகுவத்தி பூராவையும் அவன் எரித்துவிட்டான். இனி வீட்டையே எரித்துவிடுவான்."

சாப்பாட்டு நேரத்தில் நால்வரும் என்னைக் கண்டித்தனர். தெரிந்தும், தெரியாமலும் நான் செய்த சகல குற்றங்களையும் நினைவுபடுத்தி, என் முடிவு மோசமானதாக இருக்கும் என்று எச்சரித்தனர். ஆனால் விரோதத்தாலோ, கருணையாலோ தூண்டப்பட்டு அவர்கள் இப்படிப் பேசவில்லை யென்பதும், சலிப்பால் அவர்கள் இப்படிப் பேசினர் என்பதும் எனக்குத் தெரியும். அந்தப் புத்தகத்தில் காணப்பட்டவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, இவர்கள் மிகச் சாதாரணமானவர்களாகக் காணப்பட்டனர்.

வயிறுமுட்ட உண்ட பிறகு, களைப்புடன் அவர்கள் படுக்கச் சென்றனர். கடவுளிடம் முறையிட்ட பிறகு, அடுப்பின் மீது ஊர்ந்து சென்றாள் கிழவி. அதன் பிறகு அவள் மௌனியாய்விட்டாள். எனவே அடுப்புக்கு அருகில் வைத்திருந்த புத்தகத்தை எடுத்துக்கொண்டு, ஜன்னலில் போய் உட்கார்ந்தேன். பூரண சந்திரன் ஒளிபட்டு இரவு பிரகாசமாக இருந்தது. எனினும் அந்தச் சிறிய எழுத்தைப் படிக்க முடியவில்லை. படிக்க வேண்டும் என்ற ஆசையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. பீரோவிலிருந்து ஒரு தட்டை எடுத்து, சந்திரன் ஒளியைப் புத்தகத்தை நோக்கித் திருப்பினேன். ஆனால் இதனால் இருள் மேலும் அதிகரித்தது. பிறகு மூலையிலிருந்த பெஞ்சின்மீது ஏறி நின்று, விக்கிரகத்திற்கு முன் எரிந்து

கொண்டிருந்த விளக்கொளியில் படித்தேன். கூப்பால் நான் பெஞ்சில் படுத்து உறங்கிவிட்டேன். கிழவியின் கூச்சலும், அடிகளும் என்னை எழுப்பின. காலணி இல்லாமல், கோபத்துடன் தலையை ஆட்டிக்கொண்டு, கோபத்தால் முகம் சிவக்க, தன் கையிலிருந்த என் புத்தகத்தால் என் தோள்களில் அடித்தாள் அவள்.

" கூச்சலிடாதே, அம்மா !" என்று கட்டிலில் இருந்த வாறு ஓலமிட்டான் விக்டர். "உன்னுடன் வசிப்பதே அசாத்தியம்."

" புத்தகம் அழியப்போகிறது. அவள் அதைக் கிழித்து விடுவாள் " என்று நினைத்தேன் நான்.

காலையில் என்னிடம் விளக்கம் கேட்டார்கள்.

" அந்தப் புத்தகம் உனக்கு எங்கிருந்து கிடைத்தது ?" என்று கடுமையாகக் கேட்டார் என் எஜமானர்.

என்னைப் பார்த்துக் கூச்சலிடுவதிலே பெண்கள் போட்டியிட்டனர். அந்தப் புத்தகத்தை எடுத்து முகர்ந்து பார்த்தான் விக்டர்.

" இந்தப் புத்தகம் மணக்கிறது !" என்றான் அவன்.

அது பாதிரியின் புத்தகம் என்று நான் சொன்னதும், அதை ஆச்சரியத்துடன் ஆராய்ந்தனர். பாதிரி நாவல் படிப்பதை அறிந்து ஆத்திரமடைந்தனர். எனினும் இது அவர்களைச் சாந்தமாக்கிற்று. புத்தகம் படிப்பது ஆபத்தானது என்று எஜமானர் என்னை எச்சரித்தார்.

"புத்தகம் படித்தவர்கள்தான்,—கொல்லுவதற்காக ரயில் தண்டவாளத்தைப் பிடுங்கினர்."

" உங்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா ?" என்று பீதியுடன் அவர் மனைவி குறுக்கிட்டுக் கேட்டாள். " அவன் தலையில் எத்தகைய எண்ணத்தைப் புகுத்துகிறீர்கள் !"

டேட்மோன்டேபினை நான் சிப்பாயிடம் எடுத்துச்சென்று, நடந்ததை அவனிடம் சொன்னேன். ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் லிடோரோவ் புத்தகத்தை வாங்கி, சிறிய பெட்டியைத் திறந்து சுத்தமான துண்டை எடுத்து, அதில் புத்தகத்தைப் பொதிந்து, அதைப் பெட்டியில் ஒளித்து வைத்தான்.

"அவர்களைப்பற்றிக் கவலைப்படாதே. இங்கே வந்து படி. நான் யாரிடமும் சொல்ல மாட்டேன்" என்றான் அவன். "நான் வீட்டில் இல்லாத நேரத்தில் நீ வந்தால், சாமி விக்கிரகத்திற்குப் பின்னே இருக்கும் பெட்டியைத் திறந்து, மனசுக்கொண்டமட்டும் படி."

என் எஜமானர்கள் அந்தப் புத்தகத்தை வெறுத்ததால், அதை மிக முக்கியமானதாகவும், உணர்ச்சியூட்டும் ரகசியமாகவும் நான் மதித்தேன். பாவமன்னிப்புப் பெற்ற சமயத்தில் பாதிரி கேட்ட கேள்வியையும், மாணவன் புத்தகத்தையும், "சரியான புத்தகங்கள்" என்று ஸ்மூரி சொன்னதையும், கறுப்புப் புத்தகங்கள் படித்து, கறுப்பு ஜாலவித்தைகள் புரிந்த "ரகசிய சங்கத்தாரை"ப் பற்றித் தாத்தா சொன்னதையும் நான் மறந்துவிடவில்லை யென்றாலும், புத்தகங்கள் படித்தவர் சிலர் யாரையோ கொல்லும் முயற்சியில் ரயில் தண்டவாளங்களைப் பெயர்த்தார்கள் என்னும் உண்மை என்னில் எந்தவிதமான உணர்ச்சியையும் தூண்டிவிடவில்லை.

"அருள்பெற்ற ஜார் அலெக்ஸான்டர் பாவ்லோவிச் ஆட்சிபுரிந்த காலத்தில், ரோமன் போப்பிடம்—கிறிஸ்தவர்களிடம்—ரஷிய மக்களை ஒப்படைப்பதற்காக ரகசிய சங்கத்தாருடன் பிரபுக்கள் சதி செய்தனர். ஜெனரல் அராக்சியெவ் இந்தச் சந்தர்ப்பத்தில் இவர்கள் விவகாரத்தில் தலையிட்டு, பட்டத்தையும், அந்தஸ்தையும் பொருட்படுத்தாது, இவர்கள் அனைவரையும் சைபீரியாவுக்கு அனுப்பினர். கூளம் அழுகுவதைப் போன்று சாதாரண கைதிகளைப்போல் அங்கே வேலை செய்து அவர்கள் அழுகினர்."

"நட்சத்திரங்கள் நிறைந்த உம்ப்ராகுலம்", "கொர்வாஸி", "அறிவற்ற பிரகிருதிகளே, எங்கள் விவகாரத்தில் தலையிடுவதாக நினைக்கிறீர்கள்! உங்கள் புல்லறிவு எங்கள் அருகில்கூட எட்டிப் பார்க்க முடியாது!" என்ற கேலிவார்த்தை முதலியன என் நினைவிற்கு வந்தன.

மகத்தான ஒரு ரகசியத்தின் தலைவாசலில் நிற்பதாக நான் கருதினேன். ஆட்கொள்ளப்பட்டவனைப்போல் என்னை வாழுமாறு செய்தது, இந்த உணர்ச்சி. அதிகாரியின் வேலைக்காரனின் குசினியில் அந்தப் புத்தகம் பாழ்பட்டுவிடும், அல்

லது காணுமல் போய்விடும் என்ற பயத்தால், அதைச் சீக்கிரம் படித்து முடித்துவிட வேண்டும் என்று நான் ஆசைப்பட்டேன். இதை நான் எப்படித் தையற்காரரின் மனைவிக்கு விளக்க முடியும் ?

நான் சிப்பாயைச் சந்திக்காமல் இருப்பதற்காக அந்தக் கிழவி என்னைக் கூர்மையாகக் கண்காணித்தாள். அடிக்கடி அவள் என்னை இம்சித்தாள்.

"புத்தகப் புழுவே! ஒழுக்கமற்ற வாழ்க்கை வாழத்தான் புத்தகம் கற்றுக்கொடுக்கும். தனது நேரத்தை யெல்லாம் புத்தகம் படிப்பதில் செலவிடும் அவளைப் பார் ! இனி அவள் மார்க்கெட்டுக்குக்கூடப் போக முடியாது. அதிகாரிகளுடன் சதா கொஞ்சிக் குலாவுகிறாள் ! பகலில் தன்னைப் பார்க்க அவர்களை அவள் அனுமதிப்பது எனக்குத் தெரியாதா ?"

"அது பொய் ! அவர்களுடன் அவள் உறவுகொண்டிருக்கவில்லை !" என்று கூவ நான் விரும்பினேன்.

தையற்காரரின் மனைவிக்குப் பரிந்து பேச நான் துணியவில்லை. இதை நான் செய்திருந்தால், புத்தகம் அவளுடையது என்பதைக் கிழவி ஊகித்திருப்பாள்.

பல நாட்கள் வேதனையால் நான் வாடினேன். மறதி என்னைப் பீடித்தது. எனக்குத் தூக்கம் வரவில்லை. டேமோன் டோபின் தலைவிதி எனக்குக் கவலையளித்தது. ஒரு நாள் தையற்காரரின் சமையற்காரன் என்னைக் கொல்லையில் நிறுத்திவிட்டு, என்னிடம் சொன்னன் :

"புத்தகத்தைத் திருப்பிக் கொண்டுவா" என்று.

என் எஜமானர்கள் தூங்கும் நேரம் பார்த்து—பகல் சாப்பாட்டுக்குப் பிறகு—தையற்காரரின் மனைவி முன்னர் சோர்வுடனும், கலக்கத்துடனும் தோன்ற நான் முடிவு செய்தேன்.

முதன் முறை அவளை எப்படிக் கண்டேனோ அப்படியே தான் அன்றும் அவள் இருந்தாள். ஆனல் உடை மாத்திரம் மாறியிருந்தது. பழுப்புநிறப் பாவாடையும், கறுப்பு வெல்வெட் மேலங்கியும் அவள் அணிந்திருந்தாள். புல்பிங்குப் பறவையை அவள் எனக்கு நினைவூட்டினள்.

புத்தகத்தைப் படித்து முடிக்க எனக்கு நேரம் கிடைக்கவில்லை யென்றும், அந்தப் புத்தகத்தை நான் படிக்கக் கூடாது

என்று தடை விதிக்கிறார்கள் என்றும் நான் சொன்னதும், இதனால் ஏற்பட்ட வேதனையும், மீண்டும் அவளைக் காணக் கிடைத்த சந்தர்ப்பம் அளித்த மகிழ்ச்சியும் என் கண்களில் கண்ணீரை நிறைத்தன.

"முட்டாள்கள்!" என்று தனது அழகிய புருவத்தை உயர்த்திக்கொண்டு அவள் சொன்னாள். "உன் எஜமானர் புத்திசாலி யென்று நான் நினைத்தேன். இதனால் நீ கலங்காதே. இதற்கு நான் ஒரு வழி கண்டுபிடித்திருக்கிறேன். நான் அவருக்கு எழுதுகிறேன்."

இது என்னைப் பீதியடையச் செய்தது. புத்தகம் பாதிரியினுடையது என்று நான் பொய் சொல்லியிருப்பதாக அவளிடம் சொன்னேன்.

"தயவுசூர்ந்து எழுதாதீர்கள்!" என்று நான் கெஞ்சினேன். "அவர்கள் உங்களைக் கேலி செய்வார்கள்; திட்டுவார்கள். எங்கள் வீட்டில் யாரும் உங்களை நேசிக்கவில்லை. அவர்கள் உங்களை நையாண்டி செய்கிறார்கள்; முட்டாள் என்று அழைக்கிறார்கள்; உங்களுக்கு ஒரு விலா எலும்பு இல்லை யென்று சொல்லுகிறார்கள்."

வார்த்தைகள் வரிசையாக வெளிவந்தன. பேசி முடித்தும், பேசியது தவறு என்பதை நான் உணர்ந்தேன். தனது மேல் உதட்டை அவள் கடித்துக்கொண்டாள்; குதிரைமீது இருப்பவனைப்போன்று தன் இடுப்பில் தட்டிக்கொண்டாள். நான் தலையைத் தொங்கவிட்டுக்கொண்டேன்; என்னை விழுங்கப் பூமி பிளக்க வேண்டு மென்று விரும்பினேன். ஆனால் விரைவில் ஒரு நாற்காலியில் சாய்ந்து, அவள் சிரித்தாள்.

"எவ்வளவு முட்டாள்தனம்! எவ்வளவு முட்டாள் தனம்! ஆனால் இதைப்பற்றி நான் என்ன செய்ய முடியும்?" என்று என்னை உற்றுப்பார்த்துக்கொண்டு தன்னைத் தானே கேட்டுக்கொண்டாள். பிறகு ஒரு நெடுமூச்சுடன் அவள் சொன்னாள்: "நீ அபூர்வமான பையன்—சொம்ப அபூர்வமானவன்."

அவளுக்கு அருகிலிருந்த கண்ணாடியில் என்னை நான் பார்த்துக்கொண்டேன். நீட்டிக்கொண்டு நின்ற தாடை எலும்பையும், பரந்த மூக்கையும், நெற்றியில் ஒரு பெரிய வடுவை

யும், சீவப்படாத தலைமயிர் நாலா பக்கங்களிலும் குத்திட்டு நிற்பதையும் கொண்ட ஒரு வடிவத்தை நான் கண்டேன். "இவனைத்தான் ரொம்ப அபூர்வமான பையன் என்று அழைத்தீர்களா ? இந்த அபூர்வமான பையனுக்கும் அழகிய அந்தச் சீனப் பொம்மைக்கும் எந்த விதமான உருவ ஒற்றுமையும் இல்லையே !"

"சென்ற முறை நான் கொடுத்த பணத்தை நீ எடுத்துச் செல்லவில்லையே. ஏன் ?"

"எனக்குப் பணம் தேவையில்லை."

அவள் நெடுமூச்சுவிட்டாள்.

"நல்லது, இதற்கு ஒன்றும் செய்ய முடியாது. படிக்க உன்னை அவர்கள் அனுமதித்தால் இங்கே வா. நான் புத்தகங்கள் தருகிறேன்."

அங்கே ஒரு மூக்காலியில் மூன்று புத்தகங்கள் இருந்தன. நான் திருப்பிக் கொடுத்த புத்தகம் அவைகளில் கனமானது. அதை வருத்தத்துடன் நான் உற்றுப் பார்த்தேன். தையற்காரரின் மனைவி கையை நீட்டிக்கொண்டு சொன்னாள் :

"நல்லது, போய்வா" என்று.

ஜாக்கிரதையாக அவள் கையைத் தொட்டுவிட்டு நான் விரைந்து சென்றேன்.

அவளைப்பற்றி அவர்கள் சொன்னது — அவளுக்கு ஒன்றும் புரியவில்லை என்று சொன்னது — ஒருக்கால் உண்மையாக இருக்கலாம். சிறு குழந்தையைப்போன்று இருபது காபெக்கை அவள் பணம் என்று சற்று முன் சொல்லவில்லையா ?

ஆனால் அவளுடைய இந்தக் குழந்தைக் குணத்தை நான் விரும்பினேன்.

9

படிக்க வேண்டும் என்று திடீரென்று எனக்கு ஏற்பட்ட உணர்ச்சியால் நான் எவ்வளவு அவமதிப்பும், வேதனையும், தடுமாற்றமும் அடைந்தேன் என்பதை நினைத்தால் வேதனையும் வேடிக்கையும் உண்டாகின்றன.

தையற்காரரின் மனைவிக்குச் சொந்தமான புத்தகங்கள் விலை உயர்ந்தவை என்று நான் கருதியதால், என் கிழட்டு எஜமானி அவைகளை எரித்துவிடுவாளோ என்ற பயத்தால் அவைகளை அவளிடம் வாங்குவதை அறவே மறந்துவிட்டு, காலை உணவுக்கு நான் சோட்டி வாங்கும் கடையிலிருந்து அழகிய வர்ணங்கள் படைத்த சிறிய புத்தகங்களை வாங்க ஆரம்பித்தேன்.

அந்தக் கடைக்காரன் சொம்ப விகாரமாக இருந்தான். தடித்த உதடுகளும், கண்டமாலையும், வடுக்கள் நிறைந்த முகமும், வெளிறின கண்களும், ஊதின காங்களும் குட்டையான விரல்களும் படைத்தவன் அந்தக் கடைக்காரன்.

எங்கள் தெருவில் வசித்த நெறிதவறிய வாலிபர்களும், மங்கைகளும் மாலையில் சந்திக்குமிடம் அந்தக் கடை. சீட்டு விளையாடவும், பீர் குடிக்கவும் தினசரி மாலை என் எஜமானரின் சகோதரர் அந்தக் கடைக்குச் சென்றார். இரவுச் சாப்பாட்டிற்கு அவரை அழைத்து வருமாறு அடிக்கடி என்னை அங்கே அனுப்புவார்கள். அத்தகைய சந்தர்ப்பங்களில் கடைக்குப் பின்னே யிருந்த நெரிசலான சிறிய அறையில் கடைக்காரரின் மூட்டாள் மனைவி விக்டரின் முழங்கால்களில் உட்கார்ந்திருப்பதையோ, அல்லது அங்கே இருந்த வேறு வாலிபர்களின் முழங்கால்களில் உட்கார்ந்திருப்பதையோ நான் பார்த்திருக்கிறேன். இதைக் கண்டு கடைக்காரர் ஆத்திர மடையவில்லை யென்று தெரிந்தது. வாடிக்கைக்காரர்களைக் கவனிப்பதில் அவனுக்குத் துணைபுரிந்த அவன் சகோதரியைச் சிப்பாய்களும், பாடகர்களும், வேறு பலரும் ஆலிங்கனம் செய்ததையும் கடைக்காரன் ஆட்சேபிக்கவில்லை. கடையிலே விற்பனைக்கு அதிகச் சரக்கு இருக்கவில்லை. கடை புதியதென்றும், கடை சரத் காலத்திலேயே திறக்கப்பட்டிருப்பினும் கடைக்கு வேண்டிய சாமான்கள் சேகரிக்க அவகாசம் போதவில்லை யென்றும் கடைக்காரன் இதற்கு விளக்கம் கொடுத்தான். ஆபாசமான படங்களை அவன் வாடிக்கைக்காரர்களுக்குக் காட்டினான்; ஆபாசமான கவிதைகளை எழுதிக்கொள்ளவும் அவன் அனுமதித்தான்.

ஒரு புத்தகத்திற்கு ஒரு காபெக் வீதம் கொடுத்து மிஷா எவ்ஸ்டிக்னெயெவ் கடையிலிருந்த புத்தகங்களை நான் படித்தேன். இதனால் செலவு அதிகமாகிறது என்பதை நான் தெரிந்துகொண்டேன். மேலும் இத்தகைய புத்தகங்கள் எனக்கு மகிழ்ச்சி அளிக்கவும் இல்லை. குவாக் அல்லது சாவுக்கு இணக்கம் ; பிரான்சில் என்ற வேன்னீஸ்க்காரன் ; கார்பாடினியர்களுடன் ருஷ்யர்கள் நடத்திய போர் ; தன் மனைவியின் சவப்பெட்டிமீது ஆவிநீத்த அழகிய முகமதியன் போன்ற அங்கே இருந்த புத்தகங்கள் என்னைத் திருப்தி செய்யவில்லை என்பது மாத்திர மல்ல, அவை என் ஆத்திரத் தையும் தூண்டிவிட்டன. நடக்க முடியாத விஷயங்களை, ஆபாசமான நடையில் விவரித்து, அந்தப் புத்தகங்கள் என்னை ஏமாற்ற முயலுகின்றன என்று நான் கருதினேன்.

ஸ்ட்ரேல்ட்ஸி, யூரி மிலோஸ்லாவ்ஸ்கி, ரகசிய பாதிரி, யபாஞ்சா - தார்தாரியக் குதிரைக்காரன் போன்ற புத்தகங்கள் எனக்கு ஓரளவு திருப்தி அளித்தன. இவை நம்பிக்கை யூட்டும் முறையில் எழுதப்பட்டிருந்தன ; சில இடங்களில் மனதையும் உருக்கின. அடியார்களின் வரலாறு என்ற புத்த கத்தை நான் பெரிதும் விரும்பினேன். அதில் மனத்தை ஈர்க்கிற விஷயங்களும் சில சமயங்களில் உள்ளத்தை உணர்ச்சி வயமாக்கிவிடுகிற விஷயங்களும் அடங்கி இருந்தன. உயிர் துறந்த ஆண்கள் 'இது மிக நேர்த்தியை' நினைவூட்டினர்; உயிர் துறந்த பெண்கள் என் பாட்டியை நினைவூட்டினர்; குருக்கள் குஷியாக இருக்கும் தாத்தாவை நினைவூட்டினர்.

மச்சில் உட்கார்ந்துகொண்டோ, அல்லது விறகுவெட் டுக் கொட்டகைக்குச் சென்றபொழுதோ நான் படித்தேன். இந்த இரண்டும் அசௌகரியமான, குளிரான இடங்கள். புத்தகம் சுவையுடையதாக இருந்தாலோ, அல்லது அவசர மாகப் படிக்க வேண்டியிருந்தாலோ, இரவில் மெழுகுவத்தி வெளிச்சத்தில் படிப்பேன். இதனால் மெழுகுவத்தியின் உரு வம் இரவில் குறைவதைக் கண்டுபிடித்த கிழவி, ஒரு குச்சி யால் மெழுகுவத்தியை அளந்து, அந்தக் குச்சியை எடுத்து வைப்பாள். வழக்கமாக அந்தக் குச்சியைக் கண்டுபிடித்து, எரிந்த மெழுகுவத்தியின் அளவுக்கு அதையும் ஒடித்துவிடு

வேன். இதைச் செய்ய நான் தவறினால், காலையில் மெழுகு வத்திக்கும் குச்சிக்கும் அளவில் வித்தியாசம் இருப்பதைக் கிழவி கண்டுபிடித்து, குசினியில் நின்றுகொண்டு அட்ட காசம் செய்வாள். ஒருநாள் தன் கட்டிலில் படுத்துக்கொண்டு விக்டர் கூவினான் :

''குரைப்பதை நிறுத்து, அம்மா! உன்னுடன் வாழ முடியாது! புத்தகம் படிப்பதால், மெழுகுவத்தியை அவன் எரிக்கிறான். கடையிலிருந்து அவன் புத்தகங்கள் வாங்கு கிறான். அவன் புத்தகங்கள் வாங்குவதை நான் பார்த்திருக் கிறேன். மச்சில் தேடிப்பார்.''

கிழவி மச்சை நோக்கிப் பாய்ந்தாள். அங்கே ஒரு சிறிய புத்தகம் இருப்பதைக் கண்ட. அவள் அதை எடுத்துத் துண்டு துண்டாகக் கிழித்தாள்.

இது ஒரு பேசடி. ஆனால் புத்தகம் படிக்க வேண்டும் என்ற ஆசையைத்தான் இது தூண்டிவிட்டது. ஒரு ஞானி இந்த வீட்டிற்கு வந்தால், அவர் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை என் எஜமானிகள் அவருக்குக் கற்றுக் கொடுப்பார்கள் என்பதும், தங்கள் மனதிற்கு உகந்த முறை யில் அவரை உருவாக்குவார்கள் என்பதும் திண்ணம். செய்வதற்கு இதைவிட வேறு சிறந்த வேலை இல்லாத காரணத் தால்தான் அவர்கள் இதைச் செய்தார்கள். கூச்சலிடு வதையும், ஜனங்களை விமர்சிப்பதையும் கேலி செய்வதையும் இவர்கள் நிறுத்தினால், உணர்விழந்து, பேசவே முடியாத ஊமைகளாகிவிடுவார்கள் இவர்கள். தன்னை உணர்வதற்கு, மற்றவர்களுடன் போதபூர்வமான ஒருவித உறவு இருக்க வேண்டும். ஆனால் என் எஜமானர்களுக்குத் தெரிந்த ஒரே உறவு போதகன், நீதிபதி என்பதுதான். அவர்கள் விதித்த இலக்கணப்படி ஒருவன் வாழ்ந்தால்கூட, அதற்காகவும் அவனை அவர்கள் கண்டிப்பார்கள். அது அவர்கள் இயல்பு.

படிப்பதற்காக நான் பல தந்திரங்களைக் கையாண்டேன். பல முறை கிழவி என் புத்தகங்களை நாசமாக்கியதால், கடைக் காரருக்கு நாற்பத்தியேழு காபெக் கொடுக்க வேண்டிய கடன்காரனானேன் நான். பணத்தை உடனே கொடுத்துவிட வேண்டு மென்றும், கொடுக்கவில்லையானால் சொட்டி வாங்க

வரும்பொழுது என் எஜமானர் பணத்தில் கடனைக் கழித்துக் கொள்ளப் போவதாகவும் அவன் என்னை அச்சுறுத்தினான்.

"அப்பொழுது என்ன நடக்கும் தெரியுமா?" என்று கேட்டு என்னைக் கேலி செய்தான் அவன்.

மிக வெறுக்கத்தக்கவன் அவன் என்பதை நான் உணர்ந்தேன். அவனும் இதை உணர்ந்திருக்க வேண்டும். அதனால் தான் பலவிதமாக என்னை அச்சுறுத்தி, என்னைச் சித்திரவதை செய்வதிலே அவன் இன்பத்தைக் கண்டான். நான் கடையில் பிரவேசித்தபொழு தெல்லாம் கொப்பளம் நிறைந்த அவனுடைய முகம் புன்னகையால் மலரும்.

"எனக்குத் தர வேண்டிய பணத்தைக் கொண்டுவந்திருக்கிறாயா?" என்று சாந்தமாக அவன் கேட்பான்.

"இல்லை."

இது அவனுக்குத் திருப்தி அளிக்கவில்லை போலும். அவன் முகத்தைச் சுளிப்பான்.

"இல்லை? நான் உன்னை என்ன செய்ய வேண்டும்? சட்டப்படி உன்மீது நடவடிக்கை எடுத்து, உன்னைச் சிறுவர் சிறைக்கு அனுப்புமாறு செய்வதா?"

எனக்குப் பணம் கிடைக்க வழியே இல்லை. ஏனெனில் என் சம்பளத்தைத் தாத்தாவிடம் கொடுத்தார்கள். என்ன செய்வ தென்று எனக்குத் தெரியவில்லை. பணத்திற்காகக் காத்திருக்குமாறு நான் கேட்டுக்கொண்டதும் கனத்தும், அப்பத்தைப் போன்று வழவழ வென்றும் இருந்த, தன் கரத்தை நீட்டிவிட்டு, அவன் சொன்னான்:

"இதை முத்தமிடு, நான் பொறுக்கிறேன்."

கல்லாவிலிருந்து ஒரு எடையை எடுத்து, அவன் தலையைக் குறிபார்த்து எறிந்தேன். குனிந்துவிட்டு, அவன் கூவினான்:

"ஏய், நீ என்ன செய்கிறாய்? நான் விளையாடினேன்!"

அவன் விளையாடவில்லை யென்று நான் கருதினேன். அவன் பிடியிலிருந்து விடுபட நான் பணத்தைத் திருடமுடிவு செய்தேன். காலையில் எஜமானரின் துணிகளைப் பிரஷ் செய்யும்பொழுது, அவைகளில் சில்லறை இருப்பதைக் கவனித்திருக்கிறேன். சில சமயங்களில் அவை தரையில்

விழும். ஒரு நாள் ஒரு நாணயம் மாடிப் படிக்குக் கீழே இருந்த விறகுக் குவியலுக்குள் உருண்டோடிற்று. சில தினங்களுக்குப் பிறகு விறகுக் குவியலிலிருந்து இருபது காபெக் நாணயத்தை நான் கண்டெடுக்கும்வரையில், இதைப்பற்றி என் எஜமானரிடம் சொல்ல நான் மறந்துவிட்டேன். அதை நான் திருப்பிக் கொடுத்தபொழுது, அவர் மனைவி அவரிடம் சொன்னாள் :

" பார்த்தீர்களா ? ஜேப்பில் பணம் வைக்கும்பொழுது, எண்ணி வைக்க வேண்டும்."

"அவன் திருட மாட்டான்" என்று என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்துகொண்டே அவர் சொன்னார் :

பணத்தைத் திருட நான் முடிவுசெய்துவிட்டதால், அவர் வார்த்தைகளும், நம்பிக்கை கலந்த அவர் புன்னகையும் என் நினைவிற்கு வந்தன. எனவே திருடுவது சிரமமாக இருந்தது. பல முறை அவர் ஜேப்பியிலிருந்து பணத்தை எடுத்து, எண்ணிப் பார்த்துவிட்டு, மீண்டும் ஜேப்பியிலேயே போட்டுவிட்டேன். மூன்று நாட்கள் என் உள்ளத்திலே பெரும் போர் நிகழ்ந்தது. திடீரென்று பிரச்னை எளிதாகித் தீர்ந்துவிட்டது.

" நீ ஏன் சில தினங்களாக எப்படியோ இருக்கிறாய், பெஷ்கோவ் ?" என்று என் எஜமானர் எதிர்பாராத முறையில் கேட்டார். " நீ சாதாரணமாக இருக்கவில்லை. உடம்புக்கு என்ன ?"

என்னைக் கவலைப்படுத்தும் விஷயத்தை நான் பட்டவர்த்தனமாக அவரிடம் சொன்னேன்.

" புத்தகங்கள் எங்கே கொண்டு செல்கிறது, பார் !" என்று முகத்தைச் சுளித்துக்கொண்டு அவர் சொன்னார் : " ஏதாவது ஒரு விதத்தில், அது உனக்குத் தீங்கிழைக்கும்."

ஆனால் ஒரு எச்சரிக்கையுடன் அவர் எனக்கு ஐம்பது காபெக் கொடுத்தார்.

" என் மனைவிக்கும், தாயாருக்கும் இது தெரியக் கூடாது. தெரிந்தால் தகராறு ஏற்படும்."

பிறகு சிரித்துக்கொண்டே நல்லெண்ணத்துடன் அவர் சொன்னார் :

"நீ பிடிவாதம்கொண்ட சின்னப் பிசாசு! பாதகமில்லை— இது கெட்ட பழக்கமல்ல; ஆனால், புத்தகங்களைக் கைவிட்டு விடு! புது வருடத்தில் நான் நல்ல பத்திரிகைக்குச் சந்தா செலுத்துகிறேன். பிறகு நீ அதைப் படிக்கலாம்."

அவர் சந்தா செலுத்தினர். தினசரி மாலையில்—தேநீருக்கும் இரவு சாப்பாட்டிற்கும் மத்தியில்—எஜமானருக்கு வந்த மாஸ்கோ லீப்லெட்டை நான் படிப்பேன். இந்தப் பத்திரிகை அலுப்பால் வருந்துகிறவர்களுக்காக எழுதும் வாஷ்கோவ், சோக்ஷானின், ருட்னிகோவ்ஸ்கி முதலிய ஆசிரியர்களின் நாவல்களைப் பிரசுரித்தது.

உரக்கப் படிப்பதை நான் விரும்பவில்லை. பொருளைப் புரிந்துகொள்வதை இது தடைப்படுத்திற்று. ஆனால் பக்தி கலந்த உற்சாகத்துடன் மற்றவர்கள் நான் படிப்பதைக் கவனமாகக் கேட்டனர். கெட்ட செயல்களைக் கேட்டு வாயைப் பிளந்தனர்; ஆச்சரியப்பட்டனர். பெருமையுடன் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டனர்:

"வெளியே என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளாமல் நாம் இங்கே சாந்தமாகவும், சமாதானத்துடனும் கடவுள் கிருபையால் வாழுகிறோம்!"

அவர்கள் எல்லாவற்றையும் சூழப்பினர். பிரசித்திபெற்ற கொள்ளைக்காரன் சுர்க்கின் நடவடிக்கைகளைக் குதிரை வண்டிக்காரன் போமாக் குருச்சீனு செய்ததாகக் கருதினர். இடைவிடாது அவர்கள் பெயர்களைக் குழப்பினர். அவர்களை நான் திருத்தியதும், வியப்புடன் அவர்கள் சொல்லுவார்கள்:

"பையனுக்கு எவ்வளவு ஞாபகசக்தி இருக்கிறது!"

அடிக்கடி லியோனிட் க்ரேவ் கவிதைகளை மாஸ்கோ லீப்லெட் பிரசுரிக்கும். அவை எனக்கு சொம்பப் பிடித்திருந்தன. அவைகளை என் நோட் புத்தகத்தில் நான் எழுதிக் கொள்வேன். ஆனால் அந்தப் புலவரைப்பற்றி என் எஜமானிகள் சொல்லுவார்கள்:

"எப்படி யிருக்கிறது—கிழவன் கவிதை எழுதுகிறான்!"

"அவன் குடிகாரன்; துர்பலமான உள்ளம் படைத்தவன். அவனுக்கு எல்லாம் சரிதான்!"

ஸ்ட்ரூஷ்கின் கவிதையும், கௌன்ட் மெமென்டோ–மோரி கவிதையும் என்னைக் கவர்ந்தன. ஆனால் கிழவியும், குமரியும் கவிதை முட்டாள்தனமானது என்று வற்புறுத்திக் கூறினர்.

"கோமாளிகளும், நடிகர்களும்தான் கவிதை படிப்பார்கள்."

புழுக்கமான அந்தச் சிறிய அறையிலே என் எஜமானர்கள் என்னைக் கண்காணிக்க நான் கழித்த சரத்கால மாலைநேரம் மிக மிகக் கஷ்டமானது! மரணத்தைப்போல் அமைதியாக இருந்த இரவு, ஜன்னலுக்கு அப்பால் அரசு புரிந்தது. அவ்வப்பொழுது பனிப்புயல் சுழன்றடித்தது. ஆனால் விறைத்து விட்ட மீனைப்போல் மேஜையைச் சுற்றி உட்கார்ந்திருந்தவர்கள் மௌனமாக இருந்தனர். சுவர்களிலும், ஜன்னல் கண்ணாடிகளிலும் காற்று பிறாண்டிற்று; புகைபோக்கியிலே ஊளையிட்டது; தாடையைத் தட்டிவிட்டது; குழந்தை விடுதியிலிருந்து குழந்தைகளின் அழுகை கேட்டது. இருண்ட மூலைக்குச் சென்று, ஓநாயைப் போன்று ஊளையிட வேண்டும் என்று எனக்குத் தோன்றிற்று.

தைத்துக்கொண்டோ, அல்லது காலுறை பின்னிக்கொண்டோ பெண்கள் மேஜையின் ஒரு பக்கத்தில் உட்கார்ந்திருந்தனர். மற்றொரு பக்கத்தில் அசை மனதுடன் சித்திரத்தின்மீது சாய்ந்துகொண்டு விக்டர் உட்கார்ந்திருந்தான். அடிக்கடி அவன் கூவினான்:

"மேஜையை அசைக்காதீர்கள்! உங்களுடன் குடியிருக்கவே முடியாது, சனியன்களே!"

இன்னொரு பக்கத்தில் பெரிய சட்டத்திற்கு முன்னே என் எஜமானர் மேஜைத் துணியில் சித்திரங்கள் பின்னிக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அவர் விரல்களுக்குக் கீழே சிவப்பு நண்டுகளும், நீல மீன்களும், மஞ்சள் வண்ணத்துப்பூச்சிகளும், சரத்காலப் பழுப்பு இலைகளும் தோன்றின. அந்தச் சித்திரங்களை உருவாக்கினவர் அவர்தான். மூன்று சரத்காலங்களாக அவர் அந்த வேலையைச் செய்துகொண்டு வருகிறார். இப்பொழுது இந்த வேலை அவருக்குச் சலிப்பை அளித்து

விட்டது. பகல் நேரத்தில் எனக்கு வேலை இல்லாமலிருந்தால், அவர் என்னிடம் சொல்லுவார் :

"நல்லது, பெஷ்கோவ், மேஜைத் துணியில் உன் கைவரிசையைக் காட்டு" என்று.

எனவே, கனமான ஊசியை எடுத்துக்கொண்டு, என் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தேன். என் எஜமானருக்காக நான் வருந்தினேன். சாத்தியமான வழிகளில் அவருக்கு உதவிபுரிய நான் எப்பொழுதும் தயாராக இருந்தேன். ஒரு நாள் டிராயிங்கையும், சித்திரம் பின்னுவதையும், சீட்டு விளையாடுவதையும் நிறுத்திவிட்டு, இன்னும் ஏதாவது, சுவாரஸ்யமான காரியம் ஏதாவது செய்ய முற்படுவார் என்று எனக்குத் தோன்றிற்று. தாம் கனவுகண்ட ஒன்றை —முதன் முறையாகப் பார்ப்பதைப் போன்று திடீரென்று தனது வேலையை விட்டுவிட்டு ஆச்சரியத்துடன் அதைப் பார்க்க முற்படுவார் என்று எனக்குத் தோன்றிற்று. நெற்றிமீதும், கன்னங்களின் மீதும் தலைமயிர் விழ அங்கே நின்றுகொண்டிருந்த அவர் பார்வை, ஆசிரமத்தில் சேர்ந்த நவ சீடனின் பார்வையைப் போன்றிருந்தது.

"எதைப்பற்றிச் சிந்திக்கிறீர்கள்?" என்று அவர் மனைவி கேட்பாள்.

"விசேஷமாக ஒன்றுமில்லை" என்று வேலையை ஆரம்பித்துவிட்டு அவர் சொல்லுவார்.

மௌனமாக நான் ஆச்சரியப்படுவேன். எதைப்பற்றிச் சிந்திக்கிறாய் என்று ஒருவனை எப்படிக் கேட்கலாம்? இந்தக் கேள்விக்கு ஒருவன் எப்படிப் பதில் சொல்ல முடியும்? ஏக காலத்தில் ஒருவன் பல விஷயங்களைப்பற்றிச் சிந்திக்கிறான் : இப்பொழுது காணுவதைப்பற்றி, அல்லது நேற்றோ, சென்ற வருடமோ கண்டதைப்பற்றி, இடைவிடாது அசைகிற, இடைவிடாது மாறுகிற தெளிவற்ற காட்சிகளைப்பற்றி ஒருவன் சிந்திக்கிறான்.

மாஸ்கோ லீப்லெட்டில் வெளிவந்த கட்டுரைகளை ஒரே நாள் மாலைக்குள் நான் படித்து முடித்துவிடுவேன். படுக்கை யறையில் மெத்தைக்குக் கீழே அடுக்கி வைத்திருக்கும் மாசிகைகளைப் படிக்க அனுமதி கோரினேன்.

"படிக்க அவைகளில் என்ன இருக்கிறது ?" என்று சின்ன எஜமானி சந்தேகத்துடன் கேட்டாள். "படங்களைத் தவிர வேறென்றும் அவற்றில் இல்லை."

ஆனால் மெத்தைக்குக் கீழே அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. பிக்சர் ரெவ்யூ மாத்திர மல்ல. பிளேம் என்ற மாசிகையும் அங்கே இருந்தது. அதிலிருந்து ஸாலியாஸ் எழுதிய கௌன்ட் டிபாட்டின்-பால்டிஸ்கி என்னும் கதையைப் படித்தோம். இந்தக் கதையிலே வந்த மூட்டாள் கதாநாயகன் என் எஜமானருக்கு மகிழ்ச்சி அளித்தான். அந்த இளம் கனவானின் வருத்தமளிக்கும் சாகஸங்களைக் கேட்டுக் கண்ணீர் கன்னங்களில் வழிந்தோடும்வரையில் என் எஜமானர் சிரித்தார்.

"எவ்வளவு வேடிக்கையாக இருக்கிறது ?" என்று கூவுவார் அவர்.

"இது கட்டுக்கதை" என்று அவர் மனைவி சொல்லுவாள், தனது சொந்த அபிப்பிராயத்தைப் பிரகடனப்படுத்துவதற்காக.

படுக்கைக்குக் கீழே இருந்த மாசிகைகள் எனக்குப் பேருதவி புரிந்தன. மாசிகைகளைக் குசினிக்கு எடுத்துச் செல்லவும், இரவில் அவற்றைப் படிக்கவும் எனக்கு உரிமை கிடைத்தது.

மதுவருந்தத் தாதி சென்ற பிறகு, அதிர்ஷ்டவசமாக, கிழவி படுக்கை யறையில் படுத்து உறங்கினாள். நான் படிப்பதை விக்டர் ஆட்சேபிக்கவில்லை. எல்லோரும் தூங்கின பிறகு ஓசைப்படாமல் உடைகள் அணிந்துகொண்டு வெளியில் சென்று அதி காலையில் திரும்புவான், விக்டர். என் எஜமானி மெழுகுவத்தியைத் தனது அறைக்கு எடுத்துச் சென்றுவிடுவாள். எனவே எனக்கு விளக்கே இருக்கவில்லை. மெழுகுவத்தி வாங்க என்னிடம் பணம் இல்லாததால், மெழுகுவத்தி வைக்கும் கம்பியில் ஒட்டிக்கொண்டிருந்த மெழுகை ரகசியமாகச் சுரண்டி யெடுத்து, அதைக் காலி டப்பாவில் சேமித்து வைத்தேன். அதை விக்கிரக விளக்கு எண்ணெயால் மூடி, அதில் விளக்குத் திரியைத் திணித்தேன்.

இவ்வாறு புகையும் விளக்கைச் சிருஷ்டி செய்து, அதை அடுப் பின்மேல் வைத்தேன்.

பெரிய இந்தப் புத்தகங்களின் ஒரு பக்கத்தை நான் புரட்டியதும் ஒளி என்னும் சிறிய சிவப்புநாக்குப் படபடத்து, அவைகளைத் தாக்கும். ஆனால் சித்திரங்களையும், அவைகளுக் குக் கீழே எழுதப்பட்டிருந்த விளக்கங்களையும் படித்ததால் எனக்கு ஏற்பட்ட இன்பத்துடன் இந்தக் கஷ்டங்களை ஒப் பிட்டுப் பார்க்கிறபொழுது இந்தக் கஷ்டங்கள் அசட்டை செய்யக்கூடியவை.

உலகைப்பற்றிய என் கருத்து—ஆடம்பரமான நகரங் களாலும், உயரமான மலைகளாலும், அழகிய கடற்கரைகளா லும் அலங்கரிக்கும் உலகைப்பற்றிய என் கருத்து—வளர்ந்து விரிந்தது. வாழ்க்கை மகோன்னதமாக விரிந்தது. நகரங்களும், மக்களும், ஆதர்சங்களும் நிறைந்தது பூமி என்பதை நான் தெரிந்துகொண்டதும், பூமி பொலிவுடன் விளங்கிற்று. இப் பொழுது வால்காவுக்கு அப்பால் பரந்துகிடந்த பிரதேசத்தை நான் உற்றுப் பார்த்ததும், வெட்டவெளியை மாத்திரம் அது பிரதிபலிக்கவில்லை என்பதை நான் உணர்ந்தேன். இந்த உள் பிரதேசத்திலிருந்து வெளியே பார்க்கிறபொழுது சோர்வு மனப்பான்மை என்னைப் பீடித்தது. ஏனெனில் பூமியிலே பரந்துகிடந்த புல்வெளியைக் கரிய புதர்கள்தான் பிரித்துக் காட்டின; புல்வெளிக்கு அப்பால் மேகம் மூடின வானத்தால் சூழப்பட்ட குளிர்ந்த, காடு எழுந்தது ; பூமி சூன்யமாக வும், தனிமையாகவும் இருந்தது. என் இதயமும் சூன்ய மாகத்தான் இருந்தது. வருத்தம் மாத்திரம்தான் என் இதயத் தைத் தொட்டது. ஆசை பூராவும் மறைந்துவிட்டது. சிந்திப் பதற்காக ஒன்றுமே இருக்கவில்லை. கண்களை இறுக மூடிக் கொள்ள நான் விரும்பினேன். எல்லா ஆசைகளையும் வறண்டு போகச் செய்த இந்தக் கானகத்திலே நம்பிக்கைக்கு இடமே இருக்கவில்லை.

மற்ற நாடுகளைப்பற்றியும், மற்ற ஜனங்களைப்பற்றியும் சித்திரங்களுக்குக் கீழே கொடுக்கப்பட்டிருந்த விளக்கங்கள் எளிய பாஷையிலே வர்ணித்தன. நிகழ் காலத்திலும், கடந்த

காலத்திலும் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளை அவை வர்ணித்தன. அவைகளில் பல எனக்கு விளங்காததால், எனக்கு ஆத்திரம் ஏற்பட்டது. "ஆத்மார்த்திகம்", "சிலியாஸம்", "சார்ட்டிஸ்டு" போன்ற நூதனமான சொற்கள் என் மூளையைத் துளைத்தன. இவை என்னை அரித்துத் தின்றன; மற்றவைகளையெல்லாம் மறக்கச் செய்தன; இந்த வார்த்தைகளின் அர்த்தத்தை நான் கண்டுபிடிக்கவில்லை யென்றால், என்னால் எதையுமே புரிந்துகொள்ள முடியா தென்று நான் கருதினேன். ரகசியங்களின் தலைவாசலில் இவை காவல் புரிந்ததாக நான் கருதினேன். சதையிலே ஊசி தைப்பதைப் போன்று முழு வாசகமும் என் நினைவிலே பதிந்திருந்தன. மற்ற எதையும் சிந்திக்கவிடாமல் இது என்னைத் தடுத்துவிட்டது.

நூதனமான சில வரிகள் என் நினைவிற்கு வருகின்றன:

அட்டிலா பாலைவனத்தில் சவாரி செய்கிறார்; எஃகுக் கவசம் அணிந்த ஹன்ஸ்களுக்கு இவர் தலைவர்;

கல்லறையைப்போல் இருட்டாகவும் அமைதியாகவும் அவர்கள் இருக்கிறார்கள்.

அவனுக்குப் பின்னே குதிரை வீரர்கள் வந்தனர். அவர்கள் கூவினர்:

"ரோம் எங்கே? வலிமை படைத்த ரோம் எங்கே?"

ரோம் ஒரு நகரம் என்பது எனக்குத் தெரியும். ஆனால் ஹன்ஸ் என்பவர்கள் யார்? இதை நான் கண்டுபிடித்தாக வேண்டும்.

சௌகரியமான ஒரு சந்தர்ப்பத்தில் நான் என் எஜமானரைக் கேட்டேன்.

"ஹன்ஸா?" என்று அவர் ஆச்சரியத்துடன் கேட்டார். "அவர்கள் யாரென்று சைத்தானுக்குத்தான் தெரியும். ஒருக்கால், அவர்கள் பிச்சைக்காரர்களாக இருக்கலாம்."

என்னை ஆமோதிக்காத முறையில் அவர் தலையைக் குலுக்கினார்.

"உன் தலையிலே கூளம் நிறைந்திருக்கிறது, பெஷ் கோவ்! இது சொம்ப மோசம்."

நல்லதோ, கெட்டதோ, இது எனக்குத் தெரிய வேண்டும்.

ராணுவப் பாதிரி லொலோவ்யோவுக்கு ஹன்ஸ் யாரென்பது தெரிந்திருக்கும் என்று நான் கருதினேன். அவரைக் கொல்லையில் சந்தித்தும் நான் இதை அவரிடம் கேட்டேன்.

நோயாளியான அவர் வெளிறியிருந்தார். சிவந்த கண்களும், புருவமே இல்லாதவரும், சிறிய மஞ்சள் தாடியும் படைத்த அந்த மனிதன் அருவருப்பான தோற்றமுடையவர்.

"அதைப்பற்றி உனக்கென்ன?" என்று தனது கைத் தடியைச் சேற்றில் ஊன்றிக்கொண்டு அவர் கேட்டார்.

இந்தக் கேள்வியை லெப்டினென்ட் நெஸ்டிரோவிடம் கேட்டபொழுது அவர் உக்ரமாகக் கேட்டார்.

"என்ன்ன?"

மருந்துக்கடைக்குச் சென்று சினேகம் படைத்த கெமிஸ்டைக் கேட்க நான் முடிவு செய்தேன். அவர் முகத்திலே அறிவொளி வீசிற்று; தனது பெரிய மூக்கின்மீது தங்க முலாம் பூசிய மூக்குக் கண்ணாடி போட்டிருந்தார்.

"ஹன்ஸ்" என்று ஆரம்பித்தார், கெமிஸ்ட் பாவெல் கோல்ட்பெர்க். "கிர்கீஸைப்போன்று ஹன்ஸ்களும் காடோடிகள். அவர்கள் இப்பொழுது இயங்கவில்லை; அந்தக் குலமே அழிந்துவிட்டது."

நான் ஏமாற்றமும், ஆத்திரமும் அடைந்தேன். ஹன்ஸ் இறந்துபோனதால் அல்ல; ஆனால் என்னைத் துன்புறுத்திய இந்தச் சொல்லின் பொருள் இவ்வளவு சாதாரணமாகவும், இவ்வளவு பலனற்றதாகவும், இருந்ததால்.

ஆனால் ஹன்ஸ்களுக்கு நான் நன்றி செலுத்தினேன். அவர்கள் சம்பந்தமாக எனக்கு ஏற்பட்ட அனுபவத்திற்குப் பிறகு, வார்த்தைகள் என்னைத் துன்புறுத்தவில்லை. அட்டிலா தயவால் கெமிஸ்ட் கோல்ட்பெர்குடன் எனக்குப் பழக்கம் உண்டாயிற்று.

இந்த மனிதருக்கு, பெரிய வார்த்தைகளுக்கெல்லாம் அர்த்தம் தெரியும். எந்த ரகசியத்திற்கும் இவரிடம் சாவி இருந்தது. இரண்டு விரல்களால் மூக்குக் கண்ணாடியை சரிப் படுத்திக்கொண்டு, கனமான கண்ணாடிமூலம் என்னை உற்றுப் பார்த்தவாறு அவர் பேசுவார். அது, என் தலையில் ஆணி அறைவதைப் போன்றிருக்கும்.

"மரத்தில் இருக்கும் இலைகளைப் போன்றவை சொற் கள். என் நண்ப ! இலைகள் ஏன் அப்படி இருக்கின்றன என் பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், மரம் எப்படி வளர்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். நீ படிக்க வேண்டும். புத்தகம் அழகிய பூங்காவனத்தைப் போன்றது. மனோகரமான, பலன்தரும் எல்லாவற்றையும் அதிலே நீ காணலாம்."

வயது வந்தவர்களுக்கு இதய எரிச்சலுக்குச் சோடாவும், மாக்னீஷியாவும் வாங்கவும், குழந்தைகளுக்குப் பேதி மருந்து வாங்கவும் நான் அடிக்கடி மருந்துக்கடைக்குச் செல்லுவேன். கெமிஸ்டின் ரத்தினச் சுருக்கமான உபதேசம் புத்தகங்களை மிகக் கவனமாகப் படிக்க வேண்டும் என்னும் உணர்ச்சியை என்னிடம் தூண்டிவிட்டது. காலக்கிரமத்தில் குடிகாரனுக்கு வோட்கா எப்படி விலக்க முடியாததாயிற்றோ, அதேபோன்று புத்தகங்கள் எனக்கு விலக்க முடியாதவையாயின.

மகத்தான ஆசைகளும், எழுச்சிகளும் நிறைந்த சாதா ரண வாழ்க்கையிலிருந்து மாறுபட்ட வாழ்க்கையை, குற்றங் கள் புரியவும், தீரம் மிகுந்த செயல்கள் புரியவும் மக்களைத் தூண்டிய வாழ்க்கையை, அவை எனக்குக் காட்டின. என்னைச் சுற்றி வாழ்ந்தவர்கள் குற்றங்கள் புரியவும், தீரம் மிகுந்த செயல்கள் புரியவும் தகுதியற்றவர்கள் என்பதை நான் உணர்ந்தேன். புத்தகங்கள் வர்ணித்த வாழ்க்கையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட வாழ்க்கை அவர்கள் வாழ்ந்தனர். அவர்கள் வாழ்க்கையிலே சுவை அளிக்கக் கூடிய எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒரு விஷயம் எனக்குத் தெரியும்; அவர்கள் வாழ்வதைப்போல நான் வாழ விரும்பவில்லை.

பிரேசிலிலும், லண்டனிலும், பாரிசிலும் கழிவு நிறைந்த சாக்கடைகளும், நீர்க்கால்களும் நகருக்கு மத்தியில் இருக்க

வில்லை என்பதைச் சித்திரங்களுக்குக் கீழே எழுதப்பட்டிருந்த விளக்கத்திலிருந்து நான் தெரிந்துகொண்டேன். அங்கே வீதிகள் நேராகவும், அகலமாகவும் இருந்தன ; கட்டிடங்களும் கோயில்களும் வேறுவிதமாக இருந்தன. ஆறு மாதங்கள் நீண்டு நின்ற குளிர்காலம் அங்கே ஜனங்களை வீட்டிற்குள்ளே அடைத்துவைக்கவில்லை ; வெறுக்கத்தக்க ஆளி விதை எண்ணெயில் பொரிக்கப்பட்ட உருளைக்கிழங்கு, ஓட்மாவு, உப்பிட்ட காளான், கோஸ் முதலியவைகளை மாத்திரம் தின்னக் கூடிய நோன்பு அங்கே அனுஷ்டிக்கப்படவில்லை. நோன்பு காலத்தில் புத்தகம் படிப்பது தடுக்கப்பட்டிருந்தது. பிக்சர் ரெவியூ மாசிகை அப்புறப்படுத்தப்பட்டது. சூன்யமான இந்த நோன்பு வாழ்க்கை வாழுமாறு நான் நிர்ப்பந்தப்படுத்தப்பட்டேன். புத்தகத்திலே வர்ணிக்கப்பட்ட வாழ்க்கையுடன் இந்த வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்க்கும் நிலையில் நான் இருந்ததால், இந்த வாழ்க்கை மேலும் சாரமற்றதாகத் தோன்றிற்று. படிப்பதால் ஏற்பட்ட உணர்ச்சி எனக்கு அதிக பலன் அளித்தது. உறுதியுடனும், தைரொக்கியத்துடனும் நான் வேலை செய்தேன். ஏனெனில் எனக்கு ஒரு லட்சியம் இருந்தது ; வேலையை விரைவில் முடித்தால் புத்தகம் படிக்க அதிக நேரம் கிடைக்கும். புத்தகம் எனக்கு மறுக்கப்பட்டதும் நான் சோம்பேறியானேன். அதுவரையில் அனுபவிக்காத மறதி என்னை ஆட்கொண்டது.

மந்தமான இந்த நாட்களில் ரகசியமான ஒரு சம்பவம் நிகழ்ந்தது என் நினைவில் இருக்கிறது. ஒரு நாள் மாலை எல்லோரும் படுக்கச் சென்ற பிறகு கோயில் மணி திடீரென்று ஒலிக்க ஆரம்பித்தது. உடனே எல்லோரும் விழித்தெழுந்து அரை நிர்வாணமாக ஜன்னலை நோக்கிப் பாய்ந்தனர்.

" என்ன அபாய அறிவிப்பு ? நெருப்பா ?" என்று ஒருவரை ஒருவர் கேட்டுக்கொண்டனர்.

அண்டை வீடுகளில் வசித்தவர்கள் அங்குமிங்கும் நடமாடுவதும், கதவை ஓங்கிச் சாத்துவதும் எங்களுக்குக் கேட்டன. கடிவாளத்தால் குதிரைபைப் பிடித்துக்கொண்டு ஒருவர் வீதியில்ஓடினர். கோயிலில் திருட்டுப் போய்விட்டது என்று

என் கிழட்டு எஜமானி கூவினாள். ஆனால் என் எஜமானர் அவள் வாயை அடக்கினார்.

"சும்மா இரு, அம்மா. அது அபாய அறிவுப்பு இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும் !"

"அப்படியானால் பாதிரி இறந்திருப்பார்."

தன் கட்டிலிலிருந்து விக்டர் கீழே இறங்கினான்.

"என்ன நடந்திருக்கிறது என்பது எனக்குத் தெரியும்" என்று உடைகள் அணிந்துகொண்டே அவன் முணுமுணுத்தான்.

வானம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறதா என்று பார்ப்பதற்காக என்னை எஜமானர் மச்சுக்கு அனுப்பினர். நான் மச்சுக்கு ஓடி, அங்கிருந்த படுக்கையறை ஜன்னல் வழியாக கூரைமீது ஏறினேன். வானத்தில் ஒளி தென்படவில்லை; ஆனால் பெரிய மணி அமைதியைக் குலைத்தது. கண்ணுக்குத் தெரியாத ஜனங்களின் கால்பட்டு, உறைந்து கிடந்த பனிக்கட்டி நொறுங்கிற்று ; எல்லாவற்றையும்விட மேலாகக் கோயில் மணி ஒலித்தது. நான் திரும்பினேன்.

"தீ தெரியவில்லை."

கோட்டும் ஹாட்டும் அணிந்து நின்ற எஜமானர் "டட், டட்" என்று கூறினர். காலரை இழுத்துவிட்டுக்கொண்டு, இடமின்றிக் கால்களை காலோஷுக்குள் சொருகினர்.

"போகாதீர்கள்; போகாதீர்கள்" என்று மன்றாடினாள் அவர் மனைவி.

"முட்டாள்தனம்."

கோட்டும், ஹாட்டும் அணிந்து நின்ற விக்டர் எல்லோரையும் கேலி செய்தான்.

"என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியும் !"

சகோதரர்கள் வெளியே சென்றதும் அடுப்பைப் பற்ற வைக்குமாறு எனக்குக் கட்டளையிட்டுவிட்டு, ஜன்னல்களில் பாரா இருந்தனர் பெண்கள். ஆனால் உடனே எஜமானர் மணியை அடித்தார். மெதுவாக மாடிக்கு ஓடி, ஹால் கதவைத் திறந்துவிட்டு, கனத்த குரலில் சொன்னார் :

"ஜார் கொல்லப்பட்டார் !" என்று.

"கொல்லப்படவில்லை!" என்று ஆச்சரியம் கலந்த குரலில் கூவினாள் கிழவி.

"ஆம், கொல்லப்பட்டார். இதை ஒரு அதிகாரி என்னிடம் சொன்னார். இனி என்ன நடக்குமோ?"

உடனே விக்டர் மணியை அடித்தான். பதம் பார்க்கும் முறையில் உடைகளைக் கழற்றிக்கொண்டே அவன் சொன்னான் :

"யுத்தம் ஆரம்பமாய்விட்டதென்று நான் நினைத்தேன்!"

அதன் பிறகு எல்லோரும் தேநீர் அருந்த உட்கார்ந்தனர். தணிந்த குரலில், மிக ஜாக்கிரதையாக அவர்கள் பேசினர். வெளியேகூட அமைதி குடிகொண்டது. மணி ஓசையும் நின்றுவிட்டது. இரண்டு நாட்கள் மக்கள் தணிந்த குரலில் பேசினர் ; பிறரைச் சந்திக்கச் சென்றனர் ; விருந்தினர்களை உபசரித்தனர் ; எல்லாவற்றையும் விவரமாகப் பேசிக்கொண்டனர். என்ன நடந்தது என்பதைத் தெரிந்துகொள்ள நான் பெரு முயற்சி செய்தேன். ஆனால் பத்திரிகையை என் கண்ணுக்குத் தெரியாமல் என் எஜமானர்கள் ஒளித்து வைத்து விட்டனர். ஜாரை ஏன் அவர்கள் கொன்றார்கள் என்று நான் ஸிடோரோவைக் கேட்டபொழுது, அவன் மிருதுவாகச் சொன்னான் :

"இதைப்பற்றிப் பேசக் கூடாது."

இந்த விஷயம் விரைவில் மறக்கப்பட்டுவிட்டது ; அன்றுட வாழ்க்கை எழுப்பிய பிரச்னை இதை மறைத்துவிட்டது. அதன் பிறகு துக்ககரமான ஒரு அனுபவம் எனக்கு ஏற்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை குடும்பத்தார் காலைப் பிரார்த்தனைக்குச் சென்ற பிறகு, அடுப்பைப் பற்றவைத்துவிட்டு, வீட்டை நான் சுத்தம் செய்ய ஆரம்பித்தேன். குழந்தை குசினிக்குச் சென்று, அடுப்பிலிருந்த குழாயைப் பிடுங்கிற்று. பிறகு மேஜைக்குக் கீழே சென்று விளையாட ஆரம்பித்தது. அடுப்புக் குழாயிலே எரியும் நிலக்கரி நிறைக்கப்பட்டிருந்தது. ஜலம் வெளிப்பட்டதும், குழாய் கெட்டுவிட்டது. அது கோபத்துடன் சீறுவது அடுத்த அறையிலிருந்த எனக்குக் கேட்டது. நான் குசினிக்குப் பாய்ந்து சென்றேன். குசினி

கறுப்பாகிவிட்டதையும், குளிர்காய்ச்சலால் பீடிக்கப்பட்ட வனைப்போல் அது நடுங்குவதையும் கலக்கத்துடன் கண்டேன். ஜலக் குழாயுடன் பொருத்தப்பட்டிருந்த அடுப்புக் குழாய் நிராசையுடன் ஆடிக்கொண் டிருந்தது. அடுப்பின் மூடி கருகிவிட்டது. கைப்பிடியிலிருந்து உருகிய கல்லியம் கீழே கொட்டிக்கொண் டிருந்தது. கருநீல அடுப்பு குடிகாரனைப் போன்றிருந்தது. அதன்மீது குளிர்ந்த ஜலத்தை நான் ஊற்றினதும், அது சீறிவிட்டு, கீழே சாய்ந்தது.

இந்தச் சமயத்தில் மணி அடித்தது. நான் கதவைத் திறந்ததும், கிழவி கேட்ட முதல் கேள்வி "ஸாமோவார் கொதித்துவிட்டதா ?" என்பதுதான்.

"ஆம், கொதித்துவிட்டது" என்று நான் சுருக்கமாகப் பதில் சொன்னேன்.

பயத்தாலும், வெட்கத்தாலும் நடுங்கிய நான் சொன்ன இந்தப் பதில், மரியாதைக் குறைவாக மதிக்கப்பட்டதால், இதைத் தொடர்ந்து என் தண்டனையும் அதிகரித்தது! நான் கையப் புடைக்கப்பட்டேன். கிழவி தேவதாரு கம்புக் கட்டால் என்னை அடித்தாள். அது கொம்ப வலிக்கவில்லையென்றாலும், ஏராளமான சிம்புகள் என் சதையில் தைத்தன. மாலையில் என் முதுகு தலையணையைப்போல் வீங்கிவிட்டது. மறு நாள் மத்தியானம் என் எஜமானர் என்னை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றார்.

மிக உயரமாகவும், ஒல்லியாகவும் இருந்த டாக்டர் என்னைப் பரிசோதனை செய்தார். கனத்த, சாந்தமான குரலில் பிறகு அவர் சொன்னார் :

"குரூர நடவடிக்கைக்காக நான் ஒரு ரிப்போர்ட் தயாரிக்க வேண்டும்."

என் எஜமானரின் முகம் சிவந்தது. கால்களை மாறி மாறி வைத்துக்கொண்டு டாக்டரிடம் ஏதோ முணுமுணுத்தார். ஆனால் அவரை உற்றுப் பார்த்துவிட்டு, டாக்டர் கடுமையாகச் சொன்னார் :

"இப்படிச் செய்யக் கூடாது. இப்படிச் செய்ய உரிமையில்லை."

பிறகு என் பக்கம் திரும்பி, அவர் சொன்னார் :

"நீ மனுதாக்கல் செய்ய விரும்புகிறாயா ?"

என் முதுகு ரொம்ப வலித்ததால், நான் சொன்னேன்: "இல்லை. சீக்கிரம் எனக்கு ஏதாவது செய்யுங்கள்."

என்னை இன்னொரு அறைக்கு அழைத்துச் சென்று, மேஜைமீது படுக்க வைத்தார்கள். வேடிக்கையாகப் பேசிக் கொண்டே சிறிய இடுக்கியால் டாக்டர் சிம்புகளைப் பிடுங்கி எடுத்தார்.

"உன் தோலில் அற்புதமான வேலை செய்திருக்கிறார் கள், சிறுவ ! இனி உன்னை ஏதும் தாக்காது."

தமது வேலை முடிந்ததும், அவர் சொன்னார் :

"நாற்பத்திரண்டு சிம்புகளைப் பிடுங்கி எடுத்தேன், சிறுவ ! உன் நண்பர்களிடம் பெருமையடித்துக்கொள்ளக் கூடிய சாதனை இது ! நாளை இதே நேரத்தில் இங்கே வந்து புதிய கட்டுக் கட்டிக்கொள். உன்னை அடிக்கடி அடிக்கிறார் களா ?"

"அடிக்கடி அடிக்கிறார்கள்" என்று ஒரு நிமிடம் யோசித்துவிட்டுச் சொன்னேன்.

தமது கனத்த குரலில் டாக்டர் சிரித்தார்.

"எல்லாம் நன்மைக்குத்தான், பையா—எல்லாம் நன் மைக்குத்தான் !"

என்னை எஜமானரிடம் அழைத்துச் சென்று, அவர் சொன்னார் :

"இதோ இவன்—புதியவனைப் போன்று இவனை ஆக்கி விட்டேன். நாளை இவனை அனுப்புங்கள்; மீண்டும் இவனுக்குக் கட்டுக் கட்டுகிறேன் ; இவன் நகைச்சுவை படைத்தவனாக இருப்பது உங்கள் அதிர்ஷ்டம்."

நான் வண்டியில் வீடு திரும்பிக்கொண் டிருந்தபொழுது எஜமானர் என்னிடம் சொன்னார் :

"அவர்கள் என்னையும் அடித்தார்கள், பெஷ்கோவ். இதைப்பற்றி என்ன செய்யலாம் ? அவர்கள் எப்படி அடித் தார்கள், சகோதர ! உனக்காக வருந்த நானாவது இருக் கிறேன் ; ஆனால் எனக்காக வருந்த யாரும் இருக்கவில்லை. யாருமே இருக்கவில்லை. ஏராளமான ஜனங்கள் எங்கும்

இருக்கிறார்கள் ; ஆனால் அனுதாபங் காட்ட ஒரு வேசி மகனும் இல்லை ! கூச்சலிடும் கோழிக்குஞ்சுகள் !''

வழி நெடுக இந்தப் பாணியில் பேசினர் அவர். அவர் மீது எனக்கு வருத்தம் ஏற்பட்டது. என்னிடம் அன்பாகப் பேசியதற்காக அவருக்கு நான் நன்றி செலுத்தினேன்.

நாங்கள் வீட்டை அடைந்ததும், வெற்றி வீரனைப் போல் என்னை வரவேற்றனர். சிம்புகளை டாக்டர் எப்படி எடுத்தார் என்பதையும், டாக்டர் என்ன சொன்னார் என்பதையும் தங்களுக்கு விளக்கச் செய்தனர், பெண்கள். ''ஓ,'' ''ஆ'' என்று கூவி அவர்கள் என் வர்ணனையில் குறுக்கிட்டனர் ; அதரங்களை நக்கிக்கொண்டனர் ; வர்ணனையைக் கேட்டு முகத்தைச் சுளித்தனர். நோயிலும், வேதனையிலும், துன்பத்திலும் அவர்கள் காட்டிய சிரத்தை எனக்கு ஆச்சரியத்தை அளித்தது.

தங்களுக்கு எதிராக மனு தாக்கல் செய்ய நான் மறுத்தது அவர்களுக்கு ரொம்ப மகிழ்ச்சி அளித்தது என்பதை உணர்ந்த நான், தையற்காரரின் மனைவியிடமிருந்து புத்தகங்கள் கடன் வாங்க அனுமதி கோரினேன். அந்த நிலையில் அவர்கள் என் கோரிக்கையை மறுக்கத் துணியவில்லை. எனினும் கிழவி வியப்புடன் சொன்னாள் :

''நீ ஒரு சின்னச் சைத்தான்தான் !'' என்று.

மறுநாள் தையற்காரரின் மனைவி முன் நான் தோன்றிய பொழுது அவள் சொன்னாள் :

''உனக்கு நோய் என்றும், உன்னை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றிருப்பதாகவும் அவர்கள் சொன்னார்கள் ! வதந்திகள் பொய் என்பது தெரிகிறதா !''

நான் இதை மறுக்கவில்லை. உண்மையைச் சொல்ல எனக்கு வெட்கம். முரட்டுத்தனமான, துன்பகரமான ஒரு சங்கதியைச் சொல்லி அவளை ஏன் தொந்தரவு செய்ய வேண்டும் ? மற்றவர்களைப்போல் அவள் இல்லாதது எனக்கு மகிழ்ச்சி அளித்தது.

மூத்த டுமாஸ், போன்ஸன் டு டெரெயில், மோன்டேபின், ஸாக்கோன், கபோரியோ, ஐமார்ட், போயிஸ் ராபர்ட் ஆகியோர் நூல்களை நான் படிக்க ஆரம்பித்தேன். இந்தப் புத்த

கங்களை ஒன்றன் பின் ஒன்றாக நான் விரைவில் படித்து முடித்தேன். இது எனக்கு மகிழ்ச்சி அளித்தது. அசாதாரண வாழ்க்கையின் ஒரு பகுதியாக என்னை நானே கருதிக் கொண்டேன். இன்ப உணர்ச்சியை இது என்னில் தூண்டி விட்டு, எனக்குப் புதிய பலம் அளித்தது. மீண்டும் மொரு முறை என் கை விளக்குப் புகைய ஆரம்பித்தது. ஏனெனில் பொழுதுபுலரும்வரையில் நான் படித்தேன். என் கண்கள் வீங்கின. கேலிக் குரலில் என் கிழ எஜமானி சொன்னாள் :

"பொறு, புத்தகப் புழுவே ! உன் பாப்பா வெடித்து, நீ குருடனாவாய் !"

மாறுபட்ட கதையமைப்பும், வர்ணனைகளும் கொண்ட சுவாரஸ்யமான இந்த நூல்கள் ஒரே விஷயத்தைச் சொல்லுவதை நான் விரைவில் உணர்ந்தேன் : நல்ல மனிதர்கள் சதா துன்பம் அனுபவித்தார்கள்; கெட்டவர்களால் துன்புறுத்தப் பட்டார்கள்; கெட்டவர்கள் அதிர்ஷ்டசாலிகளாகவும், நல்லவர்களைவிடச் சாமர்த்தியசாலிகளாகவும் இருந்தார்கள்; இறுதியில் விளக்க முடியாத ஒரு சக்தி தீமையை ஒழிக்கிறது. நன்மை வெல்லுகிறது. ஒரே பாணியில் எல்லா ஆண்களும், பெண்களும் பேசிய "காதல்" எனக்குச் சலிப்பை அளித்தது. சலிப்பை அளித்தது மட்டுமல்ல, இந்த அற்பத்தனம் என்னிடம் தெளிவற்ற சந்தேகத்தைத் தூண்டிவிட்டது.

ஒரு புத்தகத்தின் சில பக்கங்களைப் படித்ததும், இறுதியில் யார் வெற்றி பெறுவார், யார் தோல்வியடைவார் என்பதை ஊகிக்க நான் ஆரம்பித்தேன். கதையமைப்பு தெளிவானதும், அதைக் கட்டவிழ்க்க நான் முற்படுவேன்; புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு, கணித சாஸ்திரத்தைப் பரிசீலனை செய்வதைப்போல், அதன் கதையமைப்பை நான் பரிசீலனை செய்வேன்.எந்தப் பாத்திரம் சொர்க்க சாம்ராஜ்யத்தை அடையும், எந்தப் பாத்திரம் சபிக்கப்பட்டு நகரம் செல்லும் என்று நான் காணும் முடிவு அநேகமாகச் சரியாக இருக்கும்.

இவைகளுக்கு அப்பால், மிகவும் முக்கியத்வம் வாய்ந்த ஒரு உண்மை எனக்குப் புலப்பட்டது. மாறுபட்ட உறவுகள் கொண்ட மற்றொரு வாழ்க்கையின் சாயலை நான் கண்டேன். நிழனி—நோவோகிராட், காஸான், பிரேம் முதலிய நகரங்

களில் இருந்தவர்களுக்கும், பாரிசில் வசித்த வண்டிக்காரர்கள், தொழிலாளர்கள், சிப்பாய்கள், கீழ்த்தட்டில் இருந்த பிறர் ஆகியவர்களுக்கும் வித்தியாசம் இருந்ததை நான் தெளிவாகக் கண்டேன். அவர்கள் தைரியத்துடன் கனவான்களிடம் பேசினர்; சுதந்திரத்துடன் கனவான்கள் முன்னிலையில் நடந்துகொண்டனர். இதோ இருக்கிறார் ஒரு சிப்பாய். ஆனால் எனக்குத் தெரிந்த எந்தச் சிப்பாயையும்—ஸிடோசோவையோ, கப்பலில் இருந்த சிப்பாயையோ, எர்மோக்கினையோ இவர் பிரதிபலிக்கவில்லை. அவர்களைவிட இந்தச் சிப்பாய் அதிக மனிதத்தன்மையுடையவனாக இருந்தான். இந்தச் சிப்பாயுடன் ஸ்மூரியை ஒப்பிடலாம்; ஆனால் ஸ்மூரியைப்போன்று இவன் அவ்வளவு முரட்டுத்தனமானவனல்ல. இதோ இருக்கிறார் ஒரு கடைக்காரர்; ஆனால் எனக்குத் தெரிந்த கடைக்காரர்களைவிட இவர் சிறந்தவர். புத்தகத்தில் வந்த பாதிரிகளுக்கும் எனக்குத் தெரிந்த பாதிரிகளுக்கும் வித்தியாசம் இருந்தது. அவர்களுக்கு ஜனங்கள்மீது அதிக அன்பும், அனுதாபமும் இருந்தன. பொதுவாக, புத்தகங்களில் வர்ணித்த அன்னிய நாடுகளின் வாழ்க்கை, எனக்குத் தெரிந்த வாழ்க்கையைவிட நன்றாகவும், எளிதாகவும், சுவாரஸ்யமானதாகவும் இருந்தது. வெளி நாடுகளில் ஜனங்கள் அடிக்கடி, மிருகத்தனமாகப் போராடவில்லை; கப்பல் பிரயாணிகள் சிப்பாயை விளையாட்டுக் கருவியாகக் கருதி விளையாடியதைப்போல், வெளி நாடுகளில் ஜனங்கள் மனிதனை விளையாடவில்லை; என் கிழட்டு எஜமானியைப்போல் வஞ்சம் தீர்க்கும் நோக்கத்துடன் அங்கே யாரும் கடவுளைப் பிரார்த்திக்கவில்லை.

துஷ்டனை வர்ணிக்கிறபொழுது, கீழ்த்தரமும், பேராசையும் படைத்த பாத்திரங்களை வர்ணிக்கிறபொழுது, விவரிக்க முடியாத குரூரமும், பிறரைக் கேலி செய்யும் வெறியும் படைத்தவர்களாக அவர்களை வர்ணிக்கவில்லை, அந்தப் புத்தகங்கள். அனுஷ்டான ரீதியான முறையில் புத்தகத்தில் வந்த துஷ்டன் குரூரனாக இருந்தான். அவர்கள் குரூரம் புரிந்து கொள்ளக் கூடியது. முட்டாள்தனமான, நோக்கமற்ற குரூ

ரத்தை, வேறு எந்த நோக்கமு மின்றி, வேடிக்கைக்காக மாத்திரம் செய்யும் குரூரத்தனத்தை நான் கண்டிருக்கிறேன்.

ஒவ்வொரு புதிய புத்தகமும், ரஷிய வாழ்க்கைக்கும் வெளி நாட்டு வாழ்க்கைக்குமுள்ள வித்தியாசத்தை வற்புறுத்திற்று. இது என் மனதில் தெளிவற்ற அதிருப்தியைத் தூண்டி விட்டது. பெரிய இந்தப் புத்தகங்களிலுள்ள மஞ்சள் பக்கங் கள் சொல்லுவது முழுக்க முழுக்க உண்மையல்ல என்னும் என் சந்தேகத்தை அதிகமாக்கிற்று.

பிறகு பிரதர் ஸெம்காலே என்னும் கான்கோர்ட் டின் நாவல் எனக்குக் கிடைத்தது. ஒரே இரவில் அதைப் படித்து முடித்துவிட்டேன். அதன் புதுமை என்னை ஆச்சரி யத்தில் ஆழ்த்தியதால், சோகம் நிறைந்த எளிய, அந்தக் கதையை நான் மீண்டும் படித்தேன். அதன் கதையமைப்பு சிக்கலானதாக இருக்கவில்லை ; மேலெழுந்தவாரியான ஆகர்ஷ ணம் அதில் இருக்கவில்லை. அடியார்களின் வாழ்க்கையைப் போல் அது மந்தமாகக்கூட இருந்தது, முதலில். அலங்கார மற்ற, நேரான நடை முதலில் எனக்கு ஏமாற்றத்தை அளித் தது. ஆனால் சுருக்கமான வார்த்தைகளும், வலிமைபடைத்த சொற்றொடர்களும் என் இதயத்தைத் தொட்டன ; இந்த சர்க்கஸ் சகோதரர்களின் நாடக வர்ணனை மனதைக் கவர்ந் தது. எனவே நான் இன்பத்தால் நடுங்கினேன். காலொடிந்த பரிதாபகரமான அந்த சர்க்கஸ்காரன், தங்கள் அருமையான கலையை ரகசியமாக கற்றுக்கொண்டிருந்த தனது சகோதரனைக் காண மச்சுக்கு ஏறினபொழுது என் இதயம் வெடித்து விடுமோ என்ற நிலை ஏற்படும்வரை நான் அழுதேன்.

அருமையான இந்தப் புத்தகத்தைத் தையற்காரரின் மனைவியிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு, இதே மாதிரியான இன்னொரு புத்தகம் தருமாறு கேட்டேன்.

" இதே மாதிரியான இன்னொரு புத்தகம் என்றால் என்ன அர்த்தம் ?" என்று அவள் சிரித்துக்கொண்டே கேட் டாள்.

அவள் சிரிப்பு என்னைக் கலங்கச் செய்தது. எனக்கு என்ன வேண்டும் என்பதை என்னால் விளக்க முடியாது போகவே, அவள் சொன்னாள் :

" அது மந்தமான புத்தகம். கொஞ்சம் பொறு. அதை விட நல்ல, அதைவிட சுவாரஸ்யமான ஒரு புத்தகம் தருகிறேன்."

சில தினங்களுக்குப் பிறகு கிரீன்வுட் எழுதிய சின்ன ராகாமப்பினுடைய உண்மைக் கதை என்னும் புத்தகத்தை அவள் கொடுத்தாள். அந்தப் புத்தகத்தின் தலைப்பைப் பார்த்து தன்னம்பிக்கையுடன் நான் முகத்தைச்சுழுக்கினேன். ஆனால் முதல் பக்கத்தைப் படித்ததும் என் முகத்தில் பூத்த இன்பப் புன்னகை புத்தகம் பூராவையும் படித்து முடிக்கும் வரையில், சில பகுதிகளை இரண்டு, அல்லது மூன்று தரம் படித்து முடிக்கும்வரையில் மறையவே இல்லை.

அப்படியானால் வெளிநாடுகளில்கூடச் சிறுவர்களின் வாழ்க்கை சிரமமாக இருக்கிறது! அவன் வாழ்க்கையுடன் ஒப்பிட்டுப் பார்த்தபொழுது என் வாழ்க்கை அதைவிட உயர்ந்ததாகத் தோன்றிற்று; வேறு பாஷையில் சொல்லுவதானால் சோர்ந்து போவதற்குக் காரணமில்லை.

கிரீன்வுட் எனக்கு மிகுந்த நம்பிக்கை அளித்தார். அதன் பிறகு உண்மையில் " சரியான புத்தகங்களில் " ஒன்றாகிய யூஜெனி கிராண்டெட் போன்ற புத்தகம் எனக்குக் கிடைத்தது.

வியோதிக கிராண்டெட் என் தாத்தாவை எனக்குத் தெளிவாக நினைவூட்டினார். அந்தப் புத்தகம் அவ்வளவு சிறியதாக இருந்ததிலே எனக்கு வருத்தம். ஆனால் அதிலே பொதிந்து கிடந்த உண்மை என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்திற்று. வாழ்க்கை எனக்குக் கற்றுக்கொடுத்த உண்மை இது. ஆனால் இந்த உண்மையைப் புதிய வெளிச்சத்தில்—சாந்தமான, பாரபட்சமற்ற கண்ணோட்டம் என்னும் வெளிச்சத்தில்—இந்தப் புத்தகம் காட்டிற்று. நான் படித்த ஆசிரியர்கள்—கான்கோர்ட்டைத் தவிர—எல்லோரும் என் எஜமானர்கள் பாணியில் கடுமையாக, ஆடம்பரமாக ஜனங்கள்மீது தீர்ப்புக் கூறினர். எனவே தஷ்டன்மீது வாசகர்கள் அனுதாபம் செலுத்தினர்; நல்ல குணம் படைத்த பாத்திரத்தின்மீது சலிப்படைந்தனர். எவ்வளவுதான் சிந்தித்தாலும், முயன்றாலும், முதல் பக்கத்திலிருந்து கடைசிப் பக்கம் வரையில் இந்த

நல்ல மனிதர்கள் வாசகர்களின் ஆராய்ச்சிக்குக் குறுக்கே கற்சுவரைப்போல் நிற்பதைக் கண்டு நான் சலிப்படைந்தேன். நிச்சயமாக, கெட்டஎண்ணம் படைத்தவர்கள் இந்தச் சுவரிலே மோதிச் சின்னபின்னமாவார்கள். ஆனால் ஒருவர் அன்பைத் தூண்டும் பொருளல்ல கல். அவர் எவ்வளவு பலமானதாகவும், அழகுடையதாகவும் இருந்தாலும், சுவருக்குப் பின்னே இருக்கும் ஆப்பிள் தோட்டத்தை அடைய விரும்புகிறவன், சுவரிலுள்ள கற்களே வியக்க முடியாது. இந்த நல்ல மனிதர்களுக்குப் பின்னே உண்மையும், முக்கியமானதும் மறைந்து கிடந்ததாக எனக்குத் தோன்றிற்று.

கான்கோர்ட்டிலும், கிரீன்வுட்டிலும், பால்ஸாக்கிலும் துஷ்டர்களேயோ, வீரர்களேயோ காண முடியாது. ஜீவனுடன் இயங்கும் சாதாரண ஜனங்களைத்தான் இவர்கள் நூல்களில் காண முடியும். அவர்கள் சொன்னவைகளேயும், செய்தவைகளேயும்விட மாறுபட்ட முறையில் யாரும் பேசவும், செயல் புரியவும் முடியாது என்பதை யாரும் புரிந்து கொள்ள முடியும்.

இங்ஙனம் "நல்ல புத்தகங்களேயும், சரியான புத்தகங்களேயும்" படிப்பதால் ஏற்படும் இன்பத்தை நான் அனுபவித்தேன். ஆனால் இத்தகைய புத்தகங்களே எப்படிக் கண்டு பிடிப்பது? இந்த வேலையிலே தையற்காரரின் மனைவியால் எனக்கு உதவிபுரிய முடியவில்லை.

"இதோ சில நல்ல புத்தகங்கள்" என்று கூறிக் கொண்டே ஆர்ஸன் ஹௌஸேயின் கை நிறைய ரோஜாக்கள், தங்கமும் ரத்தமும் என்னும் புத்தகத்தையும், பெல்லோ, பால்டே கோக், பால் பேவால் ஆகியோரின் நாவல்களேயும் எனக்குக் கொடுத்தாள். ஆனால் இப்பொழுது இத்தகைய புத்தகங்களைச் சிரமத்துடன்தான் என்னால் படிக்க முடியும்.

மார்யாட், வெர்னர் ஆகியோரின் நாவல்கள் அவளுக்குப் பிடித்திருந்தது; ஆனால் எனக்கு அவை பிடிக்கவில்லை. ஸ்பீல்ஹேகன் புத்தகமும் எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் அவர் பாக் கதைகள் எனக்கு ரொம்ப மகிழ்ச்சி அளித்தன. ஸ்டூ, யூகோ ஆகியோர் நூல்களைவிட, சர் வால்டர் ஸ்காட்டின்

நூல்கள் எனக்குப் பிடித்தன. என் உணர்ச்சியைத் தூண்டி விட்டு, எனக்கு இன்பமூட்டும் நூல்களை நான் விரும்பினேன்; பால்ஸாக் எழுதிய அருமையான நூல்களைப் போன்றவை களை நான் விரும்பினேன். சீனப் பொம்மை எனக்கு அவ் வளவு திருப்தி அளிக்கவில்லை.

நான் அவளைக் காணச் செல்லும்பொழுதெல்லாம் சுத்த மான சட்டை அணிந்துகொண்டு, தலையை வாரிக்கொண்டு, நாகரிகமாகத் தோற்றமளிப்பதற்குச் சாத்தியமான முயற்சி களெல்லாம் செய்துகொண்டு காணச் செல்வேன். இதிலே நான் வெற்றி பெற்றேனா என்பது சந்தேகம். ஆனால் என் கண்ணியத்தைக் கண்டு, என்னுடன் இன்னும் சரள மாக, நேசப்பான்மையில் பேசுவா ளென்றும், அவளுடைய ஒளி வீசிய அந்த வதனத்தில் நொடிப்பொழுதில் தோன்றி மறையும் புன்னகை இல்லாது பேசுவா ளென்றும் நான் நம்பி னேன். ஆனால் அவள் புன்னகை புரிந்துவிட்டு, தளர்ந்த மதுரமான குரலில் நிச்சயமாகக் கேட்பாள் :

" அதை நீ படித்தாயா ? அது உனக்குப் பிடித்ததா ?"

" இல்லை."

அழகிய தன் புருவங்களைச் சிறிது உயர்த்திக்கொண்டு, பழக்கமான குரலில் நெடுமூச்சுடன் கேட்பாள் :

" ஏன் ?"

"அதைப்பற்றி நான் ஏற்கெனவே வபடித்திருக்கிறேன்."

" எதைப்பற்றி ?"

" காதலைப்பற்றி."

முகத்தைச் சுளித்துக்கொண்டு, அவள் கிண்டலாகச் சிரித்தாள்.

" எல்லா புத்தகங்களும்தான் காதலைப்பற்றி எழுது கின்றன !"

பெரிய நாற்காலியிலே உட்கார்ந்துகொண்டு, கம்பளிச் செருப்பணிந்த தன் சிறிய கால்களை ஆட்டுவாள்; கொட்டாவி விடுவாள்; தன் நீலக் கௌன தோள்கள்மீது இழுத்துவிட்டுக் கொள்வாள் ; செக்கச் சிவந்த விரல் நுனியால் தன் மடிமீது இருக்கும் புத்தகத்தைத் தட்டுவாள்.

அவளிடம் நான் சொல்ல விரும்பினேன் :

" இங்கிருந்து நீங்கள் ஏன் போகவில்லை ? அதிகாரிகள் இன்னும் உங்களுக்குக் கடிதம் எழுதுகிறார்கள் ; உங்களைக் கேலி செய்கிறார்கள்."

என் கருத்தைச் சொல்ல எனக்குத் தைரியமில்லாத தால், " காதலை "ப்பற்றி இன்னொரு பெரிய புத்தகத்தை எடுத்துக்கொண்டு இதயபூர்வமான ஏமாற்றத்துடனும் நான் திரும்பிவிடுவேன்.

இந்தப் பெண்ணைப்பற்றிய வம்புப் பேச்சும், கேலியும் வீதியிலே அதிகரித்தன. பொய்யான, கேவலமான இந்தப் பேச்சைக் கேட்டு என் மனம் வேதனை அடைந்தது. அவளுடன் நான் இல்லாதபொழுது அவளுக்காக நான் அனுதாபப்பட்டேன், பயந்தேன். ஆனால் அவள் முன்னிலையில் நான் இருந்தபொழுது, அவள் கூரிய கண்களை நான் கண்ட பொழுது, அவள் சிறிய தேகத்தின் அழகைக் கண்ட பொழுது, அவள் " கம்பெனி " முகத்தைக் கண்டபொழுது, என் பயமும், அனுதாபமும் பனியைப்போல் மறைந்தன.

வசந்த காலத்தில் அவள் திடீரென்று போய்விட்டாள். சில தினங்களுக்குப் பிறகு அவள் கணவனும் போய்விட்டான்.

அந்த வீடு காலியாக இருந்தபொழுது வளர்ந்த ஆணிகளாலும், ஆணிக் குழிகளாலும், சித்திரங்கள் தொங்கிய இடங்கள் வர்ண பேதத்தாலும் அலங்கோலப்படுத்தப்பட்டிருந்த சுவர்களைக் காண நான் அங்கே சென்றேன். தரையிலே காகிதமும், பளபளப்பான துண்டுப் பொருள்களும், காலி மாத்திரைப் பெட்டிகளும், வாசனைப் புட்டிகளும் கிடந்தன. இவைகளுக்கு மத்தியில் பெரிய பித்தளை பின் மின்னிற்று.

நான் துக்கம் அடைந்தேன் ; அந்தத் தையற்காரனின் மனைவியை மீண்டுமொரு முறை கண்டு, என் நன்றியைத் தெரிவிக்க நான் ஆசைப்பட்டேன்.

10

தையற்காரரும், அவர் மனைவியும் அங்கிருந்து போகு முன்னரே எங்கள் மெத்தைக்குக் கீழே இருந்த பகுதியில் வேறு குடித்தனம் குடிவந்தது. கருவிழிகள் படைத்த ஒரு இளம் பெண்ணும், அவள் இளம் புதல்வியும், சதா அம்பர் குழாயில் சிகரெட் புகைத்துக்கொண் டிருந்த தலைநரைத்த அவள் கிழத் தாயும் கொண்டது அந்தக் குடும்பம். இளம் பெண் சொம்ப அழகாக இருந்தாள். அவள் பெருமை யுடையவளாகவும், துடுக்கானவளாகவும் இருந்தாள். அவள் குரல் தீர்க்கமானதாகவும், இன்பகரமானதாகவும் இருந்தது. தலையைப் பின்னே சாய்த்துக்கொண்டு, கண்களைச் சுருக்கிக் கொண்டு மற்றவர்களுடன் அவள் பேசியது சுவார்சியளிக்கக் கூடியதாக இருந்தது. அநேகமாக நாள்தோறும் அவள் சிப்பாய் சேவகன் துப்யாயெவ், மெல்லிய கால்கள் படைத்த பழுப்பு நிறக் குதிரையை அவள் வீட்டு முகப்புக்கு நடத்திச் செல்வான். நீண்ட சவாரி உடை அணிந்துகொண்டு, வெள்ளைக் கவசங்களும், செங்கல் நிறப் பூட்ஸும் அணிந்து அவள் தோன்றுவாள். ஒரு கையில் சவுக்கை வைத்துக் கொண்டு, மற்றொரு கையால் குதிரையின் மூக்கைத் தடவு வாள். அந்தப் பிராணி பல்லைக் காட்டும்; கண்களைச் சுழற் றும்; தரையில் உதைக்கும்; எழுச்சியால் அதன் தேகம் நடுங்கும்.

"சோபி, சோபி" என்று அவள் மிருதுவாக முணு முணுப்பாள், அழகாக வளைந்திருந்த அதன் கழுத்தில் தட் டிக்கொண்டே.

பிறகு துப்யாயெவ்வின் முழங்காலில் தனது காலை ஊன் றிக்கொண்டு, லாகவமாக குதிரைமீது ஏறுவாள். அணைக்கட்டு வரை, குதிரையை அவள் ஓட்டுவாள். குதிரைமீதே பிறந்த வளைப்போல் அவ்வளவு லாகவமாக அவள் சவாரி செய்வாள்.

அவள் கட்டழகி. அவள் அழகு புதுமையாகவும், இணை யற்றதாகவும் இருந்தது. அந்த அழகுகள் வெறியை ஊட்டி டின. சரித்திர சம்பந்தமான நாவல்களில் வரும் டயானே டே போட்டியேர்ஸ், ராணி மார்கோட், லா வாலியே போன்ற

மயக்கும் கதாநாயகிகள் இவளைப்போன்றுதான் இருந்திருக்க வேண்டும் என்று இவளைப் பார்த்தபொழுது நான் நினைத்தேன்.

எங்கள் நகரத்தில் முகாம் செய்திருந்த ராணுவத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சதா அவளைச் சூழ்ந்து நின்றனர். மாலையில் அவர்கள் அவள் வீட்டிற்கு வந்து பியானோ, பிடில், சித்தார் வாசித்தனர், பாடினர், நடனமாடினர். சிறிய கால்கள் படைத்த மேஜர் ஒலிவோவ் மற்றவர்களைவிட அதிகமாக அவள் முன் துள்ளினான். அவன் பருமனானவன்; வாணியனைப் போன்ற வழவழப்பான சிவந்த முகமும், நரைத்த மயிரும் படைத்தவன். அவன் திறமையாக சித்தார் வாசித்தான்; அந்த இளம் பெண்ணின் பணிவுள்ள, பக்தி பாவசமுள்ள வேலைக்காரனைப்போல் அவன் நடந்துகொண்டான்.

செழுமையான, சுருண்ட கூந்தல்படைத்த, அவளுடைய ஐந்து வயதுப் புதல்வி அவளைப்போல் கட்டழகியாக இருந்தாள். அவளுடைய பெரிய நீலக் கண்கள் சாந்தமாகவும், பதட்டமில்லாமலும், எதிர்பார்க்கும் முறையிலும் இருந்தன. அவளைப்போல் ஆழ்ந்து சிந்திக்கும் தன்மை குழந்தைக்குரிய குணமல்ல.

மந்தமான, மௌனியான துப்யாயெவ், வானம்பார்த்த பார்வை படைத்த தடித்த வேலைக்காரி ஆகியோரின் உதவியுடன் காலையிலிருந்து இருட்டும்வரையில் பாட்டி வீட்டுவேலைகளில் ஈடுபட்டாள். குழந்தைக்குத் தாதியில்லை. மேற்பார்வை இல்லாமல் குழந்தை வளர்ந்தது. நாள் முழுதும் அது திண்ணையிலோ, அல்லது திண்ணைக்கு எதிரிலிருந்த விறகுக் குவியலிலோ விளையாடிற்று. மாலையில் நான் அவளுடன் விளையாடினேன். அவளை நான் ரொம்ப நேசித்தேன். அவளும் என்னை நேசித்தாள். கட்டுக்கதைகளை நான் சொல்லும்பொழுது அவள் என் கைகளிலேயே படுத்து உறங்கி விடுவாள். அவள் தூங்கினதும், அவளை நான் மெத்தையில் படுக்கவைப்பேன். அவளுக்கு நான் "குட் நைட்" சொல்லவில்லை யென்றால், அவள் தூங்க மாட்டாள் என்ற நிலை விளைவில் ஏற்பட்டது. நான் அவள் அறைக்குள் பிரவேசித்ததும்

சிறிய, செழுமையான தனது கையை நீட்டிக்கொண்டு, கௌரவமான தொனியில் அவள் சொல்லுவாள் :

"நாளைவரையில் விடைபெறுகிறேன். இன்னும் என்ன சொல்ல வேண்டும், பாட்டி ?"

"கடவுள் உன்னைக் காக்கட்டும்" என்று வாய் வழியாகவும், மூக்கு வழியாகவும் புகைவிட்டுக்கொண்டே பாட்டி சொல்லுவாள்.

"நாளைவரைக் கடவுள் உன்னை காக்கட்டும். நான் இப்பொழுது தூங்கப் போகிறேன்" என்று மெத்தையில் படுத்துக்கொண்டு சொல்லிற்று, குழந்தை.

"நாளை வரையில் அல்ல; நிரந்தரமாக" என்று பாட்டி அவளைத் திருத்தினாள்.

"நாளைஎன்பது நிரந்தரமாக அல்லவா ?"

"நாளை" என்ற வார்த்தையை அவள் நேசித்தாள். தனக்கு விருப்பமானதை யெல்லாம் அவள் எதிர்காலத்திற்கு மாற்றினாள்.

பூக்களையோ, அல்லது கிளைகளையோ பூமியில் நட்டுவிட்டு அவள் சொல்லுவாள் :

"நாளை இது ஒரு தோட்டமாகும்."

"நாளை நான் ஒரு குதிரை வாங்கி அம்மாவைப்போல் சவாரி செய்வேன்."

அவள் புத்திசாலி ; ஆனால் ஆர்வம் படைத்தவளல்ல. அடிக்கடி விளையாட்டிற்கு மத்தியில் அவள் தூக்கமடைவாள். பிறகு எதிர்பாராத விதத்தில் கேட்பாள் :

"பெண்களைப்போல் பாதிரிகள் ஏன் கூந்தல் வைத்திருக்கிறார்கள் ?"

ஒரு நாள் அவளைப் பூனைக்காஞ்சோறி தீண்டிவிட்டது. அதை நோக்கி விரலை ஆட்டிக்கொண்டு அவள் எச்சரித்தாள்:

"ஜாக்கிரதை. இல்லை யெனில் நான் கடவுளைப் பிரார்த்திப்பேன். அவர் உனக்கு ஏதாவது தீங்கிழைப்பார். அவரால் யாருக்கும் தீங்கிழைக்க முடியும்—அம்மாவுக்குக்கூட."

சில சமயங்களில் தூக்கம் அவளைப் பீடிக்கும். என்னை நெருங்கி, தனது நீலக் கண்களால் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு அவள் சொல்லுவாள் :

" சில சமயங்களில் பாட்டி திட்டுகிறாள் : ஆனால் அம்மா திட்டுவதே இல்லை. அம்மா சிரிப்பாள். எல்லோரும் அம்மாவை நேசிக்கிறார்கள். ஏனெனில் அவளுக்கு ஒழிச் சலே இல்லை; எல்லோரும் அம்மாவைப் பார்க்க வருகிறார்கள். அழகாக இருப்பதால், எல்லோரும் அம்மாவைப் பார்க்கிறார் கள். அம்மா அற்புதமானவள். இதைத்தான் ஒலிஸெவ் சொல்லுகிறார் : அம்மா அற்புதமானவள் !"

எனக்கு அறிமுகமில்லாத உலகத்தைப்பற்றிக் குழந்தை வர்ணித்ததைக் கேட்டு நான் மகிழ்ந்தேன். உற்சாகத்துடன் தனது அம்மாவைப்பற்றி அவள் பேசினாள். ஒரு புதிய வாழ்க்கையை அவள் எனக்குக் காட்டினாள். ராணி மார் கோட்டின் கதை என் நினைவிற்கு வந்தது. புத்தகத்தின் மீது எனக்கு இருந்த பற்றை இது அதிகப்படுத்திற்று ; என் னைச் சுற்றி நடப்பவைமீதும் எனக்குப் பற்று ஏற்பட்டது.

உலாவச் சென்ற என் எஜமானர்கள் வருவதை எதிர் பார்த்துக்கொண்டு, கையில் தூங்கும் குழந்தையுடன் ஒரு நாள் மாலை நான் உட்கார்ந்திருந்தேன். அவள் அம்மா குதிரைமீது வந்து, கீழே குதித்தாள். தலையைப் பின்னே சாய்த்துக்கொண்டு கேட்டாள் :

" அவள் தூங்கிவிட்டாளா ?"

" ஆம்."

" உண்மையாகவா ?"

சிப்பாய் துப்யாயெவ் ஓடி வந்து, குதிரையை நடத்திச் சென்றான். சவுக்கைப் பெல்டில் சொருகிக்கொண்டு, இளம் பெண் கையை நீட்டியவாறு சொன்னாள் :

" அவளை என்னிடம் கொடு !"

" நானே அவளைத் தூக்கிக்கொண்டு வருகிறேன்."

" வேண்டாம் !" என்று காலைத் தரையில் மிதித்துக் கொண்டு அவள் கூவினாள், என்னைத் தன் குதிரையாக நினைத்துக்கொண்டு.

அந்தச் சிறுமி விழித்துக்கொண்டு பேந்தப் பேந்த விழித்தாள். தன் அம்மாவைக் கண்டதும், அவள் தன் கைகளை நீட்டினாள். அவர்கள் இருவரும் உள்ளே சென்றனர்.

என்னைப் பார்த்துப் பிறர் கூச்சலிட்டு நான் பழகி யிருக்கிறேன். ஆனால், இந்தப் பெண் கூச்சலிடுகிறாள் என்பதை அறிந்து நான் வேதனை அடைந்தேன். அவள் எவ்வளவு தான் மிருதுவாகக் கட்டளை யிட்டாலும், அவள் கட்டளைக்கு யாரும் பணிவர்.

சில நிமிடங்களுக்குப் பிறகு வேலைக்காரி வந்து என்னை அழைத்தாள். எனக்குக் "குட்நைட்" சொல்லாமல் படுக்கக் குழந்தை பிடிவாதமாக மறுத்துவிட்டது.

பெருமிதத்துடன், தன் மகளை மடியில் படுக்கவைத்துக் கொண்டு அந்த இளம் பெண் உட்கார்ந்திருந்த அறைக்குள் நான் பிரவேசித்தேன். அவள் குழந்தையின் உடைகளைக் கழற்றிக்கொண் டிருந்தாள்.

"நல்லது; அவன் இதோ வந்துவிட்டான். அவன் வந்துவிட்டான், உன் ராக்ஷஸன்" என்றாள் அவள்.

"அவன் ராக்ஷஸனல்ல; என் விளையாட்டுத் தோழன்."

"வாஸ்தவமாகவா? சொம்ப நல்லது. உன் விளையாட்டுத் தோழனுக்கு நான் வெகுமதி அளிக்கலாமா?"

"ஆம், அளிக்கலாம்."

"நல்லது. நீ படுத்துக்கொள். நான் அவனுக்கு ஏதாவது கொடுக்கிறேன்."

"நாளைவரை போய்வா" என்று தன் கையை நீட்டிக் கொண்டு சொன்னாள், அந்தச் சிறுமி. "நாளைவரை கடவுள் உன்னைக் காக்கட்டும்!"

"இப்படிச் சொல்ல உனக்கு யார் சொல்லிக் கொடுத்தார்கள்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் அவள் அம்மா.

"பாட்டியா?"

"ஆம்."

குழந்தை போனதும், அந்தப் பெண் என்னை அழைத்தாள்.

"உனக்கு நான் எதைக் கொடுக்கலாம்?"

எனக்கு ஒன்றும் தேவையில்லை யென்றும், படிப்பதற்குப் புத்தகம் இரவல் கொடுத்தால் போது மென்றும் நான் பதில் சொன்னேன்.

என் தாடையை மணம் கமழும் தன் வெப்பமான, விரல்களால் உயர்த்திவிட்டு, இன்பப் புன்னகை புரிந்து கொண்டு அவள் சொன்னாள் :

" அப்படியானால் புத்தகம் படிக்க உனக்கு விருப்பம் அல்லவா ? நீ என்ன புத்தகம் படித்திருக்கிறாய் ?"

புன்னகை புரிந்தபோதுதான் அவள் அழகு மேலும் பொலிவடைந்தது. கலக்கத்துடன் நான் சில நாவல்களின் பெயர்களைச் சொன்னேன்.

" உனக்குத் திருப்தியளிக்க எதை நீ அவைகளில் கண்டாய் ?" என்று மேஜைமீது தாளம் போட்டுக்கொண்டே அவள் கேட்டாள்.

குதிரையின் வியர்வை நாற்றம் கலந்த மலர்களின் நறுமணம் அவள் தேகத்திலிருந்து வீசிற்று. தீக்ஷண்யமான பார்வையால் அவள் என்னைப் பரிசீலனை செய்தாள். அதற்கு முன் அந்த மாதிரி என்னை யாருமே பார்த்ததில்லை.

அந்த அறையிலே இருந்த அழகிய நாற்காலி வகையறாவால், அந்த அறை ஒரு பறவையின் கூட்டைபோல் சிறிதாகத் தோன்றிற்று. செடிகளின் இலைகளிலே ஜன்னல்கள் மறைந்திருந்தன. கையெழுத்து மறையும் நேரத்திலே அடுப்பின் மீது இருந்த ஓடுகள் பால் வெள்ளையாக மின்னின. அதற்கு அருகிலே கரிய நிறத்தில் பளபளத்த பியானோ இருந்தது. புராதன ஸ்லாவோனிய எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட தாள்கள் சுவரிலிருந்த கிலட் சட்டங்களில் தொங்கின ; அவை ஒவ்வொன்றிலிருந்தும் நூலியில் பெரிய சில்லுளுள்ள கயிறுகள் தொங்கின. அந்தப் பொருள்களெல்லாம் பணிவுடனும், பக்தி பரவசத்துடனும் அந்தப் பெண்ணைப் பார்த்தன, நான் பார்த்ததைப்போல்.

வாழ்க்கை மந்தமானதாகவும், சிரமமானதாகவும் இருப்பதாக என் திறமைக்குத் தகுந்த மாதிரி நான் அவளுக்கு விளக்கினேன். ஆனால் புத்தகம் படிக்கும்பொழுது இவைகளை மறந்துவிடுவதாகவும் சொன்னேன்.

" வாஸ்தவமாகவா ?" என்று ஆச்சரியத்துடன் கேட்டுக்கொண்டே அவள் எழுந்தாள். " நீ நன்றாகச் சொன்னாய் ; நீ சொன்னது சரி யென்று நான் கருதுகிறேன்.

ஆனால் இது தவிர்க்க முடியாதது என்று நான் நினைக்கிறேன். உனக்கு நான் சந்தோஷத்துடன் புத்தகங்கள் கொடுப்பேன். ஆனால், தற்பொழுது என்னிடம் ஒரு புத்தகமும் இல்லை. என்னிடம் இதோ இருக்கும், இந்தப் புத்தகத்தை நீ எடுத்துக்கொள்ளலாம்.''

மஞ்சள் கலரில் பைண்டு செய்யப்பட்ட ஒரு பழைய புத்தகத்தை, '' கௌச்சிலிருந்து '' எடுத்துக் கொடுத்தாள்.

'' இதை நீ முடித்ததும், இரண்டாவது பாகத்தைத் தருகிறேன்—மொத்தம் நான்கு பாகங்கள்.''

இளவரசர் மெஷ்செர்ஸ்கி எழுதிய ஸெண்ட் பீட்டர்ஸ்பர்கின் ரகசியங்கள் என்னும் அந்தப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு நான் வெளியே சென்றேன். அதை நான் ஆர்வத்துடன் படிக்க ஆரம்பித்தேன். ஆனால் மாட்ரிட், அல்லது லண்டன், அல்லது பாரிஸ் ஆகிய நகரங்களின் ரகசியங்களைவிட ஸெண்ட் பீட்டர்ஸ்பர்கின் '' ரகசியங்கள் '' மந்தமாக இருந்தது என்பது விரைவில் தெளிவாயிற்று. அந்தப் புத்தகத்தில் எனக்குக் கவர்ச்சியளித்த ஒன்றே ஒன்று '' சுதந்திரமும், தடியும் '' என்ற கட்டுக் கதைதான்.

'' உன்னைவிட நான் சிறந்தவன் '' என்றது சுதந்திரம். '' ஏனெனில் நான் உன்னைவிட ஞானி.''

'' இல்லை ! உன்னைவிட நான் சிறந்தவன் ; ஏனெனில் உன்னைவிட நான் பலசாலி '' என்றது தடி.

சிறிது நேரம் விவாதித்த பிறகு, அவை சண்டை போட்டுக்கொண்டன. தடி சுதந்திரத்தைக் குரூரமாக அடித்தது. என் ஞாபகம் சரியாக இருக்குமானால், சுதந்திரம் ஆஸ்பத்திரியில் இறந்தது.

அந்தப் புத்தகத்திலிருந்த ஒரு பாத்திரம் அராஜகவாதி. இளவரசர் மெஷ்செர்ஸ்கி கருத்துப்படி அராஜகவாதி மிக ஆபத்தான பேர்வழி. அவன் பார்த்த மாத்திரத்தில் ஒரு கோழிக்குஞ்சு ஸ்தலத்திலேயே இறந்துவிடும். ''அராஜகவாதி'' என்னும் வார்த்தை அவமதிப்பான தென்றும், கௌரவக் குறைவான தென்றும் நான் கருதினேன். அதற்கு அப்பால் எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. இந்த உண்மை எனக்குச் சோர்வை அளித்தது. நல்ல புத்தகங்களைப் புரிந்துகொள்ளும்

சக்தி எனக்கில்லை என்பது இதிலிருந்து தெரிந்தது. இது நல்ல புத்தகம் என்பதை நான் சந்தேகப்படவே இல்லை. இவ் வளவு முக்கியத்வம்வாய்ந்த, அழகிய சீமாட்டி கெட்ட புத்த கத்தைப் படிக்கவே மாட்டாள்!

"உனக்கு இது பிடித்ததா?" என்று மெஷ்செர்ஸ்கி யின் நாவலைத் திருப்பிக் கொடுத்ததும் அவள் கேட்டாள்.

பிடிக்கவில்லை என்று சொல்லுவது சிரமமாக இருந்தது. அவளை வேதனைப்படுத்த நான் பயந்தேன்.

ஆனால் சிரித்துவிட்டு, கதவுக்குப் பின்னே அவள் படுக்கை யறைப் பக்கம் மறைந்தாள். அங்கிருந்து நீல நிறத் தில் மொராக்கோ தோல் பைண்டு செய்யப்பட்ட ஒரு நீலப் புத்தகத்துடன் அவள் திரும்பி வந்தாள்.

"இது நிச்சயமாக உனக்குப் பிடிக்கும். இதைக் கெடுத்துவிடாதே."

புஷ்கின் கவிதைத் திரட்டு இந்தப் புத்தகம். ஒரே மூச்சில் இதைப் படித்து முடித்துவிட்டேன். இணையற்ற அழகிய ஒரு இடத்தில், அதன் ஒவ்வொரு மூலையையும் ஏக காலத்தில் ஆராய ஆசை ஏற்படுவதைப் போன்ற ஆசையுடன் நான் அதைப் படித்தேன். சேற்றிலிருந்து வெளியே வந்து, எல்லாம் ஒளி மயமாகவும், பூத்துக் குலுங்குவதாகவும் இருந்த சோலைப் பாதையை,—ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடிவரை ஓடு முன், மிருதுவான புல்மீது கால் படும்பொழு தெல்லாம் ஏற்படும் இன்பத்தை அனுபவிக்கு முன் ஒரு நிமிடம் அதன் அழகிலே கட்டுண்டு நிற்க வைக்கும் சோலைப் பாதையை—அடைவதைப் போன்றிருந்தது.

புஷ்கின் கவிதையின் எளிய நடையும், சங்கீதமும் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியதால், அதன் பிறகு நீண்ட காலம் வசனம் எனக்குச் செயற்கையாகப்பட்டது. எனவே வசனத்தைப் படிப்பது சிரமமாக இருந்தது. ருஸ்லானும் லுட்மிலாவும் என்னும் நூலின் பீடிகை பாட்டியின் தலை சிறந்த கதைகளின் சாரத்தைப் போன்றிருந்தது. சில வரிகள் அவைகளின் மேன்மையால் என்னைப் பெரிதும் கவர்ந்தன.

அங்கே, கண்டுபிடிக்கப்படாத பாதைகளிலே
கண்டுபிடிக்கப்படாத விலங்குகளின்
அடிச் சுவடுகள் கிடந்தன.....

அற்புதமான இந்த வரிகளை நான் திரும்பப் படித்ததும், எனக்கு நன்றாகத் தெரிந்த ஆனால் தெளிவாகத் தெரியாத அந்தப் பாதைகள் என் பார்வையிலே தோன்றின ; கால் பட்ட புல் நிறைந்த அந்த ரகசியப் பாதைகளும், புல்மீது வெள்ளித் திவலைகளைப்போல் மின்னின. பனித் துளியும் என் கண்முன் தோன்றின. பூரணத்வத்துடன் ஒலித்த இந்தக் கவிதைகளை நினைவிலிறுத்துவது எளிதாக இருந்தது. எந்தக் கருத்தை வெளியிட்டாலும், அதற்கு அழகிய ஆபரணமாக அமைந்தது கவிதை. இது என்னை இன்பக் கடலில் ஆழ்த்தியதால், வாழ்க்கை எளிதாகவும், இன்பகரமானதாகவும் இருந்தது. கவிதை புது வாழ்க்கையின் முன்னேடியாக அமைந்தது. படிக்கும் நிலையில் இருப்பது எவ்வளவு இன்பகரமானது !

புஷ்கினுடைய இதர நூல்களைவிடக் கவிதை ரூபத்தில் அவர் சொன்ன இன்பகரமான கதைகள் என் மனதைத் தொடக் கூடியதாகவும் எனக்குப் புரியக் கூடியதாகவும் இருந்தன. மீண்டும் மீண்டும் படித்து அவைகளை நான் மனப் பாடம் செய்துகொண்டேன். பிறகு நான் படுத்ததும் கண்களை மூடிக்கொண்டு, தூங்கும்வரையில் கவிதையை முணு முணுத்துக்கொண் டிருப்பேன். சில சமயங்களில் அதிகாரிகளின் வேலைக்காரர்களுக்குப் பாடிக் காட்டுவேன். அவர்கள் சிரிப்பார்கள் ; ஆச்சரியத்துடன் சபிப்பார்கள். என் தலையில் தட்டிவிட்டு, ஸிடோரோவ் மிருதுவாகச் சொல்லுவான் :

" இவை எவ்வளவு நன்றாக இருக்கின்றன !"

நான் எவ்வளவு கிளர்ச்சி அடைந்திருக்கிறேன் என்பதை என் எஜமானர்கள் உணர்ந்தனர். எனவே கிழவி என்னைக் கண்டிக்க ஆரம்பித்தாள்.

"அவன் படிப்பதிலே மெய்மறந்து கிடப்பதால், நான்கு நாட்களாக ஸாமோவாரை அவன் பாலிஷ் செய்யவே இல்லை, கழிசடை ! சோலிங் பின்னுடன் அவனை நான்—"

ஆனல் ரோலிங் பின் என்றல் எனக்கென்ன ? இந்தக் கவிதையால் என்னை நான் பாதுகாத்துக்கொண்டேன் :

".....கிழச் சூனியக்காரி,
தீமையால் பீடிக்கப்பட்ட அவள் இருண்ட ஆத்மா....."

அழகிய அந்தச் சீமாட்டி என் மதிப்பில் மேலும் உயர்ந்தாள். இத்தகைய புத்தகங்களையா இவள் படிக்கிறாள் ! இவள் தையற்காரரின் சினப் பொம்மையல்ல !

அந்தப் புத்தகத்தை வருத்தத்துடன் அவளிடம் திருப்பிக் கொடுத்தபொழுது, நம்பிக்கையுடன் அவள் சொன்னாள் :

" இந்தப் புத்தகம் உனக்குப் பிடித்ததா, இல்லையா ? புஷ்கினைப்பற்றி நீ கேள்விப்பட்டிருக்கிறாயா ?"

இல்லை என்று நான் சொன்னேன். ஏனெனில் ஒரு மாசிகையில் அந்தப் புலவரைப்பற்றி நான் படித்திருக்கிறேன் என்றாலும், அவள் சொல்வதைக் கேட்க நான் விரும்பினேன்.

புஷ்கின் வாழ்க்கையையும், மரணத்தையும் அவள் சுருக்கமாகச் சொன்னதும், வேனிற் கால நாளைப்போல் ஒளி வீச, புன்னகை புரிந்துகொண்டு அவள் கேட்டாள் :

"ஒரு பெண்ணைக் காதலிப்பது எவ்வளவு ஆபத்தானது என்பது இப்பொழுது புரிகிறதா ?"

நான் படித்த புத்தகங்களைப் பொறுத்தவரையில், இது நிச்சயமாக ஆபத்தானது ; ஆனல் நல்லது.

" இது ஆபத்தானதாக இருக்கலாம். ஆனல் எல்லோரும் காதலிக்கிறார்கள் " என்றேன் நான். " பெண்ணுக்கும் கஷ்டம்தான்."

எல்லாவற்றையும் பார்ப்பதைப் போன்று, அவள் கீழ்ப் பார்வையால் என்னை உற்றுப் பார்த்தாள். பிறகு பதட்டமில்லாத குரலில் சொன்னாள் :

" உண்மையாகவா ? இதன் பொருள் என்ன என்பது உனக்குப் புரிகிறதா ? உனக்குப் புரிந்தால் இதை நீ என்றும் மறக்க மாட்டாய் என்று நான் நம்புகிறேன்."

பிறகு எந்தக் கவிதை என்னை அதிகமாகக் கவர்ந்தது என்று அவள் கேட்டாள்.

நான் விளக்கினேன்; உற்சாகத்துடன் கைகளை ஆட்டிக் கொண்டு பாடினேன். அவள் மௌனமாகக் கேட்டாள். பிறகு எழுந்திருந்து அங்குமிங்கும் நடந்துவிட்டு, சிந்தனையுடன் கேட்டாள் :

" நீ பள்ளிக்கூடத்திற்குப் போக வேண்டும், என் அருமையான குரங்கே ! நான் இதைப்பற்றி யோசிக்க வேண்டும். உன் எஜமானர்கள் உன் உறவினர்களா ?"

அவர்கள் என் உறவினர்கள் என்று நான் சொன்னதும், அவள் ஆச்சரியத்துடன் " ஓ !" என்றாள் ; இதற்கு நான் ஜவாப்தாரி என்பதைப்போல்.

ஸாங்ஸ் ஆப் பெராங்கர் என்னும் நூலை அவள் எனக்குக் கொடுத்தாள். சிவப்புக் கலரிலே அழகாகப் பைண்டு செய்யப்பட்ட, அழகிய வேலைப்பாடுகளுள்ள அட்டையுடன் கூடிய புத்தகம் அது. வெறுப்பையும் குதூகலத்தையும் இணைக்கும் இந்தப் பாடல்கள் என்னை இன்ப மயக்கத்தில் ஆழ்த்தின.

" வயோதிகப் பிச்சைக்காரன் " என்னும் பாடலைப் படித்தபொழுது என் நரம்புகளிலே ரத்தம் உறைந்தது.

வெறுக்கத்தக்க பூச்சிகளை நசுக்குவது போல, நல்ல ஜனங்களே !

உங்கள் காலடியில் போட்டு என்னை ஏன் நீங்கள் நசுக்காமல் இருக்கிறீர்கள் ?

மனிதகுலத்துக்கு நலம் ஏற்படும் வகையில் நீங்கள் எனக்குக் கற்றுக்கொடுத்து இருந்தால் ' ஆகா ' எப்படி இருந்திருக்கும் !

கொடுங் குளிர் தாக்காமல் உங்களை நான் பாதுகாப்பேன்.

புழுவான நான், சுறுசுறுப்புள்ள எறும்பாக ஆகிவிடுவேன்.

உடன்பிறந்த சகோதரனைப்போல உங்களை நான் நேசிப்பேன்.

ஆனால் உங்கள் கிழட்டு அநாதையான நான், உங்களின் எதிரியாக இருந்து மடிந்து போகிறேன்.

ஆனால் "அழும் கணவன்" என்ற பாட்டை நான் படித்ததும் கண்களில் கண்ணீர் வரும்வரையில் நான் சிரித்தேன். பெராங்கர் சொன்ன வார்த்தைகள் என் நினைவில் படிந்துவிட்டன :

சந்தோஷமாக இருக்கக் கற்றுக்கொள்வது,
எளிய ஆத்மாக்களுக்குக் கஷ்டமான காரியம் அன்று.

பெராங்கர் தவிர்க்க முடியாத உற்சாகத்தைத் தூண்டி விட்டார். விஷமம் செய்யவும், வேடிக்கையாகப் பேசவும், துடுக்கான அபிப்பிராயம் சொல்லவும் எனக்கு ஆசை ஏற்பட்டது. இந்த ஆசையை நான் அதிவிரைவில் நிறைவேற்றிக் கொண்டேன். அவர் கவிதைகளை நான் மனனம் செய்து கொண்டேன். அதிகாரிகளின் குசினிகளுக்குச் செல்லச் சந்தர்ப்பம் கிடைத்தபொழு தெல்லாம், அளவுகடந்த உற்சாகத் துடன் நான் பாடுவேன்.

விரைவில் இவைகளைக் கீழ்க்கண்ட பாடலுக்காகக் கைவிடவேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டது :

இந்தத் தொப்பி பதினாறு வயதுக் குமரிக்குப் பொருந்துமா ?

இந்தப் பாட்டு, பெண்களைப்பற்றி வெறுக்கத்தக்க விவாதத்தில் முடிந்தது. இந்த அவமதிப்பு என்னைப் பைத்தியக்காரனாக்கிவிட்டது. சிப்பாய் எர்மோக்கினை ஒரு பாத்திரத்தால் நான் தலையில் அடித்தேன். அவனுடைய கரடி போன்ற பிடியிலிருந்து ஸிடோரோவும், ஏனைய வேலைக்காரர்களும் என்னை விடுவித்தனர். ஆனால் அதன் பிறகு அதிகாரிகளின் குசினிக்குச் செல்ல நான் துணியவில்லை.

உலாவச் செல்ல எனக்கு அனுமதியில்லை ; உலாவச் செல்ல நேரமும் இல்லை. என் வேலை அதிகரித்துவிட்டது. ஏனெனில் வேலைக்காரி, குப்பைக்காரன், தூது செல்லும் பையன் ஆகியோர் வேலைகளைச் செய்வதைத் தவிர, ஒரு பெரிய சட்டத்தில் காலிகோவை ஆணியடித்துப் பொருத்த வேண்டிய வேலையும், அதன்மீது என் எஜமானரின் சித்திரங்களைப்

பொருத்த வேண்டிய வேலையும், அவர் கட்டிடப் பிளான்களை நகல் எடுக்க வேண்டிய வேலையும், கன்டிராக்டரின் பில்களைச் சரிபார்க்க வேண்டிய வேலையும் எனக்கு நாள்தோறும் இருந்தன. யந்திரத்தைப் போன்று, என் எஜமானர் காலையிலிருந்து இரவுவரையில் வேலை செய்தார்.

அந்தச் சமயத்தில் சந்தை மைதானத்திலிருந்த பொதுக் கட்டிடங்கள் வியாபாரிகளின் தனிச் சொத்தாயின. கடைகளைப் புனர் நிர்மாணம் செய்ய அவசர முயற்சிகள் செய்யப்பட்டன. பழைய கடைகளை ரிப்பேர் செய்யவும், புதிய கடைகளைக் கட்டவும் என் எஜமானர் கன்டிராக்ட் எடுத்தார். "நேரான வளைவுகளும், ஜன்னல்களும்" இவை போன்றவைகளும் கட்ட அவர் பிளான் தயாரித்தார். இவைகளையும், இருபத்தைந்து ரூபிள் கொண்ட கவரையும் எடுத்துக் கொண்டு, ஒரு பழைய கட்டிட நிர்மாணகரிடம் சென்றேன். பணத்தைப் பெற்றுக்கொண்டு பிளான்மீது அவர் எழுதுவார்: "கட்டிடங்களைப் பார்வையிட்டு, பிளானை ஒப்பிட்டுப் பார்த்தேன். கீழே கையொப்பமிட்டிருப்பவரின் நேரடியான மேற்பார்வையில் எல்லா வேலைகளும் நடக்கின்றன." உண்மையில் கட்டிடங்களைப் பார்வையிட்டு எந்த பிளானும் செக் செய்யப்படவில்லை. அவர் உடல்நிலை வீட்டைவிட்டு வெளியேற முடியாததாக இருந்ததால், எந்தக் கட்டிட வேலையையும் அவரால் மேற்பார்வையிட முடியாது.

சந்தை இன்ஸ்பெக்டருக்கும், மற்றவர்களுக்கும் நான் லஞ்சம் கொடுத்து, "சட்டத்தை மீற அனுமதிகள்" பெற்றேன். இந்தத் தஸ்தாவேஜிகளை இப்படித்தான் வர்ணித்தார் என் எஜமானர். இவைகளுக்கு எல்லாம் பரிசாக என் எஜமானர்கள் நண்பர்களைச் சந்திக்கச் சென்றபொழுது, மாலையில் அவர்களுக்காகக் கொல்லையில் காத்திருக்க எனக்கு உரிமை கிடைத்தது. இது அபூர்வமாகத்தான் நடந்தது. இது எப்பொழுதாவது நடந்தால், அவர்கள் நடுநிசியில்தான் திரும்புவார்கள். எனவே, முகப்பிலோ, அல்லது விறகுக் குவியல்மீதோ உட்கார்ந்துகொண்டு என் சீமாட்டியின் வீட்டு ஜன்னல்மூலம் உள்ளே பார்க்கவும், அங்கிருந்து வரும்

உல்லாசமான கீதத்தையும், சம்பாஷணையையும் கேட்கவும் எனக்குப் பல மணி நேர அவகாசம் கிடைத்தது.

ஜன்னல்கள் திறந்திருக்கும். படுதாக்கள் மூலம் அறைகளிலே அதிகாரிகளின் அழகிய வடிவங்கள் நாடமாடுவதும், எளிய அழகிய உடை அணிந்திருந்த என் சீமாட்டியை அந்தக் கோமாளி மேஜர் வட்டமிடுவதும் எனக்குத் தெரியும்.

என் மனதில் அவளை நான் ராணி மார்கோட் என்று அழைத்தேன்.

"பிரெஞ்சு நாவல்களில் வர்ணிக்கப்பட்ட உல்லாச வாழ்க்கை இதுதான் போலும்!" ஜன்னலைப் பார்த்துக் கொண்டே நான் இப்படி நினைத்தேன். சதா நான் கொஞ்சம் துக்கமடைந்தேன். மலரைச் சுற்றி வண்டுகள் வட்டமிடுவதைப்போன்று ராணி மார்கோட்டைச் சுற்றி இந்த மனிதர்கள் வட்டமிடுவதைக் காண என் குழந்தைப் பெருமை துடித்தெழுந்தது.

வடுவுள்ள நெற்றியும், கனத்த கண்களும் படைத்த உயரமான, கௌரவமான ஒரு அதிகாரி அவளை அபூர்வமாகச் சந்தித்தான். தன் பிடிலை அவன் தன்னுடன் கொண்டு வந்தான். அவன் அற்புதமாகப் பிடில் வாசித்தான். அவன் சொம்ப அற்புதமாக வாசித்ததால், வீதியிலே போகிறவர்கள் சங்கீதத்தைக் கேட்க நின்றுவிடுவார்கள்; எங்கள் வீதியிலே குடியிருந்தவர்கள் விறகுக் குவியல்மீது உட்கார்ந்து சங்கீதம் கேட்பார்கள்; என் எஜமானர்கள் வீட்டில் இருந்தால், அவர்கள்கூட ஜன்னலைத் திறந்துகொண்டு சங்கீதத்தைக் கேட்டு, பாட்களைப் புகழ்வார்கள். பாதிரியைத் தவிர வேறு யாரையும் அவர்கள் புகழ்ந்து நான் கேட்டதில்லை. இந்தச் சங்கீதத்தைவிட மீன் கறியை அதிக இன்பத்துடன் அவர்கள் அனுபவிப்பார்கள் என்பதும் எனக்குத் தெரியும்.

சில சமயங்களில் அந்த அதிகாரி உரக்க மூச்சுவிட்டுக் கொண்டு, கையை நெற்றிமீது அழுத்திக்கொண்டு தனது கம்மலான குரலில் பாடுவான். ஒரு நாள் அந்தச் சிறுமியுடன் ஜன்னலுக்குக் கீழே நான் விளையாடிக்கொண்டிருந்த பொழுது, அவளைப் பாடுமாறு வேண்டினாள், ராணி மார்

கோட். கொஞ்ச நேரம் அவன் பாட மறுத்தான். பிறகு துல்லியமாகச் சொன்னான் :

பாடலுக்கு அழகு அவசியம் தேவை ;
ஆனால் அழகுக்குப் பாடல் தேவையில்லை.

இந்த வரிகள் எனக்குப் பிடித்தன. எக்காரணத்தாலோ, அந்த அதிகாரிக்காக நான் வருந்த ஆரம்பித்தேன்.

அறையில் வேறு யாருமில்லாமல், பியானோவுக்கு அருகில் என் சீமாட்டி தனியே உட்கார்ந்திருப்பதைக் காண நான் சொம்ப விரும்பினேன். சங்கீதம் எனக்குக் கேட்டது. ஜன்னலைத் தவிர வேறொன்றையும் நான் காணவில்லை. ஜன்னலுக்கு அப்பால் மனோகரமான ஒரு பெண்ணின் உருவம் செதுக்கப்பட்டிருந்தது. அவளது கம்பீரமான பக்கப் பார்வை சொம்ப நாசுக்காக இருந்தது. பறவைகளைப்போன்று அவள் வெண் கரங்கள் பியானோமீது அசைந்துகொண்டிருந்தன.

அவளை நான் பார்த்தேன் ; சோகம் நிறைந்த சங்கீதத்தைக் கேட்டேன் ; கற்பனைக் கனவுகள் கண்டேன். ஒரு நாள் புதையலை நான் கண்டுபிடிப்பேன், அந்தப் புதையலை அவளுக்குக் கொடுப்பேன், அவள் பணக்காரியாகட்டும் ! நான் ஸ்காபிலெவாக இருந்தால், துருக்கிமீது நான் மீண்டும் யுத்தப் பிரகடனம் செய்வேன் ; கைதிகளுக்கு மீட்சித் தொகை விதிப்பேன் ; அவளைப்பற்றி ஆபாசமான வதந்திகளைப் பரப்பிய ஜனங்களைக் கொண்ட எங்கள் வீதியிலிருந்தும், எங்கள் வீட்டிலிருந்தும் அவள் போக வேண்டும் என்பதற்காக நகரிலுள்ள மிகச் சிறந்த இடமாகிய ஓட்கோஸில் அவளுக்கு ஒரு வீடு கட்டிக் கொடுப்பேன்.

தையற்காரரின் மனைவியைப்பற்றிக் கேவலமாகப் பேசியதைப்போன்று ராணி மார்கோட்டைப்பற்றியும் எங்கள் வீட்டில் வேலை செய்த எல்லா வேலைக்காரர்களும், குடித்தனக்காரர்களும்—குறிப்பாக என் எஜமானர்களும்—கேவலமாகப் பேசினர். ஆனால் இவளைப்பற்றி அதிக ஜாக்கிரதையாக, தணிந்த குரலில், அக்கம் பக்கம் பார்த்துக்கொண்டு பேசினர்.

அவள் உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவரின் விதவை என்பதற்காக, ஒருக்கால் அவர்கள் அவளுக்கும் பயப்படலாம்.

சுவரில் தொங்கும் தஸ்தாவேஜிகள் அவளுடைய கணவரின் முன்னோர்களுக்குக் கொடுனேவ், அலெக்ஸி, மகா பீட்டர் உட்பட பல ஜார்கள் கொடுத்த சாஸனங்கள் என்று துப்யா யெவ் ஒரு நாள் என்னிடம் சொன்னன். (இவன் படித்தவன்— சதா இவன் பைபிளைப் படித்தான்.) அவள் தனது குதிரைச் சவுக்கால் தங்களை அடிக்கலாம் என்று ஒருக்கால் மற்றவர் கள் அவளுக்கும் பயப்படலாம். ஒரு முக்கிய அதிகாரியை ஒரு தரம் அவள் சவுக்கால் அடித்திருப்பதாக ஜனங்கள் பேசிக்கொண்டனர்.

உரத்துப் பேசப்படும் வார்த்தைகளைவிடத் தணிவாகப் பேசப்படும் வார்த்தைகள் எந்த வகையிலும் சிறந்தவை ஆகிவிடா. எதிர்ப்பு என்னும் மேகத்தால் சூழப்பட்டு என் சீமாட்டி வாழ்ந்தாள். இது எனக்கு வேதனையும், குழப்பமும் அளித்தது. நடுநிசிக்குப் பிறகு, தான் ஒரு நாள் வீடு திரும்பிய தாகவும், ராணி மார்கோட்டின் படுக்கையறை ஜன்னல்மூலம் உள்ளே எட்டிப் பார்த்தபொழுது அரை நிர்மாணமாக அவள் ஒரு சோபாவில் உட்கார்ந்திருந்ததாகவும், அவள் காலடியிலே உட்கார்ந்துகொண்டு அவள் கால் விரல் நகங்களை மேஜர் வெட்டிக்கொண் டிருந்ததாகவும், அவள் கால்களை கழுவிக்கொண் டிருந்ததாகவும் விக்டர் சொன்னன்.

காரி உமிழ்ந்துவிட்டு என் கிழ எஜமானி ஏசினாள்; சின்னவளின் முகம் கோபத்தால் சிவந்தது.

"விக்டர்!" என்று அவள் ஓலமிட்டாள். "உனக்கு வெட்கமாக இல்லையா? அந்த உயர்ந்தவர்கள் எவ்வளவு கேவலமானவர்கள்!"

என் எஜமானர் புன்னகை புரிந்தார்; ஆனால் ஒன்றும் சொல்லவில்லை. அவர் ஒன்றும் சொல்லாததற்காக அவ ருக்கு நன்றி செலுத்தினேன். ஆனால் அந்த ஓசையை அதிகப்படுத்த அவரும் ஏதாவது சொல்லுவா ரென்று நான் பயந்தேன். "ஆ ஊ" என்று சொல்லிக்கொண்டே, அந்தப் பெண் எப்படி உட்கார்ந்துகொண் டிருந்தாள், அந்த மேஜர் எப்படி மண்டியிட்டார் என்ன போன்ற விவரங் களை வர்ணிக்குமாறு அவர்கள் விக்டரைத் தூண்டினர். விக்டர் பொறுக்கு மணிகளை அவர்கள்மீது வீசினன்.

" அவன் முகம் சிவந்திருந்தது ; அவன் நாக்கு வெளியே தொங்கிக்கொண் டிருந்தது..."

என் சீமாட்டியின் கால்விரல் நகங்களை மேஜர் வெட்டியதில் வெட்கப்படுவதற்கு ஏதும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. ஆனால் அவன் நாக்கு வெளியே தொங்கிக்கொண்டிருந்தது என்பதை நான் நம்பவில்லை. இது வெறுக்கத்தக்க பொய் என்று எனக்குப் பட்டது.

" அது அவ்வளவு கேவலமானதாக இருந்தால், ஜன்னல் மூலம் நீ ஏன் உள்ளே எட்டிப்பார்த்தாய் ?" என்றேன் நான். " நீ குழந்தையல்லவே !"

அவர்கள் என்னைத் திட்டினார்கள். ஆனால் நான் இதைப் பொருட்படுத்தவில்லை. நான் ஒரு காரியத்தைச் செய்ய மாத்திரம் விரும்பினேன். கீழே ஓடிச் சென்று, மேஜர் மண்டியிட்டதைப்போல் என் சீமாட்டிக்கு முன்னே மண்டியிட்டு அவளிடம் கீழ்வருமாறு சொல்ல விரும்பினேன் :

" தயவு கூர்ந்து இந்த வீட்டிலிருந்து போய்விடுங்கள்!"

வேறு விதமான வாழ்க்கையும், வேறு விதமான ஜனங்களும், வேறு விதமான உணர்ச்சியும், வேறு விதமான கருத்தும் இருக்கிறது என்பது இப்பொழுது எனக்குத் தெரிந்து விட்டதால், இந்த வீட்டின்மீதும், இதில் வசிப்பவர்மீதும் எனக்கு மேலும் அதிக வெறுப்பு ஏற்பட்டது; கீழ்த்தரமான வம்பு என்னும் வலையிலே இது பின்னிக் கிடந்தது. இதிலிருந்து யாருமே தப்பவில்லை. எளிய, நோய்வாய்ப்பட்ட பட்டாளப் பாதிரி வெறுக்கத்தக்க குடிகாரன் ; என் எஜமானர்களின் தீர்ப்புப்படி எல்லா அதிகாரிகளும், அவர்கள் மனைவிகளும் பாவ வாழ்க்கை நடத்தினர். பெண்களைப் பற்றிச் சிப்பாய்கள் பேசிய சலிப்பளிக்கும் பேச்சை நான் வெறுத்தேன். ஆனால் என் எஜமானர்களை எல்லாவற்றையும் விட நான் அதிகமாக வெறுத்தேன். மற்றவர்கள்மீது அவர்கள் கூறும் தீர்ப்பின் உண்மையான மதிப்பு என்ன என்பது எனக்கு நன்றாகத் தெரியும். மற்றவர்களைச் சின்னபின்னமாக்குவது மாத்திரம்தான் செலவில்லாத வேடிக்கை ; எனவே இது மாத்திரம்தான் அவர்கள் ஈடுபட்ட வேடிக்கை. சாரமற்ற, பக்தி பாவசமான, மந்தமான தங்கள் சொந்த

வாழ்க்கைக்காக அவர்கள் வஞ்சம் தீர்த்துக்கொள்வதைப் போன்றிருந்தது.

ராணி மார்கோட்டைப்பற்றி அவர்கள் கீழ்த்தரமான கதைகள் சொன்னபொழுது என் வயதிற்கு அப்பாற்பட்ட உணர்ச்சி வலிப்பு எனக்கு ஏற்பட்டது. வம்பளப்பவர்கள் மீது எனக்கு ஏற்பட்ட வெறுப்பால் என் இதயம் வெடித்துவிடும் போலிருந்தது. அவர்களைத் துன்புறுத்த வேண்டும், விரோதித்துக்கொள்ள வேண்டும் என்னும் கட்டுப்படுத்த முடியாத ஆசை எனக்கு ஏற்பட்டது. சில சமயங்களில் என்மீதும், மற்றவர்கள்மீதும் எனக்கு இரக்கம் ஏற்பட்டது. வெறுப்பைவிட விளங்காத இந்த இரக்கம் சகிக்க முடியாததாக இருந்தது.

அவர்களைவிட எனக்கு என் ராணியைப்பற்றி அதிகமாகத் தெரியும். எனக்குத் தெரிந்ததை அவர்களும் தெரிந்துகொண்டுவிடுவார்க ளென்று நான் பயந்தேன்.

ஞாயிற்றுக்கிழமை காலையில் குடும்பத்தார் கோயிலுக்குச் சென்றதும், நான் என் சீமாட்டியைக் காணச் செல்வேன். தனது படுக்கையறைக்கு அவள் என்னை அழைப்பாள். தங்கவர்ண சில்கால் மூடப்பட்ட நாற்காலியில் நான் உட்காருவேன். அந்தச் சிறுமி என் மடியில் ஏறி உட்கார்ந்துகொள்வாள். அவள் தாயாரிடம் நான் படித்த புத்தகங்களைப்பற்றிச் சொல்லுவேன். என் ராணி தன் இரண்டு சிறிய கரங்களைத் தலைக்கு வைத்துக்கொண்டு பெரிய மெத்தையில் படுத்திருப்பாள். அந்தப் படுக்கை அறையில் எல்லாம் தங்க வர்ணத்தால் மூடப்பட்டிருந்ததைப் போன்று, அவள் தேகம் தங்க வர்ணப் போர்வையில் மறைந்து கிடந்தது. அவள் கரிய கூந்தல் அவள் பிங்கல வர்ணத் தோளில் கயிற்றைப் போன்று கிடந்தது. சில சமயங்களில் அவள் கரிய கூந்தல் மெத்தையின் நுனியிலிருந்து தரையில் தொங்கிற்று.

மிருதுவான தன் கண்களால் என்னைப் பார்த்துக் கொண்டு, நான் சொல்லுவதை அவள் கேட்பாள். புன் முறுவல் பூத்துக்கொண்டு அவள் சொல்லுவாள் :

" உண்மையாகவா ?"

அவள் புன்னகைகூட ஒரு ராணியின் தயை நிறைந்த புன்னகையாக இருந்தது. தீர்க்கமான, அன்பான குரலில் அவள் பேசினாள். ஆனால் சதா அவள் ஒரே விஷயத்தைத் திரும்பத் திரும்பச் சொன்னதாக எனக்குத் தோன்றிற்று.

"மற்றவர்களைவிட நான் சிறந்தவள், உயர்ந்தவள். ஆகவே அவர்களால் எனக்கு எத்தகைய பிரயோஜனமும் இல்லை."

பாட்டியின் கூந்தலைப் போல் நீளமாகவும், அடர்த்தியாகவும் வளர்ந்திருந்த தன் கூந்தலை, கண்ணாடிக்கு முன்னே கிடந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு அவள் சில சமயங்களில் சீவி முடிப்பதை நான் பார்த்திருக்கிறேன். கூந்தல் அவள் முழங்கால்களிலும், நாற்காலியின் கைகளிலும், நாற்காலிக்குப் பின்னும் தொங்கிக்கொண்டிருந்தது. உறுதியான, கனத்த அவள் ஸ்தனங்களை கண்ணாடியில் நான் கண்டேன். என் முன்னிலையில் அவள் காலுறைகளையும், ஜம்பரையும் அணிந்துகொண்டாள். ஆனால் அவள் நிர்வாணத் தோற்றம் என்னிலே எத்தகைய வெட்ககரமான உணர்ச்சிகளையும் தூண்டிவிடவில்லை. அவள் அழகு எனக்கு இன்பம் கலந்த பெருமையளித்தது. அவளிலிருந்து சதா மலரின் நறுமணம் வெளிப்பட்டது. அவளைப்பற்றி இழிவான எண்ணம் கொள்ளாமலிருக்க இது கவசமாக அமைந்தது.

நான் பலசாலியாகவும், தேகாரோக்கிய முடையவனாகவும் இருந்தேன். ஆண் பெண் உறவின் ரகசியம் எனக்குத் தெரியும். ஆபாசமாக, இதயமற்ற முறையில், வெறுக்கத்தக்க இன்பத்துடன் ஆண் பெண் உறவைப்பற்றி மற்றவர்கள் பேசுவதை நான் கேட்டிருந்ததால் ஒரு ஆணின் கழுவலில் இந்தப் பெண் இருப்பதை என்னால் கற்பனை செய்யக்கூட முடியவில்லை. தைரியமாக, வெட்கமற்ற முறையில் அவள் மீது கைவைக்க, அவள் தேகத்திற்குச் சொந்தமானவன் என்ற முறையில் அவள்மீது கைவைக்க யாருக்கும் உரிமை இருப்பதாக நான் நம்பவில்லை. குசினிக் காதல் தொழுவக் காதலுக்கு ராணி மார்கோட் முற்றிலும் புறம்பானவள் என்று திடமாக நம்பினேன்; இதைவிட இன்பமளிக்கும் ஒன்று,

வேறு விதமான காதல் அவளுக்குத் தெரியு மென்று நான் திடமாக நம்பினேன்.

ஒரு நாள் பிற்பகல் நான் கூடத்திற்குள் பிரவேசித்ததும் கணீரென்று ஒலிக்கும் அவள் சிரிப்பையும், ஒரு ஆணின் குரலையும் கேட்டு அப்படியே நின்றுவிட்டேன். அந்தக் குரல் அவள் படுக்கை யறையிலிருந்து வந்தது.

"அவசரப்படாதே!" என்று கெஞ்சினான் ஆண். "கடவுளே! இது நம்ப முடியாதது!"

நான் அப்பொழுதே போயிருக்க வேண்டும். ஆனால் நகர எனக்குச் சக்தி யிருக்கவில்லை.

"அங்கே யார்?" என்று அவள் கேட்டாள். "ஓ, நீயா? உள்ளே வா."

மலர்களின் நறுமணம் அறையில் கமழ்ந்தது. ஜன்னல் களுக்குத் திரையிட்டிருந்ததால், உள்ளே இருட்டாக இருந் தது. தாடைவரை போர்வையை போர்த்துக்கொண்டு ராணி மார்கோட் மெத்தையில் படுத்திருந்தாள். அவளுக்கு அரு கில் சுவரில் சாய்ந்துகொண்டு சட்டை மாத்திரம் அணிந்து கொண்டு அதிகாரி—பிடில்காரன் உட்கார்ந்திருந்தான். பொத் தான் போடாமல் சட்டையை மட்டும் அவள் போட்டிருந்த படியால் இடதுபுறத் தோளிலிருந்து முலைக்காம்பு வரையில் நீண்டுகிடந்த ஒரு சிவப்புவடு அந்த அரை வெளிச்சத்தில்கூடத் தெளிவாகத் தெரிந்தது. அதிகாரியின் தலைமயிர் கலைந்திருந் தது. அவன் வேதனை நிறைந்த, வடுவுள்ள முகத்தில் முதல் முறையாக நான் புன்னகையைக் கண்டேன். அவன் நூதன மாகப் புன்னகை புரிந்தான். அவன் பெரிய, பெண்மைக் கண்கள், என் ராணியின் அழகை அப்பொழுதுதான் முதன் முதல் பார்ப்பதைப் போன்று பார்த்தன.

"இவர் என் நண்பர்" என்றாள் ராணி மார்கோட். அவள் எனக்காக இதைச் சொன்னாளா, அவனுக்காகச் சொன்னாளா என்பது எனக்கு விளங்கவில்லை.

"உன்னை எது இப்படிப் பீதி அடையச் செய்தது?" என்று அவள் கேட்டாள். அவள் குரல் தூரத்திலிருந்து வருவதைப் போன்றிருந்தது. "இங்கே வா."

அவளை நான் அணுகியதும், சூடான கையால் என் கழுத்தைக் கட்டிக்கொண்டு அவள் சொன்னாள் :

" நீ பெரியவனானதும், இந்த இன்பத்தை நீயும் அனுபவிப்பாய். இப்பொழுது போய்விடு."

புத்தகத்தைப் பீரோவில் வைத்துவிட்டு, இன்னொரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு நான் புறப்பட்டேன்.

என் இதயத்தை ஏதோ அழுத்திற்று. சாதாரண ஜனங்கள் மாதிரி என் ராணி காதலித்தாள் என்றோ, அல்லது அந்த அதிகாரி அப்படிப்பட்டவர் என்றோ நான் கணநேரம் கூடக் கருதியதில்லை. அவன் புன்னகையை நான் கண்டேன். திடீரென்று ஏற்பட்ட அதிசயத்தால் அவன் இன்பத்துடன் ஒரு குழந்தையைப்போல் புன்னகை புரிந்தான். சோகம் படர்ந்த அவன் முகம் ஒளிபெற்றது. அவன் அவளைக் காதலித்திருக்க வேண்டும். யார்தான் அவளைக் காதலிக்காமல் இருக்க முடியும் ? இந்த மனிதனை அவள் காதலித்ததற்குத் தகுந்த காரணம் இருக்கிறது. இந்த மனிதன் அழகாகப் பிடில் வாசித்தான் ; உணர்ச்சி ததும்பப் பாடினான்.

ஆனால் இத்தகைய ஆறுதல்களை நான் தேடியதே எல்லாம் சரியாக இல்லை என்பதைச் சுட்டிக்காட்டிற்று. நான் கண்டவை சம்பந்தமான என் கருத்தில் ஏதோ தவறு இருக்கிறது. ராணி மார்கோட் சம்பந்தமான என் கருத்தில் ஏதோ தவறு இருக்கிறது. நான் எதையோ இழந்து விட்டதைப்போன்ற உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. பல நாட்கள் நான் அளவுகடந்த துக்கத்தால் வாடினேன்.

ஒரு நாள் நான் கலாட்டா செய்தேன். இன்னொரு புத்தகத்திற்காக என் சீமாட்டியிடம் நான் சென்றபோது, அவள் கடுமையாகச் சொன்னாள் :

" நீ திருத்த முடியாத சின்னப் போக்கிரி என்று தோன்றுகிறது ! நீ இப்படி இருப்பா யென்று நான் நினைக்கவே இல்லை."

இதை என்னால் சகிக்க முடியவில்லை. அவளைப்பற்றி ஜனங்கள் கெட்ட விஷயங்கள் சொன்னபொழுது வாழ்க்கை மீதே எனக்கு வெறுப்பு ஏற்படுவதை நான் அவளுக்கு விளக்கினேன். என் தோள்மீது தன் கையை வைத்துக்

கொண்டு அவள் எனக்கு எதிரில் உட்கார்ந்திருந்தாள். முதலில் நான் சொன்னதை அவள் கவனமாகக் கேட்டாள். ஆனால் விரைவில் சிரித்துவிட்டு, அவள் என்னை மெதுவாக அப்பால் தள்ளினாள்.

"போதும்! இது எனக்குத் தெரியும், தெரிகிறதா? எனக்கு எல்லாம் தெரியும்—எல்லாம்!"

பிறகு என் இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு, அவள் அவன்பாகச் சொன்னாள்:

"இந்தக் குப்பைகளை நீ அசட்டை செய்வது உனக்கு நல்லது. உன் கைகளை நீ நன்றாகச் சுத்தம் செய்துகொள்வதில்லை."

இப்படி அவள் பேசியிருக்க வேண்டாம். பித்தளை பாத்திரங்களைப் பாலிஷ் செய்தல், தரையைக் கழுவுதல், குழந்தைகளின் துணிகளைச் சுத்தம் செய்தல் ஆகிய வேலைகளை அவள் செய்தால், என் கைகளைவிட அவள் கைகள் அதிக சுத்தமாக இருந்திருக்காது.

"எப்படி வாழ்க்கை நடத்துவது என்பது ஒருவருக்குத் தெரிந்தால், எல்லோரும் அவரை வெறுக்கிறார்கள், பொறுமைப்படுகிறார்கள். இது ஒருவருக்குத் தெரியவில்லையென்றால், எல்லோரும் அவரை இகழ்கிறார்கள்" என்று அவள் சிந்தித்துக்கொண்டே சொன்னாள். பிறகு என்னைத் தனக்கு அருகில் இழுத்துக்கொண்டு, புன்னகை புரிந்துகொண்டே என் கண்களைத் தீர்க்கமாகப் பார்த்தாள்.

"நீ என்னை நேசிக்கிறாயா?" என்று அவள் கேட்டாள்.

"ஆம்."

"சொம்பவா?"

"ஆம்."

"ஆனால்—ஏன்?"

"எனக்குத் தெரியாது."

"வந்தனம், நீ கண்மணி. ஜனங்கள் என்னை நேசிப்பதை நான் விரும்புகிறேன்."

சிரித்துவிட்டு அவள் எதையோ சொல்ல விரும்பினாள். ஆனால் நெடுமூச்சுடன் அவள் மௌனம் சாதித்தாள், என் கைகளைப் பிடித்துக்கொண்டே.

"என்னை அடிக்கடி சந்தி. முடிந்த பொழுதெல்லாம் வா."

இந்த அழைப்பை நான் பயன்படுத்திக்கொண்டேன். அவள் நட்பால் நான் பெரிதும் பயனடைந்தேன். என் எஜமானர்கள் சாப்பிட்டுவிட்டுத் தூங்க ஆரம்பித்ததும், நான் கீழே ஓடுவேன். அவள் வீட்டிலிருந்தால் ஒரு மணி நேரமோ, அல்லது அதற்கு அதிகமாகவோ அவளுடன் உட்கார்ந்திருப்பேன்.

"நீ ரஷிய நூல்களைப் படிக்க வேண்டும். நமது ரஷிய வாழ்க்கையை நீ தெரிந்துகொள்ள வேண்டும்" என்று மணம் வீசும் தன் கூந்தலில் பின்களைச் சொருகிக்கொண்டே அவள் எனக்குக் கற்றுக்கொடுத்தாள்.

பிறகு ரஷிய ஆசிரியர்களின் பெயர்களைச் சொல்லிவிட்டு என்னைக் கேட்டாள் :

"இது உனக்கு நினைவிருக்குமா ?"

சிந்தனையுடனும், துடிப்புடனும் அடிக்கடி அவள் கூவுவாள் :

"அம்மாடி ! நீ படிக்க வேண்டும். இதை நான் மறந்து விடுகிறேன்."

அவளுடன் உட்கார்ந்திருந்துவிட்டு, என் கையில் புதிய புத்தகத்துடனும், சுத்தம் செய்யப்பட்ட பாதத்துடனும் நான் மாடிக்கு ஓடுவேன்.

அக்ஸாகோவின் குடும்பச் சரித்திரம், கானகத்தில் என்னும் மகிழ்ச்சியூட்டும் ரஷியக் கவிதை, ஆச்சரிய மளிக்கும் வேடனின் குறிப்புக்கள், க்ரிபென்கா, ஸோலோகம் ஆகியோரின் நூல்கள், வெனிவிட்டினோவ், ஓடோவெவ்ஸ்கி, டியுட்செவ் ஆகியோரின் கவிதைகள் ஆகியவற்றை நான் படித்து முடித்துவிட்டேன். இந்த நூல்கள் என் ஆத்மாவைச் சுத்தம் செய்தன ; வெறுக்கத்தக்க, கேவலமான யதார்த்தத்திலிருந்து என்னை விடுவித்தன. இப்பொழுது நல்ல புத்தகங்கள் எவை என்பதையும், அவை எனக்கு எவ்வளவு முக்கியம் என்பதையும் நான் உணர்ந்தேன். உலகத்திலே நான் தனியே இருக்கவில்லை என்னும் நம்பிக்கையை

யும், வாழ்க்கையிலே நான் முன்னேற முடியும் என்னும் நம்பிக்கையையும் அவை எனக்கு அளித்தன.

பாட்டி என்னைப் பார்க்க வந்தாள். ராணி மார்கோட்டை நான் பரவசத்துடன் அவளுக்கு வர்ணித்தேன். புகையிலையை முகர்ந்துகொண்டு அவள் சொன்னாள் ;

"கேட்க இன்பமளிக்கும் விஷயம் இது ! இந்த உலகத்திலே நல்லவர்கள் கொம்பப் பேர்கள் இருக்கிறார்கள். நீ அவர்களைத் தேடினால், அவர்கள் நிச்சயம் அகப்படுவார்கள்."

ஒரு நாள் அவள் சொன்னாள் :

"நான் அவளைச் சந்தித்து உனக்காக அவளுக்கு வந்தனம் செலுத்தினால் என்ன ?"

"வேண்டாம்."

"நல்லது, நான் போகவில்லை. கடவுளே, இது எவ்வளவு சிறந்த செய்தி ! மீண்டும் ஆரம்பத்திலிருந்து நான் மகிழ்ச்சியுடன் வாழத் தயார் !"

என்னைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கும் வாய்ப்பு ராணி மார்கோட்டுக்குக் கிடைக்கவில்லை. விட்சன்டே யன்று, என் தவறால் துக்ககரமான ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

விடுமுறை நாட்களுக்கு சற்று முன் என் கண் போளைகள் வீங்கின. இதனால் ஏறக்குறைய என் கண்கள் மூடிவிட்டன. நான் குருடனாகிவிடுவேன் என்று என் எஜமானர்கள் பயந்தனர் ; நானும் இவ்வாறு பயந்தேன். தங்களுக்குப் பழக்கமான ஒரு டாக்டரிடம்—இவர் பெயர் ஹீன்ரிச் சோட்ஸேவிக்—என்னை அழைத்துச் சென்றனர். போளைகளுக்குள்ளே அவர் சிகிச்சை செய்தார். பல நாட்கள் கண்களில் கட்டுக் கட்டிக்கொண்டு, இருளிலும், உபாதையிலும் காலத்தைக் கழித்தவாறு நான் படுத்திருந்தேன். விட்சன்டே மாலையில் கட்டு அவிழ்க்கப்பட்டது. உயிருடன் சவக்குழியில் புதைக்கப்பட்டவன் எழுந்திருப்பதைப் போன்று நான் படுக்கையிலிருந்து எழுந்திருந்தேன். குருடனாவதைவிடப் பயங்கரமானது வேறொன்றுமில்லை. உலக இன்பத்தில், ஒன்பது பகுதியை மறுக்கும் வர்ணிக்க முடியாத துரதிர்ஷ்டம் அது.

உல்லாசமான விட்சன்டே யன்று, என் நோய் காரண மாக மத்தியானம் விடுமுறை கிடைத்ததால், அதிகாரிகளின் வேலைக்காரர்களைச் சந்திப்பதற்காக ஒவ்வொரு குசினிக்கும் சென்றேன். துப்பாயெவ்வைத் தவிர்த்து மற்றவர்களெல்லாம் குடித்திருந்தனர். மாலையில் ஸிடோரோவின் தலையில் ஒரு கட் டையால் தாக்கினேன், எர்மோக்கின் ; வாசற்படியில் உணர்வி ழந்து விழுந்தான் ஸிடோரோவ். இதனால் பீதியடைந்த எர்மோக்கின் நீர்க்காலில் ஒளிந்துகொள்ள ஓடினான்.

ஸிடோரோவ் கொலைசெய்யப்பட்டுவிட்டதாக அந்தப் பகுதியில் வதந்தி விசையில் பரவிற்று. குசினிக்கும் நடை பாதைக்கும் மத்தியில் அசைவின்றி விறைத்துக் கிடந்த சிப் பாயைப் பார்க்கச் சின்னக் கூட்டம் கூடிவிட்டது. போலீ ஸைக் கூப்பிட வேண்டும் என்று தணிந்த குரலில் ஜனங்கள் பேசிக்கொண்டனர். ஆனால் யாரும் போலீஸைக் கூப்பிட வில்லை ; சிப்பாயைத் தொட யாரும் துணியவுமில்லை.

தோள்களில் வெள்ளைக் கைக்குட்டை தொங்க, புதிய அங்கி அணிந்துகொண்டு வண்ணத்தி நடால்யா கோஸ்லோவ் ஸ்காயா அங்கே வந்தாள். கோபத்துடன் ஜனங்களை அப்பால் தள்ளிக்கொண்டு அவள் நடைபாதைக்குச் சென்றாள். பிறகு சிப்பாய்க்கு அருகில் உட்கார்ந்துகொண்டாள்.

"முட்டாள்களா, அவன் உயிருடன் இருக்கிறான்!" என்று உரத்த குரலில் அவள் சொன்னாள். "கொஞ்சம் ஜலம் வேண்டும்."

"மற்றவர்கள் விஷயத்தில் தலையிடாதே!" என்று அவர்கள் அவளை எச்சரித்தனர்.

"ஜலம் என்றேன் நான்!" என்று நெருப்பின்மேல் நிற்பவர்களைப்போல் அவள் கூவினாள். பிறகு புதிய அங்கியை முழங்காலுக்கு மேலே இழுத்துவிட்டுக்கொண்டாள் ; தன் கோட்டைக் கழற்றினாள். அதன் பிறகு சிப்பாயின் ரத்தம் வடியும் தலையை தன் மடியில் தூக்கி வைத்துக்கொண்டாள்.

படிப்படியாக, கோழைகளான ஜனங்கள், அவள் செயலை அங்கீகரிக்காது வேடிக்கை பார்த்தவர்கள் கலைந்து சென்றனர். நடைபாதையின் மங்கிய ஒளியிலே வெள்ளை வட்ட வதனத் தில் வண்ணத்தியின் கண்கள் ஒளி வீசுவதை நான் கண்

டேன். ஒரு பாத்திரத்தில் நான் ஜலம் கொண்டுவந்தேன். ஸிடோரோவின் தலையிலும், நெஞ்சிலும் ஜலத்தைக் கொட்டச் சொன்னாள்.

" ஆனால் என்னை நினைத்துவிடாதே—நான் நண்பர்களைச் சந்திக்கச் செல்கிறேன் " என்று அவள் எச்சரித்தாள்.

சிப்பாய் உயிர் பெற்றான். கண்களைத் திறந்துகொண்டு அவன் முனகினான்.

" அவனைத் தூக்கு " என்றாள் நடால்யா. அக்குளில் பிடித்துக்கொண்டு, தன் உடை பாழ்படக் கூடாது என்பதற்காக எட்டி நின்று அவனை அவள் தூக்கினாள். நாங்கள் அவனைக் குசினிக்கு தூக்கிச் சென்று, மெத்தைமீது கிடத்தினோம். ஈரத் துணியால் அவள் அவன் முகத்தைத் துடைத்தாள். பிறகு அவள் வெளியே செல்லும்பொழுது சொன்னாள் :

"ஈரத் துணியை அவன் தலையில் வைத்துக்கொண்டிரு. நான் அந்த முட்டாளைத் தேடிப்பிடிக்கிறேன். பைத்தியக்காரப் பிசாசுகள் ! குடி இவர்களைச் சிறையில் தள்ளும் !"

கறைபடிந்த கோட்டை அவள் ஒரு மூலையை நோக்கி உதைத்துத் தள்ளினாள் ; ஜாக்கிரதையாகத் தனது புதிய அங்கியைத் துடைத்துக்கொண்டாள். பிறகு அவள் வெளியே சென்றாள்.

ஸிடோரோவ் நீண்டு படுத்தான் ; விக்கினான் ; முனகினான். அவன் தலையில் கொட்டிய கறுப்பு ரத்தம் என் வெறுங் காலில் விழுந்தது. இது எனக்கு அருவருப்பாக இருந்தது. ஆனால் பயத்தால் நான் காலை நகர்த்தவில்லை.

நான் கொம்ப ஏமாற்றமடைந்தேன். வெளியிலே விடுமுறையின் அறிகுறிகள் எங்கும் தென்பட்டன. வாசலும், கதவுகளும் பூவரசுக் கிளைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. இலந்தை மரத்தின் கிளைகள் ஒவ்வொரு தூணிலும் கட்டப்பட்டிருந்தன. வீதி அல்லோலகல்லோலப்பட்டது ; எங்கும் புதுமையும், இளமையும் துள்ளி விளையாடின. வசந்த கால விடுமுறை நீடித்து நிற்கு மென்றும், இனி வாழ்க்கை பரிசுத்தமானதாகவும் ஒளி மயமானதாகவும் இருக்கு மென்றும் அதிகாலையில் நான் நினைத்தேன்.

சிப்பாய் வாந்தி எடுத்தான். குகினியிலே மனம் புரட்டும் வோட்கா நாற்றம் வீசிற்று. அடிக்கடி தெளிவாகத் தெரியாத பரந்த முகங்கள் ஜன்னல் கண்ணாடியில் தெரிந்தன. இரு புறமும் விரிக்கப்பட்ட கைகள் வெறுக்கத்தக்க காதுகளைப்போல் காட்சியளித்தன.

சிப்பாயின் மனம் தெளிவடைந்ததும் அவன் முணு முணுத்தான் :

" இது எப்படி இருக்கிறது ? நான் விழுந்தேனா ? எர் மோக்கின் ? நல்ல நண்பன் அவன் !"

அவன் இருமினான் ; கண்ணீர்விட்டான். பிறகு ஓல மிட்டான் :

" என் சிறிய சகோதரி ! என் அருமைச் சகோதரி !"

அவன் நினைந்திருந்தான். அவன் உடம்பிலிருந்து தூர் நாற்றம் வீசிற்று. அவன் ஒருவாறு எழுந்திருந்தான் ; நிலை தடுமாறினான். மீண்டும் மெத்தையில் சாய்ந்தான். கண்களைப் பயங்கரமாகச் சுழற்றிக்கொண்டு சொன்னான் :

" அவன் என்னைக் கொன்றுவிட்டான் !"

இது எனக்கு வேடிக்கையாக இருந்தது.

" நீ எதற்காகச் சிரிக்கிறாய், பிசாசே ?" என்று என்னை உற்றுப்பார்த்துக்கொண்டு கேட்டான் சிப்பாய். "நீ எப்படிச் சிரிக்கலாம் ? நான் இப்படிக் கொல்லப்பட்டுக் கிடக்கிறேன்— முடிவாக..."

இரண்டு கைகளாலும் என்னைத் தள்ளிக்கொண்டு அவன் முணு முணுத்தான் :

" தீர்க்கதரிசி இலியாவே ! ஆபத்பாந்தவா ! என் வழியில் நிற்காதே, பேயே !"

" முட்டாள்தனமாகப் பேசாதே !" என்றேன் நான்.

கோபத்தால் அவன் உறுமினான். கால்களை அவன் நகர்த்தினான்.

" நான் கொல்லப்பட்டேன்—நீ..."

அழுக்குப் படிந்த, தளர்ந்த கையால் என் கண்களில் குத்தினான், அவன். ஓலமிட்டுக்கொண்டு நான் வெளியே ஓடினேன். வெளியே நடால்யா எர்மோக்கினை இழுத்துக் கொண்டு வந்தாள். அவள் கூவினாள் :

"வா, குதிரையே!" பிறகு என்னைப் பார்த்ததும், "என்ன சங்கதி?" என்று கேட்டாள்.

"அவன் அடிக்கிறான்."

"அடிக்கிறானா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் நடால்யா. எர்மோக்கினை இடித்துவிட்டு, அவள் சொன்னாள்:

"நல்லது, இந்த முறை நீ கடவுளுக்கு வணக்கம் செலுத்து!"

குளிர்ந்த ஜலத்தால் நான் கண்களைக் கழுவினேன். பிறகு கதவு வழியாகக் குசினிக்குள்ளே எட்டிப்பார்க்க அங்கே திரும்பிச் சென்றேன். அங்கே இரண்டு சிப்பாய்களும் அழுதுகொண்டு, ஒருவரை ஒருவன் தழுவிக்கொண்டிருந்தனர். பிறகு அவர்கள் நடால்யாவைத் தழுவ முயன்றனர். ஆனால் அவர்களை உதறித் தள்ளிவிட்டு அவள் சொன்னாள்:

"என்மீது கை வைக்காதீர்கள், கள்ள நாய்களா! என்னை உங்கள் சிறுக்கிகளில் ஒருத்தி என்று நினைத்தீர்களா? உங்கள் எஜமானர்கள் திரும்பி வருமுன் படுத்து உறங்குங்கள். சுறுசுறுப்பாக இருங்கள். இல்லையெனில் உங்கள் கதி அதோ கதிதான்!"

குழந்தைகளைப் படுக்கவைப்பதைப் போன்று அவர்களை அவள் படுக்கவைத்தாள்—ஒருவனை கட்டிலிலும், மற்றவனைத் தரையிலும். அவர்கள் குறட்டைவிட ஆரம்பித்ததும், அவள் வெளியே வந்தாள்.

"என் அங்கியைப் பார்—அது சுருங்கிவிட்டது. இந்தக் கோலத்தில் நண்பர்களைக் காணச் செல்கிறேன்! உன்னை அவன் அடித்தானா? முட்டாள்! வோட்காவின் வேலையைப்பார்! குடிக்காதே, பையா! இந்தப் பழக்கத்தை மேற்கொள்ளாதே."

கேட்டுக்கு அருகில் கிடந்த பெஞ்சில் அவளுக்கு அருகில் நான் உட்கார்ந்தேன். குடிகாரர்களுக்கு அவள் பயப்படாதேன் என்று அவளை நான் கேட்டேன்.

"குடியாதவர்களுக்கும் நான் பயப்படுவது கிடையாது. இப்படித்தான் அவர்களையும் பிடிப்பேன்!" என்று சொல்லிக் கொண்டே முஷ்டியைக் காட்டினாள் அவள். "என் காலஞ் சென்ற கணவன் வயிறு முட்டக் குடிப்பான். அவன் கைகளை

யும், கால்களையும் நான் கட்டுவேன். அவன் மயக்கம் தெளிந்ததும், அவன் கால்சட்டையைக் கழற்றி, பலமான கம்பியால் அவனை நான் அடிப்பேன். 'குடிப்பதை நிறுத்து! உன் மனைவி இன்பத்தை உனக்குக் கொடுக்கிறாள்!' இப்படி சொல்லிக்கொண்டே அடிப்பேன். என்னால் முடிந்தவரையில் அவனை அடிப்பேன். அதன் பிறகு அவன் என் கைப்பாவையாகி விடுவான்.

"நீ பலசாலி" என்றேன் நான்; கடவுளையே ஏமாற்றின பெண் ஈவாவை நினைத்துக்கொண்டே.

நெடுமூச்சுடன் நடால்யா சொன்னாள்:

"ஆணைவிடப் பெண்ணுக்கு அதிக பலம் தேவை; இருவருக்கு இருக்கும் பலம் அவளுக்கு இருக்க வேண்டும். ஆனால் கடவுள் அவளை ஏமாற்றிவிட்டார். மூஷிக்கை நீ நம்ப முடியாது."

தனது பெரிய மார்பில் இரண்டு கைகளையும் கட்டிக்கொண்டும் வேலியிலே சாய்ந்துகொண்டும் குப்பை கூளம் நிறைந்த சாக்கடையைத் துக்கத்துடன் பார்த்துக்கொண்டும் அவள் சாந்தமாகவும், எரிச்சலின்றியும் பேசினாள். அவள் புரியும் நானேபதேசத்தைக் கேட்டுக்கொண்டிருந்த எனக்கு நேரம் போவது தெரியவில்லை. திடீரென்று தமது மனைவியின் கையைப் பிடித்துக்கொண்டு சாக்கடையின் கோடியில் என் எஜமானர் வருவதை நான் கண்டேன். கோழிகளைப் போன்று மெதுவாகவும், முக்கியத்வத்துடனும் அவர்கள் நடந்து வந்தனர். எங்களை உற்றுப் பார்த்துக்கொண்டு சில அபிப்பிராயங்களைப் பரிமாறிக்கொண்டனர்.

முன் கதவைத் திறக்க நான் ஓடினேன். நாங்கள் மாடிப்படி ஏறியபொழுது, தாக்கும் முறையில் என் எஜமானி சொன்னாள்:

"வண்ணத்தியுடன் நீ சல்லாபம் செய்கிறாய், அல்லவா? கீழே இருக்கும் சீமாட்டியிடமிருந்து இதைத்தான் நீ கற்றுக் கொண்டாயா?"

இந்த அபிப்பிராயம் மிக முட்டாள்தனமானதால், இது என்னைப் புண்படுத்தவில்லை. சிரித்துக்கொண்டு என் எஜமானர் சொன்னதுதான் என்னை வேதனைப்படுத்திற்று:

"நல்லது, அவனுக்கு வயதாய்விட்டது, இல்லையா?"

விறகு எடுத்துவர நான் கொட்டகைக்கு மறு நாள் காலை சென்றபொழுது கதவுக்கு அருகில் ஒரு காலி பர்ஸ் கிடப்பதை நான் கண்டேன். இந்தப் பர்ஸை ஸிடோரோவிடம் நான் பல முறை கண்டிருந்ததால், இதை உடனே அவனிடம் எடுத்துச் சென்றேன்.

"இதிலிருந்த பணம் எங்கே?" என்று பர்ஸுக்குள்ளே கையை விட்டுக்கொண்டு ஸிடோரோவ் கேட்டான். "ஒரு ரூபிளும் முப்பது காபெக்கும். அதைக் கொடு."

தலையிலே ஒரு துண்டைச் சுற்றிக்கொண்டிருந்தான் அவன். அவன் முகம் மஞ்சளாக இருந்தது. வீங்கின கண்களால் அவன் என்னைப் பார்த்தான். பர்ஸை நான் கண்டெடுத்தபொழுது அது காலியாக இருந்தது என்பதை அவன் நம்பவில்லை.

எர்மோக்கின் நான்தான் திருடன் என்பதை அங்கே ஊர்ஜிதம் செய்ய முயன்றான்.

"இவன்தான் எடுத்தான்" என்று என்னைச் சுட்டிக் காட்டி அவன் சொன்னான். "அவனை அவன் எஜமானனிடம் அழைத்துச் செல். ஒரு சிப்பாய் தன் சகோதரச் சிப்பாயின் பொருளைத் திருட மாட்டான்."

இவன்தான் பணத்தைத் திருடிவிட்டு, பர்ஸை எங்கள் கொட்டகைக்குள் எறிந்திருக்கிறான் என்பதை இவன் வார்த்தைகள் சுட்டிக்காட்டின. எனவே நான் நேரடியாகச் சொன்னேன்:

"இது பொய், நீ திருடினாய்!"

பயத்தாலும், கோபத்தாலும் அவன் கோணலானதைக் கண்டதும் என் ஊகம் சரியானது என்பதை நான் புரிந்து கொண்டேன்.

"இதை நிரூபி!" என்று அவன் கூவினான்.

நான் இதை எப்படி நிரூபிக்க முடியும்? கூச்சலிட்டுக் கொண்டு, எர்மோக்கின் என்னை வெளியே இழுத்தான்; ஸிடோரோவ் கூவிக்கொண்டே எங்களைப் பின்தொடர்ந்தான். ஜன்னல்களிலிருந்து பல தலைகள் வெளியே எட்டிப் பார்த்தன. சிகரெட் குடித்துக்கொண்டு ராணி மார்கோட்டின்

தாயார் எங்களைச் சாந்தமாகப் பார்த்தாள். என் சீமாட்டியின் கண்முன்னே நான் தரம் குறைந்துவிட்டேன் என்பதை உணர்ந்ததும், நான் நிதானமிழந்தேன்.

என் எஜமானர்கள் முன் சிப்பாய்கள் என்னை நிறுத்தினர். என்மீது சாட்டப்பட்ட குற்றத்தைக் கேட்டு அவர்கள் தலையை அசைத்தனர்.

" இதற்கு இவனேதான் ஜவாப்தாரி " என்றாள் சின்ன எஜமானி. " நேற்றிரவு கேட்டுக்கு அருகில் உட்கார்ந்து கொண்டு அவன் வண்ணத்தியுடன் சல்லாபம் செய்வதை நான் கண்டேன். இவனிடம் பணம் இருந்திருக்க வேண்டும்— பணமின்றி அவளிடமிருந்து எதையும் இவன் பெறமுடியாது."

" இது உண்மை !" என்று கூறினன் எர்மோக்கின்.

என் தலை சுழன்றது. அளவுகடந்த கோபம் என்னை ஆட்கொண்டது. என் எஜமானியைப் பார்த்து நான் கர்ஜித்தேன். எனவே அவர்கள் என்னை நையப் புடைத்தனர்.

இந்த அடி என்னை அவ்வளவு வேதனைப்படுத்தவில்லை ; ஆனால் ராணி மார்கோட் என்னைப்பற்றி என்ன நினைப்பாள் என்னும் எண்ணம் என்னைச் சித்திரவதை செய்தது. அவள் முன்னே என் நிலையை நான் எப்படி நியாயப்படுத்துவது ? என் சோதனை நேரமிது.

அதிர்ஷ்டவசமாக இந்தச் செய்தியைச் சிப்பாய்கள் அந்த வட்டார மெங்கும் பரப்பினர். அன்று மாலை நான் மச்சிலே படுத்திருந்தபொழுது, கீழேயிருந்து நடால்யா கோஸ்லோவ்ஸ்காயாவின் கூச்சல் கேட்டது.

" நான் ஏன் வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டும் ? நல்ல மனிதனே, இங்கே வா ! சீக்கிரம் வா ! நீ வரவில்லையானால் உன் எஜமானனிடம் சொல்லுவேன். அவர் உன்னை இங்கே வரச் செய்வார் !"

இந்தக் கூச்சலுக்கும் எனக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதை நான் உடனே உணர்ந்தேன். எங்கள் முகப்புக்கு அருகில் நின்றுகொண்டு கூச்சலிட்டாள். அவள் சத்தம் அதிகரித்தது ; அதிலே வெற்றி தொனித்தது.

"நேற்று என்னிடம் எவ்வளவு பணம் காட்டினாய்? அது எங்கிருந்து உனக்குக் கிடைத்தது? வந்து விவரத்தைச் சொல்!"

இன்பத்தால் மூச்சுத் திணர, ஸிடோரோவ் பரிதாபமாக ஓலமிடுவதை நான் செவிமடுத்தேன்.

"எர்மோக்கின்! எர்மோக்கின்!", "அந்தச் சிறுவன் மீது குற்றம் சாட்டினேம்; அவன் அடிக்கப்பட்டான்."

கீழே ஓடிச் சென்று, இன்ப நடனமாடி, வண்ணத்துப் பூச்சியின் கைகளை முத்தமிட நான் விரும்பினேன். அந்தச் சமயத்தில் என் எஜமானியின் கூச்சல் எனக்குக் கேட்டது. ஜன்னலில் நின்றுகொண்டு அவள் கூவுகிறாள் போலும்:

"அவன் வாய் திறக்குக்காக அவனை நாங்கள் அடித்தோம். அவன் பணத்தைத் திருடினான் என்று உன்னைத் தவிர வேறு யாரும் நினைக்கவில்லை, வேசியே!"

"நீதான் வேசி, என் தங்கமே! அற்புதமான தடிமாடு, நான் இப்படி உன்னை வர்ணிப்பதை நீ பொருட்படுத்தவில்லையென்றால்!"

அவர்கள் சண்டை என் காதுக்குச் சங்கீதத்தைப் போன்றிருந்தது. நடால்யாமீது என் நெஞ்சிலே நன்றியறிதல் நிறைந்தது; நன்றியறிதலால் கண்களில் கண்ணீர் நிறைந்தது. கண்ணீரைத் தடுக்க நான் செய்த முயற்சியால் என் மூச்சுத் திணறிற்று.

மெதுவாக மச்சுப்படிகள் மீதேறி, நீண்டு நின்ற ஒரு உத்தரத்தின் மீது எனக்கு அருகில் என் எஜமானர் உட்கார்ந்தார்.

"உனக்கு அதிர்ஷ்டமில்லை யென்று தோன்றுகிறது, பெஷ்கோவ்" என்று தன் தலையை தடவிக்கொண்டே அவர் சொன்னார்.

ஒன்றும் சொல்லாமல் நான் மறு பக்கம் திரும்பிக் கொண்டேன்.

"ஆனால் நீ மொம்பக் கடுமையான பாஷையை உபயோகிக்கிறாய் என்பதை மறுக்க முடியாது" என்று தொடர்ந்து கூறினார் அவர்.

"எழுந்திருந்ததும் நான் போய்விடுவேன்" என்று நான் சாந்தமாக அறிவித்தேன்.

"நல்லது, அது உன் இஷ்டம். நீ இப்பொழுது பைய னல்ல. என்ன செய்ய வேண்டும் என்பது உனக்குத் தெரியும்."

அவர் எழுந்திருந்து கீழே சென்றார். வழக்கம்போல் அவருக்காக நான் வருந்தினேன்.

நான்கு தினங்களுக்குப் பிறகு அந்த வேலையை நான் விட்டுவிட்டேன். ராணி மார்கோட்டிடம் விடைபெற எனக்கு அளவுகடந்த ஆசை. அவளிடம் சென்று, உண்மையை அவளிடம் சொல்ல எனக்குத் தைரியமில்லை. அவளே என்னை அழைப்பாள் என்று நான் நம்பினேன்.

சிறுமியிடம் விடைபெறும்பொழுது நான் சொன் னேன் :

"நான் அம்மாவுக்குக் கோடி நமஸ்காரம் செய்வதாக அம்மாவிடம் சொல்லு ! இதை நீ நினைவிலிறுத்துவாயா ?"

"ஆம்" என்று அன்புகலந்த புன்னகை புரிந்து கொண்டு அவள் உறுதி கூறினாள். "நானேவரை போய் வா."

இருபது வருடங்களுக்குப் பிறகு அவளை நான் மீண்டும் சந்தித்தேன். அப்பொழுது ஆயுதந்தாங்கிய போலீஸ் அதி காரியின் மனைவியாக இருந்தாள் அவள்.

11

மீண்டும் நான் பிளேட் கழுவும் வேலையில் அமர்ந் தேன். அன்னத்தைப் போன்றிருந்த வேகமாகச் செல்லும் போம் என்னும் பெரிய கப்பலில் எனக்கு வேலை கிடைத்தது. "உதவி—பிளேட் கழுவுகிறவன்" அல்லது "குசினிக் கையாள்" என்று நான் அழைக்கப்பட்டேன். என் மாதச் சம்பளம் ஏழு ரூபிள். சமையற்காரனுக்கு உதவி புரிவது என் பிரதான வேலை.

காரியஸ்தன் ஒரு பருமனான மனிதன். அவன் மகா கர்வி. ரப்பர் பந்தைப்போன்று அவன் தலை வழுக்கையாக

இருந்தது. உஷ்ணமான நாளில் நிழலைத் தேடி அலையும் பன்றியைப்போன்று, கைகளைப் பின்புறம் கட்டிக்கொண்டு நாள் முழுதும் அவன் மேல்தட்டில் நடப்பான். உணவு மண்டபத்தை அவன் மனைவி அலங்கரிப்பாள். அவளுக்கு நாற்பது வயதிற்குமேல் இருக்கும். பருவ காலத்தில் அவள் அழகியாக இருந்திருக்க வேண்டும். ஆனால் இப்பொழுது காலத்தால் அலங்கோலப்படுத்தப்பட்டிருந்தாள். அளவுக்கு மிஞ்சிப் பவுடர் உபயோகித்ததால், அவள் கன்னங்களிலிருந்து பவுடர் கீழே உதிர்ந்தது; அவளுடைய வர்ண உடையில் வெண் தூசியைப்போன்று ஒட்டிக்கொண்டிருந்தது.

குசினியின் தளபதி ஜவான் இவானோவிச். இவனுக்கு வழக்கிலிருக்கும் பெயர் டெடிபெர். அவன் சிறியவன்; கட்டைகுட்டையானவன். அவன் மூக்கு வளைந்திருந்தது. அவன் கண்கள் கேலிசெய்தன. ஆடம்பர பழக்கவழக்கங்களை அவன் கடைப்பிடித்தான்: சதா விறைப்பான காலர்கள் அணிந்தான்; நாள்தோறும் முகசௌவரம் செய்துகொண்டான். அதனால் அவன் கன்னங்கள் நீலமாக இருந்தன. கரிய மீசையை அவன் மேலே சுருட்டிவிட்டிருந்தான். ஓய்வு நேரத்தில் அதை முறுக்குவான்; பெருமிதத்துடன் சிறிய கைக்கண்ணாடியில் மீசையைப் பார்த்துக்கொள்வான்.

கப்பலில் இருந்தவர்களில் மிக அற்புதமானவன். யாக்கோவ் ஷ்மோவ். பரந்த, நீண்ட தோள்கள் படைத்தவன் அவன்; அவன் உத்தியோகம் கரித்தள்ளுவது. அவன் சப்பைமூக்கு படைத்த முகம் மண்வெட்டியைப்போன்று பரந்திருந்தது; அவன் கரடி கண்கள் கனத்த புருவங்களுக்குக் கீழே எட்டிப்பார்த்தன; அவன் கன்னங்களை மூடியிருந்த சுருண்ட தாடி, சதுப்புநிலப் பாசியை நினைவூட்டிற்று; அவன் தலைமயிரில் நிறைய ஜடை யிருந்ததால், அவர்களுக்கிடையே விரலை ஓட்டுவது அசாத்தியம்.

மிகத் திறமையான சூதாடி அவன்; பெரிய கபந்தன். பசிக்கிற நாவைப்போன்று அவன் குசினியைச் சுற்றி வட்டமிடுவான்; இறைச்சியோ, எலும்போ தருமாறு கெஞ்சுவான்; மாலையில் டெடிபெருடன் தேநீர் குடிப்பான்; தன் சாகஸங்களை வர்ணிப்பான்.

குழந்தைப் பருவத்தில் நகர ஆயன் ரியாஸானுக்கு இவன் துணைபுரிந்தான். அப்பொழுது ஒரு பாதிரி அவனை ஆகர்ஷித்ததால், அவன் தேவ மடத்திற்குச் சென்றான். அங்கே நான்கு வருடங்கள் அவன் சிஷ்யனாக இருந்தான்.

"நான் இப்பொழுதுகூடப் பாதிரியாக—கடவுளின் ஒரு கறுப்பு நட்சத்திரமாக—இருந்திருப்பேன்" என்று தனக்குரிய சரசமான பாணியில் அவன் சொன்னான். "ஆனால் பெண்ணாவிலிருந்து ஒரு பக்தை எங்கள் மடத்திற்கு வந்ததால் காரியம் கெட்டுவிட்டது, அவள் சபலபுத்தி படைத்தவளாதலால், என் தலையைத் திருப்பிவிட்டு அவள் சொன்னாள்: 'எவ்வளவு சிறந்தவன் நீ: எவ்வளவு பலசாலி நீ' என்றாள் அவள். 'நான் இதோ இருக்கிறேன்—ஒரு நேர்மையான விதவை. நான் தனியே இருக்கிறேன், என் காரியஸ்தனாக வேலைசெய்ய நீ இசைய மாட்டாயா?' என்றாள் அவள். 'சொந்த வீடும், கோழி இறகு வியாபாரமும் படைத்த என்னுடன் நீ வசிக்கிறாயா?"

"எனக்கு ஆட்சேபணை இருக்கவில்லை. எனவே அவள் என்னைக் காரியஸ்தனாக ஸ்வீகரித்தாள்; நான் அவளை என் வைப்பாட்டியாக ஸ்வீகரித்தேன். இப்படி மூன்று வருடங்கள் சுகமாக இருந்தேன்—"

"நீ துணிந்து பொய் சொல்லுகிறவன்" என்றான் டெடிபெர், தன் மூக்கிலிருக்கும் பருவைச் சிரத்தையுடன் பார்த்துக்கொண்டே. "பொய் சொல்லுவதால் பணம் சம்பாதிக்க முடியுமானால், நீ பெரிய பணக்காரனாக இருப்பாய்."

யாக்கோவ் சுவைத்துக்கொண்டிருந்தான். அவன் கன்னங்கள் மேலும் கீழும் ஏறி இறங்கின; அவன் காதுகள் அசைந்தன. சமையற்காரரின் குறுக்கீட்டுக்குப் பிறகு, அவன் மீண்டும் தன் வர்ணனையைத் தொடர்ந்தான்:

"என்னைவிட அவள் வயதானவள். எனவே எனக்கு சலிப்புத் தட்டிற்று. அவளை நான் வெறுத்தேன். எனவே அவள் மருமகளுடன் நான் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டேன். இதை அவள் கேள்விப்பட்டதும், என் பிடரியைப் பிடித்து வெளியே தள்ளினாள்."

"உனக்குத் தகுந்த வெகுமதி கிடைத்தது" என்று சமையற்காரன் யாக்கோவைப்போலச் சாதாரணமாகச் சொன்னான்.

சர்க்கரைக் கட்டியை வாயில் திணித்துக்கொண்டு, சூலா காப்போன் தொடர்ந்தான் :

"எனவே நான் சிறிது காலம் அலைந்து திரிந்தேன். பிறகு விலாடிமீரைச் சேர்ந்த ஒரு வயோதிக வியாபாரி எனக்குக் கிடைத்தார். அவரும் நானும் பாதி உலகத்தைச் சுற்றினோம்—பால்கன்ஸ் எனப்படும் மலைகளுக்கும், துருக்கியர், ருமேனியர், கிரேக்கர், ஆஸ்திரியர் முதலியோர் வசிக்கும் நாடுகளுக்கும் நாங்கள் சென்றோம். நாங்கள் ஒருவரிடமிருந்து சாமான்கள் வாங்கினோம்; அதை இன்னொருவருக்கு விற்றோம்."

"நீ திருடினாயா ?" என்று பதட்டமின்றிக் கேட்டான் சமையற்காரன்.

"கிழவனிடமிருந்து நான் திருடவில்லை. அவன் என்னிடம் சொன்னான் : 'அன்னிய நாடுகளிலே கண்ணியமாக நட. சிறிய பொருளைத் திருடினால்கூடத் தலையைச் சீவ வெளி நாடுகளில் சட்டம் இடமளிக்கிறது.' எனினும் நான் திருட முயன்றேன் ; ஆனால் என் முயற்சி வெற்றிபெறவில்லை. ஒரு வியாபாரியின் லாயத்திலிருந்த குதிரையைத் திருட நான் முயன்றேன். ஆனால் என்னால் திருட முடியவில்லை ; அவர்கள் என்னைப் பிடித்தார்கள். பிறகு இயல்பாக அவர்கள் என்னை அடிக்க ஆரம்பித்தார்கள். என்னை அடித்து அவர்கள் சலித்ததும், போலீசுக்கு அவர்கள் என்னை இழுத்துச் சென்றார்கள். நாங்கள் இருவர்—ஒருவன் உண்மையான, குதிரைத் திருடன்; என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கச் சென்றவன் நான்; அப்பொழுது அந்த வியாபாரிக்காக நான் வேலை செய்து கொண்டிருந்தேன்—அவன் வீட்டில் குளிர்காயும் அடுப்பைப் பொருத்திக்கொண்டிருந்தேன். வியாபாரி நோய்வாய்பட்டான் ; என்னைப்பற்றித் தீய கனவுகள் காண ஆரம்பித்தான். அவன் பயந்துவிட்டான். எனவே மேலிடங்களுக்குச் சென்று அவன் சொன்னான் : 'அவனை விட்டுவிடுங்கள் !'—அதாவது என்னை—'அவனை விட்டுவிடுங்கள். என் கனவு

களில் அவனைக் காணச் சகிக்கவில்லை. அவனை நான் மன்னிக்க வில்லை யென்றால், நான் இறந்துவிடலாம். அவன் மந்திரவாதி' —அதாவது நான் மந்திரவாதி. அந்த வியாபாரி பிரசித்த பெற்றவன். எனவே அவர்கள் என்னை விட்டுவிட்டார்கள்.''

''உன்னை விட்டிருக்கக் கூடாது. உன் கழுத்தில் ஒரு கல்லைக் கட்டி, உன்னை நதியில் மூன்று நாட்கள் அமிழ்த்தி யிருக்க வேண்டும். இப்படிச் செய்திருந்தால், உன் கோமா ளித்தனம் எங்கேயோ போயிருக்கும்.''

இந்தச் சொல் யாக்கோவைக் கவர்ந்தது.

''என்னிடம் நிறையக் கோமாளித்தனம் இருக்கிறது என்று நீ சொன்னது சொம்ப சரி. உண்மையாகச் சொல்லு வதானால், ஒரு கிராமத்தையே அசைக்குமளவு கோமாளித் தனம் என்னிடம் இருக்கிறது.''

சமையற்காரன் கோபத்துடன் தன் காலணைப் பிடித்து இழுத்தான். தலையை அசைத்துக்கொண்டு ஆத்திரத்துடன் சொன்னான் :

''அம்மாடி ! வயிறு புடைக்கத் தின்று, அளவுக்கு மிஞ்சிக் குடித்து, தூங்கி வழிந்துகொண்டு கைதிபோல நட மாடுகிறாயே ? எதற்காக ? நீயே சொல்—நீ எதற்காக வாழுகிறாய் ?''

உதடுகளை நொடித்துக்கொண்டு சூளைகாப்போன் சொன்னான் :

''அது எனக்குத் தெரியாது. மற்றவர்களைப்போல் நானும் வாழுகிறேன். சிலர் படுக்கிறார்கள் ; மற்றவர்கள் நடக்கிறார்கள் ; குமாஸ்தாக்கள் நாள் முழுதும் உட்காரு கிறார்கள். ஆனால் எல்லோரும் உண்ண வேண்டும்.''

இது சமையற்காரனின் ஆத்திரத்தை அதிகமாக்கிற்று.

''நீ ஒரு பன்றி ; எனவே வார்த்தைகளால் உன்னை வர்ணிக்க முடியாது. நீ பன்றிக் கூழ்—இதுதான் நீ !''

''நீ எதற்காக இப்படி ஆத்திரப்படுகிறாய் ?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான் யாக்கோவ். ''மூஷிக்குகளா கிய நாங்கள் ஓக் மரத்தில் தோன்றிய ஓரேவிதக் காய்கள். நீ ஆத்திரப்படாதே ; உன் ஆத்திரம் என்னைத் திருத்தாது.''

விரைவில் இந்த மனிதனுடன் நான் நெருங்கிப் பழகினேன். ஆச்சரியத்துடன் அவனை நான் உற்றுப்பார்த்தேன்; அவன் சொல்வதை வாயைப் பிளந்துகொண்டு கேட்டேன். வாழ்க்கையின் அனுபவம் அவனிடம் பொதிந்துகிடப்பதாக நான் கருதினேன். எல்லோரையும் சாதாரணமாக அவன் அழைத்தான்; எல்லோரையும் சுதந்திரமாக அவன் பார்த்தான்—வேலைக்காரர்கள், சர்வர்கள், மூன்றும் வகுப்புப் பிரயாணிகள், ஆகியோர் தன்னை மதித்ததைப் போன்றுதான் காப்டனையும், காரியஸ்தனையும் முக்கியமான முதல் வகுப்புப் பிரயாணிகளையும் அவன் மதித்தான்.

சில சமயங்களில் காப்டன் முன்னிலையிலோ, அல்லது சீப் இஞ்சினீயர் முன்னிலையிலோ குரங்கின் கைகளைப் போன்ற தன் கைகளைப் பின்னே கட்டிக்கொண்டு நிற்பான்; சோம்பேறிதனத்திற்காகவோ அல்லது சீட்டு விளையாட்டில் தான் யாரையாவது மொட்டை யடித்தற்காகவோ கண்டிக்கப் படுவதை மௌனமாகக் கேட்டுக்கொண்டு நிற்பான். கண்டனத்தையோ, அடுத்த கரையில் அவனை வெளியே அனுப்புவதாகச் சொல்லுவதையோ அவன் பொருட்படுத்தவில்லை என்பதை அவன் பாவனையிலிருந்து தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும்.

"இது மிக நேர்த்தி" என்பவனிடத்திலே ஒரு விசேஷ அம்சம் இருந்ததைப் போன்று, யாக்கோவிடமும் ஒரு விசேஷ அம்சம் இருந்தது. அவன் தனி ரகமென்றும், மற்றவர்கள் தன்னைப் புரிந்துகொள்ளக் கூடாது என்றும் அவன் கருதினானோ?

துக்கத்துடனே, வெடுவெடுப்புடனே இந்த மனிதன் இருந்ததை நான் கண்டதே இல்லை. அதிக நேரம் இவன் மௌனமாக இருந்ததையும் நான் கண்டதில்லை. இவன் விருப்பத்திற்கு மாறுகக்கூட, இவன் வாயிலிருந்து வார்த்தைகள் இடைவிடாது உதிர்ந்தன. இவனை யாராவது திட்டினாலோ, அல்லது ருசிகரமான கதை சொன்னாலோ, தான் கேட்டதைத் திரும்பச் சொல்லுவதைப்போல் இவன் அதரங்கள் அசையும்; ஒருக்கால் தன் சொந்த எண்ணங்களை இவன் வெளிப்படுத்திக்கொண் டிருக்கலாம். தினசரி தன்

வேலை முடிந்ததும் தேகமெல்லாம் வியர்வையுடனும், எண்ணெயுடனும் அவன் வெளியே வருவான். நனைந்த அவனுடைய சட்டையில், பொத்தான் போடப்படாமலிருப்பதால், அடர்ந்த ரோமங்கள் நிறைந்த இவன் நெஞ்சு வெளியே தெரியும். விசையில் மேல் தளத்திலிருந்து மழைத் தூளிகளைப் போன்று சாரமற்ற இவன் சூல் வார்த்தைகளைக் கொட்டுவது எங்களுக்குக் கேட்கும்.

" வாழ்த்துக்கள், அம்மா ! நீ எங்கே போகிறாய் ? சிஸ்டோபோலுக்கா ? அந்த இடம் எனக்குத் தெரியும். அங்கே ஜோசான் குபாய்டுலின் என்னும் தார்தாரிய பணக்கார நிலச்சுவான்தாரிடம் நான் வேலை செய்தேன். அந்தக் கிழவனுக்கு மூன்று மனைவிகள் இருந்தனர் ; சிவப்பு முகம் படைத்த பருமனனவன் அந்த மனிதன், சபலபுத்தி படைத்தவன் ; அவன் இளைய தார்த்தாரிய மனைவிகளில் ஒருத்தியுடன் நான் தீய நட்புக் கொண்டிருந்தேன்."

அவன் எல்லா இடங்களுக்கும் போயிருக்கிறான் ; தான் சந்தித்த பெண்களிடமெல்லாம் தீய நட்புக் கொண்டிருக்கிறான். யாருமே அவனை ஏசாததைப்போன்று, அவன் சாந்தமாகவும், கருணையுடனும் எல்லாவற்றையும் வர்ணித்தான். அடுத்த நிமிடம் அவன் பேச்சு கப்பலின் பின்னணியிலிருந்து கேட்கும்.

" சீட்டு விளையாட யாராவது விரும்புகிறீர்களா ? எது வேண்டுமானாலும் விளையாடலாம். சீட்டு, சாந்தியளிக்கும் பொருள். வியாபாரி பணத்தை அள்ளுவதைப்போல், உட்கார்ந்து பணத்தை அள்ளுங்கள்."

" நல்லது," " கெட்டது," " அக்கிரமம்" ஆகிய வார்த்தைகளை அவன் அபூர்வமாகத்தான் உபயோகித்தான். ஆனால் " எடுக்கலாம்," " ஆறுதல் பெறலாம்," " நூதனமானது " என்ற சொற்களை அவன் சதா உபயோகித்தான். ஒரு அழகிய பெண் அவனுக்கு " எடுக்கக்கூடிய சிறிய பொருள் ;" வெயில் காயும் நாள் " ஆறுதல் பெறும் நாள்." அவன் பிடித்தமாகச் சொல்வது :

" அதன்மீது துப்பு !" என்பது.

அவனைச் சோம்பேறி யென்று எல்லோரும் மதித்தனர். ஆனால் தர்நாற்றம் வீசி, மூச்சுத் திணறவைக்கும் அந்தப் பொந்தில் மற்றவர்களைப் போல் அவனும் உணர்ச்சிபூர்வ மாக வேலை செய்ததாக நான் கருதினேன். மற்ற சூளை காப்போர் குறைப்படுவதைப்போல் களைத்துவிட்டதாக அவன் குறைபட்டுக்கொள்வதை நான் கேட்டதே இல்லை.

ஒரு நாள் ஒரு கிழப் பிரயாணியின் பர்ஸ் காணுமல் போய்விட்டது. மாலை நேரம் மனேகரமாக இருந்ததால், பிரயாணிகள் உல்லாசமாக இருந்தனர். அந்தக் கிழவிக்கு காப்டன் ஐந்து ரூபிள் கொடுத்தார் ; மற்ற பிரயாணிகளும் பணம் கொடுத்தனர். அவளிடம் பணத்தைக் கொடுத்த பொழுது, சிறுவை அடையாளம் வரைந்துகொண்டு அவள் குனிந்து வணங்கினுள்.

" என் அன்பர்களா ! என் பர்ஸில் இருந்ததைவிட மூன்று ரூபிள் பத்து காபெக் அதிகமாகக் கொடுத்து விட்டீர்கள்."

யாரோ உல்லாசமாகக் கூவினர் :

" வைத்துக்கொள், பாட்டி. சந்தோஷமாக இரு. அதிகப்படியான மூன்று ரூபிள்கள் உதவியாக இருக்கும்."

மிகப் பொருத்தமான வார்த்தையை வேறு ஒருவர் சொன்னர் :

" பணம் ஜனங்களல்ல ; பணம் எப்பொழுதும் பிர யோஜனப்படும்."

ஆனால் தன் யோசனையுடன் யாக்கோவ் கிழவியை அணுகினன்.

" அதிகப்படியான அந்தப் பணத்தை எனக்குக் கொடு. அதைக் கொண்டு நான் சீட்டு விளையாடுகிறேன்."

சூளைகாப்போன் விளையாடுகிறன் என்று நினைத்து, ஜனங் கள் சிரித்தனர். ஆனால் அவன் பதட்டமின்றி வற்புறுத்தினன்:

" வா, பாட்டி. பணத்தை வைத்துக்கொண்டு நீ என்ன செய்யப் போகிறாய்? நாளை உன் சவக்குழியில் படுக்க வேண் டியவள், நீ."

ஏசிவிட்டு, அவர்கள் அவனைத் தூரத்தினர். ஆச்சரியத் துடன் அவன் என்னிடம் சொன்னன் :

" நூதனமான கூட்டமிது ! எதற்காக இவர்கள் மற்றவர்கள் விஷயத்தில் தலையிட வேண்டும் ? அதிகப்படியான பணம் தனக்குத் தேவை யில்லை யென்று அவளே சொன்னாள். மூன்று ரூபிள் எனக்குப் பெரிய ஆறுதலளிக்கும்."

பணத்தைக் காண்பதிலேயே அவன் இன்பத்தைக் கண்டதாகத் தோன்றிற்று. பேசிக்கொண்டிருக்கும்பொழுதே அவன் ஒரு வெள்ளி நாணயத்தையோ, தாமிர நாணயத்தையோ தன் கால் சட்டையில் தேய்த்துச் சுத்தப்படுத்தி விட்டு, தன் சப்பை மூக்குக்கு முன்னே அதை வைத்து அழகு பார்ப்பான். ஆனால் அவன் பேராசை படைத்தவனல்ல.

ஒரு நாள் சீட்டு விளையாட அவன் என்னை அழைத்தான். சீட்டு விளையாட எனக்குத் தெரியாது.

" சீட்டு விளையாடத் தெரியாதா ?" என்று ஆச்சரியத்துடன் அவன் கேட்டான். " ஆச்சரியமாக இருக்கிறதே ! உனக்குப் படிக்கத் தெரிகிறதே ! உனக்கு நான் கற்றுக் கொடுக்க வேண்டும். சர்க்கரையைப் பணயமாக வைத்து வேடிக்கைக்காக விளையாடலாம், வா !"

அரைப் பவுண்டு சர்க்கரைக் கட்டியை அவன் ஜயித்தான். அவைகளை ஒவ்வொன்றாக வாயில் போட்டுக்கொண்டான். நான் விளையாடக் கற்றுவிட்டேன் என்று கருதினதும், அவன் சொன்னான் :

" இனி உண்மையாக விளையாடலாம்—பணத்திற்கு. உன்னிடம் பணம் இருக்கிறதா ?"

" ஐந்து ரூபிள் இருக்கிறது."

" என்னிடம் இரண்டு சொச்சம் இருக்கிறது."

என்னிட மிருந்ததை இயல்பாக அவன் வென்றான். நஷ்டத்தை ஈடு செய்ய, ஐந்து ரூபிளுக்கு என் கம்பளிக் கோட்டைப் பணயம் வைத்தேன். இதையும் நான் தோற்றேன். என் புதிய பூட்ஸை மூன்று ரூபிளுக்குப் பணயம் வைத்தேன். அதையும் தோற்றுவிட்டேன். கோபத்துடன் யாக்கோவ் சொன்னான் :

" நீ விளையாடத் தெரியாதவன் ; ஆத்திரக்காரன். உன் கோட்டையும், பூட்ஸையும் எடுத்துக்கொள். இவை எனக்

குத் தேவையில்லை. இதோ, இவைகளை எடுத்துக்கொள் ; உன் பணத்தையும்—நான்கு ரூபிள்—எடுத்துக்கொள். நீ ஆட்சேபிக்கவில்லை யென்றால், ஒரு ரூபிள் குறை தட்சிணை !''

நான் நன்றியறிதல் உள்ளவனாக இருந்தேன்.

'' அதன்மீது துப்பு !'' என்று என் நன்றியறிதலுக்கு அவன் பதில் கூறினான். '' விளையாட்டு என்றால் விளையாட்டு தான்—வேடிக்கைக்காக என்பது இதன் பொருள். ஆனால் போர் உணர்ச்சியுடன் நீ விளையாடுகிறாய். சண்டையில்கூட ஆத்திரப்பட வேண்டியதில்லை. சாந்தமாக எதிரியைப் பார்க்க வேண்டும். ஆத்திரப்பட என்ன இருக்கிறது ? நீ வாசிபன். நீ உன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். ஒரு முறை தவறினாய்—ஐந்து தரம் தவறினாய், ஏழு தரம் தவறினாய்—அதன்மீது துப்பு ! பின்வாங்கு, சாந்தமடை. மீண்டும் முயற்சி செய். இப்படித்தான் விளையாட வேண்டும்.''

அவனை நான் அதிகமாகவும்—சில சமயங்களில் குறைவாகவும்—நேசித்தேன். சில சமயங்களில் அவன் பேசிய பொழுது பாட்டியை அவன் நினைவூட்டினான். என்னை ஆகர்ஷித்த பல தன்மைகள் அவனிடமிருந்தன. ஆனால் ஜனங்களிடம் அவன் காட்டிய அசிரத்தை எனக்கு வெறுப்பை அளித்தது. அவனுடைய வாழ்க்கைப் பிரயாணத்தில் இந்த அசிரத்தைக் குணம் அவனுக்கு உருவாகி யிருக்கவேண்டும்.

ஒரு நாள் சூரியாஸ்தமனத்தில் பெர்மைச் சேர்ந்த பருமனான ஒரு வியாபாரி குடித்துவிட்டு, ஜலத்தில் விழுந்தான். பைத்தியக்காரனைப் போன்று கைகளைக் வீசிக்கொண்டு கீழே விழுந்த அவன், கப்பல்விட்டுச் சென்ற செவ்வொளி படர்ந்த வழியில் கிடந்து தத்தளித்தான்; இஞ்சின்கள் உடனே நிறுத்தப்பட்டன ; கப்பல் நின்றது. சக்கரங்கள் நுரையை அள்ளி வீசின. சூரியாஸ்தமனத்திலே நுரை ரத்தச் சிவப்பாக மாறிற்று. கொதிக்கும் இந்தச் சிவப்பிலே தூரத்தில் தெரிந்த ஒரு கரிய உருவம் போராடிக்கொண் டிருந்தது. ஜலத்திலிருந்து மனதைப் பிளக்கும் கூச்சல் எழுந்தது. கப்பலின் பின்னணியத்தில் கூடி நின்று பிரயாணிகளும் கூச்சலிட்டனர். முண்டியடித்துக்கொண்டு பிரயாணிகள் முன்னே வந்தனர்.

குடித்திருந்த,வழுக்கைவிழுந்த, சிவந்த மேனிபடைத்த, முழுகுகிறவர்களின் நண்பன் கூட்டத்தை விலக்கிக்கொண்டு கர்ஜித்தான் :

" வழி விடுங்கள் ! அவனை நான் அடைகிறேன் !"

இரண்டு மானுடிகள் ஜலத்தில் குதித்து, முழுகுகிறவனை நோக்கி நீந்திக்கொண்டிருந்தனர். ஒரு உதவிப் படகும் கீழே இறக்கப்பட்டது. மானுடிகளின் கூச்சலையும், பெண்களின் ஓலத்தையும் பிளந்துகொண்டு யாக்கோவின் கனத்த, நிதானமான குரல் கேட்டது :

" அவன் கோட்டு அணிந்திருப்பதால், அவன் முழுகி விடுவான். நீண்ட அங்கிகள் உடம்பிலிருந்தால் முழுகுவது திண்ணம். பெண்களை எடுத்துக்கொள்வோம் : ஆண்களை விட விரைவில் பெண்கள் ஏன் முழுகிவிடுகிறார்கள் ? அவர்களின் பாவாடையால்தான். பெண் ஜலத்தில் விழுந்ததும், கல் கீழே போவதைப் போன்று பெண் கீழே போய்விடுவாள். பார் —அவன் மூழ்கிவிட்டான். நான் என்ன சொன்னேன்?"

அவன் மூழ்கிவிட்டான். அவன் உடம்பை இரண்டு மணி நேரம் தேடினர்—பலனில்லை. குடிபோதை தெளிந்து விட்ட அவன் நண்பன் கப்பல் பின்னணியத்தில் தூக்கத் துடன் உட்கார்ந்துகொண்டு முணுமுணுத்தான்.

" நடந்ததைப் பார் ! இனி என்ன செய்வது ? அவன் உறவினரிடம் நான் என்ன சொல்லுவேன் ? அவன் உறவினர்களுக்காக இல்லை யென்றால்....."

கைகளைப் பின்னே கட்டிக்கொண்டு அவனுக்கு முன்னே நின்று யாக்கோவ் அவனுக்கு ஆறுதல் சொன்னான் :

" இது தவிர்க்க முடியாதது, வியாபாரி ! முடிவு எப்படி ஏற்படு மென்று யாருக்கும் தெரியாது ! ஒருவன் காளானைத் தின்னுகிறான்—பூ—சவக்குழிக்குப் போகிறான் ! ஆயிரக் கணக்கானவர்கள் தேகாரோக்கியத்திற்காகக் காளானைத் தின்னுகிறார்கள் ; ஒருவன் மாத்திரம் சாவதற்காகத் தின்னுகிறான். சொல்லப் போனால், காளான் என்ன பிரமாதம் ?"

பரந்தும், திரிகல்லைப் போன்றும் அவன் வியாபாரி முன்னே நின்றான்; உமியைப் போன்று அவன் வார்த்தைகளை உதிர்த்தான். முதலில் வியாபாரி மெதுவாக அழுதான் ;

தாடியில் வடிந்த கண்ணீரைக் கைகளால் துடைத்துக்கொண் டான். யாக்கோவ் சொன்னதன் பொருள் அவனுக்கு விளங் கியதும், அவன் வாய்விட்டு அழ ஆரம்பித்தான் :

" போய்விடு, பிசாசே ! எதற்காக என் ஆத்மாவைப் பிய்க்கிறாய் ? உண்மையான விசுவாசிகளே, இவனை அப்புறப் படுத்துங்கள் ; இல்லையெனில் இனி நடக்கப் போவதற்கு நான் ஜவாப்தாரியல்ல !"

சாந்தமாக யாக்கோவ் பின்வாங்கினான். அவன் சொன்னான் :

" ஜனங்கள் வேடிக்கையானவர்கள் ! நன்மை செய்ய முயலு ! இதை அவர்கள் புரிந்துகொள்ள மாட்டார்கள்."

சூஸை காப்போனைப் பேதையென்று சில சமயங்களில் நான் நினைத்தேன் ; ஆனால் பல சமயங்களில் அவன் இப்படி நடிக்கிறான் நான் கருதினேன். அவன் விஜயம் செய்த இடங் களைப்பற்றியும், அவன் கண்டவைகளைப் பற்றியும் கேட்க எனக்கு அளவு கடந்த ஆசை; ஆனால் அவன் என் ஆசையைப் பூர்த்தி செய்யவில்லை. தலையைப் பின்னே சாய்த்துக்கொண்டு, கரிய, கடி விழிகளைப் பாதி மூடிக்கொண்டு, செழுமையாக இருந்த முகத்தைத் தடவிக்கொண்டு, கடந்த கால நினைவு களை அவன் சொல்லுவான் :

" ஜனங்கள் எங்கும் இருக்கிறார்கள், சகோதர, எறும்பு களைப்போல். இங்கும், அங்கும் ஜனங்கள் இருக்கிறார்கள்— கூட்டம் கூட்டமாக. எல்லாவற்றிற்கும் மேலாக, விவசாயி கள் இருக்கிறார்கள். சரத் கால இலைகளைப் போன்று, பூமி முழுதிலும் அவர்கள் பரவிக் கிடக்கிறார்கள். புல்கர்களா ? நான் புல்கர்களைக் கண்டேன் ; கிரேக்கர்களையும் கண்டேன். ஸெர்பியரும், ருமேனியர்களும், பல்வேறு நாடோடிகளும்— பல ரகமானவர்கள்—இருக்கிறார்கள்! அவர்கள் எப்படி இருக் கிறார்கள் ? அவர்கள் எப்படி இருக்க முடியும் ? நகரங்களில் நகர மக்கள் ; கிராமங்களில் கிராமவாசிகள். இங்கே இருப்ப வர்களைப்போன்று அங்கே இருக்கிறார்கள். இதே மாதிரிதான் இருக்கிறார்கள். நம்மைப்போல் பேசவும் பேசுகிறார்கள்— ஆனால் சிறிய வித்தியாசம். தார்தாரியனையோ, மோர்டோவி யனையோ உதாரணத்திற்காகச் சொல்லலாம். கிரேக்கரால்

நம்மைப்போல் பேச முடியாது ; தோன்றினதை உளறுவார்கள். வார்த்தைகளைப் போன்றுதான் ஒலிக்கிறது ; ஆனால் என்ன பேசுகிறார்கள் என்று சொல்ல முடியாது. சைகை மூலம்தான் அவர்களிடம் பேச வேண்டும். என் கிழவன் தனக்குக் கிரேக்க பாஷை தெரியுமென்று என்னை நம்ப வைத்தான் : காலமாரா, காலமாரு என்று முணுமுணுத்தான் ! அவன் ரொம்ப தந்திரக்காரன் ! எனினும் அவர்கள் பேசுவது அவனுக்குப் புரியவில்லை ! என்ன ? அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று மீண்டும் கேட்கிறாயா ? பேதை, அவர்கள் எப்படி இருக்க முடியும் ? அவர்கள் கறுப்பாக இருக்கிறார்கள் ; ருமேனியர்களும் கறுப்பாகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் ஒரே மதத்தைச் சேர்ந்தவர்கள். பல்கேரியர்களும் கறுப்பாகத்தான் இருக்கிறார்கள் ; ஆனால் நம்மைப்போல் பிரார்த்தனை செய்கிறார்கள். கிரேக்கர் சம்பந்தப்பட்டவரையில், அவர்கள் துருக்கியரைப் போன்று இருக்கிறார்கள்.''

அவன் எல்லாவற்றையும் சொல்லவில்லை யென்றும், எதையோ மறைக்கிறான் என்றும் நான் நினைத்தேன்.

கிரீசின் தலைநகரம் ஏதென்ஸ் என்னும் அழகிய, புராதன நகரமென்று நான் மாசிகையில் வெளிவந்த சித்திரத்தின் மூலம் தெரிந்துகொண்டிருக்கிறேன். ஆனால் சந்தேகத்துடன் தலையை அசைத்துக்கொண்டு, ஏதென்ஸ் இருப்பதையே மறுத்தான் யாக்கோவ்.

'' அவர்கள் பொய் சொல்லியிருக்கிறார்கள், சகோதர. ஏதென்ஸே இல்லை ; ஏதோன் மாத்திரம்தான் இருக்கிறது. அது நகரமல்ல ; தேவமட மிருக்கும் மலை அது. அவ்வளவுதான். ஏதோனின் புனித மலை என்று அது அழைக்கப்படுகிறது. அதன் படங்கள் இருக்கின்றன ; அவைகளைக் கிழவன் விற்றான். டான்யூப் நதிக்கரையில் பெல்கிரோட் நகரம் இருக்கிறது. யாரோஸ்லோவையோ அல்லது நிழனியையோ போன்று இருக்கிறது அது. அவர்களின் நகரங்களைப் பற்றி அதிகம் சொல்வதற்கில்லை ; ஆனால் அவர்கள் சம்பந்தப்பட்டவரையில்—அது வேறு விஷயம். அவர்களின் பெண்கள்—சொல்லிலே மயங்கிவிடுவார்கள். ஒரு பெண்ணுக்காக

நான் ஏறக்குறைய அங்கே தங்கவிருந்தேன். அவள் பெய ரென்ன ?''

அவன் முகத்தை வேகமாகத் தடவிக்கொண்டான். இதனால் அவன் தாடி சலசலத்தது. அவன் அடித் தொண்டை யிலிருந்து மணி அசைவதைப் போன்று சத்தம் எழுந்தது.

'' மனிதன் விஷயங்களை எப்படி மறக்கிறான் ! நானும் அவளும் இணைபிரியாத ஜோடிகள்...நான் விடைபெற்ற பொழுது அவள் அழுதாள்—நானும் அழுதேன். நம்பினால் நம்பு ; இல்லாவிட்டால் விட்டுவிடு...''

பெண்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று வெட்கமின்றி அவன் எனக்குக் கற்றுக்கொடுத்தான்.

நாங்கள் கப்பலின் பின்னணியத்தில் உட்கார்ந்திருந் தோம். நிலாவால் அழகுபடுத்தப்பட்ட வெப்பமான, இரவு எங்களைச் சந்திக்க மிதந்து வந்தது. வெள்ளித் திரை யைப்போன்ற ஜலத்திற்கு அப்பால் இடதுபுறம் இருந்த புல் வெளி தெளிவாகத் தெரியவில்லை ; வலதுபுறம் இருந்த குன்றி லிருந்த மஞ்சள் விளக்குகள் சிறையுண்ட நட்சத்திரங்களைப் போல் கண்சிமிட்டின. எல்லாம் இயங்கின : ஜீவனுடன் நடமாடின. அவன் வாண்ட வார்த்தைகள் மௌனத்தைக் குலைத்துக்கொண்டு உதிர்ந்தன.

'' விழித்ததும் அவள், தன் கரங்களை வீசுவாள்.....''

யாக்கோவின் கதைகள் வெட்கமற்றிருந்தது ; ஆனால் வெறுப்பளிக்கவில்லை. அதிலே தற்பெருமை யில்லை ; குரூர மில்லை ; கலைமெருகில்லை; கொஞ்சம் வீட்டு ஏக்கம் கலந்திருந் தது. வானத்திலே இருந்த சந்திரனின் நிர்வாணத்தன்மையும் இதேபோன்று வெட்கமற்றிருந்தது : என்னிலே தூக்கத் தைத் தூண்டிவிட்டது. நல்ல விஷயங்கள்—மிக நல்ல விஷயங்கள்—மாத்திரம்தான் என் நினைவி லிருந்தன : ராணி மார்கோர்ட்டும், உண்மையை வெளியிட்டதால் மறக்க முடி யாத கவிதைகளும் :

பாடலுக்கு அழகு அவசியம் தேவை ;
ஆனால் அழகுக்குப் பாடல் தேவையில்லை.

தூக்கக் கலக்கத்தை உதறுவதைப்போன்று, சிந்தனையை உதறித்தள்ளிவிட்டு, தன் வாழ்க்கையைப்பற்றியும், தான் கண்டவைகளைப்பற்றியும் சொல்லுமாறு சூளைகாப்போனை நான் வற்புறுத்தினேன்.

" நீ நூதனமான பறவை!" என்றான் அவன். " நான் எதைச் சொல்ல வேண்டும்? நான் எல்லாவற்றையும் கண்டிருக்கிறேன். சந்நியாசி மடமா? ஆம், நான் சந்நியாசி மடத்தைப் பார்த்திருக்கிறேன். சாராயக் கடையா? ஆம், சாராயக் கடையையும் நான் பார்த்திருக்கிறேன். சீமான்களின் வாழ்க்கையை நான் கண்டிருக்கிறேன்; மூஷிக்குகளின் வாழ்க்கையையும் நான் கண்டிருக்கிறேன்; நானும் நன்றாக அனுபவித்திருக்கிறேன்; கஷ்டமும் பட்டிருக்கிறேன்."

ஆழமான நதிக்கு மேலே இருக்கும் அசைந்தாடும் பாலத்தைக் கடப்பதைப்போன்று, மெதுவாகக் கடந்த காலத்தை அவன் நினைவுபடுத்திக்கொள்வான்.

" உதாரணமாக இதை எடுத்துக்கொள்: குதிரை திருடியதற்காக நான் லாக்கப்பில் இருக்கிறேன். இந்தமுறை நிச்சயமாக சைபீரியாவுக்குப் போக வேண்டியதுதான் என்று நான் நினைத்தேன். தன் புதிய வீட்டிலிருந்த குளிர்காயும் அடுப்பு புகைந்துகொண்டிருந்ததால், போலீஸ் அதிகாரி சபித்துக்கொண்டிருந்தான். எனவே நான் சொன்னேன்: 'பிரபுவே, அதை ஒழுங்குபடுத்த என்னால் முடியும்!' அவன் என்மீது சீறிவிழுந்தான். 'வாயை மூடு! நகரிலுள்ள மிகச்சிறந்த அடுப்பு ரிப்பேர்செய்பவனால் இதைச் சீர்படுத்த முடியவில்லை!' ஆனால் நான் சொன்னேன்: 'சில சமயங்களில் பிரபுவைவிட முட்டாள் சாமர்த்தியசாலியாக இருப்பான்!' சைபீரியாவின் சித்திரம் என்னை துணிவுடையவனாக்கிற்று. 'நல்லது, முயன்று பார். உன் முயற்சி முடிந்த பிறகு புகை அதிகமானால், உன்னை நான் சட்டினி செய்துவிடுவேன்' என்றான் அவன். நல்லது, இரண்டு நாட்களில் குளிர்காயும் அடுப்பை நான் ரிப்பேர் செய்தேன். அந்தப் போலீஸ் அதிகாரி இதைக் கண்டு திகைத்துவிட்டான். அவன் மீண்டும் என்மீது சீறிவிழுந்தான்: 'முண்டமே!

முட்டாளே! உன்னைப்போன்ற நிபுணன் குதிரை திருடுகிறான்! இதை எப்படி நியாயப்படுத்துவாய்?' எனவே நான் சொன்னேன்: முட்டாள்தனம், பிரபுவே!' 'நீ சொல்லுவதுதான் சரி. முட்டாள்தனம்தான்! எவ்வளவு பரிதாபகரம்! உனக்காக நான் வருந்துகிறேன்' என்றான் அவன். இதைக் கேட்டாயா? ஒரு போலீஸ் அதிகாரி இதைச் சொன்னான். அந்த உத்தியோகத்தில் இருப்பவனுக்குக் கருணைகாட்ட உரிமையில்லை. ஆனால் அவன் என் மீது கருணை காட்டினான்!"

"நல்லது, பிறகு என்ன நடந்தது?" என்று நான் கேட்டேன்.

"ஒன்றுமில்லை. அவன் என்மீது கருணை காட்டினான். இன்னும் என்ன வேண்டும்?

"உன்மீது அவன் எதற்காகாக் கருணைகாட்டினான்! நீ கல்லைப்போன்று பலமுடையவனாக இருக்கிறாயே?"

யாக்கோவ் சிரித்தான்.

"நீ ரொம்ப நூதனமான பறவை! கல் என்னுகிறாயா? கல்லைக்கூட மதிக்க வேண்டும். கல்லானும் பிரயோஜனம் இருக்கிறது. வீதி அமைக்கக் கல் உதவுகிறது. எல்லாவற்றையும் மதிக்க வேண்டும்; எல்லாவற்றிற்கும் உபயோகம் இருக்கிறது. மணலை எடுத்துக்கொள். மணல் என்ன பிரமாதமானதா? எனினும் அதிலே புல் வளர்கிறது."

இத்தகைய விஷயங்களைச் சூளைகாப்போன் சொன்ன பொழுது, என் புத்திக்கு அப்பாற்பட்ட விஷயங்கள் அவனுக்குத் தெரியும் என்பதை நான் தெளிவாக உணர்ந்தேன்.

"சமையற்காரனைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?" என்று நான் கேட்டேன்.

"யார்—டெடிபெயரா?" என்று அலட்சியமாக யாக்கோவ் கேட்டான். "அவனைப்பற்றி நான் நினைப்பதற்கு என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை."

இது உண்மைதான். ஐவான் இவானைவிச் மிருதுவாகவும், சரியாகவும் நடப்பவன். எனவே சிந்தனைக்கு இடமில்லை. எனக்குச் சிரத்தையளித்த ஒரு விஷயம்தான் அவனிடமிருந்தது: சூளைகாப்போனை அவன் விரும்பவில்லை;

அவனைப் பார்த்துக் கூச்சலிட்டான். எனினும் சதா அவனைத் தேநீர் சாப்பிட அழைத்தான்.

ஒரு நாள் அவன் யாக்கோவிடம் சொன்னான் :

"பன்னை அடிமை முறை அனுஷ்டானத்திலிருந்து, உன் பிரபுவாக நான் இருந்தால், வாரத்தில் ஏழு நாட்கள் உன் தோலை நான் பதம்பண்ணுவேன், சோம்பேறியே !"

"வாரத்தில் ஏழு நாட்கள் சொம்ப அதீதமானது" என்று பதட்டமின்றிச் சொன்னான் யாக்கோவ்.

இடைவிடாது திட்டினாலும், எக்காரணத்தாலோ சமையற்காரன் அவனுக்கு உணவளித்தான். தின்னுவதற்கு எதையாவது கொடுத்துவிட்டு, அவன் சொல்லுவான் :

"இதை வாங்கிக்கொள், கபந்தா !" என்று.

"உன் தயவால் நான் பலம் பெறுகிறேன், ஐவான் இவானெவிச்" என்று மெதுவாகத் தின்றுகொண்டே யாக்கோவ் சொல்லுவான்.

"இந்தப் பலத்தை வைத்துக்கொண்டு நீ என்ன செய்யப் போகிறாய், சோம்பேறி ?"

"நீ என்ன சொல்லுகிறாய்? நான் இன்னும் பல வருடங்கள் வாழ வேண்டுமே !"

"எதற்காக நீ வாழ வேண்டும், பிசாசே !"

"பிசாசுகளும் வாழ விரும்புகின்றன. ஒருக்கால் வாழ்க்கையிலே நீ வேடிக்கையைக் காணுமல் இருக்கலாம். வாழ்க்கை வேடிக்கையானது, ஐவான் இவானெவிச்."

"நீ சரியான முட்டாள் !"

"திட்டாளா ?"

"இல்லை ; முட்-டா-ள் !"

"இத்தகைய வார்த்தையை யார் கேட்டிருக்கிறார்கள்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் யாக்கோவ்.

"அவனைப் பார் !" என்று டெடிபெயர் என்னிடம் சொன்னான். "நீயும், நானும் சபிக்கப்பட்ட இந்த அடுப்படியிலே கிடந்து வெந்து வாடுகிறோம் ; ஆனால் இவன் இங்கே உட்கார்ந்துகொண்டு பன்றியைப்போல் தின்னுகிறான் !"

"அவனவன் விதிபடி எல்லாம் நடக்கும்" என்று கலக்கமின்றித் தின்றுகொண்டு யாக்கோவ் சொன்னான்.

அடுப்படியிலே நிற்பதைவிடச் சூளையைக் கிண்டுவது சிரமமானது என்பது எனக்குத் தெரியும். ஒன்றிரண்டு முறை யாக்கோவுக்கு அருகில் நின்றுகொண்டு நான் அந்த வேலையைச் செய்ய முயன்றிருக்கிறேன். எனினும் மற்ற வேலைகளைவிடத் தன் வேலை கடினமானது என்று அவன் என் வற்புறுத்திச் சொல்லவில்லை என்பது எனக்கு விளங்கவில்லை. அவனுக்கு விசேஷ அறிவிருக்கிறது என்னும் என் எண்ணத்தை அவன் நடவடிக்கை ஊர்ஜிதம் செய்தது.

எல்லோரும்—காப்டன், மெக்கானிக், தண்டேல், மற்றும் அவனுடன் சம்பந்தமா யிருப்பவர்கள்—அவனைக் குறை கூறினர். அவனை அவர்கள் வேலையிலிருந்து நீக்காதது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. மற்ற சூளைகாப்பவர்கள் அவனிடம் அன்பாகப் பழகினர்; எனினும் அவனது சீட்டு விளையாட்டையும், வாயாடித்தனத்தையும் அவர்கள் கேலி செய்தனர்.

ஒரு நாள் நான் அவர்களைக் கேட்டேன்:

"யாக்கோப் நல்லவனு?"

"யாக்கோவா? அவர் பரவாயில்லை. அவன் கோபப் பட மாட்டான். அவனை என்ன வேண்டுமானாலும் செய்யலாம்; எரியும் நிலக்கரியை அவன் கழுத்தில் போடலாம்."

சூளையில் அவன் கடுமையாக வேலைசெய்தும், அவனுக்கு அபார ஜீரணசக்தி இருந்தும், அவன் கொஞ்ச நேரம்தான் தூங்கினான். அவன் ஷிப்டு முடிந்ததும், அவன் மேல் தட்டில் காட்சி யளிப்பான். அநேகமாக உடைகளை மாற்றுமல், அசுத்தமாகவும், வியர்வையுடனும் பிரயாணிகளுடன் இரவு முழுவதும் பேசிக்கொண்டோ, சீட்டு விளையாடிக் கொண்டோ இருப்பான்.

மூடப்பட்ட பெட்டியாக அவனை நான் கருதினேன்; அதில் ஏதோ ஒளித்து வைக்கப்பட்டிருப்பதாகவும் நான் கருதினேன். அந்தப் பெட்டியைத் திறக்கும் சாவியை நான் பிடிவாதமாகத் தேடினேன்.

"நீ எதைத்தான் விரும்புகிறாய் என்பது எனக்குப் புரியவில்லை, சகோதர!" என்று புருவங்களால் மறைக்கப் பட்ட கண்களால் என்னைத் துருவிப்பார்த்துக்கொண்டு

அவன் சொன்னான். "உலகத்தைப்பற்றி நீ கேட்க விரும்புகிறாயா? நான் உலகத்தைச் சுற்றியிருப்பது உண்மைதான். அதனாலென்ன? நீ நூதனமான பறவைதான்! ஒரு நாள் எனக்கு என்ன நேர்ந்தது என்பதைக் கேள்!"

கீழ்க்கண்ட கதையை அவன் சொன்னான்: முன் காலத்தில் ஒரு மாகாணை நகரில் காசநோய் படைத்த ஒரு இளம் நீதிபதியும், அவன் ஜெர்மானிய மனைவியும் வசித்தனர். அவள் தேகாரோக்கியம் படைத்த, மக்கட் பேறற்ற பெண். ஒரு வியாபாரியை அவள் காதலித்தாள். அந்த வியாபாரியின் அழகிய மனைவி மூன்று குழந்தைகளுக்குத் தாய். ஜெர்மானியப் பெண் தன்னைக் காதலிக்கிறாள் என்பதை உணர்ந்த வியாபாரி, அவளுக்கு விளையாட்டுக்காட்ட முடிவு செய்தான். இரவில் தன்னைத் தோட்டத்தில் சந்திக்குமாறு அவளிடம் அவன் சொன்னான். தன் நண்பர்கள் இருவரை புதரில் ஒளித்துவைத்தான்.

"இனி சுவாரஸ்யமான பாகம் வருகிறது! ஜெர்மானியப் பெண் வந்தாள். அவள் விரகதாபத்தால் பீடிக்கப்பட்டிருந்தாள். தான் அவனுக்கு அடிமை என்று சொன்னாள். ஆனால் அவன் சொன்னான்: 'நான் மணமானவனாதலால் நான் உன்னை ஸ்வீகரிக்க முடியாது. ஆனால் உனக்காக நான் இரண்டு நண்பர்களை அழைத்து வந்திருக்கிறேன்; ஒருவன் பிரம்மசாரி; இன்னொருவன் மனைவியை இழந்தவன்.' அந்தப் பெண் கூவினாள்; அவனை ஓங்கி அறைந்தாள். அவன் பெஞ்சுமீது தலைகுப்புற விழுந்தான். பிறகு அவள் அவனை உதைக்க ஆரம்பித்தாள். நான் நீதிபதியின் கையாளாக வேலை செய்ததால், நான்தான் அவளை அங்கே அழைத்து வந்தேன். வேலியிலிருந்த வெடிப்புமூலம் எட்டிப் பார்த்த நான், அந்தக் கோலாகலத்தைக் கண்டேன். புதரிலிருந்த நண்பர்கள் வெளியே குதித்து, அந்தப் பெண்ணின் கூந்தலைப் பிடித்து இழுத்தனர். வேலியைத் தாண்டி நான் அங்கே சென்று அவர்களை தொறுக்கினேன். 'இப்படிச் செய்வது முறையல்ல' என்றேன் நான். 'நம்பிக்கையுடன் இவனிடம் வந்தாள் சீமாட்டி: ஆனால் இவன் அவளை இப்படி அவமானப் படுத்திவிட்டான்!' நான் அவளை அழைத்துச் சென்றேன்.

அவர்கள் செங்கல்லை என் தலையில் வீசினர். அவள் நிலை குலைந்துவிட்டாள். என்ன செய்வ தென்று தெரியாமல் வாசலில் முன்னும் பின்னும் நடந்தாள். அவள் என்னிடம் சொன்னாள் : 'நான் போய்விடுகிறேன்—என் இனத்தவரிடம் போய்விடுகிறேன், யாக்கோவ். என் கணவர் இறந்ததும் நான் போய்விடுகிறேன்.' 'அதுதான் நல்லது' என்றேன் நான். 'ஆம், நீங்கள் போய்விட வேண்டியதுதான்.' நல்லது, நீதிபதி இறந்தார் ; அவளும் போய்விட்டாள். அவள் மிருதுவானவள் ; புத்திசாலி. நீதிபதியும் கனவான், அவன் ஆத்மா சாந்தியடைக !''

அந்தக் கதையின் நீதி எனக்குப் புரியாததால், நான் ஒன்றும் சொல்லவில்லை. வழக்கமான குரூரமும், அர்த்தமின்மையும் அதில் இருந்தன. ஆனால் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது ?

''கதை பிடித்ததா ?'' என்று கேட்டான் யாக்கோவ்.

நான் என்னமோ முணுமுணுத்தேன். ஆனால் அவன் அமைதியாக விளக்கினான் :

''நன்கு உணவருந்தி, சுகம் அனுபவிக்கும் இத்தகைய ஜனங்கள், சில சமயங்களில் கேளிக்கையை விரும்புகின்றனர். ஆனால் அவர்கள் எண்ணம் ஈடேறுவதில்லை. ஏனெனில் இதை எப்படிச் செய்ய வேண்டும் என்று அவர்களுக்குத் தெரியாது. இது இயற்கைதான். ஏனெனில் இவர்கள் வர்த்தக இனத்தைச் சேர்ந்தவர்கள். வர்த்தகத்திலே மூளையை செலவிடுகிறார்கள். சதா மூளையைச் செலவிட்டு வாழுவது சலிப்பைத் தரும். எனவே கொஞ்சம் விளையாடத் தோன்றும்.''

கப்பலின் முன் பாகத்திலிருந்து நதி நுரை படலத்தை எழுப்பிக்கொண்டு புரண்டு சென்றது. ஜலம் பாயும் ஓசை எங்களுக்குக் கேட்டது ; நதிக் கரைகள் மெதுவாக மறைவது எங்களுக்குத் தெரிந்தது. மேல் தளத்திலிருந்து பிரயாணிகளின் குறட்டை கேட்டது. ஒல்லியான கறுப்பு உடை அணிந்த மெட்டைப் பெண், ஒருத்தி தன் நகைத்த கூந்தலை மறைத்துக்கொள்ளாமல், தூங்குகிறவர்களையும்,

பெஞ்சுகளையும் கடந்து சென்றாள். சூளைகாப்போன் என்னை இடித்துவிட்டு, மெதுவாகச் சொன்னான் :

" பார், அவள் வேட்டையாடுகிறாள் !"

மற்றவர்களின் இதய வேதனை இவனுக்கு வேடிக்கையாக இருந்தது போலும்.

அவன் சொன்ன கதைகளை நான் ஆர்வத்துடன் கேட்டேன். அவன் சொன்ன கதைகளெல்லாம் எனக்கு நினைவிருக்கின்றன ; ஆனால் அவன் சந்தோஷமான கதை சொன்னதாக எனக்கு நினைவே இல்லை. புத்தகங்களைப் போன்று இல்லாது, அவன் பற்றின்றிப் பேசினான். ஆசிரியரின் உணர்ச்சிகளை—அவருக்குள்ள இன்பம், கோபம், துக்கம், கேலி ஆகிய உணர்ச்சிகளை—நான் புத்தகங்களில் கண்டிருக்கிறேன். சூளைகாப்போன் கேலி செய்யவில்லை ; தீர்ப்புக் கூறவும் இல்லை. ஏதும் அவனுக்கு மகிழ்ச்சியோ, துக்கமோ அளிக்கவில்லை. கோர்ட்டிலே பற்றின்றிச் சாட்சி சொல்லும் சாட்சியைப்போல், கைதி, வக்கில், நீதிபதி ஆகிய மூவரையும் சமமாகக் கருதுகிறவனைப்போல், அவன் பேசினான். இந்த அலட்சியம் என்னை ஆத்திரமூட்டிற்று, தான் புறுத்திற்று, விரோத உணர்ச்சியைத் தூண்டிவிட்டது.

பாய்லருக்குக் கீழே இருக்கும் சூளையில் தீ நர்த்தனமாடுவதைப் போன்று, வாழ்க்கை அவனுக்கு முன்னே நர்த்தனமாடிற்று. கரடியின் பாதங்களைப் போன்ற தனது கைகளில் மரக் கொட்டாப்புளியை வைத்துக்கொண்டு லீவரைத் தட்டி, நெருப்பை அதிகப்படுத்தினான், அல்லது குறைத்தான்.

"உன்னை யாராவது வேதனைப்படுத்தியிருக்கிறார்களா?"

"என்னை யார் வேதனைப்படுத்த முடியும் ? யாரையும் கீழே சாய்க்கும் சக்தி எனக்கு இருக்கிறது..."

" அதை நான் சொல்லவில்லை. உன் ஆத்மாவை யாராவது வேதனைப்படுத்தியிருக்கிறார்களா ?"

" ஆத்மாவை யாராலும் வேதனைப்படுத்த முடியாது; ஆத்மா ஆத்திரமடையாது. அதைத் தொடக்கூட முடியாது. எதாலும் அதைத் தொட முடியாது " என்றான் அவன்.

நிலத்தைப்பற்றியோ, வேலையைப்பற்றியோ, உணவைப் பற்றியோ, பெண்களைப்பற்றியோ அடிக்கடி பேசியதைப்

போன்று ஆத்மாவைப்பற்றியும் டெக் பிரயாணிகளும், கப்பல் வேலைக்காரர்களும், மற்றவர்களும் பேசினர். ஐந்து காபெக் நாணயம் பாந்த அளவில் பரிவர்த்தனையாவதைப் போன்று, பாமர மக்களின் நிகண்டிலுள்ள ஆத்மா என்னும் வார்த்தை பரந்த அளவில் பரிவர்த்தனையாயிற்று. இந்த வார்த்தையை ஆபாசமான நாக்குகள் விடாது உச்சரிப்பது எனக்கு வருத்தத்தை அளித்தது. ஆபாசமான வார்த்தைகளைச் சொல்ல ஆரம்பிக்கும்பொழு தெல்லாம் ஒரு மூஷிக் கேலியாகவோ உண்மையாகவோ ஆத்மாவைச் சபித்தது, என் இதயத்தை நேரடியாகத் தாக்கிற்று.

அன்பு, இன்பம், அழகு ஆகியவைகளின் ரகசிய உறைவிடமாகிய ஆத்மாவைப்பற்றிப் பாட்டி பக்தி பாவசத்துடன் பேசுவது எனக்கு நினைவிலிருக்கிறது. ஒரு நல்ல மனிதன் இறந்ததும், பெண் தேவ தூதர்கள் சொர்க்கத்திற்கு அவன் ஆத்மாவைச் சுமந்து செல்வார்கள் என்றும், அங்கே பாட்டியின் கருணைக் கடவுள் அவனை அன்புடன் வரவேற்பா ரென்றும் நான் திடமாக நம்பினேன்.

" என் அருமைச் செல்வமே—என் பரிசுத்த பொக்கிஷமே—அங்கே நீ வாழ்ந்த வாழ்க்கை மோசமானதாக, வேதனை நிறைந்ததாக இருந்ததா ?"

பிறகு அவர் ஆத்மாவுக்கு தேவலோகவாசிகளுக்குள்ள ஆறு வெண் சிறகுகளை அருளுவார்.

பாட்டியைப் போன்று பக்தி பாவசத்துடனும், தயக்கத்துடனும், யாக்கோவ் ஷ-மோவ் ஆத்மாவைப்பற்றிப் பேசினான். சபித்தபொழுது அவன் ஆத்மாவைச் சபிக்கவில்லை. மற்றவர்கள் இதைச் செய்ததும், அவன் மௌனியாகித் தலையைத் தொங்கவிட்டுக்கொள்வான்.

ஆத்மா என்றால் என்ன என்று நான் கேட்டால், அவன் சொல்லுவான் :

" அது ஆவி, கடவுளின் மூச்சு."

இது என்னைத் திருப்திப்படுத்தவில்லை. எனவே மேலும் நான் கேள்வி கேட்க ஆரம்பித்தால், கீழே பார்த்துக்கொண்டு சொல்லுவான் :

"ஆத்மாவைப்பற்றிப் பாதிரிகளுக்குக்கூட அதிகமாக ஒன்றும் தெரியாது, சகோதர! அது மறைந்து கிடக்கும் ஒன்று—"

நான் சதா அவனைப்பற்றிச் சிந்தித்துக்கொண் டிருந் தேன்; அவனைப் புரிந்துகொள்ள என் முயற்சிகளெல் லாம் செலவழித்தேன். ஆனால் எல்லாம் வீணாயின. யாக் கோவைத் தவிர வேறொன்றையும் என்னால் காண முடிய வில்லை; அவன் பெரிய தேகம் யாவற்றையும் மூடிமறைத்தது.

காரியஸ்தனின் மனைவி சந்தேகாஸ்பதமான முறையில் என்மீது கவனம் செலுத்தினாள். தினசரி காலை அவள் குளிப்பதற்கு நான் ஜலம் சுமந்து செல்ல வேண்டும். இது இரண்டாம் வகுப்பு வேலைக்காரியாகிய சுத்தமான, மலர்ந்த முகம் படைத்த லூஷாவின் வேலை என்றாலும், இந்தப் பெண்ணுக்கு அடுத்தாற்போ லிருந்த குறுகிய அறையில் நான் நின்றுகொண் டிருக்கும்பொழுது, அவள் இடைவரை யில் துணியின்றி நிற்பாள். புளிப்பான கூழைப்போன்று மிருதுவாக இருந்த அவளுடைய சோகையான தேகம் எனக்கு வெறுப்பை அளித்தது. அந்த நேரத்தில் அவ ளுடைய தேகத்தை ராணி மார்கோட்டின் உறுதியான, வெண் கலம் போன்ற தேகத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பதை என் னால் தடுக்க முடியவில்லை. காரியஸ்தனின் மனைவி எதையா வது உளறிக்கொண்டே இருந்தாள்; அவள் முணுமுணுத் தாள்; கோபமடைந்திருப்பதாகப் பாசாங்கு செய்தாள்.

அவள் கூறும் கருத்துகள் என்னைத் தொடவில்லை; அதன் பொருளை என்னால் ஊகிக்க முடிந்தது என்றாலும், அவள் கருத்துகள் கீழ்த்தரமானவை, வெட்கம் நிறைந்தவை. ஆனால் அது என்னை அசைக்கவில்லை. காரியஸ்தனின் மனைவி யிடமிருந்தும், கப்பலில் நடந்த எல்லாவற்றிலிருந்தும் மானசிகமாக நான் பிரிந்து வாழ்ந்தேன். என்னைச் சுற்றி யிருந்த உலகத்திலிருந்து ஒரு பெரிய பாசி படர்ந்த பாறாங் கல என்னைப் பிரித்தது; ஒவ்வொரு நாளும் அது மிதந்து கொண்டே இருந்தது.

"காரியஸ்தனின் மனைவி உன்மீது கட்டுக்கு அடங் காத காதல்கொண் டிருக்கிறாள்!" என்ற லூஷாவின்

கேலிச் சொற்கள், கனவிலே கேட்பதைப் போன்று கேட்டது. "சந்தர்ப்பம் கிடைக்கும்போழுது இன்பம் அனுபவி!"

அவள் மாத்திரம் என்னைக் கேலி செய்யவில்லை : சாப்பாட்டு அறையிலிருந்த சகல வேலைக்காரர்களுக்கும் இந்தப் பெண்ணின் காதல் தெரிந்திருந்தது. இனிப்புடன் இதைக் கவனித்தான், சமையற்காரன்.

"எல்லா ருசியையும் அந்தச் சீமாட்டி அனுபவித்து விட்டாள். இப்பொழுது பிரெஞ்சு அடையை ருசி பார்க்க விரும்புகிறாள்! பூ! நீ விழிப்புடனிரு, பெஷ்கோவ்! இல்லையென்றால் நீ தகராறில் சிக்கிக்கொள்வாய்!"

யாக்கோவும் எனக்குத் தந்தைபோல் உபதேசம் செய்தான் :

"உனக்கு இரண்டு, அல்லது மூன்று வயது அதிகமாக இருந்தால், நான் வேறு விதமாகப் பேசுவேன். ஆனால் இந்த வயதில்—நீ வேறுவிதமாக நடந்துகொள்ள வேண்டும். எனினும் உன் விருப்பம்போல் நீ நடக்கலாம்."

"இதை மறந்துவிடு" என்றேன் நான். "இது மோசமானது."

"இது உண்மைதான்."

ஆனால் ஒரு நிமிடத்திற்குப் பிறகு தன் சிக்குபட்ட மயிருக்கூடே விரலை விட்டுக்கொண்டு, வார்த்தைகளை விதைக்க ஆரம்பித்தான் அவன் :

"அவள் விஷயத்தையும் கவனிக்க வேண்டும். அது மந்தமானது. நாய்கூட அரவணைப்பை விரும்புகிறது என்றால், மனித ஜாதி இதை விரும்புவது இயல்புதானே. மழையின் அணைப்பில் காளான் வாழ்வதைப்போன்று, பெண் அணைப்பில் வாழ்கிறாள். அவள் வெட்கமற்றவள் என்று தோன்றும்; ஆனால் அவள் என்ன செய்வாள்? தேகம் விபசாரியைப் போன்றது—அவ்வளவுதான்."

தெளிவற்ற அவன் கண்களை உற்றுப் பார்த்துக்கொண்டு நான் கேட்டேன் :

"அவளுக்காக நீ வருந்துகிறாயா?"

"நானு? அவள் என் தாயாரல்ல; என் தாயாரை அவள்? சிலர் தங்கள் தாயாருக்குக்கூட வருந்துவதில்லை. நிச்சயமாக நீ ஒரு நூதனமான பறவை!"

உடைந்த மணியின் சலசலப்பைப் போன்று அவன் சிரித்தான்.

சில சமயங்களில் அவனை நான் பார்த்ததும், சூன்யத் வத்தில், அடி இல்லாத இருண்ட குழியில் நான் அமிழ்ந்து விட்டதாக எனக்குத் தோன்றிற்று.

"எல்லோரும் கலியாணம் செய்துகொள்ளுகிறார்கள், யாக்கோவ். நீயும் ஏன் கலியாணம் செய்துகொள்ளக் கூடாது?"

"எதற்காக? எப்பொழுது வேண்டுமானாலும் பெண் எனக்குக் கிடைப்பாள்; கடவுள் கருணையால், இது சுலபம். கலியாணமானவன் வீட்டில் இருந்துகொண்டு, நிலத்தில் வேலைசெய்ய வேண்டும். என் நிலம் நல்ல நிலமல்ல; எனக்கு அதிக நிலமும் இல்லை. இருந்ததை என் மாமா எடுத்துக் கொண்டுவிட்டார். ராணுவத்திலிருந்து என் சகோதரன் திரும்பிவந்தான்; என் மாமாவுடன் சண்டைக்கு நின்றான். சட்டப்படி நடவடிக்கை எடுப்பதாகப் பயமுறுத்தினான். பிறகு தடியால் தலையில் அடித்தான். ரத்தம் சிந்தப்பட்டது. இதற்காக ஒன்றரை வருடம் அவனைச் சிறைக்கு அனுப்பினார்கள். அதன் பிறகு மாஜிக் கதைக்கு ஒரே பாதைதான் இருக்கிறது—அந்தப் பாதை மீண்டும் சிறைக்கு அழைத்துச் செல்லுகிறது. அவன் மனைவி சபலபுத்தி படைத்தவள். ஆனால் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது? கலியாணம் செய்துகொண்டால், கட்டுக்கு அடங்கி, படுக்கை அறையை ஆளவேண்டியதுதான்; ஆனால் தன் சொந்த வாழ்க்கையைக் கூட ஒரு சிப்பாயால் ஆள முடியாது."

"நீ பிரார்த்தனை செய்வது உண்டா?"

"நீ சொம்ப நூதனமான பறவை! ஆம், நான் பிரார்த்தனை செய்வது உண்டு."

"எப்படி?"

"பல வழிகளில்."

" எந்தப் பிரார்த்தனை உனக்குத் தெரியும் ?"

" எந்தப் பிரார்த்தனையும் எனக்குத் தெரியாது. நான் சொல்லுவேன் : ' இயேசுநாதரே, உயிருள்ளவர்மீது கருணை காட்டும்; இறந்தவருக்கு சாந்தியை அருளும்; நோயிலிருந்து எங்களைக் காப்பாற்றும்—நல்லது, இன்னும் சில விஷயங்களும்."

" இன்னும் எந்த விஷயங்கள் ?"

" எனக்குத் தெரியாது. நீ என்ன சொன்னாலும் அது கடவுளுக்குக் கேட்கும்."

வேடிக்கை செய்யும் கெட்டிக்கார நாய்க்குட்டியைப் போன்று அன்பாகவும், நூதனமாகவும் என்னை நடத்தினான் யாக்கோவ். எண்ணெய், நெருப்பு, வெங்காயம்—வெங்காயமென்றால் அவனுக்கு சொம்பப் பிரியம் ; ஆப்பிள் தின்னுவதைப்போல் பச்சை வெங்காயத்தை அவன் தின்பான்—ஆகிய மணம் கமழும் அவனுக்கு அருகில் நான் மாலையில் உட்கார்ந்திருப்பேன். திடீரென்று அவன் சொல்லுவான் :

" வா, அல்யோஷா, ஒரு கவி பாடு."

எனக்குப் பல கவிதைகள் மனப்பாடம். இதைத் தவிர என் நோட் புத்தகத்தில் என் மனதிற்குப் பிடித்த பல கவிதைகளை நான் எழுதி வைத்திருந்தேன். " ருஸ்லானும், லுட்மிலாவும் " என்னும் கவிதையை நான் பாடுவேன். அசையாது, எதையும் காணாது, பேசாது, மூச்சைப்பிடித்துக் கொண்டு அவன் கவிதையைக் கேட்பான். பிறகு அவன் மிருதுவாகச் சொல்லுவான் :

மனதைக் கவரும் கதை இது. நீயே இதைக் கற்பனை செய்தாயா ? புஷ்கின் என்று சொன்னாயல்லவா ? மூக்கின்—புஷ்கின் என்னும் பிரபு ஒருவன் இருக்கிறான். அவனை நான் ஒரு தரம் பார்த்தேன்."

" அவனல்ல. நீண்ட காலத்திற்கு முன் இந்தப் புஷ்கினைக் கொன்றுவிட்டார்கள்."

" எதற்காக ?"

ராணி மார்கோட் சொல்லிக் கேட்ட கதையை நான் சுருக்கமாகச் சொன்னேன். நான் கதையை முடித்ததும், அவன் சாந்தமாகச் சொன்னான் :

"பெண்களால் பலர் அழிகிறார்கள்."

புத்தகங்களில் படித்த கதைகளை நான் அடிக்கடி சொல்லுவேன். ஆடம்பரமும் அழகும் நிறைந்த, இதய எழுச்சி நிறைந்த, வெறிகொண்ட சாகஸங்கள் நிறைந்த, உன்னதமான வீரர்கள் நிறைந்த, அதிர்ஷ்டசாலிகள் நிறைந்த, போரும் மரணமும் நிறைந்த, உயர்ந்த சொற்களும் கீழ்த்தரமான நடவடிக்கைகளும் நிறைந்த பின்னிப் பிணைந்து கிடக்கும் நீண்ட கதை அது. லாமோலே, ஹன்னிபால், கொலோன்னு ஆகியோரின் வீரத் தன்மையை ரோக்காம்போலேக்கும், தாத்தாவின் குணத்தைப் பதினேராவது லூயிக்கும், நாலாது ஹென்றியின் தன்மைகளை கார்னெட் ஓட்லி டாயெவ்வுக்கும் நான் பரிசளித்தேன். உணர்ச்சியால் தூண்டப்பட்டு ஜனங்களின் குணங்களை நான் மாற்றியமைத்தேன்; நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்தினேன். இவ்வாறு ஒரு உலகத்தைச் சிருஷ்டி செய்து, தாத்தாவின் கடவுளைப்போல் நான் தனியரசு புரிந்தேன்; தாத்தாவின் கடவுளைப்போன்று மனிதராசியுடன் விளையாடினேன். வாழ்க்கையின் உண்மையான தன்மையைக் காணுவதிலிருந்து புத்தக உலகம் என்னைத் தடுக்கவில்லை; ஜீவனுள்ள மக்களைப் புரிந்துகொள்ள வேண்டும் என்னும் என் ஆசையைக் குறைக்கவும் இல்லை. அதே சமயத்தில் விஷம் கலந்த கூளத்திலிருந்தும், என்னைச் சுற்றி நடைபெற்ற வாழ்க்கையிலே நெளிந்த தொத்து நோயிலிருந்தும் புத்தக உலகம் என்னை திரையிட்டு மறைத்தது.

பல தீமைகளிலிருந்து புத்தகங்கள் என்னைக் காத்தன. ஜனங்கள் காதலுக்காக எவ்வளவு துன்பங்களை அனுபவித்தார்கள் என்னும் தகவல், விபசாரவிடுதிக்குச் செல்வதிலிருந்து என்னைத் தடுத்தது. விபசாரத்தின் தன்மை என் ஆத்திரத்தைத் தூண்டிவிட்டது. அதிலே இன்பத்தைக் கண்டவர்கள்மீது வெறுப்பைத் தூண்டிவிட்டது. சந்தர்ப்பத்தால் ஏற்படும் சூழ்நிலையைப் பற்றின்றி எதிர்க்கும் கலையை ரோக்கம்போல் எனக்குக் கற்றுக்கொடுத்தார். மகோன்னதமான, முக்கியத்வம் வாய்ந்த லட்சியத்திற்காக ஜீவனையே அர்ப்பணம் செய்யவேண்டும் என்னும் ஆசையை

நிமாஸின் வீரர்கள் என்னிடம் தூண்டிவிட்டனர். எனக்கு சொம்பப் பிடித்த பாத்திரம் உல்லாசமான மன்னன் நாலாவது ஹென்றி. இவனை மனத்திற்கொண்டுதான் பெராங்கர் கிழக் கண்டவாறு எழுதினர் என்று நான் நினைக்கிறேன் :

எல்லா ஜனங்களையும் அவர் அன்போடு நேசித்தார்.

அவரும் சந்தோஷமாக இருந்தார் என்பதை நாம் அறிவோம்.

தன் ராஜ்யத்திலுள்ள மக்கள் அனைவரும் மகிழ்ச்சியால் மூழ்கித் திளைக்கும்போது,

என் அரசனும் மகிழ்ச்சியால் திளைக்கக் கூடாது ?

மக்கள் மனதைக் கவர்ந்தவனுகவும், கருணை உள்ளம் படைத்தவனுகவும் நாலாவது ஹென்றியை நாவல்கள் வர்ணித்தன. அவனுடைய சிறந்த குணங்கள், உலகிலேயே மிகச் சிறந்த தேசம் பிரான்ஸ்தான் என்னும் அசைக்க முடியாத நம்பிக்கையை—வீரர்கள் நிறைந்த தேசம் என்னும் அசைக்க முடியாத நம்பிக்கையை-மன்னன் உடையிலே இருந்த வர்களைப் போன்று விவசாயிகள் உடையிலே இருந்த ஜனங்களும் உயர்ந்தவர்கள் என்னும் அசைக்க முடியாத நம்பிக்கையை—என்னில் தூண்டிவிட்டது. டி. ஆர் டாக்னனைப் போன்று ஆங்கே பைட்டும் சிறந்த வீரன். ஹென்றி கொல்லப்பட்டபொழுது, துக்கத்தால் நான் வாய்விட்டு அழுதேன்; ராவெய்லாக்மீது வெறுப்பால் பற்களை நறநற வென்று கடித்தேன். சூலைகாப்போனிடம் நான் சொன்ன கதைகளின் கதாநாயகன் ஹென்றிதான். அவனையும், பிரான்சையும் யாக்கோவும் நேசிக்க ஆரம்பித்தான் என்று எனக்குத் தோன்றிற்று.

" மிக அற்புதமானவன், ஹென்றி மன்னன். மீன் பிடிக்கவோ, வேறு வேலைகளுக்கோ அவனுடன் செல்லலாம் " என்று அவன் சொன்னன்.

அவன் பாவசம் அடையவில்லை; கேள்விகள் கேட்டு என் கதைகளில் குறுக்கிடவும் இல்லை. மௌனமாக அவன் கதை கேட்பான் ; பாசி படிந்த பாறையைப்போல் அவன் முக

பாவம் மாறுமலேயே இருக்கும். ஆனல் எக்காரணத்தை முன்னிட்டாவது நான் நிறுத்தினுல், உடனே அவன் கேட்பான் :

" இவ்வளவுதானு ?"

" இன்னும் இருக்கிறது."

" அப்படியானல் நிறுத்தாதே."

ஒரு நாள் நாங்கள் பிரான்சைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தபொழுது, நெடுமூச்சுடன் அவன் சொன்னன் :

" அவர்கள் நன்முகவும், அமைதியாகவும் வாழுகிறர்கள்."

" நீ சொல்லுவதன் பொருளென்ன ?"

" நீயும் நானும் வெப்பத்திலே வாழுகிறேம் ; சதா வேலே செய்கிறேம். ஆனல் அவர்கள் நன்முகவும், அமைதியாகவும் வாழுகிறர்கள். அவர்கள் செய்வதற்கு ஒன்றுமில்லே; குடிக்கிறர்கள், ஊர் சுற்றுகிறர்கள். வாழ மிக வேடிக்கையான வழி."

" அவர்களும் வேலே செய்கிறர்கள்."

" நீ சொல்லும் கதைகளிலிருந்து அவர்கள் வேலே செய்வதாகத் தெரியவில்லே " என்று சூளுரைப்போன் நியாயமாகச் சொன்னன். நான் படித்த புத்தகங்களில் பெரும்பான்மையானவை ஜனங்கள் எப்படி வேலே செய்தார்கள் என்பதைப்பற்றியோ, உயர்குடியில் பிறந்த வீரர்கள் யார் உழைப்பால் வாழ்ந்தார்கள் என்பதைப்பற்றியோ நான் படித்த புத்தகங்களில் பெரும்பான்மையானவை ஒன்றுமே சொல்லவில்லே என்பது திடீரென்று எனக்கு உதயமாயிற்று.

" நல்லது, நான் கொஞ்சம் தூங்கட்டுமா ?" என்று படுத்துக்கொண்டே யாக்கோவ் கேட்டான். மறு நிமிடம் அமைதியாக அவன் குறட்டைவிட ஆரம்பித்தான்.

சரத்காலத்தில், காமா நதியின் கரைகள் சிவப்பு—தவிட்டு நிறமாக மாறினதும், மரங்கள் தங்க நிறமாக மாறினதும், சூரிய கிரணங்கள் மங்க ஆரம்பித்ததும், யாக்கோவ் திடீரென்று கப்பல் வேலேயை விட்டுவிட்டான். போவதற்கு முன் அவன் என்னிடம் சொன்னன் :

" நாளை மறு தினம் நீயும், நானும் பெர்முக்குச் செல்வோம், அல்யோஷா. அங்கே குளிக்கும் விடுதிக்குச் சென்று நம் மனம் திருப்தி அடையும்வரையில் ஆவியிலே குளிப்போம். அங்கிருந்து சங்கீதம் ஒலிக்கும் சாராயக் கடைக்குச் செல்வோம். மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கும் விஷயம் இது. இசைக்கருவியை அவர்கள் நெரிப்பதைக் காண நான் விரும்புகிறேன் !"

ஆனால் சாராபூலில் தாடி இல்லாத, பருமனான, பெண் முகம் படைத்த ஒருவன் கப்பலில் ஏறினான். நீண்ட கோட்டும், நரியின் காதுகள் போன்ற மடிப்புடைய தொப்பியும் அவன் அணிந்திருந்ததால், அவன் தோற்றத்தைப் பெண் தோற்றமாக்கின. குசினிக்கு அருகிலிருந்த வெப்பமான மூலையில் கிடந்த மேஜைக்கு முன்னே உட்கார்ந்துகொண்டு, அவன் தேநீர் கேட்டான். பிறகு கோட்டையும், தொப்பியையும் கழற்றுமலேயே கொதிக்கும் தேநீரைப் பருக ஆரம்பித்தான். வியர்வையிலே அவன் மூழ்கினான்.

சரத்கால மேகங்கள் மனோகரமான மழையைப் பொழிந்தன. தனது கைக்குட்டையால் தனது முகத்தை அந்த மனிதன் துடைத்துக்கொண்டதும், மழை ஓயு மென்று தோன்றிற்று. ஆனால் அந்த மனிதன் வியர்க்க வியர்க்க, மழையும் அதிகரித்தது.

விரைவில் அவனுக்கருகில் யாக்கோவும் உட்கார்ந்தான். பிறகு இருவரும் பஞ்சாங்கத்தைப் படிக்க ஆரம்பித்தனர். பிரயாணி தன் விரலால் எதையோ வரைந்தான். சூனகாப் போன் சாந்தமாகச் சொன்னான் :

" அதனால் என்ன ? என்னைப் போன்றவனுக்கு அது எளிது. அதன்மீது துப்பு !"

" நல்லது " என்று தன் காலடியில் திறந்து கிடந்த தோல் பையில் பஞ்சாங்கத்தைச் சொருகிக்கொண்டே உரத்த குரலில் சொன்னான் பிரயாணி. அமைதியாக அவர்கள் பேசினர் ; தேநீர் குடித்தனர்.

யாக்கோவின் ஷிப்பட் ஆரம்பிக்கு முன் அந்த மனிதன் யாரென்று அவனைக் கேட்டேன். சிரித்துக்கொண்டே அவன் சொன்னான் :

" புஷ்பத்தைப் போன்றிருக்கிறான், இல்லையா ? அவன் ஒரு விதையடிக்கப்பட்டவன் என்பது இதன் பொருள். தூரத்திலுள்ள சைபீரியாவிலிருந்து வருகிறான். தூதனமான பறவை - திட்டத்திலே உயிர் வாழுவதாகத் தோன்றுகிறது."

குளம்புகளைப் போன்று கடினமாகவும், கறுப்பாகவும் இருந்த பூட்ஸ் அணியாத கால்களால் மேல்தட்டில் தாளம் போட்டுக்கொண்டு அவன் அப்பால் சென்றான். ஆனால் திரும்பி நின்று, தன் விலாவில் சொறிந்துகொண்டு அவன் சொன்னான் :

" அவனிடம் நான் வேலைக்கு அமர்ந்துவிட்டேன். நாம் பெர்மை அடைந்ததும், நான் கப்பலிலிருந்து போய்விடுவேன். அது நமது பிரிவாக இருக்கும், அல்யோஷா. நாங்கள் முதலில் ரயிலிலும், பிறகு நதி மூலமும், அதன் பிறகு குதிரைமீதும் பிரயாணம் செய்வோம். அங்கே போய்ச் சேர ஐந்து வாரங்களாகும். ஜனங்கள் எங்கெங்கெல்லாம் போகிறார்கள் !"

" அவனை உனக்கு முன்பு தெரியுமா ?" என்று யாக்கோவின் எதிர்பாராத முடிவால் ஆச்சரியமடைந்த நான் கேட்டேன்.

" எனக்கு எப்படித் தெரியும் ? அவனை இதற்கு முன் பார்த்ததே இல்லை ; அவன் வசிக்கும் இடத்திற்குப் போனதும் இல்லை."

ஆட்டுத்தோல் சட்டை அணிந்து கொண்டு, ஒரு காலத்தில் டெடிபெயருக்குச் சொந்தமான நொறுங்கிய, ஓரமில்லாத தொப்பி அணிந்துகொண்டு, கிழிந்த செருப்புகள் அணிந்து கொண்டு மறுநாள் காலை யாக்கோவ் தோற்றமளித்தான். இரும்பு விரல்களால் என் கால்களைப் பற்றிக்கொண்டு அவன் சொன்னான் :

" என்னுடன் வருகிறாயா ? நான் சொன்னால் அந்தப் புஷ்பம் உன்னையும் வேலைக்கு அமர்த்துவான். நான் சொல்லட்டுமா ? நீ செய்யாததை அவன் செய்வான் ; உனக்குக் கொஞ்சம் பணமும் அவன் தருவான். ஒருவனைச் சித்திரவதை செய்துகொண்டே இருப்பது அவர்களுக்கு வேடிக்கை. அதற்காக அவனுக்குப் பணம்கூடக் கொடுப்பார்கள் !"

ஒரு வெண் பொட்டலத்தை கையில் வைத்துக்கொண்டு, மந்தமான கண்களால் யாக்கோவை உற்றுப் பார்த்துக் கொண்டு, அந்தக் கசையடிக்கப்பட்டவன் கம்பிகளுக்கு அருகில் நின்றான். நீரில் மூழ்கினவனுடைய தேகத்தைப் போன்று அவன் தேகம் புடைத்துக்கொண் டிருந்தது. அவனை நான் சபித்தேன். சூளைகாப்போன் மீண்டும் என் கைகளைப் பற்றினான்.

" அவன்மீது தூப்பு ! ஒவ்வொருவனும் தனக்குப் பிடித்த வழியில் கடவுளை வேண்டுகிறான் — அதனால் உனக் கென்ன ? நல்லது—போய் வருகிறேன். நீ சந்தோஷத்துடன் இருப்பாய் என்று நம்புகிறேன் !"

பெரிய கசடியைப் போன்று மூச்சுவிட்டுக் கொண்டு, மாறுபட்ட உணர்ச்சிகளால் என் உள்ளம் பிளக்க, யாக்கோவ் ஷாமோவ் போய்விட்டான். அந்தச் சூளைகாப்போனுக்காக நான் வருந்தினேன் ; அவன்மீது ஆத்திரப்பட்டேன். அவன் ஏன் தூர தேசத்திற்கு, தெரியாத இடத்திற்குப் போனான் என்பதை எண்ணி நான் பீதி அடைந்தேன்—சிறிது பொறுமையும் அடைந்தேன் என்பது எனக்கு நினைவிருக் கிறது. எது எப்படிப் போனாலும், இந்த யாக்கோவ் எப்படிப் பட்ட மனிதன் !

12

சரத் கால முடிவில் கப்பல் ஓடுவது நின்றுவிட்டது. எனவே ஒரு விக்கிரக உற்பத்திச் சாலையில் நான் சிற்றாளாக வேலைக்கு அமர்ந்தேன். நான் வேலைக்கமர்ந்த இரண்டாவது நாளிலேயே மிருதுவான என் கிழ எஜமானி சொன்னாள் :

"இப்பொழுது பகல் குறைவு ; இரவு அதிகம். எனவே தினசரி காலையில் வியாபாரத்தைக் கவனிக்க நீ கடைக்குச் செல்ல வேண்டும் ; மாலையில் வேலை கற்றுக்கொள்ள வேண்டும்."

சுறுசுறுப்பான, ஒரு விதத்தில் கவர்ச்சிகரமான தோற்ற மளிக்கும் இளம் விற்பனையாளரிடம் என்னை ஒப்படைத்

தாள், என் எஜமானி. பிரபாதத்தில், குளிரில், நானும், அவனும் தூக்கமயக்கத்திலிருக்கும் இலின்கா தெருவைக் கடந்து, லோவர் மார்க்கெட்டை அடைவோம். அங்கே வர்த்தக மாளிகையின் இரண்டாவது மெத்தையிலிருந்தது, எங்கள் கடை. ஒரு காலத்தில் ஸ்டோர் ரூமாக இருந்த அந்த அறை சிறிதாகவும், இருண்டும் இருந்தது. அதற்கு ஒரு இரும்புக் கதவும், ஒரு சிறிய ஜன்னலும் இருந்தன. எங்கள் கடையிலே பெரிய, சிறிய விக்கிரகங்களும், விக்கிரகச் சட்டங்களும் நிறைந்திருந்தன. கடையிலே மஞ்சள் தோல் பைண்டு செய்யப்பட்ட ஸ்லாவோனிய லிபியில் அச்சிடப்பட்ட வேத புத்தகங்களும் இருந்தன. அடுத்த அறையில் கரிய தாடி வைத்துக்கொண்டிருந்த ஒரு வியாபாரியின் விக்கிரக, புத்தகக் கடை இருந்தது. வால்காவுக்கு அப்பால் இருந்த கெர்ஷெனெட்ஸ் நதி தீரத்தில் பிரக்யாதி பெற்ற ஒரு பழைய—மத வெறியனின் சொந்தக்காரன், அந்த வியாபாரி. அந்த வியாபாரிக்கு என் வயதில் ஒரு மகன். அவன் முகம் வயது முதிர்ந்த ஞானியின் முகத்தைப் போன்றிருந்தது.

கடையைத் திறந்ததும், அருகிலிருந்த விடுதிக்கு வெந்நீர் கொண்டுவர ஓடுவது என் முதல் வேலை. நாங்கள் தேநீர் குடித்த பிறகு, நான் தூசையைத் துடைத்து, கடையை ஒழுங்குபடுத்துவேன். எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்திய பிறகு, சாமான் வாங்க வருகிறவர்கள் அடுத்த கடைக்குச் செல்லாமல், எங்கள் கடைக்கு வர ஏற்பாடு செய்வதற்காக நான் முகப்பில் நிற்பேன்.

''சாமான் வாங்க வருகிறவர்கள் முட்டாள்கள்'' என்று கடைச் சிப்பந்தி என்னிடம் சொன்னான். ''சாமான் மலிவாக இருந்தால், எங்கே வாங்கினாலும் சமான் வாங்குகிறவர்களுக்கு ஆட்சேபணையில்லை. நல்லது எது, கெட்டது எது என்பது அவர்களுக்குத் தெரியாது.''

விக்கிரகப் பலகைகளைச் சுறுசுறுப்பாக ஒன்றாக இணைப்பான் அவன், எனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டே. வியாபாரத்தைப்பற்றித் தனக்குள்ள ஞானத்தை அவன் எனக்கு விளக்கினான் :

"இதோ இருக்கிறது ஒரு அற்புதமான வேலை—சொம்ப மலிவானது. இது மூன்றுக்கு நாலு ; இந்த விலைக்குத் தகுந்த பொருள் இது. இன்னொன்று : ஆறுக்கு ஏழு—விலைக்குத் தகுந்த பொருள் .. ரிஷிகளைத் தெரியுமா நினைவில் வைத்துக்கொள் : வோனி பாடி—குடிகாரர்களுக்கு ; தியாகி வார்வாரா — பல்வலிக்கும், அகால மரணத்திற்கும் ; அருள் பெற்ற வாஸிலி—ஜ்வரத்திற்கும், ஜன்னிக்கும். கன்னிகளைத் தெரியுமா ? பார் : வருந்துகிறவள் ; மூன்று கரங்கள் படைத்த கன்னி ; அழும் கன்னி ; குறை தீர்க்கும் கன்னி; போக்ரோவ், ஸெமிஸ்ட்ரெல்னயா....."

அளவுக்கும், வேலைப்பாடுக்கும் தகுந்த மாதிரி விக்கிரகத்தின் விலையை நான் மனனம் செய்துகொண்டேன். கன்னிகளின் விக்கிரகங்களை பிரித்தறியவும் நான் தெரிந்துகொண்டேன். ஆனால் பல்வேறு ரிஷிகள் அருளிய நன்மைகளை நினைவிலிறுத்துவது சிரமமாக இருந்தது.

கடை வாசற்படியில் தூங்கி வழிந்துகொண்டிருந்த எனது அறிவைக் கடைச் சிப்பந்தி சோதிக்க முயலுவான்.

" பிரசவ வேதனையைத் தணிப்பவர் யார் ?"

என் பதில் தவறுக இருந்தால், வெறுப்புடன் அவன் சொல்லுவான் :

" உனக்கு மூளை எதற்காக இருக்கிறது ?"

சாமான் வாங்க வருகிறவர்களைச் சாமான் வாங்க வைப்பது மிகச் சிரமம். விக்கிரகங்களின் விகாரமான வதனங்கள் எனக்குப் பிடிக்கவில்லை. அவைகளை எப்படி விற்பது என்பது எனக்குத் தெரியவில்லை. கன்னி நல்லவள், வயதாகாதவள், அழகி என்று பாட்டியின் கதைகளிலிருந்து நான் கற்பனை செய்துகொண்டிருந்தேன். மாசிகைகளில் வெளிவந்த படங்களிலும் அவள் சித்திரம் அப்படித்தான் இருந்தது. ஆனால் விக்கிரகங்களில் அவள் கிழவியாகவும், வன்மமுள்ளவளாகவும் காணப்பட்டாள் ; அவளுக்கு மீண்ட, வளைந்த மூக்கும், மடக் கைகளும் இருந்தன.

சந்தை நாட்களில்...புதன்கிழமைகளிலும், வெள்ளிக் கிழமைகளிலும்—எங்களுக்கு நல்ல வியாபாரம் நடந்தது.

எங்கள் மாடிப்படிகளில் இடைவிடாது மூவிக்குகளும், கிழவிகளும், சில சமயங்களில் பூரா குடும்பமும் ஏறிவந்தனர். வால்காவுக்கு அப்பாலிருந்த கானகப் பகுதிகளிலிருந்து வரும் சந்தேகம் படைத்த, மந்தமான பழைய கோட்பாடுகளில் நம்பிக்கை படைத்தவர்கள் அவர்கள். ஆட்டுத்தோல் சட்டையும், தூணி அங்கியும் அணிந்த ஒருவன் மெதுவாக முகப்பைக் கடந்து வருவதை நான் காண்பேன். விழுந்து விடுவோமோ என்ற பயத்துடன் நடப்பதைப் போன்றிருந்தது அவன் நடை. அவனை அணுக எனக்கு வெட்கமாகவும், கூச்சமாகவும் இருந்தது. அவன் வழியிலேயே நின்று, அவனைச் சுற்றி நடனமாடி, கொசுவைப் போன்று சிணுங்குவது மிகச் சிரமமாக இழந்தது :

" தங்களுக்கு என்ன வேண்டும், கனவானே ? சுவடியா, பிரார்த்தனைப் புத்தகமா, விளக்கத்துடன் தோத்திர கீதமா, எப்ரெம் ஸிரின், கிரில் ஆகியோர் நூல்களா ? தயவுகூர்ந்து அவைகளை பார்வையிடுங்கள். தங்களுக்கு விருப்பமான விக்கிரகங்கள் பல விலைகளில், அழகிய வேலைப்பாடுகளுடன், அழியாத வர்ணங்களில் எங்களிடம் கிடைக்கும். தங்களுக்கு விருப்பமான ரவியையோ, அல்லது கன்னியையோ நாங்கள் தீட்டித் தரத் காத்துக்கொண்டிருக்கிறோம். ஒருக்கால் மற்றவரின் போஷக ரவியையோ, அல்லது குடும்ப ரவியையோ வரைய நீங்கள் ஆர்டர் கொடுக்க விரும்பலாம். ரஷியாவிலேயே எங்கள் தொழிற்சாலைதான் மிகச் சிறந்தது ! நகரிலுள்ள மிகச் சிறந்த கடை !"

ஆழம் காணமுடியாத வாடிக்கைக்காரன் சிறிது நேரம் என்னையே உற்றுப் பார்ப்பான், நான் ஒரு நாய் என்ற நினைப்பில். பிறகு திடீரென்று என்னை அப்பால் தள்ளிவிட்டு, அடுத்த கடையில் பிரவேசிப்பான். அப்பொழுது கடைச் சிப்பந்தி தனது பெரிய காதுகளைச் சொறிந்துகொண்டு, கோபத்துடன் முணுமுணுப்பான்.

" நீ அவனை விட்டுவிட்டாயாக்கும் ! பூ, நீ சொம்பச் சிறந்த விற்பனையாளன்தான் !"

அதே சமயத்தில் அடுத்த கடையிலிருந்து மிருதுவான குரல் இனிக்கும் வார்த்தைகளைப் பொழியும் :

"நாங்கள் ஆட்டுத் தோலோ, பூட்ஸோ விற்கவில்லை; ஆனால் வெள்ளியையும், தங்கத்தையும்விட அருமையான, மதிப்பிட முடியாத ஆண்டவனின் அருளை விற்கிறோம்...."

"நாசமாய்ப் போக !" என்று எங்கள் கடைச் சிப்பந்தி பொறுமையுடனும், வியப்புடனும் முணுமுணுப்பார். "அந்த மூஷிக்கின் காதுகளில் அவன் எப்படி ஓதுகிறான், பார் ! அவனிடமிருந்து கற்றுக்கொள் !"

ஒரு வேலையை ஏற்றுக்கொண்டால் அந்த வேலையை நன்றாகச் செய்ய வேண்டும் என்று நான் கருதியதால், வேலையை கற்றுக்கொள்ள நான் உணர்ச்சிபூர்வமாக முயன்றேன். ஆனால் வாடிக்கைக்காரர்களைக் கலந்து, அவர்களைச் சாமான்கள் வாங்குமாறு செய்யவோ நான் அதிக திறமை காட்டவில்லை. விசனகரமான அந்த மூஷிக்குகளுக்காகவும், பீதி அடைந்த தோற்றமுடைய எலியைப் போன்ற கிழவி களுக்காகவும் நான் வருந்தினேன். அவர்கள் விக்கிரகங் களுக்கு அசல் விலையைவிட இருபது காபெக் அதிகமாகக் கொடுத்துவிடக் கூடாது என்பதற்காக, அவைகளின் உண்மை யான விலையை அவர்களுக்குச் சொல்ல நான் விரும்பினேன். சாதாரணமாக ஜனங்கள் வாங்கும் தோத்திரப் பாடல் களுக்கு மூன்றரை ரூபிள் ஏழைகளாகவும், பரியுடையவர் களாகவும் காணப்படும் இவர்கள் எப்படி கொடுக்கப் போகி றார்கள் என்று நான் வியந்தேன்.

புத்தகங்களைப்பற்றி அவர்களுக்கு இருந்த ஞானமும், விக்கிரகங்களின் வேலைப்பாடுகளை அவர்கள் பாராட்டியதும் எனக்கு வியப்பை அளித்தது. ஒரு நாள் தலைசைத்த ஒரு கிழவரை எங்கள் கடைக்கு நான் ஆகர்ஷிக்க முயன்றதும், அவன் சொன்னான் :

" உன் கடைதான் சதுரமாயிலேயே சிறந்த விக்கிரக உற் பத்திசாலை என்று நீ சொல்லும்பொழுது, நீ உண்மையைச் சொல்லவில்லை, பையா ! மாஸ்கோவிலுள்ள சோகோவின் தொழிற்சாலைதான் சிறந்தது !"

அவமதிக்கப்பட்ட நான் அவனுக்கு வழிவிட்டேன். அடுத்த கடையில் பிரவேசிக்காமல் தன் வழியே போனான் அந்தக் கிழவன்.

"உன்னை மடக்கிவிட்டானா ?" என்று குத்திக் காட்டும் முறையில் கேட்டான் கடைச் சிப்பந்தி.

"நல்லது, ரோகோஷின் தொழிற்சாலையைப்பற்றி நீ சொல்லவே இல்லை !"

கடைச் சிப்பந்தி சபிக்க ஆரம்பித்தான் :

"இவனைப் போன்ற சாந்தமான, சிறிய பிராணிகள் சுற்றித் திரிகின்றனர் ! இவனுக்கு எல்லாம் தெரியும் ; அதிகம் பேசுகிறான், பாம்பு !"

நாசூக்காக இருக்கிற, கர்வம் படைத்த இந்த மனிதன், ஜீர்ணித்துப்போன நற்தோற்றமுடைய இந்த மனிதன் மூஷிக்குகளை வெறுக்கிறான். ஒரு நாள் இவன் சொன்னான்:

"நான் கெட்டிக்காரன். சுத்தமான பொருள்களையும், நறுமணத்தையும்—மணம் கமழும் ஜலம், வாசனைத் திரவியம் போன்றவை—நான் நேசிக்கிறேன். கண்டச் சொந்தக்காரி ஐந்து காபெக் சம்பாதிப்பதற்காக இத்தகைய நற்குணங்கள் படைத்த நான் மூஷிக்குகளுக்கு வணங்கவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதை எண்ணிப் பார் ! இதை நான் எப்படிப் பொறுக்க முடியும் ? மூஷிக்கின் யோக்கியதைதான் என்ன ? துர்நாற்றம் வீசும் பச்சைத் தோல் ! பூமியிலே ஊர்ந்து செல்லும் பேன் ! நானே..."

வெறுப்புடன் அவன் நிறுத்தினான்.

மூஷிக்குகளை நான் நேசித்தேன். ஒவ்வொரு மூஷிக் கிடமும் நான் ஒரு புதிரைக் கண்டேன், யாக்கோவிடம் கண்டதைப்போல்.

ஆட்டுத்தோல் சட்டைமீது ஒரு அங்கி அணிந்து கொண்டு கூன் விழுந்த உருவத்துடன் ஒருவன் கடைக்குள் வருவான் ; கம்பளித் தொப்பியை எடுத்துவிட்டு, மூலையிலுள்ள விளக்குக்கு அருகிலிருக்கும் விக்கிரகத்தை நோக்கி இரண்டு விரல்களால் சிலுவை அடையாளம் வரைந்துகொள்

வான். பிறகு விமலத்துவம் பெறுத விக்கிரகங்கள் கண்ணில் படாமலிருப்பதற்காக வேறு பக்கம் திரும்புவான். இறுதி யாக அவன் சொல்லுவான் :

" விரிவுரையுள்ள தோத்திரப் பாடல் கொடுங்கள்."

தன் அங்கியை மேலே இழுத்துவிட்டுக்கொண்டு, வெடித்திருக்கும் பூமியின் நிறத்தைப் போன்ற அதரங்களை ஓசையின்றி அசைத்துக்கொண்டு புத்தகத்தின் தலைப்பைச் சிரமத்துடன் படிப்பான்.

" இதைவிட முந்தின காலத்துக் கீதங்கள் இருக்கின் றனவா ?"

" பழைய கால ஏடுகளின் விலை ஆயிரம் ரூபிள், தெரியுமா ?"

" தெரியும்."

தன் விரல்களை நனைத்துக்கொண்டு மூஷிக் புத்தகத் தைப் புரட்டுவார். அதனால் மார்ஜின் அழுக்குப்படும். மூஷிக்கின் தலைக்கு மேலே கோபத்துடன் உற்றுப் பார்த்துக் கொண்டு கடைச் சிப்பந்தி சொல்லுவான் :

" பரிசுத்த வேதம் எல்லாக் காலத்துக்கும் ஒன்றே ஒன்றுதான் ; கடவுள் தனது உபதேசத்தை மாற்ற மாட் டார்."

" இதைப்பற்றி நாங்கள் கேள்விப்பட் டிருக்கிறோம். கடவுள் மாற்ற மாட்டார் ; ஆனால் நிக்கோன் மாற்றினார்."

புத்தகத்தை மூடிவிட்டு, வாடிக்கைக்காரர் மௌனமாக வெளியே போவார்.

சில சமயங்களில் இந்த காட்டுப் பகுதிகளில் வாழும் ஜனங்கள் கடைச் சிப்பந்தியுடன் விவாதிப்பார்கள். கடைச் சிப்பந்திக்குத் தெரிவதைவிடப் புனித நூல்களைப்பற்றி அவர்களுக்கு அதிகமாகத் தெரியும் என்பது நிரூபண மாயிற்று.

" சதுப்பு நிலத்திலிருந்து வந்த அஞ்ஞானி !" என்று முணுமுணுப்பான் கடைச் சிப்பந்தி.

நவீன காலப் புத்தகங்களை மூஷிக்குகள் விரும்பவில்லை யென்றாலும், அவைகளைப் பக்தி பரவசத்துடன் அவர்கள்

பார்ப்பதை நான் உணர்ந்தேன். பறவை பறந்துவிடுவதைப் போன்று புத்தகம் தன் கையிலிருந்து பறந்துவிடுமோ என்ற பயத்துடன் அவன் ஜாக்கிரதையாகப் புத்தகத்தைக் கையாள்வான். இது எனக்குப் பெருமகிழ்ச்சி அளித்தது. ஏனெனில் ஆசிரியரின் ஆத்மாவை தன்னுட்கொண்ட ஒரு அற்புதமான பொருள் புத்தகம் என்று நான் கருதினேன். நான் ஒரு புத்தகத்தைப் படிக்கும்பொழுது இந்த ஆத்மாவை நான் விடுதலை செய்தேன் ; அது ரகசியமாக என்னுடன் பேசியது.

சீர்திருத்தவாதி நிக்கோன் காலத்திற்கு முந்தின காலப் பழைய புத்தகங்களைக் கிழவர்களும், கிழவிகளும் விற்க முன் வந்தனர் ; அல்லது இர்கிஸையோ, கெர்ஷெனெட்ஸையோ சேர்ந்த யோகிகள் அழகாக எழுதிக்கொடுத்த புத்தகப் பட்டியலைக் கொண்டுவந்தனர் ; டிமிட்ரி ரோஸ்டோவ்ஸ்கியின் திருத்தப்படாத " வாழ்க்கைச் சரித்திர "த்தையும், புராதன விக்கிரகங்களையும், சிலுவைகளையும், பித்தளைப் பொருள்களையும், வர்த்தக நாடுகளில் செய்யப்பட்ட வெண்கலப் பொருள்களையும், தங்கள் அன்புக்குப் பாத்திரமான சாராயக்கடைக்காரர்களுக்கு மாஸ்கோ இளவரசர்கள் பரிசளித்த வெள்ளிக் கரண்டிகளையும் இவர்கள் கொண்டுவந்தனர். திருட்டுத்தனமாகச் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே, இந்தப் பொருள்களைத் திருட்டுத்தனமாக விற்க முயன்றனர்.

ஆனால் எங்கள் கடைச் சிப்பந்தியும், பக்கத்துக் கடைக்காரரும் இத்தகைய சரக்குகளை ஆவலுடன் எதிர்பார்த்தனர்; இந்தப் புராதன செல்வங்களுக்குப் பத்து ரூபிளுக்கு அதிகம் விலை கொடுக்காமல் இவைகளை வாங்குவதிலே இருவரும் போட்டியிட்டனர் ; பழைய கோட்பாடுகளில் நம்பிக்கையுள்ள பணக்காரர்களுக்கு இந்தப் பொருள்களை நூற்றுக்கணக்கான ரூபிள்களுக்கு விற்றனர்.

"அந்தக் கிழச் சூன்யக்காரிகள்மீதும், பிசாசுகள்மீதும் கண்காணிப்பா யிரு !" என்று கடைச் சிப்பந்தி என்னைக் கண்டிப்பான். " அவர்கள் மூட்டைகளிலே அவர்கள் பொக்கிஷத்தை வைத்திருப்பார்கள்."

நல்ல சரக்கு கிடைத்தபொழுதெல்லாம் அவன் என்னை அடவாதி பியோடோர் வாஸில்யேவிச்சிடம் அனுப்புவான்.

பழைய புத்தகங்கள், விக்கிரகங்கள் போன்றவைகளைப்பற்றி அவனுக்குச் சகல விஷயங்களும் தெரியும்.

அறிவொளி வீசும் கண்களும், மனோகரமான வதனமும், அருள்பெற்ற வாஸிலியின் தாடியைப் போன்ற நீண்ட தாடியும் படைத்த நெட்டையான மனிதன் பியாடோர் வாஸில்யேவிச். ஒரு காலின் கட்டைவிரலை அவன் இழந்து விட்டதால், அவன் சதா கம்பை ஊன்றிக்கொண்டு நடந்தான். வேனிற் காலத்திலும், குளிர் காலத்திலும் பாதிரியின் அங்கியைப் போன்ற நீண்ட அங்கியும், குடத்தைப் போன்ற வெல்வெட் தொப்பியும் அணிவான்.

சாதாரணமாக அவன் சுறுசுறுப்பாகவும், நிமிர்ந்தும் நடந்தாலும், கடைக்குள் பிரவேசித்ததும், அவன் கூனுவான், மெதுவாக நெடுமூச்சுவிடுவான், பழைய கோட்பாட்டின் படி இரண்டு விரல்களால் சிலுவை அடையாளம் வரைந்து கொள்வான். பிரார்த்தனையும், பாவும் முணுமுணுப்பான். முதுமையையும், பக்தியையும் காட்டும் இந்த நடவடிக்கை, கிடைத்தற்கரிய பொருள்களை விற்க வந்திருப்பவர்களின் மதிப்பையும், நம்பிக்கையையும் கவர்ந்துவிடும்.

"என்னிடம் உனக்கு என்ன வேலை இருக்கிறது?" என்று கேட்டான் கிழவன்.

"இந்த மனிதன் ஒரு விக்கிரகத்தைக் கொண்டு வந்திருக்கிறான்—இது ஸ்ரோகானேவ் என்று கூறுகிறான்."

"என்ன?"

"ஸ்ரோகானேவ் விக்கிரகம்."

"என் காது கொஞ்சம் மந்தம். நிக்கோனுடைய சிஷ்பர்கள் பரப்பும் தீமைகளைக் கேட்காமலிருப்பதற்காகக் கடவுள் என் காதுகளைக் காக்கிறார்."

தொப்பியை எடுத்துவிட்டு, விக்கிரகத்தைச் சமிக்ஞையில் பிடித்துக்கொண்டு, சாயத்தின் அடியைப் பரிசீலனை செய்வான்; பிறகு இரண்டு பக்கங்களையும், மர ஆணிகளையும் ஆராய்ந்துவிட்டு, கண்களைச் சுருக்கிக்கொண்டு முணுமுணுப்பான்:

"நமது புராதன வேலைப்பாடுகளை நாம் வியந்து பாராட்டுவதை அறிந்த நாஸ்திகர்களாகிய நிக்கோனிஸ்டுகள், அசாதாரணத் திறமையுடன் பரிசுத்த விக்ரகங்களைக் காப்பியடிக்கவும், கள்ளஞ் செய்யவும் சைத்தானால் கற்பிக்கப்பட்ட நாஸ்திக நிக்கோனிஸ்டுகள், திறம்படச் செயல் புரிகிறார்கள். மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் இந்தச் சித்திரங்கள் ஸ்ரோகானேவ், அல்லது உஸ்ட்யுக், அல்லது சுஸ்டாலின் உண்மையான சித்திரமாகத் தோன்றும்; ஆனால் ஊடுருவிப் பார்த்தால் அது போலிச் சரக்கு என்பது தெளிவாகும்!"

அவன் ஒரு விக்கிரகத்தைப் போலிச் சரக்கு என்று சொன்னால், அது அருமையான; விலை உயர்ந்த சரக்கு என்று பொருள். அவன் கூறும் பதங்கள் அதற்கு என்ன விலை கொடுக்கலாம் என்பதைக் குறிக்கும். "துக்கமும், சோர்வும்" என்றால் பத்து ரூபிள் கொடுக்கலாம் என்று பொருள்; "நிக்கோன் புலி" என்றால் இருபத்தைந்து ரூபிள் என்று பொருள். விற்பனையாளர்களை இவர்கள் ஏமாற்றுவதைக் காண வெட்கமாக இருந்தது. ஆனால் கிழவனின் நடவடிக்கை எனக்குப் புதிராக இருந்தது.

"நிக்கோன் புலியின் கறுப்புக் கருவாகிய நிக்கோனிஸ்டுகளுக்குப் பல வேலைகளைச் செய்யச் சைத்தான் கற்றுக் கொடுத்திருக்கிறது. இதைப் பார்! இது உண்மையான தென்று நீ கருதலாம்; துணிகளை ஒரு கைதான் தீட்டியிருக்கிறது என்றும் நீ கருதலாம். ஆனால் அதன் முகத்தைப் பார்—முகம் வேறு பிரஷால் தீட்டப்பட்டிருக்கிறது. புராதன கருநாதர்கள்—மதபேதியான ஸைமன் உஷாக்கோவைப் போன்றவர்கள்—விக்கிரகம் முழுவதையும் தாமே வரைந்தார்கள்: துணிகளை, முகத்தை, அடியை, தளத்தை, ஆனால் பரிதாபத்திற்குரிய நமது காலப் பிரகிருதிகள் அவ்வாறு செய்யவில்லை. விக்கிரகத்தைத் தீட்டுதல் கடவுளின் வேலையாக இருந்தது; ஆனால் இன்று இது ஒரு தொழிலாகிவிட்டது, உண்மை விசுவாசிகளே!"

இறுதியில் மேஜைமீது விக்கிரகத்தை வைத்துவிட்டு, தொப்பியை அணிந்துகொண்டு, அவன் கூறுவான்:

" அவர்கள் ஆத்மா நசிக்கட்டும் !"

இதை வாங்கு என்பது இதன் பொருள்.

அந்த வேதாந்தியின் பேச்சில் மயங்கிய, அவன் ஞானத்தால் அச்சுறுத்தப்பட்ட, விற்பனையாளன் பக்தி பரவசத்துடன் கேட்பான் :

" அப்படியானால் இந்த விக்கிரகம் எப்படிப்பட்டது, பிதாவே ?"

" இந்த விக்கிரகம் நிக்கோனிஸ்டுகளுடைய சிருஷ்டி."

" இது எப்படி இருக்க முடியும் ? எங்கள் தாத்தாக்களும், அவர்களுடைய தாத்தாக்களும் இந்த விக்கிரகத்தைத் தானே வணங்கினார்கள் ?"

" உங்கள் தாத்தாக்களுக்கு முன் நிக்கோன் வாழ்ந்தான்."

விக்கிரகத்தை விற்பனையாளன் முகத்திற்கு நேரே பிடித்துக்கொண்டு, நம்பிக்கையூட்டும் முறையில் கிழவன் சொல்லுவான் :

" அவள் உல்லாசமான தோற்றத்தைப் பார். இதை விக்கிரகம் என்று சொல்லுகிறீர் ? இது வெறும் சித்திரம் ; குருட்டுத்தனமான கலை ; நிக்கோனிஸ்டுகளின் சபலம். இத்தகைய வேலைகளில் ஆத்மாவைக் காண முடியாது ! நான் பொய் சொல்லுவேனா ? நம்பிக்கைக்காகத் தூண்புறுத்தப்பட்ட ஒரு கிழவன் நான். விரைவில் என் கடவுளைச் சந்திக்க நான் போய்விடுவேன். என் ஆத்மாவை விற்பதால் எனக்கு என்ன லாபம் கிடைக்கப் போகிறது ?"

வயதால் தளர்ந்த தோற்றத்துடன், தனது அபிப்பிராயத்தின்மீது காட்டிய அவநம்பிக்கையால் ஏற்பட்ட வேதனையுடன் கடையிலிருந்து வெளியேறி முகப்புக்கு வருவான் கிழவன். விக்கிரகத்திற்கு விலையாக ஒரு சில ரூபிள் கொடுப்பான் கடைச் சிப்பந்தி. பியோட்டர் வாஸில்யேவிச் சுக்குத் தாழ்ந்து வணங்கிவிட்டு விற்பனையாளன் போய்விடுவான். வெந்நீர் கொண்டுவர நான் விடுதிக்கு அனுப்பப்படுவேன். திரும்பி வந்ததும் கிழவன் மீண்டும் சந்தோஷத்துடனும்,

சுறுசுறுப்புடனும் இருப்பதை நான் காண்பேன். சித்திரத்தை ஆசையுடன் பார்த்துக்கொண்டே கடைச் சிப்பந்தியிடம் கிழவன் சொல்லுவான் :

"சித்திரம் எவ்வளவு அற்புதமாகவும், சாதாரணமாகவும் வரையப்பட்டிருக்கிறது ! ஒவ்வொரு வரியிலும் கடவுள் பயம் தெரிகிறது. மானுஷிகத்தன்மை நிராகரிக்கப்பட்டிருக்கிறது..."

"இதை வரைந்த கை எது ?" என்று கிளர்ச்சியுடன் குதித்துக்கொண்டு, ஒளி வீசும் கண்களுடன் கேட்பான், கடைச் சிப்பந்தி.

"இதைத் தெரிந்துகொள்ள இன்னும் உனக்கு வயதாகவில்லை !"

"விஷயம் தெரிந்தவன் இதற்கு என்ன விலை கொடுப்பான் ?"

"எனக்குத் தெரியாது. இதை யாருக்காவது காட்டுகிறேன்."

"ஆஹா, பியோட்டர் வாஸில்யேவிச்..."

"இதை நான் விற்றால் ஐம்பது ரூபிள் உனக்கு ; மீதி எனக்கு."

"ஆஹா..."

"உன் 'ஆஹா' என்னிடம் காட்டாதே..."

தேநீர் குடித்துக்கொண்டே, ஒருவரை ஒருவர் திருட்டுக் கண்களால் ஆராய்ந்துகொண்டு, வெட்கமற்ற முறையில் அவர்கள் பேரம் பேசுவார்கள். கிழவனின் தயவில் கடைச் சிப்பந்தி சிக்குண்டு கிடந்தான் என்பது தெளிவாகத் தெரிந்தது. கிழவன் போனதும் அவன் என்னிடம் சொல்லுவான்:

"இந்த பேரத்தைப்பற்றி ஒரு வார்த்தைகூட எஜமானியிடம் சொல்லிவிடாதே !"

விக்கிரகத்தை விற்க ஏற்பாடு செய்யப்பட்டதும், கடைச் சிப்பந்தி சொல்லுவான் :

"நகரிலே என்ன விசேஷம், பியோட்டர் வாஸில்யேவிச் ?"

தன் மஞ்சள் கரங்களால் மீசையைத் தடவிக்கொள்வான் கிழவன் : வழவழவென்றிருந்த தனது அதரங்களை வெளியே காட்டுவான். பிறகு பணக்கார வியாபாரிகளின் வாழ்க்கை, வெற்றிகரமான பேரம், நோய், திருமணம், குடிவெறியாட்டம், கணவர்களும் மனைவிகளும் ஒருவரை ஒருவர் ஏமாற்றுதல் ஆகியவைகளை வர்ணிப்பான்; ருசிகரமான இந்தக் கதைகளை, தேர்ச்சிபெற்ற சமையற்காரன் தோசைக் கல்லிலிருந்து தோசையை எடுப்பதைப் போன்று, லாகவமாகக் கையாள்வான் ; பிறகு தனது சிரும் சிரிப்பும் என்னும் சர்பத்தை அதன்மீது பொழிவான். பொருமை கலந்த குதூகலத்தால் கடைச் சிப்பந்தியின் வட்ட முகம் சிவக்கும். கண்கள் மயங்க, நெடுமூச்சுடன் அவன் சொல்லுவான் :

" சிலர் எப்படி வாழுகிறார்கள் ? ஆனால் நான்..."

"எல்லாம் விதிப் பயன்" என்று கோஷிப்பான் கிழவன். " ஒருவனுக்குத் தேவ அருளால் சிறிய வெள்ளிச் சம்மட்டி கிடைக்கிறது ; இன்னொருவனுக்கு சைத்தான் அருளால் மழுங்கிய கோடாலி கிடைக்கிறது."

வலிமை படைத்த, உரமுள்ள அந்தக் கிழவனுக்கு எல்லாம் தெரியும்—நகரத்தைப்பற்றிச் சகல விபரங்களும், வியாபாரிகள், குமாஸ்தாக்கள், பாதிரிகள், கைவினையாளர்கள் ஆகியோரின் சகல ரகசியங்களும் அவனுக்குத் தெரியும். பருந்தின் கண்களைப்போல் அவன் கண்கள் கூர்மையானவை; ஓநாய், குள்ளநரி ஆகியவைகளின் தன்மை அவனுக்கு இருந்தது. அவனை நிந்திக்க நான் விரும்பினேன் ; ஆனால் தூரத்திலிருந்து பார்ப்பதைப் போன்று அவன் என்னைப் பார்த்ததும் நான் அசக்தனாகிவிடுவேன். அவனை அணுக விரும்பும் யாரையும் விழுங்கிவிடும் ஒரு அதல பாதாளம் அவனைச் சுற்றி இருந்ததாகத் தோன்றிற்று. அவனுக்கும், சூனாகாப் போன் யாக்கோவ் ஷ்மோவுக்கும் பொதுவான ஏதோ ஒன்றிருந்ததாக நான் கருதினேன்.

கிழவனின் சாமர்த்தியத்தைக் கண்டு கடைச் சிப்பந்தி பரவசமடைந்தான். இதை அவன் இருக்கும்பொழுதும், இல்லாத நேரத்திலும் கடைச் சிப்பந்தி ஒப்புக்கொண்டான்.

ஆனால் அவனும் கிழவனை ஆத்திரமூட்டவும், புண்படுத்தவும் விரும்பினான்.

"நீ எப்படி ஜனங்கள் கண்ணில் மண்ணைத் தூவுகிறாய்!" என்று ஒரு நாள் அவன் கிழவனிடம் சொன்னான், அவனுக்குச் சவால் விடும் முறையில் அவனைப் பார்த்துக்கொண்டு.

"கடவுள் மாத்திரம்தான் ஜனங்களை ஏமாற்ற மாட்டார்" என்று குறும்புத்தனமாகச் சிரித்துக்கொண்டே சொன்னான் கிழவன். "நாமெல்லாம் மற்றவர்களை ஏமாற்றிப் பிழைக்கிறோம். ஒரு முட்டாளை ஏமாற்ற நம்மால் முடியவில்லை யென்றால், நம்மால் என்ன பிரயோஜனம்?"

கடைச் சிப்பந்தி கோபமடைந்தான்.

"மூஷிக்குகள் எல்லோரும் முட்டாள்கள் எல்ல; மூஷிக்குகளிலிருந்துதான் வியாபாரிகள் தோன்றினார்கள்."

"வியாபாரிகளானவர்களைப்பற்றி நாம் பேசவில்லை. முட்டாள்கள் திருடர்களாக வளர மாட்டார்கள். புத்தியில்லாத ரிஷிகள், முட்டாள்கள்."

சலிப்பளிக்கும் முறையில் கிழவன் பேசினான். சகதிக்கு மத்தியிலிருக்கும் ஒரு மேட்டில் நிற்கும் மனிதனைப் போன்றிருந்தான், கிழவன். அவனை ஆத்திரமூட்டவே முடியாது, ஒன்று ஆத்திரம் அவனை அணுக முடியாமல் இருக்க வேண்டும், அல்லது அதை மறைக்க அவன் கற்றிருக்க வேண்டும்.

ஆனால் அடிக்கடி அவனை என்னைக் கேலி செய்ய முற்படுவான். என் முகத்தை அணுகி, கேலிச் சிரிப்புடன் அவன் கேட்பான்:

"அந்தப் பிரெஞ்சு எழுத்தாளரை நீ என்ன வென்று அழைப்பாய்—போன்டோஸ்?"

பெயர்களை அவன் திரித்துக் கூறியதால் நான் ஆத்திரமடைந்தேன். எனினும் என் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு நான் சொல்லுவேன்:

"போன்ஸன் டு டெரெல்."

"யார் கண்?"

"முட்டாள்தனமாகப் பேசாதே—நீ குழந்தையல்ல."

"நீ சொல்வது சரிதான். நான் குழந்தையல்ல. நீ என்ன படிக்கிறாய் ?"

"எப்ரெம் ஸிரின்."

"யார் நன்றாக எழுதுவார்கள்—அவனு, கதை எழுத்தாளர்களா ?"

நான் பதில் சொல்லவில்லை.

"கதை எழுத்தாளர்கள் எதைப் பற்றி அதிகமாக எழுதுகிறார்கள் ?" என்று அவன் விடாது கேட்டான்.

"நடப்பவைகளைப்பற்றி யெல்லாம் எழுதுகிறார்கள்."

"நாய்களைப்பற்றியும், குதிரைகளைப்பற்றியும் ? இவை களுந்தம் நடப்பவைதானே !"

கடைச் சிப்பந்தி மகிழ்ந்தான்; நான் பொருமினேன். நான் ஓட முயன்றேன். ஆனால் ஓட முயன்றால், கடைச் சிப்பந்தி கூவுவான் :

"நீ எங்கே போகிறாய் ?"

கிழவன் என் பொறுமையைச் சோதித்தான்.

"நல்லது, இந்தப் புதிரை சிக்கறு, பெரும் தலையனே ! உனக்கு முன்னே ஆயிரம் நிர்வாணமானவர்கள் நிற்கிறார் கள்—ஐந்து நூறு ஆண்கள், ஐந்து நூறு பெண்கள் ; அவர் களிலே ஆதமும், ஏவாளும் இருக்கிறார்கள். அவர்களில் யார் ஆதம், யார் ஏவாள் என்பதை நீ எப்படிக் கண்டுபிடிப்பாய்?"

சிறிது நேரம் விடையளிக்குமாறு என்னை நிர்ப்பந்தித்து விட்டு, அவன் வெற்றிக் குரலில் சொன்னான் :

"முட்டாளே ! அவர்கள் பிறக்கவில்லை ; அவர்களைக் கடவுள் படைத்தார். அவர்கள் கருவிலே உருவாகவில்லை என்பது இதன் பொருள் !"

எண்ணற்ற இத்தகைய புதிர்கள் கிழவனுக்குத் தெரியும்; இவைகளால் அவன் என்னைச் சித்திரவதை செய்தான்.

கடையில் நான் வேலைக்கு அமர்ந்த ஆரம்ப நாட்களில் நான் படித்த கதைகளைக் கடைச் சிப்பந்திக்குச் சொன்னேன். அதற்காக இப்பொழுது வருந்தினேன். அந்தக் கதைகளைப் பியோட்டர் வாஸில்யேவிச்சுக்கு அவன் திரித்துக் கூறி

னன். ஆபாசமான கேள்விகள் கேட்டு கிழவன் அவனை உற்சாகப்படுத்தினன். என் அருமை யூஜெனி கிரான்டெட் டும், லுட்மிலாவும், நாலாவது ஹென்றியும் அவர்களால் அவ மதிக்கப்பட்டனர்.

துவேஷத்தால் அவர்கள் இப்படிச் செய்யவில்லை யென் பதும், சலிப்பால்தான் இப்படிச் செய்தார்கள் என்பதும் எனக்குத் தெரியும். ஆனல் இதனல் என் இதயத்தை அழுத் திய சுமை குறையவில்லை. சேறில் கிடக்கும் பன்றிகளைப் போன்று அவர்கள் புரண்டனர் ; நூதனமான, விளங்காத அழகிய பொருள்களைக் கண்டு இன்பத்துடன் பன்றியைப் போல் உறுமினர்.

அந்தப் பகுதியிலே வசித்த வியாபாரிகளும், கடைச் சிப்பந்திகளும் நூதனமான வாழ்க்கை நடத்தினர் ; முட் டாள்தனமான, சிறு பிள்ளைத்தனமான தந்திரங்கள் செய் வதிலே இன்பத்தைக் கண்டனர். நகரத்திற்குப் புதிதாக வரும் மூஷிக் ஒரு விலாசத்தைக் கேட்டால், அதற்கு நேர் மாறுன வழியை அவனுக்குக் காட்டுவார்கள். இது சர்வசாதா ரணமாய்விட்டதால், இது அவர்களுக்குத் திருப்தியளிக்க வில்லை. வியாபாரிகள் இரண்டு எலிகளைப் பிடித்து அவை களின் வால்களைக் கட்டுவார்கள் ; வெவ்வேறு திசைகளில் அவை இழுப்பதையும், அவமதிக்கப்படுவதையும், பிராண்டு வதையும், கடிப்பதையும் கூடிநின்று வேடிக்கைப் பார்ப்பார் கள். சில சமயங்களில் அந்த வாயில்லாப் பிராணிகள்மீது மண் எண்ணெயை ஊற்றி, நெருப்பு வைப்பார்கள். நாயின் வாலில் அவர்கள் தகர டப்பாவைக் கட்டுவார்கள் ; பீதி அடைந்த அந்த மிருகம் ஊளையிட்டுக்கொண்டு ஓடும். ஓடும் பொழுது தகர டப்பா அதன் பின்னே ஆடும். இதைக் கண்டு அவர்கள் வாய்விட்டுச் சிரிப்பார்கள்.

இத்தகைய பல பைத்தியக்காரத்தனமான வேலைகளை அவர்கள் செய்தார்கள். எல்லோரும்—குறிப்பாக கிராமங் களிலிருந்து வரும் விவசாயிகள்—சந்தைப் பகுதியில் வாழ் கிறவர்களுக்கு இன்பமூட்டுவதற்காகத்தான் இயங்குகிறர் கள் போலும். மற்றவர்களைக் கேலி செய்யும் சந்தர்ப்பத்தை

வியாபாரிகளும், கடைச்சிப்பந்திகளும் தேடி அலைந்தனர்; அல்லது மற்றவர்களுக்கு வேலையையும், தொல்லையையும் அளிக்க முயன்றனர். இதைப் பற்றி நான் படித்த புத்தகங்கள் ஒன்றும் சொல்லாதது விந்தைதான்.

அந்த மண்டபத்திலே நடந்த இத்தகைய ஒரு நிகழ்ச்சி எனக்கு வெறுப்பை அளித்தது.

எங்கள் கடைக்குக் கீழே இருந்த கம்பளிக் கடையில் ஒரு கடைச் சிப்பந்தி இருந்தார். அந்தப் பகுதியிலே அவன் பெருந்தீனி தின்பவன் என்று பெயர்பெற்றிருந்தான். தங்கள் குதிரைகளின் பலத்தைப் பற்றியோ, தங்கள் நாய்களின் மூர்க்கத்தனத்தைப் பற்றியோ ஜனங்கள் பெருமையடித்துக் கொள்வதைப் போன்று, தன் கடைச் சிப்பந்தியின் தின்னும் திறமையைப் பற்றி அந்த வியாபாரி பெருமை யடித்துக் கொள்வான். அடிக்கடி அண்டைக் கடைக்காரரிடம் அவன் பந்தயம் கட்டுவான்.

"பத்து ரூபிள் பந்தயம் கட்ட யார் தயார்? மாஷா இரண்டு மணி நேரத்தில் பத்து பவுண்டு உப்பிட்ட பன்றித் தொடையைத் தின்றுவிடுவான் என்று நான் பந்தயம் கட்டுகிறேன்."

இதைச் செய்யும் மாஷாவின் திறமையை யாரும் சந்தேகிக்காததால், அவர்கள் சொன்னார்கள்:

"நாங்கள் பந்தயம் கட்டவில்லை; ஆனால் நாங்கள் பத்து பவுண்டு உப்பிட்ட பன்றித் தொடை வாங்கித் தருகிறோம். அதை அவன் தின்னட்டும்; நாங்கள் அதை வேடிக்கைப் பார்க்கிறோம்."

"பத்துப் பவுண்டு இறைச்சியாக இருக்க வேண்டும்; எலும்பு இருக்கக் கூடாது."

அவர்கள் கொஞ்சம் தர்க்கம் செய்தனர், அகங்காரத்துடன். அப்பொழுது இருண்ட ஸ்டோர் ரூமிலிருந்து மெலிந்த, தாடி இல்லாத, கம்பளித் தூள்களால் மூடப்பட்ட தீண்ட தூணிக்கோட்டு அணிந்த ஒரு மனிதன் வெளியே வந்தான். மரியாதையுடன் தலைவணங்கிவிட்டு, தனது எஜமானனை உற்றுப் பார்த்தான், அவன்.

"இந்தப் பன்றித் தொடையை உன்னால் சமாளிக்க முடியுமா ?" என்று கேட்டான் வியாபாரி.

"எவ்வளவு நேரத்தில் ?" என்று மெலிந்த குரலில் கேட்டான் மாஷா.

"இரண்டு மணி நேரத்தில்."

"அது சிரமம்."

"உனக்குச் சிரமமல்ல !"

"ஒரு சில கோப்பைகள் பீரையும் சேர்த்துக்கொள்ளுங்கள், மிஷா."

"வேலையை நடத்து !" என்றான் அவன் எஜமானன். மற்றவர்களைப் பார்த்து அவன் பெருமையுடன் சொன்னான் :

"வெறும் வயிறுடன் அவன் வேலையை ஆரம்பிக்கிறான் என்று நினைக்காதீர்கள் ! இல்லவே இல்லை, காலையில் இரண்டு பவுண்டு சொட்டியும், மத்தியானம் நல்ல சாப்பாடும் சாப்பிட்டிருக்கிறான்."

அவர்கள் உப்பிட்ட பன்றித் தொடையைக் கொண்டு வந்தார்கள். அங்கே கூட்டம் கூடிவிட்டது. எல்லோரும் வியாபாரிகள். அவர்கள் கனமான பனிக்கால கோட் அணிந்திருந்தனர். குடவயிறும், சிறிய கண்களும் படைத்தவர்கள் அந்த வியாபாரிகள்.

பெரிய இறைச்சித் துண்டையும், சொட்டித் துண்டையும் ஆயுதமாகக் கொண்டு செயல்பட்ட பெருந்தீனிக்காரனைச் சுற்றி அவர்கள் நின்றனர். வேகமாகவும், தொடர்ச்சியாகவும் சிலுவைக் குறி செய்துவிட்டு, கம்பளிக் குவியல் மீது அமர்ந்து, பன்றித் தொடை இறைச்சியை ஒரு பெட்டிமீது வைத்து, அதை வெறிச்சென்று பார்த்தான் அவன்.

ஒரு மல்லிய சொட்டித் துண்டையும், கனத்த இறைச்சித் துண்டையும் எடுத்து, ஒன்றன்மீது மற்றொன்றை வைத்து, இரண்டு கைகளாலும் அதை வாய்க்கருகில் வைத்துக்கொண்டான். நடுங்கும் அதரங்களை, நாயின் நாக்கைப் போன்ற நீண்ட நாக்கால் நக்கினான். அப்பொழுது அவன் கூரான சிறிய பற்கள் வெளியே தெரிந்தன. பிறகு நாயைப் போன்று இறைச்சியைக் கவ்வினான்.

" அவன் தொடங்கிவிட்டான் !"

" நேரத்தைக் குறித்துக்கொள் !"

பெருந்தீனிக்காரன் முகத்தையும், அசையும் தாடையையும், காதுகளுக்கு முன்னே சதை அசைவதையும், தாளம் போடுவதைப் போன்று முறையாக எழுந்து விழும் மோவாயையும் எல்லா கண்களும் இமை கொட்டாது பார்த்தன. அடிக்கடி அவர்கள் அபிப்பிராயங்களைப் பரிமாறிக்கொண்டனர் :

" கரடியைப் போல் மெல்லுகிறான் !"

" கரடி மெல்லுவதை எப்பொழுதாவது பார்த்திருக்கிறாயா ?"

" நான் காட்டிலா வசிக்கிறேன் ? கரடியைப் போல் மெல்லுகிறான் என்பது ஒரு பழமொழி."

" பன்றியைப் போல் மெல்லுகிறான் என்பதுதான் பழமொழி."

" பன்றிகள் பன்றியைத் தின்னுது !"

அவர்கள் சந்தோஷமின்றிச் சிரித்தனர். பிறகு ஒரு அதிபுத்திசாலி சொன்னான் :

" பன்றி எதையும் தின்னும்—தன் குழந்தையை, தன் சொந்தச் சகோதரியை..."

படிப்படியாக பெருந் தீனிக்காரனின் முகம் சிவந்தது ; காதுகள் நீளமாயின ; அவன் குழிந்த கண்கள் கட்குவளைகளிலிருந்து வெளியே எட்டிப் பார்த்தன ; அவன் மூச்சுத் திணற ஆரம்பித்தது. ஆனால் அவன் மோவாய் முறையாக அசைந்துகொண்டிருந்தது.

" சிக்கிரம், மிஷா, நேரமாகிறது !" என்று அவர்கள் அவனைத் தூண்டினர். மீதியிருக்கும் இறைச்சியைக் கலக்கத்துடன் அவன் பரிசீலனை செய்தான் ; பிறகு பீர் குடித்து விட்டு, மீண்டும் மெல்ல ஆரம்பித்தான். கூடியிருப்பவர்கள் பரபரப்படைந்தனர். மிஷாவின் எஜமானனின் கையிலிருந்த கடிகாரத்தை அடிக்கடி பார்த்தனர். அவர்கள் ஒருவரை ஒருவர் எச்சரித்துக்கொள்ள ஆரம்பித்தனர் :

" கடிகாரத்தின் முள்ளை அவன் திருப்பாமல் பார்த்துக் கொள் ! அவனிட்மிருந்து அந்தக் கடிகாரத்தை வாங்குவது நல்லது !"

" மிஷாவைக் கவனித்துக்கொள் ; அதன் இறைச்சித் துண்டை சட்டைக்குள் மறைத்துக்கொள்ளலாம் !"

" குறித்த காலத்தில் அவனுல் வேலையைப் பூர்த்தி செய்ய முடியாது !"

"நான் இருபத்தைந்து ரூபிள் பந்தயம் கட்டத் தயாராகா இருக்கிறேன் !" என்று யோசனையின்றிக் கூவினன் மிஷாவின் எஜமானன். " என்னைக் கைவிடாதே, மிஷா !"

கூடியிருந்தவர்கள் உற்சாகப்படுத்தினர் ; ஆனுல் யாரும் அவன் பந்தயத்தை ஏற்கவில்லை.

மிஷா தொடர்ந்து மென்றன். அவன் முகம் இறைச்சியைப் போன்றிருந்தது. அவன் கூரான, கோரமான மூக்கு சீழ்க்கையடிக்க ஆரம்பித்தது. அவனைப் பார்க்கப் பயங்கரமாக இருந்தது. எந்த நிமிடத்திலும் அவன் அழுவானென்றும் கீழ்வருமாறு வேண்டுவான் என்றும் நான் எதிர்பார்த்தேன் :

" கருணை காட்டுங்கள் !"

அவன் தொண்டையில் இறைச்சி நிறைந்ததும், கூடியிருப்பவர்களின் காலடியில் அவன் நிலைக் குலைந்து விழலாம், அல்லது இறக்கலாம்.

கடைசியில் அவன் இறைச்சியைத் தின்று முடித்தான். கூட்டத்தினரை மிரள மிரளப் பார்த்துக்கொண்டு, தளர்ச்சியுடன் அவன் கேட்டான் :

" குடிப்பதற்கு ஏதாவது கொடுங்கள்."

கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, அவன் எஜமானன் முணுமுணுத்தான் :

" நான்கு நிமிடங்கள் தாமதித்துவிட்டான், வேசி மகன் !"

" உன் பந்தயத்தை ஏற்காதது பிசகாயிற்று " என்று கூட்டம் கேலி செய்தது. " நீ தோற்றிருப்பாய்."

"ஆனால் அவன் ஒரு குதிரை என்பதை மறுக்க முடியாது!"

"அவன் சர்க்கஸில் இருக்க வேண்டியவன்."

"சில மனிதர்களிடம் கடவுள் எவ்வளவு சேஷ்டை செய்கிறார்!"

"நல்லது, நாம் டீ குடிக்கலாம், என்ன?"

சங்கிலித் தொடராகப் படகுகள் செல்வதைப் போன்று, அவர்கள் ஹோட்டலுக்குச் சென்றனர்.

பரிதாபகரமான இந்த மனிதனைச் சுற்றி இவர்கள் நிற்கக் காரணமென்ன என்று நான் வியந்தேன்; இப்படிப் பெருந் தீனி தின்பதிலே அவர்கள் என்ன வேடிக்கையைக் காண முடியும்?

அந்தச் சந்தைக் கடைகள், இருண்டும் ஜீவனற்றும் இருந்தன. கம்பளிப் பேல்களும், ஆட்டுத் தோல்களும், சணலும், கயிறும், பெல்ட் பூட்ஸுகளும், உபகரணங்களும் அங்கே நிறைந்திருந்தன. காலத்தால் நொறுங்கிய, வீதியிலிருந்து வீசிய தூசியால் கருமையாக்கப்பட்ட கற்சுவர், சந்தைக் கடைகளை நடைபாதையிலிருந்து பிரித்தது. அந்தச் சுவரிலிருந்த செங்கற்களையும் வெடிப்புகளையும் ஆயிரக்கணக்கான தரம் நான் எண்ணியிருப்பதால், அவைகளின் விகாரமான தோற்றம் என் நினைவிலே வேரூன்றியிருந்தது.

நடைபாதையிலே பாதசாரிகள் மெதுவாக நடந்து சென்றனர்; வீதியிலே சரக்குகளை ஏற்றிக்கொண்டு வண்டிகள் மெதுவாக ஊர்ந்து சென்றன. வீதியின் கோடியில் இரண்டு அடுக்குக் கடைகள் இருந்தன. அங்கே தரையிலே பாக்கிங் கேஸுகளும், வைக்கோலும், காகிதங்களும் அழுக்கடைந்த பனிமீது சிதறிக்கிடந்தன.

எல்லாம் இடைவிடாது அசைந்தன என்றாலும், ஜனங்கள், குதிரைகள் உட்பட அனைத்தும் தேங்கி நிற்பதாகவும், கண்ணுக்குத் தெரியாத சங்கிலியால் பிணைக்கப்பட்டிருப்பதைப் போன்று எல்லாம் தேங்கி நிற்பதாகவும் தோன்றிற்று. ஓசையற்றிருந்த இந்த வாழ்க்கை தெளிவற்றதாக எனக்குப் பட்டது. பனிக்கட்டிமீது வண்டியைத் தள்ளிக்கொண்டு

ஓடினவர்கள் பனிக்கட்டிகளை நொறுக்கினர்; கடையின் கதவுகள் படாரென்று மூடின; வியாபாரிகள் தங்களிட மிருந்த சாமான்களின் பெயர்களைக் கூவினர்; ஆனால் மனித னுடைய குரல் மந்தமாகவும், ஜீவனற்று மிருந்ததால், காது கள் அதைக் கேட்க மறுத்தன.

மரண ஓலியைப்போல் கோயில் மணிகள் ஒலித்தன. அவைகளின் பயங்கரமான ஓசையை என்னால் மறக்கவே முடியாது. காலையிலிருந்து இரவுவரை சந்தைப் பகுதி யில் அது மிதந்து வந்தது; சிந்தனையையும், உணர்ச்சியையும் ஊடுருவிற்று; எண்ணத்தைக் கூளத்தால் மறைத்தது.

எல்லாவற்றிலிருந்தும் ஜீவனற்ற சலிப்பு வெளிப்பட் டது; அசுத்தமான பனியால் மூடப்பட்ட பூமியிலிருந்தும், கூரைகள்மீது அடுக்கடுக்காகக் கிடந்த பழுப்புநிறப் பனியி லிருந்தும், கட்டிடங்களின் செக்கச் செவேலென்றிருந்த செங்கற்களிலிருந்தும் இந்தச் சலிப்பு வெளிப்பட்டது. புகை போக்கிகளிலிருந்து வெளிப்பட்ட பழுப்பு நிறப் புகையில் அல்லி மாலையைப் போன்று சலிப்பு வெளிப்பட்டு, வான வீதிக்கு ஊர்ந்து சென்றது. குதிரைகளின் பக்கவாட்டி லிருந்தும் ஜனங்களின் நாசிகளிலிருந்தும் சலிப்புப் பொங்கி எழுந்தது. அதன் நாற்றம் நூதனமானது: வியர்வை, கொழுப்பு, புகை, எண்ணெய், சொட்டை ஆகியவைகளின் மந்தமான நாற்றம் அது. வெப்பம் தரும் நெருக்கமான தொப்பியைப்போல் அது தலையில் ஒட்டிக்கொண்டது; ரோமக் குழிகளில் பாய்ந்தது; கண்களை மூடிக்கொள்ள வேண்டும், சக்தியை யெல்லாம் உபயோகித்துக் கர்ஜிக்க வேண்டும், முதலில் கண்ணில்படும் கற்சுவரில் தலையை மோதிக்கொள்ள வேண்டும் என்னும் மயக்கத்தை உண்டு பண்ணியது.

வளமான, ரத்தம் நிறைந்த, பனியால் கடிக்கப்பட்ட, தூக்கத்தில் இருப்பதைப்போல் அசையாமல் இருந்த வியா பாரிகளின் முகத்தை அடிக்கடி நான் பரிசீலனை செய்தேன். கரையில் எறியப்பட்ட மீன் வாயைப் பிளப்பதைப் போன்று, அவர்கள் அடிக்கடி வாயைப் பிளந்து கொட்டாவி விட்டார்கள்.

குளிர் காலத்தில் வியாபாரம் மந்தமாக இருக்கும். எனவே வேனிற் காலத்தில் அவர்கள் கண்களில் நர்த்தனமாடின ஜாக்கிரதை, கணக்குப் பார்த்தல் என்னும் ஒளி, குளிர் காலத்தில் இருக்காது. அவர்கள் அணிந்திருந்த கனமான கோட்டு அவர்களின் நடமாட்டத்தைத் தடுத்து, அவர்களைப் பூமியில் அழுத்திற்று. வேண்டா விருப்புடன் வியாபாரிகள் பேசினர் ; கோபமடைந்ததால், நீண்ட விவாதத்தில் ஈடுபட்டனர். வேண்டு மென்றே அவர்கள் இப்படிச் செய்வதாக எனக்குத் தோன்றிற்று ; தாங்கள் ஜீவனுடன் இருப்பதைப் பரஸ்பரம் நிரூபிக்க அவர்கள் இப்படிச் செய்தனர் !

சர்வவியாபகமான இந்த அலுப்பால் அவர்கள் வாடிக் கொண்டிருந்ததை நான் தெளிவாகக் கண்டேன். இதை எதிர்க்க அவர்கள் செய்யும் பெரு முயற்சியாக, குரூரமான, அர்த்தமற்ற இந்த வேடிக்கைகளை நான் வியாக்கியானம் செய்தேன்.

சில சமயங்களில் இதைப்பற்றி நான் பியோட்டர் வாஸில் யேவிச்சிடம் பேசுவேன். பொதுவாக அவன் என்னைக் கிண்டலும் கேலியும் செய்தாலும், புத்தகங்களை நான் நேசிப்பது அவனுக்குத் திருப்தி அளித்தது. அபூர்வமாகவும் கவுரவமாகவும் அறிவூட்டும் முறையிலும் அவன் என்னிடம் பேசினான்.

" வியாபாரிகள் வாழும் முறையை நான் விரும்பவில்லை " என்றேன் நான்.

தாடியின் நுனியை விரலில் சுற்றிக்கொண்டு அவன் கேட்டான் :

" அவர்கள் எப்படி வாழுகிறார்கள் என்பது உனக்கு எப்படித் தெரியும் ? ஒருக்கால் நீ அவர்கள் வீட்டுக்கு அடிக்கடி போயிருக்கலாம் ? இது வீதி, பையா ! ஜனங்கள் வீதியில் வாழ மாட்டார்கள். அவர்கள் வீதியில் வியாபாரம் செய்வார்கள். வீதியில் வேகமாக நடந்து வீட்டுக்கு செல்வார்கள். வீதியில் ஜனங்கள் உடைகளால் மறைக்கப்பட்டிருக்கிறார்கள். உள்ளே அவர்கள் எப்படி இருப்பார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள முடியாது. ஒரு மனிதன்

வீட்டில்தான்—நான்கு சுவர்களுக்குள்ளேதான்—பகிரங்க மாக வாழ்வான். ஆனால் அது எப்படிப்பட்டது என்பதைத் தெரிந்துகொள்ள வழியில்லை.''

''ஆனால் அவர்கள் வீட்டிலிருந்தாலும், இங்கே இருந்தாலும் அவர்களது எண்ணம் ஒரே மாதிரிதானே இருக்கும்.''

''அண்டை வீட்டுக்காரன் என்ன நினைக்கிறான் என்பதை யார்தான் சொல்ல முடியும்?'' என்று கவரவமான குரலில், என்னைக் கடுமையாகப் பார்த்துக்கொண்டே கேட்டான் கிழவன். ''எண்ணம் பேணப்போன்றது; அதை கணக்கிடக் கூடாது என்பது முதுமொழி. ஒருக்கால் வீடு திரும்பியதும் ஒருவன் அழுதுகொண்டே பிரார்த்தனை செய்யலாம்: 'உமது புனிதமான நாளில் பாவம் செய்ததற்காக என்னை மன்னித்துவிடும் பிதாவே!' ஒருக்கால் அவன் வீடு அவன் ஆசிரமமாக இருக்கலாம்; அங்கே அவன் கடவுளுடன் தனித்து வாழலாம். ஒவ்வொரு சிப்பத்தில் ஒவ்வொரு பூச்சியும் அதனதன் மூலையில் இருக்க வேண்டும்; வலைபின்ன வேண்டும்; ஆனால் பலம் தெரிந்தால்தான், அறுந்துவிடாதபடி வலை பின்ன முடியும்.''

மிகமுக்கியமான ரகசியத்தை வெளியிடுவதைப்போன்று, ஆழ்ந்த கருத்தை வெளியிடுகிறபொழுது அவன் ஆழ்ந்த குரலில் பேசுவான்.

''விஷயங்களைப் பகுத்தறிய நீ முயலுகிறாய்; ஆனால் இதைச் செய்யும் வயது உனக்கு இன்னும் ஆகவில்லை. உன் வயதில் மூளையால் நீ வாழக் கூடாது. ஆனால் உன் கண்களால் நீ வாழவேண்டும். வேறு பாஷையில் சொல்லுவதானால், பார், நினைவிலிறுத்து, நாக்கை அடக்கு. மூளை வியாபாரத்திற்கு; நம்பிக்கை ஆத்மாவுக்கு. புத்தகங்களைப் படிப்பது பாராட்டத்தக்கது; ஆனால் எதற்கும் ஒரு எல்லையுண்டு. சிலர் மொம்பப் படித்துவிட்டு, மூளையையும் கடவுளையும் இழந்துவிடுகிறார்கள்.''

அவன் சிரஞ்சீவி என்று எனக்குத் தோன்றிற்று. அவன் மாறுவதையோ, முதுமை எய்துவதையோ என்னால் கற்பனை செய்ய முடியவில்லை. பிரசித்தியடைந்த வியாபாரிகள், திருடர்

கள், கள்ள நாணயம் தயாரிப்போர் ஆகியோரின் கதைகளைச் சொல்ல அவனுக்கு ரொம்ப விருப்பம். இத்தகைய பல கதைகளைத் தாத்தா சொல்லியிருக்கிறார். ஆனால் இவனைவிட அழகாக அந்தக் கதைகளைச் சொன்னார் தாத்தா. எனினும் கதைகளின் கருத்து ஒரே விதமாக இருந்தது. மனிதனுக்கும், கடவுளுக்கும் விரோதமாகத்தான் சொத்து சேகரிக்க முடியும். ஜனங்கள்மீது பியோட்டர் வாஸில்யேவுக்கு அன்பில்லை ; ஆனால் கடவுளைப்பற்றி நெடுமூச்சுடனும் கண்களைக் கீழே தொங்கவிட்டுக்கொண்டும் அவன் அன்பாகப் பேசினான்.

" ஜனங்கள் எப்படிக் கடவுளை ஏமாற்றுகிறார்கள் ! ஆனால் இயேசுநாதர் அனைத்தையும் காண்கிறார் ; ஜனங்களுக்காக அழுகிறார்! 'என் மக்களே, என் மக்களே, பரிதாபகரமான என் மக்களே, உங்களுக்கு நரகம் காத்திருக்கிறது!' "

ஒரு நாள் துணிந்து நான் சொன்னேன் :

" ஆனால் நீயும் மூஷிக்குகளை ஏமாற்றுகிறாய்."

அவன் கோபப்படவில்லை.

" நான் கொஞ்சம் தீமைதான் செய்கிறேன் !" என்றான் அவன். " என் செலவுக்காக நான்கு, அல்லது ஐந்து ரூபிள் தட்டுகிறேன்—அவ்வளவுதான்."

நான் வாசிப்பதை அவன் கண்டால், என் கையிலிருந்து புத்தகத்தை வாங்கி, அதன் உள்ளடக்கத்தைக் கேட்பான். பிறகு கடைச்சிப்பந்தி பக்கம் திரும்பி, சந்தேகம் கலந்த ஆச்சரியத்துடன் சொல்லுவான் :

" இதைப் பார்—புத்தகங்களைப் புரிந்துகொள்ளுகிறான், இந்தக் குட்டிக் குரங்கு !"

பிறகு சுருக்கமாக, மறக்க முடியாத முறையில் அவன் எனக்கு உபதேசம் செய்வான் :

" என் பேச்சைக் கேள்—இது உனக்கு உதவியாக இருக்கும். இரண்டு 'கிரில்கள்' இருந்தார்கள். இருவரும் பிஷப்புகள். ஒருவர் அலெக்ஸாண்ட்ரியாவைச் சேர்ந்தவர் ; மற்றவர் ஜெரூஸலத்தைச் சேர்ந்தவர். கன்னிமாதா சாதாரண மானவள்தான் என்றும், எனவே அவள் கடவுளை ஈன்றிருக்க

முடியாதென்றும், ஆனால் உலகரட்சகராகிய இயேசு என்னும் பெயருடைய ஒரு மனிதனே என்றும் என்றும் ஆபாசமான உபதேசம் செய்த, சபிக்கப்பட்ட மதத் துவேஷி நெஸ்டரை எதிர்த்து முன்கூறப்பட்டவர் போராடினர். இதன் பொருள் என்ன? அவளைக் கடவுளின் தாய் என்று அழைக்கக் கூடாது, ஆனால் இயேசுவின் தாய் என்று அழைக்க வேண்டும்! தெரிகிறதா? இதைத்தான் மதத் துவேஷம் என்கிறோம். ஜெருஸலத்தைச் சேர்ந்த கிரில் மதத் துவேஷி அரியாவை எதிர்த்துப் போராடினர்.''

கோயில் சரித்திரத்தைப் பற்றி அவனுக்கு இருந்த ஞானம் என்னைக் கவர்ந்தது. தனது தாடியை மிருதுவான தன் கையால் தடவிக்கொண்டு, தற்பெருமையுடன் சொல்லுவான்:

'' இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் நான் ஒரு ஜெனரல். விஷ நாக்குகள் படைத்த பாண்டித்யம் பெற்ற நிக்கோனிஸ்டுகளுடனும், பாதிரிகளுடனும், பாமரனுடனும் போர் புரிய விட்ஸன்டேயன்று நான் மாஸ்கோவுக்குச் சென்றேன். பண்டிதர்களிலே அதிக பாண்டித்ய முள்ளவர்களுடன் நான் விவாதித்தேன். நான் நாக்கால் கொடுத்த சவுக்கடியால் ஒரு பண்டிதனின் மூக்கு ஒழுக ஆரம்பித்துவிட்டது. எப்படி இருக்கிறது!''

அவன் கன்னங்கள் சிவந்தன; கண்கள் பிரகாசமடைந்தன.

தனது எதிரியின் தோல்வி தனது மகத்தான சாதனை யென்றும், பெருமை என்னும் தங்கக் கிரீடத்தில் ஒளிவீசும் வைரம் என்றும் அதை அவன் கருதினன் போலும். வெற்றி உணர்ச்சியுடன் அதைப்பற்றி அவன் பேசினன்:

'' அவன் அழகன்; மிகப் பெரியவன். மூக்கு ஒழுக அவன் உபதேச பீடத்திலே நின்றான்; தனது அவமானத்தை அவன் உணரவில்லை. சிங்கத்தைப்போல் அவன் உக்ரமாக இருந்தான். ஒலிக்கும் மணியைப்போன் றிருந்தது அவன் குரல். இடைவிடாது ஈட்டிகளை அவன் ஆத்மாவில் குத்துவதைப்போன்று நான் பேசிக்கொண் டிருந்தேன்; விலா எலும்புகளுக்கிடையே பதட்டமின்றி ஈட்டியைச் சொரு

வதைப் போன்று என் வார்த்தைகளை நான் சொருகினேன். அடுப்பு சூடாவதைப்போல் அவன் வெப்பமடைந்து தீய மதத் துவேஷத்தைக் கக்கினான். அதல்லவோ வாழ வேண்டிய நாள்."

எங்கள் கடைக்கு மற்ற மதவாதிகளும் அடிக்கடி வந்தனர். அவர்களில் பாக்கோமி ஒருவன். அவன் குட வயிறு படைத்தவன்; ஒற்றைக் கண்ணன். உறுமிக்கொண்டே அவன் பேசுவான். சதா வழவழ வென்றிருந்த பழைய கோட்டு அணிந்திருப்பான். கோச்சுவண்டிக்காரனைப்போன்று இருந்த மந்தமான ஒருவன் அவனைச் சதா பின் தொடர்ந்தான். அவன் தாடி வைத்திருந்தான். அவன் கண்கள் சலனமற்றிருந்தன. அழகிய ஆனால் சோகம் கலந்த அவன் முகத்தில் சூன்யத்தம் பிரதிபலித்தது.

பழைய புத்தங்களையும், விக்கிரகங்களையும், தூப கலசங்களையும் கோயில் பாத்திரங்களையும் எங்களுக்கு விற்க அவர்கள் முயன்றனர். அபூர்வமாக விற்பனைச் சரக்குகளைக்கொண்டு வந்த, வால்காப் பகுதியைச் சேர்ந்த கிழவனையோ, கிழவியையோ அவர்கள் அழைத்து வந்தனர். வியாபாரம் முடிந்ததும், அவர்கள் வேலியிலிருக்கும் காக்காய்களைப்போல் மேஜைமீது உட்காருவார்கள். பிறகு தேநீர் குடித்துக் கொண்டு, பன்னும் சர்க்கரை மிட்டாயும் தின்றுகொண்டு, நிக்கோனிஸ்டுகள் கோயில்களில் இழைக்கும் கொடுமைகளை வர்ணிப்பர். இங்கே சோதனையிடப்பட்டுத் தெய்வீக நூல்கள் பறிமுதல் செய்யப்பட்டன; அங்கே அவர்களைச் சேர்ந்த ஒரு கோபிலே மூடி, கோயில் ஊழியர்களைக் கோர்ட்டுக்கு அழைத்துச் சென்று, அவர்கள்மீது 103-வது சட்டத்தை மீறியதற்காக வழக்குத் தொடுத்திருக்கின்றனர்.

103-வது சட்டம்தான் அவர்கள் சம்பாஷணைக்குரிய பிரதான விஷயம். குளிர் காலத்தில் பனி விழுவதை விலக்க முடியாததைப் போன்று, அவர்கள் பற்றின்றிப் பேசினர்.

போலீஸ், சோதனை, சிறை, கோர்ட், சைபீரியா என்பதைப் போன்ற சொற்கள்—நம்பிக்கைக்காகத் தாங்கள் அனுபவிக்கும் கஷ்டத்தைப்பற்றிப் பிரஸ்தாபிக்கும்பொழுது

அடிக்கடி உபயோகிக்கும் இந்தச் சொற்கள்—எரியும் நிலக்கரி விழுவதைப்போல் என் நெஞ்சில் தாக்கி, இந்த வயோதிகர்கள் பால் அனுதாபத்தையும், நல்லெண்ணத்தையும் தூண்டி விட்டன. ஆத்மீக வீரத்தைப் பாராட்டும்படியும், நோக்கம் நிறைவேற இடையறாது போராடியவர்களை மதிக்கும்படியும் நான் படித்த புத்தகங்கள் எனக்குப் போதித்தன.

புராதன கோட்பாடுகளின் பிரதிநிதிகளாகிய இவர்களின் தனிப்பட்ட குறைபாடுகளை நான் மறந்தேன். இவைகளுக்குப் பின்னே கிடக்கும் நோக்கத்திலே அசையாத நம்பிக்கையும், லட்சியத்திற்காக எத்தகைய கஷ்டங்களையும், துன்பங்களையும் மனப்பூர்வமாக ஏற்கும் தன்மையையும் நான் ஏற்றுப் போற்றினேன்.

அறிவாளிகளுக்கு மத்தியிலும், சாதாரண மக்களுக்கு மத்தியிலும் பிற்காலத்தில் இத்தகைய பலரை நான் சந்தித்த பொழுது ஒரு உண்மை எனக்குத் தெரிந்தது : ஏற்கனவே அடையப்பட்ட இடத்தைத் தாண்டி அப்பால் செல்ல இவர்களுக்கு வேறு இடம் இல்லாததும், வேறு இடத்திற்குச் செல்ல இவர்கள் விரும்பாததும், காலங்கடந்த சொற்கள், செல்லரித்துப் போன கோட்பாடுகள் என்னும் சிக்கலிலே இவர்கள் சிக்கிக்கொண்டதும்தான், இவர்களுடைய அந்தப் போக்குக்குக் காரணம் என்பதை நான் தெரிந்துகொண்டேன். எதிர்காலத்தை நோக்கி வளரும் சக்தியை இவர்கள் சிந்தனை இழந்துவிட்டது. திடீரென்று இவர்கள் விடுதலைசெய்யப் பட்டால், மலை யுச்சியிலிருந்து விழும் கல்லைப் போல், இவர்களும் யந்திரரீதியாக கடகட வென்று உருண்டு விழுந்துவிடுவார்கள். பின்னே பார்க்கும் ஜீவனற்ற சக்தி, இறந்துவிட்ட கோட்பாடுகள் என்னும் சவக்குழியில் இவர்களைச் சிறை செய்திருந்தது. துன்பத்தை அனுபவிக்கும் சந்தர்ப்பத்தை இவர்கள் இழந்துவிட்டால், சகல சக்திகளையும் இழந்து, காற்றுப்பட்டதும் மேகம் மறைவதைப்போல் இவர்கள் மறைந்துவிடுவார்கள்.

இவ்வளவு ஆர்வத்துடனும், போலிக் கௌரவத்துடனும் எந்த நம்பிக்கைக்காக அவர்கள் தங்களையே தியாகம் செய்

தார்களோ, அந்த நம்பிக்கை நிச்சயமாக உறுதியான நம்பிக்கைதான். ஆனால் தூசாலும், அழுக்காலும் அசுத்தமாக்கப்பட்ட பழைய சட்டை அது; காலங்கடந்த சட்டை அது. துவேஷத்திலும், கோட்பாடுகளிலும் அவர்களின் எண்ணங்களும், உணர்ச்சிகளும் இறுகப் பிணைக்கப்பட்டிருந்தன. தாங்கள் உருக்குலைந்துவிட்டதைப் பற்றியும், பூமியில் அழுத்தப்பட்டுக் கிடப்பதையும் அவர்கள் சிறிதும் கவலைப்படவில்லை.

பழக்கத்திலே பிறந்த இந்த நம்பிக்கை, நமது வாழ்க்கையின் மிக வருந்தத்தக்க அம்சம். இத்தகைய நம்பிக்கைக்குள்ளே, கற்சுவரின் நிழலிலே வளர்வதைப் போன்று, புதிய கருத்து மெதுவாகத்தான் வளரும். இருண்ட இந்த நம்பிக்கையை அன்பு என்னும் ஒருசில கிரணங்கள்தான் அதை ஊடுருவிச் செல்கின்றன; ஆனால் வஞ்சம், துவேஷம், பொறுமை—வெறுப்பின் உடன்பிறந்தவையான முதலிய தீமைகள்தான் அதனால் அதிகரிக்கின்றன. அணையும் விளக்கின் கடைசி ஒளி, அந்த நம்பிக்கையிலே காணப்படும் ஒளி.

ஆனால் பல வருடங்கள் கஷ்ட வாழ்க்கை வாழ்ந்த பிறகும், பல விக்கிரங்களை நொறுக்கிய பிறகும், பல எண்ணங்களுக்கு விடைகொடுத்த பிறகும்தான் இந்தத் தெளிவு எனக்கு ஏற்பட்டது. என்னைச் சுற்றி நான் கண்ட மந்தமான, அதர்மமான வாழ்க்கைக்கு மத்தியில் இந்த உபதேசகர்களை நான் முதன் முதல் சந்தித்தபொழுது, இவர்களிடம் மகத்தான ஆத்மிகச் சக்தி குடிகொண்டிருந்ததாக எனக்குத் தோன்றிற்று; இவர்கள் மனிதச் சிரேஷ்டர்கள் என்று எனக்குத் தோன்றிற்று. அநேகமாக அவர்கள் எல்லோரும் ஒரு காலத்தில் கோர்ட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கின்றனர், சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றனர், நகரங்களிலிருந்து தூரத்தப்பட்டிருக்கின்றனர், பிரஷ்டம் செய்யப்பட்டு மற்ற கைதிகளுடன் நீண்ட தூரம் நடக்குமாறு நிர்ப்பந்தப்படுத்தப்பட்டிருக்கின்றனர். மிகுந்த பிரயாசையுடன் அவர்கள் தலைமறைவாக வாழ்ந்தனர்.

நிக்கோனிஸ்டுகள் அனுஷ்டித்த "ஆத்மாவை வேட்டையாடல்" என்னும் முறையை அவர்கள் குறைகூறினர். என்

ருவும், அந்த வயோதிகர்கள் விருப்பத்துடனும், மகிழ்ச்சியுடனும் ஒருவரை ஒருவர் வேட்டையாடினர்.

போதையில் விருக்கும்பொழுது தனது அசாதாரண ஞாபகசக்தியைக் காட்ட ஒற்றைக் கண்ணன் பாக்கோமி ஆசைப்பட்டான். வேத புத்தகங்களிலுல் சில அவனுக்கு மனப்பாடம், ஹீப்ரூ எழுத்தாளர்களுக்கு தால்மூட் மனப் பாடமாக இருப்பதைப்போல். புத்தகத்திலுள்ள ஏதாவது ஒரு வார்த்தையைச் சுட்டிக்காட்டி, அதைத் தொடர்ந்துள்ள வார்த்தைகளைத் தனது நினைவிலிருந்து மிருதுவான குரலில் சொல்லுவான். அவன் சதா தரையைப் பார்ப்பான். அவனது ஒற்றைக் கண் ஆர்வத்துடன் சுற்றுமுற்றும் பார்க்கும், விலை உயர்ந்த ஏதையோ தேடுவதைப்போல். தனது திறமையை நிரூபிக்கப் பிரின்ஸ் மிஷெட்ஸ்கியின் ரஷியாவின் திராட்சைகள் என்னும் நூலை அவன் தேர்ந்தெடுப்பான். "தீரம் மிகுந்த, அச்சமற்ற தியாகிகளின் பொறுமையான, வீரம் செறிந்த தியாகம்" அவனுக்கு நன்றாகத் தெரியும். அவனிடம் பிழை கண்டுபிடிக்கப் பியோட்டர் வாஸில்யேவிச் சதா முயன்றான்.

"தப்பு! அது பரிசுத்த டெனிஸீக்கு நேர்ந்தது, புனித இப்ரியானுக்கு அல்ல."

"டெனிஸா? டெனிஸைப்பற்றி யாராவது கேள்விப் பட்டிருக்கிறார்களா? அவன் பெயர் டியோனிஸியஸ்."

"பெயரைப்பற்றிப் பிரமாதப்படுத்தாதே."

"நீயும் எனக்குப் பாடம் சொல்லித் தராதே!"

ஒரு நிமிடத்திற்குப் பிறகு கோபத்தால் கண்கள் சிவக்க, ஒருவரை ஒருவர் உக்ரமாகப் பார்த்துக்கொண்டு, கூறுவர்.

"கயிறு திரிப்பவனே, வெட்கமற்ற பன்றியே, உன் வயிறைப் பார்!"

கணக்குக் கூட்டுகிறவனைப்போல் பற்றின்றி, பாக்கோமி சொல்லுவான்:

"நீ ஒரு ஆடு, நெறிகெட்டவன், புடவைக்குப் பின்னே ஒளிந்துகொள்கிறவன்!"

பொறுமையுடன் புன்முறுவல் புரிந்துகொண்டு, அந்தப் புராதன நப்பிக்கையின் பாதுகாவலாளர்களை, பன்றிச் சிறுவர்களாக மதித்து, ஊக்குவான், கடைச் சிப்பந்தி.

"அவனை விடாதே! அதுதான் சரி!"

ஒரு நாள் கிழவர்கள் உண்மையிலேயே சண்டை போட்டுக்கொண்டனர். பியோட்டர் வாஸில்யெவுடன் அவன் கன்னத்தில் அடித்து, அவனை ஓடச் செய்தான். நெற்றியிலே துளிர்த்த வியர்வையைத் துடைத்துக்கொண்டு அவன் கூவினான்:

"பொறுத்துப் பார்—உன் ஆத்மா இந்தப் பாவத்திற்குப் பரிகாரம் செய்ய வேண்டும். நீதான் இந்தப் பாவம் செய்யுமாறு என் கையைத் தூண்டினாய்! சீச்சீ!"

தனது சகாக்களின் நம்பிக்கையைக் குறைகூறுவதிலும், எதிர்மறையாகப் பேசுவதிலும் அவன் மட்டமற்ற மகிழ்ச்சியைக் கண்டான்.

"அந்த அலெக்ஸாண்டர்தான் உன்னைத் தூண்டிவிடுகிறான், அந்தச் சண்டைக் கோழி!"

"எதிர்மறை வாதம்" அவனுக்கு ஆத்திரமளித்தது; அவனைப் பீதியடையச் செய்தது. ஆனால் இந்த வாதம் எதைக் குறிக்கிறது என்று கேட்டால், இதை அவனால் தெளிவாக விளக்க முடியாது.

"மத மறுப்புக் கொள்கைகளில் மிக உக்ரமானது எதிர்மறைவாதம். அது கடவுளை விலக்குகிறது. மனம்தான் எல்லாம். கொஸாக்கியர்களை எடுத்துக்கொள்: பைபிளை மார்த்திரம்தான் அவர்கள் அங்கீகரிக்கிறார்கள். ஸாராடோவிலுள்ள ஜெர்மானியரிடமிருந்து — அவர்கள் லூதரிடமிருந்து—பெறப்பட்டது பைபிள். லூதரைப்பற்றிச் சொல்லப்படுகிறது: 'லூதரென்று பொருத்தமாகத்தான் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. சைத்தானிலிருந்து லூதர்; தூர்த்தன் லூதர்; தூர்த்தனான லூதர்; ஜெர்மானிய இனமே குறும்பர்களென்று பெயர்பெற்றவர்கள். இவை யூனத்தும் மேற்கிலிருந்து வருகிறது; அங்குள்ள மதத் துவேஷிகளிடமிருந்து வருகிறது."

நொண்டிக் காலால் தரையில் ஓங்கி மிதித்துக்கொண்டு, கௌரவத்துடன் அவன் சொல்லுவான் :

"அவர்களைத் தேடிப்பிடித்து அம்பலப்படுத்தவேண்டும்; அவர்களைத் தன்புறத்த வேண்டும் ; கழு மரத்தில் கட்டி எரிக்க வேண்டும் ; நம்மையல்ல ; நினைவுக்கு எட்டாத காலத்திலிருந்து நாம் ரஷியர்கள் : நமது கோட்பாடுதான் உண்மையான கிழக்கத்தியக் கோட்பாடு–அடியிலிருந்து நுனி வரை ரஷியக் கோட்பாடு. மற்றவைகளெல்லாம் மேற்கத்தியது—திரித்து உருவாக்கப்பட்ட சுயேச்சை சிந்தனையின் சிருஷ்டி. ஜெர்மானியரும், பிரெஞ்சுக்காரரும் சிருஷ்டி செய்தது. அவர்களிடமிருந்து நன்மையை எதிர்பார்க்க முடியுமா ? 1812-ஆம் வருடத்தைத் திரும்பிப்பார்.....',

தான் ஒரு சிறுவனிடம் பேசுவதைக்கூட அவன் உத்வேகத்தில் மறந்துவிடுவான். வாலிப உற்சாகத்துடன் பேசிக் கொண்டே தனது வலிமைபடைத்த கரங்களால் என் அரையைப்பற்றித் தன் பக்கம் இழுப்பான் ; பிறகு அப்பால் தள்ளுவான்.

"கற்பனையிலே உருவான கானகத்தில் கண்மூடித்தனமாக அலைகிறது மனிதனுடைய ஞானம் ; கடவுளின் மிக உயர்ந்த பரிசான மனிதனுடைய ஆத்மாவைக் களங்கப்படுத்தச் சைத்தானுல் ஏவப்பட்டு, உக்ரமான ஓநாயைப்போல் அலைகிறது. சைத்தானின் சேவர்களாகிய அவர்கள் என்ன உபதேசம் செய்கிறார்கள் ? எதிர்மறையான பாஷ்யக்காரர்களின் உபதேசம் இதோ: சைத்தானும் கடவுளின் புதல்வன், இயேசுநாதரின் மூத்த சகோதரன்—இதை எண்ணிப்பார் ! அதிகாரத்திற்கு அடிபணிய மறுக்குமாறும், வேலையை விட்டு விடுமாறும், மனிவி மக்களைப் புறக்கணிக்குமாறும் அவர்கள் மக்களுக்கு உபதேசம் செய்கிறார்கள். மனிதனுக்கு எத்தகைய கடமையுமில்லை; எத்தகைய ஒழுங்குமில்லை; தனது விருப்பம் போல், அல்லது சைத்தான் கட்டளைப்படி மனிதன் வாழட்டும். இதோ மீண்டும் அலெக்ஸாண்டர் வந்துவிட்டான், பரிதாபகரமான புழு..."

சில சமயங்களில் ஏதாவது வேலைசெய்யக் கடைச்சிப்பந்தி என்னைக் கூப்பிடுவான். முகப்பிலே தனியே விடப்பட்ட கிழவன், தன்னைச் சுற்றி யிருக்கும் சூன்யத்வத்தைப் பார்த்துத் தொடர்ந்து பேசுவான் :

"சிறகில்லாத ஆத்மாக்களா, குருட்டு நாய்க்குட்டிகளா, நான் யாரிடம் அடைக்கலம் புகுவது ?"

பிறகு, தலையைப் பின்னே சாய்த்துக்கொண்டு, கைகளை முழங் கால்கள்மீது ஊன்றிக்கொண்டு அவன் வானத்தை உற்றுப்பார்ப்பான்.

படிப்படியாக அவன் என்மீது அதிக அன்பும் கவனமும் செலுத்தினான். நான் புத்தகம் படிப்பதைப் பார்க்கும் பொழுதெல்லாம், என் தோளில் தட்டிக்கொடுத்து அவன் சொல்லுவான் :

" படி, பையா ; இது உனக்குப் பயன்படும். உனக்கு நல்ல மூளை இருக்கிறது. முதியோர் சொல்வதை நீ கேட்காதது நல்லதல்ல ; எல்லோரையும் எதிர்ப்பதும் நல்லதல்ல. இந்த மாதிரி விஷமம் செய்வதால் உனக்கு என்ன நன்மை ஏற்படப்போகிறது ? நீ சிறை செய்யப்படுவாய், பையா ! நீ படி ; ஆனால் புத்தகம் வெறும் புத்தகம் மாத்திரம்தான் என்பதை மறந்துவிடாதே. உன் மூளையை நீயே கிண்டிக் கிளர வேண்டும். ஒரு காலத்தில் கிலிஸ்துக்களுக்கிடையே டானியேல் என்னும் பெயருடைய ஒரு குரு இருந்தான். எந்தப் புத்தகமும் நல்ல புத்தகமல்ல என்று கருதி, புத்தகங்களை யெல்லாம்—பழைய, புதிய புத்தகங்களை—நதியிலே அவன் எறிந்தான். அது புத்திசாலித்தனமான தல்ல ; ஜனங்களின் மனதைக் குழப்பும் தீய மனம்படைத்த அலெக்ஸாண்டர்....."

அவன் அடிக்கடி அலெக்ஸாண்டரைப்பற்றிப் பிரஸ்தாபித்தான். ஒரு நாள் கவலைதோய்ந்த முகத்துடன் அவன் கடையில் பிரவேசித்து, கடைச்சிப்பந்தியிடம் சொன்னான் :

" அலெக்ஸாண்டர் நகரில் இருக்கிறான்—அவன் நேற்று வந்தான். நான் அவனை எல்லா இடங்களிலும் தேடி விட்டேன் ; ஆனால் அவனைக் காண முடியவில்லை. அவன்

ஒளிந்துகொண் டிருக்கிறான்! நான் கொஞ்ச நேரம் இங்கே உட்கார்ந்திருக்கிறேன். ஒருக்கால் அவன் இங்கே வருவான்.''

''எனக்கு யாரையும் தெரியாது'' என்று பற்றின்றிச் சொன்னான் கடைச்சிப்பந்தி.

கிழவன் தலையை அசைத்தான்.

''நீ சொல்லுவது சரிதான். விற்பவர்களையும், வாங்குகிறவர்களையும் மாத்திரம்தான் உனக்குத் தெரியும். வேறு யாரும் நீ சம்பந்தப்பட்ட வரையில் இயங்கவில்லை. எனக்கு ஒரு கோப்பை தேநீர் கொடு.''

பெரிய பித்தளைக் கெட்டில் நிறைய வெந்நீருடன் நான் திரும்பியபொழுது கடையில் வேறு விருந்தினர்களும் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களில் ஒருவன் லூக்கியான். அவன் சந்தோஷத்துடன் சிரித்துக்கொண் டிருந்தான். பெல்ட் பூட்ஸும், பச்சை அரைஞாண் பொருத்தப்பட்ட கம்பளிக் கோட்டும், கண்வரையில் இழுத்துவிடப்பட்ட தொப்பியும் அணிந்த ஒருவன் கதவுக்குப் பின்னே இருண்ட மூலையில் வீற்றிருந்தான். அவன் முகம் கவர்ச்சியற்றிருந்தது. சாந்தமானவனாகவும், அடக்கமானவனாகவும் அவன் காணப்பட்டான். அப்பொழுதுதான் வேலையிலிருந்து நீக்கப்பட்டதால் ஏற்பட்ட ஏக்கத்துடன் இருக்கும் கடைச்சிப்பந்தியை அவன் பிரதிபலித்தான்.

அவன் இருந்த பக்கம் பார்க்காமல் மிகக் கவரவத்துடன் பியோட்டர் வாஸில்யேவ் கடுமையான குரலில் என்னமோ சொல்லிக்கொண் டிருந்தான். அறிமுகமில்லாத அந்த மனிதன், உதறும் வலது கையால் தொப்பியை நகர்த்திக்கொண் டிருந்தான். சிலுவை அடையாளம் வரைந்துகொள்ள, கையை உயர்த்துவதைப்போல் உயர்த்தி அவன் தொப்பியை நகர்த்தினான்; தொப்பி, தலையின் பின் பகுதியில் தொங்கும்வரை நகர்த்தினான். பிறகு கண்கள்வரை தொப்பியை மீண்டும் இழுத்துவிட்டுக்கொண்டான். வலிப்பைப்போன்ற இந்த நடவடிக்கை, முட்டாள் இக்கோஷாவை எனக்கு நினைவூட்டிற்று.

''கலங்கின ஜலத்தில் நீந்தும் குறை கண்டுபிடிக்கும் பிரகிருதிகள், ஜலத்தை மேலும் கலக்குகிறார்கள்'' என்றான் பியோட்டர் வாஸில்யேவ்.

கடைச்சிப்பந்தியைப் போன்று தோற்றமளித்த மனிதன் சாந்தமாகக் கேட்டான் :

" என்னைப் பற்றித்தான் நீ பேசுகிறாயா ?"

" உன்னைப்பற்றிப் பேசினு லென்ன ?"

அந்த மனிதன் மீண்டும் சாந்தமாக, ஆனல் உணர்ச்சி பூர்வமாகக் கேட்டான் :

" உன்னைப்பற்றி நீ என்ன சொல்லுவாய் ?"

" என்னைப்பற்றி நான் கடவுளிடம் மாத்திரம்தான் சொல்லுவேன்—என் விவகாரம் தனி."

" அப்படியில்லை ; உன் விவகாரம் என் விவகாரம்கூட " என்று அழுத்தமாகக் கூறினன் அந்த மனிதன். " உண்மையைக் காண மறுக்காதே ; அகந்தையால் குருடனுய்விடாதே. கடவுளுக்கு முன்னிலையிலோ, மனிதனுக்கு முன்னிலையிலோ பாவம் செய்யக் கூடாது."

பியோட்டர் வாஸில்யெவுடன் அந்த மனிதன் பேசிய முறை எனக்குப் பிடித்தது. அவன் அமைதியான, உணர்ச்சி பூர்வமான குரல் என்னைக் கவர்ந்தது. " கடவுளே, சிருஷ்டிகர்த்தாவே...." என்று நல்ல பாதிரி வாசிப்பதைப் போன்றிருந்தது அவன் பேச்சு.

" என்மீது நீ ஏன் தீர்ப்புக் கூறுகிறாய் ? உன்னைவிடக் கொடிய பாவியல்ல நான்."

" குளிர்காயும் அடுப்பு வெப்பத்தை எழுப்புவதைப் பார் !" என்று கடுமையாகக் கூறினன் லூக்கியான். அதைப் பொருட்படுத்தாமல் அவன் பேசினன் :

" பரிசுத்த ஆவியின் நற்சந்ததிகளை யார் அதிகம் குழப்புகிறார்கள் என்பது கடவுளுக்குத் தெரியும். படித்த, பண்டிதர்களான உன் போன்றவர்களின் பாவமாக இருக்கலாம். நான் புத்தகங்கள் படித்ததில்லை ; நான் பண்டிதனு மல்ல. ஜீவனுள்ள, சாதாரண மனிதன் நான்."

" உன் எளிமையைப்பற்றி எனக்குத் தெரியும். அதைப்பற்றி நான் தாயாளமாகக் கேள்விப்பட்டிருக்கிறேன் !"

"புத்தகம் படிக்கும் நீ, சாதாரண எண்ணத்தைக் கூடத் திரித்துக்கூறும் நீ, மக்கள் மனதைக் குழப்புகிறாய். என்னைப் பொறுத்தவரையில் நான் என்ன உபதேசம் செய்கிறேன் என்பதை உன்னால் சொல்ல முடியாது ?"

"மதத் துவேஷம்!" என்றான் பியோட்டர் வாலில்யெவ். ஆனால் தன் கையில் எழுதப்பட்டிருக்கும் எதையோ படிப்பதைப்போன்று கையை முகத்திற்கு நேரே பிடித்துக் கொண்டு, உத்வேகத்துடன் சொன்னான் :

"ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு மாற்றுவதன் மூலம் ஜனங்களை அபிவிருத்திசெய்துவிட முடியும் என்று நினைக்கிறாயா ? அது தவறு என்று நான் சொல்லுகிறேன் ! மனிதா, உன்னை நீயே விடுவித்துக்கொள் என்று நான் சொல்லுகிறேன் ! கடவுளுக்கு முன் வீடு, மனைவி, சொத்து முதலியன எம்மாத்திரம் ? பலாத்காரத்திலும், கொலையிலும் முடியும் எல்லாவற்றிலிருந்தும்—தங்கம், வெள்ளி, முதலிய சகல செல்வங்களிலிருந்தும்—உன்னை நீயே விடுவித்துக்கொள்; மனிதா! ஏனெனில் அவை தூசி ; அவை அழியக்கூடியவை ! இந்த பூமியில் மனிதன் விமோசனத்தைக் காண முடியாது; சொர்க்கத்தில்தான் மனிதன் விமோசனத்தைக் காண முடியும் ! நீ எல்லாவற்றையும் துறந்துவிடு : இந்த உலகத்துடன் உன்னைப் பிணைக்கும் சகல கட்டுகளையும் அறுத்துவிடு. ஏனெனில் இவை கிறிஸ்துவுக்கு எதிரானவை; சிருஷ்டிசெய்த மாயை. மனம் தளராமல், இந்த இருண்ட உலகத்தைத் துறந்து நான் நேரான, குறுகலான பாதையில் நடக்கிறேன்...."

"சொட்டியையும், ஜலத்தையும், போர்வையையும் கூட நீ துறந்துவிடுகிறாயா ? இவை இந்த உலகத்தைச் சேர்ந்தவை" என்று குத்திக் காட்டும் முறையில் சொன்னான் கிழவன்.

இந்த வார்த்தைகள் அலெக்ஸாண்டரை அசைக்கவில்லை. அவன் மேலும் அதிக உத்வேகத்துடன் பேசினான். அவன் தணிந்த குரலில் பேசியது, பித்தளை மூசு முழங்குவதைப் போன்றிருந்தது.

" உன் செல்வம் எங்கே இருக்கிறது, மனிதா ? கடவுளிடம் மாத்திரம்தான் செல்வத்தைக் காண முடியும். அவர் முன்னே சுத்தமாக நில் : இந்த உலக பந்தங்களை அகற்றி விட்டு உன் கடவுளைக் காண் ! நீ தனியே ; கடவுளும் தனியே ! இங்ஙனம்தான் நீ கடவுளை அணுக முடியும். ஒரு பாதை மாத்திரம்தான் உன்னை அவரிடம் அழைத்துச் செல்லும். மாதாவையும் பிதாவையும் துறந்து, அனைத்தையும் துறந்து, கவர்ச்சியைத் தூண்டும் கண்களைப் பிய்த்தெடுத்து விமோசனத்தைத் தேடு என்று சொல்லப்பட்டிருக்கிறது. கடவுளுக்காக உன்னை நீயே அழித்துக்கொண்டு, ஆத்மாவைப் பாதுகாக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் உன் ஆத்மா அன்பு என்னும் புனித ஒளியுடன் மேலும் மேலும் பிரகாசிக்கும்..."

" பூ. நீ நாசமாய்ப்போக !" என்று எழுந்துகொண்டே சொன்னான், பியோட்டர் வாஸில்யெவ். " போன வருடம் உன்னைப் பார்த்ததற்கு நீ புத்திசாலியா யிருப்பாய் என்று நான் கருதினேன். ஆனால் நீ மேலும் கெட்டுவிட்டாய்."

கிழவன் கடையிலிருந்து வெளியேறி முகப்புக்குச் சென்றான். இது அலெக்ஸாண்டரை அச்சுறுத்திற்று. எனவே அவன் அவசரத்துடனும் ஆச்சரியத்துடனும் கேட்டான் :

" நீ போகிறாயா ? ஏன் போகிறாய் ?"

தேற்றும் முறையில் கண்ணைச் சிமிட்டிக்கொண்டு லூக்கியான் சொன்னான் :

" பாதகமில்லை ; பாதகமில்லை !"

ஆனால் அலெக்ஸாண்டர் அவன்மீது சீறிவிழுந்தான் :

" இந்த உலகத்தைச் சேர்ந்த உளறுவாயனாகிய நீயும் பலனற்ற விதையை விதைக்கிறாய் ! இதனால் என்ன பிரயோஜனம் ? இரண்டு தரம் மங்களம் பாடப்பட்டது—மூன்று தரம் பாடப்பட்டது..."

அவனைப் பார்த்து புன்னகைபுரிந்துகொண்டு லூக்கியானும் முகப்பிற்குச் சென்றான். அறிமுகமில்லாதவன், கடைச் சிப்பந்தி பக்கம் திரும்பி உறுதியுடன் சொன்னான் :

"என் ஆத்மாவின் பலத்தை அவர்களால் சமாளிக்க முடியவில்லை—சமாளிக்கவே முடியவில்லை! நெருப்பி லிருந்து புகை பாய்வதைப் போன்று அவர்கள் பாய்ந்து ஓடிவிட்டார்கள்!"

கடைச் சிப்பந்தி நிமிர்ந்து பார்த்துவிட்டு, மந்தமாகச் சொன்னான்:

"இந்த மாதிரி விஷயங்களில் எனக்குச் சிரத்தை யில்லை."

இந்த வார்த்தைகளைக் கேட்டு அறிமுகமில்லாத அந்த மனிதன் அதிர்ச்சி அடைந்தான். தொப்பியைக் கீழே இழுத்து விட்டு அவன் முணுமுணுத்தான்:

"இந்த மாதிரி விஷயங்களில் உனக்கு எப்படிச் சிரத்தை இல்லாமல் இருக்க முடியும்? இந்த மாதிரி விஷயங்களில் சிரத்தை காட்டித்தான் தீர வேண்டும்."

தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு ஒரு நிமிடமும் அதற்கு மேலும் அவன் மௌனமாக உட்கார்ந்தான். பிறகு கிழவர்கள் அவனைக் கூப்பிட்டார்கள். "போய் வருகிறேன்" என்றுகூடச் சொல்லாமல், அந்த மூவரும் வெளியே சென் றனர்.

இரவில் தீப் பற்றி எரிவதைப்போல், அறிமுகமில்லாத வன் என் முன் தோன்றினான். அவன் எழுந்தான்—மறைந் தான். இந்த உலகைத் தான் துறப்பதில் ஓரளவு நியாயம் இருப்பதாக என்னை நம்பச் செய்ய அவன் முயன்றான்.

அன்று மாலை, சௌகரியமான சமயத்தில் சாந்தமும், கண்ணியமும் படைத்த எங்கள் தொழிற்சாலை மேஸ்திரி ஐவான் லாரியோனிச்சிடம் உற்சாகத்துடன் இந்த மனிதனைப் பற்றிப் பேசினேன். நான் சொன்னதைக் கேட்டுவிட்டு, அவன் சொன்னான்:

"அவன் நாடோடியாக இருக்க வேண்டும். எதையும் அங்கீகரிக்காத கூட்டம் அது!"

"அவர்கள் எப்படி வாழ்க்கை நடத்துகிறார்கள்?"

"ஊர் சுற்றி—உலகம் முழுதும் அவர்கள் சஞ்சரிக் கிறார்கள். இதனால்தான் நாடோடி என்ற பெயர் அவர்களுக்கு

ஏற்பட்டது. உலகத்தையும், உலகிலுள்ள அனைத்தையும் துறந்துவிட வேண்டும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். தீயவர்களாதலால், போலீசார் அவர்களை வேட்டையாடுகிறார்கள்."

என் வாழ்க்கை வேதனை நிறைந்தது. எனினும் உலகிலுள்ள அனைத்தையும் எப்படித் துறக்க முடியும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அன்று என்னைச் சுற்றி இயங்கிய வாழ்க்கையில் எனக்கு மொம்பப் பிடித்த, கவர்ச்சியளித்த பலவற்றை நான் கண்டேன். விரைவில் என் நினைவிலிருந்து அலெக்சாண்டர் உருவம் மங்கி மறைந்தது.

ஆனால் அடிக்கடி, கெட்ட வேளைகளில், அவன் மீண்டும் தோன்றுவான். வயல் வழியாக அவன் கானகத்தை நோக்கி நடப்பான். வேலை பார்த்து அழுக்குப்படாத தனது வெண் கரத்தால் தொப்பியைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு, அவன் முணுமுணுப்பான் :

"நேரான குறுகின பாதையில் நான் நடக்கிறேன். அனைத்தையும் நான் துறக்கிறேன் ! எல்லாப் பந்தங்களையும் அறுங்கள் !"

பாட்டியின் கனவுகளில் தோன்றிய என் தந்தையை அவனுக்கு அருகில் நான் கண்டேன் : கையில் தடி ; நாக்கைத் தொங்கவிட்டுக்கொண்டு தொடர்ந்து ஓடும் புள்ளி நாய்.....

13

ஒரு புராதன கட்டிடத்திலுள்ள இரண்டு அறைகளில் இருந்தது, விக்கிரகத் தொழிற்சாலை. ஒரு அறையிலிருந்த ஐந்து ஜன்னல்களில் மூன்று முற்றப் பக்கம் இருந்தன; இரண்டு தோட்டப் பக்கம் இருந்தன. இன்னொரு அறையிலோ ஒரு ஜன்னல் தோட்டப் பக்கமும், மற்றொன்று வீதிப் பக்கமும் இருந்தன. ஜன்னல்கள் சதுரமாகவும், சிறிதாகவும் இருந்தன. ஜன்னல்களின் கண்ணாடிகள் காலத்தால் மங்கிவிட்டதால், குளிர்கால வெளிச்சம் உள்ளே விழவில்லை.

இரண்டு அறைகளிலும் மேஜைகள் நிறைந்திருந்தன. ஒவ்வொரு மேஜைக்கும் அருகில் ஒன்று, அல்லது இரண்டு விக்கிரகத் தொழிலாளிகள் குனிந்து நின்று வேலை செய்தனர். விக்கிரகங்களின் சதுரப் போர்டுகளில் வெண்கதிர்கள் விழ வேண்டும் என்பதற்காக ஜலம் நிரப்பப்பட்ட கண்ணாடிப் பந்துகள் உத்திரத்தில் தொங்கவிடப்பட்டிருந்தன.

தொழிற்சாலைக்குள் வெப்பமாகவும், புழுக்கமாகவும் இருந்தது. பாலெக், கோலுயி, மஸ்டோரா ஆகிய ஊர்களைச் சேர்ந்த சுமார் இருபது "கடவுளைச் சித்தரிப்பவர்கள்" இங்கே கூடி நின்றனர். மூரட்டுச்சட்டையும், கால்சட்டையும் அவர்கள் அணிந்திருந்தனர்; சிலருக்குப் பாதரட்சையில்லை; மற்றும் சிலர் கிழிந்த பாதரட்சை அணிந்திருந்தனர். சைத்ரீ கர்களின் தலை, புகைப்படலத்தால் மூடப்பட்டிருந்தது. எண்ணெய், அழுகிய முட்டை ஆகியவைகளின் துர்நாற்றம் காற்றிலே கலந்து வந்தது. கனத்த குரலில், கொதிக்கும் தாரைப்போல், விளாடிமிர் நாட்டுப் பாட்டு காற்றிலே மிதந்து வந்தது:

"ஏ வெட்கமற்ற ஜனங்களே!
கன்னியைக் கற்பழிக்க வாலிபனை அனுமதித்துவிட்டீர்களே.."

வேறு பாட்டுக்களும் அவர்கள் பாடினர், உற்சாகமின்றி. ஆனால் இதுதான் அவர்களுக்கு சொம்பப் பிடித்த பாட்டு. ஒரு சிந்தனையையோ, பிரஷின் அசைவையோ, கோடுகள் கிழிப்பதையோ, ரிஷிகளின் உருவத்திற்கு வர்ணம் தீட்டுவதையோ, எலும்பு புடைத்து நிற்கும் முகத்தில் வேதனையைக் குறிக்கும் கோடுகள் வரைவதையோ இந்தப் பாட்டு தடைப்படுத்தவில்லை. நீண்ட நாசி படைத்த குடிகார சம்மட்டிக்காரன் கோகலோவ் சம்மட்டியால் அடிக்கும் சத்தம் அடுத்த அறையிலிருந்து எழுந்தது. விட்டுவிட்டுக் கேட்கும்; சம்மட்டி அடி பாட்டுக்குத் தாளம் போடுவதைப் போன்றிருந்தது. இது மரத்தை அரிக்கும் புழுவை நினைவூட்டிற்று.

இந்த விக்கிரகங்களுக்கு உருவம் கொடுப்பதிலே யாருக்கும் அக்கறையில்லை. வேலையில் அக்கறையோ, உணர்ச்சியோ

செலுத்த முடியாதவாறு எந்தவிதமான அழகுமற்ற முறையில் வேலையைப் பகிர்ந்திருக்கிறார், ஒரு துரெண்ணம் படைத்த மேதை. இழிகுணமும், வெறுப்பும் படைத்த தச்சன் பான் பில், தான் தயாரித்த பல அளவுள்ள போர்டுகளைத் தொழிற் சாலைக்குக் கொண்டுவருவான்; கூயரோகம் படைத்த சிறுவன் டேவிடோவ் அஸ்திவாரம் போட்டபடி இருப் பான்; அவன் நண்பன் சிரோகின் கில்ட் போடுவதற்காக போர்டுகள் தயாரிப்பான்; மில்யாஷின் மூலத்தைப் பார்த்து, பென்சிலால் விக்கிரகத்தின் உருவத்தை வரைவான். கிழவன் கோகலோவ் கில்ட் வேலை செய்வான், உருவங்கள் செதுக்கு வான்; வர்ணம் தீட்டுகிறவர்கள், காட்சிகளையும் ரிஷிகளின் அங்கிகளையும் வரைவார்கள்; அதன் பிறகு தலையும் கைகளும் அற்ற விக்கிரகம், சுவர்மீது சாத்தி வைக்கப்படும். "முகம்" வரைபவர்களின் வருகைக்காக அவை அங்கே காத்திருக்கும்.

கோயில் கதவுகளையோ விக்கிரக ஆராதனை செய்வோரின் வீடுகளையோ அலங்கரிக்க வேண்டிய அந்தப் பெரிய விக்கிரகங் கள் முகமும், கைகளும், கால்களு மின்றி அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதைக் காண்பது வேதனை தரும் காட்சி. ஒளிவீசும் வர்ணம் தீட்டப்பட்ட அந்தப் போர்டுகள் மர ணத்தை வெளிப்படுத்தின. அவைகளில் ஜீவகளை சொட்ட வில்லை. ஆனால் ஒரு காலத்தில் அவைகளில் ஜீவகளை சொட்டி யிருக்க வேண்டும் என்றும், தன் சாயலை மாத்திரம் விட்டு விட்டு, ஆச்சரியகரமாகத் தப்பியோடிவிட்டிருக்க வேண்டு மென்றும் தோன்றிற்று.

"முகம்" வரைகிற சைத்ரிகர்கள் தங்கள் வேலையை முடித்த தும், கோடகளுக்குத் தங்க முலாம் பூசுவதற்காக விக்கிரகம் ஒரு தொழிலாளியிடம் கொடுக்கப்படும். தேர்ச்சிபெற்ற ஒருவர் எழுத்துக்களைப் பொறிப்பார். சாந்தமான தொழிற் சாலை மானேஜர் ஐவான் லாரியோனிச் பூர்த்தி செய்யப்பட்ட விக்கிரகத்தை மெருகுபடுத்துவான்.

அவன் முகம் பழுப்பு நிறமாக இருந்தது. அழகிய, பட்டுப் போன்றிருந்த அவன் தாடி நரைத்திருந்தது. அவனது தீட்சண்யமான கண்களில் சோகம் படர்ந்திருந்தது. அவன்

புன்னகை கவர்ச்சிகரமாக இருந்தது ; ஆனால் பதிலுக்குப் புன்னகை புரிவது தவறென்று தோன்றிற்று. அவன் சிமியோனின் சிலையைப் போன்று, இளைத்திருந்தான்; சுவர்களுக்கும், ஜனங்களுக்கும் அப்பால் அவன் வெட்ட வெளியைப் பார்த்த பொழுது அவன் கண்கள் விக்கிரகத்தின் கண்களைப் போன்றிருந்தன.

தொழிற்சாலையில் நான் வேலைக்கு அமர்ந்த சில நாட்களுக்குப் பிறகு அழகிய, வலிமை படைத்த டான் கொஸாக் காபென்டியூக்கின் என்னும் சைத்ரிகன் குடிவெறியில் வேலைக்கு வந்தான். பற்களை நறநற வென்று கடித்துக் கொண்டு, அழகிய, பெண்மைத்தன்மை படைத்த தனது கண்களைக் குறுக்கிக்கொண்டு, மௌனமாகத் தனது வலிமை படைத்த முஷ்டியை எல்லோர் பக்கமும் நீட்டினான். எலி நிறைந்த அறையில் பூனை ஓடியாடுவதைப்போல் தொழிற் சாலையில் அவன் ஓடியாடினான். பீதியடைந்த ஜனங்கள் மூலையில் பதுங்கினர். அங்கிருந்து அவர்கள் கூவினர் :

" அவனை நையப் புடை !"

"முகம்" வரையும் சைத்ரிகன் எவ்ஜேனி சிதானேவ் அந்த வெறிபிடித்த மாட்டை, ஒரு முக்காலியால் தலையில் அடித்து அடக்கினான். கொஸாக் தரையில் சாய்ந்தான். கண நேரத்தில் நீட்டிப் படுக்கவைத்து, துண்டால் அவனைக் கட்டினர். புலியின் பற்களைப் போன்ற பற்களால் அவன் அந்தத் துண்டைக் கடித்தான். இதைக் கண்டு எவ்ஜேனி ஆத்திரமடைந்தான். அவன் மேஜைமீது தாவி ஏறி, கொஸாக் மீது பாய்வதற்குத் தயாரானான். அவன் காபென்டியூக்கின் நெஞ்சை நசுக்கி யிருப்பான். ஆனால் அந்தச் சமயத்தில் தொப்பியும், கோட்டும் அணிந்துகொண்டு லாரியோனிச் அவனுக்கு அருகில் தோன்றினான். சிதானேவைப் பார்த்து விரலை அசைத்துக்கொண்டு, மற்றவர்களிடம் சாந்தமான குரலில் சொன்னான் :

" அவனை வாசற்பக்கம் தூக்கிச் செல்லுங்கள். அவன் நிதானம் பெறட்டும்."

கொஸாக்கைத் தொழிற்சாலைக்கு வெளியே அவர்கள் இழுத்துச் சென்றனர். மேஜைகளையும், நாற்காலிகளையும்

ஒழுங்குபடுத்திவிட்டு, வேலைசெய்ய முற்பட்டனர். காபென்டியூக்கினின் பலத்தைப்பற்றியும், சண்டையிலேயே அவன் மடிவான் என்று தீர்க்கதரிசனம் சொல்லிக்கொண்டும் அவர்கள் வேலை செய்தனர்.

"அவனைக் கொல்லுவது சிரமம்" என்று சாந்தமாகச் சொன்னான் சிதாஞவ். தனக்கு முற்றிலும் தெரிந்த வேலையைப்பற்றிப் பேசுவதைப் போன்று பேசினான் சிதாஞவ்.

கட்டுக்கடங்காத, பலசாலிகளான இந்த மனிதர்கள் எத்தகைய எதிர்ப்புமின்றி எதற்காக லாரியோனிச்சின் கட்டளைக்கு அடிபணிகிறார்கள் என்பதை ஊகித்தறிய நான் லாரியோனிச்சைக் கடைக்கண்ணால் பார்த்தேன்.

எப்படி வேலை செய்வது என்பதை அவன் எல்லோருக்கும் கற்றுக்கொடுத்தான். தேர்ச்சிபெற்றவர்கள்கூட விருப்பத்துடன் அவன் யோசனையை அங்கீகரித்தனர். காபென்டியூக்கினுக்கு வேலை கற்றுக்கொடுக்க மற்றவர்களுக்குச் செலவு செய்யும் நேரத்தைவிட அதிக நேரம் செலவு செய்தான் லாரியோனிச்.

"சைத்ரிகன்—உன் பெயர் இது, காபென்டியூக்கின். சைத்ரிகன் தன் வேலையை உயிருள்ளதாகச் செய்ய வேண்டும், இத்தாலிய பாணியில். ஆயில் பெயின்டிங்கின் அடிப்படை வர்ணங்களிடையே இணக்கமாம். ஆனால் இங்கே நீ எவ்வளவு வெண்சாயம் பூசியிருக்கிறாய்! அதனால்தான் கன்னியின் கண்கள் ஜீவனற்றிருக்கின்றன. கன்னங்கள் வட்டமாகவும், சிவப்பாகவும் இருக்கின்றன; ஆனால் கண்கள் இதற்குப் பொருத்தமாக இல்லை. கண்களைச் சரியான இடத்தில் வரையவில்லை; ஒன்று மூக்கிற்கு வெகு சமீபத்தில் இருக்கிறது; மற்றொன்று பொட்டுக்கு மேலே இருக்கிறது. எனவே பரிசுத்தமான, புனிதமான தோற்றமளிப்பதற்குப் பதிலாக, உலகத்தன்மையுடையதாகவும், தந்திரமுடையதாகவும் இருக்கிறது, முகம். வேலையில் நீ முழுக் கவனம் செலுத்துவதில்லை, காபென்டியூக்கின்."

இந்தப் பேச்சைக் கேட்டுக்கொண்டு நின்ற கொஸாக் தனது முகத்தைச் சுளித்தான். பிறகு வெட்கமின்றிப்

புன்னகை புரிந்துவிட்டு, குடியால் கரகரத்த, ஆனால் இனிய குரலில் சொன்னான் :

" எனக்கு உகந்த வேலையல்ல இது; ஐவான் லாரியோனிச்! சங்கீதத்திற்காகப் பிறந்தவன் நான்; ஆனால் இதோ நான் ஒரு மடத்தில் இருக்கிறேன்!

" முயன்றால் எதையும் கற்கலாம்."

" இந்த வேலையைச் செய்யும் நான் யார்? நான் கோச் வண்டிக்காரனாக இருக்கவேண்டியவன்; துள்ளி ஓடும் குதிரைகளின் பூட்டிய கோச் வண்டி.....ஆஹா!"

பிறகு வாயை அகலத் திறந்து அவன் பாட ஆரம்பித்தான் :

விரைவான மூன்று குதிரை வண்டிக்கு நான் சேணம் பூட்டுவேன்;
இரண்டு சாம்பல் நிறக் குதிரைகளையும் ஒரு கபில நிறக் குதிரையையும்
மினுமினுக்கும் ஒடைமீது வண்டியை ஓட்டுவேன்; ஏனெனில் என் உண்மைக் காதலி தொலைவில் இருக்கிறாள்.

பாட்டுக்கு அடிமைப்பட்ட ஐவான் லாரியோனிச் புன்னகை புரிந்தான். தனது மூக்குக் கண்ணாடியைச் சரிப்படுத்திக்கொண்டு அவன் அப்பால் சென்றான். ஒரு டஜன் குரல்கள் அந்தப் பாட்டைப் பாடின. ஒன்றாக லயித்த அவர்கள் வலிமைபடைத்த குரல்கள் அந்தத் தொழிற்சாலையை மேலே தூக்கி முன்னும் பின்னும் மிருதுவாக அசைப்பதைப் போன்றிருந்தது.

" பாதை குதிரைகளுக்கு நன்கு தெரியும்.
என் சீமாட்டி வசிக்கும் இடத்திற்கு....."

வேலை பயிலும் பாஷ்கா ஒடின்ஸோவ் முட்டையை அப்புறப்படுத்தும் வேலையை நிறுத்திவிட்டு, ஒவ்வொரு கையிலும் முட்டை ஒடுடன், இனிய குரலில் பாட ஆரம்பித்தான்.

ஓசையால் போதையேறிய அவர்கள் எல்லாவற்றையும் மறந்தனர். உணர்ச்சியால் பீடிக்கப்பட்ட அவர்கள் நன்றாக

மூச்சுவிட்டனர். பாட ஆரம்பித்துவிட்டால் தொழிற்சாலை யின் எஜமானனுக மாறிவிடும் கொஸாக்மீது அவர்கள் பார்வை பதிந்திருந்தது. அத்தகைய நேரங்களில் எல்லோரும் அவன் பக்கம் திரும்பி அவன் கை அசைவைப் பின்பற்றினர். பறக்க. இருப்பவனைப்போல் அவன் கைகளை வீசினன். "வாருங்கள்—எல்லாவற்றையும் அடித்துத் தகர்ப்போர்!" என்று பாட்டைத் திடீரென்று நிறுத்திவிட்டு, அவன் கட்டளை இட்டிருந்தால், அவர்கள் எல்லோரும்—கண்ணியமான மாஸ்டர்கள் உட்பட—ஐந்து நிமிடங்களில் அந்தத் தொழிற் சாலையை நொறுக்கியிருப்பார்கள்.

அவன் அபூர்வமாகத்தான் பாடுவான். ஆனல் அவன் பாட்டில் தவிர்க்க முடியாத சக்தியும், வெற்றியும் தொனித்தன. ஜனங்களைத் தட்டி எழுப்புவதில் அவன் வெற்றி பெற்றான். அவர்கள் எவ்வளவுதான் சோர்ந்திருந்தாலும் அவர்கள் ஒன்றுபட்டு நின்றதால், அவர்கள் சக்தி அபரிமிதமானதாக இருந்தது.

இந்தப் பாடகன்மீது எனக்குப் பொறுமை ஏற்பட்டது. ஜனங்கள்மீது அவன் செலுத்திய ஆதிக்கம் என் பொறுமையைத் தூண்டிவிட்டது. மரியாதையால் என் இதயம் நிறைந்தது; வேதனையடையும் அளவு நிறைந்தது. நான் அழ விரும்பினேன்.

"நான் உங்களை எவ்வளவு நேசிக்கிறேன்!" என்று பாடகர்களை நோக்கிக் கூவவேண்டும்போல் இருந்தது.

மஞ்சள் மேனி படைத்த, கூர்யரோகத்தால் பீடிக்கப் பட்ட டேவிடோவ் தன் வாயை அகலத் திறந்தான், புதிதாகப் பொரிக்கப்பட்ட அண்டங்காக்கையைப் போல்.

ஆனல் அந்தக் கொஸாக் மாத்திரம்தான் உல்லாசமான பாட்டுக்கள் பாடினன். "மக்கள் மனம் கடினமானது", "கானகத்தினூடே, சிறிய கானகத்தினூடே", "வீரம் செறிந்த தமது துருப்புகளைப் பார்வையிட நமது அலெக்ஸாண்டர் வந்தாரே" என்ற முதலாவது அலெக்ஸாண்டர் மணத்தைக் குறிக்கும் பாட்டுகள் போன்ற சோகம் ததும்பும் பாட்டுகளைச் சைத்ரிகர்கள் பாடினர். அபூர்வமாக எங்கள்

தொழிற்சாலையிலேயே தலைசிறந்த "முகம்" வரையும் சைத்ரிகன் ஸிக்காரெவ் யோசனைப்படி அவர்கள் கோயில் பாட்டுகளைப் பாடுவர். ஆனால் அந்த முயற்சி அபூர்வமாகத்தான் வெற்றிபெறும். தனக்கு மாத்திரம் புரியும் இசையை ஸிக்காரெவ் விரும்பினான்; மற்றவர்கள் பாடுவதை விமர்சனம் செய்தான்.

நாற்பத்தைந்து வயதான அவன் ஒற்றைநாடியாக இருந்தான். நாடோடியின் கூந்தலைப்போல் அவன் கூந்தல் சுருண்டு தொங்கிற்று. மீசையைப் போன்றிருந்தது, அடர்ந்து வளர்ந்த அவனது கரிய புருவம். அடர்ந்த அவன் தாடி அவன் அழகிய வடிவத்திற்கு அழகு செய்தது. அவன் அழகிய நாசிக்குக் கீழே கம்பீரமாக நின்றது, மீசை. அவன் புருவத்தால், அது அவசியமற்றதாகக் காணப்பட்டது. அவன் நீலநிறக் கண்கள் ஒன்றுக் கொன்று மாறுபட்டிருந்தன. வலது கண்ணைவிட இடது கண் பெரிதாக இருந்தது.

"பாஷ்கா!" என்று உரத்த குரலில் என் சகவேலை பயில்வோனை அவன் அழைத்தான். "'உன் நாமம் புகழுக் குரியது என்று பாடு.' கேளுங்கள், ஜனங்களா!"

கைகளைச் சட்டையில் துடைத்துக்கொண்டு பாஷ்கா பாட ஆரம்பித்தான்.

"பு-க-மூ-க்-கு-ரி-ய-து?....."

"கடவுளின் நாமம்?" என்று பல குரல்கள் ஒலித்தன. கிளர்ச்சியுடன் ஸிக்காரெவ் கூவினான்:

"தனித்த குரலில் பாடு, சிதானேவ்! குரலை எவ்வளவு தணிக்க முடியுமோ அவ்வளவு தணி!"

தகரடப்பாவில் அடிப்பதைப் போன்றிருந்தது, சிதானேவின் குரல்.

"க-ட-வு-ளி-ன் அடிமைகள்..."

"பூ! அப்படியல்ல! பூமி நடுங்குமாறும், கதவுகளும் ஜன்னல்களும் தானாகவே திறக்குமாறும் பாட நீங்கள் விரும்புகிறீர்கள்!"

கிளர்ச்சியால் எழுச்சி அடைந்தான் ஸிக்காரெவ். வியக்கத்தக்க அவன் புருவங்கள் எழுந்து தணித்தன.

அவன் குரல் கம்மிற்று. கண்ணுக்குத் தெரியாத கயிறை அவன் விரல்கள் பின்னின.

" கடவுளின் அடிமைகள்—தெரிகிறதா ?" என்று அர்த்த புஷ்டியுடன் அவன் கேட்டான். " நீங்கள் இதை ஊடுருவிப் பார்த்து உணர வேண்டும். கடவுள் புகழுக்குரியவர், அடிமைகளே ! இதை நீங்கள் உணரவில்லையா, நல்ல ஜனங்களா !"

" இது எங்களுக்குப் புரியவில்லை என்பது உனக்குத் தெரியும் " என்று சாமர்த்தியமாகக் கூறினன் சிதானேவ்.

" அப்படியானால், இதை விட்டுவிடுங்கள்."

புண்பட்ட ஸிக்காரெவ், தனது வேலையைச் செய்ய ஆரம்பித்தான். அவன் மிகச் சிறந்த மாஸ்டர். பைஸான் டைன் பாணியிலோ, பிரியாஷ்கி பாணியிலோ, அல்லது இத்தாலிய பாணியிலோ அவனுல் முகம் வரைய முடியும். லாரியோனிச் ஒரு விக்கிரம் தயாரித்துக் கொடுக்க இசையும் பொழுது, அவன் ஸிக்காரெவைக் கலந்தாலோசிப்பான். பியோட்ரோவ், ஸ்மோலென்ஸ்க், காஸான் கன்னிகள் போன்ற அற்புதம் விளைவிக்கும் விலை உயர்ந்த விக்கிரகங்கள் அவன் மேற்பார்வையில்தான் தயாரிக்கப்படும். ஆனல் மூலத்தை அவன் பரிசீலனை செய்யும்பொழுது, அவன் கடுமையாகக் குறைகூறுவான் :

" இந்த மூலத்துடன் அவர்கள் நம்மைப் பிணைத்து விட்டார்கள்—ஆம், மூலத்துடன் நம்மைப் பிணைத்தே விட்டார்கள் !"

தொழிற்சாலையில் அவன் ஸ்தானம் மிக உயர்ந்தது என்றலும், மற்றவர்களைவிட அவன் அடக்கமாக நடந்து கொண்டான். வேலைபயிலும் என்னிடமும், பாவெலிடமும் அவன் அன்பு செலுத்தினன். தன் கலையை எங்களுக்குக் கற்றுக்கொடுக்க அவன் மாத்திரம்தான் முயன்றன்.

அவனைப் புரிந்துகொள்வது சிரமமாக இருந்தது. மொத்தத்தில் அவன் சந்தோஷமாக இருக்கவில்லை. சில சமயங்களில் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் ஊமையைப் போல் வாரம் பூராவும் வேலை செய்வான். முதல் தரம் எங்

களைக் காணுவதைப்போல், ஆச்சரியம் கலந்த கண்களால் எங்களைப் பார்ப்பான். பாடுவதில் அவனுக்கு ஆசை இருந்தும், அத்தகைய சமயங்களில் அவன் மௌனம் சாதிப்பான். மற்றவர்கள் பாடுவது கேட்காத மாதிரி நடந்துகொள்வான். எல்லோரும் அவனைப் பார்த்து, அவனுக்குப் பின்னே நின்றுகொண்டு கண்சிமிட்டினர். சாய்ந்திருந்த விக்கிரகப் போர்டுமீது குனிந்துகொண்டு, ஒரு மூலையைத் தனது முழங்காலிலும், மற்றொன்றை மேஜையின் ஓரத்திலும் வைத்துக்கொண்டு, தனது முகத்தைப்போல் இருண்டதாகவும் அன்னியமானதாகவும் இருக்கும் முகத்தை வைத்துகொண்டு அவன் அங்கே உட்கார்ந்திருந்தான்.

திடீரென்று மிகத் தெளிவாக ஆனால் வேதனையடைந்த குரலில், அவன் சொல்லுவான் :

"பிரெட்டெச்சா என்பதன் பொருள் என்ன ? 'டெச்' என்றால் பழைய ஸ்லாவோனிய மொழிப்படி 'போக' என்று பொருள். 'பிரெட்' என்றால் 'முன்' என்று பொருள். ஆகவே 'பிரெட்டெச்சா' என்றால் 'முன்னே போகிறவன் ! அதாவது 'முன்னேடி' என்று பொருள்— அவ்வளவுதான்."

எல்லாரும் மௌனமாகச் சிரிப்பார்கள் ; திருட்டுத்தனமாக அவனைப் பார்ப்பார்கள். நூதனமான அவன் வார்த்தைகள் மௌனத்தைக் குலைத்துக்கொண்டு ஒலிக்கும்.

"ஆட்டுத் தோல் உடையில் அவனை வரையக் கூடாது, ஆனால் சிறகுடன்..."

"நீ யாருடன் பேசுகிறாய் ?" என்று யாராவது கேட்கத் துணிவார்கள்.

ஆனால் அவன் பதில் சொல்ல மாட்டான். அந்தக் கேள்வியை அவன் கேட்காமல் இருந்திருக்கலாம், அல்லது சொல்ல விரும்பாமல் இருந்திருக்கலாம். மீண்டும் மௌனத்தைப் பிளந்துகொண்டு அவன் வார்த்தைகள் ஒலிக்கும் :

"அவர்கள் வாழ்க்கையைப்பற்றி நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். யாருக்குத் தெரியும், அந்தப் புனித நூல்களைப்பற்றி ? நமக்கு என்ன தெரியும் ? வாழுகிறோம்,

சிறகின்றி... ஆத்மா எங்கே இருக்கிறது!—ஆத்மா? இதைத் தான் நான் கேட்கிறேன்! மூலம் நம்மிடம் இருக்கிறது; இது உண்மைதான். ஆனால் இதயமில்லை.''

உரத்து வெளியிடப்பட்ட இந்தச் சிந்தனைகளைக் கேட்டு சிதாலேவைத் தவிர மற்றவர்கள் புன்னகை புரிந்தனர். சாதாரணமாக யாராவது கிண்டலாகச் சொல்லுவார்கள் :

'' சனிக்கிழமை அவன் வயிறுமுட்டக் குடிப்பான்.''

இருபத்திரண்டு வயதான, தாடியும் புருவமும் இல்லாத களங்கமற்ற முகம்படைத்த நெட்டையான சிறுவன் சிதாலேவ் தக்கத்துடனும், கௌரவத்துடனும் மூலையைப் பார்ப்பான்.

பூர்த்திசெய்யப்பட்ட பியோடரோவ் கன்னியின் விக்கிரகத்தை மேஜைமீது வைத்துவிட்டுக் கிளர்ச்சி யடைந்தகுரலில் ஸிக்காரெவ் சொன்னது என் நினைவில் இருக்கிறது :

'' முடிந்துவிட்டது, பரிசுத்த மாதாவே! மக்கள் இதயத்திலிருந்து பிழிந்தெடுக்கப்பட்ட கண்ணீர் பாயும் அடித்தலம் அற்ற கிண்ணமே.....''

பிறகு யார் கோட்டையோ தோள்மீது போட்டுக் கொண்டு, அவன் மதுபான விடுதிக்குச் சென்றான். இளைஞர்கள் சிரித்தனர், சீழ்க்கை அடித்தனர். வயதானவர்கள் பொறுமையால் நெடுமூச்சுவிட்டனர். ஆனால் விக்கிரகத்திற்கு அருகில் சென்று, அதை நன்கு பரிசீலனை செய்துவிட்டு, சிதாலேவ் சொன்னான் :

'' ஆம், அவன் நிறையக் குடிப்பான். இந்தப் படத்தைப் பிரியநேர்ந்த வேதனையால் அவன் நிறையக் குடிப்பான். எல்லோருக்கும் இது புரியாது.''

சனிக்கிழமைதோறும் ஸிக்காரெவ் குடிப்பான். குடிப்பழக்கமுள்ள சாதாரண தொழிலாளி மிதமிஞ்சிக் குடிப்பதைப் போன்றதல்ல அவன் குடி, அது கீழ்க்கண்டவாறு ஆரம்பமாகும். காலையில் ஒரு குறிப்பெழுதி அவன் பாவெல் மூலம் அனுப்புவான். மத்தியான சாப்பாட்டு நேரத்திற்கு முன் அவன் லாரியோனிச்சிடம் சொல்லுவான் :

"இன்று நான் விடுதிக்குச் செல்வேன்."

"மீண்ட நேரமாகுமா ?"

"நல்லது —"

"செவ்வாய்க் கிழமைக்குமேல் தங்காதே !"

தனது வழுக்கைத் தலையை அசைப்பான் ஸிக்காரெவ். அவன் புருவங்கள் துடிக்கும்.

விடுதியிலிருந்து திரும்பியதும் கனவானைப்போல் அவன் ஆடை அணிவான். அழகிய ஷர்ட்டும், பட்டுக்கறைக் கோட்டும் அணிவான். அரைக்கோட்மீது ஒரு வெள்ளிச் சங்கிலியைப் பொருத்துவான். பிறகு என்னையும், பாவேலையும் கடிந்துவிட்டு அவன் போய்விடுவான் :

"சிரமப்பட்டு இன்று மாலை தொழிற்சாலையைச் சுத்தம் செய்யுங்கள். பெரிய மேஜைகளைக் கழுவிச் சுத்தம் செய்யுங்கள்."

திடீரென்று எல்லோருக்கும் விடுமுறைக் குஷி ஏற்பட்டுவிடும். சைத்ரிகர்கள் தத்தம் மேஜைகளை ஒழுங்குபடுத்திவிட்டு, விடுதிக்குச் சென்று அவசரமாக உணவருந்துவர். சாப்பிட்டுவிட்டு, பீர், ஓயின், உணவுப் பண்டங்களுடன் ஸிக்காரெவ் வருவான். அவனுக்குப் பின்னே சூர்ப்பனகையைப்போன்ற ஒரு பெண் வருவாள். அவள் உயரம் ஆறடி ஐந்து அங்குலம். எனவே, அங்கே இருந்த நாற்காலிகளும், முக்காலிகளும் பொம்மைகளைப்போல் தோன்றின. அவளுடன் ஒப்பிடும்பொழுது நெட்டையான சிதாரைவுகூடக் குழந்தையைப்போல் தோற்றமளித்தான். அவள் தேகம் கட்டுமஸ்தானது. அவளுடைய மார்பு தவடைவரை உயர்ந்து இருந்தது. அவள் அசைவு மெதுவானதாகவும், விகாரமானதாகவும் இருந்தது. அவளுக்கு, நாற்பது வயதுக்குமேல் இருப்பினும், குதிரையின் கண்களைப்போன்ற பெரிய கண்கள்படைத்த களையற்ற வட்டவதனம் புதிதாகவும், மிருதுவாகவும் இருந்தது. மலிவான பொம்மையைப்போல் தன் சிறிய அதரங்களில் அவள் வர்ணம் பூசிக்கொண்டிருந்தாள். அந்தப் பெண் புன்னகை புரிந்தாள் ; பசந்த, வெப்பமான

தனது கரத்தால் எல்லோருடனும் கைகுலுக்கினாள். அவசிய மற்ற முறையில் அவள் பேசினாள் :

" நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் ? இன்று குளிராக இருக்கிறது. உங்கள் அறையில் துர்நாற்றம் வீசுகிறது ! சாயத்தின் நாற்றம் இது. நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் ?"

அவளைப் பார்ப்பது இன்பகரமாக இருந்தது. பரந்து பாயும் நதியைப்போல் அவள் பலசாலியாக இருந்தாள். ஆனால் பேசும்பொழுது அவள் கசப்பளித்தாள். மந்தமான உபசார வார்த்தைகளை அவள் சொன்னாள். பேசு முன் கன்னத்தைப் பிதுக்குவாள்.

இளைஞர்கள் இளித்தார்கள் ; தணிந்த குரலில் பேசினார்கள் :

" அதோ, உனக்கு ஒரு பெண் இருக்கிறாள் !"

" சரியான கோயில் கோபுரம் !"

அதரங்களை இறுக மூடிக்கொண்டும், கைகளை மார்புக்குக் கீழே மடித்துக்கொண்டும், குளிர்காயும் அடுப்புக்கு அருகில் உட்கார்ந்து, எல்லோரையும் தனது குதிரைக் கண்களால் அவள் அன்பு சுரக்கப் பார்த்தாள்.

எல்லோரும் மரியாதையுடன் அவளை நடத்தினர். இளைஞர்கள் பயபக்தியுடன் அவளுக்கு முன்னே நின்றனர். அவள் பெரிய தேகத்தை ஆசையுடன் பார்ப்பான் ஒரு சிறுவன். ஆனால் எல்லாவற்றையும் ஆட்கொள்ளும் அவள் பார்வையை அவன் கண்கள் சந்தித்ததும், அவன் உணர்ச்சியடைந்து தலையைத் தொங்கவிட்டுக்கொள்வான். ஸிக்காசெவ்வும் அவளை மரியாதையுடன் நடத்தினான். " அண்டை வீட்டுக்காரி " என்று அவளை அழைத்தான். அவளுக்கு ஏதாவது கொடுக்கும்பொழுது தலைவணங்கினான்.

" எனக்காகச் சிரமப்படாதீர்கள் " என்று இனிமையாக அவள் சொல்லுவாள். " நீங்கள் உண்மையில் எவ்வளவு சிரமப்படுகிறீர்கள் !"

அவள் அவசரப்படவே இல்லை. முழங் கைக்குக் கீழே மாத்திரம்தான் அவள் கைகள் அசைந்தன. ஏனெனில் முழங்கைகளை அவள் பக்கவாட்டில் அழுத்திக்கொண்டிருந்

தாள். அவள் பெரிய தேகத்திலிருந்து புதிதாகச் சுட்ட சொட்டியின் மணம் வீசிற்று.

போதையிலிருந்த கிழவன் கோகலோவ் அவளை ஓயாது பாராட்டினான். வேதமோதும் பாதிரியின் பேச்சைக் கேட்பதைப்போல், பக்தியுடன் அவன் சொன்னதை அவள் கேட்டுக்கொண்டிருந்தாள். வார்த்தைகள் அவனுக்குக் கிடைக்கவில்லை யென்றால், அவள் அவனுக்கு உதவிபுரிந்தாள்.

" இளமையில் நான் அழகியாக இருக்கவில்லை. தாதியின் அணுப்பவத்தில் நான் அழகையும் பெற்றேன். எனக்கு மூப்பது வயதானதும் நான் சொம்பக் கவர்ச்சியுடையவளாக இருந்ததால், தனவான்கள்கூட என்மீது கவனம் செலுத்த முற்பட்டனர். ஒரு கனவான் ஒரு கோச்வண்டியும், ஒரு ஜதை....."

அப்பொழுது குடி வெறியிலிருந்த காபென்டியூக்கின், விரோதத்துடன் அவளைப் பார்த்துவிட்டு, முரட்டுத்தனமாகச் சொன்னான் :

" எதற்காக ?"

" என் காதலுக்காக " என்றாள் விருந்தாளி.

" காதல் " என்று கலக்கமடைந்த காபென்டியூக்கின் முனகினான். " காதல் என்றால் என்ன ?"

" உன்னைப்போன்ற அழகனுக்குக் காதலைப்பற்றித் தெரிந்திருக்க வேண்டும் " என்றாள் அவள்.

தொழிற்சாலை சிரிப்பால் அதிர்ந்தது. காபென்டியூக்கினிடம் தணிந்த குரலில் சிதானேவ் சொன்னான் :

" அவள் முட்டாள்—அல்லது இன்னும் மோசமானவள். இத்தகைய பெண்மீது நீ காதல்கொள்ள சொம்பச் சிரமப்பட வேண்டும் என்பது தெளிவு."

ஒயின் அவன் முகத்தை வெளிறச் செய்துவிட்டது ; பொட்டிலே வியர்வை அரும்பச் செய்தது ; சுறுசுறுப்பான அவன் கண்களை ஒளிபெறச் செய்தது. விகாரமான மூக்கை அசைத்துக்கொண்டும், விரல்களால் கண்களைத் துடைத்துக் கொண்டும் கிழவன் கோகலோவ் கேட்டான் :

"உனக்கு எத்தனை குழந்தைகள் ?"

"ஒரே குழந்தை."

ஒரு விளக்கு மேஜைக்கு மேலே தொங்கிற்று ; மற்றொன்று அடுப்புக்கு அப்பால் ஒரு மூலையில் தொங்கிற்று. அவைகளிலிருந்து வீசின மங்கலான வெளிச்சம், தொழிற் சாலையின் மூலைகளில் பல கனத்த நிழல்களைச் சிருஷ்டி செய்தது. அவைகளிலிருந்து முகமற்ற உருவங்கள் எட்டிப் பார்த்தன. கைகளும், முகங்களும் இருக்க வேண்டிய இடங்களில் காட்சியளித்த வெண் வட்டங்கள், கற்பனையைத் தூண்டிவிட்டன. ரிஷிகளின் தேகங்கள் மாயமாக மறைந்து, அங்கே வர்ணம் தீட்டப்பட்ட அங்கிகளே மாத்திரம் விட்டுச் சென்றதாகத் தோன்றிற்று. கண்ணுடிப் பந்துகள் உத்திரத்தில் தொங்கின. அங்கே அவை புகைப்படலத்திற்கு மத்தியில் நீல நிறத்தில் பிரகாசித்தன.

எல்லோரையும் உபசரித்துக்கொண்டு ஸிக்காசெவ் பதட்டத்துடன் மேஜையைச் சுற்றிச் சுற்றி வந்தான். அவன் வழுக்கைத் தலை மாறிமாறி ஒவ்வொருவர் பக்கம் சாய்ந்தது. அவன் விரல்கள் இடைவிடாது அசைந்தன. அவன் மெலிந்திருந்தான். வேலையைப் போன்றிருந்த அவன் மூக்கு மிகக் கூர்மையாகக் காட்சியளித்தது; விளக்குக்கு எதிரே அவன் நின்ற பொழுது அவன் கன்னத்தில் நீண்ட கரிய நிழல் விழுந்தது.

"திருப்தியாகும்வரை சாப்பிடுங்கள், குடியுங்கள், நண்பர்களா !" என்று ஒலிக்கும் குரலில் அவன் சொன்னன்.

எஜமானியைப் போன்று சாப்பாட்டுச் சமயத்தில் தலைமைதாங்கிய அந்தப் பெண் சொன்னுள்:

"அருமை நண்பர்களே ! அண்டை வீட்டுக்காரர்களே ! நீங்கள் ஏன் இவ்வளவு சிரமப்படுகிறீர்கள் ? எல்லோருக்கும் கைகள் இருக்கின்றன ; வயிறும் இருக்கிறது. தேவைக்கு அதிகமாக யாரும் உண்ண முடியாது."

"சந்தோஷமாக உண்ணுங்கள் நண்பர்களா" என்று கிளர்ச்சியுடன் சொன்னன் ஸிக்காசெவ். "நாமெல்லாம் கடவுளின் அடிமைகள், நண்பர்களா. 'தங்கள் பெயர் புகழ்ச்சிக்குரியது' என்று நாம் பாடலாம்."

பாட்டு தோல்வியில் முடிந்தது. அப்பொழுது உணவும், வோட்காவும் எல்லோரையும் போதையில் ஆழ்த்தியிருந்தன. கார்பென்டியூக்கின் ஒரு வாத்தியக் கருவியை எடுத்தான். அண்டங்காக்காய்ப்போல் கன்னங்கரேலென்றிருந்த, வாலிபன் விக்டர் ஸாலூட்டின் தம்பூரா வாசிக்க ஆரம்பித்தான். அது எழுப்பிய இசை மனோகரமாக இருந்தது.

"ரஷிய நடனம்!" என்று பணித்தான் ஸிக்காசெவ். "அண்டை வீட்டுக்காரியே, தயவு செய்!"

அவள் அறையின் மத்திக்குச் சென்று, மணிக்கூண்டைப் போல் அங்கே நின்றாள். பழுப்பு நிறப் பாவாடையும், மஞ்சள் ஜாக்கெட்டும் அவள் அணிந்திருந்தாள். தலையில் ஒரு சிவப்புக் கைக்குட்டை கட்டிக்கொண்டிருந்தாள்.

வாத்தியம் ஜீவன் நிறைந்த நாதத்தை எழுப்பிற்று. அதில் கட்டப்பட்டிருந்த சின்னஞ் சிறிய மணிகள் கிலுகிலுத்தன. தம்பூரா எழுப்பிய ஓசை அருவருப்பளித்தது. ஒரு பைத்தியக்காரன் அழுவதைப் போன்றும், நெடுமூச்சுவிடுவதைப் போன்றும், சுவரில் தலையை மோதிக்கொள்வதைப் போன்றும் இருந்தது, தம்பூராவின் ஓசை.

நடனமாட ஸிக்காசெவுக்குத் தெரியாது; அவன் கால்களை மாறி மாறி வைத்தான்; பளபளப்பாக இருந்த பூட்சின் பாகத்தால் தரையில் தாளம் போட்டான்; அல்லது சங்கீதத்திற்குப் பொருந்தாத முறையில் ஆடு தாவுவதைப் போல் தாவினான். அவன் கால்கள் அவனுக்குச் சொந்த மல்லாதவையைப் போன்றிருந்தன. வலையிலிருக்கும் வண்டைப்போன்றும், வலையிலிருக்கும் மீனைப் போன்றும் அவன் விகாரமாகத் தனது தேகத்தை வளைத்தான்; ஆனால் குடிவெறியிலிருந்தவர்கள் உட்பட எல்லோரும் அவன் வளைவதைக் கவனமாகப் பார்த்தனர்; அவன் முகத்தையும், கைகளையும் மாறி மாறிப் பார்த்தனர். ஸிக்காசெவின் தோற்றம் வியக்கத்தக்க முறையில் மாறிற்று. ஒரு விநாடி சாந்தமாகவும், நாணமுடையதாகவும் இருந்தது; மறு விநாடி பெருமையுடையதாக இருந்தது; மற்றொரு விநாடி கோபமுடையதாக இருந்தது. திடீரென்று ஏதோ அவனைத் திகைக்கவைக்கும்.

அவன் கூவுவான் ; கண்களை மூடிக்கொள்வான். கண்களை அவன் மீண்டு திறந்ததும், துக்கத்தால் ஆட்கொள்ளப் பட்டவனைப் போல் தோற்றமளிப்பான். முஷ்டியை உயர்த் திக்கொண்டு அந்தப் பெண் பக்கம் அவன் ஊர்ந்து செல் வான். திடீரென்று கைகளை அகல விரித்துக்கொண்டு, புருவத்தை உயர்த்திக்கொண்டு, அவள் முன்னே மண்டி யிட்டு, அவளைப் பார்த்து ஆர்வத்துடன் புன்னகை புரிவான். அவனைக் குனிந்து பார்த்துவிட்டு, புன்னகை புரிந்துகொண்டு நிதானமாக அவனை அவள் எச்சரிப்பாள் :

" நீ ரொம்பக் கனைத்துவிடுவாய் அண்டைவீட்டு நண்பா !"

தனது கண்களை மூட அவள் முயலுவாள். ஆனால் மூன்று காபெக் நாணய அளவுள்ள அவள் கண்கள் மூட மறுத்தன. இதனால் ஏற்பட்ட சுருக்குகள், அவள் தோற் றத்தை விகாரமாக்கின.

அவளுக்கும் நடனமாடத் தெரியாது. தனது பெரிய தேகத்தை அவள் அசைத்தாள் ; ஓசையின்றி அங்குமிங்கும் நகர்ந்தாள். தனது இடது கையில் வைத்திருந்த கைக்குட் டையை அவள் லாகவமாக வீசினாள் ; தனது வலது கையை இடுப்பில் ஊன்றிக்கொண்டிருந்தாள். ஒரு பெரிய ஜாடியைப் போன்று அப்பொழுது அவள் தோற்றமளித்தாள்.

இந்தச் சிலையைச் சுற்றிவந்தபொழுது ஸிக்காசெவ் முகத்தில் மாறுபட்ட உணர்ச்சிகள் தோன்றின. அவன் மாத்திரமல்ல, மாறுபட்ட பத்துப் பேர்கள் அங்கே நடன மாடுவதைப் போன்றிருந்தது. ஒருவன் கூச்சமுடையவனாக வும், அடக்கமுடையவனாகவும் இருந்தான் ; மற்றொருவன் ஆத்திரமூட்டக்கூடியவனாக இருந்தான் ; மூன்றாவது ஆசாமி ஆத்திரமூட்டப்பட்டவனாக இருந்தான் ; பெரிய, வெறுக் கத்தக்க அந்தப் பெண்ணிடமிருந்து தப்ப முயலும்பொழுது வாய்விட்டுக் கூவினான். காயமடைந்த நாயைப் போல் தேகத்தை வளைத்துக்கொண்டும், பற்களை வெளியே காட்டிக் கொண்டும் திடீரென்று வேறொருவன் தோன்றினான். விகார மான இந்த நடனம் எனக்குச் சலிப்பைக் கொடுத்தது ; சிப்

பாய்கள், சமையற்காரிகள், வண்ணுத்திகள், நாய்கள் புணர்வது போன்ற கெட்ட நினைவுகளே என் மனதில் தூண்டி விட்டது.

ஸிடோரோவின் சாந்தமான வார்த்தைகள் என் நினைவிற்கு வந்தன :

" இத்தகைய விஷயங்களைப் பற்றி எல்லோரும் பொய் சொல்லுகிறார்கள். அவர்கள் வெட்கப்படுகிறார்கள். ஏனெனில் யாரும் உண்மையில் காதல் கொள்ளவில்லை ; வேடிக்கைக்காக அவர்கள் இதைச் செய்கிறார்கள்."

" இத்ததைய விஷயங்களைப்பற்றி எல்லோரும் பொய் சொல்லுகிறார்கள் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. ராணி மார்கோட் நிலைமை என்ன ? நிச்சயமாக ஸிக்காசெவ் பொய் சொல்லவில்லை. சிதானேவ் ஒரு விபசாரியைக் காதலித்தான் என்பதும், வெட்கப்படத்தக்க வியாதியை அவள் அவனுக்குப் பரிசளித்தாள் என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் இதற்காக அவன் அவளை அடிக்கவில்லை ; அவன் தோழர்கள் உபதேசம் செய்ததைப் போல் அதற்குப் பதிலாக அவன் ஒரு அறையை அவளுக்காக வாடகைக்கு எடுத்து, அவளுக்குச் சிகிச்சை அளித்தான். அவளைப்பற்றி அன்பாகவும், உறுதியுடனும் அவன் பேசினான்.

ஓயாது புன்னகை புரிந்துகொண்டும், கையிலிருந்த கைக்குட்டையை வீசிக்கொண்டும் அந்தப் பெரிய பெண் அங்கே அசைந்துகொண் டிருந்தாள். அவளைச் சுற்றி ஸிக்காசெவ் அப்பொழுதும் குதித்துக்கொண் டிருந்தான். அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தபொழுது நான் நினைத்தேன் : கடவுளையே ஏமாற்றிய ஈவ், இந்தக் குதிரையைப் பிரதிபலிப்பாளா ? அவளை நான் வெறுக்க ஆரம்பித்தேன்.

முகமற்ற விக்கிரகங்கள் இருண்ட சுவர்களிலிருந்து உற்றுப்பார்த்தன ; இருண்ட இரவு ஜன்னல் கண்ணுடிகளை அழுத்தின ; புழுக்கமான தொழிற்சாலையில் விளக்குகள் மங்கலாக எரிந்தன. கால்களை மிதித்ததால் எழுந்த ஓசையையும், கூச்சலையும் பிளந்துகொண்டு குழாயிலிருந்து பக்கெட்டில் ஜலம் விழும் சத்தம் எனக்குக் கேட்டது.

புத்தகத்தில் சித்தரிக்கப்பட்ட வாழ்க்கைக்கும் இந்த வாழ்க்கைக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது ! எவ்வளவு பயங்கரமான மாறுதல் ! விரைவில் எல்லோரும் சலிப்படைந்தனர். வாத்தியக் கருவியை ஸாலாட்டினிடம் கொடுத்துவிட்டு, காபெண்டியூக்கின் கூவினன் :

" வாருங்கள், எல்லோரையும் புகை குடிக்கச் செய்யலாம் !"

வான்கா ஸிக்காஞெக்கைப் போல் அவன் நடனமாடினன். காற்றில் பறப்பதைப்போல் அவன் நடனமாடினன். பிறகு பாவெல் ஓடின்ஸோவும், சொரோக்கினும் வேகமாக நடனமாடினர். கூடியரோகத்தால் பீடிக்கப்பட்ட டேவிடோவ்கூட இறுமிக்கொண்டே நடனமாடினன்.

அவர்கள் நடனமாடினர், பாடினர், கூவினர். உல்லாசமாகப் பொழுதுபோக்க அவர்கள் விரும்பினர் ; தாக்குப் பிடிப்பதிலே அவர்கள் போட்டியிட்டனர்.

குடிபோதை தலைக்கேறிய ஸிதானெவ் ஒவ்வொருவரிடமும் சென்று கேட்டான் :

" இத்தகைய ஒரு பெண்ணை அவன் எப்படிக் காதலிக்க முடியும் ?"

தனது தோள்களைச் சுருக்கிக்கொண்டு லாரியோனிச் சொன்னன் :

" மற்ற பலரைவிட அவள் மோசமானவளல்ல. அதைப் பற்றி உனக்கென்ன ?"

ஆனல் எந்த ஜோடியைப்பற்றி அவர்கள் பேசினர்களோ அந்த ஜோடிகள் விரைவில் மறைந்துவிட்டனர்.

" அவர்கள் போய்விட்டார்களா ?" என்று துக்கம் நிறைந்த கண்களால் அந்த அறையைப் பரிசோதனை செய்துவிட்டு ஸிதானெவ் கேட்டான்.

அவர்கள் போய்விட்டார்கள். இரண்டு அல்லது மூன்று நாட்கள் கழித்துத்தான் ஸிக்காரெவ் தொழிற்சாலைக்கு வருவான் என்பது எனக்குத் தெரியும். விடுதிக்குச் சென்று திரும்பிய பிறகு இரண்டு வாரங்கள் மௌனமாக, கௌரவத்துடன், தனித்து அவன் வேலை செய்வான்.

ஸிதாஜ்ஞேவின் முகம் முதுமை எய்தி, அழகற்றிருந்தது. ஆனல் தெளிந்த, கருணை சுரக்கும் கண்கள் அவனுக்கு இருந்தன.

என்னிடம் அவன் பட்சமாக நடந்துகொண்டான். இதற்காகக் கவிதை நிறைந்த என் நோட் புத்தகத்திற்கு நான் வந்தனம் செலுத்த வேண்டும். அவன் கடவுளே நம்பவில்லை; லாரியோனிச்சைத் தவிர வேறு யார் கடவுளே நம்பினர், நேசித்தனர் என்பதை நிர்ணயிப்பது சிரமமானது. முதலாளியைப்பற்றித் தொழிலாளி கிண்டலாகப் பேசுவதைப்போல், கடவுளைப்பற்றி எல்லோரும் கிண்டலாகப் பேசினர். எனினும் உணவருந்த உட்காரும்பொழுது அவர்கள் சிலுவை அடையாளம் வரைந்துகொண்டனர். படுக்கும்பொழுது கடவுளைப் பிரார்த்தித்தனர். எல்லோரும் ஞாயிற்றுக்கிழமை சர்ச்சுக்குச் சென்றனர்.

ஆனல் ஸிதாஜ்ஞேவ் இவைகளில் எதையும் செய்யவில்லை. அவன் நாஸ்திகனுகக் கருதப்பட்டான்.

"கடவுள் இல்லை" என்று அவன் அழுத்தமாகக் கூறினன்.

"அப்படியானல், எல்லாம் எப்படித் தோன்றின ?"

"எனக்குத் தெரியாது."

ஒரு நாள் நான் அவனிடம் சொன்னேன் :

"கடவுள் இல்லாமல் இருக்க முடியுமா ?"

"உனக்குத் தெரியவில்லையா—உயரம்தான் கடவுள்" என்று கூறித் தலைக்கு மேலே தன் நீண்ட கையை நீட்டினன். பிறகு தரையைச் சுட்டிக்காட்டிக்கொண்டு அவன் சொன்னன் : "மனிதன் ஆழம். அப்படியல்லவா ? 'தன் உருவத்தைப்போல் கடவுள் மனிதனை சிருஷ்டி செய்தான்' என்று சொல்லப்படுகிறது. யார் உருவத்தைப் பார்த்து கோகலோவ் சிருஷ்டி செய்யப்பட்டான் ?"

இந்தக் கேள்வி என்னைக் குழப்பிவிட்டது. அவனுக்கு வயது அதிகமாய்விட்டாலும், கேவலமான, குடிகார கோகலோவ் மொம்பப் பாவம் செய்தவன். பாட்டியின் சகோதரி

யும், எர்மோக்கினும், வியாட்காவைச் சேர்ந்த சிப்பாயும் என் நினைவிற்கு வந்தனர். இவர்களில் கடவுளின் சாயலைக் காண முடியுமா ?

" ஜனங்கள் பன்றிகள் !" என்றான் ஸிதானேவ். ஆனால் உடனே அவன் என்னை சமாதானப்படுத்த முயன்றான் :

" கவலைப்படாதே, மாக்ஸிமிச். ஜனங்களில் நல்லவர்களும் இருக்கிறார்கள்—ஆம், நல்லவர்கள் இருக்கிறார்கள்."

அவனுடன் நான் சரஸமாகப் பழகினேன். தனக்குத் தெரியாத விஷயங்களை அவன் தயக்கமின்றி ஒத்துக்கொண்டான்.

" எனக்குத் தெரியாது " என்பான் அவன். " இதைப் பற்றி நான் சிந்திக்கவில்லை."

இது அசாதாரணமானது. நான் சந்தித்த எல்லோரும் தங்களுக்கு எல்லாம் தெரியு மென்று கருதினர். எந்த விஷயத்தைப்பற்றிப் பேசவும் அவர்கள் தயங்கவில்லை.

அழகிய, உணர்ச்சியைத் தட்டி எழுப்பும் கவிதைகளைத் தவிர, ஆவேச மூட்டும் பல பாக்களும் அவன் நோட் புத்தகத்தில் இருந்தன. புஷ்கினைப்பற்றி நான் அவனிடம் பேசிய பொழுது, அவன் "காவ்ரிலியாடாவை" சுட்டிக் காட்டினான்.

" புஷ்கின் ? ஆழ்ந்த கருத்துடையவனாக அவனை மதிக்கக் கூடாது. ஆனால் பெனிடிக்டோமீது விசேஷ கவனம் செலுத்த வேண்டும், மாக்ஸிமிச் !"

கண்களை மூடிக்கொண்டு, அவன் இனிமையாகப் பாடுவான் :

" அழகிய சீமாட்டியின் அற்புதமான மார்பைப் பார்..."

மூன்று வரிகளை இன்பம் கலந்த பெருமையுடன் அவன் அழுத்தமாகப் பாடுவான் :

அவனுடைய அந்தரங்க இதயத்தைக் காண, கழுகின் கூர்மையான கண்ணாலும் முடியாது, வேறு எதாலும் அதைத் தொடக்கவும் முடியாது.

" புரிகிறதா ?"

அவனுக்கு இவ்வளவு இன்பம் அளித்த விஷயம் எனக்குப் புரியவில்லை என்பதை ஒப்புக்கொள்ள நான் வெட்கினேன்.

14

தொழிற்சாலையில் என் வேலை அவ்வளவு சிரமமான தல்ல. காலையில் மற்றவர்கள் எழுந்திருக்கு முன் குளிர் காயும் அடுப்புக்குத் தீமூட்ட வேண்டும். குசினியில் சைத் ரிகர்கள் தேநீர் குடிக்கும்பொழுது நானும்,பாவெலும் அறை களைச் சுத்தம் செய்ய வேண்டும்; வர்ணத்தைக் கலக்க முட் டையிலுள்ள மஞ்சட் கருவை தனியே எடுக்க வேண்டும். அதன் பிறகு நான் மார்க்கெட்டுக்குச் செல்ல வேண்டும். மாலையில் நான் சாயம் கலக்க வேண்டும்; மாஸ்டர்கள் வேலை செய்வதைக் "கவனிக்க" வேண்டும். முதலில் மிகச் சிரத் தையுடன் நான் "கவனித்தேன்." ஆனால் இவர்களில் பலர் தங்கள் வேலையை விரும்பவில்லை என்பதையும், சலிப்பால் அவர்கள் வருந்தினர் என்பதையும் நான் விரைவில் உணர்ந் தேன்.

வேறு வேலை இல்லாததால், கப்பல் வாழ்க்கையை வர் ணிப்பதிலும், நான் புத்தகங்களில் படித்த கதைகளைச் சொல்வதிலும் மாலைப்பொழுதைக் கழித்தேன். படிப்பவன், கதை சொல்லுகிறவன் என்ற ஸ்தானத்தை எனக்குத் தெரி யாமலேயே நான் தொழிற்சாலையில் பெற்றேன்.

எனக்குத் தெரிந்தவைகளும், நான் கண்டவைகளும் இவர்களில் யாரும் காணவும், அறியவும் இல்லை என்பதை நான் விரைவில் உணர்ந்தேன். பிள்ளைப் பிராயத்திலேயே இவர்களில் பலர் தொழில் என்னும் கூண்டுக்குள் அடைபட் டனர். அன்றிலிருந்து அவர்கள் இந்தக் கூண்டிலேயே அடை பட்டுக் கிடக்கின்றனர். தொழிற்சாலையில் வேலை செய்தவர் களில் ஸிக்காலெவ் மாத்திரம்தான் மாஸ்கோவுக்குச் சென் றிருக்கிறான். இதைப்பற்றி அவன் பெருமிதத்துடன் பேசு வான்.

"கண்ணீரால் மாஸ்கோவில் காலம் தள்ள முடியாது. அங்கே விழிப்புடன் இருக்க வேண்டும்!"

மற்றவர்கள் ஷ்யா, அல்லது விளாடிமிருக்கு அப்பால் சென்றதில்லை. காஸாஃபைப்பற்றிப் பிரஸ்தாபித்தால், அவர்கள் என்னிடம் கேட்பார்கள் :

"அங்கே ரொம்ப ரஷியர்கள் இருக்கிறார்களா? அங்கே சர்ச்சுகள் இருக்கின்றனவா?"

பிரேம் என்றால் ஸைபீரியா என்று அவர்கள் நினைத்தார்கள்; ஊரல்சுக்கு அப்பால் ஸைபீரியா இருக்கிறது என்பதை அவர்களால் நம்ப முடியவில்லை.

"ஊரல்ஸ் மீனை, காஸ்பியன் கடலிலிருந்துகொண்டு வரவில்லையா? ஊரல்ஸ் அந்தக் கடலில் இருக்கிறது என்பது இதன் பொருள்."

இங்கிலாந்து மகா சமுத்திரத்திற்கு அப்பால் இருக்கிறது என்றும், கலாகா பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்தவன் போனபார்ட் என்றும் அவர்கள் சொன்னபொழுது அவர்கள் என்னைக் கேலிசெய்ய முயலுகிறார்கள் என்று நான் கருதினேன். நான் கண்ணால் கண்டவைகளை அவர்களிடம் சொன்னபொழுது, நான் சொன்னவைகளை அவர்கள் நம்பவில்லை. ஆனால் சிக்கலான அமைப்புடைய மயிர்க்கூச்செடுக்கும் கதைகளைக் கேட்க அவர்கள் பெரிதும் விரும்பினர். முதியவர்கள்கூட உண்மையைவிடக் கட்டுக்கதையை அதிகம் விரும்பினர். நம்பமுடியாத, கற்பனைக் கதைகளை அவர்கள் மிகக் கவனமாகக் கேட்பதை நான் உணர்ந்தேன். பொதுவாக யதார்த்தத்தில் அவர்கள் கவனம் செலுத்தவில்லை. அவர்கள் அனைவரும் எதிர்காலத்தில் ஆவல் காட்டினர்; நிகழ் காலத்தின் விகாரத்தையும், வறுமையையும் துடைக்க விரும்பினர்.

உண்மைக்கும் கற்பனைக்கும் இடையே நிலவிய கூர்மையான முரண்பாடை நான் ஏற்கெனவே உணர்ந்திருந்ததால், ஜனங்களின் இந்தப் போக்கு எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. எனக்கு முன்னே இதோ இருக்கிறார்கள், உண்மையான ஜனங்கள். ஆனால் புத்தகங்களில் படித்தவர்களுக்கும் இவர்களுக்கும் எந்த விதமான சம்பந்த

மும் இல்லை. ஸ்மூரிகளோ, சூளைகாப்போன் யாக்கோவ்களோ, அலெக்ஸாண்டர்களோ, லிக்காரெவ்களோ, நடால்யாவைப் போன்ற வண்ணத்திகளோ காணப்படவில்லை.

டேவிடோவின் பெட்டியில் இற்றுப்போன கோலிட்ஸின்ஸ்கியின் கதைப் புத்தகமும், புல்காரினுடைய ''ஐவான் விஷ்கின்'' என்னும் நூலும், பாரன் பிராம்பியஸின் புத்தகமும் இருந்தன. இந்தப் புத்தகங்களை நான் சைத்ரீ கார்களுக்குப் படித்துக்காட்டினேன். இந்த நூல்களை அவர்கள் பெரிதும் விரும்பினர்.

'' ஓசையையும், சண்டையையும் நிறுத்துகிறது, புத்தகம் படிப்பது, இது நல்லதுதான் '' என்றான் லாரியோனிச்.

நான் புத்தகங்களைத் தேடி அலைந்தேன். கிடைத்த புத்தகங்களைத் தொழிலாளர்களுக்குப் படித்தேன். மறக்க முடியாத மாலை நேரங்கள் அவை. தொழிற்சாலையிலே நடுங்கி அமைதி குடிகொண்டிருந்தது. மேஜைக்கு முன்னே குனிந்து வேலைசெய்துகொண்டிருந்த தொழிலாளர்களின் வழுக்கைத் தலையிலே கதிர்கள் வீசிக்கொண்டிருந்தது, வெண் நட்சத்திரங்களைப் போல் மேலே தொங்கிய கண்ணாடிப் பந்துகள். சிந்தனை தோய்ந்த, சாந்தமான முகங்களை நான் கண்டேன். ஆசிரியரையோ, கதாநாயகனையோ புகழ்ந்து யாராவது ஒரு வார்த்தை சொல்லுவர். இந்தக் கோழைத்தனம் படைத்த, உன்னிப்பாகக் கவனிக்கும் தொழிலாளிகள், பகல் நேரத்துத் தொழிலாளர்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருந்தனர். இத்தகைய நேரங்களில் நான் அவர்களைப் பெரிதும் நேசித்தேன். அவர்களும் என்னுடன் நெருங்கினர். என் இடத்தை நான் கண்டுபிடித்துவிட்டதாக உணர்ந்தேன்.

'' வசந்த காலத்தில் ஜன்னல்களைத் திறந்து சுத்தமான காற்றை முதன் முதல் உள்ளே வீசவிடுவதைப் போன்றது, புத்தகம் படிப்பது '' என்று ஒரு நாள் ஸிதானேவ் சொன்னான்.

வாசகசாலையில் அங்கத்தினராகாமல்—இதைப்பற்றி நாங்கள் நினைக்கவேயில்லை — புத்தகங்களைச் சேகரிப்பது சிரமமாக இருந்தது. பிச்சைக்காரனைப்போல், எல்லோரிடமும் கெஞ்சி

நான் புத்தகங்கள் வாங்கினேன். ஒரு நாள் நெருப்பணைக்கும் குழுவின் தலைவர் லெர்மோன்டோவ் புத்தகத்தை எனக்குக் கொடுத்தார். கவிதையின் சக்தியை இந்த நூல் எனக்குப் படம் பிடித்துக் காட்டிற்று; ஜனங்கள்மீது கவிதை செலுத்தும் அபரிமிதமான ஆதிக்கத்தையும் இது தெளிவுபடுத்திற்று.

"அரக்கன்" என்னும் நூலை நான் படிக்க ஆரம்பித்ததும் முதலில் புத்தகத்தையும் பிறகு என் முகத்தையும் பார்த்துவிட்டு, பிரஷைக் கீழே வைத்துவிட்டு, முழங்கால்களை கட்டிக்கொண்டு, புன்னகையுடன் தனது நாற்காலியில் முன்னும் பின்னும் ஸிதானேவ் அசைந்தாடியது என் நினைவில் இருக்கிறது.

"சும்மா இருங்கள், சகோதரர்களா" என்று கூறிவிட்டு, தனது வேலையைவிட்டுவிட்டு, நான் படித்துக்கொண்டிருந்த இடத்திற்கு வந்தான், லாரியோனிச்; கவிதை என்னை உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்திற்று. என் தொண்டை இடறிற்று. கண்களில் கண்ணீர் பெருகியதால், எழுத்தைக் காண்பது சிரமமாக இருந்தது. ஆனால் அறையில் ஜனங்கள் மௌனமாகவும், ஜாக்கிரதையும் நடமாடியது என் உணர்ச்சியை மேலும் தூண்டிவிட்டது; வலிமைபடைத்த ஒரு காந்தசக்தி இந்த ஜனங்களை என் பக்கம் இழுப்பதைப்போல். என்னைச் சுற்றி யிருந்தவை விங்குவதைப் போன்றிருந்தது, முதல் பாகத்தை நான் படித்து முடித்ததும். எல்லாப் பெயின்டர்களும் மேஜையை நெருங்கி நிற்பதை நான் கண்டேன். ஒருவர் தோளை மற்றொருவர் பற்றிக்கொண்டு, புன்னகையுடன் அவர்கள் நின்றனர்.

"படி, தொடர்ந்து படி" என்று கூறிக்கொண்டு, என் தலையைப் புத்தகத்தை நோக்கித் தள்ளினான், ஸிக்காலெவ்.

நான் படித்து முடித்ததும், புத்தகத்தை என்னிடமிருந்து வாங்கி, அதன் தலைப்பைப் படித்துவிட்டு, தன் அக்குளில் வைத்துக்கொண்டான். பிறகு அவன் சொன்னான்:

"இதை நீ மீண்டும் படிக்க வேண்டும், நாளைய தினம். புத்தகத்தை நான் பத்திரமாக வைத்துக்கொள்கிறேன்.

அவன் அப்பால் சென்றான். லெர்மென்டோவை மேஜை டிராயரில் வைத்துப் பூட்டிவிட்டு, அவன் வேலைக்குச் சென்றான். தொழிற்சாலையிலே அமைதி குடிகொண்டது. மௌனமாக ஜனங்கள் வேலைசெய்ய ஆரம்பித்தனர். ஜன்னல் பக்கம் சென்று, ஜன்னல் கண்ணாடியில் தலையை அழுத்திக்கொண்டு அசைவற்று நின்றான், லிதானேவ். தனது பிரஷை மீண்டும் கீழே வைத்துவிட்டு, கடுமையாகச் சொன்னான், லிக்காசெவ் :

" இதைத்தான் நான் வாழ்க்கை என்கிறேன், கடவுளின் அடிமைகளா ? இதுதான் வாழ்க்கை !"

தன் தோள்களைச் சுருக்கிக்கொண்டு, தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு அவன் தொடர்ந்தான் :

" அரக்கன் சித்திரத்தைக்கூட என்னால் வரைய முடியும். கரிய, கனத்த தேகம் ; நெருப்பு வர்ணச் சிறகுகள் ; நீல முகம், பாதம் கைகள், நிலவொளியிலே பனியைப்போல்."

இரவுச் சாப்பாட்டு நேரம்வரையில் அவன் முக்காலியில் கொண்டு அமைதியின்றி அவதிப்பட்டான். விரல்களால் மேஜைமீது தாளம் போட்டுக்கொண்டு அரக்கனைப் பற்றியும், ஈவைப்பற்றியும், பெண்களைப் பற்றியும், சொர்க்கத்தைப் பற்றியும், பாவம் செய்த ரிஷிகளைப்பற்றியும் அவன் முணகிக்கொண்டிருந்தான்.

" இவைக ளெல்லாம் உண்மை !" என்று அவன் அழுத்தமாகச் சொன்னான். " பாவிகளான பெண்களுடன் கலந்து ரிஷிகள் பாவம் செய்தார்கள் என்றால், பரிசுத்தமான ஆத்மாவைக் கவருவதில் அரக்கன் நிச்சயமாகப் பெருமைப் படுவான் !"

யாரும் பதில் சொல்லவில்லை. என்னைப்போல் எல்லோரும் பேச விரும்பாம லிருக்கலாம். விருப்பின்றி அவர்கள் வேலைசெய்தனர். அவர்கள் சதா கடிகாரத்தைப் பார்த்தனர். ஒன்பது மணி அடித்ததும் எல்லோரும் ஏக காலத்தில் வேலையை நிறுத்தினர்.

லிதானேவும், லிக்காசெவும் கொல்லைக்குச் சென்றனர். நானும் அங்கே சென்றேன். அங்கே நட்சத்திரங்களை உற்றுப் பார்த்துக்கொண்டு லிதானேவ் சொன்னான் :

நட்சத்திரக் கூட்டங்களிடையே செல்லுகின்ற கரவான்கள்.

"இத்தகைய அழகிய வார்த்தைகளைக் கண்டுபிடித்தார்களே!"

"எந்த வார்த்தையும் எனக்கு ஞாபகமில்லை" என்று குளிரில் நடுங்கிக்கொண்டு ஸிக்காசெவ் சொன்னான். "ஒன்றும் எனக்கு ஞாபகமில்லை; ஆனால் அனைத்தையும் நான் காண்கிறேன். அரக்கன்மீது இரக்கம் ஏற்படுமாறு ஒரு மனிதன் செய்வது அற்புதமான விஷயம். ஏனெனில் நீ அவன் மீது இரக்கம் கொள்ளுகிறாய், இல்லையா?"

"ஆம்!" என்றான் ஸிதானேவ்.

"மனிதனுக இருப்பது என்ன என்பதைத் தெரிந்து கொள்!" என்று கூவினான் ஸிக்காசெவ்.

வாசற்படிக்கு வந்ததும் அவன் என்னை எச்சரித்தான்.

"அந்தப் புத்தகத்தைப் பற்றித் தொழிற்சாலையில் யாரிடமும் சொல்லாதே, மாக்ஸிமிச். அது நிச்சயமாக தடை செய்யப்பட்ட புத்தகமாக இருக்கும்."

நான் புளகாங்கித மடைந்தேன். பாவமன்னிப்புப் பெறும்பொழுது பாதிரி கேட்ட புத்தகம் இப்படிப்பட்ட புத்தகம்தானே!

சாதாரணமாகச் சாப்பிடும்பொழுது எழும் கூச்சல் அன்று எழவில்லை. மிகப் பெரிய சம்பவம் ஏதோ நிகழ்ந்திருப்பதாகவும், அதைப்பற்றிச் சிந்திக்க எல்லோரும் விரும்புவதாகவும் தோன்றிற்று. சாப்பிட்டுவிட்டு எல்லோரும் படுக்கச் சென்றதும், புத்தகத்தை வெளியில் எடுத்து, ஸிக்காசெவ் சொன்னான்:

"இதோ, இதை மீண்டும் படி. மெதுவாக, அவசரமின்றிப் படி."

படுக்கையிலிருந்து சந்தடியின்றி எழுந்து, பலர் மேஜைக்கு அருகில் வந்தனர். கால்களை நீட்டிக்கொண்டு மேஜையைச் சுற்றி உட்கார்ந்தனர்.

நான் மீண்டு மொருதரம் படித்து முடித்ததும், விரல்களால் மேஜைமீது தட்டிக்கொண்டு ஸிக்காசெவ் சொன்னான்:

"இதுதான் வாழ்க்கை! அரக்கன்—அரக்கன்—இது எப்படி நடந்தது, சகோதரா?"

தன்னை மகிழ்ச்சியடையுமாறு செய்த சில வரிகளைப் படிப்பதற்காக என் தோள்மீது தலையை நீட்டினான் ஸிதானேவ்.

"இவைகளை என் நோட் புத்தகத்தில் குறித்துக்கொள்கிறேன்."

ஸிக்காரெவ் எழுந்திருந்து, புத்தகத்தை தனது மேஜைக்கு எடுத்துச்சென்றான். ஆனால் குபீரென்று நின்று கிளர்ச்சியும், வேதனையும் கலந்த குரலில் சொன்னான்:

"நாம் குருட்டு நாய்க்குட்டியைப்போல் வாழுகிறோம். எதற்காக? யாருக்கும் தெரியாது. கடவுளோ, அரக்கனோ நம்மை விரும்பவில்லை. நம்மைக் கடவுளின் அடிமைகள் என்று அழைக்கிறாயா? வேலை அடிமைத்தனம். ஆனால் கடவுளே அசுரனுடனும் பேசினார். மோஸஸுடனும் பேசினார். ஆனால் நாம் யாரைச் சேர்ந்தவர்கள்?"

புத்தகத்தை மேஜையில் வைத்துப் பூட்டிவிட்டு அவன் உடைகள் அணிந்துகொண்டான். அவன் ஸிதானேவைக் கேட்டான்:

"நீ மதுபானக் கடைக்கு வருகிறாயா?"

"நான் என் காதலியைப் பார்க்கப் போகிறேன்" என்று சாந்தமாகச் சொன்னான், ஸிதானேவ்.

அவர்கள் போனதும் பாவெல் ஒடின்ஸோவுக்கு அருகில் நான் தரையில் படுத்தேன். சிறிது நேரம் அவன் மூக்கை உறிஞ்சினான். திடீரென்று அவன் அழ ஆரம்பித்தான்.

"என்ன சங்கதி?"

"அவர்களுக்காக நான் வருந்துகிறேன்" என்றான் அவன். "கடந்த நான்கு வருடங்களாக அவர்களுடன் நான் வசிக்கிறேன். அவர்கள் எல்லோரையும் எனக்குத் தெரியும்."

அவர்களுக்காக நானும் இரங்கினேன். அவர்களிலே குடிகொண்டிருக்கும் நல்லவைகளையும், கருணையையும் பற்றி

நாங்கள் நீண்ட நேரம் விழித்திருந்து தணிந்த குரலில் விவாதித்தோம். எங்கள் குழந்தை அனுதாபத்தைப் பெற்ற பல குணங்களை அவர்களில் நாங்கள் கண்டுபிடித்தோம்.

நானும் பாவெல் ஒடின்ஸோவும் நெருங்கிய நண்பர்களானோம். பிற்காலத்தில் அவன் முதல்தரமான மாஸ்டரானான். ஆனால் நீண்ட காலம் இந்தத் தொழிலை அவன் செய்யவில்லை. முப்பது வயதாகும்பொழுது அவன் பெரிய குடிகாரனானான். சில காலத்திற்குப் பிறகு மெலிந்திருந்த அவனை நான் மாஸ்கோ கிங்ரோவ் மார்க்கெட்டில் சந்தித்தேன். அதன் பிறகு அவன் டைபஸ் நோய்க்கு இரையானதாக நான் கேள்விப்பட்டேன். என் வாழ்நாளில் எவ்வளவு நல்லவர்கள் எந்தவிதமான நோக்கமுமின்றி மடிந்தார்கள் என்பதை எண்ணிப் பார்ப்பதே துன்பகரமாக இருந்தது. ஜனங்கள் எங்கும் தேய்ந்து மடிந்தார்கள். இது இயற்கைதான். ஆனால் ரஷியாவில் ஜனங்கள் தேய்ந்து மடிந்ததைப் போல் வேறெங்கும் தேய்ந்து மடியவில்லை.....

அன்று என்னிடம் இரண்டு வயது மூத்தவன் பாவெல். அவன் சுறுசுறுப்பானவன் ; சாமர்த்தியசாலி ; நேர்மையானவன். இதைத் தவிர கலைத்திறனும் அவனுக்கு இருந்தது. பூனைகள், நாய்கள், பறவைகள் ஆகியவைகளின் சித்திரங்களை அவன் அழகாக வரைந்தான். பெயின்டர்களைக் குறிக்கும் கேலிச் சித்திரங்களும் அவன் வரைந்தான். ஒரு காலில் நிற்கும் சோகம் நிறைந்த மரங்கொத்தியாக ஸிதானேவை அவன் சித்தரித்தான். ஒடிந்த சீப்பும், வழுக்கைத் தலையும் படைத்த ஒரு கூடாக ஸிக்காரெவ்வைச் சித்தரித்தான். நோயாளியான டேவிடோவ் ஒரு பீடமாகக் காட்சியளித்தான். நீண்ட காதுகளும், விகாரமான மூக்கும், ஆறு நகங்கள் படைத்த சிறிய கால்களும் படைத்த வெளவாலாகக் கிழவன் கொகோலெவ்வைச் சித்தரித்தான். அவன் வட்ட கரிய முகத்தை அவன் கண்களின் வெண்வட்டங்கள் எட்டிப் பார்த்தன. கண்ணின்மணி வெளியே தூருத்திக்கொண்டு, அவனுக்கு அயோக்கினின் தோற்றத்தை அளித்தது.

இந்தச் சித்திரங்களைக் கண்டு பெயின்டர்கள் ஆத்திரமடையவில்லை. ஆனால் கோகலோவின் சித்திரம் வெறுக்

கத்தக்கதாக இருந்ததால், அவர்கள் சைத்ரிகனிடம் சொன்னார்கள் :

" அதைக் கிழித்துவிடு. இல்லை யெனில் கிழவன் அதைக் கண்டால் உனக்குத் தீங்கு நேரும்."

இழிகுணம் படைத்த, குடிகாரனான அந்தக் கிழவன் தெய்வ பக்திபடைத்தவன் ; விஷமக்காரன் ; எஜமானியின் மருமகளை தனக்குக் கலியாணம் செய்துகொடுக்க முடிவு செய்யப்பட்டிருந்ததால், தானே அந்த ஸ்தாபனத்தின் எஜமானன் என்று கருதிய அந்தக் கடைச் சிப்பந்தியிடம் கோள் சொல்லுகிறவன். எல்லோரும் அவனுக்குப் பயந்தனர்— வெறுத்தனர். எனவே கோகலோவுக்கு அவர்கள் பயந்தனர்.

ஒரு நிமிடம்கூட அமைதியின்றி கோகலோவை வாட்டுவதுதான் தனது லட்சியம் என்று கருதுமாறு பாவெல் அவனை இடைவிடாது துன்புறுத்தினான். என்னில் அவன் ஒரு தோழனை இந்த முயற்சிக்குப் பெற்றான். எங்கள் முயற்சி எல்லோர் கவனத்தையும் கவர்ந்தது. அது முரட்டுத்தனமானதாகவும், குரூரமானதாகவும் இருந்தது. பெயிண்டர்கள் சொன்னார்கள் :

" உஷாராக இருங்கள், சிறுவர்களா ! குஸ்மா என்னும் வண்டு உங்களைக் கொட்டுவான் !" கடைச்சிப்பந்திக்குத் தொழிலாளர்கள் சூட்டிய பெயர் "குஸ்மா என்னும் வண்டு."

ஆனால் இந்த எச்சரிக்கைகளை நாங்கள் சட்டை செய்ய வில்லை. அவன் தூங்கும்பொழுது அவன் முகத்திற்கு நாங்கள் அடிக்கடி வர்ணம் பூசினோம். குடிபோதையில் ஒரு நாள் அவன் படுத்திருந்தபொழுது, பஞ்சு போன்ற அவன் மூக்கில் நாங்கள் பொன்முலாம் பூசினோம் ; மூன்று நாட்கள் வரையில் ரோமக் குழிகளிலிருந்து பொன்முலாமை அவனால் எடுக்க முடியவில்லை. கிழவனை நாங்கள் ஆத்திர மூட்டியபொழுது, கப்பலும், வியாட்காவைச் சேர்ந்த சிப்பாயும் என் நினைவிற்கு வந்தனர். என் மனச்சாட்சி என்னைத் துன்புறுத்திற்று. வயதாயிருந்தாலும் கோகலோவ் எங்களை மிஞ்சினான். பல முறை அவன் எங்களைப் பிடித்து, நையப் புடைத்தான். எங்களை நையப் புடைத்துவிட்டு எஜமானியிடம் அவன் கோள் சொல்லுவான்.

சாதாரணமாக அவளும் குடி போதையில் இருப்பாள். இதனால் அவள் சதா உல்லாசமாக இருந்தாள். எங்களைப் பயமுறுத்துவதற்காக அவள் மேஜையைத் தட்டுவாள். பிறகு அவள் கூச்சலிடுவாள் :

" மீண்டும் விஷமம் செய்ய ஆரம்பித்துவிட்டீர்களா, பிசாசுகளா ! அவன் கிழவன். நீங்கள் அவனுக்கு மரியாதை செலுத்த வேண்டும். அவன் ஒயின் கோப்பையில் மையை ஊற்றியது யார் ?"

" நாங்கள் !"

எஜமானி விழித்தாள்.

" கடவுளே, குற்றத்தை ஒப்புக்கொள்ளுகிறார்கள், சிறிய பிசாசுகள் ! கிழவர்கள் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் என்பது உனக்குத் தெரியாதா ?"

அவள் எங்களை அடித்து விரட்டினாள். அன்று மாலை கடைச் சிப்பந்தியிடம் அவள் குறை சொன்னாள்.

" இது எப்படி நடந்தது ?" என்று அவன் கடுமையாகக் கேட்டான். " நீ புத்தகம் படிக்கிறாய் ; பைபிள்கூடப் படிக்கிறாய். எனினும் நீ சதா விஷமம் செய்துகொண்டிருக்கிறாய். உஷாராயிரு, சகோதரா !"

எஜமானி தனித்த ஆத்மா. அவள் தோற்றம் பரிதாபகரமாக இருந்தது. சில சமயங்களில் மிதமிஞ்சிக் குடித்துவிட்டு, ஜன்னல் அருகில் உட்கார்ந்துகொண்டு அவள் பாடுவாள் :

யாரும் எனது துக்கத்தை எண்ணிக் கவலைப்படவில்லை,
யாரும் எனது துக்கத்தை அறியவில்லை,
யாரும் என்னைக் காதலிக்கவில்லை, யாரும் என்மீது இரங்கவில்லை,
யாரும் எனக்கு ஆறுதல் சொல்லவில்லை.

வயதால் தளர்ந்த குரலில் " ஊ.....! என்று அவள் ஓலமிடுவாள்.

ஒரு நாள் கையில் பால் ஜாடியுடன் அவள் கீழே இறங்குவதை நான் கண்டேன். திடீரென்று கால் தள்ளாடி அவள் விழுந்தாள். தாவித் தாவி அவள் படிக்கட்டுகளில்

இறங்கினாள். விரிந்திருந்த கைகளில் பால் ஜாடியைக் கெட்டியாகப் பிடித்திருந்தாள். அவள் ஆடையில் பால் தெறித்தது.

"பார், பாலை எப்படிக் கொட்டுகிறாய், பிசாசே!"

அவள் தடிச்சியல்ல; ஆனால் கொழுகொழுவென்றிருந்தாள், எலியைப்பிடிக்க சக்தியற்ற, பழங்கதைகளை நினைத்துக் காலங்கழிக்கும் கிழட்டுப் பூனையைப்போல்.

"ஊம்" என்று நெடுமூச்சுவிடுவான் ஸிதானேவ். "ஒரு காலத்தில் இது சிறந்த கடையாகவும், சிறந்த தொழிற் சாலையாகவும் இருந்தது. சாமர்த்தியசாலி இதை நடத்தினான். ஆனால் இப்பொழுது எல்லாம் பாழ்பட்டுவிட்டன. உழைப்பின் பலன் குஸ்மா என்னும் அந்த வண்டின் மடியில் குவிகிறது. நாங்கள் எப்படி உழைத்தோம்! எல்லாம் அவனுக்காகத்தான் என்று தோன்றுகிறது. இந்த எண்ணம் மட்டும் போதும், மனதைக் குமட்ட வேலையை விட்டுவிட்டுக் கூரை மீதேறி வேனிற் காலம் பூராவும் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு படுத்திருக்கத் தோன்றுகிறது."

ஸிதானேவின் கருத்துக்கள் பாவெல் ஓடின்ஸோவை ஆட்கொண்டன. வயது வந்தவர்களைப்போல் சிகரெட் குடித்துக்கொண்டு, கடவுளைப்பற்றியும், குடியைப்பற்றியும், பெண்களைப்பற்றியும், உழைப்பின் பலனின்மையைப் பற்றியும் அவன் பேசுவான். சிலர் ஓயாது பொருள்களை உற்பத்தி செய்தனர்; வேறு சிலர் அந்தப் பொருள்களின் மதிப்பறியாது அவைகளை அழித்தனர்.

அத்தகைய சமயங்களில் கவர்ச்சிகரமான அவன் சிறிய முகம், சுருக்கு விழுந்து, முதுமையாகத் தோன்றும். தரையில் விரிக்கப்பட்ட படுக்கையில் முழங் கால்களை கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கும்பொழுது, குளிர்கால வானத்தில் பிரகாசிக்கும் நட்சத்திரங்களை ஜன்னல் கண்ணாடிகள் மூலம் பார்த்துக்கொண் டிருக்கும்பொழுது, பனியின் பளுவால் அழுத்தப்பட்ட கூரையைப் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது இத்தகைய சிந்தனைகள் அவன் மனதில் தோன்றும்.

தூக்கத்தில் பெயின்டர்கள் குறட்டை விட்டனர்; முணுமுணுத்தனர். கனவு கண்டு யாரோ உளறினான். மேலே படுத்திருந்த டேவிடோவ் எஞ்சியிருக்கும் உயிரை இருமித் தீர்த்துக்

கொண்டிருந்தான். ஒரு மூலையில் " கடவுளின் அடிமைகள்" காபென்டியூக்கின், ஸொரோக்கின், பெர்ஷின் ஆகியோர் தூக்கக் கலக்கத்திலும், குடிபோதையிலும் அருகருகே படுத்திருத்தனர். எண்ணெய், அழுகிய முட்டை, தரையிலிருந்த வெடிப்பில் தேங்கிக் கிடந்த கூளம் ஆகியவைகளிலிருந்து எழுந்த துர்நாற்றம் மூச்சுவிடுவதை அசாத்தியமாக்கிற்று.

" அவர்கள்மீது எனக்கு எவ்வளவு இரக்கம் ஏற்படுகிறது, கடவுளே !" என்று தணிந்த குரலில் சொன்னான் பாவெல்.

இந்த இரக்கத்தால் நானும் மேலும் மேலும் வேதனை அடைந்தேன். இந்த மனிதர்கள் நல்லவர்கள் என்பதை நாங்கள் இருவரும் தெரிந்துகொண்டோம் என்பதை நான் முன்னரே சொல்லிவிட்டேன். ஆனால் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை மோசமானது; அவர்களுக்குப் பொருந்தாதது; சகிக்க முடியாத அளவு மந்தமானது. லெந்து நோன்பு மணி பயங்கரமாக முழங்கியதும், வீடுகள், மாங்கள் முதலிய பூமியிலுள்ள அனைத்தையும் நடுநடுங்க வைத்து, ஓலமிட்டு அழச் செய்த பனிப் புயல் வீசியதும், ஈயத் திரையைப்போல் மந்த உணர்ச்சி தொழிற்சாலைமீது பரவிப் படர்ந்தது. அது பெயின்டர்களை மூச்சுத் திணற வைத்தது; அவர்கள் ஜீவனை அரித்தது; அவர்களை மதுபானக் கடைக்கோ, அல்லது வோட்காவைப்போல் துன்பத்தை மறக்கச் செய்த பெண்களுக்கோ துரத்திற்று.

இத்தகைய மாலை நேரங்களில் படிப்பு யாரையும் ஆகர்ஷிக்கவில்லை. எனவே, அவர்கள் கவனத்தைக் கவர நானும், பாவெலும் வேறு வழிகளைக் கையாண்டோம். எங்கள் முகங்களில் சாயம் பூசிக்கொண்டு, பொய் மீசையும், தாடியும் வைத்துக்கொண்டு ஹாஸ்ய நடிப்பில் ஈடுபட்டு, மந்த உணர்ச்சியை முறியடித்து, அவர்களைச் சிரிக்கவைக்க நாங்கள் பெரும் போர் நிகழ்த்தினோம். மகா பீட்டரை ஒரு சிப்பாய் காத்த கட்டுக்கதை எனக்கு ஞாபகமிருந்தது. அந்தக் கதைக்கு நான் வசனவடிவம் கொடுத்தேன். டேவிடோவின் கட்டில்மீது நின்றுகொண்டு நாங்கள் நடித்தோம். ஸ்வீடிஷ்

காரர்கள் கற்பனைத் தலைகளை நாங்கள் சீவிச் சீவிக் குவித்தோம். எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தனர்.

சீன அரக்கன் லிங்கி யுடோங் கதையைப் பெயின்டர்கள் பெரிதும் ரசித்தனர்; நன்மை செய்ய விரும்பிய துரதிர்ஷ்ட சாலியான அரக்கனின் பாத்திரத்தைப் பாஷ்கா நடித்தான்; மற்ற பாத்திரங்களை நான் நடித்தேன். ஆண்களும் பெண்களும், மேடைப் பொருள்களும், நல்லாத்மாவும், நன்மை செய்ய அவன் செய்த ஒவ்வொரு முயற்சியும் தோல்வி அடைந்த பின், சீன அரக்கன் ஓய்வு எடுத்துக்கொள்ள உட்கார்ந்த கல்லுமாக நான் நடித்தேன்.

ஜனங்கள் சிரித்தனர். ஜனங்களை எவ்வளவு எளிதில் சிரிக்க வைக்க முடியும் என்பதைக் கண்டு எனக்கு வேதனை கலந்த ஆச்சரியம் ஏற்பட்டது.

"கோமாளிகளா! துள்ளுகிறவர்களா!" என்று எங்களைப் பார்த்து அவர்கள் கூச்சலிடுவார்கள்.

ஆனால் நாங்கள் தொடர்ந்து நடித்ததும், இன்பத்தை விடத் துன்பம்தான் இவர்களுக்கு எளிதில் கிடைக்கக் கூடியது என்பதை நாங்கள் உணர்ந்தோம்.

உல்லாசம் எங்களிடையே நீண்ட நேரம் நீடித்து நிற்கவில்லை; உல்லாசத்திற்காக நாங்கள் உல்லாசத்தை மதிக்கவுமில்லை. ஆனால் ரஷியாவைப் பீடித்திருந்த இதய நோய்க்கு மாற்றுகப் பெரு முயற்சியுடன் உல்லாசம் தூண்டிவிடப் பட்டது. ஜீவனற்ற, வாழ விரும்பாத, பயங்கரமான நாட்களில் பளுவைக் குறைக்க மாத்திரம் தூண்டிவிடப்படும் உல்லாசம் சாச்வதமானதல்ல.

எதிர்பாராத விதமாகவும், கண்ணுக்குத் தெரியாமலும் ரஷியக் கேளிக்கை குரூரமான நாடகமாக அடிக்கடி மாறி விடும். ஒரு நடனத்திற்கு மத்தியில், தன்னைப் பிணைத்திருக்கும் பந்தங்களிலிருந்து விடுபட நாட்டியக்காரன் முயலுவான். அப்பொழுது அவனில் குடிகொண்டிருக்கும் மிருகத்தன்மை கட்டவிழ்த்து விடப்படும். மிருகத்தனமான வேதனையால் எல்லோர்மீதும், எல்லாவற்றின்மீதும் உறுமிக்கொண்டும், சீறிக்கொண்டும், தவிடுபொடியாக்கிக்கொண்டும், அவன் பாய்வான்....

வெளிச் சக்திகளால் தூண்டிவிடப்பட்டு நிர்ப்பந்தமாக உண்டுபண்ணப்பட்ட இந்தக் கேளிக்கை எனக்கு மிகுந்த ஆத்திரமளித்ததால், சுயமறதி என்னும் வெறியால் பீடிக்கப் பட்டு, என் கற்பனை திடீரென்று சிருஷ்டி செய்த வழியில் நான் இயங்குவேன். சுயேச்சையான தன்னிச்சையான, மகிழ்ச்சியை இந்த ஜனங்கள் மனதில் உண்டுபண்ண எனக் கிருந்த ஆசை அளவிட முடியாதது! என் முயற்சிகள் வீணாகவில்லை. பெயின்டர்கள் என் செயல்களைப் பாராட் டினர்; வியந்தனர். ஆனால் நான் போக்கிவிட்டதாகக் காணப் பட்ட மந்தம், மீண்டும் குரூரமான வடிவத்தில் தலைதூக்கிற்று.

எலியைப்போன்ற லாரியோனிச் மிருதுவாகச் சொல்லு வான்:

"நீ பெரிய போக்கிரி, கடவுள் உன்னை ஆசீர்வதிக் கட்டும்!"

"உண்மையான ஆறுதலளிக்கிறான்!" என்று ஸிக்காரெவ் ஊர்ஜிதம் செய்தான். "சர்க்கஸிலோ, நாடகக் கோஷ்டியிலோ நீ ஏன் சேரக் கூடாது? நீ மிகச் சிறந்த கோமாளியாவாய்."

தொழிற்சாலையைச் சேர்ந்தவர்களில் காபென்டியூக் கினும், லிதானேவும் மாத்திரம்தான் தியேட்டருக்குச் சென்றனர். அவர்கள்கூட யூலேடைட் ஷ்ரோவேடைட் ஆகிய தியேட்டர்களுக்கு மாத்திரம்தான் சென்றனர். இந்தப் பாவத்திற்காகப் பனிக்கட்டியிலுள்ள துவாரத்தின் மூலம் ஞானஸ்நானம் பெறும் ஜோடானில் முழுகுமாறு வயது முதிர்ந்த மாஸ்டர்கள் அவர்களுக்கு உபதேசம் செய்தனர். லிதானேவ் என்னிடம் அடிக்கடி சொன்னான்:

"இதை விட்டுவிட்டு, நடிகனாய்விடு" என்று.

பிறகு நடிகன் யாக்கோவ்லேவ்வின் சோகக் கதையை அவன் உருக்கமாகச் சொல்லுவான்.

"அதைப்போல் நீயும் வாழ முடியும்!"

மேரிஸ் டேவோர்டைப் பற்றி அவன் விருப்பத்துடன் பேசினான். குறிப்பாக, ஸ்பானிய பிரபுவைப் பற்றி அவன் உற்சாகத்துடன் பேசினான்.

"பிரபுக்களெல்லாம் தலைசிறந்த பிரபு டான் சீஸர் தெ பாஸான், மாக்ஸிமிச். உண்மையில் அற்புதமானவன்!"

ஸ்பானியப் பிரபுவின் சில அம்சங்கள் அவனில் இருந்தன. ஒரு நாள் மணிக்கூண்டுக்கு முன்னே இருந்த சதுக்கத்தில் நெருப்பணைப்போர் மூவர் ஒரு மூஷிக்கை அடித்துக்கொண் டிருந்தனர். நெருப்பணைப்போரை உற் சாகப்படுத்திக்கொண்டு நாற்பது பேர்கள் இதை வேடிக்கைப் பார்த்துக்கொண்டு நின்றனர். ஸிதானேவ் இந்தச் சண் டையில் குறுக்கிட்டு, தனது நீண்ட கரங்களால் தாக்கு வோரைத் தாக்கினான். பிறகு மூஷிக்கைத் தூக்கிக் கூட்டத் திற்கு மத்தியில் நிறுத்திவிட்டு, அவன் கூவினான் :

" அவனை அப்பால் அழைத்துச் செல்லுங்கள் !"

தன்னந் தனியே மூவரை எதிர்க்க அவன் அங்கேயே நின்றான்.

நெருப்பணைக்கும் நிலையம் பன்னிரண்டு அடிகளுக்கு அப்பால் இருந்தது. எனவே நெருப்பணைப்போரால் எளிதில் அங்கிருந்து உதவி பெறவும், ஸிதானேவை நையப் புடைக்கவும் முடியும். ஆனால் அதிர்ஷ்டவசமாக அவர்கள் ஓட்டம் பிடித்தனர்.

" நாய் மகன்கள் !" என்று ஓடுகிறவர்களைப் பார்த்துக் கூவினான் அவன்

பீட்டர்—பால் கல்லறைக்கு அப்பாலிருந்த மரக்கடை மைதானத்திற்கு ஞாயிற்றுக்கிழமைகளில் இளைஞர்கள் செல் லுவார்கள். சுகாதாரப் பிரிகேட் அங்கத்தினர்களுடனும், சுற்றுவட்டாரக் கிராமங்களிலிருந்து வரும் மூஷிக்குகளுட னும் குத்துச் சண்டை செய்ய,—சிறிய தலையும், புண்பட்ட கண்களும் படைத்த ஒரு பிரசித்தபெற்ற குத்துச் சண்டைக் காரனை—மோர்டோவிய அரக்கனை—பிரிகேடைச் சேர்ந்தவர் கள் முன்னே நிறுத்தினர். தன் ஆதரவாளர்களுக்கு முன்னே கால்களை அகல விரித்துக்கொண்டு அவன் நிற்பான். பிறகு ஓழுகும் கண்களைச் சட்டைக் கையால் துடைத்துக்கொண்டு சரசமாக நகர மக்களைப் பார்த்துக் கூவுவான் :

" எனக்கு ஜலதோஷம் பிடிக்கு முன் வருவதானால் சீக்கிரம் வாருங்கள் !"

எங்கள் சார்பில் காபென்டியூக்கின் அவனுடன் சண்டை செய்தான். ஆனால் மோர்டோவியன் அவனை வென்றுவிட்டான்.

" அவனை நான் முறியடிக்கவில்லை யென்றால் நான் இருந்துதான் என்ன பலன் ?" என்று இரைந்துக்கொண்டு, ரத்தக் கறையுடன் கூவுவான் காபெண்டியூக்கின்.

அவன் வாழ்க்கையின் ஏக லட்சியமாயிற்று, அவனை முறியடிப்பது. அவன் கடுமையாகப் பயிற்சி செய்தான். குடிப்பதை நிறுத்தினான். அதிகமாக மாமிசம் உட்கொண்டான். படுக்கு முன் நாள்தோறும் பனிக்கட்டியை தேகத்தில் தேய்த்துக்கொண்டான். தசைநார்களை பலப்படுத்துவதற்காகப் பளுவைத் தூக்கினான். ஆனால் இவைகளால் எல்லாம் பலன் ஏற்படவில்லை. இறுதியில் தனது கையுறைக்குள் ஈயத் துண்டுகளைச் சொருகிக்கொண்டு, ஸிதானேவிடம் பெருமையுடன் சொன்னான் :

" மோர்டோவியனின் முடிவு இது !"

"அவைகளை வெளியில் எடு ; இல்லை யெனில் சண்டைக்கு முன் நான் உண்மையைச் சொல்லிவிடுவேன்" என்று கடுமையாக எச்சரித்தான் ஸிதானேவ்.

இதை அவன் செய்வா னென்று காபென்டியூக்கின் கருதவில்லை. ஆனால் சண்டைக்கு முன் திடீரென்று மோர்டோவியனிடம் ஸிதானேவ் சொன்னான் :

" ஒரு நிமிடம் பொறு, வாஸிலி இவானேவிச் ! முதலில் நான் காபென்டியூக்கினுடன் சண்டை செய்கிறேன் !"

முகம் சிவந்த கொஸாக் கூவினான் :

" உன்னுடன் நான் சண்டை செய்ய மாட்டேன் ! இங்கிருந்து போய்விடு !"

" ஆம், நீ சண்டை செய்வாய் !" என்றான் ஸிதானேவ், அவனை உற்றுப் பார்த்துக்கொண்டு. காபென்டியூக்கின் ஒரு நிமிடம் தயங்கினான். பிறகு கையுறையைக் கழற்றி, அதைத் தனது கோட்டின் உள்பையில் வைத்துக்கொண்டு வேகமாக அப்பால் சென்றான்.

இரு தரத்தாருக்கும் இது துக்ககரமான ஆச்சரியத்தை அளித்தது. கண்ணியவானைத் தோன்றிய ஒருவன் கோபத்துடன் ஸிதானேவிடம் சொன்னான் :

" தனிப்பட்ட பகையை பொதுச் சண்டையில் தீர்த்துக் கொள்வது சண்டை விதிக்கு முரணானது."

நாலா பக்கங்களிலிருந்தும் ஜனங்கள் ஸிதாஜேவை நோக்கிக் கூச்சலிட்டனர். நீண்ட நேரம் அவன் மௌனமாக நின்றான். பிறகு கண்ணியவானாகத் தோன்றியவனிடம் சொன்னான் :

"நான் ஒரு கொலையைத் தடுத்திருந்தால் ?"

கண்ணியவானாகத் தோன்றியவன் உடனே விஷயத்தைப் புரிந்துகொண்டான். தொப்பியை எடுத்துவிட்டு அவன் சொன்னான் :

"அப்படியில் எங்கள் சார்பில் உனக்கு வந்தனம் செலுத்துகிறேன் !"

"தயவுசெய்து இதைப்பற்றி பேசாதீர்கள்."

"நான் ஏன் பேச வேண்டும் ? காபென்டியூக்கின் அருமையான சண்டைக்காரன். சதா தோற்பது ஒரு மனிதனை ஆத்திர மூட்டும். இதை நாங்கள் புரிந்துகொள்ளுகிறோம். ஆனால் இனிமேல், சண்டைக்கு முன் அவன் கையுறைகளை நாங்கள் பார்வையிடுவோம்."

"அது உங்கள் விருப்பம்."

கண்ணியவானாகத் தோன்றியவன் போய்விட்டதும், எங்கள் தரத்தார் ஸிதாஜேவைக் கண்டிக்க ஆரம்பித்தனர்.

"எதற்காக நீ இப்படிச் செய்தாய், முட்டாள் ? கொஸாக் அவனை மண்ணைக் கவ்வ வைத்திருப்பான். ஆனால் இப்பொழுது நாம் மண்ணைக் கவ்வினோம் !"

நீண்ட நேரம் நாங்கள் அவனைக் கண்டித்தோம் ; இதில் நாங்கள் இன்பத்தைக் கண்டோம்.

நெடுமூச்சுவிட்டுக்கொண்டு ஸிதாஜேவ் சொன்னான் :

"கழிசடை....."

பிறகு அவன் மோர்டோவியனுக்குச் சவால் விடுத்ததைக் கேட்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். மோர்டோவியன் கோதாவிற்கு வந்து, தன் முஷ்டியை ஆட்டிக் கொண்டு, வேடிக்கையாகச் சொன்னான் :

"சிறிய சலசலப்பு—வெப்பமடைவதற்காக !"

சுற்றி நின்றவர்கள் கைகளைச் சங்கிலியாகக் கோர்த்துக் கொண்டு ஒரு வளையமாக நின்றனர்.

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு, வலது முஷ்டியை நீட்டிக்கொண்டு, இடது முஷ்டியை நெஞ்சில் அழுத்திக்கொண்டு சண்டைக்காரர்கள் சுற்றிச் சுற்றி வந்தனர். அனுபவசாலிகளான பார்வையாளர்கள் ஸிதாஞேவின் கைகள் மோர்டோவியனின் கைகளைவிட நீளமானவை என்பதை விரைவில் உணர்ந்தனர். சண்டைக்காரர்களின் கால்பட்டுப் பனிக்கட்டி நொறுங்கும் சத்தத்தைத் தவிர வேறு எந்தச் சத்தமும் கேட்கவில்லை. இதைச் சகிக்க முடியாமல் யாரோ பேராசையுடன் முணுமுணுத்தான் :

" ஒருவரை ஒருவர் தாக்கும் காலம் கடந்துவிட்டது."

ஸிதாஞேவ் வலது கையால் தாக்கினான். பாதுகாப்புக்காக மோர்டோவியன் இடது கையை உயர்த்தினான். உடனே இடது கையால் மோர்டோவியனின் வயிற்றில் குத்தினான், ஸிதாஞேவ். உறுமிக்கொண்டு அவன் பின்வாங்கினான். ஆமோதிக்கும் முறையில் அவன் சொன்னான் :

" இளைஞனாகிய நீ முட்டாளல்ல !"

ஒருவர் நெஞ்சில் ஒருவர் குத்திக்கொள்ள ஆரம்பித்தனர். சில நிமிடங்களில் இரு தரத்தாரும் கிளர்ச்சியுடன் கூவினர் :

" அவனைத் தாக்கு, கடவுளைச் சித்தரிப்பவனே ! அவன் மொந்தையை அலங்கரி !"

ஸிதாஞேவைவிட மோர்டோவியன் அதிக பலசாலியாக இருந்தாலும், ஸிதாஞேவைப்போல் அவ்வளவு சுறுசுறுப்பானவன் அல்ல. விரைவில் வளைந்துகொடுக்க இயலாததால், தான் கொடுத்த ஒவ்வொரு குத்துக்கும், இரண்டு அல்லது மூன்று குத்துகள் பெற்றான். ஆனால் இந்தத் தாக்குதல் அவனை அசைக்கவில்லை. அவன் கர்ஜித்துக்கொண்டும், எதிரியைக் கேலிசெய்துகொண்டும் சண்டை செய்தான். திடீரென்று அவன் உக்ரமாக ஸிதாஞேவைத் தாக்கி, அவன் வலது காதை ஒடித்தான்.

" அவர்களை விலக்குங்கள். சண்டை 'டிரா' ஆய்விட்டது !" என்று பலர் ஏக காலத்தில் கத்தினர். வேடிக்கைப் பார்ப்போர் சண்டைக்காரர்களை விலக்கிவிட்டனர்.

" கடவுளைச் சித்தரிப்பவன் ரொம்பப் பலசாலி யல்ல, ஆனல் சுறுசுறுப்பானவன் " என்று சரசமாகச் சொன்னன் மோர்டோவியன். " அவன் சிறந்த சண்டைக்காரனுவான் ; இதைச் சொல்ல நான் வெட்கப்படவில்லை."

சண்டையைப் பார்த்துக்கொண்டு நின்ற இளைஞர்கள் கோதாவில் குதித்தனர். ஸிதானேவை அழைத்துக் கொண்டு எலும்பைப் பொருத்துபவனிடம் நான் சென் றேன். அவன் செயல் அவன்மீது எனக்கிருந்த மதிப்பை மேலும் உயர்த்திற்று. அவனை நான் நேசித்தேன் ; ஏற்றிப் போற்றினேன்.

அவன் நேர்மையானவன். இது தனது கடமை யென்று அவன் நினைத்தான். ஆனல் விரோதத்துடன் காபென்டியூக் கின் அவனைக் கேலி செய்தான்.

"சதா பெருமையடித்துக்கொள்ளுகிறாய், ஸிதானேவ்!" என்பான் அவன். " குளிர்காயும் அடுப்பைப் போல், உன் ஆத்மாவுக்கு நீ முலாம் பூசிவிட்டாய். இதைப்பற்றி நீ நீ பீற்றுகிறாய் ! நான் சுடர் வீசும் ஒளி ! ஆனல் உன் ஆத்மா பித்தளையால் ஆக்கப்பட்டது. நீ உயிரற்றவன்."

ஸிதானேவ் வேலை செய்துகொண் டிருப்பான்; அல்லது லெர்மோன்டோவின் கவிதை தனது நோட் புத்தகத்தில் எழுதிக்கொண் டிருப்பான். ஓய்வு நேரம் முழுதையும், கவி தையை நோட் புத்தகத்தில் எழுதுவதில் கழித்தான். ஒரு நாள் நான் சொன்னேன் :

" உன்னிடம் பணம் இருக்கிறது. ஏன் ஒரு புத் தகத்தை நீ வாங்கக் கூடாது ?"

"வேண்டாம்; கைப்படக் கவிதையைப் பெயர்த்தெழுது வது மிகச் சிறந்தது " என்று அவன் பதில் சொன்னன்.

மை உலர காத்துக்கொண் டிருக்கும் நேரத்தில், அவன் மிருதுவாகப் படிப்பான் :

வருத்தமின்றியும், உணர்ச்சியின்றியும்
மண்ணிலிருந்து மறைகிறாய்;
மண்ணிலிருந்து இன்பம் மறைகிறது ;
அழகு முழுதும் ஒரு நாளுக்கு மட்டும் நிலைத்திருக்கிறது.

" இதுதான் உண்மை " என்று கண்களைச் சுழற்றிக் கொண்டு அவன் சொல்லுவான். " யாதார்த்தத்தை உள்ளது உள்ளபடி காண்கிறான், அந்தப் புலவன் !"

காபென்டியூக்கினை ஸிதானேவ் நடத்திய முறை எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. குடிபோதையில் இருக்கும்பொழு தெல்லாம், ஸிதானேவுடன் சண்டைக்கு நிற்பான் அவன். ஆனால் பொறுமையாக அவனைத் தடுக்க முயல்வான், ஸிதானேவ்.

" விலகி நில் ! என்னைத் தொடாதே !"

இறுதியில் குடிகாரனை இரக்கமின்றி அடிப்பான், ஸிதானேவ். சாதாரணமாகச் சண்டையை விரும்பத்துடன் வேடிக்கைப் பார்த்துக்கொண்டு நிற்கும் பெயின்டர்கள், இரக்கமற்ற இந்த தாக்குதலைக் காணச் சகியாது, நண்பர்களை விலக்கிவிடுவார்கள்.

" தக்க சமயத்தில் நாம் ஸிதானேவைத் தடுத்து நிறுத்தவில்லை யென்றால், பலனைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், அவனை அடித்துக் கொன்றுவிடுவான் " என்று அவர்கள் சொல்லுவார்கள்.

நிதானமாக இருக்கும் நேரத்தில்கூட ஸிதானேவை அரித்துக்கொண் டிருப்பான் காபென்டியூக்கின். கவிதைமீது அவனுக்குள்ள ஆர்வத்தையும், தாதிர்ஷ்டவசமான அவன் காதல் விவகாரத்தையும், அவன் கேலி செய்வான் ; அவன் பொறுமையைத் தூண்டிவிட வீண் முயற்சி செய்வான். கொஸாக்கின் கேலியை மௌனமாகச் சகிப்பான் ஸிதானேவ். சில சமயங்களில் காபென்டியூக்கினுடன் சேர்ந்து அவனும் சிரிப்பான்.

அவர்கள் அருகருகே படுத்துறங்கினர். இரவு நெடு நேரம்வரையில் குசுகுசு வென்று பேசிக்கொண்டிருப்பர்.

இது என்னைக் குழப்பத்தி லாழ்த்தியது. முற்றிலும் மாறுபட்ட இரண்டு மனிதர்கள் எதைப்பற்றி இவ்வளவு அன்னியோன்யமாகப் பேசுகிறார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. ஆனால் நான் அவர்களை நெருங்கினால், கொஸாக் சொல்லுவான் :

" இங்கே நீ என்ன செய்கிறாய் ?"

ஸிதாலேவ் என்னை அசட்டை செய்வான்.

ஒரு நாள் அவர்கள் என்னை அழைத்தார்கள்.

" மாக்ஸிமிச், உன்னிடம் நிறையப் பணமிருந்தால், நீ என்ன செய்வாய் ?" என்று கொஸாக் கேட்டான்.

" புத்தகங்கள் வாங்குவேன்."

" வேறு என்ன வாங்குவாய் ?"

" எனக்குத் தெரியாது."

" உம் ?" என்று ஏமாற்றத்துடன் நெடுமூச்சுவிட்டுக் கொண்டு அப்பால் திரும்பிக்கொண்டான், காபென்டியூக்கின்.

" பார்த்தாயா ?" என்று சாந்தமாகச் சொன்னான் ஸிதாலேவ். " வயோதிகர்களாயினும், வாலிபர்களாயினும் எதையும் திட்டவட்டமாக யாரும் சொல்ல முடியாது. பணம் இருந்தால் மாத்திரம் போதாது என்று நான் சொல்லுகிறேன். பணத்துடன் மற்றவைகளும் இருக்க வேண்டும்."

" நீ எதைப்பற்றிப் பேசுகிறாய் ?" என்று நான் கேட்டேன்.

" விசேஷமாக ஒன்றும் சொல்லவில்லை. தூங்க முடியாததால், நேரத்தைக் கொல்லுகிறேம் " என்று பதில் சொன்னான் கொஸாக். பிறகு தங்கள் பேசுவதைக் கேட்க அவர்கள் என்னை அனுமதித்தனர். பகலில் மற்றவர்கள் எதைப்பற்றிப் பேசினார்களோ அதைப்பற்றித்தான் அவர்கள் இரவில் பேசினர். கடவுள், நீதி, இன்பம், பெண்களின் சமர்த்து, முட்டாள்தனம், பணக்காரர்களின் பேராசை, பொதுவாக வாழ்க்கை விளங்காத புதிர் என்பன போன்ற விஷயங்களைப்பற்றி அவர்கள் விவாதித்தனர்.

அவர்கள் பேச்சை நான் ஆர்வத்துடன் கேட்டேன். அவர்கள் பேச்சு எனக்கு ஆவேசமளித்தது. வாழ்க்கை மோசமாக இருக்கிறது என்பதையும், அதை மாற்ற வேண்டும் என்பதையும் அவர்கள் ஒப்புக்கொண்டதை அறிந்து நான் மகிழ்ந்தேன். ஆனால் வாழ்க்கையை மாற்ற வேண்டும் என்னும் ஆசை மட்டும் ஒருவனை செயல்படத் தூண்டாதென்பதையும், இந்த ஆசை தொழிற்சாலை வாழ்க்கையையோ, பெயின்டர்களின் பரஸ்பர வாழ்க்கையையோ மாற்றிவிட

வில்லை என்பதையும் நான் கண்டேன். இந்தப் பேச்சு வாழ்க்கையை ஊடுருவிப் பார்க்க எனக்கு வசதி அளித்தது. வாழ்க்கை சூன்யமானது என்பதும், காற்றால் கலக்கப்பட்ட குளத்தில் மிதக்கும் உலர்ந்த இலைகளைப் போல் ஜனங்களும் வாழ்க்கை என்னும் குளத்தில் எந்தவிதமான நோக்கமுமின்றி மிதக்கின்றனர் என்பதும், நோக்கமற்ற இந்த வாழ்க்கையை அவர்கள் கண்டிக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெளிவாகத் தெரிந்தது.

பெயின்டர்கள் தற்பெருமையடித்துக்கொண்டனர்; அல்லது வருந்தினர்; அல்லது யாரையாவது குறைகூறி, சாதாரண விஷயங்களுக்காகத் தங்களுக்குள் உக்ரமாகப் போராடி ஒருவரை ஒருவர் புண்படுத்திக்கொண்டனர். பரமண்டலத்தில் தங்களுக்கு என்ன நேரும் என்பதைக் கற்பனை செய்வதில் அவர்கள் காலத்தைக் கழித்தனர். ஆனால் இந்த உலகத்தில், கதவுக்கு அருகிலிருந்த பக்கெட்டிலிருந்து நீர் ஒழுகிக்கொண்டிருந்தது; தரை வெடித்து அதிலிருந்து வெளிப்பட்ட சகதி எங்கள் கால்களை விறைக்கச்செய்துகொண்டிருந்தது. வைக்கோலாலும், கந்தைகளாலும் அந்த வெடிப்பை மூட நானும், பாவெலும் முயன்றோம். வெடிப்பை மூடுவதைப்பற்றித் தொழிலாளர்கள் அடிக்கடிப் பேசினர்; ஆனால் வெடிப்பு மேலும் மேலும் பெரிதாய்க்கொண்டிருந்தது. புயல் வீசினபொழுது பறை அறைந்துகொண்டு வெடிப்பின் மூலம் காற்று உள்ளே சீறிப் பாய்ந்து, இருமலையும், தடுமனையும் உண்டுபண்ணிற்று. ஜன்னலில் இருந்த பித்தளை மூடி பயங்கரமாக கிரீச்சிட்டதால், தொழிலாளர்கள் கீழ்த்தரமான பாஷையில் சபித்தனர். ஆனால் அதற்கு நான் எண்ணெய் பூசினபொழுது, காதை நெளித்துக்கொண்டு ஸிக்காசெவ் சொன்னான்:

"கிரீச்சிடும் சப்தம் இல்லாமல் நிலைமை மேலும் பயங்கரமாய்விட்டது."

மதுபானக் கடையிலிருந்து திரும்பி வந்ததும், அசுத்தமான படுக்கையில் அவர்கள் சாய்வார்கள். தூசியையும், கூளத்தையும் யாரும் சட்டை செய்யவில்லை. வாழ்க்கையை வேதனை நிறைந்ததாக்கிய எண்ணற்ற அற்பக் குறைகளை

எளிதில் திருத்தியிருக்க முடியும். ஆனால் இந்த முயற்சியில் யாரும் ஈடுபடவில்லை.

அடிக்கடி அவர்கள் சொல்லுவார்கள் :

" ஜனங்கள்மீது யாருக்கு இரக்கம் இருக்கிறது ? யாருக்கும் இல்லை ; கடவுளுக்குக்கூட இல்லை."

ஆனால் இறந்துகொண்டிருக்கும் டேவிடோவை, கூளமும், ஈக்களும் துன்புறுத்திக்கொண்டிருந்த டேவிடோவை நானும் பாவெலும் குளிப்பாட்டியபொழுது எங்களை அவர்கள் கேலி செய்தனர் ; குளிப்பாட்டும் சேவகர்கள் என்று எங்களை அழைத்தனர் ; சுத்தம் செய்ய, சீலைப்பேன் நிறைந்த தங்கள் சட்டைகளை எங்களிடம் கொடுத்தனர் ; வெட்கப்படத்தக்க, வேடிக்கையான எதையோ நாங்கள் செய்வதைப்போல் பொதுவாக எங்களைக் கேலிசெய்தனர்.

கிறிஸ்துமஸிலிருந்து லெந்து நோன்பு வரையில் இடைவிடாது இருமிக்கொண்டும், ரத்தத்தை கக்கிக்கொண்டும் படுத்திருந்தான் டேவிடோவ். இரவில் ஜன்னிக் கூச்சலிட்டுக் கொண்டு அவன் விழித்தெழுவான்.

நாள்தோறும் அவர்கள் சொன்னார்கள் :

"அவனை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச்செல்லவேண்டும்."

டேவிடோவின் பாஸ்போர்ட்டை புதுப்பிக்க வேண்டும் என்பதையும், அதைப் புதுப்பிக்காமல் ஆஸ்பத்திரியில் அவனை சேர்த்துக்கொள்ள மாட்டார்கள் என்பதையும் நாங்கள் தெரிந்துகொண்டோம். பிறகு அவன் சிறிது குணமடைந்தான். முடிவாக அவர்கள் சொன்னார்கள் :

" ஆஸ்பத்திரியில் சேர்ப்பதால் மாத்திரம் என்ன பலன் ? எப்படியும் விரைவில் அவன் சாகப் போகிறான் !"

"ஆம், விரைவில் இறந்துவிடுவேன் !" என்று சத்தியம் செய்தான் நோயாளி.

அவன் அமைதியான ஹாஸ்யக்காரன். தொழிற்சாலையிலே குடிகொண்டிருந்த மந்தத்தைப் போக்க அவனும் தன் வழியில் முயன்றான். தன் முகத்தைக் கட்டிலில் சாய்த்துக் கொண்டு, அவன் சொல்லுவான் :

" மேலே ஏறிவிட்ட ஒருவனின் குரலைக் கேளுங்கள், நல்ல ஜனங்களா !"

பிறகு முட்டாள்தனமான பாட்டை அவன் பாடுவான் :

எவ்வித தொல்லைகளையும் செய்யாமல்
நான் படுக்கைமீது இருந்த சமயம்,
கரப்பான்கள் வந்து என் சதையைத் தின்றன.
நான் தூங்கிய சமயத்திலும் சரி, விழித்திருந்த சமயத்திலும் சரி.

" அவன் சோர்ந்துவிடவில்லை !" என்று வியப்புடன் கூறினர், தொழிலாளிகள்.

சில சமயங்களில் நானும், பாவெலும் அவன் படுத்திருக்கும் மச்சுக்குச் செல்வோம். நிர்ப்பந்தமாக வரவழைக்கப்பட்ட குதூகலத்துடன் அவன் எங்களை வரவேற்பான்.

" உங்களுக்கு என்ன விருந்தளிக்கலாம், நண்பர்களா ? புதிய சிலந்திப் பூச்சி உங்களுக்குப் பிடிக்குமா ?"

மரணம் மெதுவாகத்தான் வந்தது. இது அவனை ஒடித்துவிட்டது.

" நான் சாக மாட்டேன் போலிருக்கிறது !" என்று வெறுப்புடன் அவன் சொல்லுவான்.

மரணத்துக்கு அவன் பயப்படாதது, பாவெலைப் பீதியடையச் செய்தது. இரவில் அவன் தணிந்த குரலில் சொல்லுவான் :

" மாக்ஸிமிச் ! ஒருக்கால் அவன் இறந்திருக்கலாம்... நாம் இங்கே படுத்திருக்கும்பொழுது ஒரு நாள் இரவு அவன் இறப்பான். கடவுளே, இறந்தவர்களை நான் கொம்ப அஞ்சுகிறேன் !"

அல்லது அவன் சொல்லுவான் :

" அவன் ஏன் பிறந்தான் ? இருபது வயதாகு முன் இறக்கிறான் !"

நிலா வீசும் ஒரு நாள் இரவு அவன் என்னை எழுப்பினான். பயத்தால் அவன் கண்கள் திருத்திக்கொண்டிருந்தன.

" கேள் !"

மச்சில் படுத்திருந்த டேவிடோவ் சிரமத்துடன் மூச்சு விடுவதும், முணுமுணுப்பதும் எங்களுக்குக் கேட்டது.

" இங்கே, கொண்டு வாருங்கள், இங்கே..."

பிறகு அவன் இடைவிடாது இருமினன்.

" அவன் இறக்கிறான்! பார்த்துக்கொண்டிரு!" என்று கிளர்ச்சியுடன் சொன்னன் பாவெல்.

நாள் முழுதும் முற்றத்திலிருந்த பனிக்கட்டிகளை நான் அப்புறப்படுத்திக்கொண் டிருந்தேன். நான் சொம்பக் களைத் திருந்ததால், நான் தூங்க விரும்பினேன்.

" இயேசு நாதரின் பெயரில் வேண்டுகிறேன்—தூங் காதே!" என்று கெஞ்சினன் பாவெல். " தயவு செய்து தூங்காதே!"

திடீரென்று அவன் குதித்தெழுந்து வெறியுடன் கூவி னன் :

" எழுந்திருங்கள்! டேவிடோவ் இறந்துவிட்டான்!"

சிலர் எழுந்தனர்; மற்றும் சிலர் படுக்கையிலிருந்து கீழே இறங்கி, என்ன நடந்த தென்று கோபத்துடன் கேட் டனர்.

மச்சில் ஏறின காபென்டியூக்கின் ஆச்சரியத்துடன் சொன்னன் :

" அவன் தேகத்தில் சிறிது வெப்பமிருந்தாலும், அவன் இறந்துவிட்டான் என்று தோன்றுகிறது."

எல்லோரும் மௌனம் சாதித்தனர். சிலுவை அடை யாளம் வரைந்துகொண்டு போர்வையை இழுத்துப் போர்த் திக்கொண்டு ஸிக்காலெவ் சொன்னன் :

" நல்லது, அவன் ஆத்மா சாந்தி அடையட்டும்!"

" அவனை வாசற்படிக்குத் தூக்கிச் செல்வது நல்லது" என்று யாரோ கூறினன்.

கீழே இறங்கி, ஜன்னல் மூலம் வெளியே பார்த்துவிட்டு காபென்டியூக்கின் சொன்னன் :

" காலைவரையில் அங்கேயே அவன் படுத்திருக்கட்டும். உயிருடன் இருக்கும்பொழுதுகூட அவன் யாருக்கும் எந்த விதமான தொந்தரவும் கொடுக்கவில்லை."

தலையைத் தலையணையில் புதைத்துக்கொண்டு பாவெல் அழுதான்.

ஸிதானெவ் எழுந்திருக்கக்கூட இல்லை.

15

வயலில் பனி உருகிற்று. ஆகாயத்தில் குளிர்கால மேகங்கள் கலைந்தன. அவை நனைந்த பனிக்கட்டியாகவும், மழையாகவும் பூமியில் விழுந்தன. தன் தினசரிச் சுற்றுப் பிரயாணத்திற்குச் சூரியன் அதிக நேரம் எடுத்துக்கொண்டது. காற்று வெப்பமாக இருந்தது. வசந்த காலம் வந்துவிட்ட தாகத் தோன்றினாலும், திடீரென்று நகரில் பிரவேசிப்ப தற்காக அது எங்கோ வயலில் வேடிக்கைக்காக ஒளிந்திருந் தது. சிவப்புச் சகதியால் வீதி மூடப்பட்டிருந்தது. நடை பாதையிலே சிற்றோடைகள் பெருகி ஓடிக்கொண்டிருந்தன. அலெஸ்டாண்ஸ்காயா சதுக்கத்தில் சிட்டுக் குருவிகள் உல்லாசமாகப் பறந்துகொண் டிருந்தன. சிட்டுக் குருவிகளைப் போல் ஜனங்கள் கிளர்ச்சியடைந்திருந்தனர். வசந்த கால முணுமுணுப்பைப் பிளந்துகொண்டு காலையிலிருந்து இரவு வரை ஒலித்தது, லெந்து நோன்பு மணி. அது என் இதயத்தை மெதுவாக உலுக்கிற்று. வயோதிகர்களின் பேச்சிலே பொதிந்து கிடப்பதைப்போல், மணியோசையிலும் வேதனை பொதிந்து கிடந்தது.

"பண்டைக் காலத்தில்....." என்று மணியோசை ஓயாது முனகுவதைப் போல் தோன்றிற்று.

அழகாக வர்ணம் தீட்டப்பட்ட மனித சிரேஷ்டர் அலெக்ஸியின் விக்கிரகத்தை, தொழிற்சாலை, என் பிறந்த நாளில் எனக்குப் பரிசாக அளித்தது. என்றும் நான் மறக்க முடியாத நீண்ட, கண்ணியமான பிரசங்கம் ஒன்றை ஸிக்கா செவ் செய்தான்.

"நீ யார்?" என்று புருவத்தை உயர்த்திக்கொண்டும் விரல்களால் மேஜையைத் தட்டிக்கொண்டும் அவன் கேட் டான். "பதின்மூன்று வயதேயான அநாதைச் சிறுவன். எனி னும் வாழ்க்கையிலிருந்து தப்பியோடாமல், வாழ்க்கை யுடன் மல்லிடும் உன்னை, உன்னைவிட நான்கு மடங்கு அதிக வயதான நான் புகழ்கிறேன், பாராட்டுகிறேன். இதுதான் சரி யான மார்க்கம்; சதா வாழ்க்கையுடன் மல்லிட வேண்டும்."

கடவுளின் அடிமைகளைப்பற்றியும், கடவுளின் தொண்டர்களைப்பற்றியும் அவன் பேசினான். ஆனால் அடிமைகளுக்கும் தொண்டர்களுக்கும் இடையே நிலவும் வித்தியாசம் எனக்கு விளங்கவில்லை; இது ஸிக்காரெவுக்கு விளங்கி யிருக்கும் என்றும் எனக்குத் தோன்றவில்லை. அவன் செய்த பிரசங்கம் சலிப்பைத் தந்தது. தொழிலாளர்கள் அவனைக் கேலி செய்தனர். என்ன செய்வது என்று தெரியாமல், கையில் விக்கிரகத்துடனும் எழுச்சியுடனும் நான் அங்கே நின்று கொண்டிருந்தேன். சலிப்புடன் பிரசங்கியை நோக்கிக் காப்பென்டியூக்கின் கூவினான் :

"இறந்தவனுக்கு மந்திரம் ஓதுவதைப் போன்றிருக்கிறது. பிரசங்கத்தை நிறுத்து—அவன் காதுகள் நீல நிறமாய்விட்டன."

பிறகு அவனே எனது தோள்களில் தட்டிவிட்டு, என்னைப் புகழ்ந்தான்.

"உன்னில் பொதிந்து கிடக்கும் சிறந்த அம்சம், நீ எல்லோருக்கும் உற்றவன். இதை நான் விரும்புகிறேன். உன்னைத் தண்டிக்க வேண்டிய சமயத்தில்கூட, உன்னை அடிக்கவிடாமல் தடுக்கிறது, அந்த அம்சம்."

ஒளிவீசும் கண்களால் எல்லோரும் என்னைப் பார்த்தனர். என் குழப்பத்தைக் கண்டு என்னை அன்புடன் கேலி செய்தனர். இந்த விழா மேலும் நீடித்திருந்தால் இந்த ஜனங்கள் என்மீது காட்டும் அன்பை எண்ணி நான் கண்ணீர் வடித்திருப்பேன். எனினும் அன்று காலை என்னைச் சுட்டிக்காட்டிப் பியோட்டர் வாஸில்யெவிடம் கடைச் சிப்பந்தி சொன்னான் :

"மோசமான பையன்; அவன் எதற்கும் உதவ மாட்டான்!"

வழக்கம்போல் அன்று காலை நான் மார்க்கெட்டுக்குச் சென்றேன். ஆனால் அன்று பிற்பகல் கடைச் சிப்பந்தி என்னிடம் சொன்னான் :

"வீட்டிற்குச் சென்று களஞ்சியக் கூரைமீதிருக்கும் பனிக்கட்டியைப் பெயர்த்தெடுத்து, அதைக் குளிரவைக்கும் நிலவறையில் குவித்து வை!"

அதுதான் என் பிறந்த நாளென்பது அவனுக்குத் தெரியாது. யாருக்கும் இது தெரியா தென்று நான் நினைத் தேன்.

தொழிற்சாலையிலே பாராட்டு விழா முடிந்ததும், உடை களை மாற்றிக்கொண்டு நான் கொல்லைக்கு ஓடினேன். குளிர் காலத்தில் ஏராளமாகக் குவிந்திருந்த பனிக்கட்டிகளை அப்புறப்படுத்தக் களஞ்சியக் கூரையின்மீது ஏறினேன். பெரிதும் கிளர்ச்சி அடைந்திருந்ததால், நிலவறைக் கதவைத் திறக்க நான் மறந்துவிட்டேன். எனவே நான் கீழே தள்ளிய பனிக்கட்டிகள் கதவை மூடிவிட்டன. என் தவறை நான் கண்டுபிடித்ததும், கதவுக்கு முன்னே குவிந்து கிடந்த பனிக்கட்டிகளை அப்புறப்படுத்த நான் ஆரம்பித்தேன். ஆனால் பனிக்கட்டிகள் கனமாக இருந்ததால், நான் உபயோகித்த மரக்கோடாலி முறிந்துவிட்டது. "இன்பத்தைத் துன்பம் பின் தொடரும்" என்று ரஷிய முதுமொழியை ஊர்ஜிதப்படுத்து வதைப்போல், கடைச் சிப்பந்தி அந்தச் சமயத்தில் அங்கே காட்சியளித்தான்.

"உம்!" என்று கோபத்துடன் உறுமிக்கொண்டு அவன் எனக்கு அருகில் வந்தான். "ரொம்ப நல்ல வேலைக்காரன் நீ, நீ நாசமாய்ப் போக! உன் பைத்தியக்கார மூளையைச் சரி பண்ணுகிறேன்....."

ஒடிந்த கோடாலியின் பிடியை எடுத்து அதை என்மீது வீசினான். அடிபடாமல் லாவகமாகத் தப்பித்துக்கொண்டு நான் கோபத்துடன் சொன்னேன்:

"கொல்லையைச் சுத்தம் செய்யும் வேலைக்கு நான் உன்னிடம் வரவில்லை!"

என் காலை நோக்கி ஒரு கம்பை வீசினான். ஒரு பனிக் கட்டியை எடுத்து நான் அவன் முகத்தில் எறிந்தேன். முனகிக்கொண்டு அவன் ஓட்டம் பிடித்தான். என் வேலையை விட்டுவிட்டு நான் தொழிற்சாலைக்குத் திரும்பினேன். சில நிமிடங்களுக்குப் பிறகு கடைச் சிப்பந்தியின் மனைவியாக நிச்சயம் செய்யப்பட்ட பெண் கீழே ஓடி வந்தாள்.

"மாக்ஸிமிச்! உன்னை மேலே கூப்பிடுகிறார்கள்!"

"நான் வர மாட்டேன்!" என்றேன் நான்.

"நீ சொல்லுவது என்ன? நீ போக மாட்டாயா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் லாரியோனிச்.

நடந்ததை நான் சொன்னேன். கவலை தோய்ந்த முகத்துடன் அவன் மாடிக்குச் சென்றான். போகும்பொழுது தணிந்த குரலில் என்னிடம் அவன் சொன்னான்:

"இது கொஞ்சம் துணிச்சலான செயல், பையா!"

தொழிற்சாலையே கடைச் சிப்பந்திக்கு எதிராக எழுந்தது.

"உன்னை அவர்கள் நிச்சயம் ஒழித்துவிடுவார்கள்" என்றான் காப்பென்டியூக்கின்.

அது என்னை அச்சுறுத்தவில்லை. கடைச் சிப்பந்தியுடன் எனக்கு இருந்த உறவு, முறியும் அளவுக்கு முற்றிவிட்டது. அவன் என்னைப் பெரிதும் வெறுத்தான்; நானும் அவனை வெறுத்தேன். ஆனால் அவன் என்னை நடத்திய முறை என்னைத் திகைக்க வைத்தது.

பெருக்கும்பொழுது என் கண்ணில் படுவதற்காக நாணயங்களை வேண்டு மென்றே அவன் தரையில் உதறுவான். பிச்சைக்காரர்களுக்குக் கொடுப்பதற்காக வைக்கப்பட்டிருந்த கோப்பையில் அந்த நாணயங்களை நான் போட்டுவிடுவேன். எதற்காக அவன் இப்படிச் செய்கிறான் என்பதை ஊகித்ததும், நான் அவனிடம் சொன்னேன்:

"அந்த நாணயங்களை என்னை நோக்கி வீசுவதால், எத்தகைய பலனும் ஏற்படப் போவதில்லை!"

எதிர்பார்த்த இந்த அடியால் அவன் முகம் சிவந்தது. என்னைப் பார்த்து அவன் கூவினான்:

"எனக்குக் கற்றுக்கொடுக்க நீ எப்படித் துணிந்தாய்! நான் என்ன செய்கிறேன் என்பது எனக்குத் தெரியும்!" ஆனால் அவன் தொடர்ந்து சொன்னான்: "நான் வேண்டு மென்றே இவ்வாறு செய்தேன் என்று நீ நினைக்கக் காரண மென்ன? கை தவறி அவை தரையில் விழுந்தன!"

கடையிலிருந்துகொண்டு நான் புத்தகம் படிப்பதை அவன் தடுத்தான். அவன் சொன்னான்:

"உன்னைப் போன்றவர்கள் செய்ய வேண்டிய காரிய மல்ல இது. நீ வேதாந்தியாக விரும்புகிறாயா? அட்டை யே!"

ஒரு நாணயத்தை நான் திருடுவதைக் கண்டுபிடிக்க அவன் தொடர்ந்து முயன்றான். நான் தலையைப் பெருக்கும் பொழுது தலையிலுள்ள வெடிப்பில் இருபது காபெக் நாணயம் ஒன்று புகுந்துகொண்டால், நான் அதைத் திருடினேன் என்று அவன் சாதிப்பான். எனவே அந்த விளையாட்டை நிறுத்துமாறு மீண்டுமொரு தரம் நான் அவனிடம் சொன் னேன். ஆனால் அன்று மாலை கெட்டில் நிறையக் கொதிக்கும் ஜலத்துடன் நான் விடுதியிலிருந்து திரும்பியபொழுது, அடுத்த கடையைச் சேர்ந்த சிப்பந்தியிடம் அவன் சொல்லிக் கொண்டிருந்தான் :

" ஒரு தோத்திரப் பாடல் புத்தகத்தை அவன் திருடு மாறு செய் ; விரைவில் மூன்று பெட்டிகள் நிறையப் புதிய தோத்திரப் பாடல் புத்தகங்கள் எங்கள் கடைக்கு வரும்."

அவர்கள் என்னைப்பற்றித்தான் பேசுகிறார்கள் என் பதை நான் உணர்ந்தேன். ஏனெனில் நான் உள்ளே பிரவே சித்ததும், அவர்கள் குழப்பமடைந்தனர்.

அண்டையிலிருந்த கடையில் வேலை செய்த சிப்பந்தி பலவீனமான, நோஞ்சலான, விஷமத்தனமான கண்கள் படைத்த பிரகிருதி. நல்ல வேலைக்காரனுகக் கருதப்பட்ட போதிலும், குடிகாரனுன அவனை, தொடர்ந்து வேலைக்கு அமர்த்தவில்லை. குடிக்கச் சென்றால், உடனே வேலையி லிருந்து அவனை நீக்கிவிடுவான் அவன் எஜமானன். ஆனால் மீண்டும் அவனை வேலைக்கு அமர்த்துவான். வெளிப் பார்வைக்கு அவன் பணிவுடையவனுகத் தோன்றினுன் ; எஜமானன் காலாலிட்ட வேலையைத் தலையால் செய்தான் ; அவன் சதா குறும்புப் புன்னகை புரிவான் ; குத்தலாகப் பேசுவான். அவன் வாய் நாற்ற மடித்தது, பல் வியாதிக் காரர்கள் வாய் நாறுவதைப்போல். ஆனால் அவன் பற்கள் வெண்மையாகவும் உறுதியாகவும் இருந்தன.

சில தினங்களுக்கு முன் அவனுடன் எனக்கேற்பட்ட அனுபவம், எங்கள் கடைச் சிப்பந்தியுடன் எனக்கு எதிராக அவன் சதி செய்கிறான் என்பதை ஊர்ஜிதம் செய்தது. ஒரு நாள் அன்புப் புன்னகை புரிந்துகொண்டு என்னை அணுகித்

திடீரென்று என் தொப்பியைத் தட்டிவிட்டு, என் குடுமியைப் பிடித்துக்கொண்டான். நாங்கள் சண்டை செய்ய ஆரம்பித்தோம். முகப்பிலிருந்த என்னை அவன் கடைக்குள்ளே தள்ளினான். தரையில் நிறுத்தப்பட்டிருந்த பெரிய விக்கிரகங்கள்மீது என்னைத் தள்ள அவன் முயன்றான். அந்த முயற்சியில் அவன் வெற்றி பெற்றிருந்தால், நிச்சயமாக அங்கிருந்த கண்ணாடிகளையும், சித்திரங்களையும், விலையுயர்ந்த படங்களையும் நான் நொறுக்கி யிருப்பேன். பலவீனனானதால், அவனை நான் எளிதில் அடக்கிவிட்டேன். உடனே அவன் அழ ஆரம்பித்ததைக் கண்டு நான் வியந்தேன். புண்பட்ட மூக்கைத் தடவிக்கொண்டு அவன் தரையில் உட்கார்ந்தான்.

மறு நாள் காலை என் எஜமானனும் அவன் எஜமானனும் வெளியே சென்றிருந்தபொழுது வீங்கியிருந்த மூக்கையும், கன்னத்தையும் தடவிக்கொண்டு அவன் சரசமாக என்னிடம் சொன்னான் :

"என் சொந்த விருப்பத்தின்மீது நான் உன்னுடன் சண்டைக்கு வந்தேன் என்று நீ நினைத்தாயா? நான் முட்டாளல்ல ; என்னை நீ வென்றுவிடுவாய் என்பது எனக்குத் தெரியும். நான் பலவீனன் ; குடிகாரன். இதைச் செய்யுமாறு என் எஜமானன் எனக்குக் கட்டளையிட்டான். 'அவனை நையப் புடை' என்றான் அவன். 'கடைக்கு எவ்வளவு நஷ்டத்தை உண்டுபண்ண முடியுமோ அவ்வளவு நஷ்டத்தை அவன் உண்டுபண்ணும்படி செய் ; அவர்களுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்படட்டும்.' என்னைப் பொறுத்தவரையில் என் சொந்த இச்சைப்படி நான் இதைச் செய்திருக்கவேமாட்டேன். என்னை எப்படி அடித்திருக்கிறாய், பார் !"

அவனை நான் நம்பினேன் ; அவனுக்காக நான் வருந்தினேன். அவன் அரைப் பட்டினி கிடந்தான் என்பதும், அவன் வைப்பாட்டி அவனை அடித்தாள் என்பதும் எனக்குத் தெரியும். எனினும் நான் அவனைக் கேட்டேன்.

"ஒருவனுக்கு விஷமிடுமாறு அவர்கள் சொன்னால், அதையும் நீ செய்வாயா ?"

"அதை நான் செய்யும்படி அவன் செய்வான்"—என்று மிருதுவாக, பரிதாபப் புன்னகை புரிந்துகொண்டு அவன் சொன்னான். "இந்தத் திறமை அவனுக்கு உண்டு."

இன்னொரு முறை அவன் என்னிடம் சொன்னான்:

"என் பெயரில் ஒரு காபெக்கூட இல்லே. வீட்டிலே உண்ண ஒன்றுமில்லே. கிழவி என்னே அரிக்கிறாள். உன் ஸ்டோரிலிருந்து ஒரு விக்கிரகத்தை நீ திருடித் தந்தால், அதை நான் விற்பேன். எனக்காக இதை நீ செய்வாயா? அல்லது ஒரு தோத்திரப் பாடல் புத்தகத்தையாவது திருடிக் கொடுப்பாயா?"

செருப்புக் கடையும், கோயில் காவற்காரனும் என் நினைவிற்கு வந்தனர். நான் நினைத்தேன், இந்தப் பயல் நிச்சயமாகக் கோள் சொல்லுவான் என்று. ஆனால் அவன் கோரிக்கையை என்னால் மறுக்க முடியவில்லே. அவனுக்கு நான் ஒரு விக்கிரகத்தைக் கொடுத்தேன். பல ரூபிள்கள் விலே மதிப்புடைய தோத்திரப் பாடல் புத்தகத்தைத் திருடுவது பெரிய குற்றமாக எனக்குப் பட்டது. ஆம், இது நூதனமாகத் தோன்றினாலும், நமது அறநெறி வியாபாரத்தில் கிடைக்கும் லாப நஷ்டக் கணக்கில் அடங்கிக் கிடக்கிறது. புனிதமான நமது கிரிமினல் சட்டம் இந்த ரகசியத்தைப் புட்டுக் காட்டுகிறது; அதற்குப் பின்னே பொதிந்து கிடக்கும் தனிச் சொத்துரிமையின் தவறை எடுத்துக் காட்டுகிறது.

ஒரு தோத்திர பாடல் புத்தகத்தைத் திருடுமாறு என்னைத் தூண்டும்படி பரிதாபகரமான இந்த மனிதனே எங்கள் கடைச்சிப்பந்தி வேண்டிக்கொண்டிருந்ததை நான் கேட்ட பொழுது, விக்கிரகத்தைத் திருடிக்கொடுத்த இந்தச் சம்பவம் என் நினைவிற்கு வந்தது. நான் பயந்துவிட்டேன். அவன் பொருளைத் தாராள மனப்பான்மையுடன் நான் கொடுத்தது கடைச்சிப்பந்திக்குத் தெரிந்துவிட்டது. அடுத்த கடைக்காரன் கோள் சொல்லிவிட்டான்.

மற்றவன் செலவில் தாராள மனப்பான்மை காட்டும் கேவலத் தன்மையும், அவர்கள் செய்த சின்னத்தனமான சதித் திட்டமும் என் ஆத்திரத்தைத் தூண்டிவிட்டன. என் மீதும், மற்றவர்மீதும் எனக்கு வெறுப்பு ஏற்பட்டது. புதுப்

புத்தகங்கள் வரும்வரையில் நான் வேதனையால் அவதிப்பட்டேன். இறுதியில் அவை வந்தன. ஸ்டோர் ரூமில் உட்கார்ந்துகொண்டு நான் அவைகளைப் பிரித்தபொழுது, அடுத்த கடைச் சிப்பந்தி என் அருகில் வந்து உட்கார்ந்து ஒரு தோத்திரப் பாடல் புத்தகம் தருமாறு கேட்டான்.

"விக்கிரகத்தைப்பற்றி என் எஜமானனிடம் நீ சொன்னயா ?" என்று நான் கேட்டேன்.

"ஆம்" என்றான் அவன். "ரகசியத்தை என்னால் பாதுகாக்க முடியாது, சகோதரா !"

நான் அதிர்ச்சி யடைந்தேன். தரையில் உட்கார்ந்து நான் அவனை உற்றுப் பார்த்தேன். பரிதாபகரமான தோற்றத்துடன் அவன் அவசர அவசரமாக முணுமுணுத்தான் :

"உன் எஜமானன் ஊகித்தான்—அல்லது என் எஜமானன் ஊகித்து, உன் எஜமானனிடம் சொன்னன் ....."

நான் அழிந்துவிட்டேன் என்று எனக்குத் தோன்றிற்று. இந்த மனிதர்கள் என்னை வலையில் சிக்கவைத்துவிட்டார்கள். இளம் குற்றவாளிகள் சிறைக்கு நான் நிச்சயமாக அனுப்பப்படுவேன். இதுதான் நிலைமை என்றால், இதைப் பற்றிக் கவலையில்லை. நான் மூழ்க வேண்டு மென்றால், ஆழம் காண முடியாத இடத்தில் முழுகுகிறேன் ! கடைச் சிப்பந்தியின் கையில் ஒரு தோத்திரப் பாடல் புத்தகத்தைத் திணித்தேன். அதைக் கோட்டில் ஒளித்துவைத்துக்கொண்டு அவன் அப்பால் சென்றான். ஆனால் விரைவில் அவன் திரும்பி வந்தான். தோத்திரப் பாடல் புத்தகம் என் காலடியில் விழுந்தது.

"இதை என்னால் எடுத்துச் செல்ல முடியாது ! நீ என்னை அழித்துவிடுவாய்" என்று சொல்லிவிட்டு அவன் அப்பால் சென்றான்.

அவன் சொன்னதன் பொருளை நான் புரிந்துகொள்ளவில்லை. நான் ஏன் அவன் அழிவுக்குக் காரணமாய் இருக்க வேண்டும் ? ஆனால் அவன் புத்தகத்தை எடுத்துச் செல்லாதது எனக்கு மகிழ்ச்சி அளித்தது. அதன் பிறகு மேலும் அதிக விநோதத்துடனும், சந்தேகத்துடனும் என்னை நடத்தினன், எங்கள் கடைச்சிப்பந்தி.

லாரியோனிச் மாடிப்படி ஏறியபொழுது இவைகளெல் லாம் என் நினைவிற்கு வந்தன. கொஞ்ச நேரத்திற்குப் பிறகு அவன் மௌனமாகத் திரும்பி வந்தான். இரவு போஜனத் திற்கு முன் நானும் அவனும் தனித்திருந்தபொழுது அவன் என்னிடம் சொன்னான் :

" கடை வேலையிலிருந்து உன்னை விடுவித்து, தொழிற் சாலைக்கு அனுப்புமாறு நான் கோரினேன். ஆனால் நான் தோல்வி அடைந்தேன். குஸ்மா என் பேச்சைக் கேட்க வில்லை. அவன் உன் பாம விரோதி..."

இந்த வீட்டில் எனக்கு இன்னொரு விரோதி இருக் கிறாள்—விளையாட்டுப் பெண் ; கடைச்சிப்பந்தியின் வருங் கால மனைவி. தொழிற்சாலையிலிருந்த வாலிபர்கள் அவளுடன் விளையாடினர். வாசற்படி அருகில் அவளுக்காக அவர்கள் காத்திருப்பர். அவள் வந்ததும் அவள்மீது மோதுவர். ஆனால் அவள் கோபித்துக்கொள்ள மாட்டாள். நாய்க் குட்டியைப்போல் மிருதுவாகக் கிறீச்சிடுவாள். ஜேப்பில் நிறைத்துக்கொண் டிருக்கும் மிட்டாயியைக் காலையிலிருந்து இரவுவரையில் சுவைத்துக்கொண் டிருப்பாள். சுழலும் கண் கள் படைத்த அவளுடைய களையற்ற முகம் பார்க்க அரு வருப்பாக இருந்தது. கூடார்த்தமுள்ள புதிர்களை அவள் என் னிடமும், பாவெலிடமும் அடிக்கடி கேட்பாள் ; அல்லது ஆபாசமான கதைகள் சொல்லுவாள்.

ஒரு நாள் வயது முதிர்ந்த ஒரு பெயின்டர் அவளிடம் சொன்னான் :

" நீ வெட்கமற்ற சிறுமி !"

ஆபாசமான பாட்டை ஒரு மேற்கோள் காட்டி, அவள் உல்லாசமாகச் சொன்னாள் :

மங்கை கூச்சமுடையவளா யிருப்பின்,
காளைகள் அவளைக் கடந்து சென்றுவிடுவர்.

இதற்கு முன் இத்தகைய பெண்ணை நான் கண்டதே இல்லை. அவள் வெறுக்கத்தக்கவளாக இருந்தாள். ஒழுங் கற்ற அவள் நடத்தை எனக்குப் பீதியளித்தது. அவளை நான்

வெறுக்கிறேன் என்பது அவளுக்குத் தெரிந்ததும், அவள் மேலும் என்னை நெருங்கினாள்.

ஒரு நாள் ஊறுகாய் ஜாடிக்குச் சூடேற்ற நானும் பாவெலும் அவளுக்கு உதவிபுரிந்துகொண்டிருந்தபோது, அவள் எங்களிடம் சொன்னாள் :

" எப்படி முத்தமிடுவது என்பதை நான் உங்களுக்குக் கற்றுக் கொடுக்கட்டுமா ?"

"இது உன்னைவிட எனக்கு நன்றாகத் தெரியும்" என்று சிரித்துக்கொண்டே பாவெல் பதில் சொன்னான். தன் காதலனை முத்தமிடுமாறு நான் அவளுக்கு மூளைட்டுத்தனமாக உபதேசம் செய்தேன். இது அவளை ஆத்திரமூட்டிற்று.

" நாட்டுப்புறத்தானே ! உன்னிடம் அன்பாக நடக்க முயன்ற சிறுமிக்கு நீ அளிக்கும் பரிசா இது ! நீ அவளை உதாசீனம் செய்கிறாய் !" விரலை அசைத்துக்கொண்டு அவள் மேலும் சொன்னாள் : " நீ பொறு ! நான் இதை மறக்க மாட்டேன் !"

என்னை ஆதரித்துப் பாவெல் சொன்னான் :

"நீ செய்வதை உன் காதலன் கேள்விப்பட்டால் அவனே உன்னை நையப் புடைப்பான் !"

பருமனைந்த தன் முகத்தை அவள் அகந்தையுடன் சுருக்கினாள்.

"அவனுக்கு நான் பயப்படவில்லை! என் வாதட்சிணைக்கு அவனைவிட உயர்ந்த, டஜன் கணக்கான கணவர்கள் எனக்குக் கிடைப்பார்கள்! கலியாண நாள் வரையில்தான், சிறுமி, மனம் போல் இன்பம் அனுபவிக்க முடியும்."

பிறகு பாவெலுடன் சரஸமாட அவள் ஆரம்பித்தாள். அன்றிலிருந்து என்னைப்பற்றி இடைவிடாது கோள் சொன்னாள்.

கடையில் வேலைசெய்வது மேலும் சிரமமாயிற்று. எல்லா மத புத்தகங்களையும் நான் படித்துவிட்டேன். சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்த மத வெறியர்களின் பேச்சு எனக்குச் சலிப்பைத் தந்தது. எஞ்சியிருந்த ஒரே ஆகர்ஷண சக்தி பியோட்டர் வாஸில்யெவ். வாழ்க்கையைப்பற்றி அவனுக்கு இருந்த அறிவும், விஷயங்களை

உணர்ச்சி பூர்வமாகவும், ருசிகரமாகவும் சொல்லும் அவன் திறமையும் என்னைக் கவர்ந்தன. தீர்க்கதரிசி எலிஸீ இப்படித் தான் தனியாகவும், பழிவாங்கும் தன்மையுடனும் பூமியில் அலைந்திருக்க வேண்டும் என்று நான் கருதினேன்.

ஆனால் ஜனங்களைப் பற்றி என் கருத்தையோ, நான் கண்டவைகளையோ சொன்னால், அதை அவன் கவனமாகக் கேட்பான். பிறகு எல்லாவற்றையும் கடைச் சிப்பந்தியிடம் சொல்லுவான். அவன் என்னை ஏசுவான்; அல்லது கேலி செய்வான்.

அவன் சொன்னவைகளில் சிலவற்றை - கவிதையையும், மேற்கோள்களையும்–குறித்து வைக்கும் புத்தகத்தில் குறித்து வைத்திருப்பதாக ஒரு நாள் நான் கிழவனிடம் சொன்னேன். இது அவனைப் பீதி அடையச் செய்தது; அவன் உடனே என் பக்கம் சாய்ந்துகொண்டு பீதியுடன் கேட்டான் :

" இப்படி நீ ஏன் செய்தாய் ? இது சரியல்ல, பையா ! ஞாபகத்திற்காக இப்படிச் செய்தாயா ? நீ இப்படிச் செய்யக் கூடாது ! நீ சொம்பப் போக்கிரி ! ஆனால் அந்தக் குறிப்புகளை என்னிடம் கொடுத்துவிடுவாய் ; மாட்டாயா ?"

அந்த நோட் புத்தகத்தைத் தன்னிடம் கொடுத்துவிடு மாறு, அல்லது அதை எரித்துவிடுமாறு நீண்டநேரம் என்னை அவன் வற்புறுத்தினான் ; பிறகு கிளர்ச்சியுடன் அவன் தணிந்த குரலில் கடைச்சிப்பந்தியிடம் பேசினான்.

வீடு திரும்பும்பொழுது கடைச்சிப்பந்தி என்னிடம் சொன்னான் :

" நீ குறிப்புகள் வைத்திருப்பதாகத் தெரிகிறது. இதை நிறுத்திவிடு, தெரிகிறதா ? துப்பறிபவர்கள்தான் இப்படிச் செய்வார்கள்."

" ஸிதானேவ் இப்படிச் செய்கிறானே !" என்று நான் அஜாக்கிரதையாகச் சொல்லிவிட்டேன். " அவனும் குறிப் புகள் வைத்திருக்கிறான்."

" அவனுமா ? முட்டாள் !"

நீண்ட நேரத்திற்குப் பிறகு அசாதாரண அன்புடன் அவன் சொன்னான் :

" உன் நோட் புத்தகத்தையும், ஸிதானேவ் நோட் புத்தகத்தையும் எனக்குக் காட்டு. உனக்கு அரை ரூபிள் பரிசு தருகிறேன். ஸிதானேவுக்குத் தெரியாமல், சந்தடியின்றி இதைச் செய்ய வேண்டும்."

அவன் வேண்டுகோளை நான் நிறைவேற்றுவேன் என்ற நம்பிக்கை அவனுக்கு இருக்க வேண்டும். ஏனெனில் மறு பேச்சுப் பேசாமல் அவன் வேகமாகச் சென்றுவிட்டான்.

வீடு திரும்பியதும், கடைச் சிப்பந்தி சொன்னதை நான் ஸிதானேவிடம் சொன்னேன். அவன் முகத்தைச் சுளித்தான்.

" நீ ஏன் அவனிடம் சொன்னாய் ? உன் நோட் புத்தகத்தையும் என் நோட் புத்தகத்தையும் திருட யாரையாவது அவன் ஏற்பாடு செய்வான். உன் நோட் புத்தகத்தை என்னிடம் கொடு. அதை நான் ஒளித்து வைக்கிறேன். உன்னை அவன் விரைவில் ஒழித்துவிடுவான். பார்த்துக்கொண்டே இரு !"

இது எனக்கும் தெரியும். பாட்டி நகரத்திற்குத் திரும்பியதும் இந்த வேலையை விட்டுவிட நான் முடிவுசெய்தேன். ஒரு பணக்காரரின் புதல்விகளுக்குப் பின்னல் கற்றுக்கொடுத்துக்கொண்டு குளிர்காலத்தில் அவள் பாலக்னவில் இருந்தாள். தாத்தா குனவினேவில் வசித்தார். அவரைப் பார்க்க நான் அங்கு செல்லவில்லை. அபூர்வமாக அவர் நகரத்திற்கு வந்த சமயங்களில்கூட அவர் என்னைச் சந்திக்கவில்லை. ஒரு நாள் வீதியில் அவரை நான் சந்தித்தேன். ஒரு பாதிரியைப் போல் கௌரவத்துடனும், விறைப்பாகவும், பெரிய கோட் அணிந்துகொண்டு அவர் நடந்து சென்றுகொண்டிருந்தார். அவரை நான் வரவேற்றபொழுது கண்களைப் பாதுகாக்க ஒரு கையை உயர்த்திக்கொண்டு, மறுதியாகச் சொன்னார் :

" நீயா ? நீ கடவுளைச் சித்தரிப்பவனைப் விட்டாயாமே ! நல்லது, அந்த வேலையைச் செய்துகொண்டிரு !"

என்னை அப்பால் தள்ளிவிட்டு, கௌரவத்துடனும், விறைப்பாகவும் அவர் நடந்து சென்றார்.

அந்த நாட்களில் நான் பாட்டியை அபூர்வமாகத்தான் கண்டேன். வயதால் முதிர்ந்துகொண்டிருந்த தாத்தாவையும்

போன்களையும் பராமரிப்பதற்காகப் பாட்டி இடைவிடாது வேலைசெய்துகொண் டிருந்தாள். அழகிய, கற்பனை லோகத்தில் சஞ்சரிக்கிற, புத்தகப் பித்தனுகிய ஷாஷா அவளுக்குக் கவலை அளித்தான். அவன் சாயப் பட்டறையில் வேலை செய்தான். அடிக்கடி இடம் மாறிகொண் டிருந்தான். ஒரு வேலையை விட்டுவிட்டு இன்னொரு இடத்தில் வேலைக்கு அமரும்வரை பாட்டிக்கு அவன் சுமையாக இருந்தான். இந்த இடைக் காலத்தில் பாட்டி அவனைப் பராமரிக்க வேண்டும் என்பது மாத்திரமல்ல, அவனுக்கு வேலையும் தேடிக்கொடுக்க வேண்டும். ஷாஷாவின் சகோதரியும் பாட்டிக்கு ஒரு சுமையாக இருந்தாள். அவள் குடிக்காரக் கணவன் அவளை நையப்புடைத்து, வீட்டைவிட்டும் துரத்திவிட்டான்.

பாட்டியை நான் சந்தித்தபொழு தெல்லாம் அவள் பெருந்தன்மையை நான் வியப்பேன். ஆனல் இந்த அற்புத மான ஆத்மா கற்பனை லோகத்தில் சஞ்சரிக்கிறுள் என்பதையும், யதார்த்தத்தை அவள் காணவில்லை என்பதையும் நான் உணர்ந்தேன். என்னை நிலைகுலைத்த பயமும் கவலையும் அவளை அணுகக்கூட இல்லை.

"நாம் எல்லாவற்றையும் சகிக்கவேண்டும், அல்யோஷா."

வாழ்க்கையின் விகாரத்தன்மையை நான் வர்ணித்த பொழுது, ஜனங்களின் கஷ்டத்தை நான் விவரித்தபொழுது அவள் மேற்கண்டவாறு பதில் சொன்னுள். இவை களை யெல்லாம் நான் உக்ரமாகக் கண்டித்தேன்; என்றலும் சகிப்பதற்காக நான் தோன்றவில்லை. கால்நடை, மரம், கல் ஆகியவைகளுக்கே உரித்தான இந்தக் குணத்தை நான் எப்பொழுதாவது மேற்கொண்டால், என்னைச் சோதனை செய்துகொள்ள, என் பலத்தைப் பரிசோதனை செய்ய, என் உறுதியை அளந்துபார்க்க நான் இவ்வாறு செய்தேன். பக்குவமடையாத வாலிபர்கள் சில சமயங்களில் முட்டாள் தனமாக, அல்லது வயதானவர்களின் பலத்தைக் கண்டு பொருமைப்பட்டு, தங்கள் சக்திக்கு மிஞ்சின பளுவை வெற்றிகரமாகத் தூக்கி, தங்கள் எலும்புகளையும், தசை நார்களையும் பலவீனப்படுத்திக்கொள்வார்கள்; தற்பெருமை

யில், பயிற்சிபெற்ற பலசாலிகள் தூக்குவதைப்போல் பெரும் பளுவைத் தூக்க முயலுவார்கள்.

தேகபூர்வமாகவும், மானசிகமாகவும் நானும் இதைத் தான் செய்தேன். ஆனல் பெரும் தீங்குக்கு ஆளாகாமல், நொண்டியாகாமல் அதிர்ஷ்டம்தான் என்னைக் காத்தது. ஏனெனில் சகிப்புத்தன்மையைப்போல், நிலைமைக்குப் பணிந்து போவதைப்போல், வேறெதுவும் ஒரு மனிதனை அவ் வளவு பயங்கரமாகக் சிதைத்துவிடாது.

சிதைந்துபோன நான் நிலத் தாயிடம் இறுதியில் திரும்ப வரும்பொழுது பெருமையுடன் நான் சொல்ல முடி யும்: என் ஆத்மாவுக்குத் தினையிட நல்ல மனிதர்கள் பிடி வாதமாகச் செய்யும் முயற்சிகளை நாற்பது வருடங்கள் நான் உறுதியாக எதிர்த்து நின்றேன் என்று !

கேளிக்கையில் ஈடுபட வேண்டும், மற்றவர்களுக்கு விருந்தளிக்க வேண்டும், ஜனங்களிடம் சிரிப்பைத் தூண்ட வேண்டும் என்னும் தடுக்க முடியாத ஆசை எனக்கு அடிக்கடி ஏற்பட்டது. இந்த முயற்சியில் நான் வெற்றி யும் பெற்றேன். மார்க்கெட்டில் வியாபாரம் செய்த வியாபாரிகளைச் சித்தரிக்கும் திறமை எனக்கு இருந்தது. மூஷிக்குகளும், அவர்கள் பெண்களும் எவ்வாறு விக்கிரகங் களை வாங்கினர் விற்றனர் என்பதையும், எவ்வளவு சாமர்த்திய மாகக் கடைச்சிப்பந்திகள் அவர்களை ஏமாற்றினர் என்பதை யும், மத வெறியர்கள் எவ்வாறு முடிவின்றி விவாதித்தனர் என்பதையும் நான் வர்ணிப்பேன்.

தொழிற்சாலையி லிருந்தவர்கள் விழுந்து விழுந்து சிரிப் பார்கள் ; பிரஷைக் கீழே வைத்துவிட்டு, என் நாடகத்தைப் பார்ப்பார்கள். நாடகம் முடிந்ததும், லாரியோனிச் சொல்லுவான் :

"வேலை கெடாமல் இருப்பதற்காக உன் வேடிக்கைகளை இரவு சாப்பாட்டுக்குமேல் வைத்துக்கொள்."

இத்தகைய நடிப்புக்குப் பிறகு, என்மீதிருந்த பளுவை இறக்கி வைத்துவிட்டதைப் போன்று எனக்குத் திருப்தி ஏற் படும். ஒரு மணி நேரமாவது என் மூளை காலியாக இருக்

கும். ஆனால் மீண்டும் கூரிய சிறிய ஆணிகளால் அது நிறைந்துவிடும்; அந்த ஆணிகள் குத்த ஆரம்பித்துவிடும்.

என்னைச் சுற்றி யிருப்பவை அழுகி நாறின; நானும் அதில் சிக்கிக்கொள்வதாக எனக்குத் தோன்றிற்று.

"என் வாழ்நாள் முழுதும் இப்படித்தான் இருக்குமா?" என்று நான் நினைத்தேன். "இதைவிட நல்லதைக் காணுமல், இதைவிட நல்லதைத் தெரிந்துகொள்ளாமல், இந்த மனிதர்களைப்போன்றுதான் நானும் வாழவேண்டுமா?"

"நீ குழப்படைந்தவனைக் காணப்படுகிறாய், மாக்ஸிமிச்" என்று என்னைப் பரிசீலனை செய்துகொண்டு சொன்னான் ஸிக்காலெவ்.

"உனக்கு என்ன நேர்ந்தது?" என்று அடிக்கடி கேட்டான் ஸிதானேவ்.

என்ன பதில் சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை.

என் ஆத்மாவில் தான் குத்திய சிறந்த முத்திரைகளை வாழ்க்கை என்பது தானே உறுதியுடன் அழித்துவிட்டு, அதற்குப் பதிலாக வன்மத்துடன் உபயோகமற்றவைகளைக் இறுக்கி வைத்தது. அது பிரயோகித்த பலாத்காரத்தைக் கோபத்துடனும், உறுதியுடனும் நான் எதிர்த்தேன். மற்றவர்கள் மிதந்து சென்ற அதே நதியில் நானும் மிதந்து சென்றேன். ஆனால் மற்றவர்களைவிட ஜலம் எனக்கு அதிகமாகக் குளிர்ந்தது, கவர்ச்சியற்றிருந்தது. சில சமயங்களில் ஆழத்தில் அமிழ்வதாக எனக்குத் தோன்றிற்று.

எனினும் ஜனங்கள் என்னை நன்றாக நடத்தினர். பாவெலைப் பார்த்துக் கூச்சலிட்டதைப்போல் என்னைப் பார்த்துக் கூச்சலிடவில்லை. அவர்கள் எனக்குக் கட்டளை பிறப்பிக்கவுமில்லை. தங்கள் மரியாதையைக் காட்டுவதற்காக குலப் பெயரால் என்னை அவர்கள் அழைத்தனர். இவைகளெல்லாம் ஆறுதல் தரக் கூடியவைதான். ஆனால் எவ்வளவு பேர் வோட்கா குடித்தனர் என்பதையும், குடித்ததும் அவர்கள் எவ்வளவு வெறுக்கத்தக்கவர்களாக மாறிவிடுகிறார்கள் என்பதையும், பெண்களுடன் அவர்களுக்கு இருந்த தொடர்பு எவ்வளவு பாசாங்கானது என்பதையும்—ஆயினும்

பெண்களும் மதுவும்தான் வாழ்க்கை அளித்த மாற்று மருந்துகள் என்பதையும் நான் உணர்ந்தேன்.

என்றாலும், எண்ணியபொழுது என் மனம் வேதனையால் விறைத்தது. புத்திசாலித்தனமும், வீரமும்படைத்த நடால்யா கோஸ்லோவ்ஸ்கயாகூடப் பெண்களை ஒரு மாற்றுமருந்தாகத் தான் கருதினாள் என்பதை நான் துக்கத்துடன் நினைவு படுத்திக்கொண்டேன்.

அப்படியானால் பாட்டி? ராணி மார்கோட்? ஆகியவர்க களைப்பற்றி என்ன?

மரியாதையுடன்தான் ராணி மார்கோட்டை நினைவு படுத்திக்கொண்டேன். மற்றவர்கள் எல்லோரையும்விட அவள் முற்றிலும் மாறுபட்டிருந்ததால், அவளை நான் கன வில் கண்டதைப்போன் றிருந்தது.

பெண்களைப்பற்றி நான் அதிகம் சிந்திக்க ஆரம்பித்தேன். எனது அடுத்த விடுமுறையை மற்றவர்கள் இன்பம் துய்க்கும் இடத்தில் கழிப்பதைப்பற்றி நான் திட்டமிட ஆரம்பித் தேன். தேகத் தேவையால் தூண்டப்பட்ட ஆசையல்ல, இது. நான் பலசாலியாகவும், சீர்தூக்கிப் பார்க்கிறவனாகவும் இருந்தேன். ஆனால் மிருதுவான, உத்வேகத்தைப் புரிந்து கொள்ளுகிற யாரையாவது கட்டித்தழுவ வேண்டும் என்னும் ஆசை, தாயிடம் வேதனையைக் கொட்டுவதைப்போல் என் வேதனையைக் கொட்டக் கூடிய யாரையாவது அணைத்துக் கொள்ள வேண்டும் என்னும் ஆசை, எனக்கு ஏற்பட்டது.

பாவெல்மீது எனக்குப் பொறுமை ஏற்பட்டது. ஒரு நாள் இரவு நாங்கள் அருகருகே படுத்திருந்தபொழுது வீட்டு வேலைக்காரியுடன் தனக்கு ஏற்பட்ட காதலை அவன் ரகசிய மாகச் சொன்னான்.

" ஒரு மாதத்திற்கு முன் அவளால் எனக்கு எந்தவித மான உபயோகமும் இருக்கவில்லை ; அவள்மீது நான் பனிக் கட்டியை எறிந்தேன். ஆனால் இப்பொழுது அங்குள்ள பெஞ்சில் அவள் எனக்குஅருகில் உட்காரும்பொழுது அவ னுக்கு நிகர் யாருமே இல்லை என்று எனக்குத் தோன்றி யது. இதை நினைத்துப் பார் சகோதரா !"

" நீ எதைப்பற்றி அவளிடம் பேசுகிறாய் ?"

"எல்லாவற்றையும்பற்றி, தன்னைப்பற்றி அவள் சொல்லுகிறாள்; என்னைப்பற்றி நான் சொல்லுகிறேன். நாங்கள் முத்தமிட்டுக்கொள்ளும்பொழுது...அவள் கொஞ்சம் விறைப்பாக இருக்கிறாள். அவள் எவ்வளவு நல்லவள் என்பதைக் கற்பனை செய்து பார்க்க முடியாது! நீ விடாது புகை குடிக்கிறாயே!"

நான் அளவுக்கு மிஞ்சிச் சிகரெட் குடித்தேன். புகையிலை மூளைக்கு ஏறி என் சிந்தனையை மழுங்க வைத்தது. அதிர்ஷ்டவசமாக வோட்காவின் ருசியும், மணமும் எனக்கு வெறுப்பை அளித்தன. ஆனால் பாவெல் நிறையக் குடித்தான். குடிபோதையில் இருக்கும்பொழுது அவன் ஓலமிடுவான்:

"நான் வீடு செல்ல விரும்புகிறேன்! வீட்டிற்குச் செல்ல என்னை அனுமதியுங்கள்!"

அவன் ஒரு அநாதை; அவன் பெற்றோர் நீண்ட காலத்திற்கு முன்னரே இறந்துவிட்டனர். அவனுக்கு சகோதரனோ, சகோதரியோ இல்லை. எட்டாவது வயதிலிருந்து அவன் அன்னியருடன் வசித்து வருகிறான்.

வசந்த காலக் கவர்ச்சியால் கவரப்பட்ட இந்தக் குழப்பமான மனோ நிலையில், கப்பலில் வேலை தேட நான் முடிவு செய்தேன். கப்பலில் வேலைக்கு அமர்ந்தால், ஆஸ்ட்ராக்கான் சென்று, அங்கிருந்து பெர்ஸியாவுக்கு ஓடிவிடலாம்.

பெர்ஸியாவை நான் ஏன் தேர்ந்தெடுத்தேன் என்பது எனக்கு நினைவில்லை. ஒருக்கால் நிழனி—நோவோகிராட் சந்தைக்கு வந்த பெர்ஸிய வியாபாரிகளால் நான் ஆகர்ஷிக்கப்பட்டிருக்கலாம். சூரிய ஒளியிலே காய்ந்தவாறு, ஹஷீக்கா குடித்துக்கொண்டு அவர்கள் அங்கே உட்கார்ந்து இருப்பார்கள். வர்ணம் தீட்டப்பட்ட தாடிகளும் பெரிய, கரிய, ஒளிவீசும் கண்களும் படைத்த கல் விக்கிரகங்கள் அங்கே கம்பீரமாக நிற்கும்.

ஈஸ்டர் வாரத்தில் பெயின்டர்களில் சிலர் கிராமத்திற்குச் சென்றிருந்தபொழுது, மற்றவர்கள் குடிவெறியிலிருந்த பொழுது, உலாவக் கிளம்பிய நான், பாட்டியின் மருமகனும் என் மாஜி எஜமானனுமாகிய அந்த மனிதனை ஓக்காவுக்கு மேலே இருந்த வயலில் சந்தித்திருக்க வில்லையென்றால், நான்

ஓடிப்போ யிருப்பேன். தொப்பியைச் சாய்வாகத் தலையில் வைத்துக்கொண்டு, கால் சட்டைப் பைகளுக்குள் கைகளைத் திணித்துக்கொண்டு, பழுப்புநிறக் கோட் அணிந்துகொண்டு, சிகரெட்டை வாயில் வைத்துக்கொண்டு அவன் நடந்துகொண் டிருந்தான். அவனை நான் அணுகியதும், நேச பாவத்தில் அவன் புன்னகை புரிந்தான். உல்லாசமான, சுதந்திரம் விரும் பும் மனிதனாக அவன் காட்சியளித்தான். நானும் அவனும் வயலிலே தனித்திருந்தோம்.

"பெஷ்கோவ்! இயேசுநாதர் தோன்றிவிட்டார்!"

பரஸ்பரம் ஈஸ்டர் முத்தம் பரிமாறிக்கொண்ட பிறகு, என் வாழ்க்கை எப்படி இருக்கிறது என்று அவன் விசாரித் தான். தொழிற்சாலையும், நகரமும், பொதுவாக அனைத்தும் எனக்குச் சலிப்பளிக்கிறது என்றும், பெர்ஸியாவுக்குப் போக முடிவுசெய்துவிட்டதாகவும் ஒளிவு மறைவின்றி நான் சொன்னேன்.

"இந்த யோசனையை விட்டுவிடு!" என்று அவன் இதய பூர்வமாகச் சொன்னான். "பெர்ஸியா நாசமாய் போகட் டும்! எனக்குத் தெரியும், சகோதரா! உன் வயதில் ஓடிப் போக வேண்டும் என்ற ஆசை எனக்கும் இருந்தது. ஆனால் எங்கு போக வேண்டும் என்பது சைத்தானுக்குத்தான் தெரியும்!"

சைத்தானை அவன் அலட்சியமாகப் பந்தாடிய முறை என்னைக் கவர்ந்தது. அவன் போக்கில் வசந்த காலத்தைப் போன்ற சிறந்த தன்மை இருந்தது. அவனைச் சுற்றியிருந்த அனைத்தும் கவர்ச்சிகரமாக இருந்தன.

"சிகரெட் பிடிக்கிறாயா?" என்று கேட்டுக்கொண்டே பருமனான சிகரெட் நிறைந்த வெள்ளி சிகரெட் கேஸை என் பக்கம் நீட்டினான்.

இது என்னைப் பரிபூரணமாக வென்றுவிட்டது.

"கேள், பெஷ்கோவ், என்னிடம் நீ மீண்டும் வேலை செய்ய வருகிறாயா? கண்காட்சியில் சில வேலைகளை நான் நாற்பதாயிரத்திற்கு காண்டிராக்ட் எடுத்திருக்கிறேன். ஓவர் ஸியர் வேலை உனக்குத் தருகிறேன். கட்டிடச் சாமான்களை நீ வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும்; உரிய காலத்தில்

சாமான்களை உரிய இடத்தில் பட்டுவாடா செய்ய வேண்டும், தொழிலாளர்கள் திருடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும், இதுதான் உன் வேலை. இந்த வேலை உனக்குப் பிடித்திருக்கிறதா? மாதத்திற்கு ஐந்து ரூபிள் சம்பளம்; பகல் சாப்பாட்டுக்கு ஐந்து காபெக். என் பெண்களுடன் நீ மல்லிட வேண்டியதில்லை. காலையில் வேலைக்குச் செல்ல வேண்டும்; மாலையில் திரும்பி வர வேண்டும். பெண்கள் எதிலும் தலையிட மாட்டார்கள். நாம் சந்தித்ததாக அவர்களிடம் சொல்லாதே. ஞாயிற்றுக்கிழமை அகஸ்மாத்தாக வீட்டிற்கு வா. தெரிகிறதா?''

சிறந்த நண்பர்களாக நாங்கள் பிரிந்தோம். நாங்கள் பிரியும்பொழுது என்னுடன் அவன் கைகுலுக்கினான்! தூரத்திலிருந்து தொப்பியை வீசினான்.

நான் வேறு வேலைக்குச் செல்வதாகப் பெயின்டர்களிடம் சொன்னபொழுது அவர்களில் பலர் வருந்தினர். இது எனக்குப் பெரிதும் திருப்தி அளித்தது. பாவெல் நிலைகுலைந்து விட்டான்.

''அந்த மூஷிக்குகளுடன் வாழ்வதற்காக நீ எங்களைப் பிரிந்து செல்வதை நினைக்கக்கூட முடியவில்லை!'' என்று, நிந்திக்கும் முறையில் அவன் சொன்னான். ''தச்சர்கள், காகிதத்தைத் தொங்கவிடுகிறவர்கள்.....பூ! பிஷப் ஸ்தானத்திலிருந்து ஸெக்ஸ்டன் ஸ்தானத்திற்கு உயர்வது என்று இதற்குத்தான் பெயர்!''

ஸிக்காலெவ் முணுமுணுத்தான்:

''ஆழத்தை மீன் தேடுவதைப்போல் வாலிபன் தொல்லையைத் தேடுகிறான்.''

பெயின்டர்கள் எனக்கு அளித்த பிரிவுபசாரம் மந்தமாகவும் பயங்காமாகவும் இருந்தது.

''நிச்சயமாக நீ இதையும், அதையும் முயன்று பார்க்க வேண்டும்'' என்று குடியால் வெளிறிய ஸிக்காலெவ் சொன்னான். ''ஆனால் ஆரம்பத்தில் பிடித்த ஒன்றை இறுதிவரை விடாப்பிடியாகப் பிடித்துத்கொள்வதுதான் நல்லது.''

''மங்களம் உண்டாகட்டும்'' என்று சாந்தமாகச் சொன்னான் லாரியோனிச்.

கடமைக்காக அவர்கள் பேசுகிறார்கள் என்று நான் கருதினேன். எங்களைப் பிணைத்திருந்த பந்தம் திடீரென்று அறுந்துவிட்டது.

மச்சில் படுத்திருந்த குடிகாரன் கோகலோவ் படுக்கையில் புரண்டுகொண்டு காகரத்த குரலில் சொன்னான்:

"உங்கள் எல்லோரையும் விரும்பினால் நான் சிறையில் தள்ளுவேன்! எனக்கு ஒரு ரகசியம் தெரியும்; நீங்கள் கடவுளை நம்பவில்லை! ஆஹா....."

மூகமில்லாத, பூர்த்தி செய்யப்படாத விக்கிரகங்கள் சுவரிலே சாய்த்து நிறுத்தப்பட்டிருந்தன. கண்ணாடிப் பந்துகள் உத்திரத்திலே தொங்கின. சிறிது காலமாகச் செயற்கை வெளிச்சமின்றி நாங்கள் வேலை செய்துவருவதால், கண்ணாடிப் பந்துகள் எங்களுக்குத் தேவைப்படவில்லை. எனவே அவைகளில் தூசி படிந்திருந்தது. அந்த இடம் என் நினைவில் நிரந்தர இடம் பெற்றிருந்ததால், நான் கண்களை மூடினால், மேஜைகள் நிறைந்த அந்த இருண்ட அறையும், ஜன்னலில் வைக்கப்பட்டிருக்கும் பெயின்ட் டப்பாக்களும், பிரஷ்குவியல்களும், விக்கிரகங்களும், நெருப்பணைப்போன் தொப்பியைப் போன்றும் குழாய் அருகிலுமிருந்த பக்கெட்டுகளும், கட்டிலின் ஓரத்தில் தொங்கிக்கொண்டிருந்த, காலுறை அணியாத பிணத்தின் கால்களைப்போல் நீலநிறமாக இருந்த கோகலோவின் கால்களும் என் மனக் கண்முன் உடனே காட்சியளிக்கும்.

நான் விரைவில் அங்கிருந்து செல்ல விரும்பினேன். ஆனால் தக்ககரமான காலத்தை நீடிக்க ரஷியர்கள் விரும்பினர். பிரிவுபசாரம் ஈமச் சடங்கைப் போன்றிருந்தது.

முகத்தைச் சுளித்துக்கொண்டு ஸிக்காரெவ் சொன்னான்:

"அரக்கன் என்ற அந்தப் புத்தகத்தை நான் உனக்குத் திருப்பித் தர முடியாது. வேண்டுமானால் அதற்காக உனக்கு இருபது காபெக் தருகிறேன்."

லெர்மண்டாவின் அந்தப் புத்தகத்தை வியோதிக நெருப்பணைக்கும் படைத் தலைவன் பரிசாக அளித்ததால், அதைப் பிரிவது சிரமமாக இருந்தது. ஆனால் சிறிது இறுமாப்புடன் நான் பணத்தை வாங்க மறுத்ததும் பணத்தைச் சாந்தமாகப்

பர்ஸில் போட்டுக்கொண்டு, கலக்கமின்றி ஸிக்காரெவ் சொன்னான் :

"உன் விருப்பப்படி செய்! ஆனால் நான் புத்தகத்தைத் தரமாட்டேன். அந்தப் புத்தகம் உன்னிடம் இருக்கக் கூடாது. அத்தகைய புத்தகத்தை வைத்திருந்தால் நொடிப்பொழுதில் நீ சிக்கலில் சிக்கிக்கொள்வாய்."

"ஆனால் அதைக் கடைகளில் விற்கிறார்களே. அதை நான் என் கண்களால் கண்டேனே" என்று நம்பிக்கையூட்டும் முறையில் நான் சொன்னேன்.

"அதனால் என்ன? கைத் துப்பாக்கியைக்கூடத்தான் கடையில் விற்கிறார்கள்" என்று நம்பிக்கையூட்டும் முறையில் அவனும் பதில் சொன்னான்.

அவன் அதைத் திருப்பித் தரவே இல்லை.

எஜமானனின் விதவையிடம் விடைபெற நான் மாடிக்குச் சென்றதும், வாசற்படியில் அவள் மருமகளைச் சந்தித்தேன்.

"நீ போவதாகச் சொல்லுகிறார்களே" என்று அவள் கேட்டாள்.

"ஆம், நான் போகிறேன்."

"அது நல்லதுதான். இல்லையெனில் அவர்கள் உன்னை வேலையிலிருந்து நீக்கி யிருப்பார்கள்" என்று சொன்னாள். மரியாதையாக இதை அவள் சொல்லவில்லை யென்றாலும், பாசாங்கின்றிச் சொன்னாள்.

என் குடிகார எஜமானி சொன்னாள் :

"போய் வா, கடவுள் உனக்குத் துணைபுரியட்டும்! நீ கெட்ட பையன்; அடங்காப்பிடாரி. நீ என்னிடம் கெட்டவனாக நடந்துகொள்ளவில்லை; ஆனால் நீ நல்லவனல்ல என்று எல்லோரும் சொல்லுகிறார்கள்."

திடீரென்று அவள் அழ ஆரம்பித்தாள். கண்ணீருக்கிடையே அவள் முணுமுணுத்தாள் :

"என் கணவர் மாத்திரம் உயிருடன் இருந்திருந்தால்? அவர் ஆத்மா சாந்தி அடையட்டும்! உன் காதுகளை அவர் திருகியிருப்பார்; உன் தலையில் குட்டியிருப்பார். ஆனால் துரத்திவிடாமல், உன்னை, இங்கேயே வைத்துக்கொண்டிருப்பார். இந்த நாட்களில் எல்லாம் வித்தியாசமாக

இருக்கின்றன. ஏதாவது தவறு நேர்ந்துவிட்டால், உடனே நீ வெளியே போய்விடுகிறாய். நீ என்ன ஆகப்போகிறாய், பையா !''

16

கண்காட்சி மைதானத்திற்கு நானும் என் எஜமானனும் நதிமீது படகில் சென்றுகொண்டிருந்தோம். இரு மருங்கிலும் கட்டிடச் சாமான்கள் குவிந்து கிடந்தன. இரு கரையும் நதி பெருகி ஓடிக்கொண் டிருந்தது. நான் தண்டு வலித்துக் கொண்டிருந்தேன். என் எஜமானர் சுக்கானில் இருந்தார். சாந்தமான நதியில் படகு சென்றுகொண் டிருந்தது.

''இந்த வசந்தத்தில் நதியில் எவ்வளவு ஜலம் பெருகி இருக்கிறது ? இது நமது வேலையைத் தடைப்படுத்தும் !'' என்று சுருட்டைப் பற்றவைத்துக்கொண்டு என் எஜமானன் முணுமுணுத்தான். துணி எரிவதைப்போன்ற நாற்றம் சுருட்டிலிருந்து வீசிற்று.

''ஜாக்கிரதை !'' என்று பீதியுடன் அவன் கூவினான். ''விளக்குக் கம்பத்தை நோக்கி நாம் போய்க்கொண் டிருக்கிறோம் !''

படகைச் சரியான திசையில் திருப்பிவிட்டு, அவன் சொன்னான் :

''நல்ல படகை நமக்குக் கொடுத்திருக்கிறார்கள், வேசி மக்கள் !''

ஜலம் வடிந்ததும், நாங்கள் கடைகள் கட்ட வேண்டிய இடத்தை அவன் சுட்டிக் காட்டினான். சிறிய மீசையும், நன்கு கூஹவரம் செய்யப்பட்ட முகமும் படைத்த அவன், வாயில் சுருட்டை வைத்துக்கொண்டிருந்த அவன், ஒரு காண்டிராக்டரைப்போல் காட்சியளிக்கவில்லை. தோலாலான மேல் சட்டையும், நீளமான பூட்சும் அவன் அணிந்திருந்தான். அவன் தோளில் வேட்டையாடும் பொருள்களைக் கொண்ட ஒரு பை தொங்கிக்கொண் டிருந்தது. அவன் காலடியில் விலையுயர்ந்த இரட்டைக்குழல் துப்பாக்கி கிடந்தது. கிளர்ச்சியுடன் தனது தோல் தொப்பியைக் கண்வரையில் கீழே இழுத்து

விட்டுக்கொண்டும், உதடுகளைப் பிதுக்கிக்கொண்டும், ஆர்வத்துடன் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டும் அவன் உட்கார்ந்திருந்தான். சிறிது நேரத்திற்குப் பிறகு தொப்பியை பின்னே தள்ளிவிட்டு, திடீரென்று இளமை எய்தி, இன்பக் கனவு கண்டுகொண்டு புன்னகை புரிந்தான். வியாபாரத்திலிருந்த கவனத்தை வேறு பக்கம் சிந்தனை செய்யத் திருப்பிவிட்ட காரணத்தால், வேலையைப்பற்றியோ, ஜலம் மெதுவாக வடிவதைப் பற்றியோ அவன் கவலைப்படவில்லை.

ஆச்சரியத்தால் நான் வேதனை அடைந்தேன். கண் சிமிட்டும் ஜன்னல்களைக் கொண்ட வரிசை வரிசையாக வீடுகள் படைத்த, சிறந்த, வெள்ளப்பெருக்கெடுத்த அந்த நகரம் அமைதியாக எங்கள் படகைக் கடந்து மிதந்து செல்வது அசாதாரணக் காட்சியாக இருந்தது.

வானம் மங்கலாக இருந்தது ; சூரியனை மேகங்கள் சூழ்ந்திருந்தன. அபூர்வமாக மேகத் திரையைக் கிழித்துக் கொண்டு சூரியன் பூமியை எட்டிப் பார்த்தது.

ஜலம் பழுப்பு நிறமாகவும் ஜில்லென்றும் இருந்தது. நதி ஒழுக்கு அவ்வளவாகத் தெரியவில்லை. காலிக் கட்டிடங்களைப்போல் நதியும் நித்திரையில் ஆழ்ந்து விட்டதைப் போன்றிருந்தது. மேகங்களுக்கிடையிலிருந்து வெண்மையான சூரியன் பூமியை எட்டிப் பார்த்ததும் அனைத்தும் மங்கலாகப் பிரகாசித்தன ; வானத்தின் நிழல் ஜலத்தில் விழுந்தது ; இரண்டு ஆகாயங்களுக்கு மத்தியில் அந்தரத்தில் எங்கள் படகு தொங்குவதைப்போன்றிருந்தது. கற்கட்டிடங்கள் எழுந்து வால்காவையும், ஓக்காவையும் நோக்கிக் கண்ணுக்குத் தெரியாமல் மிதந்து சென்றன. ஒடிந்த பாரெல்களும், பெட்டிகளும், கூடைகளும், குச்சிகளும், வைக்கோலும் நதியிலே மிதந்து சென்றன ; மரக் கட்டைகளும், கம்பு களும் இறந்த சர்ப்பங்களைப்போல் மிதந்து சென்றன.

அங்கும் இங்கும் ஜன்னல் திறந்து கிடந்தது. கூரைமீது தானிகள் காய்ந்துகொண்டிருந்தன. கம்பிகளில் பூட்சுகள் தொங்கவிடப்பட்டிருந்தன. ஜலத்தை உற்றுப் பார்த்துக் கொண்டு ஒரு ஜன்னல் அருகில் ஒரு பெண் உட்கார்ந்திருந்

தாள். ஒரு இரும்புக் கம்பியில் ஒரு படகு கட்டப்பட்டிருந்தது. அதன் நிழல் ஜலத்தில் தெரிந்தது.

உயிர் இயங்குவதின் இந்த அடையாளங்களைக் கண்டு தலையை அசைத்துவிட்டு, என் எஜமானன் விளக்கினான்:

"அங்கேதான் கண்காட்சிக் காவற்காரன் வசிக்கிறான். ஜன்னல் மூலம் கூரைமீதேறி, அங்கிருந்து படகில் ஏறி, திருடர்களைத் தேடிக்கொண்டு அங்குமிங்கும் சுற்றுவான். திருடர்கள் தென்படவில்லை யென்றால் அவனே திருடுவான்."

அவன் பற்றின்றிப் பேசினான். அவன் மனம் வேறு எங்கோ இருந்தன. எங்கும் அமைதி குடிகொண்டிருந்தது. எல்லாம் சூன்யமாக இருந்தன. அது ஒரு கனவைப்போன்றிருந்தது. வால்காவும் ஓக்காவும் இணைந்து பெரிய கடலைப் போன்றிருந்தன. தூரத்தில் ஒரு குன்றின்மீது நின்றது, நகரம். பழங்களற்ற பழத் தோட்டங்கள் தூரத்தில் தெரிந்தன. ஆனால் செடிகளில் மொட்டுகள் தொங்கின. பசுமையால் மரங்கள், வீடுகளையும் சர்ச்சுகளையும் திரையிட்டன. ஈஸ்டர் கோலாகலம் ஜலத்திலே மிதந்து வந்தது. நகரின் ஓசை எங்களுக்குக் கேட்டது. ஆனால் புறக்கணிக்கப்பட்ட கோயில் முகப்பில் குடிகொள்ளும் அமைதி இங்கே குடிகொண்டிருந்தது.

பழைய கோயிலை நோக்கிப் பிரதான வீதியில் சென்றுகொண்டிருந்த எங்கள் படகு இரு மருங்கும் வளர்ந்தோங்கி நின்ற மரங்களுக்கிடையே சென்றது. சுருட்டிலிருந்து வெளிப்பட்ட புகை என் எஜமானனின் கண்களை மறைத்தது. படகு, மரத்தில் மோத ஆரம்பித்தது. சலிப்புடன் அவன் கூவினான்:

"இந்தப் படகு நாசமாகட்டும்!"

"சுக்கான் செலுத்துவதை நிறுத்துங்கள்."

"எப்படி நான் நிறுத்த முடியும்?" என்று அவன் முனகினான். "படகில் இருவர் இருக்கும்பொழுது ஒருவன் தண்டு வலிக்க வேண்டும்; மற்றொருவன் சுக்கான் பிடிக்க வேண்டும், அதோ பார்! சீனர் வரிசை!"

கண்காட்சி நடக்குமிடம் எனக்குத் தலைகீழாகத் தெரியும். விபரீதமான கூரைகள் படைத்த கடை வரிசைகள் எனக்கு மிக நன்றாகத் தெரியும். அதன் மூலைகளில் சீனர் களின் உருவங்கள் வைக்கப்பட்டிருக்கும். ஒரு நாள் நானும் என் விளையாட்டுத் தோழர்களும் அவைமீது கற்களை எறிந் தோம். சில தலைகளையும், கைகளையும் நான் கவர்ந்திருக் கிறேன். அதை எண்ணி இப்பொழுது நான் பெருமைப்பட வில்லை.

" கள்ளுக் கடைகள் " என்று கட்டிடங்களைச் சுட்டிக் காட்டி என் எஜமானன் சொன்னான். " அவைகளை நிர்மா ணிக்க என்னை அனுமதித்திருந்தால்....."

சீழ்க்கை அடித்துக்கொண்டு அவன் தொப்பியைப் பின் பக்கம் தள்ளினான்.

இரண்டு நதிகளும் வசந்த காலத்தில் வெள்ளக் காடாக் கும் அதே பள்ளத்தில் கவர்ச்சியற்ற கட்டிடங்களை அவன் எழுப்பியிருப்பான் என்று நான் கருதினேன். சீன வரிசை யைப்போன்று அவ்வளவு விகாரமாக அவன் அவைகளை நிர்மாணித்திருப்பான்.

சுருட்டை வீசி எறிந்துவிட்டு, வெறுப்புடன் துப்பி விட்டு, அவன் சொன்னான்:

" வாழ்க்கை எவ்வளவு சுவையற்றது, பெஷ்கோவ்! மொம்பச் சுவையற்றது! படித்தவர்களே இல்லை; பேசுவ தற்கு யாருமில்லை. சில சமயங்களில் தற்பெருமை அடித்துக் கொள்ளத் தோன்றுகிறது. ஆனால் யாரிடம் தற்பெருமை அடித்துக்கொள்வது? யாருமில்லை! தச்சர்கள், கொத் துக்காரர்கள், மூஷிக்குகள், திருடர்கள் மாத்திரம்தான்..."

ஜலத்தில் மூழ்கிக் கிடந்த குன்றில் தெரிந்த மஞ்சுயைப் பார்த்துக்கொண்டு, மறந்துபோன எதையோ நினைவுக்குக் கொண்டு வருவதைப்போல் அவன் பேசினான்:

" ஜெர்மானியனைப்போல் சுருட்டுக் குடிக்கவும், பீர் குடிக்கவும் ஆரம்பித்துவிட்டேன். ஜெர்மானியர் நல்ல வியா பாரிகள்—ஓலமிடும் கோழிக்குஞ்சுகள், சகோதரா! பீர் குடிப்பது உல்லாசமான பொழுதுபோக்கு. ஆனால் சுருட்டு எனக்குப் பிடிக்கவில்லை. சுருட்டுப் பிடிக்க ஆரம்பித்தால்,

மனைவி கோபிக்கிறாள். 'சேணம் செய்வோனைப்போல் நீ நாறக் காரண மென்ன ?' என்று அவள் கேட்கிறாள். ஆம், வாழ்க்கையை ருசியுடையதாக்க நாம் என்னென்ன செய்கிறோம் !....இதோ சுக்காணைப் பிடித்துக்கொள்.''

தண்டின்மீது சாய்ந்துகொண்டு துப்பாக்கியை எடுத்து, கூரைமீதிருந்த ஒரு உருவத்தை நோக்கி அவன் சுட்டான். சினனுக்கு எத்தகைய ஆபத்தும் நேரவில்லை. குண்டு, கூரையிலும், சுவரிலும் பட்டு நொறுங்கிற்று, தூசிப்படலத்தை எழுப்பிக்கொண்டு.

'' குறி தவறிவிட்டது '' என்று பற்றின்றி ஒப்புக் கொண்டுவிட்டு மீண்டும் துப்பாக்கியில் தோட்டாவைப் போட்டான்.

'' பெண்களுடன் உனக்கிருக்கும் உறவென்ன ? உறவு ஏற்படுத்திக்கொண்டாயா ? இல்லையா ? பதின்மூன்றுவது வயதில் நான் காதலித்தேன் !''

கனவை வர்ணிப்பதைப்போல் தனது காதலியைப்பற்றி அவன் சொன்னன். '' நான் வேலை பயின்றுகொண் டிருந்த சிற்பி ஒரு தாதியை வேலைக்கு அமர்த்தி யிருந்தான். அவள் தான் என் முதல் காதலி.'' அந்தக் கதைக்குக் கட்டிடங்களின் மூலையில் பட்டு, ஜலம் தாளம் போட்டது; கோயிலுக்கு அப்பால் ஜலப்பரப்பில் நாணல் புதர் தெரிந்தது.

விக்கிரகத் தொழிற்சாலையில் பெயின்டர்கள் மாணவர்களின் பாட்டை அடிக்கடி பாடினர் :

நீல, நீலக் கடல்,
கொந்தளிக்கும் கடல்.....

நீல, நீலக் கடல் எவ்வளவு மந்தமானதாக இருக்க வேண்டும் !

'' இரவில் என்னால் தூங்க முடியாது '' என்றான் என் எஜமானன். '' வீட்டிலே படங்கள் நிறைந்திருப்பதால், படுக்கையிலிருந்து எழுந்து அவள் இருக்கும் கதவருகில் நாய்க்குட்டியைப்போல் நடுங்கிக்கொண்டு நிற்பேன். இரவில் அவள் எஜமானன் அவள் அறைக்கு வருவான். எனவே

என்னை அவன் அங்கே கண்டுபிடித்திருப்பான். ஆனால் நான் பயப்படவில்லை—சிறிதும் பயப்படவில்லை.''

மீண்டும் அணிய முடியுமா என்று பழைய துணியைப் பரிசோதனை செய்து பார்ப்பதைப்போல், சிந்தனையிலாழ்ந்து அவன் பேசினான் :

'' அவள் என்னைக் கண்டாள் ; என்மீது இரக்கம் கொண்டாள். அவள் கதவைத் திறந்தாள். ' உள்ளே வா, முட்டாள் பையா !' என்று அழைத்தாள் !''

இத்தகைய ஏராளமான கதைகளைக் கேட்டு நான் சலித்துவிட்டேன். இவைகளுக் கெல்லாம் பொதுவான ஒரு நல்ல அம்சம் இருந்தது : தற்பெருமை யில்லாமல், ஆபாசமான வார்த்தைகளை உபயோகியாமல், உண்மையான வருத்தத்துடன் தங்கள் முதல் காதல் அனுபவத்தைப்பற்றி எல்லோரும் பேசினர். அவர்கள் வாழ்க்கையிலேயே இதுதான் மிகச் சிறந்த காலம் என்பதை நான் உணர்ந்தேன் ! பலர் சம்பந்தப்பட்டவரையில், அவர்கள் அறிந்த நல்ல காரியம் இது ஒன்றுதான்.

சிரித்துக்கொண்டும், தலையைக் குலுக்கிக்கொண்டும் என் எஜமானன் ஆச்சரியத்துடன் கூறினான் :

'' இந்தக் கதையை என் மனைவியிடம் சொல்ல ' நான் துணிய மாட்டேன்.' இதில் தவறு இருக்கிறது என்பதால் அல்ல. எனினும் அவளிடம் சொல்லத் துணிய மாட்டேன். நல்லது.....''

எனக்காக அவன் அந்தக் கதையைச் சொல்லவில்லை ; தனக்குத் தானே சொல்லிக்கொள்ளுகிறான். அவன் மௌனமாக இருந்திருந்தால், நான் பேசியிருப்பேன். அந்த மௌனத்திலும், சூன்யத்திலும் பேச வேண்டும், பாட வேண்டும், வீணையை மீட்ட வேண்டும்; இல்லை யெனில் குளிர்ந்த, பழுப்புநிற ஜலத்தில் அழிந்திக் கிடக்கும் அந்த உயிரற்ற நகரில் நிரந்த நித்திரையில் ஆழ்ந்துவிடுவார்கள்.

'' முதல் விஷயம், இளமையில் மணக்காதே !'' என்று அவன் வேண்டினான். '' மணம் மிக மிக முக்கியமானது, சகோதரா ! நீ எங்கே, எப்படி வாழ்ந்தாலும்—பெர்ஸியாவில் முகம்மதியனைப் போன்றோ, அல்லது மாஸ்கோவில்

போலீஸ்காரனைப் போன்றே, வேலை செய்தோ, திருடியோ வாழ்ந்தாலும்—உனக்குப் பிடிக்கவில்லை யென்றால், அந்த வாழ்க்கையை நீ மாற்றிக்கொள்ளலாம். ஆனால் மனிவியை நீ மாற்ற முடியாது! பருவ காலத்தைப் போன்றவள் மனிவி, சகோதரா! இது தவிர்க்க முடியாதது! விருப்பம்போல் கழற்றி எறிய, மனிவி பூட்ஸல்ல!''

அவன் முகத்தில் நிழல் படிந்தது. நெற்றியைச் சுளித்துக்கொண்டு அவன் ஜலத்தை உற்றுப் பார்த்தான். ஒரு கையால் மூக்கைத் தேய்த்துக்கொண்டு அவன் முணு முணுத்தான்.

'' ஆம் சகோதரா.....கூர்மையாகப் பார்க்க வேண்டும்! காற்றுக்கு வணங்து கொடுத்துக்கொண்டு, அதே சமயத்தில் உறுதியாக நீ நிற்கலாம். எனினும், எல்லோருக்கும் வலை விரிக்கப்பட்டிருக்கும்.....''

கோல்காவுடன் சங்கமமாய்விட்ட மெஷ்செர்ஸ்கோ கடலில் நாங்கள் பிரவேசித்தோம்.

'' மெதுவாகத் தண்டு வலி '' என்று புதர்களைக் குறி பார்த்துக்கொண்டு எஜமானன் முணுமுணுத்தான்.

மெலிந்திருந்த சில மரங்கொத்திப் பறவைகளைச் சுட்டு விட்டு, என் எஜமானன் சொன்னான் :

'' குளேவினேவை நோக்கிப் படகைச் செலுத்து! மாலை வரையில்தான் அங்கே தங்கியிருப்பேன். ஒரு காண்டிராக்டரிடம் எனக்கு வேலை இருப்பதாக வீட்டில் சொல்லிவிடு.''

வெள்ளப் பெருக்கெடுத்திருந்த குளேவினேவ் வீதியில் அவனை இறக்கிவிட்டு, ஸ்ட்ரெல்காவுக்குக் கண் காட்சி மைதான வழியாக நான் திரும்பினேன். அங்கே படகைக் கட்டிவிட்டு, இரண்டு நதிகள் சந்திக்கு மிடத்தையும், நகரத்தையும், கப்பல்களையும், வானத்தையும் மாறி மாறி உற்றுப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். பெரிய பறவையின் சிறகைப் போன்று வெண் மேகம் வானத்தைச் சூழ்ந்து நின்றது. நீல வெடிப்பினூடே தங்கமயமான சூரியன் எட்டிப் பார்த்தது. அதன் ஒரு கிரணம் போதும், உலகை ஒளி மயமாக்க. என்னைச் சுற்றியிருந்த அனைத்தும் இப்பொழுது வேகமாக இயங்கின. எண்ணற்ற உத்திரங்கள்

நதியிலே மிதந்து சென்றன. பலசாலிகளான மூஷிக்குகள் உத்திரங்களிலே நின்றுகொண்டு தண்டு வலித்தனர்; ஒருவருக் கொருவரும், கப்பலை நோக்கியும் கூச்சலிட்டனர். காலிப் படகை சிறிய கப்பல் இழுத்துச் சென்றது. நதிக் கரை அங்கு மிங்கும் எழுந்தபொழுது மீனைப் போன்று அங்கு மிங்கும் தனது மூக்கை அது நீட்டிற்று: இளைத்துக் கொண்டும், உறுமிக்கொண்டும் ஜலத்தைப் பிளந்துகொண்டும் உறுதியாகச் சென்றது. தோள்களை உராய்ந்துகொண்டு நான்கு மூஷிக்குகள் கால்களை வெளியே தொங்கவிட்டுக் கொண்டு படகில் உட்கார்ந்திருந்தனர். அவர்களில் ஒருவன் சிவப்புச் சட்டை அணிந்திருந்தான். அவர்கள் எல்லோரும் பாடிக்கொண் டிருந்தனர். வார்த்தைகள் சரியாகக் கேட்க வில்லை; ஆனால் அந்தப் பாட்டு எனக்குத் தெரியும்.

நதியிலே எல்லாம் எனக்கு அறிமுகமானவை; எல்லாம் புரியக் கூடியவை. ஆனால் எனக்குப் பின்னே இருந்த வெள்ளப் பெருக்கெடுத்த நகரம் ஒரு தூர்ச் சொப்பனம்; என் எஜமானனின் சிருஷ்டி. அவன் புதிராக இருந்ததைப் போல் அதுவும் புதிராக இருந்தது.

நதியின் மனோகரக் காட்சியைத் திருப்தி ஏற்படும்வரைக் கண்டு களித்துவிட்டு நான் வீடு திரும்பினேன். எந்த வேலைக்கும் லாயக்குள்ள பக்குவமடைந்த ஒரு மனிதனாக என்னை நான் மதித்தேன். வால்காவைக் கடைசி முறை பார்ப்ப தற்காகக் கிரெம்லின் குன்றில் நான் நின்றேன். அந்த உயரத்திலிருந்து பார்த்தபொழுது பூமி எல்லையற்றதாகவும், நம்பிக்கை ஊட்டுவதாகவும் தெரிந்தது.

வீடு திரும்பியதும் நான் புத்தகம் படிப்பேன். ராணி மார்கோட் குடியிருந்த வீட்டில் புதுக் குடித்தனம் வந் திருந்தது. அழகிலே போட்டியிட்ட ஐந்து சிறுமிகள் அந்தக் குடும்பத்தில் இருந்தனர். தேகப் பயிற்சி சாலையைச் சேர்ந்த இரண்டு மாணவர்களும் அங்கே இருந்தனர். வாலிபர்கள் எனக்குப் புத்தகங்கள் கொடுத்து உதவினர்; பேராசையுடன் நான் தூர்கேனெவ் நூல்களைப் படித்தேன். காற்றைப்போல் தெளிவாக இருந்த அவர் எளிய நடை என்னைப் பெரிதும்

கவர்ந்தது ; அவன் கதாநாயகர்களின் பரிசுத்தத்தன்மையும், அடக்கத்துடன் அவன் வர்ணித்தவைகளிலே பொதிந்து கிடந்த அழகும் என்னை ஆகர்ஷித்தது.

போமியாலோவ்ஸ்கியின் செமினர் என்னும் நூலையும் நான் படித்தேன். விக்கிரகத் தொழிற்சாலை வாழ்க்கையைப் போன்று அதில் வாழ்க்கை சித்தரிக்கப்பட்டிருந்ததைக் கண்டு நான் வியந்தேன். சகிக்க முடியாத சலிப்பு குரூரமான சேஷ்டையில் சாந்தியைக் கண்டது என்பது எனக்கு மிக நன்றாகத் தெரியும்.

ரஷிய நூல்களைப் படிப்பது நல்லது. புத்தகங்களின் ஏடுகளில் ஈஸ்டர் நோன்பு மணியோசை சிறைப்படுத்தப் பட்டிருந்ததைப் போல், புத்தகத்தைத் திறந்ததும் மெல்லிய சங்கீதம் விடுதலை அடைந்துவிடுவதைப் போல், துக்ககரமான, பழக்கமான எதையோ ரஷிய நூல்களில் நான் கண்டேன்.

விருப்பமின்றி இறந்த ஆத்மாக்கள் என்னும் நூலை நான் படித்தேன். இதே உணர்ச்சியுடன்தான். இறந்த வீட்டின் குறிப்புகள் என்னும் நூலையும் படித்தேன். இறந்த ஆத்மாக்கள், இறந்த வீடு, மரணம், மூன்று மரணங்கள்—இந்தத் தலைப்புகள் ஏறக்குறைய ஒன்றாக இருப்பதை யாரும் எளிதில் புரிந்துகொள்ளலாம். புத்தகங்களின்மீது இவை வெறுப்பை ஓரளவு தூண்டிவிட்டன. காலத்தின் குறிகள், படிப்படியாக, என்ன செய்யப்பட வேண்டும்? சாமூரின் வீட்டின் அட்டவணை என்ற நூல்களும், இவை களைப் போன்ற பிற நூல்களும் எனக்குப் பிடிக்கவில்லை.

டிக்கென்ஸ், வால்டர் ஸ்காட் நூல்களை நான் பெரிதும் விரும்பினேன். அளவுகடந்த மகிழ்ச்சியுடன் இவர்கள் நூல்களை நான் இரு முறை, மும் முறை படித்தேன். அருமையான கோயிலில் விடுமுறை நாளில் நடக்கும் பிரார்த்தனையை வால்டர் ஸ்காட்டின் நூல்கள் எனக்கு நினைவூட்டின. அது நீண்டது, சலிப்பைத் தரக் கூடியது ; ஆனால் சதா நடக்கும் உற்சவத்தைப் போன்றிருந்தது. இன்றுவரை நான் ஏற்றிப் போற்றும் எழுத்தாளன் டிக்கென்ஸ். கலையிலே மிகச் சிரம

மான கலையில்—ஜனங்களே நேசிக்கும் கலையில்—பாண்டித்யம் பெற்ற ஆசிரியன் அவன்.

மாலையில் நாங்கள் முகப்பில் கூடுவோம்; ராணி மார்கோட் விட்டில் வசித்த சகோதர, சகோதரிகள், சப்பை மூக்குப் படைத்த மாணவன் வியாச்செஸ்லாவ், ஷிமாஷ்கோ, மற்றும் சிலர். சில சமயங்களில் ஒரு முக்கிய அதிகாரி பிட்ஸின் புதல்வியும் எங்கள் கோஷ்டியில் கலந்துகொள்வாள். எனக்குப் புரிந்த, எனக்கு மிகப் பிடித்த புத்தகங்களையும், கவிதையையும்பற்றி நாங்கள் பேசுவோம். அந்த இளைஞர் களைவிட அதிகப் புத்தகங்களை நான் படித்திருக்கிறேன். ஆனால் அடிக்கடி என் நண்பர்கள் பள்ளிக்கூடத்தைப் பற்றிப் பேசினர்; உபாத்தியாயர்களைப்பற்றிக் குறை கூறினர். அவர்கள் பேச்சைச் செவிமடுத்த எனக்கு, அவர்களைவிட அதிக சுதந்திரத்தை நான் அனுபவிப்பதாகத் தோன்றிற்று. அவர்களின் சகிப்புத்தன்மை எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. எனினும் அவர்கள்மீது நான் பொறுமைப் பட்டேன்: அவர்கள் படிக்கிறார்கள்!

என்னைவிட அதிக வயதானவர்கள், என் நண்பர்கள். ஆனால் அவர்களைவிட அதிக அனுபவமும், பக்குவமும் நான் பெற்றிருந்ததாக எனக்குத் தோன்றிற்று. இது என்னை ஓளவு கிளுகிளுத்தது. ஏனெனில் அவர்களுடன் நெருங்க நான் விரும்பினேன். அழுக்காலும், தூசியாலும் மூடப் பட்டு, அவர்களிலிருந்து மாறுபட்ட அமைப்பு என்னும் முத்திரையுடன் நேரம் சென்று நான் வீடு திரும்புவேன். அடிப்படையில், அவர்கள் அனுபவம் ஏறக்குறைய ஒரே மாதிரியானதாக இருந்தது. பெண்களைப்பற்றி அவர்கள் நிறையப் பேசினர்; முதலில் ஒருத்தியைக் காதலிப்பதைப் பற்றியும், பிறகு இன்னொருத்தியைக் காதலிப்பதைப்பற்றியும் அவர்கள் பேசினர். கவிதை எழுதவும் அவர்கள் முயன்றனர். அடிக்கடி அவர்கள் என் உதவியை நாடினர். கவிதை எழுத நான் மகிழ்ச்சியுடன் இசைந்தேன். செய்யுள் நான் எளிதில் எழுதினேன். ஆனால் என் செய்யுள் ஹாஸ்யத்தில் சதா முடியும். என் கவிதைகளை நான் பிட்ஸின் புதல்விக்கு

சமர்ப்பணம் செய்தேன். என் கவிதைகளில் அவளே வெங்காயத்திற்கு ஒப்பிட்டேன்.

ஷிமாஸ்கோ என்னிடம் சொன்னான் :

" அந்த அடிகளே நீ கவிதை என்று சொல்லுகிறாயா ? அவை சக்கிலியனின் ஆணிகள் !" என்று.

மற்றவர்களுடன் ஒத்து ஓடும் ஆர்வத்தில் பிட்ஸின் மகளே நான் காதலித்தேன். என் உணர்ச்சிகளே நான் எப்படி வெளியிட்டேன் என்பது எனக்கு நினைவில்லை. ஆனால் என் காதல் சோகத்தில் முடிந்தது. ஸ்வெஸ்டின் குளத்தில் மிதந்துகொண்டிருந்த பலகையை ஓட்டி விளையாட ஒரு நாள் அவளே அழைத்தேன். அவள் என் அழைப்பை ஏற்றுக்கொண்டாள். பலகையை நான் கரைக்குக்கொண்டு வந்து, அதன்மீது நின்றேன். என் பலத்தைத் தாங்க அதற்கு வலு இருந்தது. ஆனால், ரிப்பன்களாலும், சரிகையாலும் தன்னே அலங்கரித்துக்கொண் டிருந்த அந்தச் சிறுமி உல்லாசமாகப் பலகையின் மறு பக்கம் ஏறியதும், சபிக்கப்பட்ட அந்தப் பலகை ஒடிந்து, அவள் குளத்தில் விழுந்தாள். உண்மையான வீரத்துடன் நான் குளத்தில் குதித்து, அவளே மீட்டுக் கரை சேர்த்தேன். ஆனல் பீதியும், சேறும் அந்த அழகியின் அழகைப் பாழ்படுத்திவிட்டன.

ஈரமான முஷ்டியை என்னே நோக்கி அசைத்துக் கொண்டு அவள் கூவினாள் :

" வேண்டு மென்றே நீ என்னே மூழ்க வைத்தாய் !"

என் மன்னிப்பை அவள் ஏற்கவில்லே. அவள் என் பரம விரோதியானாள்.

நகர வாழ்க்கை ருசியற்றிருந்தது. கிழவி அன்றும் என்னே விரும்பவில்லே. இளேயவள் என்னேச் சந்தேகத்துடன் பார்த்தாள். முன்னேவிட அதிக வடுக்கள் நிறைந்திருந்த விக்டர் எல்லோர்மீதும் சீறிவிழுந்தான் ; எல்லோரிடமும் வன்மத்துடன் நடந்துகொண்டான்.

தானும், தன் சகோதரனும் செய்து முடிக்க முடியாத அளவு வேலே அதிகரித்ததால், என் மாற்றுந் தந்தையை என் எஜமானன் உதவிக்கு அழைத்தான்.

ஒரு நாள் கண்காட்சி மைதானத்திலிருந்து வழக்கமாகத் திரும்புவதைவிட முன்னதானவே வீடு திரும்பிய நான் நீண்ட காலமாக மறந்துவிட்ட அந்த மனிதன் என் எஜமானனுக்கு அருகில் சாப்பாட்டு அறையில் உட்கார்ந்திருப்பதைக் கண்டேன். என்னைக் கண்டதும் அவன் தன் கையை நீட்டினான்.

"நீ எப்படி இருக்கிறாய்; சௌக்கியமா?" என்று அவன் கேட்டான்.

எதிர்பாராத அந்தச் சந்திப்பு என்னைத் திகைக்க வைத்தது. உடனே கடந்த காலம் தீயைப்போல் படர்ந்து, என் இதயத்தைச் சுட்டது.

"நீ அவனைப் பயமுறுத்திவிட்டாய்" என்றான் என் எஜமானன்.

வறண்டிருந்த தன் முகத்தில் புன்னகை தோன்ற என் மாற்றாந் தந்தை என்னை உற்றுப் பார்த்தான். அவன் கரிய விழிகள் முன்னைவிடப் பெரிதாக இருந்தன. அவன் தளர்ந்து, துவண்டிருந்தான். மெலிந்த, எரிந்துகொண்டிருந்த அவன் விரல்களில் என் கையைத் திணித்தேன்.

"நாம் மீண்டும் சந்தித்துவிட்டோம்" என்று இருமிக் கொண்டே அவன் சொன்னான்.

நன்றாக அடிபட்டவனைப்போல், பலவீனத்துடன் நான் வெளியே சென்றேன்.

எங்கள் உறவு வேதனை நிறைந்ததாக இருந்தது. என் குடும்பப் பெயரிட்டு அவன் என்னை அழைத்தான்; சமமானவனுடன் பேசுவதைப்போல் என்னிடம் பேசினான்.

"நீ கடைக்குச் செல்லும்பொழுது கால் பவுண்டு லாபேர்ம் புகையிலையும், நூறு விக்டர்ஸன் சிகரெட் சுற்றும் காகிதமும், ஒரு பவுண்டு வேகவைத்த இறைச்சியும் அன்பு கூர்ந்து எனக்கு வாங்கிக்கொண்டுவா;"

அவன் என்னிடம் கொடுத்த நாணயங்கள் வெப்பமாக இருந்தன. கூயரோகத்தால் அவன் பீடிக்கப்பட்டிருந்தான் என்பதும், நீண்ட காலம் அவன் உயிருடன் இருக்க மாட்டான் என்பதும் தெளிவாகத் தெரிந்தன. இது அவனுக்கும்

தெரியும். அமைதியான, கனத்த குரலில் அவன் சொல்லுவான்:

"என் நோய்க்குப் பரிகாரமே கிடையாது. நிறைய இறைச்சி தின்றால், ஒருக்கால் குணமடையலாம். யாருக்குத் தெரியும் — ஒருக்கால் நான் குணமடையலாம்."

அவன் நிறையத் தின்றான். அவன் தின்றான்; சிகரெட் குடித்தான். உணவை உட்கொள்ளும்பொழுது மாத்திரம் தான் சிகரெட்டை வாயிலிருந்து எடுத்தான். நாள்தோறும், இறைச்சியும், உப்பிட்ட பன்றித் தொடையும், மீனும் நான் வாங்கிக் கொடுத்தேன். ஆனால் பாட்டியின் சகோதரி விவரிக்க முடியாத திருப்தியுடனும், உறுதியுடனும் சொன்னாள்:

"மரணத்திற்கு மருந்தில்லை! மரணத்தை யாரும் ஏமாற்ற முடியாது! நிச்சயமாக ஏமாற்ற முடியாது!"

என் மாற்றாந் தந்தைமீது பெண்கள் விசேஷ கவனம் செலுத்தினர். அவன் வேறு மருந்துகள் சாப்பிட வேண்டும் என்று ஓயாது வற்புறுத்தினர்; ஆனால் அவன் இல்லாத சமயத்தில் அவனைக் கேலி செய்தனர்.

"பெரிய பிரபு!" என்றாள் சின்ன எஜமானி. 'அடிக்கடி மேஜையிலுள்ள எச்சிலைச் சுத்தம் செய்ய வேண்டும்' என்று அவர் சொல்லுகிறார். 'எச்சில் ஈக்களை ஆகர்ஷிக்குமாம்!'"

"நல்ல பிரபு!" என்று கிழவி உறுமினாள். "அவன் கோட்டு எவ்வளவு பஞ்சையாய்விட்டது. எனினும் அவன் அதை நாள்தோறும் பிரஷால் சுத்தம்செய்கிறான். நோயுள்ள பிராணி—மாசு படியாதவன்!"

"பொறுங்கள், கூச்சலிடும் கோழிக் குஞ்சுகளா! அவன் விரைவில் இறந்துவிடுவான்" என்று என் எஜமானன் ஆறுதல் சொன்னான்.

அறிவாளிகள்மீது அறிவற்ற நகர மக்கள்கொண்ட மூட்டாள்தனமான விரோதம், என் மாற்றாந் தந்தை பக்கம் சேரு மாறு என்னைத் தூண்டிற்று. பேய்க் காளான் விஷமுடைய தாக இருக்கலாம்; ஆனால் அது அழகாகவும் இருக்கிறது.

மூச்சுத் திணறவைக்கும் இவர்கள் முன்னிலையில் கோழிக்கூட்டில் அகப்பட்ட மீனைப் போன்றிருந்தான், என் மாற்றுந் தந்தை. நாங்கள் வாழ்ந்த வாழ்க்கைக்குச் சிறிதும் பொருந்தாத உவமை இது.

என்னால் என்றும் மறக்கமுடியாத "இது மிக நேர்த்தி" என்னும் மனிதனிடமிருந்த அதே குணங்கள் என் மாற்றுந் தந்தையிடமும் இருப்பதை நான் உணர்ந்தேன். புத்தகங்களிலிருந்து செதுக்கியெடுக்கப்பட்ட அழகால் "இது மிக நேர்த்தி", ராணி மார்கோட் ஆகியோரின் நினைவை நான் அழகுபடுத்தினேன். என்னில் குடிகொண்டிருந்த மிகச் சிறந்தவைகளை—படிப்பால் பெற்ற அழகிய கற்பனைகளை—அவர்களுக்கு நான் காணிக்கை செலுத்தினேன். "இது மிக நேர்த்தி" என்பவன் எப்படி ஒதுங்கி இருந்தானோ, எப்படி அவன் நேசிக்கப்படாமல் இருந்தானோ, அதேபோன்றிருந்தான் என் மாற்றுந் தந்தை. எங்கள் வீட்டிலிருந்த எல்லோரையும் அவன் சமமாக நடத்தினான்; தானாக எப்பொழுதும் பேசவில்லை; எல்லாக் கேள்விகளுக்கும் சுருக்கமாகவும், மரியாதையாகவும் பதில் சொன்னான். என் எஜமானனுக்கு அவன் பாடம் சொல்லிக் கொடுத்தது எனக்குப் பரம திருப்தி அளித்தது. மேஜைக்கு முன்னே குனிந்துகொண்டு, நீண்ட நகத்தால் கனத்த காகிதத்தின்மீது தட்டிக்கொண்டு, அவன் சாந்தமாக விளக்குவான்:

"பாரத்தைக் குறைப்பதற்காக இந்த இடத்தில் உத்திரத்திற்கு முட்டுக்கொடுப்பது மிக அவசியம். இல்லையெனில் உத்திரம் சுவரைப் பிளந்துவிடும்."

"இது உண்மைதான், எல்லாம் நாசமாய்ப் போக!" என்று முணுமுணுப்பான் என் எஜமானன். என் மாற்றுந் தந்தை அப்பால் சென்றதும் அவன் மனைவி சொல்லுவாள்:

"இப்படி உமக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க அவனை நீர் எப்படி அனுமதிக்கலாம்?"

இரவு போஜனம் முடிந்த பிறகு என் மாற்றுந் தந்தை பல் தேய்ப்பதும், தலையைப் பின்னே சாய்த்துக்கொண்டு தனது குரல்வளை தெரிய அவன் வாயைக் கொப்பளிப்பதும் அவளுக்குப் பிடிக்கவில்லை.

"நீ இப்படித் தலையைப் பின்னே சாய்ப்பது உனக்கு நல்ல என்று எனக்குத் தோன்றுகிறது, எவ்கெனி வாஸில்யெவிச்" என்று ஒரு நாள் வெறுப்புடன் சொன்னாள் அவள்.

புன்னகை புரிந்துவிட்டு, மரியாதையுடன் அவன் கேட்டான் :

"நீ ஏன் அப்படிப் நினைக்கிறாய் ?"

"நல்லது. ஏனென்றால்....."

பல் குத்தும் ஒரு குச்சியை எடுத்துத் தன் நகத்தைச் சுத்தம் செய்ய ஆரம்பித்தான் என் மாற்றாந் தந்தை.

"இதை நினைத்துப் பார் ! அவன் நகத்தைக்கூட சுத்தம் செய்கிறான் !" என்று அவன் போன பிறகு என் எஜமானி சொன்னாள். "சுடுகாட்டில் ஒரு காலை வைத்துவிட்டான் ; எனினும்....."

"ஆஹா !" என்று நெடுமூச்சுவிட்டான் என் எஜமானன். "நீ எவ்வளவு பெரிய முட்டாள், கூச்சலிடும் கோழிக் குஞ்சே !"

"நீங்கள் எதற்காக இப்படிச் சொல்லுகிறீர்கள் ?" என்று சலித்துக்கொண்டாள் அவன் மனைவி.

இரவில் கிழவி கடவுளிடம் முறையிடுவாள்:

"அந்தக் கழிசடையை என்மீது திணித்துவிட்டார்கள். விக்டரை இப்பொழுது பின்னணிக்குத் தள்ளிவிட்டார்கள்."

என் மாற்றாந் தந்தையின் நடவடிக்கைகளை விக்டர் கேலி செய்ய ஆரம்பித்தான் : அவன் நடை, உறுதியான அவன் விரல் அசைவு, டையை அவன் கட்டும் முறை, சக்தி மில்லாமல் உண்ணும் திறமை ஆகியவைகளை என் மாற்றாந் தந்தை செய்வதைப்போல் செய்தான் விக்டர். முரட்டுத் தனமாக அவன் என் மாற்றாந் தந்தையிடம் கேட்பான் :

"முழங்காலுக்குப் பிரெஞ்சில் என்ன சொல்லுவார்கள், மாக்ஸிமோவ் ?"

"என் பெயர் எவ்கெனி வாஸில்யெவிச்" என்று திருத்தினான் என் மாற்றாந் தந்தை.

"சரி. மார்புக்கு ?"

இரவு சாப்பிடும்பொழுது விக்டர் தன் தாயிடம் பிரெஞ்சில் என்னமோ சொன்னான்.

"நீ பெரிய பிரெஞ்சுக்காரன்!" என்று மகிழ்ச்சியுடன் சொன்னாள் திழவி.

யாரையும் ஏறிட்டுக்கூடப் பார்க்காமல், ஊமையைப் போல், செவிடனைப்போல் என் மாற்றாந் தந்தை எந்த விதமான பதட்டமுமின்றி இறைச்சியை மென்றுகொண்டிருப்பான்.

ஒரு நாள் மூத்த சகோதரன் இளையவனிடம்சொன்னான்:

"நீ பிரெஞ்சு பேசக் கற்றுக்கொண்டுவிட்டதால், இனி ஒரு மனைவியை தேடிப்பிடி, விக்டர்!"

அப்பொழுது என் மாற்றாந் தந்தை புன்னகை புரிந்தான்.

ஆனால் ஆத்திரத்துடன் கரண்டியைக் கீழே எறிந்துவிட்டு என் எஜமானனின் மனைவி, தன் கணவனை நோக்கிக் கூவினாள்:

"எனக்கு முன்னிலையில் இத்தகைய வெட்ககரமான பேச்சு நீங்கள் எப்படிப் பேசத் துணிந்தீர்கள்!"

பின் கட்டில் நான் படுத்திருந்த இடத்திற்கு என் மாற்றாந் தந்தை சில சமயங்களில் வருவான். இங்கே ஜன்னல் அருகில் உட்கார்ந்துகொண்டுதான் நான் புத்தகங்கள் படிப்பேன்.

"படிக்கிறாயா?" என்று ஒரு நாள் அவன் கேட்டான். நிறையப் புகையை உட்கொண்டதால், அவன் நெஞ்சில் எரியும் கட்டையைப் போல் ஏதோ ஒன்று 'உஸ்' என்னும் சத்தத்தை உண்டுபண்ணிற்று. "அது என்னபுத்தகம்?"

நான் புத்தகத்தை அவனுக்குக் காட்டினேன்.

"ஆ!" என்றான் புத்தகத்தின் தலைப்பைப் பார்த்து விட்டு. "நான் இதைப் படித்திருக்கிறேன். சிகரெட் பிடிக்கிறாயா?"

ஜன்னல் மூலம் அசுத்தமான கொல்லையை உற்றுப் பார்த்துக்கொண்டு நாங்கள் சிகரெட் குடித்தோம்.

"நீ படிக்க முடியாதது சொம்பத் துரதிர்ஷ்டம்" என்றான் அவன். "உனக்குத் திறமை யிருப்பதாகத் தோன்றுகிறது."

" ஆனால் நான் படிக்கிறேன்—நிறையப் படிக்கிறேன்."

" அது போதாது. பள்ளிக்கூட முறையில் நீ பழக வேண்டும் ?"

"பள்ளிக்கூட முறையில் நீ பழகினாய், என் அற்புதமான கனவானே ! அதனால் உனக்கு என்ன பலன் கிடைத்தது ?" என்று அவனைக் கேட்க வேண்டும் என்று எனக்கு ஆசையாக இருந்தது.

என் சிந்தனையைப் புரிந்துகொண்டவனைப்போல் அவன் சொன்னான் :

" உறுதியிருந்தால், பள்ளிக்கூடம் நல்ல பயிற்சி அளிக்கிறது. படித்தவர்களால்தான் இந்த வாழ்க்கையை அசைக்க முடியும்."

பல முறை அவன் என்னிடம் சொன்னான் :

" இங்கிருந்து நீ போய்விடுவது நல்லது. நீ இங்கே இருப்பதில் அர்த்தமோ, லாபமோ இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை."

" ஆனால் வேலைக்காரர்களை நான் நேசிக்கிறேன்."

" நேசிப்பதற்கு அவர்களில் நீ எதைக் கண்டாய் ?"

" அவர்கள் மந்தமானவர்க ளல்ல."

" ஒருக்கால்....."

ஒரு முறை அவன் சொன்னான் :

" முதலாளிகள் மிருகங்கள்—அவர்கள் மிருகங்கள் !"

எந்தச் சூழ்நிலையில், எப்பொழுது என் தாய் இந்த வார்த்தையை உபயோகித்தாள் என்பது என் நினைவுக்கு வந்தபொழுது, தன்னிச்சையாக நான் கூவினேன்.

" இதை நீ ஒப்புக்கொள்ள வில்லையா ?" என்று புன்னகையுடன் கேட்டான் அவன்.

" ஆம், நான் ஒப்புக்கொள்கிறேன்."

" அது எனக்கு விளங்குகிறது."

" அவன் நல்லெண்ணம் படைத்த மூஷிக். ஆனால் அவன் நகைக்கத் தக்கவன்."

புத்தகத்தைப்பற்றி அவனுடன் விவாதிக்க நான் விரும்பினேன் ; ஆனால் புத்தகத்தால் அவனுக்கு அதிக பிரயோஜனமில்லை என்று தோன்றிற்று.

" ஆனால் புத்தகம் படிப்பதில் அதிக நேரத்தைச் செல விடாதே" என்று அவன் அடிக்கடி சொல்லுவான். "புத்தகங் களில் எல்லாம் மிகைப்படுத்திக் கூறப்படுகின்றன ; ஒரு விதத்திலோ, அல்லது வேறு விதத்திலோ திரித்துக் கூறப்படு கின்றன. இங்குள்ள நமது எஜமானனைப்போல் பெரும்பா லான ஆசிரியர்கள் சின்னத்தனமானவர்கள்."

இத்தகைய அபிப்பிராயங்கள் துணிச்சலானவை என் பதை நான் உணர்ந்தேன்; இதனால் நான் அவனைப் பாராட்டி னேன்.

" கோன்சாரோவ் நூலை நீ படித்திருக்கிறாயா?" என்று ஒருநாள் அவன் கேட்டான்.

ப்ரிகேட் பல்லாடா என்று நான் பதில் சொன்னேன்.

" பல்லாடா மந்தமானது. ஆனால் பொதுவாக ரஷியா விலேயே மிக புத்திசாலியான ஆசிரியர் கோன்சாரோவ். அவர் நூல்களில் மிகத் துணிச்சலான, மிக உண்மையான ஒப்லோமோவ் என்னும் நூலை நீ படி. பொதுவாக ரஷிய இலக்கியத்தை அலங்கரிக்கும் மிகச் சிறந்த நூல் அது."

டிக்கென்ஸைப்பற்றி அவன் சொன்னான் :

" குப்பை—நான் சொல்லுவதை நம்பு. ஆனால் நியூ டைம்ஸ் அனுபந்தத்தில் மிக ருசிகரமான ஒரு கதை பிரசுரிக் கப்படுகிறது. டெம்ப்டேஷன் ஆப் ஸேயின் அந்தோணி. அதை நீ படிக்க வேண்டும். சர்ச்சையும் மத சம்பந்தமான வைகளையும் நீ பெரிதும் விரும்புவதாகத் தெரிகிறது. டெம்ப் டேஷனைப் படிப்பதால் உனக்கு நன்மை ஏற்படும்."

அவனே ஒரு கத்தை அனுபந்தங்களை எனக்குக் கொடுத்தான் ; பிளாபெர்ட்டின் விவேகமான இந்த நூலை நான் படித்தேன். நான் படித்த எண்ணற்ற ரிஷிகளின் கதைகளையும், மத வெறியர்கள் சொன்ன கதைகளில் சில வற்றையும் இது எனக்கு நினைவூட்டிற்று. ஆனால் இது என்னை அவ்வளவு ஆகர்ஷிக்கவில்லை. உப்பிலியோ பைமாலியின் நினைவுகள், மிருகப் பயிற்சியாளன் ஆகிய அதே அனுபந்தத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த கதைகள் எனக்குப் பெரு மகிழ்ச்சி அளித்தன.

இதை என் மாற்றுத் தந்தையிடம் சொன்னபொழுது, அவன் சாந்தமாகச் சொன்னான் :

"இத்தகைய நூல்களைப் படிக்க உனக்கு இன்னும் வயதாகவில்லை என்பது இதன் பொருள். ஆனால் அந்தப் புத்தகத்தை மறந்துவிடாதே!"

ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல், இருமிக்கொண்டும், சிகரெட் குடித்துக்கொண்டும் நீண்ட நேரம் அவன் என் அருகில் உட்கார்ந்திருப்பான். அழகிய அவன் கண்களில் பயங்கர ஒளி வீசிற்று. குறைபட்டுக்கொள்ளாமல், அமைதியாக இறந்துகொண்டிருக்கும் இந்த மனிதன் ஒரு காலத்தில் என் தாயுடன் காதல் கொண்டிருந்தான் என்பதையும், அவளை மிகக் குரூரமாக நடத்தினான் என்பதையும் அவனை அமைதியாகப் பார்த்துக்கொண்டு அங்கே நான் உட்கார்ந்திருந்தபொழுது மறந்துவிட்டேன். இப்பொழுது அவன் ஒரு தையல்காரியுடன் வசிக்கிறான் என்பதும் எனக்குத் தெரியும். வியப்புடனும், அனுதாபத்துடனும் அவனை நான் நினைத்தேன் : ஊத்தை நாற்றமடிக்கும் அந்த வாயை அவள் எப்படி முத்தமிடுவாள்? இந்த எலும்புக் கூட்டை அவள் எப்படித் தழுவுவாள்?

"இது மிக நேர்த்தி", என்பவனைப்போல் என் மாற்றுத் தந்தை எதிர்பாராத முறையில் சுயமான சிறந்த கருத்தை வெளியிடுவான்.

"வேட்டை நாய்களை நான் நேசிக்கிறேன். அவைகள் முட்டாள்தனமானவை ; எனினும் அவைகளை நான் நேசிக்கிறேன். அழகிய பெண்களில் பெரும்பாலோர் மடையர்கள்."

சிறிது பெருமிதத்துடன், தனக்குத் தானே சொல்லிக் கொண்டேன் :

"ராணி மார்கோட்டை நீ தெரிந்துகொண்டிருக்க வேண்டும்!"

"நீண்ட காலம் ஒன்றுக வாழுகிறவர்கள் காலப் போக்கில் ஒரே மாதிரி வளர்கிறார்கள்" என்று ஒரு நாள் அவன் சொன்னான். என் நோட் புத்தகத்தில் இதை நான் குறித்துக்கொண்டேன்.

பரமபதத்தை எதிர்பார்ப்பதைப்போல் அவன். சாசனத்தை நான் எதிர்பார்த்தேன். மந்தமான, உளுத்துப் போன வடிவத்தில் பொதிந்துகிடக்கும் ஜீவனற்ற பாஷையில் எல்லோரும் பேசும் அந்த வீட்டில் சுயமான கருத்துகளைக் கேட்பது மகிழ்ச்சிக் குரியது.

என் தாயைப்பற்றி என் மாற்றுந் தந்தை என்னிடம் பேசவே இல்லை. அவள் பெயரைக்கூட அவன் பிரஸ்தாபிக்கவில்லை என்று நினைக்கிறேன். இது என்னைத் திருப்திப் படுத்திற்று ; அவன்மீது மரியாதையைத் தூண்டிவிட்டது.

ஒரு நாள் கடவுளைப்பற்றி அவனைக் கேட்டேன். எந்த சந்தர்ப்பத்தில் கேட்டேன் என்பது எனக்கு நினைவில்லை. கடைக்கண்ணால் என்னைப் பார்த்துவிட்டு, அவன் அமைதியாகச் சொன்னான் :

" எனக்குத் தெரியாது. நான் கடவுளை நம்பவில்லை."

ஸிதானேவ் என் நினைக்கு வந்தான். அவனைப்பற்றி என் மாற்றுந் தந்தையிடம் நான் சொன்னேன். நான் பேசி முடித்ததும் அவன் அமைதியாகச் சொன்னான் :

" அவன் அறிவியல்வாதி. அறிவியல்வாதிகள் எதையாவது நம்புவார்கள். எனக்கு நம்பிக்கையே இல்லை."

" ஆனால் இது அசாத்தியம் !"

" ஏன் ? நீயே பார்—நான் எதையும் நம்பவில்லை."

அவன் இறந்துகொண்டிருக்கிறான் என்பதை மாத்திரம் தான் நான் பார்த்தேன். அவன்மீது நான் இரக்கப்பட்டேன் என்று சொல்ல முடியாது. ஆனால் மரணத்தின் ரகசியத்தில், இன்னொருவன் சாவதில், நான் முதன் முதல் இப்பொழுதுதான் கவலைப்பட்டேன்.

உணர்ச்சியுள்ள, அறிவுள்ள, தன்னிடமுள்ள உறவின் அடிப்படையில் ஜனங்களைக் காணுகிற,தீர்ப்புக்கூறவும், முடிவு எடுக்கவும் உரிமையுள்ளவனைப்போல் எல்லாவற்றைப்பற்றியும் பேசுகிற ஒரு மனிதன் என் முழங்காலை இடித்துக் கொண்டு, இதோ உட்கார்ந்திருக்கிறான் ; எனக்கு அவசியமானவற்றை, அல்லது அவசியமற்றவற்றை நிராகரிக்கும் தன்மையைப் பெற்றிருக்கிறான் ; வர்ணிக்க முடியாத அளவு

சிக்கலான ஒரு பிராணி, சிந்தனையின் எரிமலை இதோ வீற்றிருக்கிறான். அவனைப்பற்றி நான் என்ன நினைத்தாலும், அவன் என்னில் ஒரு பகுதி; என்னில் எங்கோ குடியிருக்கும் ஒரு ஆத்மா: அவனை நான் நினைத்தபொழுது அவன் ஆத்மாவின் நிழல் என்னில் விழுந்தது. நாளை அவன் மறைந்து விடுவான். அவன் தலையிலும், இதயத்திலும் சேமித்துக் கிடப்பவைகளுடனும், அவன் அழகிய கண்களில் நான் காணும் யாவற்றுடனும் அவன் பரிபூரணமாக மறைந்து விடுவான். அவன் மறைந்ததும் உலகத்துடன் என்னைப் பிணைத்திருக்கும் கயிறுகளில் ஒன்று அறுந்துவிடும்; ஆனால் உயிர்வாழுகிற, மாறுகிற மனிதன் போய்விட்டாலும், இந்த நினைவு—அது நினைவாக மட்டும் இருந்தாலும்கூட—என்னில் முழுமையாக, மாறுமல் இயங்கும்.....

ஆனால் இவை வெறும் சிந்தனைதான்; சிந்தனையை உருவாக்கும், பேணிவளர்க்கும் விவரிக்க முடியாத ஒன்று, வாழ்க்கையைப்பற்றிச் சிந்திக்குமாறு நம்மை நிர்ப்பந்தப்படுத்தும் ஒன்று, ஏன் என்னும் கேள்விக்கு விடை கோரும் ஒன்று இதற்குப் பின்னே இருக்கிறது.

"விரைவில் நான் படுத்துவிடுவேன் என்று நான் அஞ்சுகிறேன்" என்று மழை பெய்துகொண்டிருந்த ஒரு நாள் என் மாற்றுந் தந்தை சொன்னான். "முட்டாள்தனமான பலவீனம் இது; ஒன்றும் செய்யத் தோன்றவில்லை!"

மறு நாள் பிற்பகல் டீ குடித்துவிட்டு, மேஜையிலிருந்த எச்சிலையும், தனது முழங்காலில் விழுந்துகிடந்த எச்சிலையும் ஜாக்கிரதையாகத் துடைத்துச் சுத்தப்படுத்தினான். பிறகு கண்ணுக்குத் தெரியாத எதையோ வீசினான். அவனை கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டிருந்த கிழவி, தன் மருமகளிடம் தணிந்த குரலில் சொன்னாள்:

"பார்—அவன் தன்னைச் சிங்காரித்துக்கொள்ளுகிறான்; போகத் தயாராகிறான்."

இரண்டு நாட்களுக்குப் பிறகு அவன் வேலைக்கு வரவில்லை. பிறகு ஒரு பெரிய வெள்ளைக் கவரை என்னிடம் கொடுத்துவிட்டு, கிழவி சொன்னாள்:

"நேற்றுப் பகல் ஒரு பெண் இதைக் கொண்டுவந்து கொடுத்தாள். ஆனால் உன்னிடம் கொடுக்க மறந்துவிட்டேன். அவள் உனக்கு ஏன் கடிதங்கள் கொண்டுவர வேண்டும் என்பது எனக்கு விளங்கவில்லை."

கவருக்குள்ளே ஆஸ்பத்திரி காகிதம் ஒரு துண்டு இருந்தது. பெரிய எழுத்துக்களில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டிருந்தது :

"ஒரு மணி நேரம் உனக்கு ஓய்வு கிடைத்தால், என்னை வந்துபார். நான் மார்ட்டினேவ்ஸ்காயா ஆஸ்பத்திரியில் இருக்கிறேன். ஓய். எம்."

மறு நாள் காலை என் மாற்றுந் தந்தையின் கட்டில் அருகில் ஆஸ்பத்திரியில் நான் உட்கார்ந்திருந்தேன். கட்டிலை விட அவன் அதிக நீளமாக இருந்ததால், கிழிந்த காலுறை அணிந்த அவன் கால்கள் கட்டிலின்கம்பிகளுக்கு வெளியேநீட்டிக்கொண்டிருந்தன. மஞ்சள் சுவரைச் சுற்றிப்பார்த்துவிட்டு அழகிய அவன் கண்கள் என் முகத்தையும், தன் தலைமாட்டிலே முக்காலியில் உட்கார்ந்திருந்த பெண்ணின் சிறிய கரங்களையும் பார்த்தன. அவன் தலையணையில் தன் கையை அவள் வைத்ததும்,என் மாற்றுந் தந்தை தன் வாயை அகலத் திறந்து கொண்டு தன் கன்னத்தை அவள் கைகளில் தேய்ப்பான். அந்தப் பெண் தடித்திருந்தாள் ; கறுப்பு ஆடை அணிந்திருந்தாள். கன்னங்களில் கண்ணீர் வடிந்துகொண்டிருந்தது. வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் எலும்புகளும், சப்பை மூக்கும், கறைபடிந்த வாயும் படைத்த என் மாற்றுந் தந்தையின் முகத்தையே இமை கொட்டாது பார்த்தாள்.

"பாதிரியை வரவழைக்க அவன் அனுமதித்தால்" என்று அவள் முணுமுணுத்தாள். "ஆனால் அவன் அனுமதிக்க மாட்டான்—அவனுக்குப் புரியவில்லை...."

தலையணையிலிருந்து கைகளை எடுத்துவிட்டு, பிரார்த்தனை செய்வதைப்போல், கைகளைத் தன் நெஞ்சில் அழுத்திக்கொண்டாள்.

ஒரு நிமிடம் என் மாற்றுந் தந்தையின் மனம் தெளிவடைந்தது. எதையோ நினைவுக்குக் கொண்டுவர முயலு

வதைப்போல் முகத்தைச் சுளித்துக்கொண்டு அவன் உத்தி ரத்தை உற்றுப் பார்த்தான் ; பிறகு பலமிழந்த கையை என் பக்கம் நீட்டினான்.

" நீயா ? வந்தனம். பார்...நான் முட்டாளாக இருக் கிறேன்..."

இது அவனைக் களைப்படையச் செய்துவிட்டது. அவன் கண்களை மூடிக்கொண்டான். நீண்ட, நீல நகங்கள் படைத்த குளிர்ந்த அவன் விரல்களை நான் வருடினேன். அந்தப் பெண் மிருதுவாக வேண்டினாள் :

" எவ்கெனி வாஸில்யெவிச், அனுமதி கொடு !"

" இவளை நீ தெரிந்துகொள்ள வேண்டும்" என்று கண் களால் அந்தப் பெண்ணைச் சுட்டிக்காட்டிக்கொண்டு அவன் சொன்னான் : " அருமையான பெண்..."

அவன் மௌனமானான். வாயை அகலத் திறந்து கொண்டு திடீரென்று காக்கையைப்போல் அவன் கடுமை யாகக் கத்தினான் ; போர்வையைக் கிழித்துக்கொண்டு அவன் படுக்கையில் புரண்டான் ; மெத்தையைக் கெட்டியாகப் பிடித் துக்கொண்டான். அந்தப் பெண்ணும் கூவினாள் ; துன்பத் திற்காளான தலையணையில் தலையைப் புதைத்துக்கொண்டாள்.

என் மாற்றுந் தந்தை விரைவில் இறந்தான். நொடிப் பொழுது அவன் அவயங்கள் புதிய அழகுப் பெற்றன.

அந்தப் பெண்ணைக் கைளில் ஏந்திக்கொண்டு நான் ஆஸ் பத்திரியிலிருந்து வெளியில் வந்தேன். அவள் அழுதாள் ; நோயாளியைப்போல் தள்ளாடினாள். பந்தைப்போல் சுருட் டிக் கையில் வைத்துக்கொண்டிருந்த கைக்குட்டை யைக் கண்களில் மாறி மாறி அழுத்திக்கொண்டாள். அதை மேலும் இறுக்கிக்கொண்டு, அதுதான் தனக்கு இருக்கும் அருமையான இறுதிப் பொருள் என்பதைப்போல் அதைப் பார்த்தாள்.

திடீரென்று அவள் நின்றாள். என்னை நெருங்கி நின்று கொண்டு, வேதனைக் குரலில் அவள் சொன்னாள் :

" குளிர் காலம்வரையில்கூட அவன் உயிருடன் இருக்க வில்லையே...கடவுளே, இப்படி ஏன் நடக்க வேண்டும் ?"

பிறகு கண்ணீரால் நனைந்த கைகளை அவள் நீட்டினாள்.

"போய் வருகிறேன். உன்னை அவன் சதா புகழ்ந்தான். சவ அடக்கம்....நாளை."

"உன்னை வீட்டில் கொண்டுவிடட்டுமா ?"

அவள் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

"ஏன் ? இது பகல் நேரம்தானே."

மூலையில் நின்றுகொண்டு, அவள் வீதியில் செல்வதைப் பார்த்தேன். வாழ்க்கையில் ருசி இழந்துவிட்டவளைப்போல், அவள் அவசரமின்றி நடந்தாள்.

அது ஆகஸ்டு மாதம். இலைகள் உதிர்ந்துகொண்டிருந்தன.

என் மாற்றாந் தந்தையின் சவ அடக்கத்துக்குச் செல்ல எனக்கு நேரம் கிடைக்கவில்லை. மீண்டும் அந்தப் பெண்ணை நான் பார்க்கவே இல்லை....

17

நாள்தோறும் காலை ஆறு மணிக்கு நான் கண்காட்சி மைதானத்திற்கு வேலைக்குச் செல்வேன். அங்கே நான் பல ரகமான ஆட்களைச் சந்தித்தேன்; தலைநரைத்த, கூரிய நாபடைத்த, ஸையின்ட் நிக்கோலாயைப் போல் தோற்றமளித்த தோர்ச்சிப் பெற்ற தச்சன் ஓஸிப்; கூரைவேய்வோன் கூனன் எபிமூஷ்கா; தெய்வபக்தி படைத்த, பிரார்த்தனை செய்கிற, ரிஷியைப்போல் தோற்றமளித்த கொத்துக்காரன் பியோட்டர்; அழகிய தாடியும் நீலக் கண்களும் நல்லெண்ணமும் படைத்த சாந்து பூசும் அழகிய கிரிகோரி ஷிஷ்லின்.

படம் வரையும் குடும்பத்தில் இரண்டாம் முறை நான் வேலைக்கு அமர்ந்தபொழுது இந்த மனிதர்கள் எனக்கு அறிமுகமானார்கள். ஞாயிற்றுக்கிழமைதோறும் விறைப்பாகவும், கௌரவத்துடனும், எனக்குப் புரியாத மதுரமான பேச்சுக்கள் பேசிக்கொண்டும் இவர்கள் குசினியில் காட்சியளிப்பார்கள். இந்த மூஷிக்குகள் நல்லவர்கள் என்பதை நான் உணர்ந்

தேன். தத்தம் வழியில் ஒவ்வொருவரும் கவர்ச்சி யளித் தனர். இழிகுணம் படைத்த, குடிக்கிற, திருட்டெண்ணம் படைத்த குறைவினைவு வியாபாரிகளைவிட இவர்கள் சிறந்த வர்கள்.

சாந்து பூசும் ஷிஷ்லினை என் நண்பனாக நான் தேர்ந் தெடுத்துக்கொண்டேன். சிற்றாளாக என்னை ஏற்றுக் கொள்ளுமாறு அவனை நான் வேண்டினேன். தங்கநிறமான தன் புருவங்களை நெளித்துகொண்டு அவன் என் கோரிக் கையை நிராகரித்தான்.

" நீ ரொம்பச் சின்னவன். எங்கள் வேலை எளிதான தல்ல. ஒரு வருடம், அல்லது இரண்டு வருடங்கள் பொறு." பிறகு தன் அழகிய தலையைப் பின்னே சாய்த்துக்கொண்டு அவன் சொன்னான் : " வாழ்க்கை உனக்குச் சிரமமாக இருக் கிறது போலும்! பாதகமில்லை; கஷ்டத்தைச் சமாளிக்க முயலு. உன்னை நீயே கட்டுப்படுத்திக்கொள்; அப்படிச் செய்தால் நிலைமையைச் சமாளித்துவிடலாம்."

அவன் உபதேசத்தால் நான் நன்மை அடைந்தேனா என்பது எனக்குத் தெரியாது; ஆனால் அதை நான் நன்றி யறிதலுடன் என் நினைவிலிறுத்திக்கொண்டேன்.

இப்பொழுது ஞாயிறுதோறும் அவர்கள் என் எஜ மானன் வீட்டிற்கு வந்து, குசினியிலுள்ள மேஜையைச் சுற்றிப் போடப்பட்டிருக்கும் பெஞ்சிகளில் உட்கார்ந்து கொண்டு எஜமானனுக்காகக் காத்திருக்கும்பொழுது ருசிக ரமாகப்பேசுவார்கள்.உல்லாசமாக என் எஜமானன் அவர்களைக் கைகுலுக்கி வரவேற்றுவிட்டு, விக்கிரகம் இருக்கும் மூலையில் உட்காருவான். பணமும், ரசீதுகளும் வெளியே வந்தன. பில் களையும், இற்றுப்போன கணக்குப் புத்தகங்களையும்மூஷிக்கு கள் மேஜைமீது வைத்தனர். அதன் பிறகு அந்த வாரக் கணக்குப் பைசல் செய்யப்படும்.

வேடிக்கையாகப் பேசி அவர்களை ஏமாற்ற என் எஜ மானன் முயன்றான் ; என் எஜமானனை ஏமாற்ற அவர்கள் முயன்றனர். சில சலயங்களில் பெரும் போர் நிகழ்ந்தது. ஆனால் சாதாரணமாக, சமரசமாக இருவரும் சிரிப்பதிலே எல்லாம் முடியும்.

"நண்ப, விஷமக்காரனைப் பிறந்திருக்கிறாய், நீ" என்று என் எஜமானனிடம் சொல்லுவார்கள் மூஷிக்குகள்.

கூச்சத்துடன் சிரித்துக்கொண்டு என் எஜமானன் சொல்லுவான் :

"நல்லது, திருடுவதில் நீங்களும் சளைத்தவர்க ளல்ல, கூச்சலிடும் கோழிக்குஞ்சுகளா !"

"இது இயற்கைதானே !" என்றான் எபிமூஷ்கா. விளையாட்டை விரும்பாத பியோட்டர் சொன்னான் :

"திருடுவதைக் கொண்டுதான் ஒருவன் உயிர் வாழு கிறான் ; நியாயமாக அவன் சம்பாதிப்பது கடவுளுக்கும், ஜாருக்கும் போய்விடுகிறது."

"அதனால்தான் உங்களை கூஷவரம் செய்ய நான் முயலு கிறேன்" என்று சிரித்துக்கொண்டே சொன்னான் என் எஜமானன்.

நல்லெண்ணத்துடன் அவர்கள் சொன்னார்கள் :

"அப்படியானால், நீ எங்கள் தோலை உரிக்கிறாய் !"

"நம்மை ஏமாற்றுகிறான்."

நெஞ்சில் அடர்த்தியாக வளர்ந்திருந்த ரோமத்தின்மீது கைகளை வைத்துக்கொண்டு கிரிகோரி ஷிஷ்லின் இனிய குர லில் சொன்னான் :

"ஏமாற்றாமல் நாம் வியாபாரம் செய்தால் என்ன, சகோதரர்களா ? நாம் நியாயமாக வாழ்ந்தால், அது எவ் வளவு சிறந்ததாக இருக்கும் ? நீங்கள் என்ன சொல்லுகிறீர் கள், நல்ல மனிதர்களா ?"

அவன் நீலக் கண்கள் மினுங்தன—கறுத்தன. அப் பொழுது அவர் ரொம்ப அழகாக இருந்தான். அவன் யோசனை எல்லோரையும் அசைத்தது. அவர்கள் கலக்கத் துடன் முகங்களை வேறு பக்கம் திருப்பிக்கொண்டனர்.

"ஒரு மூஷிக்கால் யாரையும் ரொம்ப ஏமாற்ற முடி யாது" என்று நெடுமூச்சுடன் முணுமுணுத்தான் ஓஸிப், மூஷிக்குகள்மீது இரங்குகிறவனைப்போல்.

கரிய, வட்டத் தோள்கள் படைத்த கொத்துக் காரன் மேஜைமீது குனிந்துகொண்டு, கனத்த குரலில் சொன்னான் :

"பாவம் செய்வது சகதியைப் போன்றது ; மேலே செல்லுந்தோறும், நாம் ஆழமாகப் புதைந்துகொண்டே இருப்போம்."

அவர்கள் பாணியிலேயே என் எஜமானன் பதில் சொன்னன்.

"உங்கள் கூச்சலுக்குப் பொருந்தும் முறையில் நான் எதிரொலிக்கிறேன்."

சிறிது நேரம் இந்த மாதிரி அவர்கள் வேதாந்தம் பேசினர்கள். ஆனால் மீண்டும் ஒருவரை ஒருவர் ஏமாற்ற முற்பட்டனர். கணக்குப் பைசல் செய்யப்பட்டதும் களைப்புடனும், வியர்த்துக்கொண்டும் அவர்கள் எழுந்து தேநீர் குடிக்க விடுதிக்குச் சென்றனர். போகும்பொழுது என் எஜமானனையும் அழைத்தனர்.

இந்த மனிதர்கள் ஆணிகளையும், செங்கல்லையும், மரத்தையும் திருடாமல் பார்த்துக்கொள்வது என் வேலை. என் எஜமானனுக்கு வேலை செய்வதைத் தவிர அவர்கள் எல்லோரும் சொந்த வேலையும் செய்தனர். தன் சொந்த வேலைக்குச் சாமான்களைக் கடத்திச் செல்ல அவர்கள் முயன்றனர்.

அவர்கள் நேசத்துடன் என்னை வரவேற்றனர். ஆனால் ஷிஷ்லின் சொன்னன் :

"உன்னைச் சிற்றாளாக ஏற்குமாறு நீ என்னைக் கேட்டது உனக்கு நினைவிருக்கிறதா ? ஆனால் இப்பொழுது நீ முன்னேறி யிருப்பதைப் பார் ! இப்பொழுது நீ என் மேஸ்திரி!"

"அதனால் பாதகமில்லை" என்று கேலி செய்தான். "உன் மனம் திருப்தி அடையும்வரை வேலை பார்."

சிறிது விரோதத்துடன் பியோட்டர் சொன்னன் :

"சிறுச் சுண்டெலிகளைக் கண்காணிக்க அவர்கள் எதற்காக ஒரு பூனைக் குட்டியை நியமித்தார்கள் ?"

என் வேலை எனக்குப் பெரும் பளுவாக இருந்தது. தங்களுக்கு மாத்திரம் தெரிந்த அறிவுப் பெட்டகங்களாக இவர்கள் விளங்கினர்கள் ; திருடர்களைக் கண்காணிப்பதைப் போல் இவர்களை நான் கண்காணித்துக்கொண்டிருக்கிறேன். எனவே, இவர்கள் முன்னிலையில் நான் வெட்கினேன்.

ஆரம்ப நாட்கள் மிகச் சிரமமாக இருந்தன. இதை உணர்ந்த ஓலிப், என் கண்களை உற்றுப்பார்த்துக்கொண்டு சொன்னான்:

"கேள், சிறுவ! மனதைப் புண்படுத்திக்கொள்ளாதே—இதில் அர்த்தமில்லை, தெரிகிறதா?"

இது எனக்குத் தெரியவில்லை. ஆனால் என் வேலைக்கு நான் பொருத்தமற்றவன் என்பதைக் கிழவன் தெரிந்து கொண்டான் என்பதை நான் உணர்ந்தேன். அதன் பிறகு நாங்கள் மனம்விட்டுப் பேசிக்கொண்டோம்.

என்னை ஒரு மூலைக்கு அழைத்துச் சென்று, அவன் எனக்கு உபதேசம் செய்வான்:

"நம்மிடையே இருக்கும் மிகப் பெரிய திருடன் கொத்துக்காரன் பியோட்டர் என்பதைத் தெரிந்துகொள். அவன் பேராசை படைத்தவன்; பெரிய குடும்பஸ்தன். அவன்மீது சதா கண்ணைபிரு. ஒரு பவுண்டு ஆணிகள், ஒரு டஜன் செங்கல், ஒரு மூட்டை சிமின்டு – எல்லாம் போய் விடும்! அவன் நல்லவன்; தெய்வபக்தி உள்ளவன். அவனுக்கு எழுதவும் படிக்கவும் தெரியும். ஆனால் அவன் திருடுவான். பெண்களுக்காகவே வாழுகிறான், எபிமூஷ்கா. உன் சம்பந்தப்பட்டவரையில் அவன் பணிவானவன்; தொல்லையில்லாதவன். அவனுக்கு நல்ல மூளை இருக்கிறது; எல்லாக் கூனர்களும் கெட்டிக்காரர்கள். கிரிகோரி ஷிஷ்லின் அழகிய மூளை படைத்தவன். மற்றவர் பொருளைத் தொட மாட்டான் என்பது மாத்திரமல்ல, தன் பொருளைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடத் தெரியாதவன். அவனை யாரும் ஏமாற்றலாம்; ஆனால் அவன் யாரையும் ஏமாற்ற மாட்டான். அவன் செய்யும் காரியங்களுக்கு அர்த்தமே இராது."

"அவன் நல்லவனா?"

தூரத்திலிருந்து பார்ப்பதைப்போல் ஓலிப் என்னைப் பார்த்தான். பிறகு மறக்கமுடியாத இந்த வார்த்தைகளைச் சொன்னான்:

"ஆம், அவன் நல்லவன். நல்லவனாக இருப்பதைவிட எளிதான காரியம் சோம்பேறிக்கு வேறில்லை. நல்லவனாக இருப்பதற்கு மூளை தேவையில்லை, சிறுவ!"

"நல்லது, நீ எப்படிப்பட்டவன்?" என்று நான் ஓஸிப் பைக் கேட்டேன்.

சிரித்துக்கொண்டு அவன் பதில் சொன்னான் :

"நான் ஒரு சிறுமியைப் போன்றவன். நான் பாட்டி யானதும், நான் எப்படிப்பட்டவன் என்பதைச் சொல்லு கிறேன். ஆனால் அதுவரையில் நீ பொறுத்திருக்க வேண்டும். இல்லையெனில், உன் மூளையை உபயோகித்து நான் எப்படிப் பட்டவன் என்பதைத் தெரிந்துகொள். முயன்று பார்!"

அவன் நண்பர்களைப்பற்றியும், அவனைப்பற்றியும் நான் கொண்டிருந்த கருத்துகள் தவறென்பதை அவன் நிரூபித் தான். அவன் சொன்னதை நான் சந்தேகிக்கவில்லை. இந்த அழகிய கிழவன் தங்களைவிடச் சாமர்த்தியசாலி, தங்களைவிட அதிக அனுபவசாலி என்பதை எபிமூஷ்காவும், பியோட் டரும், கிரிகோரியும் அங்கீகரித்தனர். அவன் யோசனையை அவர்கள் நாடினர், அவன் சொன்னதைக் கவனமாகக் கேட் டனர், அவனுக்கு மரியாதை செலுத்தினர்.

"தயவு கூர்ந்து எங்களுக்கு யோசனை கூறு" என்று அவர்கள் வேண்டுவர். ஆனால் அந்த வேண்டுகோளுக்குப் பிறகு ஓஸிப் அப்பால் சென்றதும், கொத்துக்காரன் கிரி கோரியிடம் மிருதுவாகச் சொல்லுவான் :

"சம்சயவாதி!"

"கோமாளி!" என்று உறுமிக்கொண்டே சொல்லுவான் கிரிகோரி.

என் நண்பனைப்போல், சாந்து பூசுவோன் என்னை எச் சரித்தான் :

"அந்தக் கிழவன் விஷயத்தில் ஜாக்கிரதையா யிரு, மாக் ஸிமிச். அவன் விஷயத்தில் நீ ஜாக்கிரதையாக இருக்க வேண் டும். கண்மூடித் திறக்கு முன் தன் சிறு விரலில் உன்னை வைத்து ஆட்டுவான்! சதா வேலை செய்யும் தாடைபடைத்த அந்தக் கிழவர்கள் எவ்வளவு தீமை செய்கிறார்கள் என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!"

அவன் சொன்னது எனக்குப் புரியவே இல்லை.

அவர்கள் எல்லோரையும்விட நேர்மையானவன், தூய குணம் படைத்தவன் கொத்துக்காரன் பியோட்டர்தான்

என்று நான் கருதினேன். அவன் சுருக்கமாக, மனதில் படியு மாறு பேசினான்; கடவுளைப்பற்றியும், மானத்தைப்பற்றியும், நகரத்தைப்பற்றியும் சதா சிந்தித்துக்கொண்டிருந்தான்.

"சகோதரா! மனிதன் எவ்வளவு முயன்றாலும், எவ்வளவு தான் விரும்பினாலும் இறுதியில் அவன் சவப் பெட்டியில் கல்லறையில் முடிவான்!"

வயிற்று வலியால் அவன் வருந்தினான். அவன் பல நாட் கள் ஒன்றுமே தின்னவில்லை. ஒரு துண்டு ரொட்டி தின் றால்கூட வயிற்று வலி அதிகமாகும்; வாந்தி எடுப்பான்.

கூனன் எபிமூஷ்காவும் அன்புடையவனாகவும், யோக்கிய னாகவும் தோன்றினான். சில சமயங்களில் அவன் முட்டாள் தனமாக நடந்துகொண்டான்; சில சமயங்களில் இன்பத்தில் மூழ்கிக் கிடந்தான். அத்தகைய சமயங்களில் அவன் கோமாளியைப் போன்றிருந்தான். சதா அவன் காதல் கொண்டான். தான் காதலித்த ஒவ்வொரு பெண்ணையும் ஓவியமான வார்த்தைகளால் வர்ணித்தான்:

"நான் தெளிவாகச் சொல்லுகிறேன்—அவள் பெண்ணே அல்ல. ஏடு நிறைந்த பாத்திரத்திலே மலர்ந்த மலர் அவள். இதுதான் அவள்!"

குனெவினெவைச் சேர்ந்த குறும்புக்காரப் பெண்கள் தரையைக் கழுவ வந்ததும், கூரையிலிருந்து கீழே இறங்கி ஒரு மூலையில் உட்காருவான். வாயைப் பிளந்து அங்கே உட் கார்ந்துகொண்டு, ஆனந்தத்துடன் அந்தப் பெண்களைக் கண்டு களிப்பான்.

"எவ்வளவு ருசியான பொருளை இன்று கடவுள் எனக்கு அளித்திருக்கிறார்! என் கைகளில் எவ்வளவு இன்ப கரமான பொருள் சிக்கி இருக்கிறது! அவள் எவ்வளவு சிவந்த மலர் என்பதைப் பார்! இவ்வளவு உயர்ந்த பரிசு எனக்குக் கிடைத்ததற்காக என் விதிக்கு நான் எப்படி நன்றி செலுத்துவேன்? அந்த அழகியின் ஒளிபட்டு நான் விரைவில் எரிந்துவிட மாட்டேனா?"

முதலில் அவனைக் கேலி செய்துவிட்டு அந்தப் பெண்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்வார்கள்:

"அந்தக் கூனன் எப்படி உருகுகிறான், பார்! கடவுளே!"

அவர்கள் கேலி செய்வதைக் கூசவேய்வோன் பொருட்படுத்தவில்லை. படிப்படியாக அவன் முகம் மயக்கத்திலாழ்ந்தது. ஜன்னி பீடித்தவனைப்போல் அவன் பேசினான். போதை தரும் இனிய சொற்களை அவன் உதிர்த்ததும், பெண்கள் மதிமயங்கினர். இறுதியில், அவர்களில் வயதுமுதிர்ந்த ஒருத்தி ஆச்சரியத்துடன் சொன்னாள் :

"அவன் பேசுவதைப் பார்த்தால், அந்த மூஷிக் ஒரு சிறுவனுக இருக்க வேண்டும்!"

"பறவையைப்போல் பாடுகிறான்!"

"அல்லது கோயில் வாசற்படியில் இருக்கும் பிச்சைக்காரனைப்போல்" என்று வயதானவள் கடுமையாகச் சொன்னாள்.

ஆனால் எபிமூஷ்கா பிச்சைக்காரனைப்போன்று இருக்கவில்லை. உறுதியாகப் பூமியில் நின்றான், கரடுமுரடான மரத்தின் அடிக்கட்டையைப்போல் அவன் குரலின் ஆகர்ஷண சக்தி மேலும் மேலும் அதிகரித்தது ; அவன் வார்த்தை மேலும் மேலும் வசீகரமாயிற்று. எனவே தங்களுக்குள்ளே பேசுவதை நிறுத்திவிட்டு, பெண்கள் அவன் பேச்சைச் செவிமடுத்தனர். தனது இனிய பேச்சால், அவன் அவர்களை மயக்கிக்கொண்டிருந்தான்.

இரவு போஜன சமயத்திலோ, அல்லது தின்கட்கிழமை காலையோ அவன் திரும்பி வருவதில் அது முடிந்தது. வரும் பொழுதே பெரிய, சதுரமான தன் தலையை அசைத்துக் கொண்டு, ஆச்சரியத்துடன் தன் தோழர்களிடம் சொல்லுவான் :

"எவ்வளவு இனிய பெண்—எவ்வளவு அருமையான வள். இத்தகைய பெண்ணை என் வாழ்க்கையில் நான் முதன் முதல் இப்பொழுதுதான் அடைந்தேன்!"

தன் ஆக்ரமிப்பைப் பற்றிச் சொல்லும்பொழுது, மற்றவர்களைப்போல் பெண்களைக் கேலி செய்யவில்லை, எபிமூஷ்கா. இன்பத்துடன், நன்றி கலந்த வியப்புடன் தன் கண்களை அகலத் திறந்துகொண்டு அவன் புன்னகை புரிவான்.

தலையை அசைத்துக்கொண்டு ஓஸிப் ஆச்சரியத்துடன் சொன்னான் :

" திருத்த முடியாத ஆண்மகனே ! உனக்கு எவ்வளவு வயதென்று சொன்னாய் ?"

" நாற்பத்து நான்கு. ஆனால் இது அர்த்தமற்றது. இன்று நான் ஐந்து வயது இளையவன். ஜீவன் நிறைந்த ஜலத்தில் நான் மூழ்கினேன் ; முழுமையாக, இதயத் தெளிவுடன் எழுந்தேன். எவ்வளவு சிறந்த பெண்கள் இருக்கிறார்கள் !"

கொத்துக்காரன் கடுமையாகச் சொன்னான் :

" உஷார் ! நீ ஐம்பது வயதைத் தாண்டியதும், நெறி கெட்ட உன் வாழ்க்கை உன்னை உருக்குலைத்துவிடும்."

" நீ வெட்கமற்ற பிராணி, எபிமூஷ்கா " என்று நெடு மூச்சுடன் சொன்னான் கிரிகோரி ஷிஷ்லின்.

ஆனால் கூனனின் வெற்றி அந்த அழகிய வாலிபனின் பொறுமையைத் தூண்டிவிட்ட தென்று எனக்குத் தோன்றிற்று.

எல்லோரையும் ஓரக்கண்ணால் பார்த்துக்கொண்டு, உல்லாசமாக ஓஸிப் சொன்னான் :

" உங்கள் பெண்க ளெல்லாம் உங்கள் நாட்டுப்புறத் தன்மையைக் கண்டு மயங்குகிறார்கள் ; சிலர் மிட்டாயாலும், சிலர் பவளத்தாலும் மயங்குகிறார்கள். ஆனால் உங்கள் பெண்கள் எல்லோரும் விரைவில் பாட்டிகளாய்விடுவார்கள்."

ஷிஷ்லினுக்கு மணமாய்விட்டது. ஆனால் அவன் மனைவி சிரமத்தில் இருந்தாள். தரையைக் கழுவிய பெண்களை அவனும் ஆசையுடன் பார்த்தான். அவர்கள் கிடைக்கக் கூடியவர்கள். ஏதாவது சம்பாதிக்க அவர்கள் ஆசைப்பட்டனர். இத்தகைய வருவாயைத் தவறான தென்று கருதவில்லை, வறுமையிலே பீடிக்கப்பட்ட இந்தச் சமூகம். ஆனால் அழகிய இந்த மூஷிக் பெண்களைத் தொடவில்லை. தூரத்திலிருந்து அவர்களைப் பார்த்தான். அவர்கள்மீதோ, அல்லது தன்மீதோ இரக்கப்படுவதைப்போன் றிருந்தது அவன் பார்வை. அவர்கள் அவனுடன் விளையாடவும், அவனை மயக்கவும் ஆரம்பித்தபொழுது, கலக்கத்துடன் சிரித்துக்கொண்டு அவன் அப்பால் செல்வான்.

"வா, வா....." என்று அவன் சொல்லுவான்.

"உனக்குப் பைத்தியமா?" என்று வியப்புடன் கேட்பான் எபிமூஷ்கா. "இத்தகைய சந்தர்ப்பத்தை நீ எப்படி நழுவவிட்டாய்?"

"நான் மணமானவன்" என்றான் கிரிகோரி.

"உன் மனைவி இதைக் கண்டுபிடிக்க மாட்டாள்."

"கணவன் நெறி தவறினால், மனைவி நிச்சயமாக அதைக் கண்டுபிடிப்பாள்; மனைவியை ஏமாற்ற முடியாது, சகோதரா!"

"அவள் எப்படிக் கண்டுபிடிப்பாள்?"

"அது எனக்குத் தெரியாது. ஆனால் நெறி தவறாத மனைவி இதைக் கண்டுபிடித்துவிடுவாள். நான் நெறி தவறுமல் இருந்து, அவள் நெறி தவறினால், நான் அதைக் கண்டுபிடித்துவிடுவேன்."

"எப்படி?" என்று எபிமூஷ்கா கூவினான். ஆனால் கிரிகோரி அமைதியாகச் சொன்னான்:

"அது எனக்குத் தெரியாது."

கோபத்துடன் கூரைவேய்வோன் கைகளை வீசினான்.

"அவன் சொல்வதைக் கேள்! நெறி தவறாத வாழ்க்கை! எப்படி என்பது தெரியாது! உன் மூளை விசித்திரமானது!"

விஷ்லினுக்குக் கீழே வேலைசெய்த ஏழு வேலைக்காரர்களும், அவனுடன் சரசமாகப் பழகினர். 'அவர்கள் பழகுவதைக் கண்டால் தோன்றும், அவன் அவர்கள் மேஸ்திரியல்ல என்று. அவன் இல்லாத சமயத்தில் அவனைக் கன்றுக்குட்டி என்று அழைத்தனர். வேலை செய்யும் இடத்திற்கு வந்ததும் வேலைக்காரர்கள் வேலை செய்யாமல் இருப்பதைக் கண்டால், தானே ஒரு மண்வெட்டியை எடுத்து ஆவேசத்துடன் அவன் வேலை செய்வான். வேலை செய்துகொண்டே சரசமாகச் சொல்வான்:

"வாருங்கள், பயல்களா—வாருங்கள்!" என்று.

ஒருநாள், பொறுமையிழந்த என் எஜமானன் கட்டளைப்படி கிரிகோரியிடம் நான் சொன்னேன்:

"உன் வேலைக்காரர்கள் பிரயோஜனமில்லை."

"உண்மையாகவா ?" என்று ஆச்சரியத்துடன் அவன் கேட்டான், இந்த எண்ணம் அவனுக்கு ஏற்படவே இல்லை என்பதைப்போல்.

"நேற்றுப் பகலிலேயே இந்த வேலை முடிந்திருக்க வேண்டும். ஆனால் இன்றுகூட முடியாது."

"அது உண்மைதான். இன்று இதை முடிக்க மாட்டார்கள்" என்று அவனும் ஒப்புக்கொண்டான். ஆனால் சிறிது நேரத்திற்குப் பிறகு அவன் தயக்கத்துடன் சொன்னான் :

"என்ன நடக்கிறது என்பது எனக்குத் தெரியும். ஆனால் அவர்களைத் துரத்த எனக்கு வெட்கமாக இருக்கிறது. அவர்கள் எல்லோரும் என் கிராமச் சிறுவர்கள். வியர்வை சிந்தி உண்ண வேண்டும் என்று கடவுள் பணித்திருக்கிறார். இது உனக்கும், எனக்கும், அனைவருக்கும் பொருந்தும், இல்லையா ? ஆனால் நீயும், நானும் அவர்களைவிடக் குறைவாகத்தான் வேலை செய்கிறோம். அதனால்தான் அவர்களைத் துரத்த எனக்கு வெட்கமாக இருக்கிறது."

அவன் சிந்தனையில் அடிக்கடி ஆழ்ந்துவிடுவான். ஜன நடமாட்டமற்ற கண்காட்சிசாலை வீதி யொன்றில் அவன் நடப்பான். ஓப்வோட்னி கால்வாய்மீதுள்ள பாலத்தை அடைந்ததும் அங்கே நின்றுவிடுவான். பாலத்தின் கம்பியில் சாய்ந்தவாறு ஜலத்தையும், வானத்தையும், ஓக்காவுக்கு அப்பாலுள்ள வெட்டவெளியையும் உற்றுப்பார்த்துக்கொண்டு நெடுநேரம் நிற்பான். யாராவது அவனை அணுகி, "நீ என்ன செய்கிறாய் ?" என்று கேட்டால் கலக்கத்துடன் அவன் தன்னுணர்வு பெற்று, புன்னகை புரிவான். "விசேஷமாக ஒன்றுமில்லை. ஓய்வு பெறவும், சுற்றுமுற்றும் பார்க்கவும் இங்கே நிற்கிறேன்."

"எல்லாம் எப்படி இருக்க வேண்டுமோ, அப்படி, கடவுள் சிருஷ்டி செய்திருக்கிறார்" என்று அவன் அடிக்கடி சொல்லுவான். "வானத்தையும், நதி பாயும் பூமியையும், படகுகளையும் கடவுள் சிருஷ்டி செய்திருக்கிறார். ஒரு படகில் நீ எங்கு வேண்டுமாயினும் செல்லலாம்—ரியாஸானுக்கும், ரிபின்ஸ்குக்கும், பெர்முக்கும், ஆஷ்ட்ராகானுக்கும் செல்லலாம்.

ஒரு காலத்தில் நான் ரியாஸானில் வசித்தேன். அது மோசமான நகரமல்ல—ஆனால் பயங்கரமானது ; நிழனி-நோவோகிராடைவிடப் பயங்கரமானது. நமது நிழனி மிஞைகரமான ஊர். ஆஷ்ட்ராகான்கூடப் பயங்கரமான ஊர்தான். ஆஷ்ட்ராகானில் கால்மிக்குகள் நிறைய இருக்கிறார்கள். அவர்களை எனக்குப் பிடிக்கவில்லை. மோர்டேவியர்களாலும், கால்மிக்குகளாலும், பெர்ஸியர்களாலும், ஜெர்மானியராலும், பிற அன்னிய நாட்டாராலும் எனக்கு எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை.''

அவன் மெதுவாகப் பேசினான் ; தனது கருத்தை அங்கீகரிக்கும் ஒருவனை அவன் வார்த்தைகள் ஜாக்கிரதையாகத் தேடின. சாதாரணமாக, கொத்துக்காரன் பியோட்டர் அவன் கருத்தை அங்கீகரித்தான்.

''அவர்கள் அன்னிய நாட்டில் பிறந்தவர்களல்ல ; அவர்கள் முறைதவறிப் பிறந்தவர்கள்'' என்று கடுப்புடன் சொன்னான் பியோட்டர். ''அவர்கள் வெளிறிப் பிறந்தவர்கள்; இயேசுவிலிருந்து பிறந்தவர்கள்; ஆனால் இயேசுவின்றி வாழ்கிறார்கள்.''

கிரிகோரி மகிழ்ந்தான்.

''நீ என்னதான் சொன்னாலும், சுத்தமாகப் பிறந்த ரஷியர்களை நான் நேசிக்கிறேன். யூதர்களாலும் எனக்குப் பிரயோஜனமில்லை. அன்னியரைக் கடவுள் ஏன் படைக்க வேண்டும்' என்பது எனக்கு விளங்கவே இல்லை. அது ஆழ்ந்த ஞானம்.''

கொத்துக்காரன் மந்தமாகச் சொன்னான் :

''அது ஆழமாக இருக்கலாம் ; ஆனால் நமக்குத் தேவையில்லாத பல இந்த உலகிலே இருக்கின்றன.''

இவைகளைக் கேட்டுவிட்டு, கேலியாகவும், புண்படுத்தும் முறையிலும் ஓஸிப் சொல்லுவான் :

''நமக்குத் தேவையில்லாத பல இருக்கின்றன—உதாரணமாக உன்னுடைய இந்த அபிப்பிராயம். சதா மோதிக் கொண்டிருக்கிறாய். உன்னைக் கசையால் அடிக்க வேண்டும்!''

ஓஸிப் ஒதுங்கி இருந்தான். எவர் கருத்தை அவன் அங்கீகரித்தான், எவர் கருத்தை அவன் அங்கீகரிக்கவில்லை

என்பதை அவன் வெளியிடவே இல்லை. அவன் எல்லோர் கருத்தையும், எல்லாவற்றையும் அங்கீகரித்ததாகச் சில சமயங்களில் தோன்றிற்று. ஆனால் எல்லாம் அவனுக்குச் சலிப்பை அளித்தன என்பதையும், ஜனங்களை அவன் மூட்டாளாகமதித்தான் என்பதையும் அடிக்கடி தெரிந்துகொள்ள முடியும்.

"பன்றிக் குட்டிகளா!" என்று பியோட்டரையும், கிரிகோரியையும், எபிமூஷ்காவையும் அவன் அழைப்பான்.

அவர்கள் சிரிப்பார்கள்; இன்பமற்ற, உற்சாகமற்ற சிரிப்பு அது. எனினும் அவர்கள் சிரிப்பார்கள்.

உணவுக்காக நாள்தோறும் என் எஜமானன் எனக்கு ஐந்து காபெக் கொடுத்தான். அது போதாததால், நான் அடிக்கடி பட்டினி கிடந்தேன். இதைத் தெரிந்துகொண்டு தொழிலாளர்கள் தங்களுடன் சாப்பிட வருமாறு என்னை அழைப்பார்கள். சில சமயங்களில் டீகுடிக்க என்னைக் காண்டிராக்டர்கள் அழைத்துச் செல்வார்கள். மகிழ்ச்சியுடன் அவர்கள் அழைப்பை நான் ஏற்றுக்கொண்டேன். அவர்கள் பேசும் மெதுவான பேச்சையும், நூதனமான கதைகளையும் கேட்டுக் கொண்டு அவர்களுடன் உட்கார்ந்திருப்பது எனக்கு இன்பம் அளித்தது. மதத்தைப்பற்றி எனக்கு இருந்த ஞானம் அவர்களுக்குத் திருப்தி அளித்தது.

"புத்தகங்களை நீ நிறையப் படித்திருக்கிறாய்; இரப்பை வெடிக்கும்வரை தின்றிருக்கிறாய்" என்று தன் நீலக் கண்களால் என்னை உற்றுப் பார்த்துக்கொண்டு சொன்னான் ஓலிப். அவன் பார்வையை வரையறுப்பது கடினம்: விழியைச் சூழ்ந்து நிற்கும் ஜவ்வு வெள்ளையில் லயிப்பதைப் போன்றிருந்தது.

"அறிவை விசாலப்படுத்து; சேமித்துவை. ஒரு நாள் அது பயன்படும். உனக்கு வயதானதும், நீ பாதிரியாகலாம்; அன்பான வார்த்தைகளால் மக்களுக்கு ஆறுதல் அளிக்கலாம். அல்லது நீ ஒரு கோடீசுவரனாகலாம்."

"மதப் பிரசங்கி" என்று வேதனைகலந்த குரலில் திருத்தினான் கொத்துக்காரன்.

"என்ன?" என்று கேட்டான் ஓலிப்.

"மதப் பிரசங்கி என்று அவர்கள் அழைக்கப்படுகிறார்கள் என்றேன் நான். நீ செவிடனல்லவே!"

"நல்லது—சம்சயவாதிகளுடன் விவாதிக்க ஒரு மதப் பிரசங்கி, அல்லது சம்சயவாதிகளுடன் நீயும் சேர்ந்து கொள்ளலாம். அதுவும் அவ்வளவு மோசமானதல்ல. உன் மூளையை உபயோகித்தால், சம்சய வாதத்தால் நன்றாக வாழலாம்."

கிரிகோரி வேதனையுடன் சிரித்தான்; பியோட்டர் முணுமுணுத்தான்:

"சூனியக்காரிகள்கூட மோசமாக வாழவில்லை. தெய்வ நம்பிக்கையற்ற பிராணிகளும்கூட மோசமாக வாழவில்லை."

"சூனியக்காரிகள் படித்தவர்களல்ல; சூனியக்காரிகளுக்குப் புத்தக அறிவு தேவையில்லை" என்றான் ஓஸிப். பிறகு என் பக்கம் திரும்பிச் சொன்னான்: "இதைக் கேள்: நமது பகுதியில் ஒரு காலத்தில் துஷ்னிகோவ் என்னும் உதவாக்கரை ஒருவன் வசித்து வந்தான். சிறகைப் போல் காற்றடித்த திசைகளி லெல்லாம் அவன் பறந்தான். அவன் வேலைக்காரனல்ல; சோம்பேறியுமல்ல. சொல்வதற்கு வேறு ஒன்றும் இல்லாததால், ஒரு நாள் அவன் தீர்த்த யாத்திரை சென்றான். இரண்டு வருடங்கள் வரை அவன் திரும்பி வரவில்லை. திடீரென்று நூதனமாக உடைகள் அணிந்துகொண்டு அவன் காட்சி யளித்தான்; உக்கிரமான கண்களால் அவன் ஜனங்களைப் பார்த்தான். அவன் ஓயாது கூவினான்: "வருந்துங்கள், மும்முறை சபிக்கப்பட்டவர்களே!" "வருந்துவதிலிருந்து ஜனங்களைத் தடுப்பது யார்—பெண்கள்! அவனுக்கு நல்ல வியாபாரம் நடந்தது. துஷ்னிகோவுக்கு உணவு கிடைத்தது; துஷ்னிகோவுக்கு மது கிடைத்தது; துஷ்னிகோவுக்கு விருப்பமான பெண்கள் கிடைத்தார்கள்..."

"உணவும், மதுவும் மாத்திரம் போதாது" என்று கோபத்துடன் குறுக்கிட்டுச் சொன்னான், கொத்துக்காரன்.

"பிறகு எது?"

"சொல்—அதுதான் பிரதானம்!"

"அவன் சொல்லே நான் சட்டை செய்யவில்லை. தேவைக்கு அதிகமான சொற்கள் எனக்குத் தெரியும். அவைகளே என்ன செய்வது என்று எனக்கு விளங்கவில்லே."

"அந்தத் துஷ்னிகோவை எங்களுக்குத் தெரியும், டிமிட்ரி வாஸில்யேவிச் என்பது அவன் பெயர்—அவன் குடும்பப் பெயர்" என்று புண்பட்ட குரலில் சொன்னான் பியோட்டர்; மௌனமாக தனது கிளாஸைக் குனிந்து பார்த்தான் கிரிகோரி.

"விவாதத்திற்கு நான் தயாரல்ல" என்று சமரச முறையில் சொன்னான் ஓஸிப். "பிழைக்க பல வழிகள் இருக்கின்றன என்பதை நான் மாக்ஸிமிச்சுக்குச் சுட்டிக் காட்ட விரும்பினேன்—அவ்வளவுதான்."

"அவைகளில் சில சிறைக்கு வழி காட்டும்."

"அவைகளில் பல" என்றான் ஓஸிப். "ஒருசில மாத்திரம்தான் பாதிரி தவத்திற்கு வழி காட்டும். எங்கே திரும்ப வேண்டும் என்பது தெரிந்திருக்க வேண்டும்."

சாந்து பூசுவோனைப் போலவும், கொத்துக்காரனைப் போலவும், இவனும் பக்தர்களே அவ்வளவு மதிக்கவில்லே. அவர்களே இவன் வெறுக்கலாம்; ஆனால் இந்த உணர்ச்சியை இவன் வெளிக்குக் காட்டிக்கொள்ளவில்லே. பொதுவாக ஜனங்களேப்பற்றி அவன் அபிப்பிராயம் என்ன என்பதைப் புரிந்துகொள்வதே சிரமமாக இருந்தது.

எபிமூஷ்காவிடம் அவன் அன்பாகவும், மிருதுவாகவும் நடந்துகொண்டான். கடவுள், நீதி, வகுப்புகள், மனித வாழ்விலே பொதிந்துகிடக்கும் துயரம்—அவன் தோழர்களுக்கு மிகப் பிடித்த விஷயங்கள் இவைதான்—ஆகியவைகளேப்பற்றி நடந்த விவாதங்களில் கூரை வேய்வோன் கலந்துகொள்ளவில்லே. நாற்காலியின் பின்புறம் தன் முதுகில் உராயாம லிருப்பதற்காக அதைப் பக்கவாட்டில் வைத்து விட்டு எபிமூஷ்கா அமைதியாக டீ குடிப்பான்—ஒன்றன் பின் ஒன்றாகப் பல கோப்பை டீ குடிப்பான். ஆனால் குபீ ரென்று அவன் உஷாராவான். புகை நிறைந்த அறையைப் பார்த்துவிட்டு உளறும் குரல்களினூடே உற்றுக்

கேட்டுவிட்டுக் குதித்தெழுந்து மறைந்துவிடுவான். இதன் பொருள், அவன் கடன்காரர்களில் ஒருவன்—அவனுக்கு ஒரு டஜன் கடன்காரர்கள் இருந்தனர்—விடுதிக்குள் பிரவேசித்துவிட்டான். அவனை அடித்துப் பணத்தைக் கக்க வைக்க அவன் கடன்காரர்களில் சிலர் முயன்றதால், கூரை வேய்வான் பாய்ந்து மறைந்தான்.

"அவர்கள் கைப்பிடியைப் வீசுவது வேடிக்கையாக இருக்கிறது" என்று அவன் ஆச்சரியத்துடன் சொல்லுவான். "என்னிடம் பண மிருந்தால், சந்தோஷத்துடன் கடனைத் தீர்த்துவிடுவேன்."

"பூ, கழிசடை!" என்று சீறுவான் ஓஸிப்.

எதையும், காணுமல், எதையும் கேட்காமல், தளர்ந்த முகத்துடன், கண்களில் அன்பு சுரக்க, சிந்தனையிலாழ்ந்து உட்கார்ந்துவிடுவான் எபிமூஷ்கா.

"நீ எதைப்பற்றிச் சிந்திக்கிறாய், நண்பா?" என்று அவர்கள் கேட்பார்கள்.

"நான் பணக்காரனுக இருந்தால், நான் உண்மையான சீமாட்டியை மணப்பேன்; நிச்சயமாக உயர்குலப் பெண்ணை—உதாரணமாக ஒரு கர்னலின் மகளை—நான் மணப்பேன். இதைப்பற்றிதான் சிந்திக்கிறேன். அவளை நான் காதலிக்க மாட்டேனே? அவளுக்கருகில் அமர்ந்து நான் விரைவில் வெந்துவிடுவேன்! நடந்தது இதுதான், சகோதரர்களா! ஒரு கர்னலுக்குச் சொந்தக் கிராமப் பங்களாவின் கூரையை நான் வேய்ந்தேன்..."

"அவனுக்கு ஒரு விதவைப் புதல்வி இருந்தாள். இந்தக் கதையை நாங்கள் கேட்டிருக்கிறோம்" என்று குறுக்கிட்டுச் சொன்னன் பியோட்டர்.

ஆனல் தவக்கமின்றி எபிமூஷ்கா தன் கதையைத் தொடர்ந்தான், தனது கரங்களால் முழங்கால்களைத் தோய்த்துக்கொண்டு.

"வெள்ளை உடை உடுத்து, கோலாகலமாக அவள் தோட்டத்திற்கு வருவாள். கூரையிலிருந்து அவளைப் பார்த்துவிட்டு நான் நினைப்பேன்: இவள் இல்லை யென்றால்,

சூரியனால் என்ன பலன்—உலகத்தால் என்ன பலன்? இவள் காலடியில் புழுவைப்போல் பறந்து சென்று உட்கார முடிந்தால்? இவள் ஒரு மலர்; ஏடு நிறைந்த பாத்திரத்தில் மலர்ந்த நறுமணம் வீசும் அழகிய மலர். சிறுவர்களா, இவளைப்போன்ற சீமாட்டி இருந்தால், வாழ்க்கையே ஒரு நீண்ட இரவாக இருக்கும்!"

"உனவுக்கு நீ என்ன செய்வாய்?" என்று பியோட்டர் கடுமையாகக் கேட்டான். ஆனால் எபிமூஷ்கா இந்தக் கேள்வியைச் சட்டை செய்யவில்லை.

"கடவுளே!" என்றான் அவன் ஆச்சரியத்துடன். "நமக்கு உனவு தேவையா? அவளிடம் அளவிட முடியாத செல்வம் இருக்கும்பொழுது!"

ஓஸிப் சிரித்தான்.

"நீ ஒரு தூர்த்தன், எபிமூஷ்கா! இந்த வேலையில் விரைவில் நீ அழிந்துவிடுவாய்!"

பெண்களைத் தவிர வேறு எதைப்பற்றியும் எபிமூஷ்கா பேசவில்லை. அவன் ஸ்திரமான வேலைக்காரனுமல்ல. சில சமயங்களில் அவன் நன்றாகவும், வேகமாகவும் வேலைசெய்வான். மற்ற சமயங்களில் அவன் திறமையின்றி வேலைசெய்வான். மரக் கொட்டாப்புளியை அஜாக்கிரதையாக உபயோகிப்பான். இதனால் மடிப்புகள் விழும். அவன் உடம்பிலிருந்து சதா கொழுப்பு வாசனை வீசும். ஆனால் இன்பகரமான, புதிதாக வெட்டப்பட்ட மரத்தின் மணமும் அவனிலிருந்து வெளிப்படும்.

எதைப்பற்றியும் சுவாரஸ்யமாக தச்சனிடம்பேசலாம்; பேச்சு சுவாரஸ்யமாக இருக்கும். ஆனால் இன்பகரமாயிராது. அவன் சொற்கள் தொடர்பற்றிருக்கும். அவன் எப்பொழுது வேடிக்கையாகப் பேசுகிறான், எப்பொழுது உணர்ச்சியுடன் பேசுகிறான் என்பதைக் கண்டுபிடிப்பது சிரமமாக இருக்கும்.

கிரிகோரிக்குப் பிடித்த சம்பாஷணை விஷயம் கடவுள். கடவுளை அவன் நேசித்தான்; உறுதியாக நம்பினான்.

"கிரிகோரி! கடவுளை நம்பாதவர்கள் இருக்கிறார்கள் என்பது உனக்குத் தெரியுமா?" என்று ஒரு நாள் நான் சொன்னேன்.

அவன் சிரித்தான்.

" என்ன சொல்லுகிறாய் ?"

" கடவுள் இல்லை என்று சிலர் சொல்லுகிறார்கள்."

" ஆம், எனக்குத் தெரியும்..."

கண்ணுக்குத் தெரியாத ஈயை விரட்டிக்கொண்டு, அவன் சொன்னான் :

"மன்னன் டேவிட் சொன்னதை நினைவிலிறுத்திக்கொள்: 'கடவுள் இல்லை என்று முட்டாள் சொல்லுவான்!' எவ்வளவு காலத்திற்கு முன் அறிவிலிகள்மீது தீர்ப்புக் கூறப்பட்டுவிட்டது ! கடவுளின்றி நீ வாழ முடியாது."

அவன் சொல்லுவதை ஆமோதிப்பதைப்போல் ஓஸிப் சொன்னான் :

" கடவுள்மீது பியோட்டருக்குள்ள நம்பிக்கையை அவனிடமிருந்து பறிக்க முயலு – அப்பொழுது அவன் உனக்குக் காட்டுவான் !"

விஷ்லினின் அழகிய முகம் பக்திபரவச மடைந்தது. சாந்து படிந்திருந்த விரல்களால் தாடியைத் தடவிக்கொண்டு அறிவுக்கெட்டாத பாதையில் அவன் சொன்னான் :

" சதையில் கடவுள் குடி இருக்கிறார். மனச்சாட்சியும், ஆத்மாவும் கடவுள் அளித்த பரிசுகள்."

" அப்படியானால் பாவம் ?"

" பாவம் சைத்தான் சதையிலிருந்து பிறந்தது. பாவம் வெளித்தோற்றம், அம்மை வடுவைப்போல். அதற்குமேல் ஒன்றுமில்லை. பாவத்தைப்பற்றி அதிகம் நினைப்பவன்தான் அதிக பாவம் செய்கிறான். பாவத்தைப்பற்றி நீ நினைக்காமலிருந்தால் நீ பாவம் செய்ய மாட்டாய்.

பாவ எண்ணத்தை, சதைக்கு எஜமானனை சைத்தான் விதைக்கிறான்."

" இது சரியல்ல என்று எனக்குத் தோன்றுகிறது..." என்று சந்தேகத்துடன் சொன்னான் கொத்துக்காரன்.

" இதுதான் சரி. கடவுள் பாவமற்றவர். கடவுளின் பிரதிமை, உவமை மனிதன். பிரதிபிம்பம்—சதைதான்—பாவம் செய்கிறது ; பிரதிமை பாவம் செய்ய முடியாது. பிரதிமைதான் ஆவி."

அவன் வெற்றிப் புன்னகை புரிந்தான். ஆனல் பியோட்டர் முணுமுணுத்தான் :

" இது சரியல்ல என்று எனக்குத் தோன்றுகிறது..."

"உன் வாதப்படி பாவம் இல்லே யென்றல், பாவ மன்னிப்பில்லே. பாவ மன்னிப்பில்லே யென்றல், விமோசனமும் இல்லே " என்று கொத்துக்காரனிடம் சொன்னன் ஓஸிப்.

" நீ சொல்லுவது உண்மை. ' சைத்தான் பார்வையிலிருந்து அப்பால் – கடவுள் மன்திலிருந்து அப்பால் ' என்று முதியோர் சொல்வதைப் போல."

ஷிஷ்லின் குடிகாரனல்லாததால், இரண்டு கோப்பை ஓயின் குடித்ததும் பேதைத் தலேக்கேறிவிட்டது. அவன் முகம் சிவக்கும், கண்கள் குழந்தைத் தன்மை பெறும், குரல் கணீரென்றிருக்கும்.

" சகோதரர்களா, எவ்வளவு அற்புதமான வாழ்க்கை நாம் வாழுகிறோம் : கொஞ்சம் வேலே செய்கிறோம் ; பசியில்லே. இதற்காகக் கடவுளே வாழ்த்த வேண்டும் ! இது அற்புதமான வாழ்க்கை !"

அவன் அழுதான். கண்ணீர் அவன் கன்னத்தில் வடிந்து, பட்டுப்போன்ற அவன் தாடியில் முத்தைப்போல் ஜொலித்தது.

இந்தக் கண்ணீர் எனக்கு அருவருப்பை அளித்தது ; வாழ்க்கையை அவன் சதா புகழ்வது எனக்கு வெறுப்பை அளித்தது. வாழ்க்கையைப் பாட்டி புகழ்ந்த முறை சாதாரணமானதாகவும், கவர்ச்சிகரமாகவும் இருந்தன.

இந்தப் பேச்சுகள் என்னே கொதிப்படையச் செய்தன ; பயத்தைத் தூண்டிவிட்டன. மூஷிக்குகளேப்பற்றி நான் பல கதைகள் படித்திருக்கிறேன். ஆனல் புத்தக மூஷிக்குகளுக்கும் எதார்த்த மூஷிக்குகளுக்கும் பெருத்த வித்தியாசமிருப்பதை நான் உணர்ந்தேன். புத்தகங்களில் வந்த மூஷிக்குகள் துரதிர்ஷ்டமான பிரகிருதிகள். அவர்கள் எல்லோரும்—நல்லவர்களாக இருந்தாலும், கெட்டவர்களாக இருந்தாலும், யதார்த்த மூஷிக்குகளுக்கு இருந்த சிந்திக்கும் திறனும், பேச்சுத் திறனும் இருக்கவில்லே. புத்தக

மூஷிக்குகள் கடவுளைப்பற்றியும், வகுப்புக்களைப்பற்றியும், கோயிலைப்பற்றியும் அதிகம் பேசவில்லை; தன்னைவிடச் சிறந்தவர்களைப்பற்றியும், நிலத்தைப்பற்றியும், வாழ்க்கையிலே காணப்படும் அநீதியைப்பற்றியும் கஷ்டங்களைப்பற்றியும் அதிகம் பேசினான். பெண்களைப்பற்றியும் அவன் அதிகம் பேசவில்லை; பெண்களைப்பற்றி அவன் கருத்து காட்டுமிராண்டித்தனமானதாகவும் இருக்கவில்லை. பெண்களை அவன் உயர்வாகக் கருதினான். ஆனால் யதார்த்த மூஷிக்குகள் பெண்களை விளையாட்டுக் கருவிகளாகக் கருதினர். பெண்களிடம் அவன் தந்திரமாக நடந்துகொள்ள வேண்டும்; இல்லையெனில் அவனை வென்று, அவனை அழித்துவிடுவாள். நல்லவர்களாகவும், கெட்டவர்களாக இருந்தாலும் புத்தக மூஷிக்குகள் புத்தகங்களில் இடம் பெற்றிருந்தனர். ஆனால் யதார்த்த மூஷிக் நல்லவனுமல்ல, கெட்டவனுமல்ல; அவன் பிடிபடாத ஒரு புதிர். உண்மையான மூஷிக் எவ்வளவுதான் வாயாடியாக இருந்தாலும், அவன் சொல்லாத ஒன்று இருந்தது என்றும், அந்த ஒன்று அவன் மனதிலேயே இருந்தது என்றும், அவன் சத்தை அவன் சொல்லாததுதான் பிரதிபலித்தது என்றும் நமக்குத் தோன்றிற்று.

எல்லா புத்தக மூஷிக்குகளையும்விட தச்சனின் விடுதி என்னும் நூலில் வந்த பியோட்டரை நான் விரும்பினேன். இந்தக் கதையை என் நண்பர்களுக்குப் படித்துக் காட்ட நான் விரும்பினேன். எனவே கண்காட்சி சாலை மைதானத்திற்கு இந்தப் புத்தகத்தை நான் எடுத்துச் சென்றேன். பல இரவுகள் ஏதாவது ஒரு தொழிலாளியின் விடுதியில் நான் தங்கினேன். ஏனெனில் வேலை செய்து களைத்திருந்ததால், வீடு செல்ல என்னால் முடியவில்லை.

தச்சர்களைப்பற்றி என்னிடம் ஒரு புத்தகம் இருக்கிறது என்று நான் சொன்னதும், அவர்களுக்கு—குறிப்பாக ஓஸிப் புக்கு—சிரத்தை ஏற்பட்டது. புத்தகத்தை என்னிடமிருந்து வாங்கி, பக்கங்களைப் புரட்டிவிட்டு, சந்தேகத்துடன் ரிஷியின் தலையைப் போன்ற தன் தலையை அவன் அசைத்தான்.

"நம்மைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது போலும்! இதைப்பற்றி எண்ணிப்பார்! இதை எழுதியது யார்? ஒரு கனவான்! அப்படித்தான் நான் நினைக்கிறேன்! எதைச் செய்யவும் கனவான்களும் அதிகாரிகளும் துணிந்துவிடுகிறார்கள்! கடவுள் விட்டுவிட்டதை, அதிகாரிகள் பூர்த்தி செய்கிறார்கள். அதற்காகத்தான் அவர்கள் இங்கே இருக்கிறார்கள்."

"கடவுளைப்பற்றி நீ மரியாதையுடன் பேசவில்லை" என்றான் பியோட்டர்.

"அதைப்பற்றிப் பாதகமில்லை. என் வழுக்கைத் தலையில் பனித் தூள் விழுந்தால் எப்படியோ அப்படித்தான் கடவுளுக்கு என் வார்த்தைகள். நீ கவலைப்படாதே! நீயும் நானும் கடவுளை அடையப் போவதில்லை."

திடீரென்று அவன் கொதிப்படைந்து சக்கிமுக்கிக் கல்லிலிருந்து தீப்பொறி பறப்பதைப்போல், கடுமையான சொற்களை உதிர்த்தான். தான் வெறுத்தவைமீது அவன் தாக்குதல் நடத்தினான். அன்று பல முறை அவன் கேட்டான்:

"நீ ஏதாவது எங்களுக்குப் படித்துக் காட்டுகிறாயா, மாக்ஸிமிச்? நல்லது, சொம்ப நல்லது. அது சொம்ப நல்ல காரியம்."

வேலை முடிந்ததும் போஜனத்திற்கு நாங்கள் அவன் விடுதிக்குச் சென்றோம். போஜனத்திற்குப் பிறகு தன் தொழிலாளி ஆர்டாலியோனுடன் பியோட்டரும் போமா என்னும் சிறுவனுடன் ஷிஷ்லினும் உள்ளே வந்தனர். தொழிலாளர்கள் படுத்துறங்கிய கொட்டகையில் விளக்குக் கொளுத்தப்பட்டது. நான் படிக்க ஆரம்பித்தேன். அசையாமலும், ஒரு வார்த்தைகூடச் சொல்லாமலும் நான் படித்ததை அவர்கள் கேட்டுக்கொண்டிருந்தனர். பிறகு ஆர்டாலியோன் ஆத்திரத்துடன் கூவினான்:

"எனக்குப் போதும்!"

அவன் வெளியே போனான். ஆச்சரியத்தால் வாயைப் பிளந்துகொண்டு கிரிகோரி முதலில் தூங்கினான். அவனைத் தச்சர்கள் பின்பற்றினர். ஆனால் பியோட்டரும், ஓஸிப்பும், போமாவும் என்னை நெருங்கி உட்கார்ந்து, மிகுந்த சிரத்தையுடன் நான் படிப்பதைக் கேட்டனர்.

நான் படித்து முடித்ததும் ஓஸிப் விளக்கை அணைத்து விட்டான். நடுநிசியாய்விட்டது என்பதை நட்சத்திரங்கள் சுட்டிக்காட்டின.

இருளில் பியோட்டர் கேட்டான் :

"இத்தகைய ஒரு புத்தகம் எழுதியதன் நோக்கமென்ன? அது யாரை எதிர்க்கிறது ?"

"தூங்கும் நேரமாய்விட்டது" என்று பூட்ஸைக் கழற்றிவிட்டு ஓஸிப் சொன்னான்.

மௌனமாக ஒரு பக்கம் சென்றான் போமா.

"அது யாருக்கு எதிராக எழுதப்பட்டது என்று நான் கேட்கிறேன்" என்று மீண்டும் வற்புறுத்திக் கேட்டான் பியோட்டர்.

"அவர்களுக்குத் தெரியும்" என்றான் ஓஸிப், சாரத்தில் படுத்துக்கொண்டு.

"மாற்றான் தாய்க்கு எதிராக அது எழுதப்பட்டது என்றால், அதில் அர்த்தமே இல்லை. இத்தகைய புத்தகம் மாற்றான் தாயை திருத்தப் போவதில்லை" என்று வற்புறுத்திச் சொன்னான் கொத்துக்காரன். அது பியோட்டருக்கு எதிராக எழுதப்பட்ட தென்றால், அதிலும் அர்த்தமில்லை. தனக்குக் கிடைத்ததை அவன் ஏற்கவேண்டும். ஒரு முறை அவன் கொலை செய்தான். அதற்காக அவன் சைபீரியாவுக்குச் சென்றான். அது நியாயமானது. இத்தகைய நிலையில் புத்தகம் பிரயோஜனமில்லை ; புத்தகம் பிரயோஜனமில்லை—பிரயோஜனம் உண்டா ?"

ஓஸிப் பதில் சொல்லவில்லை. எனவே கொத்துக்காரன் முடித்தான் :

"இந்த எழுத்தாளர்களுக்கு வேறு வேலை இல்லை ; எனவே மற்றவர்கள் விவகாரங்களில் இவர்கள் தலையிடுகிறார்கள், பல பெண்கள் ஒன்றுசேர்ந்தால் செய்வதைப்போல். நல்லது, தூங்கும் நேரமாய்விட்டது !"

ஒரு நிமிடம் கதவுக்கு அருகிலிருந்த நிலவொளி வீசும் நீல நிறச் சதுக்கத்தில் நின்றுகொண்டு அவன் கேட்டான் :

"நீ என்ன நினைக்கிறாய், ஓஸிப் ?"

"என்ன?" என்று தூக்கக் கலக்கத்தில் கேட்டான் ஓஸிப்.

"நல்லது, நீ தூங்கு."

உட்கார்ந்திருந்த இடத்திலேயே ஷிஷ்லின் நீண்டு படுத்தான். அவனுக்கு அருகில் வைக்கோல்மீது படுத்தான் போமா. அந்தப் பிரதேசமே நித்திரையில் ஆழ்ந்தது. தூரத்திலிருந்து ரயிலின் சீழ்க்கையும் இரும்புச் சக்கரங்களின் சல சலப்பும், சேணத்தின் சிலுசிலுப்பும் கேட்டன. பல ரகமான குறட்டை சத்தம் கொட்டகையை நிறைத்தது. நான் ஏமாற்ற மடைந்தேன்; விவாதத்தை நான் எதிர்பார்த் தேன். ஆனல் விவாதமே நடக்கவில்லை.

தீடீரென்று அமைதியாகவும், தெளிவாகவும் ஓஸிப் சொன்னன்:

"அதை மனதில் இறுத்தாதீர்கள். பயலே! நீ வாலிபன்; வாழ்க்கை உனக்கு முன்னே நீண்டு கிடக்கிறது. கருத்துகளைச் சேமித்து வைத்துக்கொள். கடன் வாங்கப் பட்ட இரண்டு கருத்துகளைவிட, சொந்தமாகச் சிந்தித்து உருவாக்கும் ஒரு கருத்து அதிக மதிப்புடையது. தூங்கி விட்டாயா, போமா?"

"இல்லை" என்று ஆவலுடன் சொன்னன் போமா.

"உங்கள் இருவருக்கும் படிக்கத் தெரியும். நீங்கள் முன்னேறுங்கள். ஆனல் படிப்பதை யெல்லாம் ஏற்காதீர் கள். தங்களுக்கு விருப்பமானதை அவர்கள் அச்சிடுகிறார்கள்; அதிகாரம் அவர்களிடம் இருக்கிறது."

சாரத்திலிருந்து காலைக் கீழே தொங்கவிட்டுக்கொண்டும் இரு கைகளாலும் அதன் ஓரத்தைப் பிடித்துக்கொண்டும் எங் கள் பக்கம் சாய்ந்தவாறு அவன் தொடர்ந்தான்:

"புத்தகம்—புத்தகம்தானே இல்லையா? அறிவூட்டும் ஒன்றுதான் புத்தகம்—இதோ பார், சாதாரண மனிதன்—தச் சன்—இப்படித்தான் இருப்பான்; அல்லது மற்றொருவன் இப்படித்தான் இருப்பான்; மேலும் பார், கனவான்கள் இப்படித்தான் இருப்பார்கள், அவர்கள் மற்றவர்களிலிருந்து மாறுபட் டிருப்பதைப்போல்—புத்தகங்கள் இப்படிப்பட்

டவை. நோக்கமின்றி எந்தப் புத்தகமும் எழுதப்படவில்லை ; யாரையாவது பாதுகாப்பதற்காக அது எழுதப்படுகிறது.''

'' அந்தக் காண்டிராக்டரைப் ரியோட்டர் கொன்றதில் தவறில்லை '' என்று கனத்த குரலில் சொன்னான் போமா.

'' இப்படி நீ ஏன் பேசுகிறாய் ? ஒரு மனிதனைக் கொல்லுவது சரியல்ல. கிரிகோரியை நீ விரும்பவில்லை என்பது எனக்குத் தெரியும் ; ஆனால் இந்த எண்ணத்தை அகற்றி விடு. நாம் யாரும் பணக்காரரல்ல. இன்று நான் மாஸ்டர் ; நாளை நான் மீண்டும் சாதாரண தொழிலாளியாக இருப்பேன்.''

'' உன்னைப்பற்றி நான் பேசவில்லை, ஓஸிப் மாமா.''

'' எல்லாம் ஒன்றுதான்.''

'' நீ நியாயமானவன்.''

'' பொறு, புத்தகம் எப்படிப்பட்டது என்பதைச் சொல்லுகிறேன் '' என்று போமாவின் வேதனை நிறைந்த பேச்சில் குறுக்கிட்டுச் சொன்னான் ஓஸிப். '' புத்தகம் தந்திரமானது. மூஷிக்கின்றி ஒரு கனவான் இருக்கிறான் ; கனவானின்றி ஒரு மூஷிக் இருக்கிறான். கனவான் சீழிகிறான் ; மூஷிக்கின் நிலையும் திருப்திகரமாக இருக்கவில்லை. கனவான் மந்தமாகவும், பலஹீனனாகவும் மாறுகிறான் ; இதயத்தில் வஞ்சத்துடன் குடிகாரனாகவும், வீம்பனாகவும் மாறுகிறான் மூஷிக். கதை இப்படித்தான் சொல்லுகிறது. நிலப் பிரபுவிடம் பண்ணை அடிமையாக இருப்பதுதான் நல்லது என்று சுட்டிக்காட்ட அது முயலுகிறது. கனவான் மூஷிக்குக்குப் பின்னே ஒளிந்துகொள்கிறான் ; மூஷிக் கனவானுக்குப் பின்னே ஒளிந்துகொள்கிறான். இருவரும் சுற்றிச் சுற்றி வருகின்றனர், நிறைந்த வயிறுடனும், திருப்தியுடனும். பண்ணை அடிமைத்தனத்தில் வாழ்க்கை அதிக அமைதியாக இருந்தது என்பதை நான் மறுக்கவில்லை. ஏழை மூஷிக்குகளால் பலனில்லை என்பதை நிலப் பிரபுக்கள் தெரிந்துகொண்டனர். நன்கு உணவளித்து, மூளையில்லாத மூஷிக்குகளை அவர்கள் விரும்பினர். எனக்குத் தெரிந்ததை நான் சொல்லுகிறேன். நாற்பது வருடங்கள் நிலப் பிரபுக்களுக்கு நான் அடிமைப் பட்டுக் கிடக்கவில்லையா ? போதிய ஞானம் என் தோலில் ஏற்றப்பட்டிருக்கிறது !''

கட்டு மரம் போன்ற பியோட்டர்—தன் தொண்டையை அறுத்துக்கொண்ட மனிதன்—கனவான்களை இதே மாதிரி வர்ணித்தது என் நினைவிற்கு வந்தது. ஓஸிப்பின் சிந்தனையும், துரெண்ணம் படைத்த அந்தக் கிழவனின் எண்ணமும் ஒரே விதமாக இருப்பது எனக்குத் திருப்தி அளிக்கவில்லை.

என் கால்மீது கையை வைத்துக்கொண்டு ஓஸிப் தொடர்ந்தான் :

" புத்தகங்களையும், பிற எழுத்துக்களையும் நீ சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். எந்த விதமான நோக்கமுமின்றி யாரும் ஏதும் சொல்வதில்லை, இதை அவர்கள் மறக்க முயலுகிறார்கள். என்றாலும், புத்தகங்கள் எழுதுவதற்கும் ஒரே நோக்கம் இருக்கிறது : உன் மூளையைக் குழப்புவது. எல்லாவற்றிற்கும் மூல தேவை : மரத்தை வெட்டவும் செருப்புத் தைக்கவும்....."

நீண்ட நேரம் அவன் பேசினான் ; நிமிர்ந்து படுத்துக் கொண்டும், சாந்தத்திலும், இருளிலும் தன் சொற்களை மெதுவாக உதறுவதற்காகக் குதித்தெழுந்துகொண்டும் அவன் பேசினான்.

" நிலப் பிரபுவுக்கும், மூஷிக்குக்கும் பெருத்த வித்தியாசமிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது உண்மையல்ல. நாமிருவரும் சமம்தான். அவன் உச்சியில் இருக்கிறான்—அவ்வளவுதான். பிரபு புத்தகத்திலிருந்து அறிவுபெறுகிறான் ; என் காயங்களிலிருந்து நான் கற்கிறேன். இதைத் தவிர அவன் முதுகு வெள்ளையாக இருக்கிறது ; ஆனால் அவன் பிரசாகமானவனல்ல. இந்த உலகத்தில் புது அமைப்பைக் கொண்டுவரும் காலம் வந்துவிட்டது. பையா! புத்தகங்களைப் புறக்கணித்துவிடு ; அவைகளை எறிந்துவிடு. எல்லோரும் தன்னைத்தானே கேட்டுக்கொள்ளட்டும் : நான் யார் ? மனிதன் ! நிலப்பிரபு யார் ? அவனும் மனிதன் ! அப்படியானால் இருவருக்கும் என்ன வித்தியாசம் ? அல்லது அவனிடமிருந்து கடவுள் ஐந்து காபெக் அதிகமாகக் கேட்கிறாரா ? இல்லை ; பணம் கொடுப்பது சம்பந்தப்பட்ட வரையில் கடவுள் கண்முன் நாமெல்லாம் சமம்..."

இறுதியாக, அதிகாலையில், பிரபாதம் நட்சத்திரங்களை மங்க வைத்துவிட்ட பிறகு, ஓஸிப் சொன்னான் :

"நான் பேசக் கூடாதா ? என் வாழ்க்கையிலேயே இதற்கு முன் நான் சிந்திக்காத பல விஷயங்களை இன்றிரவு சொன்னேன். நான் சொன்னதைப் பொருட்படுத்தாதே, பையா ! தூங்க முடியாததால் இவைகளைச் சொன்னேனே தவிர, போதபூர்வமாகச் சொல்லவில்லை. கண்களைத் திறந்து கொண்டு இங்கே படுத்திருக்கும்பொழுது, வேடிக்கைக்காகப் பல விஷயங்களைக் கற்பனை செய்கிறேன் ; ஒரு காலத்தில் ஒரு காக்கை இருந்தது. அது வயலிலிருந்து குன்றுக்குப் பறந்து சென்றது ; ஒரு பண்ணையிலிருந்து மற்றொரு பண்ணைக்குப் பறந்து சென்றது. வாழ்நாளை இன்பமாகக் கழித்தது. அது நோய்வாய்பட்டது ; இறந்தது. அழுகிற்று ; உலர்ந்தது. இத்தகைய கதையின் பொருளென்ன ? பொருளே இல்லை ! நல்லது, நாம் தூங்கலாம். விரைவில் நாம் எழுந்திருக்க வேண்டும் ....."

18

ஆரம்ப காலத்தில் சூளைகாப்போன் யாக்கோவ் மீது எனக்கு அளவு கடந்த பிரமை இருந்ததைப் போல், ஓஸிப் என்னைக் கவர்ந்து, மற்றவர்களின் இயக்கத்தையே என் திருஷ்டியிலிருந்து அகற்றிவிட்டான். அவனுக்கும் சூளை காப்போனுக்கும் பொதுவான பல அம்சங்கள் இருந்தன. அதே சமயத்தில் என் தாத்தாவையும், மதவெறியன் பியோட்டர் வாஸில்யெவையும், சமையற்காரன் ஸ்மூரியையும் அவன் எனக்கு நினைவூட்டினான். இவர்களை நினைவூட்டிய அதே சமயத்தில், என் மனதில் ஆழமாகப் பதிந்து, தன் முத்திரையை என் இதயத்தில் அவன் குத்தினான். பித்தளையில் தாவகம் முத்திரை குத்துவதைப்போல அவன் சிந்தனை இரண்டு திசையிலே சென்றது : வேலை நேரத்தில் அவன் சிந்தனை சாதாரணமானதாகவும், அனுபவ சாத்தியமானதாகவும், விளங்கக் கூடியதாகவும் இருந்தது ; ஆனால் நித்திரையின்றிக் கழித்த இரவிலோ, அல்லது ஆப்பம் விற்கும் அவன்

வைப்பாட்டியைக் காண நானும் அவனும் நகருக்கு நடந்து சென்றபொழுதோ அவன் சிந்தனை ஒரு புதிராக இருந்தது. இரவில் அவன் சிந்தனை விசேஷமானதாக இருந்தது. விளக்கி லிருந்து ஒளிவீசுதைப்போல் அவன் சிந்தனை நாற்புறமும் ஒளிவீசிற்று. ஆனால் எது சரியான தென்பதையோ, எதை அவன் விரும்பினான் என்பதையோ என்னால் நிர்ணயிக்க முடியவில்லை.

நான் சந்தித்த எல்லோரையும்விட அவன் சமர்த்தன் என்று நான் கருதினேன். படபடப்புடன் சூலை காப்போன் யாக்கோவைச் சுற்றி நான் வட்டமிட்டதைப் போல அவனைச் சுற்றி நான் வட்டமிட்டேன், அந்த மனிதனைத் தெரிந்துகொள்வதற்காக. ஆனால் அவன் என் னிடமிருந்து தப்பித்துக்கொண்டான். அவனைப் பற்றிய உண்மை எங்கே பொதிந்து கிடக்கிறது ? அவனுடைய எந்த அம்சத்தை உண்மை என்று நான் அங்கீகரிப்பது ?

அவன் எனக்குச் செய்த உபதேசம் என் நினைவில் இருக்கிறது.

" உண்மையைக் கண்டுபிடிக்க உன் மூளையை உபயோ கப்படுத்து. தளராது முயற்சி செய்."

என் கௌரவம் புண்பட்டது ; கௌரவத்தைவிட உயர்ந்த வேறொன்றும் புண்பட்டது. அந்தக் கிழவனை உணருவதை மிக முக்கியமானதாக நான் மதித்தேன்.

இவ்வளவு பிடிபடாதவனாக இருந்தாலும், அவன் ஸ்திர மானவன். இன்னும் நூறு வருடங்கள் அவன் உயிர் வாழ்ந் தால்கூட, வியக்கத்தக்க முறையில் மாறும் ஜனங்களுக்கு மத்தியில் அவன் மாறுமல் இருப்பான் என்பது திண்ணம். ஸ்திரத்தன்மை என்னும் எண்ணத்தை மதவெறியனும் உண்டுபண்ணினான். ஆனால் இது துக்ககரமானது என்பதை உரிய காலத்தில் நான் உணர்ந்தேன். ஓஸிப்பின் ஸ்திரத் தன்மை வேறு விதமானது ; விரும்பத்தக்கது.

மனிதனுடைய ஸ்திரமற்ற தன்மை சதா முத்திரை குத்திக்கொண்டே இருந்தது. ஒரு ஸ்தானத்திலிருந்து இன்னொரு ஸ்தானத்திற்கு எதிர்பாராத முறையில் ஜனங்கள் தாவிய முறை என்னை நிலைகுலைத்தது. விளக்க முடியாத

இந்தத் தகவல்களை எண்ணி வியந்து நான் களைத்துவிட்டேன். ஜனங்கள்மீது எனக்கிருந்த ஜீவன் நிறைந்த சிரத்தையை இது குறைத்தது ; ஜனங்கள்மீது எனக்கிருந்த அன்புக்குத் தடையிட்டது.

ஜூலை மாத ஆரம்பத்தில் ஒரு ஓட்டை வண்டி நாங்கள் வேலைசெய்துகொண்டிருந்த இடத்திற்குப் பாய்ந்து வந்தது. டிரைவர் ஆசனத்தில் தொப்பியில்லாத, உதட்டிலிருந்து ரத்தம் வடிகிற, விக்கிக்கொண்டிருந்த ஒரு குடிகாரன் உட்கார்ந்திருந்தான். பின் சீட்டில் குடிவெறியிலிருந்த கிரிகோரி விஷ்லின் ஆடிக்கொண்டிருந்தான். அலங்கரிக்கப்பட்ட வைக்கோல் தொப்பியும், வெறுங் காலில் பூட்சும் அணிந்திருந்த ஒரு தடிச் சிறுக்கி அவனை ஒரு கையால் பிடித்துக்கொண்டிருந்தாள். வண்டி ஆடுவதை ஓட்டி, அவளும் ஆடினாள். ஒரு கையால் தடியை வீசிக்கொண்டு, சிரித்துக்கொண்டே அவள் கூவினாள் :

" ஏய், சைத்தான்களே ! கண்காட்சி மூடப்பட்டுவிட்டது ; கண்காட்சி நடக்கவில்லை. எனினும் அவர்கள் என்னைக் கண்காட்சிக்கு இழுத்து வருகிறார்கள்."

தளர்ந்து, தொறுங்கிவிட்ட கிரிகோரி வண்டியிலிருந்து ஊர்ந்து வெளியே வந்தான். தரையில் உட்கார்ந்துவிட்டு, கண்ணீரும் கம்பலையுமாக அவன் சொன்னான் :

" மண்டியிட்டு, நான் இதோ இருக்கிறேன். நான் ரொம்பப் பாவம் செய்துவிட்டேன் ! எல்லாவற்றையும் சிந்தித்துவிட்டேன்—நான் பாவம் செய்துவிட்டேன் ! எபிமூஷ்கா சொல்லுகிறான் : கிரிகோரி, கிரிகோரி என்கிறான் அவன்... அவன் சொல்லுவது சரிதான் ; ஆனால் என்னை மன்னித்துவிடு ! உங்கள் அனைவருக்கும் விருந்தளிக்க நான் விரும்புகிறேன். அவன் சொல்லுவது உண்மைதான். நாம் ஒரு தரம்தான் உயிர் வாழுகிறோம்...ஒரு தரத்திற்கு மேல் உயிர் வாழ முடியாது..."

அங்குமிங்கும் தாவிக்கொண்டு அந்தச் சிறுமி குலுங்கக் குலுங்க நகைத்தாள். அவள் செருப்பு தவறிவிட்டது. வண்டிக்காரன் கூவினான் :

" வா, போகலாம் ! போகலாம், வா ! குதிரையை என்னால் நிறுத்த முடியவில்லை !"

மெலிந்திருந்த அந்தக் கிழட்டுக் குதிரையின் வாயிலிருந்து நுரை வந்துகொண்டிருந்தது. நின்ற இடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுவிட்டதைப் போன்று, அது அங்கேயே நின்றது. எல்லாம் வேடிக்கையாக இருந்தது.

கண்டக் கதவுக்குமுன் என்னுடன் நின்றுகொண்டிருந்த போமா மாத்திரம்தான் சிரிக்கவில்லை. அவன் முணு முணுத்தான்.

" அவன் கட்டு மீறிவிட்டான், பன்றி ! வீட்டிலே அவனுக்கு ஒரு மனைவி இருக்கிறாள்—அழகிய மனைவி !"

புறப்படுமாறு வண்டிக்காரன் வற்புறுத்திக்கொண்டிருந்தால் அந்தச் சிறுமி கீழே இறங்கிக் கிரிகோரியை வண்டிக்குள் இழுத்துவிட்டாள். அவள் காலடியில் அவன் விழுந்து கிடந்தான். பிறகு தடியை வீசிக்கொண்டு அவள் கூவினாள் :

" நாங்கள் போகிறோம் !"

முட்டாள்தனமாகக் கிரிகோரி நடந்துகொண்டதால் வேதனை தாளாமல் போமா கூச்சலிட்டதும், தொழிலாளிகள் வேலைசெய்ய ஆரம்பித்தனர். தங்கள் மாஸ்டரை அவர்கள் கேலிசெய்தனர். ஆனால் அவன்மீது அவர்கள் பொறுமைப் பட்டனர்.

"மாஸ்டர் என்று தன்னைத்தானே அழைத்துக்கொள்ளுகிறான்" என்று முனகினான் போமா. " நமது வேலையை முடித்துக்கொண்டு கிராமத்திற்குத் திரும்ப இன்னும் ஒரு மாதம்கூட ஆகாது. அதுவரையில் அவனால் பொறுக்க முடியவில்லை....."

கிரிகோரிமீது எனக்கும்தான் ஆத்திரம் ஏற்பட்டது ; அவனுக்கு அருகில் அந்தச் சிறுமி பொருத்தமற்றவளாகக் காணப்பட்டாள்.

கிரிகோரி விஷ்லின் ஏன் மாஸ்டராகவும், போமா டுச்கோவ் சாதாரண தொழிலாளியாகவும் இருக்கிறான் என்று நான் அடிக்கடி வியந்தேன்.

சுருட்டை மயிரும், வளைந்த மூக்கும், ஒளிவீசும் கண்களும், வட்ட முகமும், தேகாரோக்கியமும் படைத்த

அழகன் போமா. அவன் மூஷிக்கப் போன்று தோற்ற மளிக்கவில்லை. அவன் நன்கு உடை அணிந்தால், உயர் குலத்தில் பிறந்த வியாபாரியின் மகனைக அவனை யாரும் மதிப் பார்கள். அவன் கடுகடுப்பாகவும், மௌனியாகவும், காரி யஸ்தனைகவும் இருந்தான். அவனுக்கு எழுதவும், படிக்கவும் தெரிந்திருந்ததால், காண்டிராக்டரின் கணக்குகளை அவன் எழுதினான்; பில் தயாரித்தான். வேலையிலே அவன் அதிக விருப்பம் காட்டவில்லை யென்றாலும், தன் தோழர்களை வேலை செய்யுமாறு தூண்ட அவனால் முடியும்.

"தன் வாழ்நாளில் எல்லாவற்றையும் ஒருவன் செய்து விட முடியாது" என்று அவன் சாந்தமாகச் சொல்லுவான். புத்தகங்கள்மீது அவனுக்கு வெறுப்பு. "எல்லாம் அச்சிடப் படுகின்றன. நீ விரும்பினால் நான் ஒரு கதையை ஜோடித்துத் தருகிறேன். அது அவ்வளவு சிரமமானதல்ல."

ஆனால் என்ன சொன்னாலும், அதை அவன் கவனமா கக் கேட்பான். எதிலாவது அவனுக்குச் சிரத்தை ஏற்பட் டால், எல்லா விவரங்களையும் அவன் தெரிந்துகொள்வான். பிறகு அவன் சுயமுடிவு எடுப்பான்; தன் அளவு கோலால் அதை அளப்பான்.

போமா காண்டிராக்டராக வேண்டும் என்று ஒரு நாள் சொன்னேன். அதற்கு அவன் சோம்பலுடன் பதில் சொன்னான்:

"ஆரம்பத்திலிருந்தே ஆயிரக்கணக்கான ரூபிள்கள் கிடைப்பதானால், அது நல்லதுதான். ஆனால் சொற்ப வரு வாய்க்காக ஏராளமான தொழிலாளிகளை நிர்வகிக்க நேர்ந் தால், அதில் என்ன அர்த்தமிருக்கிறது? வேண்டாம், நான் பொறுத்திருப்பேன். பிறகு ஓரான்காவிலுள்ள மடத்தில் நான் இடம் பெறுவேன். நான் பலசாலியாகவும், அழகனைக வும் இருக்கிறேன். எனவே பணக்கார வியாபாரியின் விதவை என்மீது காதல் கொள்ளலாம். இத்தகைய நிகழ்ச்சி கள் நிகழுகின்றன. லொக்காச்சியைச் சேர்ந்த ஒருவன் இரண்டு வருடத்தில் நல்ல ஜோடியைப் பிடித்தான்—அதுவும் நகர மங்கையை. வீடு வீடாக அவன் விக்கிரகத்தை எடுத் துச் சென்றபொழுது அவள் அவனைக் கண்டாள்..."

அதுதான் அவன் திட்டம். மடத்தில் கற்றுக்குட்டியாகச் சேர்ந்து இன்ப வாழ்க்கை அடைந்தவர்களின் கதைகளை அவன் கேட்டிருக்கிறான். இத்தகைய கதைகளையும், போமா சிந்திக்கும் முறையையும் நான் வெறுத்தேன். ஆனால் அவன் மடத்தில் சேருவான் என்று நான் திடமாக நம்பினேன்.

ஆனால் பொருட்காட்சி ஆரம்பமானதும், ஒரு விடுதியில் ஏவலாளனாக, போமா வேலைக்கு அமர்ந்ததைக் கண்டு எல்லோரும் ஆச்சரியமடைந்தனர். அவன் சக ஊழியர்களுக்கு இது ஆச்சரியம் அளித்ததென்று சொல்ல முடியாது. ஆனால் அவர்கள் அவனைக் கேலிசெய்ய ஆரம்பித்தனர். ஞாயிற்றுக்கிழமைகளிலோ, அல்லது ஏனைய விடுமுறை நாட்களிலோ அவர்கள் குடிக்கக் கிளம்பினால், சிரித்துக்கொண்டே ஒருவருக் கொருவர் சொல்லிக்கொள்வார்கள் :

" போமாவுக்குக் கொஞ்சம் வியாபாரம் நடக்குமாறு செய்யலாம்."

விடுதிக்குள் சென்றதும், அவர்கள் அதிகாரத் தொனியில் சொல்லுவார்கள் :

" ஏய், சப்ளையர் ! சுருட்டை மயிர் படைத்தவனே ! இங்கே வா !"

அவன் வருவான் ; அண்ணாந்து பார்த்துக்கொண்டே கேட்பான் :

" என்ன சாப்பிடுகிறீர்கள் ?"

" பழைய நண்பர்களை நீ தெரிந்துகொள்ளவில்லையா ?"

" எனக்கு ரொம்ப வேலை இருக்கிறது."

தன் தோழர்கள் தன்னை வெறுக்கிறார்கள் என்பதையும், தன்னைக் கேலி செய்ய விரும்புகிறார்கள் என்பதையும் அவன் உணர்ந்தான். எனவே சகிப்புத்தன்மையுடன் அவன் அவர்களைப் பார்த்தான். முகம் விறைத்தது.

" சீக்கிரம் இந்தச் சடங்கை முடியுங்கள் " என்று சொல்லுவதைப் போன்றிருந்தது அவன் முகத் தோற்றம்.

" உனக்குப் பக்ஷீஸ் வேண்டும்போல் இருக்கிறது " என்று அவர்கள் சொல்லுவார்கள், பர்ஸைத் துளாவிக் கொண்டு. ஆனால் அவனுக்கு ஒரு காபெக்கூடக் கொடுக்காமல் அவர்கள் போய்விடுவார்கள்.

பாதிரியாகத் திட்டமிட்டிருந்த அவன், ஏன் ஒரு ஏவலாளனென்று நான் அவனைக் கேட்டேன்.

"பாதிரியாக நான் திட்டமிடவே இல்லை" என்றான் அவன். "நீண்ட காலம் ஏவலாளாக இருக்கவும் நான் விரும்பவில்லை."

ஆனால் நான்கு வருடங்களுக்குப் பிறகு அவனை நான் ஸாரிட்ஸினில் சந்தித்தேன். அப்பொழுதும் அவன் ஏவலாளாகத்தான் இருந்தான். இறுதியில் கன்னக்கோல் வைக்க முயன்றதாகப் போலீஸ் டுச்கோவ் கைது செய்யப்பட்டதாக நான் பத்திரிகையில் படித்தேன்.

பியோட்டர் கோஷ்டியில் வேலை செய்த கொத்துக் காரன் ஆர்டாலியோன் கதை என்னைப் பெரிதும் கவர்ந்தது. இவன் வயதானவன்; மிகச் சிறந்த வேலைக்காரன். உல்லாசமான, கரிய தாடி படைத்த நாற்பது வயதான இந்த மூஷிக் மாஸ்டராக இல்லாமல், பியோட்டர் ஏன் மாஸ்டராக இருக்கிறான் என்னும் கேள்வியை இவன் என்னில் தூண்டிவிட்டான். அவன் அபூர்வமாகத்தான் குடித்தான்; அப்படி குடித்தாலும் மித மிஞ்சிக் குடிக்கவில்லை. அவன் தேர்ச்சி பெற்ற வேலைக்காரன். அவன் ஆர்வத்துடன் வேலை செய்ததால், செங்கல் சிவப்பு கழுகைப் போன்று பறந்தது. அவனுடன் ஒப்பிட்டால், பிடிவாதமான, நோய்வாய்ப்பட்ட பியோட்டர் சாரமற்றவன். பியோட்டர் அடிக்கடி சொல்லுவான்:

"எனக்கு ஒரு மர சவப்பெட்டி செய்வதற்காக நான் மற்றவர்களுக்குச் செங்கல் வீடுகள் கட்டிக் கொடுக்கிறேன்."

செங்கலை அடுக்கும்பொழுது இன்பம் கலந்த உற்சாகத்துடன் ஆர்டாலியோன் கூவுவான்:

"வாருங்கள், பயல்களா! கடவுளின் பெருமையை உத்தேசித்து ஒரு கை கொடுங்கள்!"

வரும் வசந்த காலத்தில் தான் டாம்ஸ்குக்குச் செல்ல உத்தேசித்திருப்பதாகவும், ஒரு கோயில் கட்டத் தன் மைத்துனன் காண்டிராக்ட் எடுத்திருப்பதாகவும், தனக்குப் போர்மன் உத்தியோகம் கொடுக்க அவன் இசைந்திருப்பதாகவும் அவன் சொல்லுவான்.

" எல்லாம் முடிவாய்விட்டது. கோயில் கட்டும் வேலையை நான் நேசிக்கிறேன்!" என்றான் அவன். பிறகு என்னைப் பார்த்துச் சொன்னான்: " நீயும் என்னுடன் வா. எழுதவும், படிக்கவும் தெரிந்தவன் ஸைபீரியாவில் சிரமமின்றி வாழலாம். அங்கே படிப்புக்குப் பெரும் மதிப்பு இருக்கிறது."

அவனுடன் செல்ல நான் இசைந்தேன். வெற்றி மகிழ்ச்சியுடன் ஆர்டாலியோன் கூவினான்:

" நல்லது! நான் உண்மையாகச் சொல்லுகிறேன், விளையாட்டுக்கல்ல."

வயதானவன் குழந்தைகள்மீது கருணைகாட்டுவதைப் போல், அவன் பியோட்டர், கிரிகோரி ஆகியோர்மீது கருணை காட்டினான். ஓஸிப்பிடம் அவன் சொன்னான்:

" வீம்பர்கள்! கையிலிருக்கும் சீட்டைக் காட்டுவதைப் போல், தங்கள் தலையிலிருக்கும் எல்லாவற்றையும் அவர்கள் காட்டிவிடுகிறார்கள். ஒருவன் சொல்லுகிறான்—எனக்கு எவ்வளவு நல்ல கை கிடைத்திருக்கிறது; மற்றவன் சொல்லுகிறான்—என் துருப்புச் சீட்டுகளை எட்டிப் பார்!"

" ஏன் கூடாது?" என்று தெளிவின்றிச் சொன்னான் ஓஸிப். " வீம்பளப்பது மனித இயல்பு. எல்லாப் பெண்களும் மார்பு முன்னே தெரியுமாறு உடை அணிகிறார்கள்."

" அவர்கள் சம்பந்தப்பட்ட வரையில் எல்லாம் ஆண்டவன் செயல். எனினும் அவர்கள் பணம் சேமிக்கிறார்கள்" என்று சமாதானமடையாத ஆர்டாலியோன் சொன்னான்.

" கிரிகோரி பணத்தைச் சேர்த்து வைக்கிறான் என்று சொல்ல முடியாது."

" மற்றவனைப்பற்றி நான் பேசுகிறேன். அவன் காட்டிற்கு, திக்குத் தெரியாத இடத்திற்கு, தன் கடவுளை மாத்திரம் துணையாகக்கொண்டு ஏன் செல்லக் கூடாது? கடவுளே, இங்குள்ள எல்லாம் எனக்குச் சலிப்பைத் தருகிறது. வசந்தத்தில் நான் ஸைபீரியாவுக்குப் போகிறேன்!"

ஆர்டாலியோன்மீது பொறுமை அடைந்த மற்ற தொழிலாளிகள் சொன்னார்கள்:

"உன் மைத்துனனைப்போல் எங்களுக்கும் ஒரு பக்க பலம் இருந்தால், ஸைபீரியா எங்களைப் பயமுறுத்தாது."

திடீரென்று ஆர்டாலியோன் மறைந்தான். ஒரு ஞாயிற்றுக்கிழமை அவன் தொழிற்சாலையிலிருந்து வெளியே சென்றான். மூன்று நாட்கள் அவனைப்பற்றி யாருக்கும், ஒன்றும் தெரியவில்லை.

அவர்கள் கற்பனை லோகத்தில் சஞ்சரித்தார்கள்.

"அவனை யாராவது தீர்த்திருப்பார்கள்."

"நீந்தச் சென்ற அவன், மூழ்கி இருப்பான்."

இறுதியில் எபிமூஷ்கா கலக்கத்துடன் சொன்னான்:

"ஆர்டாலியோன் களிவெறியில் இருக்கிறான்!"

"அது பொய்!" என்று சந்தேகத்துடன் கூவினான் பியோட்டர்.

"களிவெறியாட்டம்—குடி. வைக்கோல் போரைப் போல் புகைந்துவிட்டான். அவன் மனைவி இறந்துவிட்டதைப்போல்....."

"நெடுங்காலமாக அவன் மனைவி இழந்தவன். அவன் எங்கே இருக்கிறான்?"

ஆர்டாலியோனைக் கரக்கப் பியோட்டர் கோபத்துடன் சென்றான்; ஆனால் அடி வாங்கினான்.

அதரங்களை இறுக மூடிக்கொண்டு, ஜேப்பிகளுக்குள் கைகளைச் சொருகிக்கொண்டு ஓஸிப் சொன்னான்.

"நான் போய்ப் பார்த்து வருகிறேன்—என்ன காரணம் என்பதைக் கண்டுபிடிக்கிறேன். அவன் நல்லவன்."

நானும் போனேன்.

"அதைப் பார்!" என்று போகும் வழியில் ஓஸிப் சொன்னான். "மிகக் கண்ணியமாக ஒரு மனிதன் வாழுகிறான்—பிறகு திடீரென்று அவன் வால் மேலே போகிறது. அவன் குப்பையில் விழுந்துவிடுகிறான், விழிப்புடனிரு, மாக்ஸிமிச்; இந்தப் படிப்பினையைப் படி!"

"குனாவினாவிலுள்ள உல்லாச நகரத்திற்கு நாங்கள் வந்தோம். அங்குள்ள மலிவான ஒரு விபசார விடுதிக்கு நாங்கள் சென்றோம். திருட்டுப் பார்வை படைத்த ஒரு கிழவி எங்களை எதிர்கொண்டு அழைத்தாள். அவள் காதில்

ஓஸிப் என்னமோ சொன்னான். குதிரை லாயம் போன்றிருந்த அழுக்குப் படிந்த, சிறிய, இருண்ட, ஒரு காவி அறைக்கு எங்களை அவள் அழைத்துச் சென்றாள். தடித்த ஒரு பெண் கட்டிலில் படுத்து, தூக்கத்தில் புரண்டுகொண் டிருந்தாள். அவள் விலாவில் குத்திவிட்டு, கிழவி சொன்னாள் :

" எழுந்திரு, கேட்கிறதா ? எழுந்திரு, தேவையே !"

பீதியுடன் அந்தப் பெண் குதித்தெழுந்தாள். முகத்தைத் தேய்த்துக்கொண்டு அவள் கூவினாள் :

" கடவுளே, என்ன இது ? யார் இது ?"

" துப்பறிபவர்கள் வந்திருக்கிறார்கள் " என்று கௌரவத்துடன் சொன்னான் ஓஸிப். பெருமூச்சு விட்டுக்கொண்டு அந்தப் பெண் மறைந்தாள். அவள் போன திசையில் துப்பி விட்டு ஓஸிப் சொன்னான் :

"சைத்தானைவிடத் துப்பறிபவர்களுக்கு இவர்கள் அதிகம் பயப்படுகிறார்கள் !" என்று அவன் விளக்கினான்.

சுவரிலிருந்த ஒரு சிறிய கண்ணாடியைக் கிழவி அப்புறப் படுத்திவிட்டு, சுவர் காகிதத்தை நீக்கினாள்.

" உள்ளே பார். அவன்தானா ?"

" அவன்தான். அந்தச் சிறுமியை அப்பால் போகச் சொல்."

நானும் பார்த்தேன். நாங்கள் இருந்த அறையைப்போல் மோசமாக இருந்த அந்த அறையில், மூடப்பட்டிருந்த ஜன்னலில் ஒரு விளக்கு எரிந்துகொண் டிருந்தது. விளக்குக்கு அருகில் நின்றுகொண்டு, நிர்வாணமான, கோணலான கண்களுள்ள ஒரு தார்தாரியப் பெண் தன் உள் சட்டையை தைத்துக்கொண் டிருந்தாள். அவளுக்குப் பின்னே இரண்டு தலையணைகளுக்கு மேலே வீங்கியிருந்த ஆர்டாலியோன் முகம் தெரிந்தது. அவன் கனத்த, கரிய தாடி நாலா பக்கமும் சிதறிக் கிடந்தது. தார்தாரியப் பெண் திடுக்கிட்டாள். சட்டையைப் போட்டுக்கொண்டு, மெத்தையைத் தாண்டி, திடீரென்று நாங்கள் இருந்த அறையில் தோன்றினாள்.

அவளை கடைக்கண்ணால் பார்த்துவிட்டு, ஓஸிப் மீண்டும் துப்பினான்.

" ஆ ! வெட்கமற்ற சிறுக்கி !"

"கிழட்டு மூட்டாளே!" என்று சிரித்துக்கொண்டே சொன்னாள் அவள்.

ஓலிப்பும் சிரித்தான். தன் விரலை அவளை நோக்கி அசைத்தான்.

தார்தாரியப் பெண்ணின் குகைக்கு நாங்கள் சென்றோம். ஆர்டாலியோனின் காலடியில் கிழவன் உட்கார்ந்தான். அவனை எழுப்ப நீண்ட நேரம் முயன்றான் கிழவன். ஆனால் ஆர்டாலியோன் முணுமுணுத்தான்:

"நல்லது...ஒரு நிமிடம் பொறு, நாம் போகலாம்..."

இறுதியில் அவன் எழுந்து உட்கார்ந்தான். ஓலிப்பையும், என்னையும் ஓளியற்ற கண்களால் பார்த்துவிட்டு, வீங்கியிருந்த கண்களை மூடிக்கொண்டான். பிறகு அவன் கேட்டான்:

"நல்லது.....!"

"உனக்கு என்ன நேர்ந்தது?" என்று சாந்தமாகவும், சந்தோஷமின்றியும் கேட்டான் ஓலிப். ஆனால் கண்டிக்கும் முறையில் கேட்கவில்லை.

"நிதானம் இழந்துவிட்டேன்" என்று இருமிக் கொண்டு விளக்கினான் ஆர்டாலியோன்.

"எப்படி?"

"சாதாரணமாக நிகழக் கூடியது."

"ரொம்ப மோசமாக இருக்கிறதே!"

"எனக்குத் தெரியும்..."

மூடப்படாமல் இருந்த வோட்கா பாட்டிலை மேஜையிலிருந்து எடுத்து, வாயில் ஊற்றிக்கொண்டான் ஆர்டாலியோன். பிறகு அந்தப் பாட்டிலை ஓலிப்பிடம் கொடுத்தான்.

"உனக்குக் கொஞ்சம் வேண்டுமா? சாப்பிட ஏதாவது இங்கே இருக்கும்."

கிழவன் குடித்துவிட்டு, முகத்தைக் கோணலாக வைத்துக்கொண்டான். பிறகு வேண்டுமென்றே ஒரு சொட்டித் துண்டை மெல்ல ஆரம்பித்தான். ஆர்டாலியோன் சொன்னான்:

"நான் அந்த தார்தாரியப் பெண்ணைத் தேர்ந்தெடுத்தேன். இது எபிமூஷ்கினுடைய வேலை. அவள் சிறுமி

என்றும், காஸிமோவிலிருந்து வந்த அநாதை யென்றும், பொருட்காட்சிக்குச் செல்லத் திட்டமிட்டிருக்கிறாள் என்றும் சொன்னான்.''

வெட்கமற்ற, கொச்சையான சொற்கள் சுவருக்கு அப்பாலிருந்து கேட்டது.

''தார்த்தாரியப் பெண் சிறந்தவள்! கோழிக்குஞ்சைப் போன்றவள். கிழவனைத் துரத்து. அவன் உன் தந்தையல்ல.''

''அவள்தான்'' என்று மந்தமாகச் சுவரை உற்றுப் பார்த்துக்கொண்டு சொன்னான் ஆர்டாலியோன்.

''நான் அவளைப் பார்த்தேன்'' என்றான் ஓஸிப்.

என் பக்கம் திரும்பினான் ஆர்டாலியோன்.

''நான் செய்ததைப் பார், சகோதரா.....''

ஓஸிப் அவனைத் திட்டுவான் என்றும், அல்லது அவனுக்கு உபதேசம் செய்வான் என்றும், பாவம் செய்தவன் வெட்கத்தால் வருந்துவான் என்றும் நான் எதிர்பார்த்தேன். ஆனால் இப்படிப்பட்ட ஒன்றுமே நிகழவில்லை. தோளொடு தோள் சேர உட்கார்ந்துகொண்டு, சாந்தமாக அவர்கள் பேசினர். அந்த இருண்ட குகையில் அவர்களைக் காண வருத்தமாக இருந்தது. கொச்சை ரஷிய மொழியில் சுவரிலிருந்த துவாரத்தின்மூலம் தார்த்தாரியப் பெண் பேசிக்கொண்டிருந்தாள். ஆனால் அவர்கள் அவளை அசட்டை செய்தனர். மேஜையிலிருந்து ஒரு கருவாடை எடுத்து, தன் பூட்சில் அடித்து, அதன் தோலை உரிக்க ஆரம்பித்தான் ஓசிப்.

''உன் பணமெல்லாம் போய்விட்டதா?'' என்று அவன் கேட்டான்.

''பியோட்டர் எனக்குக் கொஞ்சம் பணம் கொடுக்க வேண்டும்.''

''விரைவில் நீ டாம்ஸ்குக்குப் புறப்பட வேண்டும். உன்னால் இனிச் சமாளிக்க முடியுமா?''

''டாம்ஸ்குக்குச் செல்வதைப்பற்றி நான் நிச்சயமாகச் சொல்ல முடியாது.''

''ஏன், உன் முடிவை நீ மாற்றிவிட்டாயா?''

''என்னை அழைப்பது என் உறவினர் அல்லாமலிருந்தால்.....''

" என்ன ?"

" என் சகோதரியும், அவள் கணவனும்....."

" நல்லது ?"

" உறவினர்களுக்காக வேலை செய்வதில் சந்தோஷ மில்லை."

" உறவினராக இருந்தாலும், இல்லை யென்றாலும், முத லாளிகள் ஒரே ரகத்தைச் சேர்ந்தவர்கள்."

" இருந்தாலும்....."

கௌரவமான, நேசமான முறையில் அங்கே உட்கார்ந்து கொண்டு அவர்கள் பேசியதால், அவர்களைக் கேலி செய்வ தைத் தார்த்தாரியப் பெண் நிறுத்திவிட்டாள். அவள் அறைக் குள் வந்து, ஆணியில் மாட்டியிருந்த தன் உடைகளை மௌன மாக எடுத்துக்கொண்டு மறைந்துவிட்டாள்.

" அவள் பருவ மங்கை " என்றான் ஓஸிப்.

அவனைப் பார்த்துவிட்டு, கல்மிஷமின்றி ஆர்டாலி யோன் சொன்னான் :

" இது எபி மூஷ்கினின் வேலை. அவன் நினைப்பதெல் லாம் பெண்களைப் பற்றித்தான்.....தார்த்தாரியப் பெண் குஷியானவள், சதா முட்டாள்தனமாகப் பேசுகிறாள்."

" உஷார் பிரு. இல்லை யெனில் நீ உணவுக்குத் திண் டாடுவாய் " என்று எச்சரித்தான் ஓஸிப். மீனைக் கடைசி முறையாகச் சுவைத்துவிட்டு, அவன் விடைபெற்றான்.

திரும்பும் வழியில் நான் கேட்டேன் :

" நீ எதற்காக வந்தாய் ?"

" என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க. அவன் என் நண்பன். இத்தகைய பல சம்பவங்கள் எனக்குத் தெரியும். மனிதன் வாழ்கிறான். திடீரென்று சிறையிலிருந்து தப்பி ஓடு வதைப்போல் அவன் தப்பி ஓடுகிறான் " என்றான் அவன். பிறகு அவன் சொன்னான் : " வோட்காவைத் தொடாதே !"

ஒரு நிமிடத்திற்குப் பிறகு அவன் சொன்னான் :

" ஆனால் அது இல்லை யென்றால், மந்தம் இடம் பெறு கிறது !"

" வோட்கா இல்லை யென்றாலா ?"

"ஆம், குடித்தால், வேறு உலகில் இருப்பதைப் போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது."

உணவுக்கு ஆர்டாலியோனுக்கு தட்டு ஏற்பட்டது. சில தினங்களுக்குப் பிறகு அவன் வேலைக்குத் திரும்பி வந்தான். ஆனால் விரைவில் மீண்டும் மறைந்துவிட்டான். நதியில் கட்டப்பட்டிருந்த படகைச் சூழ்ந்து கிடந்த பனியை அப் புறப்படுத்திக்கொண் டிருந்த காலாடிகளுடன் வசந்த காலத் தில் அவனையும் நான் கண்டேன். ஒருவரை ஒருவர் சந்தித் ததில் எங்களுக்குச் சந்தோஷம். நாங்கள் தேநீர் குடிக்க விடுதிக்குச் சென்றோம்.

"நீ எப்படிப்பட்ட வேலைக்காரனாக இருந்தாய் என்பதை நினைவிலிறுத்து" என்று தேநீர் குடித்துக்கொண்டே அவன் பிற்றினன். "வேலையில் நான் நிபுணன் என்பதை யாரும் மறுக்க முடியாது. நூற்றுக்கணக்கான ரூபிள்கள் என்னால் சம்பாதித்திருக்க முடியும்."

"ஆனால் நீ சம்பாதிக்கவில்லை."

"நான் சம்பாதிக்கவில்லை என்பது உண்மைதான்" என்று அவன் பெருமையுடன் சொன்னான். "ஒரு வேலைக்கு ஒரு அத்திப்பழம்!"

அவன் இரைந்து பேசியதால், விடுதியிலிருந்தோர் கவனத்தை அவன் ஆகர்ஷித்தான்.

"வேலையைப்பற்றி அந்தத் திருடன் பியோட்டர் என்ன சொல்லுவான் என்பது நினைவிலிருக்கிறதா? 'மற்றவர் களுக்குச் சங்கல் வீடுகள், தனக்கு ஒரு மரச் சவப்பெட்டி?' இதுதான் வேலையின் பலன், தெரிகிறதா?"

"பியோட்டர் நோயாளி" என்றேன் நான். "சாக அவன் அஞ்சுகிறான்."

"நானும் நோயாளிதான்" என்று கூவினன் ஆர்டாலி யோன். "என் ஆத்மா நோய்பட்டுவிட்டது!"

ஞாயிற்றுக்கிழமைகளில் நகரின் மையத்திலிருந்து புறப் பட்டு "கோடீசுவரர்கள்" வீதிக்கு நான் செல்வேன். காலாடிகள் எல்லோரும் அங்கேதான் வசித்தனர். இந்தப் புறம் தள்ளப்பட்டவர்களில் ஒருவனாக வேகமாக ஆர்டாலியோன் மாறி வருவதை நான் கண்டேன். ஒரு வருடத்திற்கு முன்

அவன் உல்லாசமான, நிதானபுத்தி படைத்த தொழிலாளி யாக இருந்தான். இப்பொழுது அவன் இரைந்து பேசுகிறான், வீறுப்பாக நடக்கிறான், எல்லோரையும் வம்புக்கு அழைப்ப தைப்போல் வெறித்துப் பார்க்கிறான்.

" ஜனங்கள் எப்படி என் சொல்லைக் கேட்கிறார்கள் என் பதைக் கவனி. இங்கே நான் ஒரு தலைவன் " என்று அவன் பெருமை யடித்துக்கொள்வான்.

தான் சம்பாதித்த பணத்தை காலாடிகளுக்கு விருந் தளிப்பதில் தாராளமாகச் செலவு செய்வான். தோல்வி அடை பவன் சார்பில் அவன் சதா போராடுவான். அடிக்கடி அவன் கூவுவான் :

" அது அநீதி, பயல்களா ! நீங்கள் நியாயமாக நடக்க வேண்டும் !"

எனவே அவனுக்கு " நியாயம் " என்ற பட்டப் பெயரைச் சூட்டினர், காலாடிகள். இது அவனுக்குப் பரம திருப்தி அளித்தது.

அழுக்குப் படிந்த அந்தப் புராதன வீதியில் நெருங்கி வாழ்ந்த அந்த மனிதர்களைப் புரிந்துகொள்ள நான் முயன் றேன். வாழ்க்கையின் பிரதான பிரவாகத்திலிருந்து அறுத் துக்கொண்டு சென்றவர்கள் அந்த மனிதர்கள். ஆனால் தாங்களாகவே ஒரு வாழ்க்கையை—உல்லாசமான, மற்றவர் களுடன் தொடர்பில்லாத வாழ்க்கையை—அவர்கள் சிருஷ்டி செய்துகொண்டார்கள். தைரியமும், கவலையுமற்ற அவர்கள், கொள்ளைக்காரர்களாகவோ, ரிஷிகளாகவோ தயக்கமின்றி மாறிய வால்கா படகோட்டிகளைப்பற்றித் தாத்தா சொன்ன கதைகள் என் நினைவுக்கு வந்தன. வேலையில்லாத காலத்தில் படகுகளிலிருந்தும், கப்பல்களிலிருந்தும் திருட அவர்கள் தயங்கவில்லை. ஆனால் எனக்கு அதிர்ச்சியளிக்கவில்லை. பழுப்பு நிற நூலுடைய பழைய கோட்டைப்போல் வாழ்க்கையைக் கனவு அலங்கரித்தது என்பதை நான் உணர்ந்தேன். நீப் பற்றி எரியும் காலங்களில், அல்லது நதியில் பனிக்கட்டிகள் உடைக்கும் காலங்களில், அவசரமாகச் சாமான்கள் ஏற்றும் காலங்களில், வேலை செய்வதைப்போல், சில சமயங்களில் இந்த மனிதர்கள் அளவு கடந்த உற்சாகத்துடனும், தன்னலத்

தியாகத்துடனும், தங்கள் பலத்தை யெல்லாம் உபயோகித்து வேலை செய்தனர். மொத்தத்தில் மற்றவர்களைவிட அவர்கள் உல்லாசமாக இருந்தனர்.

ஆனால் ஆர்டாலியோனுடன் நான் நட்புக்கொண்டிருப்பதைக் கண்ட ஓஸிப் பிதா சொல்வதைப்போல் சொன்னான் :

" நான் சொல்வதைக் கேள், மகனே ! அங்குள்ள 'கோடீசுவரர்களுடன்' நீ நெருங்கின தொடர்பு கொண்டு அல்லவா இருக்கிறாய் ? உனக்கு அவர்கள் தீங்கிழைக்காமல் பார்த்துக்கொள்."

வேலை செய்யாமல், கவலையில்லாமல் வாழும் அவர்களிடம் எனக்கு விருப்பம் இருப்பதாக என் திறமையை யெல்லாம் உபயோகித்து நான் விளக்கினேன்.

" பறவைகளைப்போல் சுதந்திரமானவர்கள் !" என்று சிரித்துக்கொண்டே அவன் குறுக்கிட்டுக் கூறினான். " ஏனெனில் அவர்கள் சோம்பேறிகள், உதவாக்கரைகள். அவர்களுக்கு வேலை தண்டனையைப் போன்றது."

" வேலையை யாராவது விரும்புகிறார்களா ? கண்ணியமான உழைப்பால் யாராவது மாளிகை கட்டியிருக்கிறார்களா ?"

பல முறை நான் கேட்டிருக்கிற, உண்மையாகத் தோன்றிய இதை நான் வாசாலமாகச் சொன்னேன். ஓஸிப் சிறிக்கொண்டு கூவினான் :

" இப்படிப்பட்ட விஷயங்களைச் சொல்வது யார் ? முட்டாள்களும், சோம்பேறிகளும் ! இப்படிப்பட்ட பேச்சை நீ கேட்கக் கூடாது, நாய்க்குட்டியே ! பொறுமைக்காரர்களும், தோல்வி அடைந்தவர்களும் மாத்திரம்தான் இப்படி முட்டாள்தனமாகப் பேசுவார்கள். பறக்கு முன் சிறகை வளர்த்துக்கொள் ! உன் இந்த நட்பைப்பற்றி உன் எஜமானனிடம் நான் சொல்லுவேன். இதற்கு உன்னை நீயே தொந்தகொள்ள வேண்டும்."

அவன் என் எஜமானனிடம் இதைச் சொல்லிவிட்டான். ஓஸிப் முன்னிலையில் என் எஜமானன் சொன்னான் :

" 'கோடீசுவரர்களை மறந்துவிடு, பெஷ்கோவ். அந்த வீதியிலுள்ள அவர்கள் திருடர்கள், விபசாரிகள். அவர்கள்

சுகவாசம் சிறைக்கோ, ஆஸ்பத்திரிக்கோ வழிகாட்டும். அந்தச் சுகவாசத்தை விட்டுவிடு !''

''கோடீசுவரர்கள்'' தெருவுக்குச் செல்லும் உண்மையை நான் மறைக்க ஆரம்பித்தேன். ஆனால் அதை நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் விரைவில் எனக்கு ஏற்பட்டது.

ஒரு ஹோட்டல் ஷெட்டின் கூரைமீது ஒரு நாள் ஆர்டாலியோனும், கிட்டும், நானும் உட்கார்ந்திருந்தோம். சோஸ்டோவிலிருந்து மாஸ்கோவுக்குத் தான் கால்நடையாகச் சென்றதை வேடிக்கையாக வர்ணித்துக்கொண்டிருந்தான் கிட். அவன் இஞ்சினீரிங் பகுதியைச் சேர்ந்த மாஜி சிப்பாய். லெயின்ட் ஜார்ஜ் சிலுவையால் அலங்கரிக்கப்பட்டவன் அவன். துருக்கி யுத்தத்தில் முழங்காலில் பட்ட காயத்தால், வாழ்நாள் முழுதும் நொண்டியாய்விட்டான். குள்ளமான, திடித்த அவன் கைகளுக்கு அபரிமிதமான பலம் இருந்தது. அவன் நொண்டியாதலால் அவனுல் வேலைசெய்ய முடியவில்லை. எனவே அவன் பலத்தைக் காட்டச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஏதோ நோயால் அவன் தலைமயிரும், தாடி மயிரும் உதிர்ந்துவிட்டன. எனவே அவன் தலை, குழந்தையின் தலையைப்போல் வழுக்கையாக இருந்தது.

தன் மஞ்சள் நிறக் கண்களில் ஒளிவீச, அவன் சொன்னன் :

'' நான் லெர்புக்கோவை அடைந்தேன். அங்கே கொல்லையில், ஒரு பாதிரி உட்கார்ந்திருந்ததை நான் கண்டேன். அவனை அணுகி நான் கேட்டேன் : '' துருக்கி யுத்த வீரனுக்குத் தங்களால் முடிந்த உதவி புரிவீர்களா ?'...'' என்று.

தன் தலையைக் குலுக்கிக்கொண்டு ஆர்டாலியோன் சொன்னன் :

'' எப்படிப்பட்ட புளுகன்—பெரிய புளுகன் !''

'' புளுகனு ?'' என்று சரசமாகக் கேட்டான் கிட். அவனைக் கண்டிக்கும் முறையில் ஆர்டாலியோன் மந்தமாகச் சொன்னன் :

'' நீ நேர்மையாக வாழ வேண்டும். மற்ற நொண்டிகளைப் போல் உனக்கு இரவு காவற்காரன் வேலை கிடைக்கவேண்டும்.

அதற்குப் பதிலாக நீ சுற்றிச் சுற்றித் திருடுகிறாய், பொய் சொல்லுகிறாய்.''

''வேடிக்கைக்காக நான் இப்படிச் செய்கிறேன்—ஜனங்களைச் சிரிக்கவைப்பதற்காக இப்படிச் செய்கிறேன்.''

''ஆனால் நீ ஏன் சிரிப்பதில்லை ?''

சூரியன் ஒளி வீசியும்கூட இருண்டும், அசுத்தமாகவும் இருந்தது. அந்தக் கொல்லைப்புறத்திற்கு ஒரு பெண் வந்தாள். கையிலிருந்த எதையோ தலைக்குமேல் வீசிக்கொண்டு அவள் கூவினாள் :

''ஏய், சிறுமிகளா, பாவாடை வாங்க யார் யார் விரும்புகிறீர்கள் ?''

வீடுகளிலிருந்த வெடிப்புகளினூடே பெண்கள் ஊர்ந்து வெளியே வந்து அவளைச் சுற்றி நின்றனர். அவள் வண்ணத்திராடால்யா என்பதை நான் உடனே தெரிந்துகொண்டேன். கூரையிலிருந்து நான் கீழே குதிக்குமுன், முதலில் விலை கூறியவளுக்குப் பாவாடையை விற்றுவிட்டு, நாடால்யா கொல்லையிலிருந்து வெளியே சென்றுவிட்டாள்.

''ஹல்லோ !'' என்று நான் மகிழ்ச்சியுடன் கூவினேன், கதவுக்கு வெளியே அவளை முந்தி நடந்துகொண்டு.

''நீ சொல்லக் கூடியது இது மாத்திரம்தானா ?'' என்று கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டு அவள் கேட்டாள். திடீரென்று அவள் நின்று, கோபத்துடன் கூவினாள் :

''கடவுளே ! நீ இங்கே என்ன செய்கிறாய் ?''

திடுக்கிட்டு அவள் கூவியது என் மனதை உருக்கிற்று ; என்னைக் கலங்க வைத்தது. பயமும், ஆச்சரியமும் அவள் அறிவு சொட்டும் முகத்தில் தெளிவாகப் பிரதிபலித்தன. எனக்காகத்தான் அவள் பயப்படுகிறாள் என்பதை நான் உணர்ந்தேன். அந்தத் தெருவில் நான் வசிக்கவில்லை யென்பதையும், அபூர்வமாக அந்த இடத்தைப் பார்க்க வருகிறேன் என்பதையும் அவளுக்கு அவசரம் அவசரமாக விளக்கினேன்.

''பார்க்க வருகிறாயா ?'' என்று கேலி கலந்த வெடுவெடுப்புடன் அவள் கேட்டாள். ''எங்கே பார்க்க ? வழிப்போக்கர்களின் ஜேப்பியையும், பெண்களின் பிளௌசுகளுக்குள்ளேயும் பார்க்கவா ? சரிதானா ?''

அவள் முகம் வெளிறி யிருந்தது ; அதரங்கள் உலர்ந் திருந்தன ; கண்களுக்குக் கீழே கரிய வளையங்கள் காணப் பட்டன.

ஹோட்டல் வாசற்படியில் நின்றுகொண்டு அவள் சொன்னாள் :

"தேநீர் குடிக்க உள்ளே வா. அவர்களைப் போன்றில் லாமல், நீ நல்ல உடைகள் அணிந்திருக்கிறாய். எனினும் நான் நம்பவில்லை."

ஆனால் நாங்கள் உள்ளே சென்றதும் என்மீது அவளுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. தேநீரைக் கோப்பையில் ஊற்றி விட்டு, ஒரு மணி நேரத்திற்கு முன்தான் அங்கே நடமாடிய தாகவும், உண்ணவோ, குடிக்கவோ தனக்கு ஏதும் கிடைக்க வில்லை யென்றும் அவள் மந்தமாகச் சொன்னாள்.

"நேற்றிரவு வண்டிக்காரனைப்போல் குடித்துவிட்டுப் படுத்தேன். ஆனால் எங்கே குடித்தேன், அல்லது யாருடன் குடித்தேன் என்பது எனக்கு நினைவில்லை."

அவளுக்காக நான் வருந்தினேன் ; அவள் முன்னிலை யிலே நான் கலங்கினேன். அவள் புதல்வியைப்பற்றிக் கேட்க எனக்கு ஆசை. தேநீரும், வோட்காவும் குடித்ததும், தன் வழக்கமான பாணியில், வீதியில் நடமாடும் பெண் களுக்கு உரித்தான மூர்ட்டுத்தனத்துடன் அவள் பேச ஆரம் பித்தாள். ஆனால் அவள் புதல்வியைப்பற்றி நான் கேட்ட தும், அவள் நிதானமடைந்தாள். அவள் சொன்னாள் :

"நீ ஏன் கேட்கிறாய்? என் புதல்வியை உன்னால் அடைய முடியாது, மகனே ! இந்த ஜன்மத்தில் முடியாது."

இன்னொரு தரம் குடித்துவிட்டு, அவள் தொடர்ந்தாள் :

"எனக்கும் என் புதல்விக்கும் எந்தவிதமான சம்பந்த மும் இல்லை. நான் யார் ? வண்ணத்தி ! அவளைப் போன்ற ஒருத்திக்கு நான் எப்படித் தாயாக இருக்க முடியும் ? அவள் படித்தவள். அது பெரிய சங்கதி, சகோதரா! எனவே என்னை விட்டுவிட்டு, தன் பணக்காரத் தோழியின் தாதியாக அவள் வேலைக்கு அமர்ந்தாள்..."

சிறிது நேரத்திற்குப் பிறகு அவள் மிருதுவாகச் சொன் னாள் :

"வண்ணத்தியால் யாருக்கு என்ன பிரயோஜனம்? வீதியில் நடமாடும் விபசாரியால் பிரயோஜன மூண்டு, இல்லையா?"

அவள் வீதியில் நடமாடும் விபசாரி என்பதை நான் உடனே ஊகித்தறிந்தேன். அங்கே வசித்த எல்லாப் பெண்களும் விபசாரிகள்தான்—ஆனால் தனக்குத் தானே இந்தப் பெயரை அவள் சூட்டிக்கொண்டதைக் கேட்டதும், வெட்கத்தாலும் இரக்கத்தாலும் என் கண்கள் கண்ணீரால் நிறைந்தன. சமீப காலம்வரையில் தைரியசாலியாகவும், சாமர்த்தியசாலியாகவும், சுதந்திர உணர்ச்சி படைத்தவளாகவும் இருந்த நடால்யா இப்படிப் பேசியது என்னைத் திடுக்கிடச் செய்தது.

"முட்டாளே!" என்று நெடுமூச்சுடன் என்னைப் பார்த்துக்கொண்டு அவள் சொன்னாள். "இங்கிருந்து போய்விடு! மீண்டும் இங்கே வரக் கூடாது என்று உனக்கு நான் உபதேசம் செய்கிறேன், வேண்டுகிறேன். இங்கே வந்தால் நீ அழிந்துவிடுவாய்."

பிறகு மேஜைமீது சாய்ந்துகொண்டு, தட்டில் விரலால் என்னமோ வரைந்துகொண்டு, மிருதுவாகவும், தொடர்பின்றியும், தனக்குத் தானே பேசிக்கொள்வதைப்போல் அவள் பேச ஆரம்பித்தாள்:

"ஆனால் என் உபதேசத்தை நீ எதற்காக ஏற்க வேண்டும்? என் சொந்த மகளே என் உபதேசத்தை ஏற்கவில்லையென்றால்.....? நான் அவளிடம் சொல்லுவேன். பெற்ற தாயை நீ புறக்கணிக்கக் கூடாது! இதை நீ செய்யக் கூடாது! ஆனால் அவள் சொல்லுவாள்: 'அப்படியானால் நான் தற்கொலை செய்துகொள்வேன்? எனவே மருத்துவச்சி வேலையில் பயிற்சிபெற அவள் காஸானுக்குச் சென்றாள். அது ரொம்ப நல்லது. ஆனால் என் கதி என்ன.....? என் கதியைப் பார்—நான் இதோ இருக்கிறேன். நான் யாரிடம் போக முடியும்? வீதியிலிருக்கும் ஆண்களிடம்.....!"

சிந்தனையில் ஆழ்ந்துவிட்டாள் அவள். அவள் அதரங்கள் ஓசையின்றி அசைந்தன. நான் இருப்பதைக்கூட அவள் மறந்துவிட்டாள் போலும். அவள் அதரங்களின் ஓரங்கள்

தளர்ந்தன. எனவே அவள் வாய், பிறை வடிவமெடுத்தது. அவள் அதரங்கள் துள்ளுவதும், அவள் முகத்திலிருந்து சுருக்குகள் துடிப்பதும் காணும் வேதனைதரும் காட்சியாக இருந்தது. அவள் அதரங்கள் மௌனச் செய்தியை வெளியிட்டன. அவள் முகம் வேதனையால் வாடி இருந்தது; எனினும் குழந்தைத்தன்மையுடன் இருந்தது. தலையில் சுற்றியிருந்த போர்வையை விலக்கிக்கொண்டு ஒரு கொத்து மயிர் அவள் கன்னத்தில் விழுந்து கிடந்தது. குளிர்ந்த தேநீரில் ஒரு சொட்டு கண்ணீர் விழுந்தது. இதைக் கண்ட அவள் கிளாஸை அப்பால் நகர்த்திவிட்டுக் கண்களை இறுக மூடிக்கொண்டாள். அவள் கண்களிலிருந்து இன்னும் இரண்டு சொட்டு கண்ணீர் வடிந்தது. போர்வையின் நுனியால் அவள் முகத்தைத் துடைத்துக்கொண்டாள்.

என்னால் அவளுடன் உட்கார்ந்திருக்க முடியவில்லை. எனவே நான் சந்தடியின்றி எழுந்தேன்.

"போய் வருகிறேன்."

"என்ன? போ, சைத்தானிடம் போ!" என்று என்னை நிமிர்ந்து பார்க்காமல் கையை அசைத்துக்கொண்டு அவள் சொன்னாள். நான் யார் என்பதை அவள் மறந்துவிட்டாள் போலும்.

மீன் பிடிக்க ஆர்டாலியோனுடன் செல்ல நான் திட்டமிட்டிருந்ததால், அவனைத் தேடிக்கொண்டு நான் கொல்லைக்குச் சென்றேன். அந்தப் பெண்ணைப்பற்றி அவனிடம் சொல்ல நான் விரும்பினேன். ஆனால் அவனும், கிட்டும் கூரைமீது காணப்படவில்லை. ஆரவாரமாக இருந்த அந்தக் கொல்லையில் நான் அவர்களைத் தேடிக்கொண்டிருந்தபொழுது சாதாரணமாக நடக்கும் தெருச்சண்டை சத்தம் எனக்குக் கேட்டது.

கதவைக் கடந்து நான் வெளியே சென்று, நடால்யா மீது மோதிக்கொண்டேன். குருட்டுத்தனமாக அவள் நடைபாதையில் தள்ளாடி நடந்துகொண்டிருந்தாள். காயமடைந்த முகத்தைப் போர்வையால் துடைத்துக்கொண்டும், முகத்தில் விழுந்துகிடந்த கூந்தலைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டும்

அவள் நடந்தாள். அவளுக்குப் பின்னே ஆர்டாலியோனும், கிட்டும் வந்தனர்.

"அவளுக்கு இன்னொன்று கொடு, வா!" என்று கூவினான் கிட்.

ஓடிச் சென்று அவளுக்கு முன்னே தன் முஷ்டியை வீசினான் ஆர்டாலியோன். அவள் சுழன்றாள். அவள் முகம் கோணியிருந்தது. வெறுப்பால் அவள் கண்கள் எரிந்தன. "வா, என்னை அடி!" என்று அவள் கூவினாள்.

நான் ஆர்டாலியோன் கையைப் பிடித்தேன். ஆச்சரியத்துடன் அவன் என்னைப் பார்த்தான்.

"உனக்கு என்ன நேர்ந்துவிட்டது?"

"அவளைத் தொடாதே!" என்று சிரமத்துடன் நான் சொன்னேன்.

அவன் சிரித்தான்.

"அவள் யார்? உன் வைப்பாட்டியா? நடால்யா! கழிசடையே! பாதிரியைக்கூட நீ மயக்கிவிட்டாயே!"

கிட்டும் தொடையில் தட்டிக்கொண்டு கலகல வென்று சிரித்தான். பிறகு இருவரும் சேர்ந்து என்னைத் திட்டினார்கள். தப்பிச் செல்ல இது நடால்யாவுக்கு அவகாசம் அளித்தது. இறுதியில் நான் பொறுமை யிழந்து, கிட்டின் நெஞ்சில் குத்தி அவனைக் கீழே தள்ளிவிட்டு, ஓடிவிட்டேன்.

இதற்குப் பிறகு நீண்ட காலம் நான் "கோடைசுவர்கள்" தெருவுக்குச் செல்லவில்லை. ஆனால் ஆர்டாலியோனை நான் ஒரு கடத்துப் படகில் சந்தித்தேன்.

"ஹல்லோ!" என்று அவன் உல்லாசமாகச் சொன்னான். "உனக்கு என்னதான் நேர்ந்தது?"

நடால்யாவை அவன் அடித்ததும், என்னை அவன் அவமதித்ததும் எனக்கு வருத்தத்தை அளித்ததாக நான் சொன்னதும் அவன் சிரித்தான்.

"நாங்கள் வேண்டுமென்றே செய்தோமென்று நினைத்தாயா? வேடிக்கைக்காக நாங்கள் உன்னைக் கேலி செய்தோம். அவளைப் பொறுத்தவரையில், அவளை நாங்கள் ஏன் அடிக்கக் கூடாது? அவள் தெருவில் நடமாடும் விபசாரி. தன் மனைவியை ஒருவன் அடிக்கலாம் என்றால், அவளைப் போன்ற

விபசாரியை ஏன் அடிக்கக் கூடாது ? ஆனல் நாங்கள் விளையாடினேம். முஷ்டி எதையும் கற்பிக்காது. இது எனக்கு நன்முகத் தெரியும்.''

''அவளுக்கு எதைக் கற்றுக்கொடுக்க முடியு மென்று நீ நினைக்கிறாய் ? அவளைவிட நீ சிறந்தவனல்ல.''

என் தோள்களைப் பிடித்து அவன் குலுக்கினன்.

''நீமை இங்கேதான் இருக்கிறது'' என்று உறுமிக் கொண்டே அவன் சொன்னன். ''யாரும் யாரையும்விட சிறந்தவனல்ல. இது எனக்குத் தெரியும், சகோதரா—எனக்கு எல்லாம் தலைகீழாகத் தெரியும். நான் நாட்டுப்புறத்தானல்ல!''

அவன் போதையி லிருந்தான், உல்லாசமாக இருந்தான். மந்தமான மாணவனுக்கு கருணை நிறைந்த ஆசிரியன் பொறுமையுடன் கற்றுக்கொடுப்பதைப்போல், அன்பு சுரக்கும் பொறுமையுடன் என்னை அவன் பார்த்தான்.

அபூர்வமாகப் பாவெல் ஒடின்ஸோவை நான் சந்தித்தேன். முன்னைவிட அவன் அதிக சுறுசுறுப்பாக இருந்தான் ; கனவானைப்போல் ஆடைகள் அணிந்திருந்தான். என் மீது அவன் கருணைக் காட்டினன். ஒரு நாள் அவன் இகழ்ச்சியுடன் சொன்னன் :

''இப்படிப்பட்ட வேலையில் நீ ஏன் அமர்ந்தாய் ? அந்த மூஷிக்குகளிடம் வேலைசெய்து நீ உருப்படமுடியாது.''

பிறகு வருத்தத்துடன் தொழிற்சாலைச் செய்திகளைச் சொன்னன் ;

''ஸிக்காரெவ் இன்னும் அந்தக் குதிரையுடன் தொடர்பு வைத்திருக்கிறன். எதையோ நினைத்து ஸிதானெவ் ஏங்குவதாகத் தோன்றுகிறது. அவன் மித மிஞ்சிக் குடிக்கிறன். கொகலோவை ஓநாய்கள் தின்றுவிட்டன. பண்டிகை நாளில் அவன் குடித்தான் ; ஓநாய்கள் அவனை மென்று தின்றுவிட்டன.''

தனது கற்பனையை அனுபவித்துக்கொண்டு பாவெல் வாய்விட்டுச் சிரித்தான்.

''அவனை மென்று தின்றுவிட்ட அவைகளுக்கும் குடிபோதை தலைக்கேறிற்று. சர்க்கஸ் நாய்களைப் போல் அவை

கானகத்தில் நடந்தன ; தலைவெடிக்கும் அளவு ஊளையிட்டன ; மறு நாள் அவையும் மடிந்தன !''

அவன் கதையைக் கேட்ட நானும் சிரித்தேன். அந்தத் தொழிற்சாலையும், நான் நேசித்த அனைத்தும் கடந்துபோன வைபாய்விட்டன என்பதை நான் உணர்ந்தேன். இது எனக்கு வருத்தத்தை அளித்தது.

19

பொருட்காட்சியில் குளிர்காலத்தில் வேலையே இருக்கவில்லை. வீட்டில் பழைய வேலைகளையே நான் செய்தேன். பகல் முழுதும் இந்த வேலை சரியாக இருந்தது. ஆனால் மாலையில் எனக்கு ஓய்வு இருந்தது. எனவே, நீவாவிலும், மாஸ்கோ லீப்லெட்டிலும் வெளியான நாவல்களை நான் வீட்டுக்காரர்களுக்குப் படித்துக் காட்டினேன். இந்த நாவல்கள் எனக்குப் பிடிக்கவே இல்லை. இரவில் நல்ல புத்தகங்களை நான் படித்தேன் ; கவிதை எழுத முயன்றேன்.

ஒரு நாள் என் எஜமானிகள் பிரார்த்தனைக்குச் சென்றிருந்தபொழுது, தேகசுகமற்றிருந்த என் எஜமானன் என்னுடன் வீட்டில் தங்கினான். அவன் சொன்னான் :

''நீ கவிதை எழுதுவதைப்பற்றி விக்டர் கேலி செய்கிறான். இது உண்மைதானா, பெஷ்கோவ் ? நீ எழுதியதை நாம் கேட்போம்.''

அவன் வேண்டுகோளை நிராகரிக்க மனமின்றி, நான் எழுதிய சில கவிதைகளைப் படித்தேன். அவன் அவைகளை ரசிக்கவில்லை. எனினும் அவன் சொன்னான் :

''தொடர்ந்து எழுது ; விடாமல் எழுது. நீ இன்னெ புஷ்கினாகலாம். புஷ்கின் நூல்களை நீ படித்திருக்கிறாயா ?

சூனியக்காரிகள் எப்பொழுதாவது மணப்பது உண்டா ?
பிசாசுகள் எப்பொழுதாவது இறப்பது உண்டா ?

அவன் காலத்தில் ஜனங்களுக்கு பிசாசுகள்மீது நம்பிக்கை இருந்தது. ஆனால் அவன் நம்பினான் என்று நான் நினைக்கவில்லை—வேடிக்கைக்காக இதை எழுதினான்.''

''ஆம், சகோதரா, உன்னைப் படிக்க வைத்திருக்க வேண்டும்'' என்றான் அவன். ''ஆனால் இப்பொழுது அதற்குக் காலம் கடந்துவிட்டது. இந்த உலகத்தில் நீ எப்படி வாழப் போகிறாய் என்பது அந்தச் சைத்தானுக்குத்தான் தெரியும். பெண்கள் கண்ணில் படாமல் அந்த நோட் புத்தகத்தை மறைத்து வை. இல்லையெனில் அவர்கள் உன்னைக் கேலி செய்வார்கள். புண்பட்ட இடத்தில் தாக்குவதில் பெண்கள் இன்பத்தைக் காண்கிறார்கள், சகோதரா!''

இப்பொழுதெல்லாம் என் எஜமானன் மௌனியாய் விட்டான்; சிந்தனையில் லாழ்ந்துவிடுகிறான். அடிக்கடி திருட்டுத்தனமாகச் சுற்றுமுற்றும் பார்க்கிறான்; வாசல் மணி அடித்தால் திடுக்கிடுகிறான். சாதாரண சம்பவங்களுக்காக சொம்ப ஆத்திரமடைகிறான்; எல்லோரிடமும் கூச்சலிடுகிறான்; வீட்டிலிருந்து ஒடி நிறையக் குடித்துவிட்டு அகாலத்தில் வருகிறான். தனக்கு மாத்திரம் தெரிந்த ஏதோ ஒன்றை எண்ணி அவன் ஏங்குகிறான் என்பது திண்ணம். அது அவன் உணர்ச்சியைக் கொன்றுவிட்டது. எனவே அவன் நம்பிக்கை இழந்து, வாழ்க்கையிலே ருசி இழந்து, பழக்கத்தின் நிர்ப்பந்தத்தால் வாழ்வதைப் போன்றிருந்தது.

ஞாயிற்றுக்கிழமை உணவருந்திய பிறகு இரவு ஒன்பது மணிவரையில் நடந்துவிட்டு, யாம்ஸ்கயாத் தெருவிலுள்ள விடுதிக்குச் செல்வேன். விடுதி சொந்தக்காரன் ஒரு தடியன்; சங்கீதப் பிரியன். இதை அறிந்த அக்கம் பக்கத்திலுள்ள கோயில் பாடகர்கள் அங்கே பாடிவிட்டு, அதற்குப் பரிசாக அவன் அளிக்கும் வோட்காவையும், பீரையும், டீயையும் குடிப்பார்கள். கோயில் பாடகர்கள் மந்தமானவர்கள்; குடிகாரர்கள். அவர்கள் பரிசுக்காகப் பாடினார்களே தவிர, விருப்பத்துடன் பாடவில்லை. தோத்திரப் பாடல்களைத்தான் அதிகமாகப் பாடுவார்கள். இத்தகைய பாடல்களை விடுதியில் பாடுவதைப் பக்தர்கள் ஆட்சேபித்தனர். எனவே பாடகர்களைத் தன் தனி அறைக்கு அழைத்துச் செல்வான் விடுதிச் சொந்தக்காரன். எனவே கதவில் சாய்ந்துகொண்டுதான், அவர்கள் பாட்டை என்னால் கேட்க முடிந்தது.

ஆனல் அடிக்கடி கிராமத்திலிருந்து வரும் தொழிலாளர்களும், மூஷிக்குகளும் விடுதிக்கு வந்து பாடுவார்கள். அந்தச் சுற்றுவட்டாரத்தில் பாடகர்களைத் தேடி அலைவான் விடுதிச் சொந்தக்காரன். சந்தை நாளில் நகரத்திற்கு வரும் விவசாயிகளில் பாடகர்கள் இருந்தால் அவர்களைக் கண்டுபிடித்து, விடுதிக்கு வருமாறு அழைப்பான்.

வோட்கா பீப்பாய்க்கு எதிரில் இருக்கும் பாரில் பாடகனுக்கு இடம் அளிக்கப்படும்.

சேணம் செய்யும் மெலிந்த கிளெஷ்கோவ் மிகச் சிறந்த பாடகன். நல்ல பல பாடல்கள் அவனுக்குத் தெரியும். குழப்பமான, சுருங்கின தோற்றமுடையவன் அவன். அவன் தேகம் முழுதிலும் சிவப்பு மயிர் வளர்ந்திருந்தது. பிணத்தின் முக்கைப் போன்றிருந்தது அவன் மூக்கு. கனவு காணும் அவன் கண்கள் அசைவற்றிருப்பதைப் போன்றிருந்தன.

சில சமயங்களில் கண்களை அவன் மூடிக்கொள்வான் ; பீப்பாயில் தலையைச் சாய்த்துக்கொள்வான் ; நன்றாக மூச்சு விடுவான் ; பிறகு மிருதுவான, அசட்டை செய்ய முடியாத குரலில் பாடுவான் :

பனிப்படலம் மைதானத்திலே பரந்துகிடந்தது ;
பாட்டையைக் கண்ணுக்குத் தெரியாமல் அது மறைத்தது...

பிறகு அவன் எழுந்திருந்து, பாரிலே சாய்ந்தவாறு, உத்சாகத்தைப் பார்த்துக்கொண்டு, உணர்ச்சித் ததும்பப் பாடுவான் :

நான் எங்கே, எங்கே போவேன்,
நான் பாதையை எப்படி அறிவேன் ?

அவன் குரல் மெல்லியது ; ஆனல் முடிவற்றது. மந்தமான, இருண்ட விடுதி முணுமுணுப்பினூடே அவன் வெள்ளி நூலால் தைத்தான் ; விம்மும் சொல்லுக்கும், சோகம் ததும்பும் இசைக்கும் அடிமைப்படாத ஆத்மா அங்கே இருக்கவே இல்லை. மிதமிஞ்சிக் குடித்தவன்கூட வியக்கத்

தக்க முறையில் காம்பீர்யம் அடைந்து, தனக்கு முன்னே இருக்கும் மேஜையை உற்றுப் பார்ப்பான். இதயத்தின் அடித்தளத்தைச் சிறந்த சங்கீதம் தொடும்பொழுது தூண்டி விடப்படும் வலிமை மிக்க எழுச்சியால் என் இதயம் நிறைந்தது.

கோயிலைப்போல் விடுதி சாந்தமடைந்தது ; பாடகன் கிருபையுள்ள பாதிரியானுன். அவன் வேதோபதேசம் செய்யவில்லை ; ஆனல் மனித ஜாதிக்காக ஆர்வத்துடன் பிரார்த்தனை செய்தான். மனித வாழ்க்கையிலே ஏற்படும் துயரங்களை அவன் பாடினுன். தாடி வைத்துக்கொண் டிருந்த இந்த ஜனங்கள் அவனை உற்றுப் பார்த்தனர் ; விலங்குகளின் முகங்களைப் போன்ற அவர்கள் முகங்களை அலங்கரித்த குழந்தைத்தனமான கண்கள் சிந்தனையிலாழ்ந்து விழித்தன. பாட்டின் சக்திக்கு எடுத்துக்காட்டாக அபூர்வ மாக ஒருவன் நெடுமூச்சுவிடுவான். எல்லோரும் பொய் வாழ்க்கை வாழ்ந்ததாகவும், செயற்கை வாழ்க்கை வாழ்ந்த தாகவும், உண்மையான வாழ்க்கை இதோ இருப்பதாகவும் அத்தகைய சமயங்களில் எனக்குத் தோன்றிற்று.

ஒருமூலையில் கட்டை குட்டையான தோற்றம் படைத்த, லீஷ்-பிக்கா உட்கார்ந்திருந்தாள். அவள் கடிவாளம் பூட்டப் படாத பிசகிருதி, முரட்டுத்தனமானவள். தலையைத் தோளில் சாய்த்துக்கொண்டு அவள் அழுதாள். கண்ணீர் அவள் வறண்ட கண்களைக் கழுவிக்கொண் டிருந்தது. அவளுக்கு அருகில் ஒரு மேஜைமீது குனிந்து படுத்திருந்தான், மந்தமான கோயில் பாடகன் மிட்ரோபோல்ஸ்கி. அவன் பெரிய அரக் கன் ; அகாதமான மந்தர ஸ்வரம் படைத்தவன். மேலங்கி அணியாத பாதிரியைப் போன்றிருந்தான் அவன். மேஜையில் தனக்கு முன்னே இருக்கும் வோட்கா கிளாஸை உற்றுப் பார்த்துவிட்டு, அதைக் கையில் எடுத்து அதரங்கள் வரைக் கொண்டு போவான். ஆனல் அதைக் குடிக்காமல், ஜாக்கிர தையாக, ஓசையின்றி, கீழே வைப்பான். அதை அவனல் எக்காரணத்தாலோ குடிக்க முடியவில்லை.

நீண்ட காலமாக மறந்துவிட்ட ஏதையோ கேட்பதைப் போல், இதயத்திற்குப் பெரிதும் விருப்பமான ஏதையோ

கேட்பதைப் போல், விடுதியிலிருந்த எல்லோரும் அசை வற்று உட்கார்ந்திருந்தனர்.

பாடி முடித்துவிட்டு, அடக்கத்துடன் கிளெஷ்கோவ் மூக்காலியில் உட்கார்ந்ததும், திருப்தியிலே பூத்த புன்னகை யுடன் ஒரு கிளாஸ் வோட்காவை அவனுக்குக் கொடுப்பான், விடுதிச் சொந்தக்காரன்.

"சபாஷ்! நீ பாடியது ஒரு பாடலாக இராமல் ஒரு கதை யைப் போன்றிருப்பினும், உண்மையைச் சொல்லுவதனால், நீ தலைசிறந்த பாடகன்! இதை யாரும் மறுக்க முடியாது!"

நிதானமாக வோட்காவைக் குடித்துவிட்டு, கனைத்துக் கொண்டு அவன் சொல்லுவான் :

"பாடுவது சம்பந்தப்பட்டவரையில், நல்ல குரல் இருக் கும் யாரும் பாடலாம். ஆனால் என்னால் மாத்திரம்தான் பாட்டின் உட்கருத்தைக் காட்ட முடியும்."

"வீம்பளக்காதே!"

"வீம்பளக்க ஏதுமில்லாதவன் வாயை மூடிக்கொண் டிருக்கட்டும்" என்று பதட்டமின்றிக் கூறினான் பாடகன்.

"உன்னைப்பற்றி உனக்கு உயர்ந்த அபிப்பிராயம் இருக் கிறது, கிளெஷ்கோவ்!" என்று கோபத்துடன் சொன்னான், விடுதிச் சொந்தக்காரன்.

"என் ஆத்மாவைப்போல் அவ்வளவு உயர்ந்தது; அதற்குமேல் என்னால் செல்ல முடியாது."

மிட்ரோபோல்ஸ்கி கர்ஜித்தான் :

"விகாரமான இந்தத் தேவதூதனின் பாட்டை நீங்கள் பாராட்டுவீர்கள் என்று எதிர்பார்க்க முடியுமா? புழுக்களா! ஊர்ந்து செல்லும் பிராணிகளா!"

அவன் எல்லோருடனும் சண்டையிட்டான்; எல்லோ ரிடமும் குறைகள் கண்டான். எனவே ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் பாடகர்களோ, அல்லது அடிக்க விரும்பினவர் களோ, அவனை அடித்தனர்.

விடுதிச் சொந்தக்காரன் கிளெஷ்கோவின் பாட்டை நேசித்தான்; ஆனால் கிளெஷ்கோவை வெறுத்தான். அவ னைப் பற்றி எல்லோரிடமும் குறை கூறினான்; அவனை அவ

மதிக்கவும், கேலி செய்யவும் வழி தேடினேன். அந்த விடுதிக்குச் செல்வோருக்கும், கிளெஷ்கோவுக்கும் இது தெரியும்!

"அவன் நல்ல பாடகன்; ஆனால் கர்வி. மது கொடுத்துத்தான் அவனைச் சரிக்கட்ட வேண்டும்" என்பது விடுதிச் சொந்தக்காரன் கருத்து. அவன் போஷகர்களில் பலர் அவன் கருத்தை அங்கீகரித்தனர்.

"இதுதான் உண்மை; அவன் மகா கர்வி!

"கர்வம் அடைய அவனிடம் என்ன இருக்கிறது? அந்தக் குரலே கடவுள் அவனுக்கு அளித்தார்; இதைத்தானே அவன் சிருஷ்டி செய்துகொள்ளவில்லையே! குரல்கூட அவ்வளவு இனிமையானதல்ல!" என்று வற்புறுத்திச் சொன்னான் விடுதிச் சொந்தக்காரன்.

"உண்மைதான்! அவன் குரலைவிட அவன் அதை உபயோகிக்கும் முறைதான் கவர்ச்சி அளிக்கிறது" என்று மற்றவர்கள் கூறினர்.

ஒரு நாள் எல்லாப் பாடல்களையும் பாடி முடித்துவிட்டு பாடகன் விடுதியிலிருந்து வெளியேறியதும், லீஸ்-டிக்காவை விடுதிச் சொந்தக்காரன் நிர்ப்பந்தப்படுத்த ஆரம்பித்தான்:

"கிளெஷ்கோவிடம் உன் ஈகவரிசையைக் காட்டு, மரியா எவ்டோகிமோவ்ஞ. அவன்மீது மோகதேன். இதை நீ எளிதில் செய்யலாம்."

"நான் சிறு வயதினளாக இருந்தால்" என்று சிரித்துக்கொண்டே சொன்னாள் அந்தப் பெண்.

"இளையவளால் என்ன பிரயோஜனம்?" என்று தூண்டினான் அந்த மனிதன். "இதற்குத் தகுதியானவள் நீதான்! அவன் என்மீது மையல்கொண்டு வாய்நீர் வடிப்பதைக் காண என் மனம் குதூகலிக்கும்! அவனுக்கு இதய வேதனையைக் கொடு! அப்பொழுது அவன் பாட மாட்டானே? முயற்சி செய், எவ்டோகிமோவ்ஞ! இதற்காக உனக்கு நான் வந்தனம் செலுத்துவேன்."

ஆனால் அவள் மறுத்துவிட்டாள். கண்ணிமைகளைத் தாழ்த்திக்கொண்டு, போர்வையின் ஓரத்துடன் விளையாடிக் கொண்டு, அங்கேயே உட்கார்ந்திருந்தாள் அவள். பற்றின்றி அவள் சொன்னாள்:

" இங்கே பருவ மங்கைதான் உனக்குத் தேவை. பருவ மங்கையாக இருந்திருந்தால், உன் வேண்டுகோளை நான் பூர்த்தி செய்திருப்பேன்."

கிளைஷ்கோவை மிதமிஞ்சிக் குடிக்கவைக்க விடுதிச் சொந்தக்காரன் முயன்றான். ஆனால் இரண்டு, அல்லது, மூன்று பாட்டுகள் பாடிவிட்டு, ஒவ்வொரு பாட்டுப் பாடி முடித்ததும் ஒரு கிளாஸ் ஓயின் குடித்துவிட்டு, மிக ஜாக்கிரதையாகத் தன் தொண்டையைப் பின்னப்பட்ட குட்டையால் சுற்றிக்கொண்டு, தொப்பியைத் தலைமீது வைத்துக்கொண்டு, அவன் போய்விடுவான்.

அடிக்கடி கிளைஷ்கோவுடன் போட்டி போடுகிறவர் களைக் கண்டுபிடித்தான் விடுதிச் சொந்தக்காரன். அத்தகைய சந்தர்ப்பங்களில் சேணம் செய்வோன் பாடி முடித்துவிட்டு, பாட்டுக்குப் பாராட்டுதலை பெறுவான். அப்பொழுது அடக்கப்பட்ட கிளர்ச்சியுடன் விடுதிச் சொந்தக்காரன் சொல்லுவான் :

" இன்றிரவு இன்னொரு பாடகன் இங்கே வருவான்.... தியவுகூர்ந்து, நீ வா, நண்ப !"

சில சமயங்களில் புதிய பாடகனின் குரல் இனிமையாக இருக்கும். ஆனால் கிளைஷ்கோவைப்போல் அவ்வளவு உணர்ச்சியுடன் வேறு யாரும் பாடி நான் கேட்டதில்லை.

" உம், உன் பாட்டு நன்றாக இருந்தது. உன் குரல் இனிமையாக இருக்கிறது ; ஆனால், ஆத்மா சம்பந்தப்பட்ட வரையில்..." என்று வருத்தத்துடன் அங்கீகரிப்பான் விடுதிச் சொந்தக்காரன்.

எல்லோரும் சிரிப்பார்கள்.

" சேணம் செய்வோனை வெல்ல முடியா தென்று தோன்றுகிறது !"

எல்லோரையும் உற்றுப்பார்த்துக்கொண்டு, மரியாதைக் கலந்த நிதானத்துடன் சொல்லுவான், கிளைஷ்கோவ் :

" நீ எவ்வளவுதான் முயன்றாலும், என் போன்ற பாடகனை நீ காண முடியாது. ஏனெனில், என் திறமை கடவுள் எனக்கு அளித்த பரிசு !"

" நாம் எல்லோரும் கடவுளின் சிருஷ்டி !"

"உன் கடையிலுள்ள ஓயினை எல்லாம் கொடுத்தால் கூட, உன்னால் என் போன்றவனைக் கண்டுபிடிக்க முடியாது."

விடுதிச்சொந்தக்காரன் முகத்தில் நிழல் படர்ந்தது. அவன் முணுமுணுத்தான் :

"பார்க்கலாம்...பார்க்கலாம் !"

ஆனால் கிளெஷ்கோவ் வற்புறுத்திச் சொன்னான் :

"பாடுவது கோழிச் சண்டையல்ல என்பது உனக்குத் தெரியும்."

"நீ யாருக்குப் புத்தி புகட்டுகிறாய் ?"

"நான் புத்தி புகட்டவில்லை ; ஆத்மாவுக்குத்தான் பாட்டு என்பதை உனக்குச் சுட்டிக்காட்டுகிறேன்."

"இது போதும் ; இதற்குப் பதில் ஒரு பாட்டு பாடு !"

"நான் எப்பொழுதும் பாடத் தயார், தூக்கத்தில்கூட" என்றான் கிளெஷ்கோவ். லேசாக இறுமிக்கொண்டு அவன் பாட ஆரம்பித்தான்.

சின்னத்தனமும், சொற்கள், நோக்கங்கள் என்னும் வேடிக்கைகளும், விகாரமான அனைத்தும், விடுதியும் புகையைப்போல் வியக்கத்தக்க முறையில் மறைந்தன. இன்னொரு விதமான வாழ்க்கையின்—பரிசுத்தமும் விசாரமும், அன்பும் துக்கமும் நிறைந்த வாழ்க்கையின்—புதிய மூச்சை எல்லோரும் உணர்ந்தனர்.

அந்த மனிதன்மீது எனக்குப் பொறுமை ஏற்பட்டது. அவன் கிறமையிலும், ஜனங்கள்மீது அவன் செலுத்திய ஆதிக்கத்திலும் எனக்கு அளவு கடந்த பொறுமை ! அந்தச் சேணம் செய்வோனின் நட்பைப் பெறவும், அவனுடன் வீரீவாகப் பேசவும் நான் ஏங்கினேன். ஆனால் எதையுமே காணுத வெளிறின கண்களால் அவன் நூதனமாகச் சுற்றுமுற்றும் பார்த்ததால், அவனை அணுகவே நான் அஞ்சினேன். பாடும்பொழுது மாத்திரமல்ல, சதா அவனை வியந்து பாராட்ட நான் விரும்பினாலும், அவன் சந்தோஷமற்ற தோற்றம் எனக்கு வெறுப்பை அளித்தது. கிழவனைப்போல் அவன் விகாரமாகத் தொப்பியை இழுத்துவிட்டுக்கொண்டான். தன் கழுத்தைச் சுற்றி சிவப்புத் துணியை ஆடம்பரமாகச் சுற்றிக்கொண்டு அவன் சொல்லுவான் :

"என் காதலி எனக்காக இதைப் பின்னினாள்—குறிப் பிட்ட ஒரு சீமாட்டி..."

பாடாத நேரத்தில் அவன் கர்வத்துடன் இருப்பான். பணிகடித்த மூக்கைத் தேய்த்துக்கொண்டு, மற்றவர் கேட் கும் கேள்விகளுக்கு விருப்பமின்றி, யந்திர ரீதியாகப் பதில் சொல்லுவான். ஒரு நாள் அவனுக்கு அருகில் உட்கார்ந்து கொண்டு, நான் என்னமோ கேட்டேன். என்னை நிமிர்ந்து கூடப் பார்க்காமல் அவன் சொன்னான் :

"அப்பால் போ, பையா !"

நான் மிட்சோபோல்ஸ்கியை இவனைவிட அதிகமாக நேசித்தேன். தாங்க முடியாத பளுவைச் சுமக்கும் ஒருவ னைப்போல் அவன் காம்பீர்யமாக விடுதிக்கு வந்து, ஒரு மூலையில் உட்காருவான். ஒரு நாற்காலியை மிதித்துத் தள்ளி விட்டு, அவன் அதில் சாய்வான் ; முழங்கைகளை மேஜைமீது ஊன்றிக்கொண்டு, தலையைக் கைகளால் தாங்கிக்கொண்டு அவன் உட்காருவான். ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல், இரண்டு, மூன்று கிளாஸ் வோட்காவைக் குடித்துவிட்டு, உதடுகளை நொடிப்பான். இந்தச் சத்தத்தைக் கேட்டு எல் லோரும் அவனைத் திரும்பிப் பார்ப்பார்கள். கைகளில் தாடியைத் தாங்கிக்கொண்டு அசட்டை செய்யும் கண் களால் எல்லோரையும் உற்றுப்பார்ப்பான்.

"நீங்கள் எதைப் பார்க்கிறீர்கள் ? நீங்கள் எதைக் காண்கிறீர்கள் ?" என்று அவன் திடீரென்று கேட்பான்.

"பிசாசை நாங்கள் காண்கிறோம் !" என்று சில சமயங் களில் அவர்கள் சொல்லுவார்கள்.

சில நாட்களில் மௌனமாகக் குடித்துவிட்டு, கால்களை சீய்த்துக்கொண்டு மௌனமாக அவன் வெளியே போய் விடுவான். தீர்க்கதரிசியைப்போல் அவன் பல முறை ஜனங்களை இடித்துரைப்பதை நான் கேட்டிருக்கிறேன் :

"களங்கப்படுத்த முடியாத கடவுளின் ஊழியன் நான் ! எனவே, பழைய இஷையாவைப் போல் நான் உங்களை இடித் துரைக்கிறேன் ! பேராசை என்னும் வெறுக்கத்தக்க நோயால் பீடிக்கப்பட்ட திருடர்களும், குற்றவாளிகளும் வாழும் ஆரி யேல் நகரத்திற்குத் தூக்கதி நேரட்டும் ! அழுக்கு நிறைந்த

ஜலபாதையில் செல்லும் கப்பல்களுக்கும் தூக்கத்தை நேரட்டும்! அந்த அழுக்குதான் குடிகார்ர்களும், பெருந்தீனிக் காரர்களுமாகிய நீங்கள் – பூமியின் சாபம்! உங்கள் எண்ணிக்கை பெருந் தொகை, சபிக்கப்பட்டவர்களே! ஆனல் உங்கள் உடல்களை உலகம் வெறுத்தொதுக்கும்!"

அவன் குரலின் எதிரொலி ஜன்னல் கண்ணுடிகளை அசைத்தது. இது கூடியிருந்தவர்களுக்கு மகிழ்ச்சி அளித்தால், அவனை அவர்கள் புகழ்ந்தனர்.

"சும்மா இருக்கக் கூடாதா, அந்தக் கிழட்டு சைத்தான்?"

அவன் நட்பைப் பெறுவது எளிது—அவனுக்கு மது வாங்கிக் கொடுத்தால் போதும். ஒரு ஜாடி வோட்காவுக்கும் லீவருக்கும் அவன் ஆர்டர் கொடுப்பான். இவை இரண்டின்மீதும் அவனுக்கு அளவு கடந்த பிரியம். எந்த நூல்களை நான் படிக்க வேண்டும் என்று அவனை நான் கேட்ட பொழுது அவன் துஷ்டத்தனமாகச் சொன்னன்:

"எதற்காகப் புத்தகம் படிக்க வேண்டும்?"

தன் கேள்வி என்னை அதிர்ச்சியடையச் செய்ததைக் கண்ட அவன், மிருதுவாக முணுமுணுத்தான்:

"மதச் சம்பந்தமான நூல்களை நீ படித்திருக்கிறயா?"

"ஆம்."

"மதச் சம்பந்தமான நூல்களைப் படி. அவ்வளவுதான். ஞானோபதேசம் செய்யும் நூல்கள் அவை. ஆனல் புத்தியற்ற நீங்கள் அதைப் புரிந்துகொள்ளவில்லை. யாரும் அதைப் புரிந்துகொள்ளவில்லை. நீ யார், பாடகனு?"

"இல்லை."

"ஏன்? நீ பாட வேண்டும், எல்லாத் தொழில்களையும் விட அதுதான் கொம்ப முட்டாள்தனமான தொழில்."

அடுத்த மேஜையருகில் உட்கார்ந்திருந்த ஒருவன் சொன்னன்.

"உன் சமாசார மென்ன? நீ பாடகனல்லவா?"

"நானு? நான் காலாடி. வேறென்ன?"

"ஒன்றுமில்லை."

"இது இயற்கைதான். உன் தலையில் ஒன்றுமில்லை, என்பது எல்லோருக்கும் தெரியும். அங்கே ஒன்றுமே இராது. அதாஸ்து !"

இந்தப் பாணியில் நான் உட்பட எல்லோரிடமும் அவன் பேசினான். ஆனால் இரண்டு, அல்லது மூன்று முறை அவனுக்கு நான் விருந்தளித்த பிறகு என்னிடம் சிறிது அன்பாகப் பழகினான். ஒரு நாள் ஆச்சரியத்துடன் அவன் சொன்னான் :

"உன்னைப் பார்க்கும்பொழு தெல்லாம் நீ யார், நீ என்ன செய்கிறாய், ஏன் என்பதைப் புரிந்துகொள்ள முயலுகிறேன். ஆனால் நீ நாசமாப் போ !"

கிளெஷ்கோவைப்பற்றி அவன் உண்மையான அபிப்பிராயம் என்ன என்பதை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. வெளிக்குத் தெரிந்த இன்பத்துடன் அவன் பாட்டைக் கேட்டான் ; சில சமயங்களில் ஆர்வத்துடன் புன்னகை புரிந்தான். ஆனால் அவன் நட்பைப் பெற முயலவில்லை என்பது மாத்திரமல்ல, அவனைப் பற்றி இகழ்ச்சியாகவும் பேசினான்.

"அவன் கோமாளி ! எப்படி மூச்சுவிடுவது என்பதும், பாட்டின் பொருள் என்ன என்பதும் அவனுக்குத் தெரியும். எனினும் அவன் கழுதை !"

"ஏன் ?"

"ஏனெனில் அவன் கழுதையாகப் பிறந்தான்."

அவன் நிதானமாக இருந்தபொழுது அவனுடன் பேசுவது இன்பகரமாக இருந்திருக்கும். ஆனால் அத்தகைய சமயங்களில் அவன் முனகிக்கொண்டு, மங்கியிருந்த, பரிதாபகரமான கண்களால் சுற்றுமுற்றும் பார்த்தான். காலமெல்லாம் குடிப்பதில் கழிக்கும் இந்த மனிதன் காஸான் கலாசாலையில் படித்திருக்கிறான் என்பதையும், இவன் பாதிரியாய் இருக்கக்கூடும் என்பதையும், ஒருவன் மூலம் நான் உணர்ந்தேன்—முதலில் இந்தக் கதையை நான் நம்பவில்லை. ஆனால் ஒரு நாள் கிரிஸான்ப் பிஷப் பெயரை நான் பிரஸ்தாபித்தேன்.

"கிரிஸான்பா ?" என்று தலையை அசைத்துக்கொண்டு கேட்டான் மிட்சோபோல்ஸ்கி. "அவனை எனக்குத் தெரியும்.

அவன் என் ஆசிரியனுகவும், பேராஷகனுகவும் இருந்தான். காலான் கலாசாலையில்—எனக்கு நினைவிருக்கிறது. கிரிஸான்ப் என்றால் 'தங்க மலர்' என்று பாம்வா பெரின்டா வர்ணித்தது முழு உண்மை. தங்கக் கம்பி கிரிஸான்ப்!"

"பாம்வா பெரின்டா யார்?" என்று நான் கேட்டேன். ஆனல் நமக்காக மிட்ரோபோல்ஸ்கி பதில் சொன்னன்:

"இது உனக்குத் தெரிய வேண்டியதில்லே."

வீடு திரும்பியதும் என் நோட் புத்தகத்தில் நான் எழுதினேன்: மறக்காமல் பாம்வா பெரின்டா நூலைப்படி. என் மனதைத் துன்புறுத்திக்கொண்டிருந்த எல்லாக் கேள்விகளுக்கும் பெரின்டா பதில் சொல்வான் என்று எக்காரணத்தாலோ நான் கருதினேன்.

விபரீதமான பெயர்களையும், அசாதாரண சொற்றொடர்களையும் உபயோகிப்பதில் பேரார்வம் காட்டினன், அந்தக் கோயில் பாடகன். இது என்னை ஆத்திரமூட்டிற்று.

"வாழ்க்கை சோம்பலல்ல!" என்று ஒரு நாள் அவன் சொன்னன்.

"சோம்பல் யார்?" என்று நான் கேட்டேன்.

"உபசமன மருந்து" என்று சொன்னன். என் குழப்பம் அவனுக்கு வேடிக்கையாக இருந்தது.

இத்தகைய வார்த்தைகளை அவன் உபயோகித்ததும், கலாசாலையில் கல்வி பயின்றவன் அவன் என்னும் தகவலும், அவன் அறிவுக் களஞ்சியம் என்று என்னைக் கருதச் செய்தது. அவன் விருப்பமின்றியும், மறைபொருளாகவும் பேசியது எனக்கு வெறுப்பை அளித்தது.

எனினும் என் மனதில் தன் முத்திரையை குத்தினன் அந்த மனிதன். "இன்று துன்மார்க்கன் புகழ் பீடத்திலும், நேர்மையானன் பாதாளத்திலும் இருப்பான். ஆனல் தீர்ப்புக் கூறும் நாள் விரைவில் வரும். அப்பொழுது காலம் கடந்திருக்கும்—சொம்பக் காலம் கடந்திருக்கும்!"

இந்த நிராசைக் கூச்சலைக் கேட்டதும் "இது மிக நேர்த்தி" என்பவனும், துன்பம் தரும் முறையில் அழிந்து விட்ட வண்ணத்தி நடால்யாவும் வீண்வம்பு என்னும் மேகங்களால் மூடப்பட்ட ராணி மார்கோட்டும் என் நினைவிற்கு

வருவார்கள். நினைவி லிறுத்தவேண்டிய பல விஷயங்கள் இருக்கின்றன !''...

இந்த மனிதனுடன் எனக்கு ஏற்பட்ட குறுகிய காலத் தொடர்பு நூதன முறையில் முடிந்தது.

வசந்த காலத்தில் ஒரு நாள் ஒரு சிப்பாயின் முகா முக்கு அருகில் வயலில் அந்த மனிதனை நான் சந்தித்தேன். நிறையைக் குடித்திருந்த அவன், ஒட்டகத்தைப்போல் தலையை அசைத்துக்கொண்டு தனியே நடந்துகொண்டிருந் தான்.

" காற்றுக் குடிக்கிறாயா ?'' என்று அவன் கனத்த குரலில் கேட்டான். " நாம் சேர்ந்து அதைச் செய்யலாம். நானும் நடக்கத்தான் வந்தேன். நான் நோயாளி நண்பா ! நான் நோயாளி.''

சிறிது நேரம் நாங்கள் மௌனமாக நடந்தோம். திடீ ரென்று ஒரு குழியில் ஒரு மனிதனை நாங்கள் கண்டோம். அவன் சுருண்டு உட்கார்ந்திருந்தான். கோட்டைக் கழற்ற அவன் முயன்றதைப்போல் கோட் அவன் காதுக்கு மேலே இருந்தது.

" குடித்திருக்கிறான் !'' அவனைப் பார்க்க நின்ற கோயில் பாடகன் முடிவு செய்தான்.

ஆனால் அருகில் ஒரு பெரிய கைத்துப்பாக்கியும், அந்த மனிதனுடைய தொப்பியும், கொஞ்சம் வோட்கா இருந்த பாட்டிலும் இருந்தன. நாணுவதைப்போல் அந்த மனிதன் முகம் கோட் காலரில் புதைந்திருந்தது.

ஒரு நிமிடம் ஒன்றும் பேசாமல் நாங்கள் நின்றோம். பிறகு கால்களை அகல விரித்து உறுதியாக நின்றுகொண்டு மிட்ரோபோல்ஸ்கி சொன்னான் :

" தன்னைத் தானே சுட்டுக்கொண்டுவிட்டான்.''

அந்த மனிதன் குடிபோதையில் இருக்கவில்லை, ஆனால் இறந்துவிட்டான் என்பதை நான் உடனே தெரிந்துகொண் டேன். அது அவ்வளவு எதிர்பாராததாக இருந்ததால், இந்த எண்ணத்தை நான் எதிர்த்தேன். மனிதனுடைய அந்த பெரிய மண்டையையும், கோட் காலருக்கு வெளியே நீட்டிக் கொண்டிருந்த நீலக் காதையும் பார்த்தபொழுது எனக்கு

பயமோ, இரக்கமோ ஏற்படவில்லை. அந்த மனோகரமான வசந்தகால நாளில் ஒருவன் தற்கொலை செய்துகொள்வான் என்பதை நம்ப முடியவில்லை.

குளிருவதைப்போல், கூவசம் செய்யப்படாத கன்னங்களை வேகமாகத் தேய்த்துக்கொண்டான் மிட்ரோபோல்ஸ்கி. பிறகு அவன் கடினமாகச் சொன்னான்:

"பழைய முறை. மனைவி அவனைப் பிரிந்திருக்க வேண்டும்; அல்லது பணத்தொல்லை அதிகரித்திருக்க வேண்டும்."

போலீசாரை அழைத்து வர என்னை நகரத்திற்கு அனுப்பிவிட்டு, கோட்டைத் தோள்மீது போட்டுக்கொண்டு, கால்களை கீழே தொங்கவிட்டுக்கொண்டு அந்தக் குழியின் ஓரத்தில் அவன் உட்கார்ந்தான். தற்கொலையைப்பற்றிப் போலீசாரிடம் சொல்லிவிட்டு, நான் திரும்பி ஓடினேன். ஆனால் நான் திரும்பி வருமுன் தற்கொலை செய்துகொண்டவன் வைத்துவிட்டுச் சென்ற வோட்காவை முழுதையும் கோயில் பாடகன் குடித்துவிட்டான். என்னைக் கண்டதும் அவன் காலிப் பாட்டிலை உயர வீசினான்.

"அது விட்டுச்சென்றதை நான் பூர்த்தி செய்துவிட்டேன்!" என்று கூவிக்கொண்டு அவன் பாட்டிலை தரையில் எறிந்தான். அது தூள் தூளாக நொறுங்கிற்று.

என்னைத் தொடர்ந்து போலீஸ்காரன் ஓடிவந்தான். குழியைப் பார்த்துவிட்டு, அவன் தொப்பியை எடுத்தான். பயக்கத்துடன் சிலுவை அடையாளம் வரைந்துகொண்டு, கோயில் பாடகன் பக்கம் அவன் திரும்பினான்.

"நீ யார்?"

"அதை நீ தெரிந்துகொள்ள வேண்டியதில்லை."

கொஞ்சம் யோசித்துவிட்டு, மரியாதையாகக் கேட்டான் போலீஸ்காரன்:

"இங்கே இறந்தவன் கிடக்கிறான்—நீ குடித்திருக்கிறாய்—இதன் பொருளென்ன?"

"இருபது வருடங்களாக நான் குடிக்கிறேன்!" என்று மார்பைத் தட்டிக்கொண்டு, பெருமையுடன் சொன்னான் கோயில் பாடகன்.

வோட்காவைக் குடித்ததற்காக அவனைக் கைது செய்வார்கள் என்று நான் கருதினேன். இன்னும் சிலர் நகரத்திலிருந்து ஓடி வந்தனர். வண்டியில் கடுமையான தோற்றம் படைத்த ஒரு போலீஸ் அதிகாரி வந்தான். அவன் குழியில் இறங்கி, இறந்தவன் முகத்தைப் பார்ப்பதற்காகக் கோட்டை நீக்கினான்.

"இவனை முதலில் கண்டது யார்?"

"நான்" என்றான் மிட்ரோபோல்ஸ்கி.

அவனைக் கடைக்கண்ணால் பார்த்தான் போலீஸ் அதிகாரி. அச்சுறுத்தும் குரலில் அவன் திடீரென்று சொன்னான்:

"உன்னைக் காண நான் சந்தோஷப்படுகிறேன்!"

டஜன் கணக்கான ஆட்கள் அங்கே கூடிவிட்டனர். இரைத்துக்கொண்டும், கிளர்ச்சி அடைந்துகொண்டும் அவர்கள் குழியைப் பார்த்தனர்; குழியைச் சுற்றி நின்றனர். ஒருவன் கூவினான்:

"எங்கள் வீதியில் வசிக்கும் குமாஸ்தா அவன். அவனை எனக்குத் தெரியும்!"

தள்ளாடிக்கொண்டும், தெளிவின்றி விவாதித்துக் கொண்டும், கனத்த குரலில் கூவிக்கொண்டும் போலீஸ் அதிகாரிக்கு முன் நின்றான் கோயில் பாடகன். நெஞ்சில் பிடித்து போலீஸ் அதிகாரி அவனை தள்ளியதால், அவன் நிலை குலைந்து, கீழே உட்கார்ந்தான். நிதானமாக ஒரு கயிறை வெளியில் எடுத்து, கோயில் பாடகன் கைகளை அந்தக் கயிற்றால் பின் கட்டாகக் கட்டினான் முதலில் வந்த போலீஸ் காரன். பிறகு சந்தடியின்றி அவனை நகரத்திற்கு நடத்திச் சென்றான்.

மனம் சோர்ந்து, நான் வயலிலிருந்து வெளியேறினேன். அண்டங்காக்கையின் கடுமையான கத்தலைப்போல், என் நினைவு எதிரொலித்தது:

"ஆரியேல் நகரத்திற்குத் தூக்கதி நேரட்டும்!"

நிதானமாகத் தனது ஜேப்பிலிருந்து போலீஸ்காரன் கயிறை எடுத்த சோக சித்திரத்தையும், அந்தக் கடுமையான தீர்க்கதரிசி பணிவுடன் சிவப்பு சோமங்கள் நிறைந்த தன்

கைகளைப் பின்னே கட்டிக்கொண்டதையும் என் மனதி விருந்து என்னால் அகற்றவே முடியவில்லை.....

தீர்க்கதரிசி ஸைபீரியாவுக்கு அனுப்பப்பட்டான் என் பதை நான் பிறகு தெரிந்துகொண்டேன். இது நடந்த சில தினங்களுக்குப் பிறகு கிளெஷ்கோவும் மறைந்தான். லாப காரமான மணம் செய்துகொண்டு அவன் கிராமத்திற்குச் சென்றுவிட்டான். அங்கே அவன் சேணக்கடை திறந் தான்.....

சேணம் செய்வோனின் பாட்டைப் புகழ்ந்து என் எஜ மானனிடம் நான் பேசியிருந்ததால், அவன் மறையுமுன் என் எஜமானன் என்னிடம் சொன்னான் :

"அவன் பாட்டைக் கேட்க நான் விடுதிக்குச் செல்ல வேண்டும்."

ஒரு நாள் அவன் விடுதிக்கு வந்தான். கண்களை அகலத் திறந்துகொண்டு, ஆச்சரியத்தால் புருவத்தை நெரித்துக் கொண்டு எனக்கு எதிரில் அவன் உட்கார்ந்தான்.

விடுதிக்குச் செல்லும் வழியில் அவன் என்னை இடை விடாது கேலி செய்தான். விடுதிக்குள் சென்ற பிறகுகூட என்னையும், அங்கிருந்த மற்றவர்களையும் அவன் கேலி செய் தான் ; மூச்சுத் திணரவைக்கும் துர்நாற்றத்தைப்பற்றியும் பிரஸ்தாபித்தான். சேணம் செய்வோன் பாட ஆரம்பித்ததும், அவன் அகந்தையாகப் புன்னகை புரிந்துகொண்டு, கிளாஸில் பீரை ஊற்றினான். ஆனால் பீர் ஊற்றுவதைப் பாதியில் நிறுத்திவிட்டு அவன் சொன்னான் :

"ஆஹா ! அட சைத்தானே !"

மிருதுவாக, நடுங்கும் கைகளால் பாட்டிலை மேஜைமீது வைத்துவிட்டு, அவன் பாட்டைக் கேட்டான்.

"நீ சொன்னது சரிதான், சகோதரா !" என்று நெடு மூச்சுடன் சொன்னான், கிளெஷ்கோவ். பாடி முடித்ததும். "அவனுக்கு பாட்டுத் தெரியும், அவன் நாசமாய்ப் போக ! அவன் என்னை வியர்க்க வைத்துவிட்டான்."

தலையைப் பின்னே சாய்த்துக்கொண்டு, உத்திரத்தைப் பார்த்துக்கொண்டு அவன் மீண்டும் பாட ஆரம்பித்தான்.

வயலிலே மங்கை தனியே நடந்தாள்,
பணக்காரர் வீட்டிலிருந்து வந்துவிட்டாள் அவள்.

" ஆம், அவனுக்குப் பாடத் தெரியும் " என்று சிரித்துக் கொண்டும், தலையை அசைத்துக்கொண்டும் முணுமுணுத்தான் என் எஜமானன்.

புல்லாங்குழல் இசையைப் போன்றிருந்தது கிளெஷ் கோவின் குரல்.

வழிப்போக்கனிடம் சோர்வுடன் சொன்னாள் மங்கை :
என் போன்ற அநாதையை யாரும் விரும்பவில்லை.

" அவன் அற்புதமானவன் !" என்று சிவந்த கண்களைச் சிமிட்டிக்கொண்டு தணிந்த குரலில் சொன்னான் என் எஜமானன். " நாசமாய்ப் போக ! அவன் அற்புதமானவன் !"

அவனைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்த என் இதயம் மகிழ்ச்சியால் நிறைந்தது. விடுதியின் ஓசைக்கு மேலே வெற்றி முரசு கொட்டிக்கொண்டு எழுந்தது, சோகம் நிறைந்த கீதம் ; மேலும் மேலும் வலிமையுடையதாகவும், மேலும் மேலும் அழகுடையதாகவும், மேலும் மேலும் இதயத்தைத் தொடுவதாகவும் எழுந்தது, சோகம் நிறைந்த கீதம்.

என் கிராமத்திலேயே எனக்கு நண்பனில்லை,
இளையவர்கள் உல்லாசமாக இருக்கையில்,
தனியே இருக்கிறேன் நான்,
என் அழகு எந்த வாலிபனையும் கவரவில்லை,
அழகுபடுத்தும் ஆடைகள் எனக்கில்லை,
வயோதிகன் என்னை மணப்பான்,
அந்த வாழ்க்கைக்கு நான் இசையேன்.....

வெட்கத்தை மறந்து என் எஜமானன் அழுதான். தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு, உரத்து மூக்கை உறிஞ்சிக் கொண்டு, கண்ணீர் உகுத்துக்கொண்டு அவன் உட்கார்ந்திருந்தான்.

மூன்றாவது பாட்டை அவன் பாடி முடித்ததும், இளகிய மனதுடன் என் எஜமானன் சொன்னான் :

" இனிமேல் என்னால் இங்கே உட்கார்ந்திருக்க முடியாது. இங்கே காற்றே இல்லை. சபிக்கப்பட்ட துர்நாற்றம் வீசுகிறது. வீட்டிற்குப் போகலாம், வா !"

ஆனால் வீதி அடைந்ததும் அவன் மனம் மாறிவிட்டது.

" எல்லாம் நாசமாய்ப் போகட்டும், பெஷ்கோவ் ! ஹோட்டலுக்குச் சென்று ஏதாவது தின்னலாம் ! வீடு செல்ல நான் விரும்பவில்லை !"

சத்தத்தைப்பற்றித் தர்க்கம் செய்யாமல், அவன் ஒரு வண்டியில் ஏறினான். நாங்கள் இருவரும் மௌனமாக உட்கார்ந்து, ஹோட்டலை அடைந்தோம். ஹோட்டலில் மூலையிலிருந்த ஒரு மேஜைக்குச் சென்று உட்கார்ந்தான். பிறகு மிருதுவாகவும், வேதனையால் எழுச்சி அடைந்தும், அடிக்கடி சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டும் அவன் பேசினான் :

" அந்தக் கிழட்டு ஆடு என்னை நிலைகுலைத்துவிட்டது ; என் உணர்ச்சியைக் கறைப்படுத்திவிட்டது. கேள், நீ நிறையப் படிக்கிறாய் ; பல விஷயங்களைப்பற்றிச் சிந்திக்கிறாய். இதை என்னால் எப்படி விளக்க முடியும் ? நான் நாற்பது வருடங்கள் வாழ்ந்துவிட்டேன். எனக்கு மனைவியும், குழந்தைகளும் இருக்கிறார்கள். எனினும் பேசுவதற்கு இந்த உலகில் எனக்கு யாருமே இல்லை. என் இதயத்தை யாருக்காவது திறந்து காட்ட வேண்டும், சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்ல வேண்டும் என்று என் மனம் வெம்பும் நேரங்கள் என் வாழ்க்கையில் வந்திருக்கின்றன. ஆனால் சொல்வதற்கு யாருமில்லை ! அவளிடம் இதைச் சொன்னால்—அதாவது மனைவியிடம்—அவளுக்கு இது புரியாது. இதனால் அவளுக்கென்ன ? அவளுக்குக் குழந்தைகள் இருக்கின்றன ; வீடு இருக்கிறது ; பல தொல்லைகள் இருக்கின்றன. அவள் என் ஆத்மாவுக்கு அப்பாற்பட்டவள். முதல் குழந்தை பிறக்கும் வரையில்தான் மனைவி நண்பன்..... இதுதான் யதார்த்தம். பொது என் மனைவியிடம்—நல்லது, இது உனக்கே தெரியும்—விளையாடவே முடியாது. அவள் வெறும் சதை ! எப்படிப்பட்ட இதய வேதனை, சகோதரா !"

இசிவுடன் குளிர்ந்த, கசப்பான பீரை அவன் குடித்து விட்டு, தன் நீண்ட கூந்தலைச் சுருக்கு விடுத்துக்கொண்டு மெள்ளமாக உட்கார்ந்தான். சிறிது நேரத்திற்குப் பிறகு மீண்டும் அவன் பேச ஆரம்பித்தான்.

"மொத்தத்தில் ஜனங்கள் முறை தவறினவர்கள், சகோதரா! அந்த மூஷிக்குகளிடம் பல விஷயங்களைப்பற்றி நீ பேச விரும்புகிறாய் என்பது எனக்குத் தெரியும். எல்லாம் கோணலாக இருப்பதும், எல்லாம் அழுகி நாறுவதும் உண்மைதான் என்பதும் எனக்குத் தெரியும் சகோதரா! அவர்கள் அத்தனை பேரும் திருடர்கள். நீ சொல்லுவது அவர்கள் இதயத்தைத் தொடுகிறது என்று நீ நினைக்கிறாயா? கொஞ்சம்கூடத் தொடவில்லை. உதாரணத்திற்காகப் பியோட்டரையும், ஓஸிப்பையும் எடுத்துக்கொள். அவர்கள் கழிசடைகள்—நீ சொல்வதை யெல்லாம்—நீ என்னைப்பற்றிச் சொன்னால்கூட—அவர்கள் என்னிடம் சொல்லுகிறார்கள். நல்லது, இதைப்பற்றி என்ன நினைக்கிறாய்?"

நான் சொம்பத் திடுக்கிட்டதால், என்னால் பதில் சொல்ல முடியவில்லை.

"பார்த்தாயா?" என்று சிரித்துக்கொண்டே கேட்டான் என் எஜமானன். "பெர்ஸியாவுக்குச் செல்ல நீ நினைத்தது சொம்ப நல்லது. ஜனங்கள் அங்கே என்ன சொல்லுகிறார்கள் என்பது உனக்குப் புரியாது. ஏனெனில் அது அன்னிய மொழி. ஆனால் உன் தாய்மொழியில்—எல்லாம் அழுக்கு!"

"நான் சொன்னதை யெல்லாம் ஓஸிப் சொல்லுகிறானா?" என்று நான் கேட்டேன்.

"நிச்சயமாகச் சொல்லுகிறான், இது உனக்கு ஆச்சரியத்தை அளிக்கிறதா? அவன் வாயாடியாதலால், மற்றவர்கள் சொல்லுவதைவிட அவன் அதிகமாகச் சொல்லுகிறான். அவன் தந்திரமான குள்ளநரி. சகோதரா! இல்லை, பெஷ்கோவ், வார்த்தைகள் மனிதனைத் தொடவில்லை. உண்மை? உண்மையைக் கேட்க யார் விரும்புகிறார்கள்? அது சரத்கால பனியைப் போன்றது—சேறில் விழுந்து உருகுகிறது. அதிக

மான சேறைத் தவிர வேறென்றும் இராது. நாவை அடக்குவது உனக்கு நல்லது.''

ஒன்றன்பின் ஒன்றாக பல கிளாஸ் பீர் குடித்துவிட்டு வேகமாகவும், வேதனையுடனும், ஆனால் நிதானம் தவறாமல், அவன் பேசினான் :

''மௌனம் கலகம் நாஸ்தி என்பது முதுமொழி. வார்த்தைகள் களிம்பு. தெரிகிறதா சகோதரா ! இது துக்கமான, தனிமையான வாழ்க்கை! எங்கள் கிராமத்தில் எனக்கு நண்பனே இல்லை.....என்று அவன் பாடினது முற்றிலும் உண்மை.''

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, தனது குரலை அவன் தாழ்த்தினான் :

''வெகு நாட்களுக்கு முன் என்னைப்போன்ற ஒரு ஆத்மாவை நான் கண்டேன், இங்கே ஒரு பெண்ணை, ஒரு விதவையை—அதாவது கள்ள நாணயம் அடித்ததற்காக அவள் கணவன் ஸைபீரியாவுக்கு அனுப்பித் தண்டிக்கப்பட்டான்—நான் கண்டேன். அவள் கணவன் இப்பொழுதும் சிறையில் இருக்கிறான். நல்லது, அவளுடன் எனக்கு அறிமுகம் ஏற்பட்டது. அவளிடம் ஒரு காபெக்கூட இருக்கவில்லை...எனவே அவள் முடிவு செய்தாள்...உனக்குத் தெரிகிறதா...ஒரு தரகன் எங்களை அறிமுகப்படுத்தி வைத்தான். நான் அவளை ஒரு பார்வைதான் பார்த்தேன்—அவள் எவ்வளவு அழகானவள்! உண்மையான அழகு—சின்ன வயது—சொம்ப அழகி ! எனவே அவளை நான் சந்திக்க ஆரம்பித்தேன்—ஒரு முறை, இரண்டு முறை—பிறகு நான் அவளிடம் சொன்னேன் : உன் கணவன் சிறையில் இருக்கிறான், நீ நோவான பாதையில் செல்லவில்லையே ! அவனுடன் நீ எதற்காக ஸைபீரியாவுக்குச் செல்ல வேண்டும் ? அவனுடன் ஸைபீரியாவுக்குச் செல்ல அவள் திட்டமிட்டிருந்தாள். அவள் சொன்னாள் : அவன் எங்கே இருந்தாலும் எனக்கு அவன் நல்லவன்; ஏனெனில் நான் அவனைக் காதலிக்கிறேன். எனக்காகத்தான் அவன் தவறு செய்திருக்கலாம் ; அவனுக்காகத்தான் உன்னுடன் நான் சரசமாடுகிறேன். அவனுக்குப் பணம் தேவை என்றாள் அவள். அவன் கண்ணியமானவன்;

கண்ணியமான வாழ்க்கை வாழ்ந்து பழகியவன். நான் தனியே இருந்திருந்தால், நான் நேர்மையாக வாழ்ந்திருப் பேன். நீயும் நல்லவன்; உன்னை நான் நேசிக்க ஆரம்பித்து விட்டேன் என்றாள் அவள். ஆனால் இதைப்பற்றி இனிமேல் நீ என்னிடம் பேசக் கூடாது... எல்லாம் நாசமாகட்டும்.....! என்னிடம் இருந்த எல்லாவற்றையும்—எண்பது ரூபிளுக்கு மேல்—அவளிடம் கொடுத்துவிட்டு, நான் சொன்னேன்: 'என்னை மன்னித்துவிடு. ஆனால் இனிமேல் உன்னை நான் சந்திக்க முடியாது; உன்னை நான் சந்திக்க முடியாது.' பிறகு நான் போய்விட்டேன்....."

சிறிது நேரத்திற்குப் பிறகு—அந்த நேரத்தில் குடி போதை தலைக்கேறி அவன் நிலைகுலைந்திருந்தான்—அவன் முணுமுணுத்தான்:

"அவளுடன் ஆறு முறை நான் சேர்ந்தேன்... அது எப் படி இருந்திருக்கும் என்பதைக் கற்பனைகூடச் செய்ய முடி யாது! மேலும் ஆறு முறை நான் அவள் வீட்டிற்குச் சென் றிருப்பேன் என்று நினைக்கிறேன். ஆனால் உள்ளே செல்ல எனக்குத் தைரியம் ஏற்படவில்லை—என்னை நானே திடப் படுத்திக்கொள்ள முடியவில்லை. இப்பொழுது அவள் போய் விட்டாள்....."

கைகளை மேஜைமீது வைத்துக்கொண்டு, விரல்களால் மேஜைமீது அவன் தாளம் போட்டான்.

"மீண்டும் அவளை நான் சந்திக்கக் கூடாது என்று கட வுளை வேண்டுகிறேன்" என்று தணிந்த குரலில் அவன் சொன்னான். "கடவுள் இதைத் தடுக்கட்டும்! அதுதான் முடிவாக இருக்கும்! வீட்டிற்குப் போகலாம், வா!"

நாங்கள் வெளியே சென்றோம். இடறிக்கொண்டு அவன் முணுமுணுத்தான்:

"பார்த்தாயா, சகோதரா..."

அவன் சொன்னதைக் கேட்டு நான் ஆச்சரியப்பட வில்லை. அசாதாரணமான ஏதோ ஒன்று அவனுக்கு நேர்ந் திருக்கிறது என்பதைச் சிறிது காலத்திற்கு முன்னரே நான் ஊகித்தேன்.

ஆனால் வாழ்க்கையைப்பற்றியும், குறிப்பாக ஓஸீப் பைப்பற்றியும் அவன் சொன்னவை எனக்குச் சோர்வு அளித்தன.

20

மூன்று வேனிற்காலங்கள் ஜனசஞ்சாரமற்ற அந்த நகரில் நான் ஓவர்ஸியாக வேலை செய்தேன். காலிக் கட்டிடங்களுக்கு மத்தியில், ஒவ்வொரு சரத் காலத்திலும் கல்லால் ஆக்கப்பட்ட விகாரமான கடைகளைத் தொழிலாளிகள் இடிப்பதையும், வசந்த காலத்தில் அவைகளை மீண்டும் நிர்மாணிப்பதையும் கண்காணித்துக்கொண்டிருந்தேன்.

ஐந்து ரூபிள் மதிப்புள்ள வேலையை எனக்குக் கொடுத்து அதை நான் செய்யுமாறு செய்தான் என் எஜமானன். ஏதாவது ஒரு கடைக்குத் தளம்போட வேண்டுமானால், இரண்டு அடி ஆழம் நான் பள்ளம் தோண்ட வேண்டும். இத்தகைய வேலையைச் செய்யத் தேர்ச்சி பெறுத தொழிலாளிக்கு ஒரு ரூபிள் கூலி கொடுக்கப்பட்டது. ஆனால் எனக்கு ஒன்றும் கொடுக்கப்படவில்லை. இந்த வேலையில் நான் ஈடுபட்டிருந்ததால், தச்சர்களைக் கண்காணிக்க என்னால் முடியவில்லை. இந்த நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு பூட்டுகளையும், கதவுகளின் கைப்பிடிகளையும், இதைப்போன்ற இதர பொருள்களையும் அவர்கள் திருடினர்.

காண்டிராக்டர்களும் தொழிலாளிகளும் சகல வழிகளிலும் என்னை ஏமாற்ற முயன்றனர். விலக்க முடியாத தேவைக்கு அடிமைப்படுவதைப்போல், அநேகமாக அவர்கள் பகிரங்கமாகவே திருடினர். அவர்களை நான் பிடித்தால், அவர்கள் கோபப்படவில்லை. ஆனால் ஆச்சரியத்துடன் சொல்லுவார்கள் :

" அந்த ஐந்து ரூபிள்களுக்காக நீ ரொம்பச் சிரமப்படுகிறாய், அது இருபது ரூபிளைப்போல ! உன்னைக் கண்டால் சிரிப்பு வருகிறது !"

ஒரு ரூபிளுக்கு வேலை என்னிடம் வாங்குவதால், அவனுக்கு அதனால் அதிக நஷ்டம் ஏற்படுகிறது என்பதை என்

எஜமானனிடம் நான் சுட்டிக்காட்டியபொழுது, கண்களைச் சிமிட்டிக்கொண்டு அவன் சொன்னன் :

" என்னை ஏய்க்க முயலாதே !"

திருடர்களுடன் நான் ஒத்துழைப்பதாக அவன் சந்தேகித்தான் என்பதை நான் உணர்ந்தேன். இது என்னைப் புண்படுத்த வில்லை யென்றாலும், அவன்மீது வெறுப்பை உண்டுபண்ணிற்று. அன்றைய நிலை இவ்வாறிருந்தது. எல்லோரும் திருடினர் ; மற்றவர் பொருளைத் தனதாக்கிக்கொள்ள என் எஜமானன் தயங்கவில்லை.

பொருட்காட்சி முடிந்ததும் ஏதாவது பழுதுபார்ப்பது தேவையா என்பதைத் தெரிந்துகொள்ள என் எஜமானன் கடைகளைப் பார்வையிடுவான். மறந்துவிடப்பட்ட குளிர்காயும் அடுப்புகளும், தட்டுகளும், கம்பளிகளும், கத்திரிகளும், சில சமயங்களில் சாமான்கள் நிறைந்த பெட்டிகளும் அவன் கண்ணில்படும். சிரித்துக்கொண்டு அவன் சொல்லுவான் :

" இந்தச் சாமான்களின் ஜாப்தாவைத் தயாரித்துவிட்டு, இவைகளை எடுத்து ஸ்டோரில் வை."

ஸ்டோரிலிருந்து சில பொருள்களை அவன் வீட்டிற்கு எடுத்துச் செல்வான். அவன் எடுத்துச் சென்ற பொருள்களை நீக்கிவிட்டு, மீதியிருக்கும் பொருள்களைக் கொண்ட புதிய ஜாப்தா ஒன்றைத் தயாரிக்கச் சொல்லுவான்.

சொத்தின்மீது எனக்கு ஆசையில்லை ; சொத்தைச் சேமிக்க நான் விரும்பவுமில்லை ; புத்தகம்கூட ஒரு சுமை. பெரான்சரின் நூல்களும், ஹெயினின் பாட்டுப் புத்தகமும் என் ஆஸ்தி. புஷ்கின் புத்தகத்தை வாங்க நான் விரும்பினேன். நகரிலிருந்த ஒரே பழைய புத்தக விற்பனையாளரிடம் வக்கிரபுத்தி படைத்த அந்தக் கிழவன் அதற்கு அதிகமான விலை கேட்டான். மேஜை நாற்காலிகளையும், கம்பளிகளையும், கண்ணாடிகளையும், என் எஜமானன் வீடு நிறைய இருந்த இதர பொருள்களையும் நான் விரும்பவில்லை. அவைகளின் விகாரமான தோற்றமும், அவைகளிலிருந்து வீசிய வார்னிஷ் நாற்றமும் எனக்குக் கோபமூட்டின. பலவித்தமான கூளங்களால் பொதுவாக நிறைக்கப்

பட்ட பெட்டியை எனக்கு நினைவூட்டிய என் எஜமானனின் அறைகள் எனக்குப் பிடிக்கவில்லை. மற்றவர்களுக்குச் சொந்தமான பொருள்களைக் கொண்டுவந்து அந்த அறைகளில் நிறைத்து, தனது அமிதத்தை வெளிப்படுத்தினன் என் எஜமானன். எனவே, அந்த அறைகள் வெறுப்பை மேலும் என்னில் தூண்டிவிட்டன. ராணி மார்கோட்டின் வீட்டிலும் மேஜை நாற்காலிகள் நிறைந்திருந்தன. ஆனால் அவை அழகாயிருந்தன.

வாழ்க்கையே தொடர்பற்றதாகவும், பொருத்தமற்றதாகவும், அர்த்தமற்றவை நிறைந்ததாகவும் காணப்பட்டது. வசந்த காலத்தில் வெள்ளத்தில் அமிழ்ந்து, தரை சேறாகி, கதவுகள் தொய்ந்துபோயுள்ள கடைகளை நாங்கள் ரிப்பேர் செய்வோம். வெள்ளம் வடிந்ததும், உத்திரங்கள் உளுத்துவிடும். வருடா வருடம்—டஜன் கணக்கான வருடங்களாக—பொருட்காட்சி பூமி வெள்ளத்தில் ஆழ்கிறது ; கட்டிடங்களையும், நடை பாதையையும் வெள்ளம் பாழ்படுத்துகிறது. வருடா வருடம் வெள்ளப் பெருக்கினால் ஏற்படும் இந்தப் பெரு நஷ்டத்தைக் கணக்கிட முடியாது. அது தானாகவே நிற்காது என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஒவ்வொரு வசந்த காலத்திலும் பனிக்கட்டி கரைந்ததும், படகுகள் ஜலத்தில் மிதந்து சென்றுவிடும். நெடு மூச்சு விட்டுக்கொண்டும், முனகிக்கொண்டும் ஜனங்கள் புதிய படகுகள் செய்வார்கள். அடுத்த வசந்தத்தில் இவைகளுக்கும் இதே கதிதான் நேரும். இந்தத் தீய வளையத்தில் எப்படி ஜனங்கள் சுற்றிச் சுற்றி வருகிறார்கள் !

இதைப்பற்றி நான் ஓஸிப்பைக் கேட்டதும் அவன் ஆச்சரியமடைந்தான். அவன் என்னைக் கேலி செய்தான்.

" இந்தக் காக்கையைப் பார் ! அவன் எப்படிக் கத்துகிறான் ! இதனால் என்ன ? இதனால் உனக்கென்ன ?"

பிறகு அவன் கௌரவமாகப் பேச ஆரம்பித்தான். வயதானவனுயினும் அசாதாரணத் தெளிவுடன் விளங்கிய அவன் கண்களில் கேலி ஒளி நர்த்தனமாடிக்கொண்டிருந்தது.

" விஷயங்களை இப்படி நுணுக்கமாகப் பரிசீலனை செய்யும் சாமர்த்தியம் உனக்கு இருக்கிறது ! இது உன் வேலை

அல்லாமல் இருக்கலாம். ஆனால் என்றாவது ஒரு நாள் இது உனக்குப் பயன்படலாம். நீ கவனிக்க வேண்டிய வேறு விஷயம் இதோ இருக்கிறது..."

எதிர்பாராத உவமைகளும், நகைச்சுவையும் முதுமொழிகளும் கலந்த சொற்களை அவன் உதிர்த்தான்.

"ஜனங்கள் குறை கூறுகிறார்கள் : மிகக் குறைவான நிலம் ; ஒவ்வொரு வசந்தத்திலும் கரைகளை வால்கா அரித்து, அதை நடு ஆற்றுக்கு இழுத்துச் சென்று நதியின் ஆழத்தைக் குறைக்கிறது. மற்றும் சிலர் குறை கூறுகிறார்கள் : வால்காவின் ஆழம் குறைந்துவிட்டது ! வசந்த கால வெள்ளம் பூமியை அரிக்கிறது ; வேனிற் கால மழை நீர்க்கால்களை உற்பத்தி செய்கிறது ; மீண்டும் பூமி வால்காவுக்குள் போகிறது !"

வாழ்க்கைக்கு எதிராகக் காட்டப்படும் குற்றங்களைப் பற்றித் தனக்கு எல்லாம் தெரியும் என்ற எண்ணத்தில் எழும் மகிழ்ச்சியுடன் பேசுவதைப்போல் வருத்தமின்றியும், குறையின்றியும் அவன் பேசினான். அவன் சொற்கள் என் சிந்தனைக்கு ஒத்திருந்தாலும், அவைகளைக் கேட்பது சிரமமாக இருந்தது.

"இன்னொன்றிருக்கிறது—தீ!"

வால்காவுக்கு அப்பாலிருந்த காடு பற்றிஎரியாத வேனிற் காலமே வந்துபோனதில்லை. ஒவ்வொரு ஜூலை மாதத்திலும் வானம் குங்குமநிறப் புகையால் மூடப்பட்டிருக்கும் ; கிரணங்களற்ற சூரியன், புண்பட்ட கண்களால் பார்ப்பதைப் போல் பூமியை உற்றுப் பார்க்கும்.

"காடுகள்—அவை முக்கிய மல்ல" என்றான் ஓஸிப். "காடுகள், பிரபுக்களுக்கோ ஜாருக்கோ சொந்தம். மூஷிக்குகளுக்குச் சொந்தமான காடுகள் இல்லை. பெரிய நகரங்கள் எரிந்து சாம்பலானாலும், அதனால் அதிகத் தீமையில்லை. பணக்காரர்கள் பெரிய நகரங்களில் வசிக்கிறார்கள் ; பணக்காரர்கள்மீது இரங்க வேண்டியதில்லை. ஆனால், சிறிய நகரங்களையும் கிராமங்களையும் எடுத்துக்கொள். எத்தனை கிராமங்கள் வேனிற் காலத்தில் எரிகின்றன ! குறைந்தது நூறு. இதுதான் உண்மையான நஷ்டம் !"

அவன் அமைதியாகச் சிரித்தான்.

" நமக்கு வேதனை இருக்கிறது ; ஆனால் மூளை இல்லை. மனிதனுடைய உழைப்பின் பல்ன் மனிதனுக்கோ, பூமிக்கோ கிடைக்கவில்லை. ஆனால், நெருப்புக்கும் ஜலத்திற்கும் கிடைக்கிறது என்பது எனக்கும் உனக்கும் தெரியும் !"

" நீ ஏன் சிரிக்கிறாய் ?"

" ஏன் சிரிக்கக் கூடாது ? கண்ணீரால் நெருப்பை அணைக்க முடியாது; அது வெள்ளத்தை அதிகப்படுத்தும்."

நான் இதுவரையில் சந்தித்த எல்லோரையும்விட இந்தக் கிழவன் புத்தியில் சிறந்தவன் என்பது எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. ஆனால் அவனுக்கு இருந்த விருப்பையும், வெறுப்பையும் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை.

"ஜனங்கள் எப்படிச் சக்தியை வீணுக்குகிறார்கள்—தங்கள் சக்தியையும், பிறர் சக்தியையும் ! உன் எஜமானன் எப்படிக் கடுமையாக உன்னிடம் வேலை வாங்குகிறான்! அல்லது வோட்கா செய்யும் தீமையை எடுத்துக்கொள். இவைகளைக் கணக்கிட முடியாது. பண்டிதன் மனம்கூட இவைகளைக் கிரகிக்க முடியாது. ஒரு குடிசை எரிந்துவிட்டால், வேறு குடிசையை நீ கட்டலாம். ஆனால் ஒரு நல்ல மனிதன் அழித்துவிட்டால், அதை ஈடுகட்ட முடியாது. உதாரணமாக ஆர்டாலியோனையோ, கிரிகோரியையோ எடுத்துக்கொள். அந்த மூஷிக் எப்படிப் புகைந்துவிட்டான்! அந்தக் கிரிகோரி சொம்பச் சிறந்தவனல்ல ; ஆனால் அவன் இதயமுள்ள மூஷிக் ! அவன் எரிந்ததைப் பார்த்தால், அவன் வைக்கோல் போலெனத் தோன்றும். புழுக்கள் பிணத்தைத் தாக்குவதைப்போல், பெண்கள் அவனைத் தாக்கினர்."

" நான் சொன்னதை யெல்லாம் என் எஜமானனிடம் நீ ஏன் சொன்னாய் ?" என்று வருத்தமின்றி, ஆனால் விஷயத்தைத் தெரிந்துகொள்ளும் ஆர்வத்தில் நான் கேட்டேன்.

அவன் சாதாரணமாகவும், மிருதுவாகவும் பதில் சொன்னான் :

"எத்தகைய தீய சிந்தனைகள் உன்னில் இடம்பெற்றிருக்கின்றன என்பதை உன் எஜமானன் தெரிந்துகொள்வதும் உனக்கு நல்லுபதேசம் செய்வது அவன் பொறுப்பு. உன்

எஜமானன் இதைச் செய்யவில்லை யென்றால், வேறு யார் செய்யப் போகிறார்கள் ? துவேஷத்தால் நான் அவனுக்குச் சொல்லவில்லை ; ஆனால் உன்மீதுள்ள இரக்கத்தால். நீ மூட்டாள் சிறுவனல்ல ; ஆனால் உன் மூளையைச் சைத்தான் கிண்டிக்கொண்டிருக்கிறது. எதையாவது நீ திருடினால் நான் சும்மா இருந்துவிடுவேன். பெண்களுடன் நீ சென்றால், அப்பொழுதும் நான் சும்மா இருந்துவிடுவேன். நீ குடித்தால், நான் ஒரு வார்த்தைகூடச் சொல்ல மாட்டேன். ஆனால் விசித்திரமான உன் கருத்துக்களை உன் எஜமானனிடம் நான் விடாது சொல்லுவேன் என்பதை நீ தெரிந்துகொள்.''

'' இனிமேல் உன்னிட்ம் நான் பேச மாட்டேன்.''

தன் உள்ளங் கையில் ஒட்டிக்கொண்டிருந்த தாரைச் சுத்தம் செய்துகொண்டு சிறிது நேரம் அவன் மௌனமாக இருந்தான். பிறகு ஆசையுடன் என்னைப் பார்த்துக் கொண்டு அவன் சொன்னான் :

'' ஆம், நீ பேசுவாய் ; நீ பொய் சொல்லுகிறாய். நீ வேறு யாரிடம் பேசுவாய் ? பேசுவதற்கு வேறு யாருமில்லை.''

ஓஸிப் சுத்தமாக இருந்தும்கூட, அப்பொழுது அவன் சூனாகாப்போன் யாக்கோவைப்போல் தோற்றமளித்தான். எல்லோரிடமும், எல்லாவற்றிலும் அவன் பற்றின்றி இருந்தான்.

சில சமயங்களில் மதவெறியன் பியோட்டர் வாஸில் யெவ்வையும், சில சமயங்களில் வண்டிக்காரன் பியோட்டரையும், மற்றச் சமயங்களில் என் தாத்தாவையும் அவன் நினைவூட்டினான். ஏதாவது ஒரு வழியில் எனக்குத் தெரிந்த கிழவர்களை யெல்லாம் அவன் நினைவூட்டினான். அவர்க ளெல்லாம் என்னைக் கவர்ந்த அற்புதமான கிழவர்கள். ஆனால் அவர்களுடன் வாழுவது சிரமமானது, வெறுப்பளிக்கக் கூடியது என்று நான் கருதினேன். தங்கள் புத்திசாலித்தனமான நீதிபோதனைகளால் அவர்கள் ஆத்மாவைத் தின்று விடுவார்கள், இதயத்தை அரித்துவிடுவார்கள். ஓஸிப் நல்ல மனிதன்தானா ? இல்லை கெட்ட மனிதனா ? இல்லை. அவன் சாமர்த்தியசாலி—இதை நான் தெளிவாகக் கண்டேன். அவன் மனதின் செழுமையைக் கண்டு நான் வியந்தேன்; என்

முலும், அவன் சிந்தனை எனக்குச் சுமையாக இருந்தது; என் பதையும், சகல வழிகளிலும் அவன் சிந்தனை என் சிந்தனைக்கு விரோதமானதாக இருந்தது என்பதையும் நான் உணர்ந்தேன்.

என்னிலே இருண்ட எண்ணங்கள் இடம் பெற்றன.

"ஆசை நிறைந்த வார்த்தைகள் சொன்னலும், புன்முறுவல் பூத்தாலும், சகலரும் ஒருவருக்கொருவர் அன்னியராக இருந்தனர்; எல்லோரும் அன்னியர். அன்பு என்னும் பலமான பந்தத்தால் யாரும் வாழ்க்கையுடன் பிணைந்திருக்கவில்லை. பாட்டி மாத்திரம்தான் வாழ்க்கையையும், ஜனங்களையும் உண்மையில் நேசிக்கிறாள். பாட்டியும், அற்புதமான ராணி மார்கோட்டும்!"

சில சமயங்களில் இவைகளும், இவைகளைப் போன்ற எண்ணங்களும் அடுக்கடுக்காக எழுந்து, வாழ்க்கையைச் சார மற்றதாக்கிவிடுகின்றன. ஆனால், வேறு விதமான வாழ்க்கை இருக்கிறதா? நான் எப்படி இதிலிருந்து தப்ப முடியும்? நான் பேசுவதற்கு ஓஸிப்பைத் தவிர வேறு யாருமில்லை. எனவே முன்னைவிட அதிகமாக அவனை அணுகினேன்.

உணர்ச்சியுடன் நான் சொன்னவைகளை அவன் சிரத்தை யுடன் கேட்டான்; கேள்விகள் கேட்டான்; விஷயங்களைப் புரிந்துகொள்ள முயன்றான்; பிறகு சாந்தமாகச் சொன்னான்:

"மாங்கொத்தி உறுதிபடைத்த பறவை; ஆனால் பயங் கரமான தல்ல. அதைக் கண்டு யாரும் பயப்படவில்லை. மதத் தில் சேருமாறு உனக்கு நான் இதயபூர்வமாக யோசனை கூறு கிறேன். வயது வரும்வரையில் நீ அங்கே இருக்கலாம்; நம்பிக்கை படைத்தவர்களுக்கு அற்புதமான வார்த்தைகளால் ஆறுதல் அளிக்கலாம். உன் மனதிற்குச் சாந்தி; பாதிரிகளுக்கு லாபம். இதைச் செய்யுமாறு இதயபூர்வமாக உனக்கு நான் யோசனை கூறுகிறேன். இந்த உலகத்தைச் சமாளிக்க உன்னால் முடியவில்லை என்று நான் அஞ்சுகிறேன்."

மடத்தில் சேர எனக்கு விருப்பமில்லை. ஆனால் மனே தீதமான சுழலில் சிக்கி அழிந்துவிட்டதாக எனக்குத் தோன் றிற்று. ஆறுதல் வேண்டி நான் தவித்தேன். காளான்கள் மறைந்துவிட்ட சரத் காலக் கானகத்தைப் போன்றிருந்தது, வாழ்க்கை; மூலைமுடுக்குக ளெல்லாம் நன்றாகத் தெரிந்த

சூன்யத்தில் செய்வதற்கு ஒன்றுமின்றி அங்கே என்னை விட்டுவைத்தது.

நான் வோட்கா குடிக்கவில்லை; பெண்களைச் சுற்றி வட்டமிடவுமில்லை. ஆத்மாவுக்குப் போதைதரும் இந்த இரண்டின் ஸ்தானங்களையும், என் சம்பந்தப்பட்டவரையில் புத்தகங்கள் ஏற்றன. ஆனால் நான் படிக்கப் படிக்க, பெரும்பான்மையான ஜனங்கள் வாழ்ந்ததைப்போல் சூன்யத்தில், அர்த்தமற்ற முறையில் வாழ்க்கை நடத்துவது சிரமமாயிருந்தது.

எனக்குப் பதினைந்து வயதுதான் ஆகிறது. ஆனால் வயோதிக எண்ணம் எனக்கு ஏற்பட்ட சமயங்கள் இருந்தன. என் அனுபவமும், நான் படித்தவைகளும் என் இதயத்தை வீங்க வைத்துவிட்டன, கனமாக்கிவிட்டன. தனித் தனியாகப் பிரிக்கும் சக்தியோ, திறமையோ இல்லாத எனக்கு பல்வேறு பொருள்கள் நிறைந்த ஒரு இருண்ட சாமான்கள் இருக்கும் அறையைப்போன் றிருந்தது, என் நினைவு என்னும் பொக்கிஷம்.

இதன் கனம் என்னை உறுதியுடையவனாக்கவில்லை; ஆனால் அசைந்தாடும் கப்பலில் கிடக்கும் ஜலத்தைப் போன்று அது என்னை அசைத்தது.

குறைகூறுவதையும், துயரத்தையும், நேர்மையின்மையையும் நான் வெறுத்தேன்; மிருகத்தனம்—ரத்தம், அடி, வசவு—என் உள்ளத்தில் இயல்பாகவே எதிர்ப்பைத் தூண்டிவிட்டது. இது கோபமாகப் பரிணமித்ததால், நான் காட்டு விலங்கைப்போல் போராடுவேன்; பிறகு அளவுகடந்த மனவேதனைப்படுவேன்.

தன்புறுத்துவோனை முறியடிக்க வேண்டும் என்னும் ஆசையால் தூண்டப்பட்டு, கண்மூடித்தனமாகப் போர்க்களத்தில் நான் குதிப்பேன். கையாலாகாத்தனத்தில் எழுந்த இந்த வெறியால் நான் செய்த சண்டைகளை எண்ணி இன்று வரையில் துக்கத்தாலும், வெட்கத்தாலும் நான் வாடுகிறேன்.

என்னிலே இரண்டு ஆத்மாக்கள் குடிகொண்டிருந்தன: அவைகளில் ஒன்று, அதிகமான அழுக்கையும், வெறுக்கத்தக்கவைகளையும் கண்டு, புனிதத்வம் அடைந்துவிட்டது. வாழ்க்கையின் பயங்கரமான கோளாறுகள் என்னைச் சம்சய

வாதியாகவும், சந்தேகப்பிராணியாகவும் மாற்றிவிட்டது. தான் உட்பட எல்லோரையும் அது நிராசையுடன் பார்த்தது. இது நகரங்களிலிருந்தும், ஜனங்களிலிருந்தும் விலகி, இவைகளுக்கு வெகு தூரத்தில் நிம்மதியான வாழ்க்கை நடத்த வெம்பிற்று. பெர்ஸியாவுக்குச் செல்வதைப்பற்றியும், மடத்தில் சேருவதைப் பற்றியும், கானகக் காவலாளியின் குடிசையில் வாழ்வதைப் பற்றியும், ரயில்வே கார்டின் விடுதியில் வசிப்பதைப் பற்றியும், நகரத்திற்கு வெளியே எங்காவது ஓர் இடத்தில் இரவு காவற்காரனுவதைப் பற்றியும் இது கனவு கண்டது. ஜனங்கள் அதிகம் இல்லாத, தொலையில் வசிப்பது நல்லது.

இன்னொன்று, ஞானோபதேசம் செய்கிற, உண்மையான புத்தகங்கள் என்னும் புனித ஆவியால் ஞானஸ்நானம் செய்விக்கப்பட்டது. வாழ்க்கையின் பயங்கரமான கோளாறுகள் இரக்கமற்ற ஆதிக்கத்தை மனிதன்மீது செலுத்தியதை உணர்ந்தது. இந்தச் சக்தி எளிதில் மனிதனை நிலைகுலைத்து விடும்; அல்லது அவனை நசுக்கிவிடும். எனவே பல்லைக் கடித்துக்கொண்டு, முஷ்டியை உயர்த்திக்கொண்டு, தனது சக்தியை எல்லாம் ஒன்று திரட்டி, தற்காப்புக்குத் தயார்படுத்திக்கொண்டது; சண்டைக்கோ, விவாதத்திற்கோ எப்பொழுதும் தயாராக இருந்தது. அதன் அன்பும், அனுதாபமும் செயலில் பிரதிபலித்தது. பிரெஞ்சு நாவலில் வரும் தீரம் மிகுந்த கதாநாயகனனதும், சிறிது ஆத்திரமூட்டப்பட்டால்கூட வாளை உறையிலிருந்து உருவி, போருக்கு ஆயத்தமாகும் வளர்ச்சி படைத்தவனுகவும் என்னை ஆக்கியது.

மலாயா பொக்கோவ்ஸ்காயா தெருவிலிருக்கும் ஒரு விபசார விடுதியில் போர்ட்டராக இருந்த ஒரு துரெண்ணம் படைத்த விரோதி அந்தக் காலத்தில் எனக்கு இருந்தான். ஒரு நாள் காலை குடிபோதையிலிருந்த ஒரு சிறுமியை வண்டியிலிருந்து அவன் வெளியேற்றிக்கொண்டிருந்தபொழுது அந்த வழியாகப் பொருட்காட்சிசாலைக்குச் சென்றுகொண்டிருந்த எனக்கு அவனுடன் அறிமுகம் ஏற்பட்டது. அந்தச் சிறுமியின் காலுறை நழுவியிருந்தது. ஆபாசமாக அவளை அணுகி, இடைவரையில் அவளை நிர்வாணமாகவிட்டு, சபித்

துக்கொண்டும் சிரித்துக்கொண்டும், அவள்மீது துப்பிக் கொண்டும் கால்களைப்பற்றி அவளை வண்டியிலிருந்து கறகற வென்று கீழே இழுத்தான் அந்தப் போர்ட்டர். உருக் குலைந்தும், சுயஉணர்வின்றியும் இருந்த அந்தச் சிறுமி நாக்கைத் தொங்கவிட்டுக்கொண்டு கீழே மெதுவாகச் சாய்ந் தாள். தளர்ந்த அவள் கால்கள் அவள் தலைக்கு மேலே கிடந் தன. வண்டியின் சீட்டிலும், பிறகு படியிலும், இறுதியில் நடைபாதையிலும் அவை மோதின.

குதிரையைச் சவுக்கால் அடித்துவிட்டு, வண்டியை ஓட்டி னான் வண்டிக்காரன். வண்டியின் அச்சைப் பிடிப்பதைப் போல் அவள் கால்களைப் பிடித்து, அவளை நடைபாதையில் இழுத்துச் சென்றான் அந்தப் போர்ட்டர். அசாதாரண வெறி யுடன் அவன்மீது நான் பாய்ந்தேன். ஆனால் அதிர்ஷ்ட வசமாக என் கையிலிருந்த ஏழடி நீளமுள்ள கடப்பாறையை நான் கீழே எறியவில்லை; தற்செயலாக அதைக் கைநழுவ விட வுமில்லை. இதனால் போர்ட்டரும், நானும் ஆபத்திலிருந்து தப்பினோம். அவன்மீது வேகமாகப் பாய்ந்து, அவனைக் கீழே தள்ளி, முகப்பில் குத்தித்தாறி, மணியை அடித்தேன். மணி யோசையைக் கேட்டு அசாதாரண தோற்றத்துடன் சிலர் வெளியே ஓடி வந்தனர். எதையும் விளக்க அசக்தனாக இருந்த நான், என் கருவியை எடுத்துக்கொண்டு அங்கிருந்து வேக மாகச் சென்றுவிட்டேன்.

நதி ஓரத்திலிருந்த வீதியில் நான் அந்த வண்டிக் காரனைக் கண்டேன். என்னைக் கடைக்கண்ணால் பார்த்து விட்டு, ஆமோதிக்கும் முறையில் அவன் சொன்னான் :

" அவனுக்கு நல்ல பாடம் கற்பித்தாய்."

வெட்கமற்ற முறையில் அந்தப் பெண்ணை அலங்கோலப் படுத்த அந்தப் போர்ட்டரை நீ ஏன் அனுமதித்தாய் என்று கோபத்துடன் நான் அந்த வண்டிக்காரனைக் கேட்டேன்.

"அவள் நாசமாகட்டும் !" என்று வெறுப்புடன் அவன் சொன்னான். " அவளை வண்டியில் போட்டுவிட்டு, கனவான் கள் எனக்குப் பணம் கொடுத்தனர். இதுதான் எனக்குத் தேவை."

" ஆனால் அவளை அவன் கொன்றிருந்தால் ?"

"அவளைப் போன்றவளைக் கொல்லுவது அவ்வளவு எளிதல்ல" என்று குடிகாரர்களைக் கொல்லும் கலையில் தேர்ந்தவன் பேசுவதைப்போல் அவன் பேசினான்.

அதன் பிறகு, அநேகமாக, தினசரி காலையில் நான் அந்தப் போர்ட்டரைச் சந்தித்தேன். அந்த வீதியிலே நான் செல்லும் பொழுதெல்லாம் அவன் நடைபாதையை பெருக்கிக்கொண்டிருப்பான்; அல்லது என் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவனைப்போல் படிக்கட்டில் உட்கார்ந்திருப்பான். நான் அவன் இருக்கு மிடத்தை அடைந்ததும், அவன் எழுந்திருந்து சட்டையை மேலே தீக்கிக்கொண்டு, அச்சுறுத்தும் முறையில் சொல்லுவான்:

"உன் மொந்தையை நொறுக்கிவிடுகிறேன் பார்!"

அவனுக்கு நாற்பது வயதிற்குமேல் இருக்கும். அவன் சிறியவன்; வில்லைப்போன்று வளைந்த கால்கள் படைத்தவன். கர்ப்பிணியின் வயிறைப் போன்றிருந்தது அவன் வயிறு. என்னைப் பார்த்துக் கேலிச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு அவன் அங்கே நிற்பான். அன்பும், நல்லெண்ணமும் சுரக்கும் கண்கள் அவனுக்கு இருப்பதைக் கண்டு நான் கலங்கினேன். போராடிப் பழகாத அவன், என் கைகளைவிடச் சின்ன கைகள் படைத்த அவன், இரண்டு அல்லது மூன்று தாக்குதல்களுக்குப் பிறகு சரணாகதி அடைவான். வேலியில் சாய்ந்த வாறு, வியப்புடன் வாயைப் பிளந்துகொண்டு அவன் சொல்லுவான்:

"ஒரு நிமிடம் பொறு, காட்டுப் பூனையே!"

இந்தச் சண்டை எனக்குச் சலிப்பளித்தது. எனவே ஒரு நாள் நான் சொன்னேன்:

"கேள், மூட்டாள்! என்னை விட்டுவிடு! என்ன?"

"நீ ஏன் சண்டை செய்ய ஆரம்பித்தாய்?" என்று குற்றம் சாட்டும் முறையில் சொன்னான் அவன்.

அந்தச் சிறுமியை நீ ஏன் திட்டினாய் என்று நான் கேட்டேன்.

"அதைப் பற்றி உனக்கென்ன? அவள்மீது நீ இரக்கப் படுகிறாயா?"

"ஆம்."

சிறிது நேரத்திற்குப் பிறகு, உதடுகளைத் துடைத்துக் கொண்டு அவன் கேட்டான் :

" பூனைகள்மீதும் நீ இரக்கப்படுகிறாயா ?"

" ஆம்."

பிறகு அவன் சொன்னான்.

" நீ முட்டாள்—பொய்யன். பொறு, உனக்குக் காட்டுகிறேன் !"

வேலை செய்யும் இடத்திற்குச் செல்ல அதுதான் குறுக்கு வழியாதலால், அந்த வீதி வழியாக நான் செல்ல வேண்டியிருந்தது. ஆனால் அந்தப் போர்ட்டரைச் சந்திக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காக அதி காலையிலேயே நான் எழுந்திருக்க ஆரம்பித்தேன். நான் எவ்வளவுதான் முயன்றும், சில தினங்களுக்குப் பிறகு மடியில் ஒரு பூனையை வைத்தவாறு, அதைத் தடவிக் கொடுத்துக்கொண்டு படிக்கட்டில் அவன் உட்கார்ந்திருந்தான். அவன் இருக்குமிடத்தை நான் நெருங்கியதும் அவன் குதித்தெழுந்து, பூனையின் பின் கால்களைப் பிடித்து அதைத் தூக்கி, அதன் தலையை ஒரு கல் கம்பத்தில் தன் பலத்தையெல்லாம் உபயோகித்து, மோதினான். வெப்பமான அதன் ரத்தம் என்மீது தெறித்தது. பிறகு அதை என் காலடியில் எறிந்துவிட்டு, வாசற்படியில் நின்றுகொண்டு அவன் கேட்டான் :

" நல்லது !"

நான் என்ன செய்வது ? இரண்டு நாய்களைப்போல் நாங்கள் வீதியில் புரண்டோம். பிறகு வேதனையால் அதிர்ச்சி அடைந்த நான் வீதி ஓரத்தில் வளர்ந்து நின்ற களைகள்மீது விழுந்து, கூச்சலிடாமலும், அழாமலும் இருப்பதற்காக உதடுகளைக் கடித்துக்கொண்டேன். வெறுப்பால் நடுங்கிக் கொண்டு இதை நான் நினைவுக்குக் கொண்டுவருகிறேன். எனக்குப் பைத்தியம் பிடிக்காமல் இருந்ததை, அல்லது நான் தற்கொலை செய்துகொள்ளாததை எண்ணி நான் ஆச்சரியப்படுகிறேன்.

இவ்வளவு வெறுக்கத்தக்க ஒரு சம்பவத்தை நான் ஏன் வர்ணிக்கிறேன் ? இது கடந்த கால நிகழ்ச்சியல்ல என்பதை, என் அருமை வாசகர்களே, நீங்கள் தெரிந்துகொள்ள வேண்

டும் என்பதற்காக! கற்பனை செய்யப்பட்ட கொடுமைகளை நீங்கள் அனுபவித்தீர்கள்; கோரமான கதைகளைப் படித்துப் படித்து நீங்கள் மகிழ்ந்தீர்கள்; மனதை வாட்டும் கற்பனைகளைப் படித்து உங்கள் உணர்ச்சி இன்பகரமாகத் திருப்தி அடைவதை நீங்கள் வெறுக்கவில்லை. ஆனால் உண்மையான கோரங்களை நான் தெரிந்துகொண்டிருக்கிறேன்—தினசரி வாழ்க்கையில் நிகழும் கோரங்களை நான் கண்டிருக்கிறேன். நீங்கள் எங்கே வசிக்கிறீர்கள், எப்படி வசிக்கிறீர்கள் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத் இந்த நிகழ்ச்சியை வர்ணித்து உங்கள் உணர்ச்சிகளைத் தூக்கத்திலாழ்த்த எனக்கு உரிமை உண்டு என்று நான் கருதுகிறேன்.

நாம் வாழும் வாழ்க்கை கீழ்த்தரமான சாக்கடை வாழ்க்கை என்பதை யாரும் மறுக்க முடியாது.

மனித சமூகத்தை நான் அளவுகடந்து நேசிக்கிறேன் என்றாலும், பிறருக்கு வேதனை அளிக்க நான் விரும்பவில்லை. நாம் மானசிகமாக இருக்கக் கூடாதென்றும், அழகிய சொற்றொடர்களாலும், கவர்ச்சிகரமான பொய்களாலும் உண்மையை மூடி மறைக்கக் கூடாதென்றும் நான் உறுதியாகக் கருதுகிறேன். வாழ்க்கையுடன் நாம் நெருங்கி நிற்க வேண்டும்—மிக நெருங்கி நிற்க வேண்டும்! நமது இதயங்களிலும், மனதிலும் உறையும் நன்மைகளையும், மனிதாபிமானத்தையும் நாம் வாழ்க்கையில் ஊற்ற வேண்டும்.

பெண்களைப்பற்றிப் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கருத்து என் ஆத்திரத்தைத் தூண்டிவிட்டது. பெண்ணைவிடப் பொருள் நிறைந்த, அற்புதமான வேறொன்று வாழ்க்கையில் இல்லை என்பதை நான் படித்தவை எனக்கு அறிவுறுத்தின. இந்தக் கருத்தை என் பாட்டியும், கன்னி மாதா, ஞானி வாஸிலீஸா ஆகியவர்களைப்பற்றி என் பாட்டி சொன்ன கதைகளும் ஊர்ஜிதம் செய்தன; துரதிர்ஷ்டசாலியான வண்ணத்தி நடால்யாவும் இந்தக் கருத்தை ஊர்ஜிதம் செய்தாள்; புன்முறுவலுடனும் சுடைக்கண் பார்வையுடனும் நான் கண்ட நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான பெண்கள்—வாழ்க்கையின் தாய்மார்கள், இன்பம், அன்பு ஆகியவைகளை

வேண்டி நின்று வாழ்க்கையை அழகுபடுத்தும் மாதரசிகள்— ஊர்ஜிதம் செய்தனர்.

துர்கெனெவ்வின் நூல்கள் பெண்களின் பெருமையைப் பாடின. பெண்களைப்பற்றி நான் படித்தவைகளின் அவதார மாக விளங்கினாள் ராணி மார்கோட். இந்த என் அறிவுக் களஞ்சியத்திற்குத் தாராளமாகப் பொருள் கொடுத்து உதவினர் ஹெயினும் துர்கெனெவ்வும்.

பொருட்காட்சிசாலையிலிருந்து வீடு திரும்பும்பொழுது கிரெம்லின் சுவருக்கு அருகில் இருக்கும் குன்றில் நின்று கொண்டு வால்காவுக்கு அப்பால் மறையும் சூரியனைப் பார்ப்பேன். அடிவானத்திற்கு அப்பால் பாயும் நதியைத் தீயாக மாற்றும் அந்தி சூரியன். என் அருமையான இந்த உலகத்து நதி ஊதா வர்ணத்தில் தோய்ந்து கிடக்கும். அத்தகைய சமயங்களில் பூமி பெரிய கைதிப் படகாகவோ, அல்லது கண்ணுக்குத் தெரியாத கயிறால் இழுத்துச் செல்லப்படும் பன்றியாகவோ எனக்குத் தோன்றும்.

ஆனால் அடிக்கடி என் சிந்தனை உலகின் பாரப்பை நோக்கித் திரும்பும். நான் புத்தகங்களில் படித்த பிற நகரங்களையும், வேறுவிதமான வாழ்க்கை நடத்தும் ஜனங்கள் வாழும் அன்னிய நாடுகளையும் என் மனம் நாடும். என்னைச் சுற்றி மெதுவாகவும், சாரமற்றும், கடினமாகவும், விரும்பத்தகாத முறையிலும் இயங்கிய வாழ்க்கையைவிட அன்னிய ஆசிரியர்களின் நூல்கள் வர்ணித்த வாழ்க்கை பரிசுத்தமானதாகவும், விரும்பத்தக்கதாகவும் இருந்தது. இது என் பயத்தைத் தணித்து, நல்ல வாழ்க்கை சாத்தியம்தான் என்னும் நம்பிக்கையை எனக்கு ஊட்டிற்று.

என்றுவது ஒரு நாள் நான் ஒரு எளிய, ஞானியைச் சந்திப்பேன் என்றும், பரந்த ஒளிவீசும் பாதையில் என்னை அவர் நடத்திச் செல்வார் என்றும் நான் நம்பினேன்.

ஒரு நாள் கிரெம்லின் அவருக்கு அருகில் கிடந்த ஒரு பெஞ்சில் நான் உட்கார்ந்திருந்தபொழுது யாக்கோவ் மாமா அங்கே வந்தான். அவன் வந்ததை நான் காணவில்லை; அவனை நான் உடனே அடையாளம் கண்டுகொள்ளவுமில்லை. அதே நகரத்தில் நாங்கள் பல வருடங்களாக வசிக்கிறோம் என்று

லும், அபூர்வமாகத்தான் நாங்கள் சந்தித்தோம். எப்பொழுதாவது சந்தித்தால்கூட தற்செயலாகவும், சிறிது நேரமும்தான் சந்தித்தோம்.

"நீ வளர்ந்துகொண் டிருக்கிறாய்!" என்று என்னை தள்ளிக்கொண்டு, வேடிக்கையாகச் சொன்னான் மாமா. நீண்ட காலம் பழகிய இருவரைப்போல், உறவினர் என்பதை மறந்து, அன்னியோன்னியமாக நாங்கள் பேச ஆரம்பித்தோம்.

தன் சொத்தை யெல்லாம் யாக்கோவ் மாமா ஊதாரித்தனமாகச் செலவுசெய்துவிட்டான் என்று பாட்டி என்னிடம் சொல்லி யிருக்கிறாள். சிறிது காலம் அவன் உதவிச் சிறை வார்டராக உத்தியோகம் பார்த்தான். ஆனால் இதுதுக்கரமான முடிவில் முடிந்தது. வார்டர் நோயால் படுத்திருந்த பொழுது, தனது வீட்டில் கைதிகளுக்கு உல்லாசமான விருந்துகள் நடத்தினான் மாமா. இது கண்டுபிடிக்கப்பட்டதும் அவன் வேலையிலிருந்து நீக்கப்பட்டதோடு, இரவில் கைதிகளை வெளியே விட்டுவிட்டதாக அவன்மீது வழக்கும் தொடரப்பட்டது. அவர்களில் யாரும் ஓடிவிடவில்லை. ஆனால் அவர்களில் ஒருவன் ஒரு பாதிரியின் கழுத்தை நெறித்துக் கொண் டிருந்தபொழுது பிடிபட்டான். நீண்ட காலம் விசாரணை நடந்தது; ஆனால் அது கோர்ட் வரையில் செல்லவில்லை. கருணை உள்ளம் படைத்த என் மாமாவுக்கு அவமானம் நேராமல் அவரைக் காத்தனர், கைதிகளும், சிறை காவற்காரர்களும். இப்பொழுது அவனுக்கு வேலையில்லை. ஆனால் அவன் மகன் அவனை ஆதரித்தான். அன்று புகழ் பெற்றிருந்த ருகாவிஷ்னிகோவ் கோயில் பாட்டுக் குழுவில் அவன் மகன் ஒரு பாடகன். தன் மகனைப்பற்றி அவன் அசாதாரணமாகப் பேசினான்:

"சமீப காலமாக அவன் கௌரவத்துடனும், முக்கியத்வத்துடனும் நடந்துகொள்ளுகிறான். அவன் பாடகன். அவன் உடைகளைச் சுத்தம் செய்யவும், குளிர்காயும் அடுப்புக்குத் தீமூட்டவும் நான் தாமதித்துவிட்டால், என்மேல் எரிந்துவிழுகிறான். ரொம்பச் சுத்தமான பையன். நல்ல குணம் படைத்தவன்."

இப்பொழுது கிழவனைப்போல் தோற்றமளித்த என் மாமா அசுத்தமாக இருந்தான். கவர்ச்சி அளிக்கும் அவன் சுருட்டை மயிர் சிறுத்துவிட்டது ; காதுகள் மெலிந்து தொங்கின; அவன் கண்ணையும், பட்டுப் போன்றிருந்த கன்னத்தையும் சிவப்பு நரம்புகள் மூடியிருந்தன. கிண்டலாகப் பேசினான். ஆனால் ஏதோ ஒன்று அவன் பேச்சைத் தடுப்பதாகத் தோன்றிற்று. அவன் பற்கள் உறுதியாக இருந்தன.

பல விஷயங்களைக் கண்ட, பல விஷயங்களைத் தெரிந்த, உல்லாசமாக இருக்கத் தெரிந்த அவனுடன் பேசிக்கொண்டிருக்கச் சந்தர்ப்பம் கிடைத்ததை எண்ணி நான் மகிழ்ந்தேன். துணிச்சலான, வேடிக்கையான அவன் பாட்டுகளும், அவனைப்பற்றித் தாத்தா சொன்னதும் எனக்கு நன்றாக ஞாபகமிருக்கின்றன :

"பாடுவதிலே டேவிட் ; வேலையிலே அப்ஸோலோம் !"

கண்ணியமான நகர மக்கள்—அதிகாரிகளும், இளம் சீமாட்டிகளும்—எங்களைக் கடந்து சென்றனர், உலாவுவதற்காக. என் மாமா ஆபாசமான கோட்டும், நொறுங்கிய தொப்பியும், அழுக்குப் படிந்த பூட்ஸுமம் அணிந்திருந்தான். தன் தோற்றத்தால் வெட்கமடைந்த அவன், பெஞ்சில் சுருண்டு உட்கார்ந்தான். போச்சென்ஸ்கி கல்லி என்ற இடத்துக்கு மேலேஇருந்த ஒரு விடுதிக்குச் சென்று, மார்க்கெட்டை நோக்கி இருந்த ஜன்னலுக்கு அருகில் உட்கார்ந்தோம்.

"நீ பாடியது நினைவிருக்கிறதா ?"

தன் கால் சட்டையை உலரத் தொங்கவிட்டான் ஒரு பிச்சைக்காரன்,

இன்னொரு பிச்சைக்காரன் அதைத் திருடினான்.. ...

இந்த அடியை நான் திரும்பச் சொன்னதும், முதன் முறை அதில் பொதிந்து கிடக்கும் கிண்டல் எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. வெளிப் பார்வைக்கு உல்லாசமாகத் தோன்றிய என் மாமா உண்மையில் பிணைபட்டும், வெறுப்புடனும் இருக்கிறான் என்பதை நான் உணர்ந்தேன்.

ஒரு கிளாசில் வோட்காவை ஊற்றிக்கொண்டு அவன் துக்கத்துடன் சொன்னான் :

"ஆம், நான் வாழ்க்கையை அனுபவித்தேன்; வேடிக்கையிலும் ஈடுபட்டேன். ஆனால் அது போதாது. அது என் பாட்டல்ல. அதை ஒரு வாத்தியார் எழுதினார். அவன் பெயரென்ன? நான் மறந்துவிட்டேன். ஆனால் அவன் குடியால் இறந்தான்—வெளியே குளிரில் விறைத்துச் செத்தான். குடியால் இறந்த பலரை நான் கண்டிருக்கிறேன்! அவர்களை எண்ண முடியாது! நீ குடிக்கிறாயா? குடிக்காதே. இன்னும் கொஞ்சம் பொறு. அடிக்கடி உன் தாத்தாவை நீ பார்க்கிறாயா? தக்கத்திலாழ்ந்த கிழவன். அவன் இளகிய மனம் படைத்தவனாக மாறிவிட்டானும்."

ஒன்றிரண்டு தரம் குடித்ததும், உற்சாகமடைந்து தன் தோள்களை அவன் நிமிர்த்திக்கொண்டான்; இளமை எய்திய வனைப்போல் உணர்ச்சியுடன் பேச ஆரம்பித்தான்.

கைதிகள் விஷயத்தைப்பற்றி நான் கேட்டேன்.

"அப்படியானால் நீயும் அதைப்பற்றிக் கேள்விப்பட்டாயா?" என்று சொல்லிவிட்டு, குரலைத் தாழ்த்திக்கொண்டு, சுற்றுமுற்றும் பார்த்து அவன் சொன்னான்:

"அவர்கள் கைதிகளாக இருந்தால்தான் என்ன? நம்மைப்போல் அவர்களும் மனிதர்கள்தான் என்பதை உணர்ந்தேன்." எனவே அவர்களிடம் சொன்னேன்: 'வாருங்கள், சகோதரர்களா! ஒன்றுக, நண்பர்களாக வாழ்வோம்! அந்தப் பாட்டு வர்ணிப்பதைப்போல், தமாஷாக இருக்கலாம்:'

விதியைச் சட்டை செய்யாது நாம் உல்லாசமாக இருப்போம்,
இங்கே நமது பிரயாணம் முடியும்வரை,
வருத்தத்திற்கு வளைந்து கொடுப்போன் மூட்டாள்,
இன்பத்திலும், வேடிக்கையிலும் நாம் வாழ்வோம்.

சிரித்துக்கொண்டு கீழே இருண்டுகொண்டிருந்த பள்ளத்தை அவன் பார்த்தான்.

"அவர்கள் சந்தோஷமடைந்தனர். சிறை வாழ்க்கை மந்தமானது" என்று மீசையை முறுக்கிக்கொண்டு அவன் தொடர்ந்தான். "எனவே, பெயர் கூப்பிட்டு முடிந்ததும், அவர்கள் என்னிடம் வருவார்கள். உணவு, வோட்கா. சில சமயங்களில் நான் விருந்து வைப்பேன்; சில சமயங்களில்

அவர்கள் விருந்து வைப்பார்கள். வானம்பாடியைப் போல் ருஷ்ய மாதா குதூகலமடைந்தாள்! பாட்டும் நடனமும் எனக்குப் பிடிக்கும். அவர்களில் நல்ல பாடகர்களும், நடனக்காரர்களும் இருந்தனர். அவர்கள் சொம்பத் தேர்ந்தவர்கள். இதை நீ நம்ப முடியாது! அவர்களில் பாதிப் பேர் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருக்கிறார்கள். விலங்குகளுடன் நடனமாட முடியாது! எனவே அவைகளை விலக்க நான் அனுமதி அளித்தேன். இது உண்மை. கருமான் உதவியின்றி அவர்களே விலங்குகளை நீக்கினர்கள். அவர்கள் சாமர்த்தியசாலிகள்—சொம்பச் சாமர்த்தியசாலிகள். நகரிலே திருடுவதற்காக அவர்களை நான் விடுதலை செய்ததாகச் சொல்லுவது முட்டாள்தனம். இதை யாரும் நிரூபிக்க முடியாது."

அவன் கீழே இருந்த பள்ளத்தைப் பார்த்தான். அங்கே பழைய சாமான் விற்பவர்கள் தங்கள் கடைகளை மூடிக்கொண்டிருந்தனர். தாளைப் போட்டுக்கொண்டும், பூட்டைப் பூட்டிக்கொண்டும், விளம்பரப் பலகைகளைக் கீழே போட்டுக்கொண்டும் பெரிய சத்தத்தை எழுப்பினர். உல்லாசமாகக் கண்சிமிட்டிக்கொண்டு அவன் தொடர்ந்தான்:

"உண்மையைச் சொல்லுவதானால், அவர்களில் ஒருவன் இரவில் வெளியே சென்றான். ஆனால் அவனுக்கு விலங்கு மாட்டப்படவில்லை. நிழனி – நோவோகிராடைச் சேர்ந்த ஒரு சாதாரண உள்ளூர் திருடன் அவன். அருகில் இருந்த பெச்சோர்கா நதி ஓரத்தில் அவன் வைப்பாட்டி வசித்துவந்தாள். பாதிரியுடன் ஏற்பட்ட சலசலப்பு தற்செயலானது. பாதிரியை ஒரு வியாபாரி என்று அவன் நினைத்தான். புயல் வீசின குளிர்கால இரவில் இந்தச் சம்பவம் நடந்தது. எல்லோரும் மேலங்கி அணிந்திருந்தனர். எனவே ஒருவன் பாதிரியா, வியாபாரியா என்பதை யாரால் சொல்ல முடியும்?"

இது எனக்கு வேடிக்கையாக இருந்தது. அவனும் சிரித்தான். பிறகு அவன் சொன்னான்:

"அவன் இதைக் கண்டுபிடிக்கவில்லை."

திடீரென்று என் மாமா ஆத்திரமடைந்தான். தட்டை அப்பால் தள்ளிவிட்டு, முகத்தைக் கோணலாக்கிக்கொண்டு, சிகரெட்டைக் கொளுத்திக்கொண்டு அவன் முணுமுணுத்தான்:

" ஒருவரை ஒருவர் திருடுகின்றனர், ஒருவரை ஒருவர் பிடிக்கின்றனர், ஒருவரை ஒருவர் சிறைக்கோ அல்லது கடுந் தண்டனை அனுபவிக்க ஸைபீரியாவுக்கோ அனுப்புகின்றனர். ஆனால் என்னை ஏன் வம்பு இழுக்க வேண்டும் ? இதன்மீது துப்பு ! பாதுகாக்க ஆத்மா இருக்கிறது."

எனக்கு முன் சூனிகாப்போன் தோன்றினான். "அதன் மீது துப்பு !" என்று ஆசையுடன் அவனும் சொல்லுவான் ; அவன் பெயரும் யாக்கோவ்தான்.

" நீ எதைப்பற்றிச் சிந்திக்கிறாய் ?" என்று கேட்டான் மாமா.

" அந்தக் கைதிகளுக்காக நீ வருத்தப்படுகிறாயா ?"

" அவர்களுக்காக வருந்துவது அவ்வளவு பெரிய காரிய மல்ல. நல்லவர்கள் அவர்கள். ஆம், ரொம்ப நல்லவர்கள். சில சமயங்களில் அவர்களைப் பார்த்து நான் நினைப்பேன்: உங்கள் பூட்சுகளுக்குப் பாலிஷ் போடக்கூட நான் தகுதியற்றவன்; ஆனால் இதோ உங்கள் அதிகாரியாக இருக்கிறேன் ! சாமர்த் தியமுள்ள பிசாசுகள் ; குள்ளநரியைப் போன்றவர்கள் !"

ஒயினும், பழைய நினைவுகளும் அவனை இன்பத்திலாழ்த் தின. முழங் கைகளை ஜன்னலில் ஊன்றிக்கொண்டு, விரல் களுக்கிடையே சிகரெட்டுள்ள மஞ்சள் கைகளை வீசிக் கொண்டு, ஜீவன் நிறைந்த குரலில் அவன் தொடர்ந்தான் :

" அவர்களில் ஒருவன் பேச்சை நீ கேட்டிருந்தால் ! அவன் ஒற்றைக் கண்ணன் ; வாட்ச் செய்பவன், சித்திரம் செதுக்குவோன். கள்ள நாணயம் செய்ததற்காகக் கைது செய்யப்பட்டான் ; தப்பிச் செல்ல முயன்றான். நீ பந்தத் தைப் போல் சதா எரிவான். பறவையைப் போல் அவன் பாடினான். ' இதை எனக்கு விளக்கு ' என்பான் அவன் : தங்கசாலையில் நாணயம் உற்பத்தி செய்யப்படும்பொழுது, நான் ஏன் உற்பத்தி செய்யக் கூடாது ? இதை விளக்கு ! இதை யாராலும் விளக்க முடியாது. நான்கூட விளக்க முடி யாது. எனினும் நான் அவர்கள் அதிகாரி ! இன்னொருவனும் அங்கே இருந்தான் ; பிரசித்தி பெற்ற மாஸ்கோ திருடன். அவன் சாந்தமானவன், சுத்தமானவன், கனவானைப் போன்ற வன். எப்பொழுதும் மரியாதையாகப் பேசினான். சாகும்வரை

யில் ஜனங்கள் வேலை செய்கிறார்கள்; இப்படிச் செய்ய எனக்கு விருப்பமில்லை என்றான் அவன். ஒரு முறை நான் இப்படிச் செய்ய முயன்றேன் என்றான் அவன்; விரல் நகம் பெயரும் வரையில் வேலைசெய்தேன். எதற்காக? சொற்பக் கூலிக்காக! ஒரு கிளாஸ் குடிப்போம், சீட்டு விளையாட்டில் சிறு தொகையைப் பறிகொடுப்போம். நம்மை அணைத்துக்கொண்டதற்காக ஒரு பெண்ணுக்கு நம்மால் முடிந்ததைக் கொடுப்போம். அதன் பிறகு கையில் காசிராது; பசிக்கும். இல்லை, இந்த விளையாட்டு நான் விளையாட மாட்டேன் என்பான் அவன்!"

பேசிக்கொண்டே மேஜைமீது சாய்ந்தான், யாக்கோவ் மாமா. சொம்பக் கிளர்ச்சி அடைந்திருந்ததால், அவன் காதுகள் துள்ளின.

"அவர்கள் முட்டாள்களல்ல, சகோதரா! அவர்கள் நிலைமையைச் சரியான கண்கொண்டு பார்க்கிறார்கள். இவைகளெல்லாம் நாசமாகட்டும், சகோதரா! உதாரணமாக என்னை எடுத்துக்கொள்: என் வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருந்தது? அதை நினைப்பதுகூட வெட்ககரமானது. நல்லவைகளெல்லாம் பீரிடுகின்றன, மறைகின்றன. துன்பத்தைச் சம்பாதித்தேன்; இன்பத்தைத் திருடினேன். இதைச் செய்யாதே என்று என் தந்தை கூவினார்; அதைச் செய்யாதே என்று என் மனைவி கூவினாள். ஒரு ரூபிளுக்காக உயிரை விட நான் பயந்தேன். எனவே வாழ்க்கை கடந்துசென்றது. வியோதிகம் அடைந்த நான் என் புதல்வனின் வேலைக்காரனாக இப்பொழுது இருக்கிறேன். இதை மறைக்க முயல்வானேன்? பணிவுடன் அவனுக்கு நான் சேவை செய்கிறேன், சகோதரா! உண்மையான கனவினைப்போல் அவன் என்னைப் பார்த்துக் கூச்சலிடுகிறான். 'அப்பா' என்று அவன் என்னை அழைக்கிறான்; ஆனால் "வேலைக்காரா" என்று அது என் காதில் விழுகிறது. இதற்காகவா நான் பிறந்தேன்? இதற்காகத்தான் நான் கஷ்டத்தை அனுபவித்தேனா? என் சொந்த மகனின் வேலைக்காரனாவதற்குத்தான் நான் இவ்வளவையும் செய்தேனா? இப்படி நேரவில்லையென்றால்கூட, எதற்காக நான் வாழ்ந்தேன்? வாழ்க்கையிலே நான் எவ்வளவு இன்பம் அனுபவித்தேன்?"

சிரத்தையுடன் அவன் பேச்சைக் கேட்காத நான் தடுமாற்றத்துடனும் பதில் சொல்ல மனமின்றியும், சொன்னேன் :

" வாழும் வகை எனக்கும் தெரியவில்லை....."

அவன் உறுமினான் :

" பூ ! இது யாருக்குத் தெரியும் ? இது தெரிந்த யாரையும் இதுவரை நான் சந்திக்கவில்லை ! பழக்கத்தின்மீது ஜனங்கள் வாழுகிறார்கள் ..."

மீண்டும் கோபமும், வேதனையும் அவன் குரலில் இடம் பெற்றன :

" அங்கே ஓரேலைச் சேர்ந்த இன்னொருவன் இருந்தான். பலாத்காரமாகக் கற்பழித்ததற்காக அவன் அங்கே அனுப்பப்பட்டான். உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவன் அவன். அவன் அற்புதமாக நடனமாடுவான். வாங்காவைப் பற்றி அவன் பாடிய பாட்டு ஜனங்களைச் சிரிக்க வைத்தது :

மயானத்தைச் சுற்றி நடக்கிறாள் வாங்கா,
நிதானமான வதனத்துடன்.
வாங்கா, வாங்கா, என் இக்கே நடக்கிறாய்
இதைவிட நல்லிடம் வேறில்லையா ?

" ஆனால் இந்தப் பாட்டில் சிரிப்பதற்கு ஒன்றுமில்லை என்பது என் கருத்து. இது யதார்த்தம் ! துடித்தாலும், நெளிந்தாலும், மயானத்திலிருந்து யாரும் தப்ப முடியாது. நான் அதை அடைந்ததும், நான் கைதியா, வார்டரா என்பதைப்பற்றி எனக்குச் சிறிதும் கவலையில்லை !"

பேசிக் களைத்துவிட்ட அவன், வோட்காவைக் குடித்தான். பறவையைப்போல் காலிக் கிளாஸைப் பார்த்து ஒரு கண்ணை சொருகியவாறு மௌனமாகச் சிகரெட் குடித்தபடி அவன் உட்கார்ந்துவிட்டான். புகை அவன் மீசையிலே சுழன்றது.

எந்த விதத்திலும் கொத்துக்காரன் பியோட்டர் யாக்கேவ் மாமாவைப் போல் இல்லை ; என்றாலும், அவன் ஆசையுடன் அடிக்கடி சொல்லுவான். " மனிதன் எவ்வளவுதான் முயன்றாலும், எவ்வளவுதான் விரும்பினாலும், அவன் சவப் பெட்டியில் மயானத்திற்கு வருவான் !" இந்த எண்ணத்தை எத்தனையோ முதுமொழிகள் வெளியிடுகின்றன !

என் மாமாவிடம் வேறு எதையும் கேட்க நான் விரும்பவில்லை. அவனுக்காக இரங்கினேன்; அவன் முன்னிலையில் சோர்வடைந்தேன். கவலை மறந்து அவனிடமிருந்து பரவிய உல்லாசமான அவன் பாட்டுகளையும், அவன் தம்புரு எழுப்பிய இனிய இசையையும், என்னால் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. மகிழ்ச்சியூட்டும் ஸிக்காலேக்கையும் நான் மறக்கவில்லை. இல்லை, நான் அவனை மறந்துவிடவில்லை. ஸிக்காலேக்கைக் குரிசால் நசுக்கியது அவனுக்கு நினைவிருக்கிறதா என்று யாக்கோவ் மாமாவின் நலித்த உருவத்தைப் பார்த்தபொழுது வியந்தேன்.

ஆனால் இதை நான் அவனிடம் கேட்கவில்லை.

ஆகஸ்டு மாதப் பனியால் மூடப்பட்ட பள்ளத்தை நான் பார்த்தேன். அதன் அடியிலிருந்து ஆப்பிள், சர்க்கரைக் கொம்மட்டிக் காய் ஆகியவைகளின் மணம் வீசிற்று. நகரத்திற்குச் சென்ற குறுகிய வீதியில் விளக்குகள் பிரகாசித்தன. என்னைச் சுற்றியிருந்த அனைத்தும் எனக்குச் சொம்ப அறிமுகமானவை. இந்தச் சீழ்க்கை ரிபின்ஸ்குக்குச் செல்லும் கப்பலிலிருந்து வருகிறது; பிரெம் செல்லும் கப்பலிலிருந்து.....

"நான் போக வேண்டும்" என்றான் என் மாமா.

விடுதியின் கதவை அடைத்ததும் என் கையைக் குலுக்கி விட்டு, கேலியாக என் மாமா சொன்னான்:

"இப்பொழுது அழுக்குத் துடைக்காதே! நீ அழுக்குத் துடைப்பதாகத் தோன்றுகிறது. மகிழ்ச்சி அடை; இன்னும் நீ இளைஞன். விதியைச் சட்டை செய்யாமல் மகிழ்ச்சியுடன் இரு. இதை மறக்காதே. நல்லது, போய் வருகிறேன். உஸ்பென்ஸ்கி கோயிலைக் கடந்து நான் செல்ல வேண்டும்."

தான் சொன்னவைகளால் முன்னைவிட அதிகமாக என்னைக் குழப்பிவிட்டு என் மாமா போய்விட்டான்.

நகரத்திற்குச் செல்ல நான் குன்றின்மீது ஏறினேன். பிறகு வயல்களில் நடந்தேன். பூரண சந்திரன் உதித்து விட்டது. வானத்திலே நடமாடிய மேகங்கள் தன் நிழலால் என் நிழலையும் மாய்த்தன. வயல்கள் வழியாக நகரை வட்டமிட்டுக்கொண்டு ஓட்கோஸ் என்னும் இடத்தில் நான் வால் காவை அடைந்தேன். அங்கே தூசி படிந்த புற்றரையில்

படுத்து நீண்ட நேரம் நதியையும், பசுமையான புல்வெளியையும், அசைவற்ற பூமியையும் பார்த்துக்கொண்டிருந்தேன். மெதுவாக மேக நிழல் வால்காவைக் கடந்து சென்றது. அது புல்வெளியை அடைந்ததும் பிரகாசமடைந்தது, வழியில் ஜலத்தில் குளித்தெழுந்ததைப்போல். என்னைச் சுற்றி இருந்த அனைத்தும் தூங்கி வழிந்தன, அடங்கிக் கிடந்தன. வாழவும், இயங்கவும் வேண்டும் என்னும் அளவுகடந்த ஆர்வத்தால் தூண்டப்பட்டு அசைவதற்குப் பதிலாக, நிர்ப்பந்தத்தின்மீது எல்லாம் விருப்பமின்றி அசைந்தன.

அந்த நிலத்தையும், என்னையும் மிதிக்க நான் விரும்பினேன். நான் உட்பட அனைத்தும் இன்பத்துடன் சுழல வேண்டும்; வாழ்க்கையையும், ஒருவரை ஒருவரும் நேசிக்கும் ஜனங்கள் பரவசத்துடன் நடனமாட வேண்டும். இன்னொரு வாழ்க்கைக்காக உருவாக்கப்பட்ட இந்த வாழ்க்கை மேலும் நேர்மையானதாகவும், மேலும் தீரம் நிறைந்ததாகவும், மேலும் அழகானதாகவும் இருக்க வேண்டும் என்பதற்காக நான் இவ்வாறு செய்ய விரும்பினேன்.....

நான் நினைத்தேன் : "ஏதாவது நான் செய்யவில்லையென்றால், நான் அழிந்துவிடுவேன்."

சூரியனைக் காண முடியாது, சூரியன் இருப்பதைக்கூட உணர முடியாது, அதன் இயக்கத்தையே மறந்துவிட்டு மப்பும் மந்தாரமுமான சரத்கால நாட்களில் கானகத்தில் நான் அடிக்கடி நடந்திருக்கிறேன். என் வழி தவறிவிட்டால், என்னை புறப்பட்ட இடத்திற்கு அழைத்துச் செல்லும் ஒற்றையடிப் பாதைகளைத் தேடுவேன். இந்த முயற்சியிலே சலிப்படைந்து, பல்லைக் கடித்துக்கொண்டு, தைரியத்துடன் நடுக்கானகத்தை நோக்கி நடப்பேன்; புதர்களையும், அபாயகரமான சதுப்பு நிலங்களையும் கடந்து நடப்பேன். எப்பொழுதும் நான் வீதிக்கு வந்துவிடுவேன்!

இதுதான் என் முடிவு.

படிப்பதற்கு ஏதாவது வழி, ஏற்படும் என்னும் நம்பிக்கையுடன் அந்த வருடம் சரத் காலத்தில் நான் காஸானுக்குப் புறப்பட்டேன்.